
ஆறாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு ஆய்வுக் கட்டுரைகள்

PROCEEDINGS OF THE SIXTH INTERNATIONAL CONFERENCE - SEMINAR ON TAMIL STUDIES

1987



மலேசிய உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL ASSOCIATION FOR TAMIL RESEARCH, MALAYSIA

ஆறாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு ஆய்வுக் கட்டுரைகள்

PROCEEDINGS OF THE SIXTH INTERNATIONAL CONFERENCE - SEMINAR ON TAMIL STUDIES

1987



மலேசிய உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL ASSOCIATION FOR TAMIL RESEARCH, MALAYSIA

BIBLIOGRAPHICAL DATA

Title :

PROCEEDINGS OF THE SIXTH INTERNATIONAL CONFERENCE - SEMINAR ON TAMIL STUDIES -1987

Published by :

International Association for Tamil Studies, Malaysia
University of Malaya,
50603 Kula Lumpur
Tel. 603-7595635 / 7595629 / 7595632 / 7595510
Fax : 603-7595629 / 7595460
E-Mail : rajakrishnan98@hotmail.com
f6kumar@umcsd.um.edu.my

Edition :
First 1999

No. of Copies
1000

No. of Pages :
XXIV + 918 = 942

Laser Setting :
SIBI COMPUTER SYSTEMS
Chennai - 600 005.
E-Mail : maravan@giasmd01.vsnl.net.in

Printer :
ANNAM MARUTHONDRI ACHAGAM,
25, C.N.K. Saalai, Chennai - 600 005.
Phone : 8588466.

© All rights reserved. No part of this proceedings may be reproduced in any form without written permission from I.A.T.R., Malaysia

MESSAGE FROM THE PATRON

It is with great pleasure that I recall the inauguration of the First International Conference-Seminar of Tamil Studies here in Kuala Lumpur by Yang Teramat Mulia Tunku Abdul Rahman Putra Al-Haj, the first Prime Minister of Malaysia, in April 1966. After a period of twenty-one years, the sponsors of the conference had once again chosen Kuala Lumpur as the venue of the Sixth Conference-Seminar of Tamil Studies. The fact that the Government of Malaysia had gladly extended its support for the holding of the conference in Kuala Lumpur showed clearly that the Malaysian Government's policy of maintaining and supporting the use of other languages such as Tamil and Chinese has not changed, even though it is also our Government's firm policy to uphold the use of Bahasa Malaysia as our official and national language in this country.

The Tamil language, which is the main focus of this conference, had been acknowledged by scholars as one of the most melodious languages of the world, and I understand that the word Tamil itself means 'sweetness or melodiousness'. There can be no doubt that such a quality has been attained by the Tamil language through a long period of its development and cultivation by several generations of scholars, learned poets, teachers and students since the ancient times. Indeed, the idea of holding regular meetings of scholars for the purpose of attaining higher standards in the use of language and in the composition of great literature is not new to Tamil tradition, for such an idea has been the basis of the academic activities of the Sangam, or the Academy of learned Tamil poets noted for their knowledge and wisdom in the ancient times. At present the Tamil language is being used widely not only in the state of Tamilnadu in India, but also in several other parts of the world such as East and South Africa, Burma, Fiji, Indonesia, Madagascar, Malaysia, Martinique, Reunion, Singapore, Sri Lanka, and Trinidad. Perhaps it would not be an exaggeration if I

were to say that Tamil as a world language is now being spoken by about 60 million poeople

The oldest surviving monuments of the Tamil language belong probably to the third century B C., though such literary works were no doubt preceded and followed by several centuries of literary development. Indeed, Tamil literature is reputed to be the only Indian literature, which is both classical and modern: it shares antiquity with the other ancient and classical literatures of the world and at the same time it continues to flourish as a vigorous medium of speech and writing in our own times.

The earliest known evidence for the existence of the Tamils as a people with a distinct culture comes from the remains of the prehistoric sites in the Indian sub-continent. A significant feature of Tamil culture is that several of its elements would seem to have attracted the attention of people in other parts of the world in the course of early and regular maritime contacts which the Tamils have had with them. The Tamils as merchants, craftsmen, priests, and scholars have played an important role in the development of great civilizations in India as well as in other parts of the world including Southeast Asia.

The field of Tamil studies is indeed a large one involving various disciplines such as linguistics, literature, history, archaeology, anthropology, sociology, and science. I am happy to observe that the wide range of sections and topics, under which more than 200 research papers were presented and discussed by the participants, includes a section on science and technology where several papers on the use of Tamil language in computers and word processors were also presented by experts from Canada, France, India and Malaysia. This is clearly indicative of the expansion of Tamilology to include new horizons so as to provide for modern needs.

There is no doubt that conferences such as the present one would enable the participants to meet one another and to exchange valuable information and knowledge in a cordial and scholarly atmosphere. Apart from these usually expected benefits of the conference, we may also ask ourselves as to what other practical use and relevance the humanistic studies such as the Tamil studies have in the modern world

of macro-economics, macro-science and macro-technology. It seems to me that the Tamilologists ought not to be merely satisfied with pointing out the relics of the past. There is no doubt that the archaeologist or the historians of society, language, literature, religion, arts *etc.*, are the discoverers and investigators of the past But they need not be mere recorders of the past; indeed they ought to be also the interpreters of its relevance to the present and the assessors of the human achievement through the ages. Their scholarly interpretations should represent the voices of human progress and human vision, which could afford an important corrective to the superficial instant judgments which tend to dominate modern life. Such interpretations of permanent age-old values of human mores, ethics and philosophy would serve not only as a guide for the future, but also as a bulwark against the dangers of depersonalization of humanity.

Finally, I would like to express my sincere hope that all the participants and guests of the conference would have a confortable and enjoyable stay in Malaysia and that the participants would have lively and fruitful discussions based on two of the most important precepts of the Tamil sage Tiruvalluvar, which are of direct relevance to any conference of scholars, namely, that, in the presence of scholars, after having spoken to convince other scholars of what one has learnt, one must also listen to others who have learnt more than oneself, and that, whatever may be the nature of an object, the perceiving of the true meaning of the object is knowledge.



(Y.A.B. DATO SERI Dr. MAHATHIR MOHAMAD)
Patron, Sixth International Conference -
Seminar on Tamil Studies
Prime Minister, Malaysia

வாழ்த்துச் செய்தி

எத்திசையும் புகழ் மணக்க இருந்துவரும் தமிழ் அணங்கின் புகழ் காக்க எட்டுத் திக்கிலிருந்தும் தமிழின் பெருமையைக் கொட்டி முழக்க, ஆறாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு வந்துள்ள அறிஞர்களைப் பார்த்து, கலைஞர்களைப் பார்த்து, ஆய்ந்து உவந்து அடங்கிய சான்றோர்களைப் பார்த்து, இலக்கியம் கற்று, பிறநாட்டார் அதை வணக்கம் செய்யப் பணிசெய்துவரும் பெருந்தகைகளைக் கண்டு மலேசிய அன்னை மகிழ்கிறாள்.

ஏறத்தாழ 21 ஆண்டுகளுக்கு முன்னர் இதுபோன்ற ஒரு திருக்காட்சியை, முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிலே, சீரும் திருவும் பொலிய, ஊரும் உலகும் திரளக் கண்ட மகிழ்ச்சி இன்னும் நெஞ்சத்தில் நிறைந்திருக்கும் போதே, இரண்டாவது தடவையாக இனிய தமிழுக்குப் பெரிய மாநாடு காண்கின்ற பேற்றினை மலேசியம் பெற்றது பெருமைக்குரியது. மகிழ்கிறோம். பலஇனச் சமுதாய அரசாங்கத்தைப் பெற்றுள்ள மலேசியத்துக்கு இது எழுச்சியூட்டும் இன்பத் திருக்காட்சி.

கண்களாலும் தமிழைத் தருகின்ற, பண்களால் தமிழைப் பாடுகின்ற உலகத்து மண்களின் ஓசைகளைச் சுமந்துகொண்டு வருகின்ற, இரைந்துகொண்டு வருகின்ற கடலலைகள் சூழ்ந்த மலேசிய நாட்டில் தமிழுக்கு, தமிழ் ஆராய்ச்சிக்கு ஆறாவது விழா நிகழ்ந்ததை எண்ணித் தமிழ் நெஞ்சங்கள் எல்லாம் தலைநிமிர்ந்து பாராட்டுகின்றன.

கத்துகின்ற கடல்வழித் தமிழ் முழக்கத்தை, அனுப்பிவிட வேண்டும் என்று சிந்தித்தே மலேசியா 1966ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில் முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை ஆரம்பித்து வைத்தது. குறையாத உணர்வுடைய குணமுடைய தமிழ் உள்ளங்கள் இணைந்து தொடக்கிய அந்தத் தமிழ் விழா, உலகத்து நாடுகளில் உள்ள தமிழர்களையெல்லாம் அரவணைத்தது; தமிழ் அமுதூட்டியது; உலா வந்து மீண்டும் மலேசியாவில் கரையிறங்கியது; இரண்டாவது தடவையாகக் கன்னித் தமிழுக்குப் பொன்னூஞ்சல் செய்து அமர்த்தப்பட்டது.

கற்றறிந்த அறிஞர்கள் ஒன்றுபட்டுச் சங்கம் அமைத்து, ஆராய்ந்து, மகிழ்ந்து இணைந்து வளர்த்த மொழி தமிழ்மொழி. அதனால்

"சங்கத் தமிழ்" என்ற பெருமையும் பெயரும் தொன்றுதொட்டு இருந்து வருகிறது.

"துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா"

என்று ஔவையார் பாடிவிட்டுத்தான் செய்யுள் புனையத் தொடங்கினார். தமிழ்கற்ற சான்றோர் ஒன்றுபட்டு, சங்கம் வைத்து மொழி வளர்த்திருக்கிறார்கள். அவர்கள் ஒன்றுபட்டதால்தான் "சங்கத் தமிழ்" என்ற காலத்தால் அழியாத ஒரு சகாப்தத்தையே உருவாக்கி, அதன்வழித் தமிழைத் திருவாக்க முடிந்திருக்கிறது. அது இப்போது நமக்கு வியப்பைத் தருகிறது.

"என்றுமுள்ள தென்றமிழ் இயம்பிஇசை கொண்டான்"

என்று தமிழை, அழியா மொழியாக அறுதியிட்டுச் சூளுரைக்கிறான் கம்பன்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்"

என்று இனிக்க இனிக்கப் பாடுகிறான் வரகவி பாரதி.

"தமிழுக்கும் அமுதென்று பேர்"

என்று சூட்டினார் பாரதிதாசன்.

"எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழ்அணங்கே"

என்று கனவு கண்டார் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை.

பழிசொல்லத் தெரியாத பணியாளர்களைக் கொண்டு, அழியாத் தமிழுக்கு அணிகலன்களாக இருந்துவருகின்ற பண்புகளை, பெருமைகளை, கலைகளை, காவியங்களை இயல், இசை, கூத்தை உலகெல்லாம் உணர்த்துவதற்கு வழிசொன்னது, மலேசியாவில் நிகழ்ந்த முதலாவது மாநாடே. அத்தகைய மாநாட்டை, மலேசியாவின் சுதந்திரத் தந்தை, முதலாவது பிரதமர் இன்றும் நம்மிடையே வரலாற்றுப் பேழையாக வாழ்கின்ற ஏற்றமிகு தலைவர் கெடா என்ற கடார மாநிலத்தின் இளவரசர் துங்கு அப்துல் ரஹ்மான், கோலாலம்பூரில் 1966ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 16ஆம் தேதி தொடங்கி வைத்த நினைவுகள், நம் இதயங்களில் மகுடங்களாக ஒளிவீசுகின்றன. அவர் உரைத்த கருத்துகள், தமிழ் ஆய்வாளர்களின் எண்ணங்களையும் தமிழ்கூறு நல்லுலகத்தின் இதயங்களையும் வரலாற்றுச் சின்னங்களாக்கி வைத்துள்ளன. அப்போது,

"மலேசியாவின் வழக்கில் இருந்துவருகிற மொழிகளில் ஒன்று தமிழ். பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வெள்ளி அலைமீது பவனிவந்த தமிழ் வணிகர்களும், சமயத் தூதர்களும் இந்தியா விலிருந்து புறப்பட்டுத் தென்கிழக்காசியா எங்கும் பரவினார்கள். அவர்களது பழம்பெரும் கருத்துகளை வரலாற்றுக் குறிப்புகள், சிலைகள், மரபுகள் ஆகியவற்றிலும் காண முடியும். எங்களது வடமாநிலங்கள் சிலவற்றில் அரச சடங்குகளில் இந்தியப் பண்பாடுகள் இழையோடும் சில ஒருமைப்பாடுகளையும் காணலாம். எங்களது சொந்த மொழியான மலாய், இந்த வட்டாரத்து மக்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் இடையே சமூக உறவுகளைக் கொண்டுள்ளது என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன."

என்று தேசத் தந்தை துங்கு அப்துல் ரஹ்மான் தமது உரையின் ஒரு பகுதியில் சுட்டிக்காட்டி, அந்த மாநாட்டின் கருப்பொருளான 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற வாக்கியத்தைத் தமிழில் கூறிய இனிய காட்சிகள், இன்னும் மங்காது, மறையாது எங்கள் இதயத் திரையில் படிந்து கிடக்கின்றன.

முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் ஏற்பாட்டுக்குழுத் தலைவராகப் பணியாற்றிய மலேசிய இந்திய சமூகத்தின் மறுமலர்ச்சித் தலைவர், மலேசிய இந்தியர் காங்கிரசின் தேசியத் தலைவராகப் பணியாற்றிய துன் வீ.தி. சம்பந்தன் அவர்கள் இன்று நம்மிடையே இல்லை. ஆனால், அன்று முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு வருகை தந்தோரை வரவேற்று ஆற்றிய உரைகள் - கருத்துகள் - விடியற்காலையில் பச்சைப் புல் பரப்பில் பனித்துளிகள் தூங்குவதுபோல் நமது இதயப் பரப்பில் இளைப்பாறிக் கொண்டிருக்கின்றன. அன்று அவர் சொன்னார்:

"ஆண்டு பலவாக, தூரக்கிழக்கு ஆசியா, மேற்கு நாடுகளின் மக்களுக்கிடையே மலேசியா ஒரு நெடுஞ்சாலையாக இருந்து வந்துள்ளது. பழமை இலக்கியங்கள், இந்தப் பூமியைப் பொன்னான பூமி என்றும் வர்ணித்துள்ளன. தமிழ்கூறு நல்லுலகம் கண்டிராத வகையில் முதல் தடவையாகப் பல துறைகளில் புலமை பெற்ற அறிஞர் பெருமக்கள் ஒன்றுபட்டு, முதலாவது ஆராய்ச்சி மாநாட்டைக் கோலாலம்பூரில் நடத்துவது சாலப்பொருத்தமான செயலாகும்."

இந்தச் சிந்தனைகளை நினைவில் பதித்துத் தமிழ் ஆராய்ச்சிப் பேரேட்டைப் புரட்டிப் பார்த்தால் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்குக் கால்கோள் விழா நடத்திய மலேசியா உட்பட பொன்னார் பூமியாம் தூரக்கிழக்கு மண்ணுக்கும் தமிழ் ஆராய்ச்சிக்குமிடையே என்ன உறவுபூத்து மணம் பரப்பியது என்பதைக் கடந்துபோன 21 ஆண்டுகளில் கண்டறிவது கடினமாகத்தான் உள்ளது.

மலாயாவுடன் தமிழர்களுக்கு உள்ள உறவு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுப் பழமை வாய்ந்தது என்று மைல் கற்களை மையிட்டு எழுதிச் சென்ற கோடுகள்தாம் நிமிர்ந்து நிற்கின்றன. ஆனால் அதன் தொடர்பான ஆய்வுகள், கோபுரங்களாக எழவில்லை என்பதை நாம் வருத்தத்துடன் நினைவுகூர வேண்டியுள்ளது.

கரும்புத் தோட்டத்துத் தமிழர்களை நினைத்துக் கண்ணீர் வடித்துப் பாடிய வரகவி பாரதி,

"எண்ணம் இரங்காதோ? – அந்த
ஏழைகள், அங்குச் சொரியும் கண்ணீர்வெறும்
மண்ணிற் கலந்திடுமோ? – தெற்கு
மாகடலுக்கு நடுவினிலே அங்கோர்
கண்ணற்ற தீவினிலே – தனிக்
காட்டினில் பெண்கள் புழுங்குகின்றார் ....."

என்று பாடி உருகினார்.

"இன்றைய உலகில் தமிழ்மொழியின் பங்கும் மேம்பாடும்" என்ற மாநாட்டின் கருப்பொருளைப் பொருள் நிறைந்ததாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மலேசியாவில் முதலாவது தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை நடத்த முன்னின்று உழைத்த தமிழ்த் தூதர், முன்பு மலாயாப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் தலைமைப் பதவியை அலங்கரித்த அறிஞர் மறைத்திரு தனிநாயக அடிகளார், "உருக்கமான உணர்வைக் காட்டும் இரக்கத்தின் மொழியே தமிழ்மொழி" என்று கூறியுள்ளார்.

இன்றைய உலகில் தமிழ்மொழியின் பங்கு மேம்பாடும் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை ஆறாவது மாநாடு அகழ்ந்து அலசிப் பார்த்தது என்பதில் ஐயமில்லை.

தூரக்கிழக்கில் தமிழ் மொழியின் பெருமைகள் அவற்றுக்குக் கிடைத்துள்ள அங்கீகாரங்கள், அரசாங்க நிலையில் அரவணைப்புகள் ஆகியவற்றைக் கண்ணோட்டமிட்டு, அவற்றை அடித்தளமாகவும் ஆதாரமாகவும் கொண்டு,

"புத்தம் புதிய கலைகள் – பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே – அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

சொல்லவும் கூடுவ தில்லை – அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக்கு இல்லை
மெல்லத் தமிழ்இனிச் சாகும்"

என்ற பாரதியின் குமுறலை ஒரு கட்டளையாக ஆறாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு அறிஞர்கள் ஏற்றுச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர் - என்று பணிசெய்யப் புறப்பட்டிருக் கிறார்கள் எனச் சொல்லலாம்.

முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டைத் தொடக்கி வைத்த மலேசியாவின் முதலாவது பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான், கெடா என்ற கடாரத்தின் இளவரசர் எல்லோரும் வாழவேண்டும் -இன்புற்றிருக்க வேண்டும் என்ற கோட்பாட்டில் நம்பிக்கை வைத்து நாட்டின் ஆட்சிப் பீடத்தை அலங்கரித்தவர்.

அதே போன்று ஆறாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டைத் தொடங்கி வைத்த மலேசியாவின் இன்றைய பிரதமர் டத்தோ ஸ்ரீ டாக்டர் மகாதீர் முகம்மது அவர்கள் மலேசியாவின் நான்காவது பிரதமர் என்பது மட்டுமல்ல, அவரும் கடாரத்தின் புகழ்பெற்ற அரசியல் தலைவர் என்பது கவனிக்கத்தக்கது. பல இனச் சமுதாயப் பெருமையை ஏந்தியுள்ள மலேசிய அன்னையின் புகழ்காக்க எல்லாச் சமூகங்களின் ஆதரவையும் அன்பையும் ஒருங்கே பெற்று நவீன உலகில் மிகவும் முன்னேற்றகரமான தேசமாக மலேசியாவை ஒளிபெறச் செய்வதற்கு அவர் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்.

தமிழ் வளர்த்த சோழர்களுக்கும் கடாரத்துக்கும் 900 ஆண்டுகளுக்கு முன்பு உறவும் நட்பும் இருந்தன என்பதை இந்துப் பெருங்கடலும் வங்கக்கடலும் இன்று முழங்கிக்கொண்டிருக்கின்றன. அந்த அழியாத் தமிழுக்கு முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டையும் ஆறாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டையும் பெருமையோடு தொடக்கி வைத்த மகத்தான தலைவர்கள் கடாரத்துத் தலைவர்களே என்பதை நினைத்து நினைத்துத் தமிழ் அன்னை மகிழ்கிறாள்.

நேற்றைய உலகில் இருந்த தமிழ்தான் இன்றைய உலகிலும் தவழ்கிறது; நாளை உலகிலும் அப்படித்தான். அந்தப் பிள்ளைத் தமிழுக்கு, கன்னித் தமிழுக்கு வரலாறு இருக்கும். ஆனால் நேற்றைய உலகம் வேறு; இன்றைய உலகம் வேறு. நேற்றைய உலகின் பணிகளும் வேறு. அது கடந்து போன காட்டாறு. அதைத் திருப்பவும் முடியாது; திருத்தவும் முடியாது.

ஆனால் இன்றைய உலகப் பணிகள் வேறு. எங்கும், எதிலும் புதுமைகள் பூத்துக் குலுங்குகின்றன. நாம் செய்ய வேண்டிய பணிகளுக்குத் தமிழ் அன்னை ஒரு பேரேடு போட்டுப் பட்டியலிட்டுக் காத்திருக்கிறாள். தடுமாறுகிறவர்களுக்கும் இடம் மாறுபவர்களுக்கும் கலங்கரை விளக்கங்கள் அமைத்துக் கொடுங்கள் என்ற கட்டளையோடு தமிழ் அன்னை காத்திருக்கிறாள். ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும். அத்தகைய ஒன்றுபட்ட தமிழ்ப் பணியின்வழி, மற்றொரு சங்கத் தமிழ்ச் சகாப்தத்தைத் தமிழ் அன்னைக்கு 21ஆம் நூற்றாண்டின் பரிசாகச் சூட்டுவோம்.

அது கடாரம் தந்த பரிசாக நிலைக்கட்டும்.

இன்றைய உலகில் நன்றே வாழ்க தமிழ்!

வென்றே உயர்க தமிழ்!

(டத்தோ ஸ்ரீ ச. சாமிவேலு)
மாநாட்டுத் தலைவர்,
மலேசியப் பொதுப்பணி அமைச்சர்

MESSAGE FROM THE CHAIRMAN

As the scholars in the field of Tamil studies are well aware, the conference-series known as the International Conference-Seminar of Tamil Studies was conceived by the founders of the International Association for Tamil Research (IATR), established in January 1964 on the occasion of the 27th International Congress of Orientalists, held in New Delhi, India. The founders of the IATR included eminent scholars in the field of Tamil studies such as.

Professor S. Agesthialingom of the Annamalai University in India

Professor R.E. Asher of the University of Edinburgh, United Kingdom,

Professor Thomas Burrow of the Oxford University, United Kingdom

Professor M.B. Emeneau of the University of California, Berkeley, USA

Professor F.B.J. Kupier of the University of Leiden, the Netherlands

Professor T.P. Meenakshi Sundaram of the Annamalai University in India

Professor A.K. Ramanuja of the University of Chicago. USA

Professor K.P. Rathinam of Sri Lanka

Professor Saalai Ilanthiraian of the University of Delhi in India

Professor V. I. Subramoniam of the University of Malaya in Malaysia

Professor Xavier S. Thani Nayagam of the University of Madras in India

Professor S. Vithianathan of Sri Lanka, and

Professor K. Zvelebil of the Charles University in Czechoslovakia.

As explained by the late Professor Xavier S. Thani Nayagam, the former Professor of Indian Studies in the University of Malaya, who was in fact the chief driving force behind the IATR and the first three conferences of Tamil studies held under its auspices, it was the intention of the organisers of the conference to use the term 'Conference-Seminar' so that the objectives of study, research, and of participation limited to scholars with academic distinctions might be maintained. In this connection, it may be of interest to note that for the Third International Conference-Seminar of Tamil Studies held in Paris, France in 1970 under the auspices of the IATR and the College de France, no invitations were issued to non-academic groups or to government officials in accordance with the tradition of the College de France. Though the College de France could hold the conference of Tamil studies strictly for the academicians, it may be doubtful whether a conference of Tamil studies could be organised successfully without the help of the non-academic and the governmental bodies in Asia.

Be that as it may, the First International Conference-Seminar of Tamil Studies held in Kuala Lumpur, Malaysia in April 1966, was organised by the IATR, the Department of Indian Studies in the University of Malaya and the National Education (Tamil Schools) Development Council with the help of the financial aid provided by the people and the Government of Malaysia under the leadership of the First Prime Minister of Malaysia, Yang Teramat Mulia Tunku Abdul Rahman Putra Al-Haj, who was also most kind enough to inaugurate the first conference of Tamil Studies. The Second Conference-Seminar of Tamil Studies was organised by the IATR in Madras, Tamilnadu, India in 1968 with the financial support of the Departments of Tamil in the Universities and Colleges in India.

The Third Conference-Seminar of Tamil Studies was held in Paris, France in 1970 by the IATR with the help of the College de France and the UNESCO. The Fourth Conference-Seminar was held in Jaffna, Sri Lanka, in 1974 by the Sri Lanka Branch of the IATR with the help of the Tamil departments in the universities in Sri Lanka. The Fifth Conference-Seminar was held in Madurai, Tamilnadu, India, in 1981 by the IATR with the help of the Government of Tamilnadu and the departments of Tamil in the universities in India.

This Sixth Conference-Seminar of Tamil Studies was sponsored by the Malaysian Branch of the IATR, the Department of Indian Studies in the University of Malaya, and the World Federation of Tamils, with the support of the Government of Malaysia under the leadership of Yang Amat Berhormat Datuk Seri Dr. Mahathir Mohamad, the Prime Minister of Malaysia.

With regard to the nature of the Conference-Seminar participation, the organisers have in fact adhered to the principle of active participation in the conference being limited to scholars with academic distinctions as envisaged by the founders of the IATR.

The Secretariat of the Conference did in fact send out invitations to most of the scholars who participated in the previous five conferences and to the other scholars as well as the academic bodies engaged in Tamil studies all over the world after the Organising Committee of the Conference finalised plans to held the Sixth Conference-Seminar of Tamil Studies from 15 to 19th November 1987. However, owing to constraints of time, not all the scholars to whom invitations were sent have been able to accept our invitaion.

Nevertheless, we were, indeed, happy that several scholars of Tamil studies from at least fourteen countries of the world had accepted our invitation and inspite of the personal inconveniences of various kinds they were here in Kuala Lumpur to attend this conference. The fact that most of the research papers (nearly 190 out of the 230 papers) were submitted to the Conference Secretariat by the scholars during the first four months shows that they have responded to our invitation readily and quickly inspite of the severe constraint of time.

This conference had been organised by a team of dedicated individuals, organisations and associations in a period of less than six months (perhaps one of the shortest periods of time when compared to a period of at least twelve to twenty-four months usually required for organising a successful international conference of this kind.)

Though the Organising Committee and the various sub-committees had spared no efforts in working for an efficient organisation of the conference, there were bound to be several deficiencies and shortcomings, for which we had sought their forgiveness and co-operation.

Since the First Conference-Seminar of Tamil Studies held in Kuala Lumpur, Malaysia in 1966 some of the Tamil scholars and others who have been closely associated with the field of Tamil studies as well as with the organisation of the previous conferences of Tamil studies, have met their demise. I wish to put on record, in alphabetical order, the names of those who, according to the information available to us, have passed away:

Professor Agesthialingom of India
Mr. S. Anbananthan of Malaysia
Datuk S. Athinahappan of Malaysia
Professor Thomas Burrow of United Kingdom
Dr. R. Dhandayudham of India
Professor Jean Filliozat of France
Professor K. Kailasapathy of Sri Lanka
Professor T.V. Mahalingam of India
Tan Sri V. Manickavasagam of Malaysia
Professor T.P. Menakshisundaram of India
Mr Murugu Subramaniam of Malaysia
Professor K. Nambi Aarooran of India
Tun V.T. Sambanthan of Malaysia
Mr. A. Subbiah of India
Dr. Rama Subbiah of Malaysia
Professor Xavier S. Thani Nayagam of Malaysia
Professor M. Varadarajan of India
Mr. K.A.P. Viswanathan of India

In tribute to these Tamil scholars, Tamil patrons and supporters and to the many others departed, of whom we cherish memories in our minds, I wish to record our deepest gratitude.

Finally I wish to add a few words about the Conference Programme. The Organising Committee and the various sub-committees of the conference have done their best within a short period of time to arrange for a wide variety of attractive and fruitful programmes for the five days of the conference, and they include academic, plenary and panel sessions, workshops on performing arts, exhibitions of publications relating to Tamil studies, exhibition on Tamil culture and the role of Tamils in the various aspects of Malaysian life-patterns, cultural programmes consisting of Tamil music, dance and drama, and the public lectures by eminent scholars, all of which contributed towards the achievement of the overall objectives of holding this conference, namely, to bring together scholars in the fields of Tamil studies so that they present the results of their recent or latest researches concerning the various aspects of Tamil culture, and to assess the role and development of Tamil in the modern world.

Of the various items of the Conference Programme, the academic programme, namely, the plenary sessions took up the major part of the time available during the five days. Apart from the keynote addresses delivered by eminent scholars during the Plenary Sessions on such topics as the

Development of Tamil language, the Trade Relations between Tamil Nádu and China during the 13th and the 14th centuries A.D., Tamil for the Era of Education, and the Development of Modern Tamil Literature, there were Panel Sessions which were devoted to the discussion of research papers relating to five broad categories, namely Literature, Linguistics, Society, Culture and Science. As in the previous conferences there were more research papers on Language and Literature than on the other disciplines. This would seem to be a natural characteristic of the conference of Tamil studies, because the matter of the very existence and continuity of the Tamil people and their culture is largely dependent on the permanence of their language over a period of more than two thousand years, during which time the Tamil language had not only served the purpose of a classical language used for academic and religious objectives, but had also continued to be a living medium of popular usage in speech and writing.

As regards the Tamil language and literature, the Tamils have always shown great affection and attachment to two of the most important aspects of their civilization: one is the ancient Tamil grammatical treatise Tolkappiyam, which is the most authoritative instrument of ensuring the continuity of the Tamil language, and the other is the classical Tamil literature of the Sangam period, which is another powerful source of reference to the Tamils of all ages.

Nevertheless, the Academic Programme of an International Conference-Seminar of Tamil Studies ought not to restrict itself to Language and Literature alone, and therefore the academic panel sessions of this conference are devoted to other topics as well and they include ancient, medieval, and modern Tamil society in various parts of the world, the various aspects of Tamil culture including religion, performing arts and folklore. A notable feature of the panel sessions of this Conference is that no less than six sessions (nearly 18 hours) were devoted to the discussion of research papers relating to the theme of science and technology, and this is in keeping with the theme of the conference, namely, the role and the development of Tamil in the modern world. As hoped the co-operative efforts of the organisers as well as the participants bore fruitful results and the work of the conference was carried out in a cordial and friendly atmosphere without touching on any sensitive matters.

(Y.B. DATO SERI S. SAMYVELLU)
Chairman, Sixth International Conference - Seminar of Tamil Studies

வாழ்த்துச் செய்தி

தமிழின் சிறப்பியல்புகளை உலகுக்கு உணர்த்தவும், அதன் வளர்ச்சிபற்றி ஆராயவும் முதன்முறையாகப் பன்னாட்டு அறிஞர்களை ஒன்றுதிரட்டிய பெருமை மலேசியாவுக்குச் சேருகிறது. ஆறாவது மாநாட்டை வெகு சிறப்பாக ஏற்று நடத்தியுள்ளது. இந்த ஏற்பாட்டுக் குழுவுக்குப் பொதுச்செயலாளனாகப் பணியாற்ற அரிய வாய்ப்பு எனக்குக் கிட்டியதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த மாநாடு மொழியின் மேம்பாட்டிற்கு வித்திட்ட ஓர் ஆய்வரங்கமாகத் திகழ்ந்தது என்பதே பலரது கருத்தாகும். மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவைமீது விவாதங்கள் நடத்தி, மொழிக்கு மேலும் சிறப்பையும், வளத்தையும் கொண்டுவந்த ஆரோக்கியமான சிந்தனைகள் மாநாட்டில் மலர்ந்தன. இந்நோக்கத்திற்காகவே, மாநாடு பண்பாட்டு நிகழ்ச்சிகள், கண்காட்சி, கவியரங்கம், சிறப்புச் சொற்பொழிவுகள், கற்றுலா எனும் பல கூறுகளாகத் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டது. தவிர, மாநாட்டின் மைய அங்கமாகத் திகழ்ந்த மொழி ஆராய்ச்சிக்காக, உலகின் தலைசிறந்த தமிழறிஞர்கள் 230-க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை இந்த மாநாட்டில் சமர்ப்பித்திருக் கிறார்கள்.

ஆறவாது மாநாடு, நவீன உலகில் தமிழைத் தழைக்கச் செய்யும் தக்க காரியங்களைப்பற்றிச் சிந்தித்த அதே வேளையில் கடந்த ஐந்து ஆராய்ச்சி மாநாடுகள் தமிழ்மீதும், அதன் வளர்ச்சி மீதும் ஏற்படுத்தியுள்ள விளைவுகளைப் பற்றியும் கண்ணோட்டமிட்டது என்பதும் இவ் வேளையில் கருத்தில் கொள்ளப்படத்தக்கது.

முதலாவது மாநாடு எந்த நோக்கத்திற்காகத் தொடங்கப் பட்டதோ, அதனை நோக்கியே நமது ஒவ்வொரு செயலும், நடவடிக்கையும் அமையவேண்டும். ஒவ்வொரு முறையும் கூட்டப்படும் ஆராய்ச்சி மாநாட்டின்போதும் வெளிப்படுகின்ற சிந்தனைகள் செயல் வடிவம் பெறத் தமிழ் அறிஞர்களும், ஆர்வலர்களும் பணியாற்றிட வேண்டும் என்பதே எனது அவா.

மலேசியாவில் இரண்டாவது முறை நிகழ்த்த இந்த மாநாடு, தமிழின் மேன்மைக்கு மற்றொரு மைல்கல்லாகத் திகழ வேண்டும் என்ற பெரும் வேட்கையோடு தங்களது சேவையை வழங்கப் பல அன்பர்கள் முன்வந்தார்கள். மாநாட்டின் ஏற்பாட்டுப் பணிகளைக் கவனிக்க அமைக்கப் பெற்ற குழுவுக்குத் தலைமை ஏற்ற அமைச்சர் டத்தோ ஸ்ரீ ச. சாமிவேலு அவர்களின் சீரிய தலைமைத்துவமும், அவருக்கு உறு துணையாக இருந்த இணைத் தலைவர் டாக்டர் வி. டேவிட் அவர்களின் ஒத்துழைப்பும், கல்வி, இலக்கியம், சமுதாயம், பண்பாடு, அறிவியல் , தொழில்துட்பம் என்று ஐந்து கூறுகளாகச் செயல்பட்ட துணைக் குழுக்களில் இடம்பெற்ற அனைவருடைய அயரா உழைப்பும், சேவையும் மாநாட்டின் வெற்றிக்கு வழிகோலின என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இறுதியாக, இந்த மாநாட்டின்வழி உலகத் தமிழறிஞர் களிடையே மலர்ந்த உறவும், தொடர்பும் தமிழ்மொழியை உன்னதமான ஒரு நிலைக்கு இட்டுச்செல்லும் நிரந்தரமான கருத்துப் பரிமாற்றங் களுக்கு வாய்க்கால்களாக அமையும் என்று நம்புகிறேன்.

நன்றி.

அன்புடன்,

(பேராசிரியர் டாக்டர் **த. மாரிமுத்து**)
பொதுச் செயலாளர்
ஏற்பாட்டுக் குழு

MESSAGE FROM IATR, MALAYSIA

It is almost a decade since the Sixth International Conference-Seminar of Tamil Studies was held at the University of Malaya, Kuala Lumpur under the chairmanship of Datuk Seri S. Samy Vellu. Due to circumstances beyond the control of the organisers the publication of the papers presented at the conference had been delayed. Despite the delay the need to publish the proceedings became inevitable for purposes of a record of the conference. Thus, under the initiative of the Honourable Minister, the International Association for Tamil Research, Malaysia was entrusted with the task of publishing the papers.

A selection of available papers was made based on a criteria drawn by the Editorial Board and a decision made to publish thirty-seven articles written in Tamil and twenty-eight articles written in English. Though it may not be a complete record of the papers presented at the conference the articles included in this proceedings reflect the various topics related to Tamil studies, namely literature, language, linguistics, society, culture, history and science and technology.

The International Association for Tamil Research, Malaysia would like to take this opportunity to thank Datuk Seri S. Samy Vellu for his interest and assistance in the publication of this proceedings

Rajakrishnan Ramasamy

(RAJAKRISHNAN RAMASAMY)

Chairman, IATR Malaysia

EDITORIAL BOARD

PULAVAR A. NAKKIRAN

DR. S. SINGARAVELU

DR. MRS. DEVAPOOPATHY NADARAJAH

ASSOC. PROF. DR. K. THILAGAWATHI

ASSOC. PROF. DR. RAJAKRISHNAN RAMASAMY

DR. M. RAJANTHERAN

பொருளடக்கம்
CONTENTS

Message from the Patron	...	iii
வாழ்த்துச் செய்தி	...	vi
Message from the Chairman	...	xii
வாழ்த்துச் செய்தி	...	xvi
Message from IATR, Malaysia	...	xix
Editorial Board	...	xx

க

இலக்கியம்
LITERATURE

1.	அகத்திணை இலக்கியத்தில் தூது	...	1
2.	தமிழ் – சிங்களத் தூது காவியங்கள்	...	13
3.	தமிழர் – யப்பானியர் அகப்பொருள் மரபு: ஓர் ஒப்பீட்டாய்வு	...	27
4.	எண்பதுகளில் வெளிவந்த தமிழ்ப் படைப்பிலக்கியங்களில் அறம் ஒழுக்கம் நீதி (அறிவியல் நோக்கில்)	...	39
5.	மலேசியத் தமிழ்ச் சிறுவர் இலக்கியம்	...	53
6.	பாரதியும் நாமக்கல் கவிஞரும்	...	92
7	புதுஉத்தி நாடகங்கள் – ஒரு பார்வை	...	109
8	குறவஞ்சியின் இலக்கியக் கட்டமைப்பு	...	121
9	முல்லைப் பாட்டு – ஒரு திறனாய்வு நோக்கு	...	130
10	தாதவிழ் புரிகுழல் மாதவி அல்லது இளங்கோவின் பாத்திரப் படைப்பு உத்தி	...	142
11	திருவிளையாடலில் பரஞ்சோதியார்	...	148
12	மஸ்தான் சாகிபு போற்றும் மனித ஒருமைப்பாடு	...	183
13	தமிழ்ப் பாட்டாளி நிலை கூறும் மலையகக் கவிதைகள்	...	193
14	இக்காலக் கவிதைகளில் புதுப்பார்வை	...	210
15.	வள்ளுவர் வகுத்த உளவியல்	...	220

16. The Theme of Injustice in Paradise Lost and Cilappatikāram ... 233
17. Aspects of Sociology of Religion of the Tamils of the Sangam Age ... 237
18. The Problem of Bardic Tradition in Classical Literature ... 247
19 Nokku - A Logical Approach to Literature ... 251

உ

மொழியும் மொழியியலும்
LANGUAGE AND LINGUISTICS

20. கணக்கு வழக்கு ... 257
21. தமிழ் எழுத்தமைப்பு ... 266
22. தொல்காப்பியர் கண்ட வேற்றுமை இலக்கணம் – ஓர் இயக்க விலக்கண ஆய்வு ... 286
23. இதழ்வழிச் சொல்லாக்கங்கள் – திறனாய்வும் நெறிமுறையும் ... 315
24. காப்பியர் வழியில் சேக்கிழார்– தொல்காப்பியம் பெரியபுராணம் ஓர் ஒப்பீடு ... 334
25. மலேசியாவில் தமிழ்மொழி கற்றலும் கற்பித்தலும் அன்றும் இன்றும் ... 355
26. செய்துஎன் எச்சமும் செயஎன் எச்சமும் ... 369
27. நிறம் மாறிவரும் நிறப்பெயர்கள் (ஒரு புதிய சிந்தனை) ... 378
28. வளர்தமிழ் ... 388
29. Tamil Phonology : Patterns of Adoption and Change ... 400
30. Malay and Tamil Pronominals ... 408
31. Orthographic Systems in Early Tamil Writing ... 418
32. A Study of Lexicographic Definitions in Tamil Lexicon ... 431
33. The Tamil Case System ... 435

34. Japanese - Tamil Relationship : Particle Comparison in Old Tamil and Old Japanese ... 451

35. Tamil and Japanese : Some Typological Analogies ... 467

ங

சமுதாயமும் பண்பாடும்
SOCIETY AND CULTURE

36. தமிழ்நாட்டில் பதங்களின் தோற்றமும் வளர்ச்சியும் (20 ஆம் நூற்றாண்டு வரை) ... 479

37. உலகத் தமிழாராய்ச்சித் தளம் – ஒரு மறு ஆய்வு ... 492

38. மக்கள் தொடர்புவழிச் சங்ககால ஆட்சித்தலைவரின் ஆளுமை வளர்ச்சி ... 502

39. தாழ்த்தப்பட்டோர் நலனுக்குச் சௌந்தரபாண்டியனார் ஆற்றிய தொண்டு ... 518

40. Music of the Tamils ... 530

41. Reappraisal of Tamil-Brāhmi Inscriptions in Tamilnadu ... 547

42. Tamil Influence on Mauritian Sega ... 559

43. Tamil Graffiti and the Indus Script ... 568

44. Tamils' Flags - Types and Symbols ... 575

45. The Rise of Literacy among the Tamils of Northern Sri Lanka in the 19th Century ... 588

46. A Social History of the Tamils and Their Language in Mauritius ... 593

47. Tamil Education in Ceylon During Ancient, Portugese, Dutch and Early British Rule ... 603

48. Tamil Social Organisations in a Changing Singapore ... 620

49. Partners in Empire : Chulia and Kling Maritime Enterprises in the Bay of Bengal. c.1600-c.1800 ... 634

50. Satyamurthi and the Overseas Tamils ... 649

51. Trade Relations Between Tamilnadu and China During the 13th and 14th Centuries ... 655

அறிவியலும் தொழில்நுட்பமும்
SCIENCE AND TECHNOLOGY

52.	தமிழில் அறிவியல் இலக்கியங்கள்	...	674
53.	வள்ளலார் என்னும் விஞ்ஞானி	...	698
54.	அகத்தியரும் சித்த மருத்துவமும் (ஓர் ஆய்வு)	...	710
55.	இம்மை வாழ்வை இனிமைபெறச் செய்யும் இராச கனி	...	717
56.	"இலமூரியா" – இலைமூலி பிறந்த கண்டம் – ஓர் அறிவியல் ஆய்வு	...	728
57.	தமிழ் இலக்கியத்தில் அறுவடைப் பின்சார் தொழில்நுட்பம்	...	737
58.	தமிழ் அச்சடிப்பில் நய நளினத் தொழில்நுட்பங்கள்	...	745
59.	தமிழ் அறிவியல் – வானவியல்	...	753
60.	கணினியும் தமிழ் கற்பித்தலும்	...	764
61.	The Mathematical Link Between India and China	...	785
62.	Tamil for Science and Technology	...	809
63.	Computer Based Word Processing for Tamil Language	...	817
64.	Two ISO 2022 Tamil Character Code Tables for Use in Personal Computer Word - Processing Systems	...	825
65.	Computers in Tamil Language Processing	...	833
	Report of the Sixth I.C.S.T.S. Held between 15-19 November 1987	...	844
	Committees	...	850
	Sessions	...	861

க

இலக்கியம்

LITERATURE

1

அகத்திணை இலக்கியத்தில் தூது

எஸ். குமரன்

அமிழ்தினும் இனிய தமிழ்மொழியின் தனிச் சிறப்பு அதில் அமைந்துள்ள பொருள் இலக்கணம் ஆகும். பிற மொழிகள் எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் கொண்டனவேயன்றி மக்கள் வாழ்வியலை ஆராய்ந்த பொருள் இலக்கணம் கண்டவை அல்ல. சங்கப் புலவர்கள் தம் செய்யுளுக்கு மக்கள் வாழ்க்கையைப் பொருளாக அமைத்த போது. அதனை அகத்திணை, புறத்திணை என இரண்டாக வகுத்து அமைத்தனர். அகத்திணை என்பது காதலொழுக்கம். இது புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல்[1] ஆகிய பிரிவுகளை உள்ளடக்கி யுள்ளது. தலைவன் தலைவியர்க்கு இடையேயுள்ள காதலொழுக்கத்தைப் புலவன் கூறும்போது, ஒருவர் பெயரைச் சுட்டாது கூறுவதும், சுட்டிக் கூறுவதும் உண்டு. பாக்களுள் ஒருவர் பெயரைச் சுட்டிக் கூறாப் பாக்களே அகத்திணைக்குரியவை. சுட்டி ஒருவர் பெயர் கொள்ளும் காதற்பாக் களையும், போர் முதலிய பிற ஒழுக்கங்களைக் கூறும் பாக்களையும் புறத்திணையுள் அடக்கினர். அகத்திணைப் பொருளான காமமோ பருவம் நிரம்பிய உயர்திணை. அஃறிணை உயிர்க்கெல்லாம் பொதுவாய் அமைந்து கிடப்பது.

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான்அமர்ந்து வருஉம் மேவற் றாகும்" [2]

என்று ஒல்காப் பெரும் புலவர் தொல்காப்பியர் சுட்டியவாறு பிறவியிலேயே உடம்பொடு ஒட்டிய இயல்புடையது.

சங்கத் தமிழ்ப் பாடல்களின் தொகை 2371 என்றும், அவற்றுள் அகத்திணை பற்றியவை 1862 என்றும் நாம் அறிவோம். இவற்றைப் பாடிய 473 சங்கச் சான்றோர்களுள் அகம் பாடியவர்கள் மட்டிலும் 378 பேர்களாவர். அகத்திணைப் பாடல்கள் பெரும்பாலும் நாடக வழக்கிலேயே அமையப்பெற்ற பாடல்களாக உள்ளன. அவை தலைவன், தலைவி மற்றும் தோழியின் உள்ளத்து உணர்வுகளின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளன.

சங்கப் புலவர்களின் அகத்திணைப் பாடல்களைப் பயிலுங்கால், ஒவ்வொரு பாடலிலும் ஆண், பெண் உள்ளங்களைக் காண்கின்றோம். இப் பாடல்களில், காதல் உணர்வையுடைய தலைவன் தலைவியரைப் பற்றித் தோழி, பாங்கன், விறலி, பாணன், பரத்தை, தாய், செவிலி, ஊரார், வழிப்போக்கர், கண்டோர் முதலியோர் நினைத்த செய்திகளும் புலனாகின்றன. இவற்றை எல்லாம் நுணுக்கமாக அறியுங்கால், மனித உள்ளங்களின் பல்வேறு நிலைகள் நமக்குத் தெரிகின்றன. உளவியல் மதிநுட்பத்துடன் இவற்றை ஆராயவேண்டும் என்ற தெளிவும் நமக்கு ஏற்படுகின்றது.

அக்கால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையையே தங்களுக்குரிய வாழ்க்கை நெறியாகக் கொண்டனர். தங்களின் உணர்வுகள் அனைத்தையும் இயற்கையின்பால் ஏற்றியும். பறவைகள், விலங்குகள் இவற்றின் கூட்டு வாழ்க்கையினைக் கண்டு உளம் களித்தும் வாழ்ந்தனர். தலைவனைப் பிரிந்து ஏக்கத்திலும் துயரத்திலும் வாழும் தலைவிக்கு உறுதுணையாக நின்று ஆலோசனைகளையும் ஆறுதல் களையும் கூறுவது தோழியின் கடமையாகும். எனவே, தோழியே தலைவிக்குத் தூதுவளாக இருப்பாள். தோழி உடன் இல்லாது தனித்திருக்கும் தலைவிக்கு ஏக்கமும் வேதனையும் அதிகரித்து ஆட்கொள்ளும். அந் நிலையில் தலைவி தனது ஏக்கத்தையும், வேதனைகளையும் வெளிப்படுத்தத் தினைப்பயிர்,[3] முல்லைக்கொடி,[4] வயலைக்கொடி,[5] கிளி,[6] கூகை,[7] அன்றில்,[8] காகம்,[9] கொக்கு,[10] வண்டு,[11] சேவல்,[12] நண்டு,[13] நிலவு,[14] வாடைக்காற்று,[15] மழைமேகம்,[16] மாலைப்பொழுது,[17] கடல்[18] போன்றவற்றைத் தலைவன், தலைவி மற்றும் தோழி மூவரும் தூது சொல்வதற்கு உரிய பொருளாகக் கொள்வது வழக்கமாகும்.

தலைவனும் தலைவியும் களவு வாழ்க்கையில் ஈடுபட்ட வேளை, தலைவன், தலைவியை மணந்துகொள்ளாமல் காலத்தைக் கடத்திக்

கொண்டிருப்பான். இந்நிலையில் தலைவி நாணத்தை மறந்து தன்னை விரைந்து மணம் புரியுமாறு தலைவனை வற்புறுத்துவது அறிவுடைப் பெண்ணிற்கு அழகுடைய செயல் அன்று; மரபும் அன்று. எனவே, தனது ஏக்கத்தையும், எதிர்பார்ப்பையும் மதிநுட்பம் மிகுந்த தோழியிடம் ஒளிவுமறைவின்றித் தலைவி கூறுவது சற்று ஆறுதல் பெறுவதாக அமையும். ஆனால், சில வேளைகளில் தோழியும் தலைவிக்கு ஏற்புடைய ஆறுதல்களையும், அறிவுரைகளையும் கூற இயலாத நிலையிலே இருப்பாள்; தலைவி தன் உணர்வுகளை அடக்க முயன்றும் முடியாத வளாகத் தன்னைச் சுற்றிலுமுள்ள இயற்கைப் பொருள்களிடம் மனத்தைத் திறந்து காட்டுவாள்; தினைப்பயிராயினும். வயலைக் கொடியாயினும் பாராமல் தனது வேதனையை உணர்ந்து செயல்படுமாறு உரைப்பாள்; பறவைகளை அழைத்துத் தன் ஏக்கத்தையும், வேதனைகளையும் தலைவனிடத்தில் எடுத்துக் கூறித் தலைவனை உணரச் செய்யுமாறு அவற்றைத் தூதாக அனுப்புவாள். இப்படிச் செய்வதில் அவளுக்கு ஒரு திருப்தி, மகிழ்ச்சி.

களவு வாழ்க்கை கனிந்து கற்பு வாழ்க்கையில் ஈடுபட்ட வேளை, தலைவன் குடும்ப வாழ்வைச் செழிக்கச் செய்ய எண்ணி அயல்நாட்டிற்குப் பொருள் ஈட்டச் செல்வதும் மரபாகும். விரும்தோம்பலைத் தடையின்றிச் செய்து வருவது சிறந்த வாழ்விற்குத் தலையாய கடமையாகும். குறித்த காலத்தில் திரும்பிவிடுவதாகத் தலைவியிடம் வாக்குறுதி கொடுத்து விட்டுத் தலைவன் செல்வான். குறித்த காலத்தில் வந்துவிடுவதாகக் கூறிவிட்டுச் சென்ற தலைவனின் வருகைக்கான நாள்களை எண்ணி எண்ணி இருப்பதே தலைவிக்கு வேலையாகிவிடும். தலைவன் குறிப்பிட்ட அந்தக் காலம் வந்துவிட்டதை நினைவுறுத்தும் வண்ணம், இயற்கையும் செயல்படும். மலர்கள் மணம் பரப்பும்; வண்டுகள் மலர்ந்த மலர்களில் தேன் எடுத்து உண்ண வேண்டி, ரீங்காரமிட்டுத் திரிவது தலைவியின் வேதனைகளை அதிகரிப்பதாகவே அமையும். இந்நிலையில் தலைவி தன் ஆற்றாமையினையும், மன உணர்வுகளையும் வெளிப்படுத்த வண்டு, குருகு, கிளி, அன்றில், காகம், ஆந்தை மற்றும் வாடைக்காற்று, நிலவு, மாலை நேரம், மேகம் போன்றவற்றைத் தூதாக அனுப்பித் தலைவனை விரைந்து வருமாறு பணிப்பாள்.

தோழியானவள், தலைவன் தலைவியர்க்கிடையே ஓர் இணைப்புப் பாலமாக இருப்பவள். தலைவியை வரைந்துகொள்ளாமல் காலத்தைக்

கடத்திக்கொண்டிருக்கும் தலைவனைப் பல வேளையில் பழித்தும், இடித்தும் உரைப்பாள்; சிறைப்புறமாக வந்து நிற்கும் தலைவனைப் பாராதவள் போன்று தோழி, அவ்விடத்தில் காணப்படும் பறவைகளிடம் தன் கருத்தைக் கூறி, தலைவனிடம் எடுத்துரைக்குமாறு கூறுவாள். இவ்வாறு கூறுவதன்வழி, தலைவன் தன் கடமையை உணர்ந்து, தலைவியை விரைந்து மணமுடிக்க ஆவன செய்வான்.

அகத்திணை இலக்கியங்களை நாம் ஆராயுங்கால், வண்டினைப் பல இடங்களில் தூதாக அனுப்பும் நிலையினைப் பார்க்கலாம். ஏனெனில், வண்டு தலைவன், தலைவி இருவரின் நிலத்திற்கும் உரிய பொதுவான பிராணியாகும். நற்றிணைப் பாடல்களில் தலைவன் ஒருவன், தலைவியை மணம் செய்துகொள்ளாது பொருள் ஈட்டுவதற்காக வேற்று நாட்டுக்குச் சென்றுவிட்டான். தலைவனது பிரிவின் துயரத்தைத் தாங்க இயலாத தலைவி, வண்டினை அழைத்துத் தனது மனவேதனைகளைக் கூறித் தலைவனை விரைந்து அழைத்து வருமாறு பணிக்கிறாள்.

"கொடியை வாழி தும்பி! இந்நோய்
படுகதில் அம்ம யான்நினக்கு உரைத்தென
மெய்யே கருமை அன்றியுஞ் செல்வன்
அறிவுங் கரிதோ அறனிலோய் நினக்கே
மனையுறக் காக்கும் மாண்பெருங் கிடக்கை
நுண்முள் வேலித் தாதொடு பொதுளிய
தாதுபடு பீரம் ஊதி வேறுபட
நாற்றம் இன்மையிற் பசலை ஊதாய்
சிறுகுறும் பறவைக் கோடி விரைவுடன்
நெஞ்சுநெகிழ் செய்ததன் பயனோ அன்பிலர்
வெம்மலை அருஞ்சுரம் இறந்தோர்க்கு
என்நிலை உரையாய் சென்றவன் வரவே." [19]

"கொடுமை மிக்கதாக விளங்கும் தும்பியே! நீ நீண்டு வாழ்வாயாக! தேனொடு தழைந்த குலைகட்டிய பீர்க்கம் பூவிலே சென்று தேனைப் பருகினாயே! அதற்குக் கைமாறாக, என்னிடத்தில் அன்பிலாதவராகிக் கொடிய மலையிலே செல்வதற்கு அரிய சுரத்தில் சென்ற தலைவரிடம் சென்று, நான் படும் வேதனையை எடுத்துக்கூறி, அவர் இங்கு விரைந்து வருமாறு கூறவும் இல்லை; உனக்கு உனது உடம்பே கரிய நிறமாக

உள்ளதால், உனது அறிவும் கரிய நிறமாகிவிட்டதோ? என வண்டைக கடிந்துரைத்தாள்.

தனது வேண்டுதலை அறிந்து உடனே விரைந்து சென்று தலைவனை அழைத்து வரும் சக்தி வண்டிற்குக் கிடையாது என்பது தலைவியும் உணர்ந்த ஒன்றே. இருப்பினும், தனது உணர்வுகளை வெளிப்படுத்திய பின்பு, ஏக்கத்திற்கும் வேதனைக்கும் சிறிது ஆறுதல் கிடைத்ததாக உணர்கிறாள். இதே போன்று குறுந்தொகையில், தலைவனைச் சந்திக்க இயலாமல் தலைவி பெற்றோரால் காவலிடப் பட்டுள்ளாள். அவ் வேளை தலைவன் வந்து சிறைப்புறமாக நிற்பதை அறிந்தாள் தோழி. தலைவி காவலில் அடைபட்டுக் கிடக்கிறாள். எனவே, மணம் புரிந்துகொள்வதற்கே உரியவள் என வண்டிடம் கூறுவது போன்று தலைவனுக்கு அறிவுறுத்துகின்றாள்.

"அம்ம வாழியோ வணிச்சிறைத் தும்பி
நன்மொழிக் கச்ச மில்லை யவர்நாட்
டண்ண னெடுவரைச் சேறி யாயிற்
கடமை மிடைந்த துடவையஞ் சிறுதினைத்
துளரெறி நுண்டுகட் களைஞர் தங்கை
தமரிற் றீரா ளென்மோ வரசர்
நிரைசெல னுண்டோல் போலப்
பிரசந் தூங்கு மலைகிழ வோர்க்கே!"[20]

"நீலமணி போன்று அழகிய சிறகை உடைய வண்டே உனக்கு ஒன்று உரைப்பேன்; அதனைக் கேட்பாயாக! நல்ல சொற்களை ஒருவரிடத்தே சென்று உரைப்பதற்கு அச்சம் வேண்டா. தலைவரது மலைப்பக்கமாக நீ செல்வாயானால், தலைவி தன் பெற்றோரிடமிருந்து வெளிவர இயலாத நிலையில் இருப்பதைத் தலைவனிடம் எடுத்துரைப் பாயாக" என வண்டிடம் பணிக்கிறாள்.

தினைப்புனத்தில் பறவைகள் தினைக்கதிரைத் தின்றுவிடாமல் காவல் காத்து வருவது தலைவியின் பணிகளில் ஒன்றாகும். அவ்வாறு காவல் செய்யும் வேளையில்தான், தலைவன் தலைவியிடம் களவு கொள்வான். பெரும்பாலும் இருவரும் தினைப்புனத்திலேயே சந்தித்துக் காதலை வளர்த்துக்கொள்வார்கள். அவ்வாறு நிகழ்ந்து வருகின்ற வேளையில் ஒரு முறை தலைவி தன் பெற்றோரால் சந்தேகிக்கப்பட்டு

வீட்டிலே காவலில் வைக்கப்பட்டுவிட்டாள். தலைவனைக் காணாது நித்தம் நித்தம் மனத்திற்குள்ளே வருந்தி அழுதுகொண்டிருந்தாள் தலைவி. அச்சமயம் தலைவியைச் சந்திக்க வேண்டித் தலைவியின் வீட்டுச் சிறைப்புறத்தில் மறைவாக நின்றான் தலைவன். இதனைக் கண்ணுற்ற தோழி, அருகில் மரத்திலிருந்த கிளிக்கூட்டத்திடம் தலைவியின் நிலையை எடுத்துரைப்பது போன்று கூறத் தொடங்குகின்றாள்.

"முறஞ்செவி யானைத் தடக்கையில் தடைஇ
இறைஞ்சிய குரல பைந்தாள் செந்தினை
வரையோன் வண்மை போலப் பலவுடன்
கிளையோடு உண்ணும் வளைவாய்ப் பாசினம்
குல்லை குளவி கூதளங் குவளை
இல்லமொடு மிடைந்த ஈர்ந்தண் கண்ணியன்
சுற்றமை வில்லன் செயலைத் தோன்றும்
நற்றார் மார்பன் காண்குறின் சிறிய
நன்கவற்கு அறிய உரைமின் பிற்றை
அணங்கும் அணங்கும் போலும் அணங்கி
வறும்புனங் காவல் விடாமை
அறிந்தனிர் அல்லிரோ அறனில் யாயே." [21]

"தலை சாய்ந்த தினைப்பயிரை, சுற்றத்தோடு வந்து உண்டு களிக்கும் வளைந்த வாயையுடைய கிளிக்கூட்டமே! காவலின்றி அழிகின்ற தினைப்புனத்தினைக் காவல் செய்யவிடாது வைக்கப்பட்டிருக்கும் தலைவியின் நிலையினைத் தெளிவாகத் தலைவனிடம் விளக்கிக் கூறு" என்று கிளியினைத் தூதாகக் கருதி அனுப்புகின்றாள் தோழி.

தலைவனின் பிரிவால் ஏங்கி, தளித்து வாடும் தலைவி தனது மன வேதனைகளை அவ்வப்போது பறவைகளிடமும் இயற்கைப் பொருளான நிலவு. மேகம், வாடைக்காற்று, மழை போன்றவற்றிடமும் வெளிப்படுத்தித் தன்னைத்தானே தேற்றிக்கொள்வதே வழக்கமாகிவிட்டது. அப்படிப்பட்ட சூழலில் ஒரு முறை, தலைவி தனது தனிமை ஏக்கத்தை ஒரு வெண் குருகினிடம் முறையிட்டுத் தலைவனிடம் சென்று விளக்குமாறு கூறினாள்.

"வளைநீர் மேய்ந்து கிளைமுதற் செலீஇ
வாப்பறை விரும்பினை ஆயினுந் தூச்சிறை
இரும்புலா அருந்துநின் கிளையொடு சிறிதிருந்து
கருங்கால் வெண்குருகு எனவ கேண்மதி
பெரும்புலம் பின்றே சிறுபுன் மாலை
அதுநீ அறியின் அன்புமார் உடையை
நொதுமல் நெஞ்சங் கொள்ளாது என்குறை
இற்றாங்கு உணர உரைமதி தழையோர்
கொய்குழை அரும்பிய குமரி ஞாழல்
தெண்டிரை மணிப்புறந் தைவருங்
கண்டல் வேலிநும் துறைகிழ வோற்கே." [22]

"கரிய காலையுடைய வெளிய குருகாய்! நீ உனது சுற்றம் முதலானவற்றோடு வளைந்த நீர்ப்பரப்பிலுள்ள இரையைத் தின்று தாவிப் பறந்து, தூய சிறகுகளையுடைய உனது சுற்றத்தோடு சிறிது பொழுது தங்கிவிட்டு என்னுடைய சொற்களைக் கேட்பாயாக! சிறிய மாலைப் பொழுதானது எனக்குப் பெரிய வருத்தம் தருவதாக அமைகின்றது. அதனை நீ உணர்ந்தால், உடனே சென்று நம் தலைவரிடம் என் நிலையை எடுத்துக்கூறி இங்கு விரைந்து வந்து என்னை வரைந்துகொள்ளச் சொல்வாயாக" என்று தனது அச்சத்தையும் நாணத்தையும் மறந்து கூறி வெண்குருகை அனுப்புவாள்.

தலைவியைப் போன்று தலைவனும் தனித்திருக்கும் வேளைகளில் தலைவியின் நினைவாகவே இருப்பான். அந்த ஏக்க உணர்வுகளை நீண்ட நாள்களுக்கு மனத்திற்குள்ளேயே அடைத்துவைக்க இயலாதவனாய்த் தவிப்பான். குறித்த காலத்தில் வினைமுடித்துத் திரும்புவேன் எனக் கூறிப் பிரிந்தாலும், சிற்சில வேளைகளில் தலைவனால் அவ்வாறு செய்ய இயலாது. வினையை முடித்தவுடன் தன்னை எதிர்நோக்கிக் காத்திருக்கும் தலைவியைக் காணத் தேரில் விரைந்து வருவான். அவ்வாறு வினைமுடித்து விரைந்து திரும்புகையில் ஒரு முறை வழியில் வாடைக்காற்றுப் பலமாக வீசியது. உடனே வாடைக்காற்றினைத் தலைவியின் இருப்பிடத்திற்கு அனுப்பி அவளை வருத்தாமல் காக்குமாறு பணிக்கிறான்.

"ஓம்புமதி வாழியோ வாடை பாம்பின்
தூங்குதோல் கடுக்குந் தூவெள் ளருவிக்
கல்லுயர் நண்ணி யதுவே நெல்லி
மரையின மாரு முன்றிற்
புல்வேய் குரம்பை நல்லோ ளூரே." [23]

"வாடைக்காற்றே நீ வாழ்க! நல்லவளாகிய தலைவியின் ஊரானது நெல்லிக்காய்களை மரையின் கூட்டம் உண்கின்ற முற்றங்களைக் கொண்ட, புல்வேய்ந்த குடிசைகளை உடையதாகும். தொங்கும் பாம்பினது தோலைப்போலத் தோன்றும் தூய வெள்ளிய அருவியையுடைய மலையுச்சியின் அருகேயுள்ளதும் அதுவாகும். நீ அங்குச் சென்று, அவளை வருத்தாமல் காப்பாயாக" என்று வாடையையும் தூதாக அனுப்பி வாழ்ந்த நிலையினையும் நாம் பார்க்கின்றோம்.

அகத்திணை இலக்கியத்தில் தோழியானவள் தலைவியின் மாறுபட்ட நிலைகளை உணர்ந்து அதற்கு ஏற்றாற் போன்று செயல்படுவதில் திறமைமிக்கவளாக இருப்பாள். தலைவியின் தேவை எதுவாயினும், உடனே தக்க வழியில் – தகுந்த முறையில் – பூர்த்தி செய்வதிலும் கைதேர்ந்தவளாக இருப்பாள்; தோழியின் அனைத்துக் காரியங்களையும் செய்ய முனைவாள்; பகற்குறி நீங்கி இரவுக் குறியில் தலைவியைச் சந்திக்குமாறு தலைவனுக்கு அறிவுரை கூறுவாள் தோழி. இரவுக் குறியில் வரும் தலைவன் பல இடையூறுகளையும், தடைகளையும் மீறியே வந்து தலைவியைச் சந்திப்பான். அனைத்துத் தடைகளையும் சமாளித்து வரும் தலைவனுக்குத் தலைவியின் ஊரில் இடையூறு ஏதும் நிகழாதிருக்கத் தோழியானவள் பல வழிகளைக் கையாளுவாள். இப்படிப்பட்ட ஒரு நிலையினை நற்றிணைப் பாடல் ஒன்றில் காணலாம்.

"எம்மூர் வாயில் ஒண்டுறைத் தடைஇய
கடவுள் முதுமரத்து உடனுறை பழகிய
தேயா வளைவாய்த் தெண்கண் கூருகிர்
வாய்ப்பறை அசாஉம் வலிமுந்து கூகை
மையூன் தெரிந்த நெய்வெண் புழுக்கல்
எலிவான் சூட்டொடு மலியப் பேணுதும்
எஞ்சாக் கொள்கைஎங் காதலர் வரல்நசைஇத்
துஞ்சாது அலமரு பொழுதின்
அஞ்சுவரக் கடுங்குரல் பயிற்றா தீமே." [24]

தலைவன், இரவுக்குறியில் வந்திருப்பதைக் குறிப்பினாலறிந்த தோழி, கூகையைக் குழறாமல் இருக்குமாறு வேண்டுகிறான். "எமது ஊர்முகத்தின் ஒள்ளிய பொய்கைத் துறையருகிலே கடவுள் வீற்றிருக்கும் பருத்த முதிய மரத்தின் மீதிருந்து வளைந்த வாயையும், தெளிந்த கண்ணையும், கூரிய நகங்களையும் உடைய வலிமை மிக்க கூகையே! யாம் ஆட்டிறைச்சியுடனே, நெய்யைக் கலந்து வெண்மையான சோற்றினை உனக்குக் கொடுப்போம். எம்மீது மிகுந்த அன்புகொண்டு வரும் தலைவருக்காக யாம், இரவிலே துயில் கொள்ளாது உள்ளம் ஏங்கியிருக்கும் வேளையில், பலரும் அஞ்சி விழித்துக்கொள்ளும்படியாக நின் கடிய குரலை எடுத்துக் குழறி எம்மை வருத்தாதே!" எனக் கூகையை வேண்டிக் கேட்கிறாள் தோழி.

பறவைகளையும், இயற்கைப் பொருள்களையும் மட்டும் அல்லாது தினைப்பயிர்களிடத்திலும் தனது உணர்வுகளை வெளிப்படுத்தும் நிலைகளை அகத்திணை இலக்கியத்தில் காணலாம். தினைப்புனத்திற்குச் சென்று, தினைக்கதிரைத் தின்னவரும் பறவைகளை ஓட்டவேண்டி அடிக்கடி தலைவி தோழியுடன் தினைப்புனம் செல்வாள். அங்குதான், தலைவன் தலைவியைச் சந்தித்து அன்பைப் பரிமாறி வளர்த்துக் கொள்வான். தினைப்புனமே, பிறரிடமிருந்து மறைந்து கொள்வதற்கும், சுதந்திரமாக அன்பைப் பரிமாறுவதற்கும் ஏற்ற இடமாக அக்காலத்தில் விளங்கியது. பெரும்பாலும் தினைப்பயிர்கள் முற்றி அறுவடை செய்தபின், தலைவியும் தோழியும் மீண்டும் தினைப்புனத்திற்கு வர வாய்ப்புகள் இல்லாமல் போய்விடும். அப்படிப்பட்ட சமயங்களில் தலைவி தலைவனைச் சந்திக்க முடியாமல் ஏங்கி இருப்பாள். இந்நிலை ஏற்படாதிருக்கத் தலைவி தினைப்பயிர்களிடம் தன் வேண்டுதலைக் கூறி, அவற்றைச் சிறிது காலம் தாமதமாகக் கதிரீனும்படி கோருகின்றாள்.[25] தாமதமாகக் கதிரீன்றால், மேலும் சிறிது காலம் தொடர்ந்து தினைப்புனத்திற்குக் காவல் புரியச் சென்று, தலைவனைச் சந்தித்து அன்பை வளர்க்கலாம் என்ற பேராவலே இதற்குக் காரணம்.

இயற்கையோடு இணைந்த வாழ்க்கையை நடத்தி வந்த மக்கள், தம்மைச் சுற்றிலுமுள்ள இயற்கைப் பொருள்களின் செயல்களாலும் ஈர்க்கப்பட்டுச் செம்மையுடன் வாழ்ந்தனர். இயற்கைச் செயல்களைத் தங்களுக்குச் சாதகமாக ஏற்று இயற்கையோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தனர். கலித்தொகையில், தலைவன் ஒருவன் தலைவியை மணந்து

இருந்தனர். தலைவன், தலைவி இருவருக்குமிடையே உறவினை வளர்ப்பதில் இவர்களது பங்கு பெரிதாகும்.

குறுந்தொகையில், தலைவனோடு தலைவி ஊடல் கொண்டிருந்த காலத்தில் தலைவனை ஏற்றுக்கொள்ளச் செய்யக் கருதித் தூதாக வருகின்றான் பாணன். தலைவனை ஏற்பதற்கு இசையும் தலைவி தோழியிடம் கூறுவது போல், அவனும் கேட்டுத் தலைவனுக்குத் தெரிவிக்குமாறு இப்படிக் கூறுகின்றனள்.

"அன்னா யிவனோ ரிளமா ணாக்கன்
தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ?
இரந்தூ ணிரம்பா மேனியொடு
விருந்தி னூரும் பெருஞ்செம் மலனே" [27]

"தாய் போன்று என்னிடத்தே அன்புகாட்டி வருகின்ற தோழியே! இந்தப் பாண்மகன் பாணர்க்குரிய கலைகளைக் கற்பவர் பலருள்ளும் ஓர் இளைய மாணாக்கன் ஆவான். இவனது வார்த்தையைக் கேட்டுத் தலைவன் மீதிருந்த சினத்தை மறந்தேன். இவன் சிறப்புற்று வாழ்வானாக!" என்று தலைவனிடமிருந்து தூதுவனாக வந்த பாணனின் சிறப்பினைக் குறித்துத் தோழியிடம் கூறுகின்றாள் தலைவி.

பரத்தையின் உறவைத் தலைவன் நாடிச் செல்வது அக்காலம் தொட்டு வழக்கிலிருந்த ஒன்றாகும். தனக்கு ஏற்ற பரத்தையரைக் கொள்ளத் தலைவன் விறலியையும், பாணனையும் தூதுவர்களாக அனுப்புவான். பரத்தையரை நாடிச் சென்றதனால், தலைவன் மீது சீற்றம் கொண்டிருப்பாள் தலைவி. அவ் வேளையில் தலைவியைச் சமாதானப்படுத்த அவளிடத்தில் தனக்குள்ள பேரன்பைச் சொல்லி அவளது இசைவைப் பெற்று வரத் தூதுவனை அனுப்புவான் தலைவன். தூதுவனின் வார்த்தைகளைக் கேட்டு மனம் மாறித் தலைவனை ஏற்பாள் தலைவி. ஆகப் பாணன், பாங்கன், விறலி போன்றோரின் பங்கு இதில் இன்றியமையாததாக விளங்குகின்றது.

களவு வாழ்க்கையானாலும், கற்பு வாழ்க்கையானாலும் தங்களின் உணர்வுகளை அவ்வப்போது வெளிப்படுத்தத் தங்களைச் சுற்றியுள்ளவற்றையே துணையாகவும், தூதாகவும் கொண்டு வாழ்ந்த நிலைகளைச் சங்க இலக்கியங்களில் குறிப்பாக அகத்திணை இலக்கியத்தில் தெளிவாகக் காண முடிகிறது.

கொள்ளாமல் காலத்தைக் கடத்திக்கொண்டிருந்தான். அவனது தவற்றைத் தோழியும் அவ்வப்போது சுட்டிக்காட்டி வந்தாள்.

அவ் வேளையில் தோழி கடலையும், அன்றிலையும், குழலையும் பார்த்துத் தனது ஏக்கத்தையும் ஆதங்கத்தையும் வெளிப்படுத்துகின்றாள்.

"பாய்திரை பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கடல்
தூவறத் துறந்தனன் துறைவனென் றவன்திறம்
நோய்தெற உழப்பார்கண் இமிழ்தியோ எம்போலக்
காதல்செய் தகன்றாரை யுடையை யோநீ!"

"பரக்கின்ற அலைகள் ஒலித்தலை மாறாத பரப்புநீர்ப் பனிக்கடலே! 'நன்று சொல்வதையே என் தலைவர் கொன்றுவிட்டனரே?' எனக் கலங்கிய, என் துயரத்தை அறிந்துதான் நரலுகின்றாயோ? அல்லது, எம்போல நீயும் இனிய துணையாகிப் பின் பிரிந்த துணையை உடையையோ?"

"பனியிருள் சூழ்தரப் பைதலஞ் சிறுகுழல்
இனிவரின் உயருமன் பழியெனக் கலங்கிய
தனியவ ரிடும்பைகண் டினைதியோ எம்போல
இனியசெய் தகன்றாரை யுடையை யோநீ"[26]

"வருத்தும் அழகிய சிறு குழலே! 'இனிவரின், பழி உயரும்' எனக் கலங்கியிருக்கும் தனித்திருப்பவரின் துயர் கண்டு, இருள் சூழ்தருகின்ற இவ் வேளையிலே, இரங்கி நீயும் வருந்துகின்றாயோ? அன்றி, எம்மைப்போலவே, முன் இனியவற்றைச் செய்து, இப்போது அகன்று துன்பஞ் செய்பவரை நீயும் உடையையோ?"

இயற்கைப் பொருளான இவை யாவும் பதில் கூறாவிடினும் தனது உணர்வுகளை வெளிப்படுத்திய திருப்தியைப் பெற்றவளாகின்றாள் தோழி.

பறவைகளிடமும் இயற்கைப் பொருள்களிடமும் மட்டும் தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தாது தங்களுடன் இணைந்து வாழுபவர் களிடமும் இன்பதுன்பங்களைப் பகிர்ந்து அவர்களையும் தூதுவர்களாகக் கொண்டு வாழ்ந்தனர் அக்கால மக்கள். தலைவன், தலைவிக்குத் தூதுவளாகத் தோழியைத் தவிர்த்து மற்றும் பாங்கன், பாணன், விறலி போன்றோரும் அவ்வப்போது இருவருக்குமிடையே தூது செல்பவர்களாக

அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம் பொருளதிகாரம் (நச்சினார்க்கினியர்), 24
2. தொல்காப்பியம் பொருளதிகாரம் (இளம்பூரணர்), 27
3. நற்றிணை, 251
4. குறுந்தொகை, 162
5. அகநானூறு, 383
6. நற்றிணை, 102, 376; ஐங்குறுநூறு, 260, 282
7. நற்றிணை, 83
8. கலித்தொகை, 129
9. ஐங்குறுநூறு, 391
10. நற்றிணை, 54, 70
11. குறுந்தொகை, 2, 392; நற்றிணை, 277; ஐங்குறுநூறு, 90
12. குறுந்தொகை, 107
13. அகநானூறு, 170
14. நற்றிணை, 196; குறுந்தொகை, 147
15. அகநானூறு, 125, 163; குறுந்தொகை, 235; நற்றிணை, 193
16. அகநானூறு, 188; நற்றிணை; 13, 238, 248
17. ஐங்குறுநூறு, 183, 188
18. கலித்தொகை, 129; குறுந்தொகை, 163
19. நற்றிணை, 277
20. குறுந்தொகை, 392
21. நற்றிணை, 376
22. நற்றிணை, 54
23. குறுந்தொகை, 235
24. நற்றிணை, 83
25. நற்றிணை, 251
26. கலித்தொகை, 129
27. குறுந்தொகை, 33

2

தமிழ் - சிங்களத் தூது காவியங்கள்

திருமதி & திரு. கனகரத்தினம்

1. தமிழ்த் தூது காவியங்கள்

தமிழ்த் தூது காவியங்களின் வரலாறு, பொருள், இலக்கியமரபு என்பவற்றைச் சுருக்கமாக விளக்கின், ஈழத்துச் சிங்களத் தூது காவியங்களை அவற்றோடு ஒப்பீடு செய்து, அவைபற்றி விளக்கமாக அறிந்துகொள்ள முடியும். மேலும், ஈழத்தெழுந்த தமிழ்த் தூதிலக்கியமும் ஒன்றையொன்று பாதித்துள்ளனவா வென்பதையும் தெரிந்து கொள்ளலாம். இலங்கையிலெழுந்த தூதுகளாகிய தத்தைவிடுதூது, கிள்ளைவிடுதூது, பஞ்சவன்னத்தூது, சித்திரவேலாயுதர் காதல் என்பன தூது இலக்கணத்துக்கமையவே பாடப்பட்டுள்ளன; சொன்னயம், பொருணயம் மிக்கனவாகவும் போற்றப்படுகின்றன.

தூது தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகும். இனித் தூதுபற்றிய செய்தியைத் தொல்காப்பிய அகத்திணையியலிற் காண்கின்றோம். தூது புறப்பொருள் சார்ந்தும் அகப்பொருள் சார்ந்தும் நிகழ்ந்தன.

"ஓதல் பகையே தூதிவை பிரிவே" [1]

எனவும்,

"அவற்றுள்
ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன" [2]

எனவும் கூறப்படுகிறது. அந்தணர், அரசர் என்போர் புறப்பொருள் சார்ந்த தூது சென்றனர்; தோழி, பாங்கன், பாணன், பாடினி, விறலியர் என்போர் அகப்பொருள் சார்ந்த தூது சென்றனர். அன்றியும் அஃறிணைப் பொருள்களாகிய மான், மயில் போன்ற விலங்குகளையும் பறவைகளையும் தூதுவிடும் இலக்கிய மரபும் அன்றிருந்தது[3]. இனிப் புறப்பொருள் சார்பான தூதில் அஃறிணைப் பொருள்களை அனுப்பும் மரபும் உண்டு. இவற்றுக்கான சான்றுகளைச் சங்க நூல்களிற்[4] பரக்கக் காணலாம்.

பாட்டியலார் காலத்தில்[5] தூது இலக்கியம் கலிவெண்பாவினாற் செய்யப்பட வேண்டுமென்ற இலக்கணவமைதி இருந்தது. அதே கருத்தினையே சிதம்பரப் பாட்டியல், நவநீதப் பாட்டியல் என்பனவும் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தூதுகளில் அன்னம், மயில், கிள்ளை, மேகம், நாகணவாய்ப்புள், குயில், நெஞ்சு, தென்றல், வண்டு முதலாய அஃறிணைப் பொருள்களும் உயர்திணையிற் பாங்கியும் தூதுகளாக விடுக்கப்பட்டுள்ளமையைக் காண்கிறோம். பணம், தமிழ், மான், வனசம், சவ்வாது, நெல், புகையிலை, விறலி, துகில், காக்கை முதலிய பொருள்களும் தூதாக விடுக்கப்பட்டுள்ளன; கழுதை, செருப்புப் போன்ற பொருள்களும் தூதுவிடுக்கப்பட்டுள்ளன. தூதுப்பிரபந்தங்கள் புகழ்வதற்கும் இகழ்வதற்கும் கையாளப்பட்டனவென்பதையும் வரலாறு காட்டுகின்றது. தமிழ்த்தூதுகள் தொல்காப்பியனார் காலத்தில் தனிப்பாடல்களில் இடம்பெற்றுவந்தன; நாயன்மார் ஆழ்வார் பாசுரங்களிலும் இடம்பெற்றன; பின்னர்க் காலப்போக்கில் சிற்றிலக்கியமாகப் பிறந்துள்ளன.

இச் சிற்றிலக்கிய வகையில் எழுந்த முதல் நூலாக உமாபதி சிவாசாரியார் செய்த நெஞ்சுவிடுதூதைக்[6] குறிப்பிடலாம். இந் நூல் கி.பி. பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுந்தது. இது தத்துவச்சாயல் பெற்ற தூதுநூல். இந் நூலிற் பேரின்பப் பொருளே விளக்கப்படுகிறது. சிவனாக விளங்கும் ஞானக் குரவரே தலைவர்; ஆசிரியரே தலைவி; இவ்வாறாக உருவகிக்கப்பட்டு, பதியைச் சேரப் பற்றுக்கொண்ட ஓர் உயிரின் பேரின்ப அனுபவத்தைக் கூறுகிறது. இதனைத் தொடர்ந்தெழுந்த தூது நூல்கள் பேரின்பப் பொருளைக் கூறாம

வண்டு என்பவற்றைத் தூதாக விடுக்கின்றனர்; ஈற்றில் 'தலைவனிடம் மாலை வாங்கி வா' என உரைக்கின்றனர். தலைவன் தலைவியிடத்து விடுக்கும் தூதுகளும் உள. அவற்றிற்கு உதாரணமாகக் கூளப்ப நாயக்கன் விறலிடுதூது, பணவிடுதூது என்பவற்றைக் குறிப்பிடலாம். அமைப்புவகையில் முன்னைய தூதுகளை ஒத்திருப்பினும் இறுதியில் 'மாலை வாங்கி வா' என அவை முடிவதில்லை.

தூதுநூல்களின் பெயர்கள் தூதுவிடப்படும் பொருள்களின் பெயரால் அமைவதே மரபு. அகப்பொருள் சார்ந்த தூதுநூல்களில் தலைவன் பெயர் சுட்டப்படினும் தலைவி பெயர் சுட்டப்படுவதில்லை. எனினும், தமிழிலுள்ள பஞ்சவன்னத் தூதுநூல் மட்டும்[7] புறநடையாகத் தலைவன் பெயரையும், தலைவி பெயரையும் சுட்டியுரைக்கும். தூது இலக்கணத்தில் பாங்கியொருத்தியே தூது பகர்தற்குரியவள் எனக் கூறப்பட்டிருக்கிறது. எனினும், தமிழ்த் தூதுகளில் பாங்கிவிடுதூது என்ற நூல் ஒன்றுகூடக் கிடைத்திலது.

இனித் தூது காவியங்கள் தவிர மற்றைய காவியம், புராணம், கலம்பகம், அந்தாதி போன்ற இலக்கியங்களிடையேயும் தூதுப் பொருளமைந்துள்ளமையை அறியலாம். உதாரணமாகச் சிந்தாமணியிலே குணமாலை என்பவள் சீவகன்பால் கிளியைத் தூதுவிடுத்துள்ள பகுதியைக் காணலாம். பெருங்கதையில் வாசவதத்தை பிரிவாற்றாமையால் வருந்தி மான் முதலிய அஃறிணைப் பொருள்களைத் தூதுவிடுக்கும் பொருட்பகுதி[8] உள்ளது. கலம்பக நூலின் உறுப்புகளில் மேகவிடுதூதும் ஒன்றாக விருப்பதை அவதானிக்கலாம். மேகத்தைத் தூதாக விடுத்த பொருளமைந்த கவிகள் கலம்பகத்தில் இடம்பெறுகின்றன. தேவாரம், திருவாய்மொழி, திருவாசகம்[9] போன்ற துதிப்பாடல்களிலும் தூது விடுக்கும் பொருள் அமைந்துள்ளது. அவை புறத்துறையாகவே அமைந்து நிற்பதனையும் அறியலாம்.

தமிழ்த் தூதுகளின் பாங்கினை மூன்று பிரிவுகளுள் அடக்கலாம்:

1. தூது செல்லப் பிற பயனற்றவை யெனல்
2. இது ஒன்றே தகுதியென முடிவுசெய்தல்
3. ஈற்றில் தூதுப் பொருளுரைத்து வேண்டுதல்.

தமிழிலெழுந்த தூதுகள் சிலவற்றைப் பின்வருமாறு வரிசைப் படுத்தலாம் :[10]

வெருகல் சித்திர வேலாயுதர் காதல் – 17ஆம் நூற்றாண்டு (இல)
சரவணமுத்துப்பிள்ளையின் தத்தைவிடுதூது – 20ஆம் நூற்றாண்டு (இல)
வரதபண்டிதரின் கிள்ளைவிடுதூது (இல)
காங்கேசன்துறை குருநாதசுவாமி கிள்ளைவிடுதூது 18ஆம் நூற்றாண்டு
இணுவில் சின்னத்தம்பிப் புலவரின் பஞ்சவன்னத்தூது (இல)–18ஆம் நூற்றாண்டு
பலபட்டடைச் சொக்கநாதர் இயற்றிய கிள்ளைவிடுதூது, தென்றல்விடு தூது, விறலிவிடுதூது – 18ஆம் நூற்றாண்டு
சுப்ரதீபக்கவிராயர் – சேதுபதி விறலிவிடுதூது – 19ஆம் நூற்றாண்டு
கூளப்பநாயகன் விறலிவிடுதூது – சுப்ரதீபக்கவிராயர்–18ஆம் நூற்றாண்டு
தெய்வச்சிலையார் விறலிவிடுதூது
சொக்கநாதர் தமிழ்விடுதூது[11]
அமிர்தம்பிள்ளையின் தமிழ்விடுதூது –19ஆம் நூற்றாண்டு.
உமாபதி சிவாச்சாரியாரின் நெஞ்சுவிடுதூது – 14ஆம் நூற்றாண்டு
தத்துவராயரின் நெஞ்சுவிடுதூது – 18ஆம் நூற்றாண்டு
பலபட்டடைச் சொக்கநாதபிள்ளையின் திருமாலிருஞ்சோலை அழகர் கிள்ளைவிடு தூது – 18ஆம் நூற்றாண்டு

2. சிங்களத் தூது காவியங்கள்

தூது காவியங்கள் வடமொழியில் சந்தேசகாவியங்கள் என வழங்கப்பெறும். காளிதாச மகாகவி இயற்றிய மேகசந்தேசம் மிகப் பிரசித்திபெற்ற வடமொழிக் காவியமாகும். மேகசந்தேசத்தில் 'மேகம்' தூதாக அனுப்பப்படுகிறது. மேகம் சென்ற வழியைப் புலவர் அழகாக வர்ணித்துள்ளார். மேகவிடுதூது என்ற வடமொழி மூலத்தின் பழைய சிங்கள மொழிபெயர்ப்பு உண்டு. அஃது இலங்கைச் சிங்களச் செய்யுள் வரலாற்றில் மிகவும் பழைமையானதாகக் கருதப்படுகின்றது. இவ்வகைச் செய்யுள்கள் சிங்கள எழுத்தாளர்களிடையே கி.பி. 12 ஆம் நூற்றாண்டிற்கு முன்பே பிரபலியம் பெற்று விளங்கின. இவ்வகைச் செய்யுள்கள் கற்பனைவளம் நிறைந்து காணப்பட்டன. இவை பிற்காலச் சிங்களப் புலவர்களுடைய ஆன்மிக உருவகத் தேவைகளுக்குப் பயன்பட்டன. சிங்களச் சந்தேசமொன்றை எடுத்து ஆராய்ந்தால் சிங்களத் தூதுச் செய்யுளின் இயல்பைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம்.

செய்யுள் தூதுகொண்டு செல்பவரை ஆசீர்வதிப்பதுடன் ஆரம்பமாகும். பொதுவாக (சிந்து) ஈரடிகளில் அச் செய்யுள் அமையும்.

இதனைத் தொடர்ந்து, தூதுவரின் புகழ்மாலை இடம்பெறும். இத் தூதுவன், தூது அனுப்புபவரின் அரிய நண்பனாகக் கணிக்கப்படுவான். பொதுவில் நூலாசிரியரே தூதை அனுப்புபவராக விளங்குவார். ஆனால், இதற்குப் புறநடைகளும் உண்டு; அதன் பின்னர் அனுப்பப்படும் தூது வழிபாட்டுச் செய்தி அல்லது செய்திபற்றிய கருக்கமான குறிப்பு இடம்பெறும். இதனைத் தொடர்ந்து பிரயாணம் தொடங்குமிடம், முக்கியச் சின்னங்களின் வருணனை, அங்கு வாழும் பிரமுகர்கள் என்பவர்களின் விவரங்கள் இடம்பெறும். தூதுவன் நல்ல சுபவேளையிலே தூதை மேற்கொள்வான். தனது தூது புறப்படும் வேளையில் நன்னிமித்தங் களைக் கவனித்தே புறப்படுவான். இவ்வாறு தூது செல்லும் பல்வேறு பாதைகள் வர்ணிக்கப்படும். பிரதான ஊர்கள், பட்டினங்கள், நகர்கள், ஆறுகள், வனங்கள் என்பன அழகாக வர்ணிக்கப்படும். புலவன் பிரயாணத்தை வர்ணிக்கையில் காலை, மாலை, பகல், இரவு முதலிய காலங்களையும் வர்ணிக்கத் தவறமாட்டான். நகரில் அழகான கன்னியரும், பெண்களும் பூஞ்சோலைகளில் விளையாடுவதையும், அரசனது மாளிகைகளில் சபைகள் கூடுவதையும், கோவில்களில் நடனங்கள் இடம்பெறுவதையும் வர்ணிப்பான். ஆறுகளில் நீர் விளையாட்டுகளும், வனங்களில் பல்வேறு மரங்களும், காட்டு விலங்குகளும், பறவைகளும் அவனது கவிகளில் முன் வர்ணிக்கப்படும். வழியிற் காணப்படும் அடையாளச் சின்னங்களெல்லாம் அழகுபெறும். தூதுவன் தான் செல்லும் வழியில் பிரமுகர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியே செல்வான். இடங்களின் உண்ணாட்டுப் புவியியல் மிகவும் சரியானதாக விருக்கும். தூதுவன் ஈற்றிலே தான் சந்திக்க வேண்டிய பேர்வழியைச் சந்திப்பான். அவ்விடத்தில் தூதுச் செய்தியைப் பெறுபவரின் புகழ்மாலை கூறப்படும். ஈற்றில் வணக்கம் இடம்பெறும். கடைசியிலே தூதுவனை ஆசீர்வதிப்பதுடன் செய்யுள் முடிவுறும்.

சிங்களத் தூதுகாவியங்கள் இந் நாட்டு வரலாறு, புவியியல் தொடர்பான விடயங்களை வழங்குவதிற் சிறந்து விளங்குகின்றனவெனக் கூறலாம். அவற்றுடன் அரசர்கள், மந்திரிகள், பிரபுகள், வள்ளல்கள், புத்தபிக்குகள் என்பவர்களைப்பற்றிய முக்கிய நிகழ்ச்சிகள்பற்றியும் சில தகவல்களை அளிக்கின்றன. இந்த விவரங்கள் செய்யுள் அலங்காரங்களிலும் (Figure of Speech), தற்குறிப்பேற்ற அணிகளிலும் வர்ணிக்கப்பட்டிருப்பினும் அவற்றிலிருந்து நாட்டின் பழைய நிலையைக்

கடைந்து எடுத்துக்கொள்ளலாம். மேலும், செய்யுள்களில் வரும் வழிபாட்டு முறைகளைக் கொண்டு பல உண்மைகளை அறிந்துகொள்ளமுடியும். பல்வேறு காலங்களிற் சிங்கள மக்களையே நிலவிவந்த சமயாசார நம்பிக்கைகளையும், சமய அனுட்டான முறைகளையும்பற்றிய விடயங் களையும் அறிந்துகொள்ளலாம். பல்வேறு நூற்றாண்டுகளில் எவ்வெக் கடவுளர் வழிபாடு தலைதூக்கி நின்றதென்பதையும் அறிந்து கொள்ளலாம்.

உதாரணமாக 14 ஆம் 15 ஆம் நூற்றாண்டுகளை எடுத்துக் கொண்டால் (தேவேந்திர முனை) தேவிநுவரைக் கடவுளாக உபுல்வன் (திருமால்) முதன்மை பெற்று விளங்குவதைக் காணலாம். திஸர சந்தேசத்தில் (அன்னவிடுதூது) அன்னம் தேவேந்திர முனையிலிருந்து டெடிகம மன்னன் பராக்கிரமபாகுவிற்கு[12] (கி.பி. 1344–59) தூது கொண்டு செல்கின்றது. மயூரசந்தேசத்தில் (மயில்விடுதூது) ஒரு மயிலானது ஐந்தாவது புவனேகவாமு மன்னன் (கி.பி.1372–1408)ஆண்ட கம்பளையிலிருந்து, தேவேந்திரமுனைக் கடவுள் உபுல்வனிடம் வழிபாட்டினை எடுத்துச் செல்ல விடுக்கப்படுகின்றது. இது சிங்களப் புலவர்களின் இரண்டாவது மயூரசந்தேசமெனக் கருதப்படுகின்றது. ஏனெனில், இதற்கு முன் 12 ஆம் நூற்றாண்டளவில் இயற்றப்பட்ட மயூரசந்தேசம்[13] அழிந்துவிட்டதாகக் கருதப்படுகிறது. பறவி சந்தேசத்தில் (புறாவிடுதூது) கோட்டை ஆறாவது பராக்கிரமபாகு (கி.பி.1412–67) மன்னன் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் இராகுல தேரரினால் புறாவொன்று கோட்டையிலிருந்து உபுல்வன் கடவுளின்பால் தூதாக விடுக்கப்படுகிறது.

இவ் வரசனின் ஆட்சியின் பிற்காலத்திற் கோகுல சந்தேசத்தில் (குயில்விடு தூது)[14] ஒரு குயில் கோட்டை அரசிளங்குமரன்பால் தூது கொண்டு செல்கிறது. அது கொண்ட செய்தியில் தென்பகுதியின் மகாபுத்த தேரர் ஒருவர் இவ் வீரனின் சேமநலத்திற்காக உபுல்வன் கடவுளிடம் வழிபாடு செய்வதாகக் கூறப்படுகிறது. கோகுல சந்தேசத்தில் இடம்பெறும் பிரயாணம் நீண்ட தூரத்தைக் கொண்டதாகக் காணப்படுகிறது. குயிலானது இலங்கையிலே தென்முனையிலிருந்து வடக்கு நோக்கிச் செல்கின்றது. அவ்வாறு செல்கையில் இலங்கையின் மேற்குக் கடற்கரை வழியாகக் கோட்டை இராசதானியையும், விபீடணக் கடவுள் கோயில்கொண்டிருக்கும் களனியாவையும் கடந்து செல்கின்றது.

இதனால், சிங்கள சந்தேச காவியங்களுள் கோகில சந்தேசம் மிக நீண்ட சந்தேசமாக விளங்குகின்றது.

15ஆம் நூற்றாண்டளவில் எழுந்த சந்தேச காவியங்களில் விபீடணத் தெய்வமும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இராகுல தேரரின் செலவிஹினி[15] சந்தேசத்தை (பூவைவிடுதூது, கி.பி.1450) இதற்கு உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். சிங்கள சந்தேசங்களுள் இது மிகவும் சிறிய சந்தேச நூலாகக் கருதப்பட்டாலும் தெளிவும் செம்மையும் நிறைந்த சிறந்த இலக்கியமாக மதிக்கப்படுகிறது. இச் சந்தேசத்தில் செலவிஹினிக் கோட்டையிலிருந்து களனியா விபீடணத் தெய்வத்திடம் தூது கொண்டுசெல்ல விடுக்கப்படுகின்றது. இச் சந்தேசம் ஆங்கிலத்தில் டபிள்யூ. சி. மக்றெடி (MacRady) என்பவரால் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. தமிழிலே பூவைவிடுதூதாக நவாலியூர் சோ. நடராசனால் மொழிபெயர்த்துப் பாடப்பட்டிருக்கிறது. வாத்துவிடு தூது என்னும் காவியம் சிறீ பராக்கிரமபாகு மன்னன் ஆட்சிக் காலத்தில் எழுந்த நூலாக அறியப்படுகிறது. இதிற் குறிப்பிட்ட ஒரு தெய்வம் முக்கிய இடத்தைப் பெறவில்லை. எனினும், தூதுவன் களனியாவிலுள்ள விபீடண தெய்வத்தை வணங்கும் சந்தர்ப்பம் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் வாத்துவிடு தூதில் கோட்டையிலிருந்து கேரகல் – வனரத்தின மகாதேரரிடம் தூதுவிடுக்கப்படுகிறது. செய்தியில் சிங்களப் பிரித்– மந்திரத்தை ஒதி, தெய்வம் ஆறாவது பராக்கிரமபாகுவிற்கு ஆசீர்வாதங் களை அருளிச் செய்யுமாறு கேட்டுச் செய்தி விடுக்கப்படுகிறது.

கிளிவிடுதூதில்,[16] போதிசத்துவரான நாததெய்வம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. இத் தூதிலே தொட்டகமுவைச் சிறீ இராகுல தேரர், நாததெய்வத்திற்கு வழிபாடு செய்யுமாறு தூது விடுப்பதாக அமைகிறது. வாத்துவிடுதூதும், கிளிவிடு தூதும் உண்மையான இயற்கை வருணனைகளைக் கொண்டு விளங்குகின்றன. வாத்துவிடு தூது அக்காலத்தில் கேரகலை எனும் இடத்தில் விளங்கிய துறவிகள் கல்லூரியைப்பற்றிய விபரத்தைத் தருகிறது. அவ்வாறே கிளிவிடுதூது அக்காலத்தில் தொட்டகமுவையில் விளங்கிய அதேபோன்ற துறவிகள் கல்லூரியைப்பற்றிய விவரத்தைத் தருகிறது.

16ஆம் நூற்றாண்டை எடுத்துக்கொண்டால் சபரபுர சுமண எனும் தெய்வம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. இச் சபரபுரம் இன்றைய இரத்தினபுரிக்கு அண்மையாகவுள்ள ஓர் இடம். சீதாவாக்கை

இராசசிங்கன் (கி.பி.1581–93) ஆட்சிக் காலத்தில் அவனது சேமநலத்துக்காகிய வழிபாடு சுமண தெய்வத்தின்பால் திரும்பியிருப்பதை அவதானிக்கலாம். இதனை அக்காலத்தில் எழுந்த சவுல் சந்தேசம் (சேவல்விடுதூது) எடுத்துக் காட்டுகின்றது.

18ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கதிர்காம மகேசன் மிகவும் சக்தி வாய்ந்த கடவுளாக வழிபாடு செய்யப்படுகிறார். இக்காலத்தில் கண்டி வீரபராக்கிரம நரேந்திரசிங்கனின் (கி.பி.1707–34) ஆட்சியில் எழுந்த கஹகுருகு (மஞ்சள்குருவி) சந்தேசத்தில் ஒரு மஞ்சள்குருவி அம்பலாந்தோட்டைக்கு அருகிலுள்ள கலகம எனுமிடத்திலிருந்து கதிர்காமத்தை நோக்கித் தூது செல்கின்றது. காட்டகிரிலி சந்தேசத்தில் (கி.பி.1788) ஒரு காட்டகிரிலி (இருவாச்சி – horn bill)) பறவை சுமணதெய்வம் உறையும் சிவனொளிபாத மலையிலிருந்து ஒரு வழிபாட்டைக் கதிர்காம மகேசன்பால் எடுத்துச் செல்கிறது. தியசவுல் (நீர்க்கோழி - Black swan) சந்தேசத்தில் வரும் நீர்க்கோழி (கார் அன்னம்) கம்புறுகமுவா என்ற இடத்திலிருந்து ஒரு வழிபாட்டைக் கதிர்காமத்துக்கு எடுத்துச் செல்கிறது.[17] (நிலாங்கம் – Blue-Jay) கிரலசந்தேசம் 1815–ல் கண்டிச் சிங்களப் பிரதம மந்திரியாயிருந்தவரின் பொருட்டு எம்பக்க என்னுமிடத்திலுள்ள மகேசன் கடவுளை இரந்து வேண்டுவதாக அமைந்துள்ளது. இது மாகாண மட்டத்திற்கூட மக்கள் மனத்தில் மகேசன் கடவுளின் செல்வாக்கு மலிந்திருந்தமையை எடுத்துக்காட்டுகின்றது. வழமைக்கு மாறாகப் பறவைக்குப் பதிலாகப் பெண்கள் தூது செல்லும் சந்தேசங்களும் காணப்படுகின்றன.

'அஸ்டனார்' எனும் எட்டுப் பெண்கள் குருணாகலை மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்திலிருந்து அதே மாவட்டத்திலுள்ள கதிர்காமக் கடவுளின்பால் வழிபாடு வேண்டி யாத்திரை மேற் கொள்கிறார்கள். 'நாரிசத்' எனும் ஏழு பெண் அடியார்கள் அதே கிராமத்திலிருந்து புகழ்பெற்ற தம்புல்லையிலுள்ள கற்குகைக் கோவிலுக்கு யாத்திரை செல்கிறார்கள். சாதாரணமாக முன்னைய சந்தேச காவியங்களிற் கையாண்ட 'விருத்தகந்தி' என்ற யாப்புக் கடைசி ஆக்கத்தில் புதுப்பிக்கப்பட்டமையை அவதானிக்கலாம்.

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் (கி.பி. 1859) எழுந்த மயில்விடுதூது ஒன்றில் ஒரு மயில் இலங்கையின் தென்பகுதியிலுள்ள கிராமத்திலிருந்து கதிர்காமத்திற்குத் தூது கொண்டுசெல்கிறது. தூதுச்

செய்தி வழமையிலும் சிறிது வேறுபாடான தொன்றாக அமைந்திருக்கிறது. ஈண்டு ஒரு பக்தரின் குருட்டை நீக்குமாறு கடவுளை இரந்து வேண்டுவதாக அச் செய்தி அமைந்திருக்கிறது. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலெழுந்த சிறிய நூலாகிய வல்லே சந்தேசத்தை (கி.பி.1907) நோக்கின் தூது காவியம் மற்றைய சந்தேசங்கள்போல் தூது செல்பவரின் பெயரில் அமையாது, வழிச்செலவின் பெயரால் (கடற்கரை யாத்திரை) அமைந்திருக்கிறது. இச் சந்தேசம் காவிலிருந்து ஒரு பெண் கதிர்காமத்தை நோக்கி மேற்கொண்ட யாத்திரையை வருணிக்கிறது.

19ஆம் நூற்றாண்டின் கடைசிப் பதிற்றுகளிற் பல தூது காவியங்கள் எழுந்துள்ளன. இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எழுந்த தூதுகளில் பறவைகள், மிருகங்கள், மானிடர் என்போர் தூதுப் பயணங்களை மேற்கொண்டமையைக் காண்கிறோம். இவற்றுள் சில வள்ளல்கள், புலமையாளர்கள் (Scholars) போன்றவர்பால் விடுக்கப்பட்ட நல்லெண்ணத் தூதாகக் காணப்படுகின்றன. சில அரசியல்வாதிகள் போன்ற பொதுநலவாதிகளிடம் வேண்டுதல் செய்வனவாக அமைகின்றன. சில சந்தேசகாவியங்கள் கிண்டல் செய்யும் தன்மை யுள்ளனவாக அமைந்துநிற்கின்றன. உதாரணமாக ஒபிசறா சந்தேசம் (கி.பி.1915), ஆராய்ச்சி சந்தேசம் (கி.பி.1921) என்னும் இரண்டினையும் கொள்ளலாம். இவ் விரண்டு சந்தேசங்களிலும் சிறிய கிராம அலுவலர் தூதர்களாக விடுக்கப்படுகின்றனர்.

19ஆம் நூற்றாண்டின் கடைசிச் சில பதிற்றுகளிற் சந்தேச காவியங்கள் விருப்பான இலக்கிய நிலையிலிருந்து குன்றிவிடுகின்றன; ஆனால் இங்குமங்குமாக, இடையிடையே தலைதூக்கிநின்றன என்ற உண்மையையும் மறுக்கமுடியாது. சந்தேசங்களில் வரும் பொருளைப் பார்த்தால் சந்தேசம் பாடப்பட்ட காவியத் தலைவனுக்கு விரும்பிய வரம் கிட்டியதென்பது புலனாகிறது. அதில், நூலாசிரியரும் தீவிர நம்பிக்கை கொண்டிருந்தமை புலப்படுகிறது. அதன்பொருட்டு நூலாசிரியர் மங்களகரமான சீர்களைக் கொண்டும் சரியான மாத்திரை அளவுகளைக் கொண்டும் செய்யுள்களை யாத்தனர்.

செலவிஹினி சந்தேசத்தில் எல்லாச் செய்யுள்களும் ஒரே வகையான சீர்களைக் கொண்டு யாக்கப்பட்டுள்ளன. அதற்கு முந்திய சந்தேசங்கள் பல்வேறு சீர்கொண்ட செய்யுள்களை உடைத்தாகக் காணப்படுகின்றன.

சிங்கள மொழியிலெழுந்த பெரும்பாலான சந்தேச காவியங்கள் 14ஆம் நூற்றாண்டுக்கும் 18ஆம் நூற்றாண்டுக்குமிடையே யெழுந்தன வாகவே காணப்படுகின்றன. இவ் விடைக்காலத்தில் 12 தூது நூல்கள்வரை செய்யப்பட்டிருக்கின்றன. இவையனைத்தும் பிறபொருள் சம்பந்தமான தூதிலக்கியங்கள் என்பதையும் நாம் உற்றுநோக்கலாம்.

ஒப்புநோக்கும் முடிவுரையும்

சிங்களத் தூது இலக்கியங்கள் வடமொழியிலுள்ள தூதுகளைத் தழுவியுள்ளன. வடமொழித் தூதிலக்கிய மரபின் சாயல் சிங்களமொழித் தூதிலக்கியங்களிலும் காணப்படுகிறது. தூதாய் அனுப்பப்படும் பொருளை முதலில் வாழ்த்துதல், வருணித்தல், தூதுசெல்லுமாறு பணித்தல், தூது சொல்லியனுப்பியவரின் இடத்தினை வருணித்தல், தூதன் செல்லும் வழியில் உள்ள ஊர், பொருள்கள் ஆகியவற்றை வருணித்தல். தூதுரைத்தல் என்ற அமிசங்களைக் குறிப்பிடலாம். வடமொழி மேக சந்தேசத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு மேகதூதம் உண்டு. சிங்களத்திலும் மேகசந்தேசத்தின் மொழிபெயர்ப்பு உண்டு. அதுவே சிங்களச் செய்யுள் வரலாற்றிலேயே மிகவும் பழைமையானது.

சிங்களத் தூதுகளில் முதலாவது படைப்புக் கவீஸ்வரர் என்ற புலவரின் மயூரசந்தேசமாகும் (கி.பி. 1360). இது தமிழ் மயில்விடுதூதின் செல்வாக்கினைப் பெற்றிருக்கிறது. 'சில பாடல்கள் தமிழ் மயில்விடு தூதின் மொழிபெயர்ப்புப் பாடல்களாகவே காணப்படுகின்றன. தமிழ்க் காவிய இலக்கணங்களும் மயூரசந்தேசத்திற் காணப்படுகின்றன என்பதைத் தமிழ்ப்பண்டிதராகிய ஹிஸ்ஸெல்லே தர்மரத்தின தேரர் டபிள்யூ.எப். குணவர்த்தனமுதலி என்பவர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். அவர்களுடைய ஆய்வு நடுநிலையானதென்பதை மயூரசந்தேசப் பாடல்களிற் காணப்படும் தமிழ்ச்சொற்களும் உறுதிப்படுத்துகின்றன.

அக்கரை என்ற தமிழ்ச் சொல்லின் வடிவம் 'எக்கரே'.[18] (லணுமோதர+எக்கரே) எனக் கடலின் அக்கரையைக் குறித்து வருகிறது. அசல்[19] > அயல் என்ற சொல் இன்னொரு பாடலில் (124) (பலும–அசலயா) வருகிறது. 136ஆம் பாடலில், தோடு[20] என்ற சொல் இடம்பெறுகிறது. வேறொரு பாடலில் நகரைக்[21] குறிக்கும் நகரம் என்ற சொல் ஆளப்பட்டிருக்கிறது. இதன் சமஸ்கிருத வடிவம் 'நகர' என்பதாகும். சிங்கள வடிவம் 'நகரய' ஆகும். எனினும் பாடலில் தமிழிலுள்ளவாறு நகரம் (நகரம் ஸிட்டுதுமன்) என்றே வருகிறது.

சிறீ இராகுல தேரர் பாடிய செலவிஹினி சந்தேசத்தில் 'ஈசுறு கோவில்''– ஈசுரன்கோவில் என்ற சொல் அமைகிறது. அக்காலத்தில் சிங்களக் கோட்டை இராசதானிக் காலத்தில் இந்துக்கோவில்கள் இருந்த வரலாற்றையும் இது விளக்குகிறது. கோகில சந்தேசத்திலும் 'கோவில்' (44 ஆம் பாடல்) என்ற சொல்லைக் காணலாம். இவ்வாறு பல தமிழ்ச் சொற்கள் சிங்களத் தூதுகாவியப் பாடல்களில் எடுத்தாளப் பட்டிருக்கின்றன.

பறவிசந்தேசம் (புறாவிடுதூது), செலவிஹினி சந்தேசம் (பூவை விடு தூது) என்பவற்றின் ஆசிரியர் தொட்டகமுவை சிறீ இராகுல தேரர். கோகில சந்தேசத்தைப் (குயில்விடு தூது) பாடிய இறுகல்குல திலக பிரிவேனைப் பிக்குவும் தமிழிலும் பாண்டித்தியம் பெற்றவர்களென்பதும் நோக்கற்பாலது.

சிங்களத் தூது இலக்கியங்கள் தமிழ்த் தூது இலக்கியங்கள்போல அகப்பொருள் சாராது புறப்பொருள் சார்ந்தனவாகவே பாடப்பட்டுள்ளன. தூதுகள் தூதுவிடுக்கும் பொருளின் பெயராலேயே பெயர்பெற்றுள்ளன. வரலாறு புவியியல் சமூகம் என்பவற்றைத் தெளிவுபடுத்தும் நூல்களாகச் சிங்களத் தூது நூல்கள் விளங்குகின்றன. தமிழர் இலங்கையிற் பரந்துபட்டு வாழ்ந்தமையும், தமிழ் ஊர்ப்பெயர்கள் சிங்களப் பகுதிகளில் இருந்தமையும், இந்துமதக் கடவுளர் வழிபாடு மேற்கொள்ளப்பட்டமையும் அறிந்துகொள்வதற்குச் சிங்களத் தூதுநூல்கள் சான்றாக விளங்குகின்றன. சிங்களமன்னர் ஆட்சியில் தமிழும் போற்றப்பட்டது; பௌத்த குருமாரும், அமைச்சர்களும், மற்றவர்களும் தமிழை விரும்பிக் கற்றார்கள்; தமிழிலும் பாண்டித்தியம் பெற்ற சிங்களப் புலவர்கள் அரசசபையை அலங்கரித்தார்கள்; சிங்கள மன்னர்களும் தமிழ் அறிந்தவர்களாகவோ, தமிழ் இராணிகளை மணந்தவர்களாகவோ இருந்தார்கள். பாட்டுடைத் தெய்வங்கள் முருகன், திருமால் போன்ற தமிழ்த் தெய்வங்களாகவும் இருப்பதைக் காணலாம். தமிழ்–சிங்கள உறவை மன்னரும்[22] மற்றவர்களும் போற்றி வளர்த்தார்கள் என்ற இன்னோரன்ன உண்மைகளையும் தூது காவியங்கள் கூறுகின்றன. தமிழ் – சிங்கள மக்களின் நல்லெண்ணத்தையும் ஒற்றுமையையும் விளக்கும் தூதாக இக் காவியங்கள் விளங்குகின்றன.

உசாத்துணை நூல்கள்

(சிங்களயே திரவிட பலபாம)

ஹிஸ்ஸெல்லே தர்மரத்தின தேரர், **சிங்களத்தில் தமிழின் செல்வாக்கு**

டபிள்யூ. எப். குணவர்த்தன, மயூரசந்தேசம்

திஸரசந்தேசம்

இராசந்தேசம்

பறவிசந்தேசம்

ஹம்ஸசந்தேசம்

டபிள்யூ. எப். குணவர்த்தன, **கோகிலசந்தேசம்**

செவுல் அஸ்ன

நீல கொபோ சந்தேசீம்

திருநிறையூர் நம்பி **மேகவிடுதூது** – செந்தமிழ்ப் பிரசுரம் 43

கூளப்பநாயக்கன் காதல், விறலிவிடுதூது – **சேதுபதி விறலிவிடுதூது** – பிரேமா பிரசுரம்

ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் – தொகுப்பாசிரியர் – கலாநிதி ஆ. சதாசிவம், வெளியீடு சாகித்திய மண்டலம், கொழும்பு

கலாநிதி கே. எஸ். நடராசா, **ஈழத்து இலக்கிய வரலாறு**

மான்விடுதூது – தியாகராச விலாச வெளியீடு

மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடுதூது – கழக வெளியீடு

மதுரைச் சொக்கநாதர் **தமிழ்விடுதூது** – டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்

பணவிடுதூது – உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

அழகர் கிள்ளைவிடுதூது – டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்

Newton Pinto. B A. London , ***A Short History of Sinhalese Literature*** CE Godakumbure, Leterature of Sri Lanka

An Anthology of Sinhalese Literature up to 1815 - Edited by Christoper Reynolds

அடிக்குறிப்புகள்

1. தொல். அகத்திணை. 25
2. தொல். அகத்திணை. 26
3. அகநானூறு, 170 (நண்டு) ; நற்றிணை, 54, 70 (நாரை) ; புறநானூறு, 67 (அன்னம்) ; நற்றிணை, 102 (கிளி), 277 (வண்டு)
4. உ.ம்: தி.த. சரவணமுத்துப்பிள்ளை பாடிய தத்தைவிடுதூது 1892, வரத பண்டிதர் பாடிய கிள்ளைவிடுதூது (1656 – 1716)
5. யாப்பிலக்கணநூல் பல்லவர்காலம் (கி.பி. 6 ஆம் நூற்றாண்டு பிற்பகுதி – 9 ஆம் நூற்றாண்டு வரை)
6. தத்துவராயர் பாடிய நெஞ்சுவிடுதூதும் உண்டு.
7. 18ஆம் நூற்றாண்டுக்குரியது : கி.பி. 1760. இணுவைச் சின்னத்தம்பிப் புலவர் பாடியது.
8. பெருங்கதை, 3, 2, 143 – 286
9. திருவாசகத்தில் மாணிக்கவாசகர் கோத்தும்பி (அரசவண்டு), 'குயில்பத்து' முதலிய ஒப்பற்ற அருட்பாக்களால் தூதுச் செய்திகளைக் கூறியுள்ளார்.
10. பணவிடுதூது – (உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு) 73 தூது நூல்களை வரிசைப்படுத்தியுள்ளது. அவற்றுள் அச்சில் வாராதனவும் காட்டப்பட்டுள்ளன.
11. இந் நூலின் ஆசிரியர் இன்னாரென்று புலப்பட்டிலது.
12. பராக்கிரமபாகு ஒரு சிற்றரசனாக இருந்திருக்கவேண்டும். தூதுச் செய்தியிலிருந்து அவனுக்கு வலிய பகைவர் இருந்தார்களென்பது தெரியவருகின்றது. இச் செய்யுள்களிலிருந்து அக்காலச் சமூகத்தைப் பற்றி அறிந்துகொள்ள முடிகிறது. இந் நூலில் நடனப்பகுதியில் நல்ல செய்யுள்கள் இடம்பெறுகின்றன.
13. மயூரசந்தேசம் இன்று கிடைக்கும் சந்தேசங்களுள் பழமையானது; மிகச் சிறந்த சந்தேசமாகவும் கணிக்கப்படுகிறது. இது 164 செய்யுள்களைக் கொண்டு விளங்குகிறது.
14. பறவிசந்தேசம் இராகுல தேரரின் ஆரம்பகாலப் படைப்பாகக் கருதப்படுகிறது. இதில் வடமொழி இலக்கியப்படிவைக் காண்கிறோம். காளிதாசன், மாகன், குமாரதாசன் என்போரைக் கவி பின்பற்றிப் பாடியுள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. காதற் காட்சிகளில் புலவரின்

காமசூத்திர அறிவு பிரதிபலிக்கிறது. அரசனது மகளாகிய சந்திரவதிக்கு ஒரு கணவனையும் மகனையும் அருளுமாறு உபுல்வன் தெய்வத்தை வேண்டுதல் செய்கிறது.

15 செலவிஹினி சந்தேசம் புலவரின் முதிர்ச்சியைக் காட்டி நிற்கிறது. இது 108 செய்யுள்களைக் கொண்டு விளங்குகிறது. மன்னனின் இரண்டாவது மகளான உலகுடைய தேவிக்கும் (லோகநாத), அவள் கணவனான மந்திரி நல்லூர்த் துணையாருக்கும் புத்திரப்பேறு வேண்டி இச் சந்தேசம் பாடப்பட்டது.

16 கிளிவிடுதூது இயற்றியவர் பெயர் தெரியவில்லை. எனினும், சிறீ இராகுல தேரரின்பால் பெருமதிப்பு வைத்திருந்த ஒரு புலவராக இருக்கலாமெனக் கருதப்படுகின்றது. ஏனெனில், சிறீ இராகுல தேரருக்கு நலன்களை வழங்குமாறு தூது பேசுகின்றது. சபுமல் குமாரனும் இவருடைய படைவீரரும் நூலில் இடம்பெறுகின்றார்கள். மன்னனின் குணாதிசயங்களைப் பேசும் அம்பலத்தில் கிள்ளை இளைப்பாறுகிறது. தொட்டகமுவா பரிவேனாவைப்பற்றிய விவரங்களையும் புலவர் வர்ணிக்கத் தவறவில்லை.

17 ஆட்காட்டி - lap wing

18 ළඟපෝදරේ කරේ (831)

19 රහලා – චිතලා බැලුම සලා යා (124)

20 කගරලි සිටුතුමන් හට යනුව එන් හොස (158)

21 දිලි රන් හෙළු රිවියුග පැවලෙන් වතු ල (136)

22 වීරක්කෝන් முதலி பாடிய வெருகல் சித்திர வேலாயுதர் காதலில் (421 கண்ணிகள் கொண்டது). கண்டியிலிருந்து அரசாண்ட இராசசிங்கன் II என்பவன் நூலினுட் புகழப்படுகிறான்.

"கண்டி நகராளுங் கனகமுடி ராசசிங்கன்
தென்டனிடும் போதென்றும் சேதியைநீ சொல்லாதை"

8

தமிழர் - யப்பானியர் அகப்பொருள் மரபு: ஓர் ஒப்பீட்டாய்வு

மனோன்மணி சண்முகதாஸ்

உலகமொழிகளில் இலக்கியவளம் பெற்ற மொழிகளுள் ஒன்றாகத் தமிழ்மொழி விளங்குகிறது. தமிழ்மொழி இலக்கியங்கள் காலத்தால் மிகவும் பழமையானவையாகும். தமிழ்மொழியினை ஏனைய பிற மொழிகளுடன் ஒப்பிட்டு ஆய்கின்ற தன்மையும் பலகாலமாக நடைபெற்று வருகின்ற நடைமுறையாக உள்ளது. முதன்முதலில் கால்டுவெல்லே தமிழ்மொழியின் சிறப்பை உலகறியச் செய்தவராவார். அவரெழுதிய, 'திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்' (1856) என்ற நூலில் தமிழ்மொழியின் இலக்கண அமைப்பினை எடுத்துவிளக்கி, அது திராவிட மொழிக் குடும்பத்தில் மிகவும் உன்னதமான வளர்ச்சிநிலையை அடைந்த மொழியாய் இருப்பதையும் காட்டியுள்ளார். பழந்தமிழ் இலக்கணங் களையோ, இலக்கியங்களையோ கால்டுவெல் படித்திருக்கவில்லை. அதனால் தமிழ்மொழியின் பழமையான பண்புகளைப்பற்றி அவர் எழுதவில்லை.

பிறமொழிகளோடு தமிழ்மொழியை ஒப்பிட்டு ஆய்வுசெய்த அவர், தமிழ்மொழிக்கும் யப்பானிய மொழிக்கும் உள்ள உறவுபற்றிய கருத்தையும் தமது நூலிலே எடுத்துக்காட்டியுள்ளார். இருமொழிகளுக்கும் இடையிலான சொற்களின் உருவப்பொருள் ஒற்றுமையினையும் பின்வரும் எடுத்துக்காட்டுகளால் விளக்கியுள்ளார்:

தமிழ் மொழி	யப்பானிய மொழி
1. இரு (*iru* - to be)	அரி, இரி, ஒரி, உரி (*ari, iri, ori, uri* - to be, to dwell)
2. கரு (*karu* - black)	குறொ அல்லது குறொஇ (*kuro, kuroi* - black)
3. பர (*para* - to spread)	பரு, கரு (*baru, haru* - to extend)
4. பழ (*paḻa* - old)	புருஇ, புருஇ (*burui, furui* - old)

கால்டுவெல்லுக்குப் பின்னர்த் தமிழ் – யப்பானிய மொழி உறவுபற்றிய ஆய்வு நீண்ட காலமாக நடைபெறவில்லை. இந் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் யப்பானிய அறிஞர்களான சுசுமுஷபா, அகிறபுஜிவற, மினொருகொ ஆகியோர் திராவிடமொழிகளுக்கும் யப்பானிய மொழிகளுக்குமிடையேயுள்ள தொடர்புகளை ஆராய முற்பட்டனர். இந் நிலையில் தில்லிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த யப்பானிய மொழி அறிவு பெற்ற பாலாம்பாள் எழுதிய யப்பானிய – தமிழ் மொழிகளின் வேற்றுமையுருபுகள், இடைநிலைகள் ஆகியவற்றிடையே காணப்படும் ஒற்றுமைபற்றிய கட்டுரை ஒன்றைப் படித்த யப்பானிய மொழியியற் பேராசிரியர் சுசுமு ஒனோ (கக்சுயின் பல்கலைக்கழகம், தோக்கியோ) யப்பானிய மொழியைத் தமிழ்மொழியுடன் ஒப்பிட்டு நோக்கும் ஆய்விலே ஈடுபடத் தொடங்கினார். அவர் எழுதிய **'தமிழ்–யப்பானிய மொழிகளிடையே ஒலி ஒற்றுமைகள்'** (Sound Correspondences Between Tamil and Japanese) 1981 ஆம் ஆண்டு மதுரைத் தமிழாராய்ச்சி மாநாட்டிலே தமது ஆய்வைப்பற்றிய கட்டுரையையும் அவர் படித்தார். யப்பானிய மொழியிலே நிகொன்கொநொ தமிரு கொ (1981) என்ற நூலையும் எழுதி வெளியிட்டார்.

1985 ஆம் ஆண்டு சுசுமு ஒனோ தம் ஆய்வுப் பரப்பை விசாலித்து, தமிழர்–யப்பானியர் பண்பாட்டு ஒற்றுமை (Worldview and Rituals among Japanese and Tamils, 1985) பற்றிய நூலொன்றையும் வெளிவரச் செய்தார். அவரது ஆய்வு இருமொழிகளினதும் இலக்கண அமைப்புப் பற்றியதாகத் தொடர்கிறது. தம் ஆய்வுக் கருத்துகளைத் தொடர்

கட்டுரைகளாகவும் (Kokku Bunkakku Kaishaku to Kansho) யப்பானிய மொழியிலே எழுதி வெளியிடுகிறார். 53 கட்டுரைகள் இதுவரை வெளிவந்துள்ளன. அவரது பண்பாட்டு ஒற்றுமைபற்றிய ஆய்வின் ஓரங்கமான அகப்பொருள்பற்றிய ஆய்வினை என்னிடம் செய்யுமாறு பணித்துள்ளார். கடந்த நான்கு ஆண்டு அவரோடு இணைந்து ஆய்வு செய்யும் யான் தமிழ்மொழியின் பழைய இலக்கண, இலக்கிய நூல்களிலே சொல்லப்பட்டிருக்கும் அகப்பொருள் மரபினை யப்பானிய இலக்கிய நூல்களிலே கூறப்பட்டுள்ள மரபுகளுடன் ஒப்பிட்டு நோக்கியுள்ளேன். இத்தகைய ஒப்பீட்டாய்வு முன்னர் நிகழாததால் இதுவே முதல் முயற்சியாகவும் அமைகிறது. சொல்லொலி, சொல்லொழுங்கு, சொற்பொருள், இலக்கண அமைப்பு என்பவற்றிலே ஒற்றுமைப்பட்டிருக்கும் தமிழ்மொழியும் யப்பானிய மொழியும் இலக்கியப் பொருள்மரபிலும் ஒற்றுமைப்பட்டிருப்பதை நான் காணமுடிந்தது. என் ஆய்வுக் கருத்துகளை இங்கே விரிவாக எடுத்துக் கூறக் கட்டுரையின் பக்க அளவு இடமளிக்காததால் சுருக்கமாகவும் இயன்றவரை தெளிவாகவும் கூற முற்பட்டுள்ளேன்.

1. தரவுநிலை

தமிழ்மொழிக்கும் யப்பானிய மொழிக்கும் இடையேயுள்ள ஒற்றுமைபற்றிய ஆய்வு, விஞ்ஞான பூர்வமாக நடைபெறின் யாவரும் அதனை நன்கு அறிந்துகொள்வர். இதனால் இருமொழிகளின் இலக்கியப் பாடல்களைத் தரவாகக் கொண்டே இவ் வாய்வினைச் செய்துள்ளேன். ஆய்வுநிலையைக் கூர்மைப்படுத்துவதற்காக அகப்பொருள் இலக்கணமரபினையும் துணையாகக் கொண்டுள்ளேன். தமிழ் மொழி இலக்கியங்களில் சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமே தரவுகளாக அமையும். யப்பானிய மொழி இலக்கியங்களிலே கி.பி. 8ஆம் நூற்றாண்டளவில் தொகுக்கப்பட்ட 'மன்யோசு' என்ற தொகுப்பு, இலக்கியமே தரவாக அமையும். இருமொழி இலக்கியப் பாடல்களும் வாய்மொழிநிலையில் பேணப்பட்டுப் பின்னர்த் தொகுக்கப்பெற்ற தொகுப்பு நூல்கள் என்ற நிலையிலும் ஒற்றுமைப் பட்டுள்ளன. பாடல்களின் தோற்றகால அடிப்படையில் சங்க இலக்கியங்களின் காலம் கி.மு. 300 தொடக்கம் கி.பி. 300 வரையானது. மன்யோசுவின் காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டாகும். சங்க இலக்கியங்களிலுள்ள அகப்பாடல்கள் கூறும் செய்திகளே ஒப்பீட்டிற்குத் தரவுகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

தரவுநிலையில் சங்க இலக்கியங்களிலே அடங்கும் தொகுப்பு நூல்களையும் அவற்றின் தன்மைகளையும் சுருக்கமாக இங்குக் கூறவேண்டியுள்ளது. குறும் பாடல்தொகுதிகள் எட்டுத்தொகை என்ற பெயரில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை, புறநானூறு, பரிபாடல், பதிற்றுப்பத்து என்னும் தொகைநூல்களை அடக்கியுள்ளன; நெடும்பாடல்கள் பத்துப்பாட்டு என்ற பெயரில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, நெடுநல்வாடை, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம் என்னும் நூல்களை அடக்கியுள்ளன. அடியளவு நிலையில் குறும்பாடல் களில் மூன்றடி சிற்றெல்லையாகவும், நெடும்பாடல்களில் 782 அடி பேரெல்லையாகவும் அமையும். பாடல்கள் பலரது கூற்றுகளாகவும், பல உணர்வுகளைக் கூறுவதாகவும், பல புலவர்களால் பாடப்பட்டவையாகவும் அமைந்துள்ளன. பெண்பாற்புலவர்களது பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

மன்யோசு தொகுப்புநூல் யப்பானிய இலக்கியங்களிலே பாடலமைதி பெற்ற பழைய இலக்கியமாகும்; 20 தொகுதிகளாக 4516 பாடல்களை உள்ளடக்கியுள்ளது; புஜிவற, நற காலப்பகுதியிலே பாடப்பட்டது; யப்பானிய மக்களின் வாழ்க்கை நடைமுறைகளையும் பண்பாட்டு நிலைகளையும் எடுத்துக்கூறுவது. பல புலவர்கள் பாடல்களைப் பாடியுள்ளனர். பெண்பாற்புலவர்களது பாடல்களும் இடம்பெற்றுள்ளன. போர்பற்றிய தனிப்பாடல் ஒன்றுகூட இத் தொகுதியில் இடம்பெறவில்லை. ஆனால் ஒரு பாடலில்மட்டும் போர்பற்றிய சிறு குறிப்பொன்று இடம்பெற்றுள்ளது. மன்–யோ–சு என்ற பெயரைத் தமிழிலே நேர் மொழிபெயர்ப்புச் செய்யின் 'ஆயிரம் இலைத் தொகுப்பு' என்று அமையும் பல்காலத் தொகுப்பு என்று பொருள்படும். மன்யோசு தொகுதியில் 450 புலவர்கள் பாடிய பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. 8ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இவை தொகுக்கப் பட்டிருக்கலாமெனப் பல அறிஞர்கள் கருதுகின்றனர். 20 தொகுதிகளும் ஒரே காலத்தில் தொகுக்கப் பட்டவையல்ல. தொகுப்புநிலையிலே வரையறுக்கப்பட்ட நியதிகளுமில்லை. தொகுப்பாளர் நிலைக்கேற்பத் தொகுப்புமுறையும் வேறுபட்டமைந் துள்ளது. தொகுப்பின் வகைப்பாட்டிற்கும், ஒழுங்குமுறைக்கும் விதிமுறை காணமுடியா துள்ளதென யப்பானிய அறிஞர்கள் எண்ணுகின்றனர். யகமொச்சி என்பவரே இறுதித் தொகுப்பாளராவார். மன்யோசுவிலே முன்னைய

யப்பானியத் தொகுப்பு நூல்களான கொஜிகி, நிகொன் சொகிபற்றிய குறிப்புகளும் வருகின்றன. தொகுக்கப்படு முன்னர்ப் பாடல்கள் வாய்மொழியாகவே பேணப்பட்டுவந்துள்ளன. தொகுப் பாளர்கள் பாடல் மூலாதாரம், உசாத்துணைபற்றிய தமது கருத்துகளையும் தொகுப்பிலே இணைத்துள்ளனர். பாடல்கள் சிறு வேறுபாட்டுடன் மீண்டும் மீண்டும் வருதலும், பாடலடிகள் திரும்பவும் வருதலும், தனிச்சொல் ஒன்று முன்னுள்ள கருத்தையும் பின்வரும் கருத்தையும் இணைத்து நிற்பதும் மன்யோசு பாடல்களில் குறிப்பிடத்தக்க பண்புகளாகும். இணைத்து நிற்கும் தனிச்சொல் மகுறகொத்தொப என அழைக்கப்படும். இதன் நேர் தமிழ் மொழிபெயர்ப்பு, 'தலையணைச்சொல்' என அமையும்.

மன்யோசு பாடல்கள் தொகுக்கப்பட்ட இடங்களும்கூடச் சில இடங்களிலே தரப்பட்டுள்ளன. அவை சீனமொழி எழுத்துகளிலே எழுதப்பட்டுள்ளன. கண, மன்யோகண என்ற இருவகை எழுத்துகளிலே பாடல்கள் அமைந்துள்ளன. சீன எழுத்துகள் அசைநிலைகளாகப் பயன்படுத்தப்பட்டுமுள்ளன. அதனால் வாசிப்பு நிலையிலே பாடபேதங்களும் உண்டு. சொற்களின் பொருள்பற்றிய வேறுபட்ட கருத்துகளும் இதன்மூலம் தோன்றியுள்ளன. தங்க (tanka), சோக (choka) என்ற இருவகையான பாடலமைப்புகள் காணப்படுகின்றன. தங்க 5–7–5–7–7 என்ற அசை அமைப்பிலும், சோக 5–7–5–7–7–7 என்ற அசையமைப்பிலும் பாடப்பட்டுள்ளன. மன்யோசுவில் 260 சோக அசையமைப்புப் பாடல்களுண்டு. அடிகள் திரும்பத் திரும்ப வருகின்ற பாடல் பங்க (banka) என அழைக்கப்படும். சோகப் பாடல்கள் பங்கப் பாடல்களுடன் சேர்ந்தே அமைந்துள்ளன. மூன்றாவது பாடலமைப்பாக செதோக (sedoka) அமைந்துள்ளது. இதில் 5–7–7 என்ற அசைநிலை அமைப்பு இரண்டு முறையாக அமையும். இவ்வகையில் மன்யோசுவில் 60 பாடல்கள் காணப்படுகின்றன. 6 அடிகள் கொண்ட 5–7–5–7–7–7 அசைநிலையமைப்புப் பாடல்கள் வெகு குறைவாகவேயுள்ளன. 8ஆவது தொகுதியில் றென்க (renga) என அழைக்கப்படும் தொடர்பாடல்களும் காணப்படுகின்றன.

2. அகப்பொருள் மரபு இலக்கணநிலை

அகப்பொருள் மரபு இலக்கணம் தமிழ்மொழியிலே தொல்காப்பிய ரால் செய்யப்பட்டுள்ளது. மக்கள் உணர்வுகளை அகம், புறம் என இரண்டாக வகுத்து இலக்கணமாக அமைத்துள்ளார் தொல்காப்பியர்.

இந்த இலக்கணநூல் கி.மு. 500–க்கும் – கி.மு. 300–க்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றியிருக்கலாமெனப் பல் அறிஞர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். சூத்திரவடிவிலே தொல்காப்பியர் இலக்கணம் செய்திருப்பதால், அவற்றுக்குப் பிற்காலத்திலே உரையெழுதிய உரையாசிரியர்களிடையே கருத்து வேறுபாடுகளும் தோன்றியுள்ளன. தொல்காப்பியத்தில் அகத்திணையியலில் அகப்பொருள் மரபுகள் கூறப்பட்டுள்ளன. இளம்பூரணர், நச்சினார்க்கினியர் என்ற இரு உரையாசிரியர்கள் உரைசெய்துள்ளனர்.

அகத்திணையியலில் உள்ள சூத்திரங்களை இளம்பூரணர் 58 சூத்திரங்களாகக் கொண்டு உரைசெய்ய, நச்சினார்க்கினியர் 55 சூத்திரங்களாகக் கொண்டு உரைசெய்துள்ளார். அகத்திணையியல் காதலர் வாழ்வு ஆரம்பமாகும் நிலப்பாகுபாடு, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்களை எடுத்துக் காட்டும் விளக்க நூலாய், நிலநூல் என்று எண்ணும் வகையில் தொல்காப்பியரால் செய்யப்பட்டுள்ளது. இதில் தமிழர் வாழும் நிலம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பகுக்கப்படுமென்றும், அந்தந்த நிலத்திற்குக் குறிப்பிட்ட காலங்கள் சிறந்தனவென்றும், அவ்வந் நிலத்துவாழ் மக்கள் குறவர், இடையர், உழவர், பரதவர், எயினர் எனப்படுவரென்றும், அந்தந்த நிலத்தில் வழிபடப்பட்ட தெய்வம், உணவு, விலங்கு, பறவை, மரம், பறை, செய்தி, யாழ் முதலியன வேறு என்றும் விளக்கப்பட்டுள்ளது. மக்கள் காதல் ஒழுக்கத்தில் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என ஐந்து பாகுபாடு கூறப்பட்டுள்ளது. மக்கள் கல்வி, பகை, தூது, பொருள் என்பனபற்றிக் காதலியரைப் பிரிந்து செல்வதும், பிரிவுகளின்போது நற்றாய், செவிலித்தாய், தோழி, கண்டோர், தலைவன் என்போர் தத்தம் உணர்வுகளைக் கூறுகின்ற முறைமையும், பொருந்தாக் காமம், அதீத காமம் என்பவற்றின் தன்மையும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. உரை செய்த இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் சங்க இலக்கியப் பாடல் களை இத் தன்மைகளுக்கு எடுத்துக்காட்டுகளாக்கி மேலும் விளக்கமுற வைத்துள்ளனர். இத்தகைய தமிழர் அகப்பொருள் மரபு, யப்பானியர் அகப்பொருள் மரபுடனும் ஒற்றுமையுற்றிருப்பதை மன்யோசு பாடல்களால் தெளிவாய் அறிய முடிகிறது. தொல்காப்பியர் வகுத்த அகப்பொருள் இலக்கணம் யப்பானியர் வாழ்க்கை, பண்பாட்டுமுறைக்கும் பொருந்துவதாயுள்ளது.

தொல்காப்பியம் போன்ற அகப்பொருள் இலக்கணம் யப்பானிய மொழியிலே இல்லை. ஆனால் மன்யோசு பாடல்கள் அம் மரபு மக்கள் வாழ்க்கையில் இருந்ததைப் பதிவு செய்துள்ளது. பாடல்களிலே காதலர்களது உணர்வுகள், வேறுபட்ட பிரதேச வாழ்வுநெறிகள், நிலத்தன்மைநிலைகள், ஒழுக்கநிலை, மரம், பறவை என்பனபற்றிய செய்திகள், புணர்வுநிலைகள், பிரிவுநிலைகள், தெய்வம்பற்றிய நம்பிக்கைகள், பெற்றோர் நிலை, நட்பாளர் தன்மை என்பன வெகுநுணுக்கமாகவே விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. இப் பண்புகளை முழுமையாக இக் கட்டுரையில் தரமுடியாமையால் சில முக்கிய நிலைகளை மட்டுமே குறிப்பிட்டுள்ளேன்.

3. மன்யோசு பாடல்மரபு ஒற்றுமைநிலை

மன்யோசு பாடல்களில் காணப்படும் அகப்பொருள் ஒற்றுமைநிலை வகைப்படுத்தி இங்கே விளக்கப்பட்டு உள்ளது.

1. தமிழிலக்கியப் பாடல்களிலே வருகின்ற கூற்றுநிலையாகவே மன்யோசுவிலும் உணர்வுகள் விளக்கப்பட்டுள்ளன. தமிழ் அகப்பொருள் மரபின் முக்கியப் பாத்திரங்களான தோழி, தலைவன், தலைவி, கண்டோர், நற்றாய் என்பவற்றோடு ஒற்றுமைநிலையாக உள்ளது.
2. பாத்திரங்களின் உணர்வுகளும் கூற்றுகளும் சங்கப் பாடல்களைப் போன்று இயற்கைப் பகைப்புலத்தோடு இணைத்துக் கூறப்பட்டுள்ளன.
3. காதலர் உணர்வுகளைப் புலப்படுத்தும்போது இடையிலே யப்பானிய மக்களது பிரதேச வாழ்வு நெறியும் பண்பாடுகளும் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன.
4. காதலன் பிரிந்து செல்கின்ற வழி, வழியின் இடர்கள், திரும்பிவரும் காலநிலை, காதலியின் காத்திருப்பு நிலை, அவள் பிரிவுத்துயர் நிலை, தாய்மார்களின் கண்டிப்பு, ஊரலர் என்பன விளக்கப்படும் தன்மை சங்கப் பாடல்களோடு பெரிதும் ஒற்றுமையுடையது.
5. வேறுபட்ட பிரதேசங்களிலே வாழுகின்ற ஆண், பெண் தொடர்புநிலையும் விளைவுகளும், சமூகநிலையிலே ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வு நடத்துவதற்கான அடிப்படையான நடைமுறைகளின் தன்மையும் விளக்கல்.

6. திருமணமான ஒருத்தியை ஆண் விரும்பும் நிலை.

7. பொருள், தூது, பகை என்ற நிலையில் பிரிந்த கணவர்கள் வரும்வரை பிரிவைப் பெண்கள் ஆற்றியிருத்தல்.

8. பிரிவுநிலையை இயற்கைக் காலநிலையோடு, இணைத்து விளக்கல்.

9. ஆணும் பெண்ணும் சூளுரை பரிமாறிக் கொள்ளல். மலை, ஆறு. கடல், மரம் என்பவற்றை முன்னிறுத்திச் சூளுரை செய்தல்.

10. தெய்வ நம்பிக்கையும் தெய்வமடை போடும் நிலையும். தமது காதல் நிறைவேறி இருவரும் ஒன்றுசேர ஏதாவது இடையூறு நேரின் தெய்வமடை போடுவதாக வாக்குறுதி செய்தல். மரம், மலை, ஆறு, கடல் என்ற இயற்கைச் சக்திகளை வழிபட்ட சங்க காலத் தமிழருக்கும் யப்பானிய மக்களுக்கும் உணர்வு நிலையிலே இருந்த ஒற்றுமை இதன்மூலம் விளக்கமாகின்றது.

11. நிலங்களின் தன்மைக்கேற்ற மக்களின் வாழ்க்கைமுறை, நடைமுறைகள் வேறுபட்டதை விளக்கல். பயிர்செய்கை, மீன்பிடித்தல், வேட்டை, அரசகாரியம் என அவரவர் வாழுகின்ற நிலத்தன்மைக்கேற்ற தொழில்முறைகளுடன் இயங்கிக் கொண்டிருந்த மக்களின் உணவு, உடை, உறையுள், ஏனைய பழக்கவழக்கங்களென்பவற்றிலும் வேறுபாடிருந்ததை விரிவாக விளக்கல்.

மேல் வகைப்படுத்திக் காட்டியுள்ள அகப்பொருள் மரபுகளைத் தொல்காப்பியர் வகுத்துக் கூறிய அகப்பொருள் இலக்கணமரபுடன் பொருத்திப் பார்க்கும் போது மன்யோசு பாடல் மரபும் பெரிதும் ஒற்றுமைப் பட்டு நிற்பதைக் காணமுடிகிறது. முதல், உரி, கருப்பொருள்கள்பற்றிய தொல்காப்பியரது இலக்கணம் முற்றாகவே பொருந்தும் நிலையாயுள்ளது.

"முதல்கரு வுரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை". (தொல். பொருள். 3)

சான்றோர்களது செய்யுளிலே முதல், கரு, உரி என்ற மூன்று பொருள்களும் சிறந்துவரும். இப் பண்பு மன்யோசு பாடல்களிலும்

காணப்படுகின்றன. முதலெனப்படுவது நிலமும் பொழுதுமாகும், கருப்பொருள் நிலத்திற்குரிய தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, செய்தி, யாழ் என்பவற்றை விளக்கும். உரிப்பொருள் அவ்வந் நிலத்திற்குரிய ஒழுக்கநிலையைக் காட்டும். பாடல்களிலே பயின்றுவரும் இவற்றைப்பற்றித் தொல்காப்பியர் சூத்திரவடிவில் கூறியுள்ளார். அவற்றை உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியுள்ளனர்.

மன்யோசு தொகுதியில் அமைந்த முதற்பாடல் காட்சி, ஐயம், தெளிவு என்ற அகவுணர்வு நிலைகளை விளக்குவதாக உள்ளது. தான் கண்ட பெண்ணைத் தனது மனைவியாக்க எண்ணிய ஆணின் கூற்றாக அமைந்த பாடல் அது. அவளிடம் தான் யாரென்பதைக் கூறி அவளது ஊரையும் பெயரையும் கேட்பதாக அமைந்துள்ளது. அப் பாடலைத் தமிழிலே நேரடி மொழிபெயர்ப்புச் செய்யின் பின்வருமாறு அமையும்:

"கூடையும் எழிற்கூடையும் கொண்டு
குந்தமும் எழிற் குந்தமுங் கொண்டு
குன்றதிற் குழை பறித்திடுங் குறுமகளே!
கூறவுங் கூடுமோ நினதில்ல மெங்குளதோ?
வான் பார்க்கும் யமத்தோ நாடுகிழவோன்
என்னிலை ஈங்கு அறைந்தனன் உரைத்திடு
உன்னில்லமும் பேரும் யான் அறியத் தானே" (மன்யோசு,1)

இதேபோன்று ஆண்கூற்றாக அமைந்த நற்றிணைப் பாடல் ஒன்று மிகவும் ஒற்றுமைப்பட்டிருப்பதை இங்குக் காட்டலாம்.

"அருவி ஆர்க்கும் பெருவரை நண்ணிக்
கன்றுகால் யாத்த மன்றப் பலவின்
வேர்க்கொண்டு தூங்கும் கொழுஞ்சுளைப் பெரும்பழம்
குழவிச் சேதா மாந்தி அயலது
வேய்பயில் இறும்பின் ஆம்அறல் பருகும்
பெருங்கல் வேலிச் சிறுகுடி யாதெனச்
சொல்லவும் சொல்வீ ராயிற் கல்லெனக்
கருவி மாமழை வீழ்ந்தென எழுந்த
செங்கேழ் ஆடிய செழுங்குரற் சிறுதினைக்
கொய்புனம் காவலும் நுமதோ
கோடேந்து அல்குல் நீள்தோ ளீரே." (நற்றிணை, 213)

மேலே காட்டிய இருமொழிப் பாடல்களிலும் முதல், கரு, உரிப்பொருள்கள் அடங்கியிருப்பதைக் காணலாம். மன்யோசு பாடல்களில் இவ்வாறு அகப்பொருள் மரபு ஒன்று இருப்பதை இன்னமும் யப்பானிய அறிஞர்கள் வகுத்துக் காட்டவில்லை. ஆனால் தொல்காப்பியரது அகப்பொருள் மரபுடன் பொருத்திக் காட்டும்போது அவர்களும் அதை உணர்வர். இரண்டு மொழிப் பாடல்களும் பொருள்நிலையிலும் அமைப்பு நிலையிலும் ஒற்றுமைப்பட்டிருப்பதை விஞ்ஞான பூர்வமான ஆய்வினால் எடுத்துக்காட்டும் போது எல்லோருமே வினங்கிக்கொள்வர்.

4. ஒப்பீட்டாய்வின் தன்மையும் நிலைமையும்

தமிழர் – யப்பானியர் அகப்பொருள் மரபினை ஒப்பிட்டுப் பார்க்கும்போது சில முக்கியக் கருத்துகளைப் பெறமுடிகிறது. இரு இனத்தவரது வாழ்வியல் நடைமுறைகளும் மிகவும் நெருங்கிய தொடர்புடையனவாக இருக்கின்றன. இவ் வொற்றுமைக்கு முக்கியக் காரணம் தமிழரும் யப்பானியரும் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தியமையே. அதனாலேயே மனித உணர்வுகளையும் இயற்கை நிலையுடன் இணைத்துச் செய்யுள் செய்கின்ற மரபினைப் பொதுமையான பண்பாகக் கொண்டுள்ளனர். அதிலும் காதல் உணர்வுகளை இயற்கை நிலையுடன் இணைத்துக் கூறுவது சிறப்பான தனித்துவமான மரபாக உள்ளது. அந்த ஒற்றுமைநிலையினைத் தொல்காப்பியரது அகப்பொருள் மரபிலே வைத்துப் பார்க்கும்போது அது மேலும் தெளிவாகின்றது.

வாழ்க்கை நடைமுறைகளை மரபாகப் பேணும்போது வாய்மொழி இலக்கியங்களும் பேணப்பட்டுள்ளன. எழுத்துநிலையற்ற பழைய காலத்திலும் வாய்மொழிமரபாய் இலக்கியவடிவில் வாழ்க்கைமரபுகள் தொடர்ந்து பேணப்பட்டு வந்துள்ளன. பிற்காலத்திலே இலக்கியப் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அதனால் இருமொழி இலக்கியப் பாடல்களிலும் பெயர் தெரியாத புலவர்களின் பாடல்களும் இடம்பெற்றிருக்கின்றன. ஆண்பெண் அன்புநிலை, குடும்பநிலை, சமூகநிலை என்பன வளர்ச்சியுற்றவற்றையும் இவ் வாய்மொழி இலக்கிய மரபுகளின் மூலமே இன்று அறிந்துகொள்ள முடிகிறது.

பொருள்மரபின் ஒற்றுமையைச் சொல்மரபும் இலக்கணமரபும் மேலும் இறுக்கமாக்கிக் காட்டுகின்றன. பேராசிரியர் சுசுமு ஓனோ தமிழ் – யப்பானியச் சொல்லொலி, சொற்பொருள், இலக்கண ஒற்றுமையை

விளக்கிக்காட்டுவதற்குச் சங்க – மன்யோசு பாடல்களையே பெரும்பாலும் உதாரணங்களாக எடுத்துக்காட்டியுள்ளார். இதன்மூலம் இரு மொழிகளுக்குமிடையேயுள்ள மொழியுறவுநிலை வெளிப்படையானது. அந்நிலையை இன்னும் ஆழமாக்கிக் காட்ட இவ் வகப்பொருள் மரபு ஒற்றுமை உதவுகிறது.

தொல்காப்பியர் வகுத்துக்காட்டும் அகப்பொருள் மரபு யப்பானியமொழி இலக்கியங்களுக்கும் பொருந்துவதை மேலும் விரிவாக எடுத்து விளக்கவும் இடமுண்டு. சங்க இலக்கியப்பாடல்களும், மன்யோசு பாடல்களும் இன்றும் தத்தமது பண்பாடுகளை எடுத்து விளக்குவனவாக நிலைத்து நிற்பதற்கும் அவற்றின் தனித்துவமே காரணமாகும். இக் கட்டுரை, ஒப்பீட்டாய்வின் நிலைப்பாட்டினை வெகு சுருக்கமாகவே தந்துள்ளது. மேலும் இந்த ஆய்வின் வெளிப்பாடுகள் விரிவாக, யாவருமறிய நூல்வடிவிலே பிரசுரமாகவுள்ளன.

உசாத்துணை நூல்கள், கட்டுரைகள்

அகநானூறு, கழகப்பதிப்பு, 1970

நற்றிணை, கழகப்பதிப்பு, 1976

குறுந்தொகை, கழகப்பதிப்பு, 1978

ஐங்குறுநூறு, கழகப்பதிப்பு, 1972

கலித்தொகை, கழகப் பதிப்பு, 1975

தொல்காப்பியம், பொருளதிகாரம் இளம்பூரணருரை,
கழகப்பதிப்பு, 1977

தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினார்க்கினியருரை,
கழகப்பதிப்பு, 1973

Manyoshu, 1 - 4 Vol., Nikon Koten Bunkaku, 1977

The Manyoshu, Translated and annotated
by Dr. J.L. Pierson, 1961

The Manyoshu, A New and Complete Translation
by H.H. Honda,1967

Ohno. Susumu, ***Sound Correspondences Between Tamil and Japanese, 1980***

——, ***Nihongo to Tamirugo, 1981***

——, ***Worldview and Rituals Among Japanese and Tamils,*** 1985

——, ***The Relationship Between Tamil and Japanese*** Kaishaku to Kanshoa Jan., 1983 - 86

Caldwell, Rev. Robert. ***A Comparative Grammar of the Dravidian Languages*** , 1956

4

எண்பதுகளில் வெளிவந்த தமிழ்ப் படைப்பிலக்கியங்களில் அறம் ஒழுக்கம் நீதி

(அறிவியல் நோக்கில்)

மா. இராமலிங்கம்

'அறம்' என்னும் சொல் 'அறு' என்னும் வினைச்சொல்லின் அடியையும், 'அம்' என்னும் தொழிற்பெயர் விகுதியையும் கொண்டது. இச் சொல்லை இங்ஙனம் பிறப்புவகையான் விளக்குவது எளிதேயன்றிப் பொருள்வகையான் வரையறை செய்தல் எளிதன்று. நற்பண்பு அல்லது ஒழுக்கம் என்னும் பொருளிலேயே பண்டைத் தமிழ் இலக்கியங்களில் ஆட்சிபெற்று வரும் இது, போகப் போக நீதி, கடமை, புண்ணியம், ஈகை, சமயம், கடவுள் என்னும் பிறவேறு பொருள்களையும் தழுவிக்கொண்டது. மக்களின் நல்லனவும் தீயனவுமாகிய நடத்தையைப்பற்றி ஆராயும் அறிவுத்துறையை ஆங்கிலத்தில் 'Ethics' என்பர். இதனைத் தமிழில் அறவியல் என்று கூறுகிறோம். நடத்தை எனும் பொருள்கொண்ட 'Ethos' என்னும் சொல் அறம் என்பதோடு ஒத்த பொருள் கொண்டது என்பது இங்கு அறியத்தக்கது. ஒழுக்கம் என்பது நன்னெறியைக் கைக்கொண்டு வாழும் ஒரு வாழ்வியல் பண்பு எனலாம். அறம் என்பதற்குத் திருக்குறள் உரையாசிரியராகிய பரிமேலழகர் தரும் விளக்கம் நாம் அறிந்ததே. அவ் விளக்கத்தில் வரும் நூற்பெயர், சாதிப்பெயர் முதலானவற்றை மறந்து

பொதுநிலையில் நோக்கினால் 'மனிதன் தன் நல்வாழ்வின் பொருட்டுத் தள்ளுவன தள்ளி, கொள்ளுவன கொண்டு, நல்ல பழக்கவழக்கங்களை மேற்கொள்வதே அறம்' என்னும் உண்மை புலப்படும். அறமும் ஒழுக்கமும் மனத்தூய்மை, சொற்றூய்மை, செயற்றூய்மை ஆகிய மூன்றையும் பொறுத்து அமைவன. எந்த ஒன்றற்கும் நிலைப்பாட்டு நிலை (Static), இயங்குநிலை (Kinetic), இயக்குநிலை (Dynamic) என மூவகைப் பண்புகள் இருப்பதாக அறிவியல் கூறும். அவ்வாறு நோக்கினால், அறத்தின் நிலைப்பாட்டு நிலை மக்களின் எண்ணங்களிலும், அதன் இயங்குநிலையும் இயக்குநிலையும் முறையே பேச்சிலும் செயலிலும் இருப்பதாகக் கொள்ளலாம். நீதி என்னும் சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் இடம்பெறவில்லை யெனினும் அது 'முறைமை', 'நியாயம்' என்னும் பொருளில் வழங்கப்படுவதை அறிவோம். 'சட்டம்', 'விதிகள்' என்னும் பொருளிலும் அச் சொல் இந் நாளில் ஆட்சி பெறுகிறது. அறம், ஒழுக்கம், நீதி என்பன முன்னெல்லாம் சமயத்துறை சார்ந்தனவாகவே இருந்துவந்தன. வளர்ந்துவரும் இன்றைய அறிவியல் உலகிலோ அவை சமயத்துறைக்கு மட்டும் உரியனவாகவன்றி அனைத்துத் துறைகளுக்கும் உரியனவாக மாறியுள்ளன.

II

இலக்கியம், (அது எவ் வடிவினதாயினும்) படைப்பு என்னும் நிலையில் யாரோ ஒரு தனிமனிதனைக் கருவியாகக்கொண்டு வெளிப்பட்டாலும், அதனை ஒரு சமூக இயல் நிகழ்வாகவே (Social Phenomenon) நாம் கருதுதல் வேண்டும். ஒரு சமூகத்தின் ஆத்மா தன்னை இலக்கியமாக வெளியிட்டுக்கொள்ள ஒரு கலைஞனைக் கர்த்தாவாகக் கொள்கிறது. வெளியீட்டு நிலையில் அது எந்த ஒரு குழுவின்/தேசிய இனத்தின் மொழியை ஊடகமாகக் கொள்கிறதோ அதற்கேற்ப அந்தந்தக் குழுவினரையும்/தேசிய இனத்தினரையும், அம் மொழியைப் புரிந்து கொள்ளும் நிறனுடைய ஏனையோரையும் சென்றடைகிறது. சமுதாயத்தையே தோற்றக்களமாகக் கொண்ட அது, படைப்பு வடிவம் விரித்த பின் அங்கேயே சென்று நிலைபெறுகிறது. வேறு வார்த்தைகளில் கூறினால் புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வருகிறது. எனினும் புறப்பாட்டு நிலை, படைப்பாக மாறிய நிலை, பின்னைய அடைவுநிலை மூன்றும் தன்மையாலும் செயல்பாங்காலும் வெவ்வேறு பண்புகள் கொண்டவை. இலக்கியமும் ஓர் உயிரியே. சமுதாயத்தில் மாற்றமும் வளர்ச்சியும் ஏற்படும்போது அவற்றிற்கு ஆளான மக்களின் சிந்தனைப் போக்கு

இருக்கிறதே அதுவே இலக்கியத்தின் நிலைப்பாட்டு நிலை. சமுதாயத்தின் அங்கமாக உள்ள படைப்புக் கலைஞன், அதன் எதிரொலியால் பாதிக்கப்பட்டுச் சமுதாயத்தின் இயங்குநிலை; மொழியை ஊடகமாகக் கொண்டு வெளிவரும் படைப்பு, படிப்போர்க்கு அனுபவமாகும்போது அது விளைக்கும் தாக்கமே இலக்கியத்தின் இயக்குநிலை. காலமும் சமுதாயச் சூழலும் மாறமாற வாழ்க்கை மதிப்புகளும் (Values) மாறும். வாழ்க்கை மதிப்புகளில் மாறுவனவும் உள; மாறாதனவும் சில உள; அறம், ஒழுக்கம், நீதிபற்றிய மனித சிந்தனைகள் ஓரளவுக்கு என்றென்றும் மாறாமலே இருந்துவந்தன. நன்மையே நினைந்து, நன்மையே பேசி, வாழ்வை நலமுடையதாக்க வேண்டும் என்று எண்ணும் அறச்சிந்தனை என்றும் – எங்கும் – மாறாத மதிப்புடையதேயல்லவா? ஒவ்வொரு மனித மனத்திற்கும் நல்லனவற்றையும் தீயனவற்றையும் தானே உய்த்துணரும் ஆற்றல் உண்டு; அது மனத்தின் உள்இயல்பான பண்பு எனலாம்.

"நானேதும் அறியாமே என்னுள் நின்று,
நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்"

என்னும் தேவார வரிகளை இங்கு நினைவுகூர்க.

இதுகாறும் கூறிப்போந்த சிந்தனைகளின் பின்னணியில், இக்காலத் தமிழ்ப் படைப்புகளில் அறம், ஒழுக்கம், நீதி முதலியன எங்ஙனம் வெளிப்படுத்தப்படுகின்றன என்பதைக் காண முயல்வோம். 'எண்பது களில் வெளிவந்த படைப்புகள்' மட்டுமே நம் ஆய்வுக்குரியவை. அவை அனைத்தையும் முற்றக் கற்றே இக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது என்று யான் கூறேன்; அது சாத்தியமும் அன்று. நான் தேடிப் படித்த,என்னைத் தேடிப் பிடித்த மிகச் சில படைப்புகளையே இக் கட்டுரைக்கு முதன்மை ஆதாரங்களாகக் கொண்டுள்ளேன்.

III (அ)

பண்டைய அறநூல்கள், அறத்தை உணர்த்துமுன் நிலை யாமையைப்பற்றிய உணர்வை மக்கள் மனத்தில் ஏற்படுத்தும். நில்லாதவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவாண்மையே மனிதனை இறப்ப இழிந்த நிலைக்கு இட்டுச் செல்கிறது. 'ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல, உற்றுப் பெற்ற பேரும் சதமல்ல, பெண்டிர் சதமல்ல' என்னும் பட்டினத்தாரின் திருப்பாட்டு ஏதோ மிகைப்படுத்தப்பட்ட கூற்றுப்போல் தோன்றினாலும் அஃது உண்மையே என்பதை யாரே மறுக்க முடியும்?

சுஜாதாவின் காகிதச் சங்கிலிகள் (1982) என்னும் அளவாற் சிறிய நாவல் மனித உறவுகளில் உள்ள பொய்ம்மையையும், அதனை ஒரு நெருக்கடியான நேரத்தில் அறிய நேர்ந்த ஓர் ஆத்மாவின் அதிர்ச்சியையும் நம் மனத்தில் ஆழப் பதியுமாறு எடுத்துரைக்கிறது.

சிறுநீரகம் பாதிக்கப்பட்ட ஒருவனுக்கு உடனடியாக மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட வேண்டும் என்னும் நெருக்கடி உண்டாகிறது. ரத்த சம்பந்தமுடைய உறவினர் யாராவது ஒருவர் அதனைத் தர முன்வந்தால் சிகிச்சை வெற்றிபெறும் என்கிறார் மருத்துவர். நோயாளியினது மனைவி துடித்துப்போகிறாள். சிறுநீரகத்தைத் தானம் தர அந் நோயாளியின் தந்தை, தாய், தமையன் இவருள் யாருமே முன்வரவில்லை; எதை எதையோ காரணமாக உணர்த்தித் தப்பித்தோட முந்துகின்றனர். நோயாளி இறந்துபோகிறான். இறந்தவனின் மனைவியிடத்தில் சுற்றத்தார் என்று சொல்லிக்கொண்டவர்கள் துக்கம் கொண்டாட வந்தபோது 'தொடாதீர்கள்' என்று தடுத்துவிடுகிறாள் அவள். இராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேசக் கதைகளில் வரும் கதை ஒன்றே இந்த நாவலுக்கு மூலப்படிவமாக இருத்தல் வேண்டும். குரு, சீடன், மயக்க மருந்து, இறந்து போனதுபோல் நடித்தல், குடும்பத்தினரின் மனோபாவம், மயங்கிக் கிடந்தவன் எழுதல் என்பதுபோல் கதைப் பின்னல் அமைத்துத் தத்துவ போதனையோடு முடிக்கிறார் இராமகிருஷ்ண பரமஹம்சர். அதே கதையைச் சற்றே நகாசு வேலை செய்து விஞ்ஞானப் பூச்சோடு திரும்பச் சொல்கிறார் சுஜாதா. 'உறவுகள் போலியானது' என்னும் தத்துவத்தை விளக்கத் தம் கதைகளில் ஒரு மருத்துவமனையைப் பின்னணியாக்கி இருக்கிறார் சுஜாதா.

III (ஆ)

படைக்கப்பட்ட உயிர்கள் அனைத்தும் வாழும் உரிமையுடையன. பிற உயிர்களை எக் காரணத்தாலும் கொல்லும் உரிமை யாருக்கும் இல்லை. திருவள்ளுவர் கொல்லாமையைப் பேரறமாகவே போற்றுகிறார். "அறவினை யாதெனின் கொல்லாமை" என்பது அவர் கூற்று. தன் உயிர் உடம்பிலிருந்து நீங்கிப் போவதாக நேர்ந்தாலும், அதைத் தடுப்பதற்காகத் தான் வேறோர் உயிரை நீக்கும் செயல்களைச் செய்யக் கூடாது

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை"

என்று திருவள்ளுவர் வற்புறுத்துகிறார். கொல்லாமை என்னும் அறச்சிந்தனையை அறிவுலகம் அவ்வப்போது மறுமதிப்பீடு செய்தே வந்துள்ளது. அண்ணல் காந்தியடிகள் நோயால் வாடிய இளங்கன்று ஒன்றனை – அது படும் துன்பத்தைக் காணச் சகிக்காமல், – கொன்றுவிடுமாறு ஒருமுறை பரிந்துரைத்தார் என்பது வரலாறு. இதுபோன்ற ஒரு சந்தர்ப்பம் மனித வாழ்விலும் வரலாம் அல்லவா?

சிவசங்கரியின் கருணைக் கொலை (1985) என்னும் நாவல் இப் பிரச்சினையை அதன் அடி ஆழத்திற்கே சென்று பரிசீலனை செய்கிறது. தன்னோடு மனமொத்து வாழ்ந்த மனைவி ஒரு விபத்தின் காரணமாக மீளமுடியாத மயக்கநிலையில் வீழ்ந்துவிடுகிறாள். 'கோமா' நிலையில் அவள் படநேர்ந்த துன்பத்தைக் கண்டுகண்டு மனம் உளைகிறான் கணவன். அக் கணவன் மனைவி இருவருமே அறிவாண்மையால், அவள் நலத்தோடு வாழ்ந்த காலத்தில் அவர்களது உரையாடலிலும் விவரங்களிலும் கருணைக்கொலை இடமபெற்றதுண்டு. வேதனையைத் தவிர இனி வேறு எதுவுமே இல்லையென்று ஆகிவிட்டால் அந்த உயிர் வாழ்வதில் அர்த்தம் இல்லை என்றும், மனப்பூர்வமாக அன்பு வைத் திருக்கிறவர்களின் அவஸ்தையைத் தாங்க முடியாமல் உண்டாக்கப் பட்டதே 'மெர்சி கில்லிங்' என்றும் (இயல் 11) அவள் பேசி இருக்கிறாள். நீண்ட நாள் மனப்போராட்டத்திற்குப் பின் கணவன் அவளுக்குக் கருணைக் கொலை என்னும் முடிவைத் தரத் திட்டமிடுகிறான்; தயங்கித் தயங்கித் தீர்மானத்திற்கும் வருகிறான். அத் திட்டம் நிறைவேறும் முன் மயக்கத்தில் கிடந்த மனைவி திடுமென உயிர்ப்பு நிலையை அடைகிறாள். அவனோ தான் செய்யத் திட்டமிட்டிருந்த செயலை நினைந்து நினைந்து அக் குற்ற உணர்வின் அழுத்தத்தால் மீள்வினை மனக்கோட்டத்திற்கு (Reactive depression) ஆளாகிவிடுகிறான். இந்த நாவலில் ஆங்காங்கே இடம்பெறும் ஜனனி, சத்யா ஆகிய இருவரின் பல்வேறு உரையாடல்கள், கொல்லாமைபற்றிய அறத்தினைப் பல்வேறு கோணங்களில் நின்று பகுத்துக் காணும் நுண்ணிய ஆய்வாக வார்க்கப்பட்டுள்ளன. "நாம் படைக்க இயலாத உயிரைக் கொலைசெய்ய நமக்கு உரிமையில்லை" என்பதே நாவலாசிரியர்கள் வெளிப்படுத்தும் செய்தியாகும். மருத்துவ இயல், உளவியல் போன்ற நவீன அறிவுத்துறைச் சிந்தனைகளைக் கலந்தே ஆசிரியர் இந்த நாவலைப் படைத்துள்ளார். சிவசங்கரி காட்டும் அறம் வெறும் உபதேசக் குரலாக, அறிவியல் ஒளியில் நாம் பெறும் தர்க்க ரீதியான சிந்தனை முடிவாக வெளிப்பட்டிருப்பதை நாம் போற்றவே வேண்டும்.

ஆன்ம நேயத்தைவிடச் சிறந்த பேரறம் வேறொன்றும் இருத்தல் இயலாது. எவ் வுயிரையும் தன்னுயிர்போல் போற்றும் பேதமற்ற நிலையில்தான் ஆன்ம நேயம் கால்கொள்ள முடியும். நள்ளிரவில், நேரமல்லாத நேரத்தில், தெருவில் உள்ள பொதுவான தண்ணீர்க் குழாயில் மிகச் சிரமப்பட்டுக் குடிதண்ணீர் பிடித்து வந்த ஒருத்தி, தன்னை எதிர்கொள்ளும் கன்றுக்குட்டியை அது தண்ணீரில் வாய் வைத்துவிடுமோ என எண்ணி விரட்ட முயல்கிறாள். அதுவோ அவள்பால் அன்போடு உரிமை பாராட்டுகிறது; அக் கன்றின் தாகம் தீர்க்க அவள் தண்ணீரைத் தருகிறாள். அப் பெண்ணின் திடீர் மனமாற்றம் மனித நேயத்தின் ஆற்றல் மிக்க வெளிப்பாடாக சித்திரிக்கப்படுகிறது. அசோகமித்திரனின் **விடிவதற்குள்** என்னும் சிறுகதை மனிதநேயத்தின் மாண்பினை உளங்கொள உணர்த்துகிறது. கவிஞர் குலோத்துங்கன் (டாக்டர் வா.செ. குழந்தைசாமி) உயிர்க் கூட்டத்தோடு மட்டுமன்றி வானம், உடுக்கள், நிலவு அனைத்தோடும் உறவுகொண்டு எல்லாம் நானே என்று ஒரு கவிதையில் (தூரத்து உறவினர்) பாடுகிறார்.

"தரையொடும் மலையொடும், தண்புனல் கடலொடும்
வரைகடந் தெழும்விரி வானொடும், வானின்
வெளிதிரி கோளொடும், விண்ணின் மீனொடும்
எளியவன் என்வாழ்வு இணைந்தது; என்னுயிர்
தனியொரு உடம்பைச் சார்ந்தது அன்று;தான்
நனிசிறத் துயர்ந்து, ஞாலம் முழுமையும்
பரவி நிற்பது; பரப்பின் தாக்கமும்
விரவி நிற்பது; விண்ணின் வெளியின்
தாரகைக் கூட்டமும், தண்மதிப் பொழுதும்எம்
ஊரவர்; தூரத்து உறவினர் ஆவர்."

இப் பாட்டில் கவிஞரின் அகல்பார்வையும் அதன் விளைவேயான மனவீச்சும் நனி முதிர்ச்சி பெற்று அனைத்தையும் தானேயாய்க் காணும் ஆன்ம நேயமாய் மலர்வதைக் காண்கிறோம். கவிஞர் அறிவியல் முனைவராதலின் அவர் தம் கருத்தினை உணர்ச்சி வார்ப்பாய் வெளிப்படுத்தாமல் விஞ்ஞான அணுகுமுறையோடு வெளிக் கொணர்கிறார். வாடிய பயிரைக் காணும் போதெல்லாம் வாடிப் போவதும் மனித நேயமே; 'என்னுயிர் தனியொரு உடம்பைச் சார்ந்தது அன்று' என்று

பேசுவதும் மனித நேயமே. முன்னைய கூற்று மெய்ஞான நோக்கு; பின்னைய பேச்சோ விஞ்ஞான நோக்கு. இத்தகு நோக்கு அவர்கள் வருகிறார்கள் என்னும் மு. மேத்தாவின் கவிதையிலும் உண்டு. வேலை தேடி அலையும் இளைஞர்களைப்பற்றிய கவிதை அது.

"அவர்கள்,
காலமெல்லாம்
இருட்டறையில் கிடந்தும்
கழுவப்படாத
புகைப்படச் சுருள்கள்"

என்கிறார் கவிஞர்.

மனித நேயமாகிய பேரறத்தை உணர்த்த விழையும் இந் நாளைய படைப்புக் கலைஞர்களுக்கு விஞ்ஞானச் சிந்தனைகள் பெரிதும் கை கொடுக்கின்றன எனலாம்.

III (இ)

வியத்தகு புறநாகரிக வளர்ச்சி, காணும் இடமெல்லாம் பகட்டும் பொய்மாயக் கவர்ச்சி, பொறிபுலன்களை வெறிகொள்ளச் செய்யும் தரங் கெட்ட கலைக்கேளிக்கை ஆகிய இவையே மேலாதிக்கம் செலுத்திவரும் இன்றைய நவீன வாழ்வில், ஒவ்வொரு மனிதனும் ஒழுக்கநெறியில் நிற்க முடியாமல் தடுமாறவே செய்கிறான். பொருளாதாரச் சமன்பாடில்லாத ஏற்றத்தாழ்வு நிறைந்த வாழ்க்கை நிலை, அதனால் மேலும் மேலும் சிக்கலாகும் மனித உறவுகள் முதலியனவும் அவனைச் சராசரியான வாழ்க்கை நடத்தவிடாமல் ஒழுக்கச் சீர்கேடு என்னும் படுகுழியில் வீழ்த்துகின்றன. தமிழ்நாட்டு இளைஞரிடையே மது அருந்துதல், போதைப் பொருள்களை நுகர்ந்து மகிழ்தல் போன்ற தீய பழக்கவழக்கங்கள் வேரூன்றி வளர்வதை நாம் நாளும் கண்டு வருகிறோம். மேற்கத்திய கலாசாரத்தின் கீழ்மைக்கு இந்திய – தமிழக இளைஞர்கள் பலியாகி வருவது மிகமிக இரங்கத்தக்கதாகும். குடிப்பழக்கம் என்னும் ஒழுக்கச் சீர்கேட்டை நுவல்பொருளாகக் கொண்டு சில அருமையான இலக்கியப் படைப்புகள் உருவாகியுள்ளன. வாசந்தியின் மயக்கங்களும் சிலந்திக் கூடுகளும் (1980), சிவசங்கரியின் ஒரு மனிதனின் கதை (1981), கி. கஸ்தூரிரங்களின் ஏஞ்சல் டஸ்ட் (1983), நீல பத்மநாபனின் போதையில் கரைந்தவர்கள் (1985) முதலியன இங்குக் குறிப்பிடத் தக்கன.

வாசந்தியின் நாவலில் ஒரு படித்த பெண்ணும் (வனிதா), சிவசங்கரியின் நாவலில் ஒரு ஆடவனும் (தியாகு), மையப் பாத்திரங்களாக இடம்பெறுகின்றனர். இவ் விருவருக்கும் அவர்தம் மனநிலையை உணர்ந்து மருத்துவம் பார்க்க இருவர் கிட்டுகின்றனர். வனிதா, தியாகு இருவரும் முறையே ராம்நாத், ரெட்டி ஆகிய இருவரின் பரிவான சிகிச்சையால் போதை அடிமை நிலையிலிருந்து விடுபட்டுப் புதுவாழ்வு பெறுகின்றனர். இராஜாஜியின் தேவானை குடிப்பழக்கத்தின் தீமையை உணர்த்துவதற்காக எழுதப்பட்ட ஒரு கதை. அந் நாள்களில் அது பெரிதும் பேசப்பட்ட கதை. பழைய கதைகள் எல்லாம் குடிப்பழக்கத்தினால் ஏற்பட்ட சமுதாயத் தீமைகளைச் சித்திரித்தனவே யன்றித் தெரிந்தோ தெரியாமலோ அப் பழக்கத்திற்கு ஆளாகிவிட்டவர்களுக்கு எப்படி மறுவாழ்வு தருவது என்று வழிகாட்டவில்லை. இவ்வாறு வழிகாட்டும் வகையில் ஒரு படைப்புக் கலைஞன் எழுத வேண்டுமேயானால் விஞ்ஞான அணுகுமுறை இன்றியமையாது தேவைப்படுகிறது. குடிப்பழக்கம் ஒரு நோய் என்றும் அப் பழக்கத்திற்கு ஆளானோர் அதீத நிலையில் நடந்துகொள்வதற்குக் காரணம் அவர்கள் நரம்பு மண்டலத்தில் உருவாகும் வேதியற் சமன்பாடு இன்மையே (The Chemical imbalance in the nervous system) என்றும், குடிகாரர்களைப் பரிவுணர்ச்சியோடு மெல்ல மெல்லச் சிகிச்சை மூலமே மீட்க வேண்டும் என்றும் சிவசங்கரி கூறுகிறார். நோயாளிகளிடம் நடத்தப்படும் பல்வேறு பரிசோதனைகள், அதனால் அறியவரும் முடிபுகள், தரப்படும் சிகிச்சைகள், மருந்து வகைகள் முதலியன சிவசங்கரியின் நாவலில் மிக விரிவாகப் பேசப்படுகின்றன. வாசந்தியின் நாவலிலும் இந்த அளவுக்கு இல்லாவிட்டாலும் தேவையான அளவுக்கு விரித்துரைக்கப்படுகின்றன. (இந்த இடத்தில் அண்மையில் கலைமகள் இதழில் 111: 661 வெளிவந்த டாக்டர் ப. சந்திரசேகரன் என்பாரின் போதையில் மயங்கும் பேதைகள் என்னும் கட்டுரையை உங்கட்கு நினைவூட்ட விரும்புகிறேன். அக் கட்டுரையில் பல அரிய தகவல்கள் அடங்கியுள்ளன.

இந்திய சமூகத்தில் போதை மருந்துகட்கு இளைஞர்கள் அடிமையாகும் விபரீத நிலையைக் கண்டு கி. கஸ்தூரிரங்கனும் மனம் உளைகிறார். நம் நாட்டில் படித்தவர்களின் எண்ணிக்கை இப்போதுதான் சற்று உயரத் தொடங்கியுள்ளது. இந்த நிலையில் படித்தவர்களே போதைப் பொருளுக்குப் பலியாகும் நிலை வேகமான விகிதத்தில் வளருமானால் எதிர்கால இந்திய சமூகம் இரங்கத்தக்கதாகிவிடும். இப்

பிரச்சினையைத் தீவிர உணர்வுச் சுரணையோடு நாம் புரிந்துகொள்ளும் வகையில் கஸ்தூரிரங்கன் தம் நாவலைப் படைத்திருக்கிறார். இந்த நாவலில் வரும் தேவ் இளைஞர்களுக்கு ஓர் அபாய எச்சரிக்கை.

நீல பத்மநாபனின் படைப்பொன்றில் ("போதையில் கரைந்தவர்கள்") இரு பாத்திரங்கள் இடையே நடக்கும் உரையாடலை அப்படியே இங்கு மேற்கோளாகக் காட்டுவது ஓர் உண்மையை விளங்கிக் கொள்ள உதவும்.

> "தம்பி ... மது என்றால் விஷம், அதை உண்டுபண்ணலாகாது; அருந்தக் கூடாது பிறர்க்கும் கொடுக்கக் கூடாது; அப்ப. . . டீண்ணு ஸ்ரீ நாராயண குரு சொன்னதை ஜனங்க என்னிக்குப் புரிஞ்சிக்கிட்டு நடக்கிறாங்களோ அன்னிக்குத்தான் இந்தக் கொடுமையெல்லாம் நாட்டிலிருந்து விலகும்....."
>
> "குடியைத் தடுக்க முயலும் நீங்கள் குடிக்கிறவர்களின் பிரச்சினைகளை நெருங்கி அறிந்து அதற்குத் தீர்வு கண்டுபிடித்து உதவி, குடியிலிருந்து அவர்களைப் பின்வாங்கச் செய்யவும் முயலலாமே....இந்த ரீதியில் நீங்கள் ஏதாவது செய்கிறீர்களா?"

மேற்கண்ட உரையாடற் பகுதியை இரு பாத்திரங்களுக்கு இடையே நடக்கும் உரையாடலாகக் கொள்ளாமல் நம் முந்தைய தலைமுறை எழுத்தாளர்கட்கும் எண்பதுகள் கால எழுத்தாளர்கட்கும் இடையே நடக்கும் உரையாடலாகச் சற்றே கற்பனை செய்து பார்ப்பது நல்லது. ஆம் நம் பழைய எழுத்தாளர்கள் ஒழுக்கச் சீர்கேடு தவறு என்று போதித்தார்கள். எண்பதுகள் கால (நல்ல) எழுத்தாளர்கள் (சிலர்) ஒழுக்கக் குறைபாட்டிற்கு ஆளானவர்களை எப்படி மீட்பது என்பதுபற்றித் தீவிரமாகச் சிந்தித்து அந் நோக்கில் தம் படைப்புகளை அளிக்க முயல்கின்றனர்.

குடிப்பது ஒழுக்கக் குறைபாடாவது போலவே கற்புநெறியிலிருந்து வழுக்குவதையும் ஒழுக்கக் குறைபாடாக அறம் கருதுகிறது. கற்புப்பற்றிய சிந்தனைகளும் புதிய தமிழ் இலக்கிய உலகில் திரும்ப மறுபரிசீலனைக்கு ஆளாகியுள்ளன. நா. காமராசனின் இதோ ஒரு புதிய பாஞ்சாலி என்னும் புதுக்கவிதைப் படைப்பு (ஆப்பிள் கனவுகள்,1985) இங்கு எண்ணிப்பார்க்கத் தக்கது. இக் கதைக் கவிதையில் ஒரு இந்தியப் பெண் ஏழு பேரோடு கூடிவாழ்கிறாள். அவளை நோக்கி 'நீ என்ன புதிய பாஞ்சாலியா?" என்று சிலர் கேட்டபோது அவள் கூறுகிறாள்:

"கற்பிழக்கத் தினம்
ஏழுபேரைத் தேடுவதைவிட
ஏழுபேர் என் கற்பைக்
காப்பது மேலல்லவா?"

மக்கள்தொகைப் பெருக்கம், விலைவாசி உயர்வு, பொருளாதார நெருக்கடி முதலியன நிறைந்த இக்கால வாழ்வில், கவிஞர் கூறுவது போல, 'தர்ம நியாயங்கள் புதுமுகங்களோடு நம்மைத் திகைக்க வைப்பதை' நாம் காண்கிறோம். அறமும் ஒழுக்கமும் தம் பழைய முகத்தோடு வாழ முடியாத போது அதன் தலையை வெட்டி அந்த இடத்தில் புதிய முகத்தைப் பொருத்தும் கடப்பாடு தமக்கு இருப்பதாக நம் எழுத்தாளர்கள் எண்ணுகிறார்கள். தக்கனின் தலையை வெட்டி எறிந்து, ஆட்டின் தலையை அவனுக்குச் சிவபெருமான் பொருத்தியதாகப் புராணங்கள் கூறும்.

"ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி உந்தீபற" –திருவாசகம்

எண்பதுகள் கால எழுத்தாளர்கள் அறத்தையும் ஒழுக்கத்தையும் அழிக்க விரும்பவில்லை; அதற்கு மறுவடிவம் தந்து வாழ வைக்கவே ஆசைப்படுகின்றனர்.

III (ஈ)

அறம் வெல்ல வேண்டும் என்றும், பாவம் தோற்க வேண்டும் என்றும் நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் நடைமுறையில் நாடு காண்பது என்ன? பேய் அரசு செய்கிறது. சாத்திரங்கள் பிணம் தின்னுகின்றன; நீதியும் நேர்மையும் வாழ இடம் வேண்டி அகதிகளாய் அலைகின்றன: இதுவே இன்றைய கண்கூடான நிலை.

அண்டை நாடான இலங்கையில் ஒவ்வொரு நாளும் நடக்கும் இனப்படுகொலையை உலகமும் நாமும் பார்த்துக்கொண்டுதானே வாழ்கிறோம்? நம் சமரச முயற்சிகள் வெற்றிக்கனியை இன்னும் ஏன் தரவில்லை? உலக நாடுகள் அனைத்தும் இக் கொடுமையைக் கண்ணாரக் கண்டும் வாளா நிற்பது ஏன்? இவையெல்லாம் நம் சிந்தனையைக் கிளறும் வினாக்கள். இலங்கையின் இன்றைய யதார்த்த நிலையைச் செ. யோகநாதன் நியாயப்படுத்தப்பட்ட கொலைகள் (1985) என்னும் தம் நாவலில் அறச் சீற்றத்தோடு சித்திரிக்கிறார். இக் கதையில்

வரும் அருளம்பலம் தனக்கு இழைக்கப்பட்ட கொடுமைகட்கு நீதிமன்றம் தீர்வு காணவேண்டும் என்று கோருகிறான். காவல்நிலையத்தில் முறையீடு செய்வதற்கே நாடாளுமன்ற உறுப்பினரின் துணை தேவைப்படும் நிலையில், உச்ச நீதிமன்றம் எதையோ ஒன்றைக் காரணமாகக் காட்டி அவன் கொடுத்த வழக்கைத் தள்ளுபடி செய்வதில் வியப்பென்ன இருக்க முடியும்? சு. சமுத்திரம் தம் சத்திய ஆவேசம்(1985) என்னும் நாவலில் இன்றைய சமுதாயத்தில் நீதியும் நேர்மையும் கேலிக்கு ஆளாகும் அவலநிலையை எடுத்துக் காட்டுகிறார். ஒரு கல்லூரி முதல்வருக்கு எதிராகக் கல்லூரி நிர்வாகம் இழைக்கும் பல்வேறு கொடுமைகளே இந்த நாவலில் பேசப்படும் செய்தி. பிரச்சினைக்கு ஆளான கல்லூரி முதல்வர் நியாயம் வேண்டிப் போராடுகிறார். சிறு பொறியாக வெடித்த ஒரு பிரச்சினை அரசாங்கமே கண்டு மிரளுகிற அளவுக்குப் பெருந்தீயாகப் பற்றி எரிகிறது. வேறு வழியின்றி அரசாங்கம் நீதி விசாரணைக்கு உத்தரவிடுகிறது. நாவல் முற்றுப்பெறும் நிலையில் இருவர்க்கிடையே நடக்கும் உரையாடல் இது.

> "இதெல்லாம் நாடகம். அந்தப் பசங்க இன்னும் கைதாகலே.... அப்படியே கைதானாலும் அடுத்த நிமிஷத்துலே ஜாமீன்லே வந்துடப் போறாங்க. அப்புறம் ஆறுன சோறு பழைய சோறு கதைதான். நீதி விசாரணை என்கிறது கஞ்சியிலும் பழைய கஞ்சி."

> "நீங்க சொல்றது இப்போதைக்குச் சரி .... இந்தச் சமூக அமைப்புலே நீதிமன்றங்கள் தர்மசபைகளாக முடியாது .... அவங்க ஜாமீன்லே வந்தால் வரட்டும். இத்தனை போக்கிரித்தனங்களுக்கும் காரணமான இந்தச் சமூக அமைப்பே ஜாமீன்லேதானே இருக்குது."

இன்றைய சமுதாய அமைப்பு அடியோடு மாற்றப்படாதவரை நீதி என்னும் சொல்லே கேலிக்குரியது என்னும் யதார்த்த உண்மையை நம் எழுத்தாளர்கள் நன்றாகவே சித்திரித்துள்ளனர். "நீதியின்பொருட்டுத் துன்பப்படுகிறவர்கள் நற்பேறு பெற்றவர்கள்; விண்ணரசு அவர்களுக்கு உரியது" (மத்தேயு, 5:10) என்னும் பழைய உபதேசத்தை அவர்கள் திருப்பிச் சொல்லத் தயாராக இல்லை.

"வாய்மையே வெல்லும்" என்பது நமது அரசு இலச்சினையில் பொறிக்கப்பட்டிருக்கும் வாசகங்கள். வாய்மை வெல்ல வேண்டும் என்பதே அறவோர் விழைவு. ஆனால் வெல்கிறதா? சுஜாதா தம் நாவல் ஒன்றில் இதற்கு விடை தருகிறார். நாவலின் தலைப்பு என்ன தெரியுமா?

வாய்மையே சில சமயம் வெல்லும் (1984). கொடுமை இழைக்கப்பட்ட ஒருத்திக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்று ஒருவன் போராடுகிறான். ஆனால் கொடுமைக்கு ஆளான அவளே, தனக்காகப் போராட முன்வந்தவனை மிக அலட்சியமாக ஒதுக்கிவிட்டு, தனக்குக் கொடுமை செய்தவனையே நியாயவானாக ஏற்றுக்கொள்கிறாள். வாய்மையைப் போற்றும் வாழ்வு எள்ளி நகைத்தற்குரியதாக ஆகிவிடுகிறது. எவ்வளவு பெரிய சமுதாய முரண் இது!

கொடுமைக்கு ஆளானோர் பழிவாங்க எண்ணுவதே மனித இயல்பு. பழிவாங்கும் மனோபாவம் கொண்ட ஒரு பெண்ணை மையமாகக் கொண்டு புனையப்பட்ட ஓர் அழகான நாவல் பாலகுமாரனின் **கரையோர முதலைகள்**. தன்னைச் சிறுமைக்கு ஆளாக்கிய சுந்தரமூர்த்தி என்பானை ஸ்வப்னா ஓட ஓட விரட்டுகிறாள். "உன்னை வெட்டினாத்தான் என் ஆத்திரம் அடங்கும்" என்று உள்ளூர வஞ்சினம் உரைக்கிறாள். பழிவாங்குவதே சரி என்னும் கருத்தை வற்புறுத்தவே பாலகுமாரன் இந் நாவலைப் படைத்தாரோ என்னும் ஐயம் படிப்போர்க்கு உண்டாகிறது. நாவலின் முடிவில் பத்மஜா என்னும் பாத்திரம் வாயிலாக இந்த ஐயத்தை அகற்றி "ஏமாற்றுவது அயோக்கியத்தனம் என்றால் ஏமாற இடம் கொடுப்பதும் அது போன்றதே. நம் பலவீனமே நம்மைப் பிறர் ஏமாற்ற இடம் தருகிறது. எனவே பிறர் ஏமாற்றிவிடாத அளவுக்கு நம்மைப் பலப்படுத்திக் கொள்வதே வாழும் நெறி" என்னும் கருத்தை (இயல்.28) நம் முன் ஆசிரியர் வைக்கிறார். பாலகுமாரன் நமக்குக் காட்டும் ஒழுக்கநெறி – வாழ்க்கை நெறி இதுவே.

எண்பதுகளில் எழுந்துள்ள தமிழ் இலக்கியப் படைப்புகள் அறம், ஒழுக்கம், நீதி என்பனவற்றை மாறிவரும் புதிய சூழலுக்கு ஏற்ப வலியுறுத்துகின்றன என்பதில் ஐயமில்லை. ஆனால் அவற்றின் சிற்சில கூறுகளை மறுமதிப்பீடு செய்யுமாறும் நம்மை நிர்ப்பந்தப்படுத்துகின்றன. ஏனெனில் நாம் வாழும் காலம் அத்தகையது. இந்த இந்திய இளைய பாரதியின் சில கவிதை வரிகள் ("சூரியனைப் பார்க்காத சூரிய காந்திகள்" 1985) என் நினைவுக்கு வருகின்றன.

"போதி மரங்களில் ஞானம் பிறந்தது
போய்விட்ட காலமடா – இது
போராட்டக் களங்களில் வாழ்க்கை பூக்கின்ற
பூகம்ப காலமடா – இது
பூகம்ப காலமடா!"

கால மாற்றத்தை உணர்த்தி மறுமதிப்பீடு செய்யுமாறு வேண்டுவதுகூட அறிவியல் பார்வை உடையோராலேயே செய்ய முடியும். நம் நடைமுறை வாழ்க்கைக்கு இலக்கியக் கல்வி பயன்பட வேண்டுமானால் இதுபோன்ற கோணங்களில் அணுகுவதும், ஆராய்வதுமே நாம் செய்யத்தக்கன ஆகும்.

நூல்கள்

1. வாஸந்தி, மயக்கங்களும் சிலந்திக் கூடுகளும், சென்னை, வானதி பதிப்பகம், 1980
2. சிவசங்கரி, ஒரு மனிதனின் கதை, சென்னை, ஆனந்த விகடன், 1981
3. சுஜாதா, காகிதச் சங்கிலிகள், சென்னை, சாவி வெளியீடு, 1982
4. கி. கஸ்தூரிரங்கன், ஏஞ்சல் டஸ்ட், சென்னை, நர்மதா பதிப்பகம், 1983
5. சுஜாதா, வாய்மையே சில சமயம் வெல்லும், கோவை, விஜயா பதிப்பகம். 1984
6. சு. சமுத்திரம், சத்திய ஆவேசம், சிதம்பரம், மணிவாசகர் பதிப்பகம், 1985
7. பாலகுமரான், கரையோர முதலைகள், சென்னை, வானதி பதிப்பகம், 1985
8. சிவசங்கரி, கருணைக்கொலை, சென்னை, வானதி பதிப்பகம், 1985

குறுநாவல் தொகுப்புகள்

9. நீலபத்மநாபன், போதையில் கரைந்தவர்கள், சென்னை, நர்மதா, 1985
10. செ. யோகநாதன், சுந்தரியின் முகங்கள், சென்னை, நர்மதா, 1985

சிறுகதைத் தொகுப்புகள்

11. இலக்கியச் சிந்தனை விடிவதற்குள் (1984 ஆம் ஆண்டின் பன்னிரண்டு சிறந்த சிறுகதைகள்), சென்னை, வானதி பதிப்பகம், 1983

12. மு. மேத்தா, அவர்கள் வருகிறார்கள், சிவகங்கை, அகரம், 1980

13. குலோத்துங்கன், விண் சமைப்போர் வருக, சென்னை, பாரதி பதிப்பகம், 1984

14. இளையபாரதி, சூரியனைப் பார்க்காத சூரியகாந்திகள், சென்னை, காவிரி பதிப்பகம், 1985

15. நா. காமராசன், ஆப்பிள் கனவுகள், சென்னை, பாரதிபதிப்பகம், 1984

5

மலேசியத் தமிழ்ச் சிறுவர் இலக்கியம்

இலக்குமி மீனாட்சிசுந்தரம்

முன்னுரை

குழந்தைப் பாடல் உலகெங்கணும் உண்டு. இச் செய்தியைக் கலைக்களஞ்சியம், "உயர்ந்த இலக்கியம் இல்லாத மொழிகளிலும், எழுத்து வடிவமே காணாத மொழிகளிலும் குழந்தைப் பாடல்கள் உண்டு"[1] எனக் கூறுகின்றது. ஆகவே, மொழிவளம் மிக்க தமிழிலும் சிறுவர் பாடல்கள் உள என்ற முடிவுக்கு வர இயலுகின்றது. பழங்காலத்தே இருந்த பாடல்கள் தொகுப்பாக நமக்குக் கிட்டவில்லை என்ற காரணத்துக்காகச் சிறுவர் பாடல்களே இல்லை எனக் கூறுவது பொருத்தமற்றது. ஏட்டில் எழுதா இலக்கியமாக, மக்கள் நாவில் நடமிடும் இலக்கியமாக வளர்ந்து வந்திருக்க வேண்டும் எனக் கொள்ளுதலே பொருந்தும். "குழந்தை இலக்கியத்தில் பழமையானது நாடோடி இலக்கியமே; நாடோடிப் பாடல்களும், கதைகளும் இவ் வுண்மையை உணர்த்துகின்றன"[2] என்ற பூவண்ணனின் கருத்து ஏற்புடையது.

சிறுவர் இலக்கியத் தொன்மை

எழுத்துகளுக்கு அகரம் முதலாவதாகக் கருதப்படுவது போன்று எடுத்துக்காட்டுகளை விளக்க உதவும் முதல் நூலாகத் தொல்காப்பியம் திகழ்கின்றது. சிறுவர் இலக்கியச் சிந்தனையை ஒல்காப் புலமைத் தொல்காப்பியரும்,

"ஒப்பொடு புணர்ந்த உவமத் தானும்
தோன்றுவது கிளர்ந்த துணிவி னானும்
என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே"[3]

எனக் குறிப்பர். இவண் 'பிசி' என்பது இன்று நாம் கூறும் விடுகதைகள் அல்லது புதிர்க்கதைகளையே குறிக்கிறது. தொல்காப்பிய உரை யாசிரியர்களுள் ஒருவரான பேராசிரியர்,

"மற்றும் என்றதனால் அவையன்றி வருகின்ற பிசியும் செவிலியர்க்கு உரித்தென்பது கொள்க" [4]

என்றும்,

"வகைநிலை என்ற மிகையான் இவையும் செவிலிக்கு உரித்தென்பது கொள்க" [5]

என்றும் உரை எழுதினார்.

'பிறை கவ்வி மலை நடக்கும்' என இவர் காட்டும் எடுத்துக்காட்டு விடுகதை என்றே சொல்லத் தோன்றுகிறது. இச் சான்று யானையைச் சுட்டுகிறது. 'பொருள்மர பில்லாப் பொய்மொழியும்' செவிலிக்கு உரியதாகக் கூறப்படுகின்றது. இதற்குப் பேராசிரியர் யானையும் குருவியும்பற்றிய கதைகளைக் காட்டியுள்ளார். செவிலியர் குழந்தையை வளர்ப்பவர்கள். ஆகவேதான் குழந்தை இலக்கிய வகைகளான பிசியும், கதையும்பற்றித் தொல்காப்பியத்தில் கூறப்பட்டிருப்பதாய்க் கொள்ளலாம்.

'குழவி மருங்கினும் கிழவ தாகும்'[6] என்ற தொல்காப்பியப் புறத்திணை இயல் நூற்பா சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான பிள்ளைத்தமிழைக் குறிக்கிறது. அழ. வள்ளியப்பாவின் குழந்தை இலக்கியப் பணியைப்பற்றி ஆய்வு மேற்கொண்ட கதி. கணேசன், பிள்ளைத்தமிழ்ப் பாடல்கள் குழந்தைப் பாடல்களா என்ற வினாவை எழுப்பியுள்ளார்.[7] பிள்ளைத்தமிழ்ப் பாடல்கள் குழந்தைப் பாடல்கள் ஆகா. ஆயின் பிள்ளைத்தமிழோ தலைவனையோ, கடவுளையோ குழந்தையாக உருவகித்துப் பாடுவது. கற்றோர் காமுறும் கற்பனையும், கருத்துச் செறிவும் பிள்ளைத்தமிழில் உண்டே தவிரக் குழந்தைகட்குப் புரியும் எளிமை இல்லை. எனவே, பிள்ளைத்தமிழ் வேறு; குழந்தைப் பாடல்கள் வேறு எனத் துணியலாம்.

சங்கப்பாடல்களில் குழந்தையின்பம், மழலையின்பம் பற்றிய பாடல்கள் உள. ஆயின் இவை குழந்தைப் பாடல்கள் அல்ல. திருவள்ளுவரும் குழலினும் யாழினும் இனிய குழந்தையின் மழலையைப் போற்றுகையில், 'சொற்கேட்டல்' எனப் பாடுவார். சொற்கேட்டல் என்பதனால் குழந்தைகளைப் பேசவோ. பாடவோ சொல்லி அவர்களின் மழலைமொழியை விரும்புவர் என்ற குறிப்பைப் பெறலாம்.

முதற் குழந்தை இலக்கியம்

தமிழில் சிறுவர் இலக்கியத்தை முதலில் படைத்தவர் ஔவையார் என்கிறார் பூவண்ணன்.[8] குழந்தை இலக்கியத்துக்கு உரிய எளிமை, இனிமை, சிறிய தொடர்கள், சிறந்த கருத்துகள் ஔவையார் பாடல்களிலே உள்ளன. ஆனால் அவர் குழந்தைகளை மனத்தில் நிறுத்திப் பாடியிருப்பாரா என்ற ஐயத்தை எழுப்புகிறார் அழ. வள்ளியப்பா.[9] அறிஞர் மு. வரதராசனாரின் கருத்தினைக் காட்டித் தம் கருத்தை நிறுவுகிறார் வள்ளியப்பா. ஔவையின் ஆத்திசூடியையும், பாரதியின் ஆத்தி சூடியையும் ஒப்பிடும் மு.வ.,

> "ஔவையின் பாடல்களில் குழந்தையின் அறிவுக்கெட்டாத ஆழ்ந்த கருத்துகள் உள்ளன. சிறுசிறு சொற்களால், சிறு தொடர்களால் அமைந்தமைபற்றிச் சிறுவர்களின் இலக்கியம் என்று சொல்லிவிட முடியாது. அவற்றின் வடிவம் மட்டுமே குழந்தை இலக்கியத்துக்கு உரியது. பொருள் குழந்தை மனத்துக்கு எட்டாதது"[10]

என்கிறார்.

ஔவையின் நூல்களில் உள்ள சில சொற்கள் குழந்தைகளுக்குப் பொருள் விளங்காதவை என்பது உண்மை. ஆயினும் குழந்தைப் பாடல்கள் இவ்வாறு அமைந்து இருக்கவேண்டும் என முதன்முதலில் கருத்துரைத் தவர் ஔவையாரே. சிறுவர் இலக்கியச் சிந்தனைக்கு வித்திட்ட சீர்மை ஔவைக்கே உரியது.

பெரும்பாலோர் பாரதியே முதன்முதலில் குழந்தைப் பாடல்களைப் பாடினார் என்றும், பாரதி காட்டிய பாதையைக் கவிமணி பின்பற்றினார் என்றும் கூறுவர்.[11]

ஆயின் உண்மை அதுவன்று. கவிமணி 1901–ல் முதலில் குழந்தைப் பாடலை எழுதினார். இவருக்குப் பிறகு பாரதி 1908–ல் பாப்பாப்

பாட்டுப் பாடினார். பாரதியின் மகள் சகுந்தலா பாரதி 1908–ல் பிறந்தாள்.[12] 1908–ல் பாப்பாப் பாட்டுப் பிறந்து, 1914–ல் ஞானபானு என்ற இதழில் வெளிவந்தது. எனவே, தமிழில் குழந்தை இலக்கிய முயற்சிக்குக் கால்கோள் செய்த பெருமை கவிமணியைச் சாரும். எனவே, 'கவிமணி காட்டிய வழிக் குழந்தைக் கவிதை மலர வழி' எனக் கூறலாம்.

கவிமணியின் வழியிலே பாரதி, பாரதிதாசன் போன்றோர் குழந்தை இலக்கியம் படைத்தனர். இக் கவிஞர் மூவரும் பெரியவர்களுக்குக் கவிதை பாடியிருப்பதுடன் சிறுவர்கட்கும் சேர்த்தே பாடல்கள் பாடினர். ஆயின், அழ.வள்ளியப்பா குழந்தை இலக்கியத்துறை என ஒரு துறையையே போற்றி 'மலரும் உள்ளம்' கொடுத்தவர். கவிதையாலும், செயலாலும் வழிகாட்டியாகத் திகழும் வள்ளியப்பாவைத் தொடர்ந்து பாப்பாவின் பாவலர்கள் தமிழகத்தில் பெருகி வருகிறார்கள்.

குழந்தை இலக்கியத்தின் இன்றியமையாமை

"ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார்"

இன்றைய குழந்தைகள்தாம் நாட்டின் நாளைய தலைவர்கள். விளையும் பயிர் முளையிலே நன்கு வளரச் சீரிய சிந்தனை விதைகளை விதைத்து, உவகைநீர் பாய்ச்சி, ஊக்க உரமிட்டுச் சிறுவர்களை நன்கு வளர்க்க வேண்டும். சிறுவர்கள் சீரிய முறையில் வளர இலக்கிய நல்லுணவு இன்றியமையாதது. குழந்தைகள் வெவ்வேறு உணவுவகைகளை விரும்புவது போலச் சிறுவர் இலக்கியமும் கவிதைகள், நெடுங்கதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், விடுகதைகள் எனப் பல்வேறு சுவையுடன் சிந்தனை உணவு வழங்குகின்றது.

மலேசியாவில் சிறுவர் இலக்கிய வளர்ச்சி

தமிழகத்திற்கும் மலேசியாவிற்கும் உள்ள தொடர்பு வரலாற்றுத் தொன்மை மிக்கது. ஆங்கிலக் காலனித்துவ ஆதிக்கத்தில் சஞ்சிக் கூலிகளாகத் தமிழகத்திலிருந்து தமிழர்கள் அழைத்துவரப்பட்டனர். இவர்களின் முயற்சியாலும், தமிழகத்திலே கல்வி கற்றுப் பிற காரணங்களுக்காக மலேசியா வந்த தமிழர்களின் முயற்சியாலும், தமிழ்

இலக்கிய வடிவம் 1887–ல் தொடங்கியது. ஆயின், மலேசிய இலக்கியப் பரம்பரை 1946–க்குப் பின்னர்தான் தொடங்குகிறது. மலேசிய மண்ணில் பிறந்து, கல்வி கற்று, இம் மண்ணின் உருவையும், திருவையும் இலக்கியமாய் வடித்தனர் பலர். இலக்கிய ஏடுகளுக்குத் தமிழகத்தினையே எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிலை மாறலாயிற்று.

மலேசியாவில் இலக்கிய ஏடுகள் வெளிவரத் தொடங்கின. கா. இராமநாதன், 'சோலை' இலக்கிய ஏட்டின் ஆசிரியராகி மலேசிய இலக்கியச் சோலையை மணங்கமழச் செய்தார். 'மலேசியாவில் தமிழ் இலக்கியம்' என்ற தலைப்பில் சில கருத்துகள் சோலையில் முகிழ்த்தன. மலேசியாவில் சிறுவர் இலக்கியச் சிந்தனைக்கு வழிகாட்டிய சோலை,

> "சிறுவர்கட்கு ஊட்டும் இலக்கிய இன்பம் மிகவும் எளிதான தன்மையுடன் இன்பமாகப் புகுத்தப்பட வேண்டும். இதற்கு ஆரம்பப் பாடசாலைகளே தகுந்தவை. அங்குள்ள ஆசிரியர்கள் நல்ல முறைப்படி பயின்ற தமிழ் மன்னர்களாக இருக்க வேண்டும்"

என்கிறது.

தமிழ் முரசின் பங்கு

சிறுவர்கட்குத் தமிழார்வம் வளரச் சோலை சொன்ன பரிந்துரையை, அதன் தேவையை நன்குணர்ந்த 'தமிழ் முரசு' என்ற நாளிதழின் ஆசிரியர் கோ.சாரங்கபாணி மாணவமணிகளுக்காகத் 'தமிழ் முரசு மாணவர் மணிமன்ற மலர்' என்ற இலவச இதழை 6.7.1953–ல் வெளியிட்டார். எவ்வித நற்செயலும் தொடக்க காலத்தில் எதிர்பார்த்த வரவேற்பைப் பெறுவதில்லை அல்லவா? அதுபோன்றே மணிமலரும் ஆரம்ப காலத்தில் மாணவர்களைக் கவரவில்லை. சிறிது காலங்கழித்தே மாணவர்களின் கைவண்ணங்கள் மணிமன்ற மலரை ஒளிரச் செய்தன. ஓர் எழுத்தாளர் பரம்பரையையே மணிமன்ற மலர் தோற்றுவித்தது. மணிமன்றப் பயிற்சிக்களம் பலரைப் புடம்போட்ட பொன்போல ஒளிரச்செய்தது. மலேசியாவில் சிறுவர் இலக்கியப் பயிர் சிறந்து வளரச் சிறந்த இலக்கிய வயலாக மாணவர் மணிமன்றம் விளங்கியது என்றால் மிகையில்லை.

நாளிதழ்களின் நற்பணி

தமிழ் முரசின் மணியோசை தமிழ் நேசனையும், தமிழ் மலரையும் தட்டியெழுப்பிச் சிறுவர் இலக்கிய விழிப்புணர்வை ஊட்ட வழிகாட்டியது. தமிழ் நேசன் 1963–ல் 'சிறுவர் அரங்கம்' என்ற இலவச இதழை வெளியிட்டது. சிங்கையிலிருந்து வெளிவந்த 'தமிழ் மலர்' சிறுவர் பேரவை' என்ற இலவச இதழை வெளியிட்டது. பிறகு 1965–ல் 'மலைநாடு' என்ற நாளிதழ் சிறுவர்க்கென நான்கு பக்கங்களை வெளியிட்டுச் சிறுவர் இலக்கிய இதழாகத் திகழ்ந்தது. இதன் காரணமாகத் தமிழ் நேசன், தமிழ் ஓசை, தினமணி ஆகியவை திங்கட்கிழமை வெளிவரும் இதழைச் சிறப்பிதழாக வெளியிட்டு வருகின்றன. நாளிதழ்களின் ஞாயிறுமலர் என்ற பகுதி எவ்வாறு மலேசிய இலக்கிய வளர்ச்சிக்குத் தூண்டு கோலாயிற்றோ அதுபோலத் திங்கட்கிழமையின் சிறுவர் சிறப்பிதழ்களும், சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்குத் தூண்டுகோலாயின.

திங்கள் இதழ்களின் திறமான பணி

நாளிதழ்களில் சிறுவர் இலக்கிய வளர்ச்சி கண்டு அத் துறையிலே நாட்டம் காட்டித் திங்கள் இதழ்களும் சிறுவர் இலக்கிய முயற்சிகளுக்கு இடம் ஒதுக்கி வெளியிட்டன. இலவச அரசு வெளியீடுகளான ஜனோபகாரி, வெற்றி, வளர்ச்சி போன்றனவும் ஊக்கம் அளித்து வெளியிட்டன. அரசு வெளியீடான உதயமும் சிறுவர் இலக்கியப் பயிருக்கு உரமூட்டி வருகிறது. இவைதவிரப் பொன்னி, மலைமகள், முத்தமிழ், அரும்பு என்ற திங்கள் இதழ்களிலும் சிறுவர் பகுதிகள் இடம்பெற்றன.

சிறுவர் இதழ்களின் சீரிய பணி

தமிழகத்தில் பாலதீபிகை, பாலியர்நேசன் போன்ற குழந்தைப் பத்திரிகைகளைக் கிறித்தவப் பிரச்சார சபையினர் முதன்முதலில் தமிழில் வெளியிட்டனர். பின்னர்த் தமிழகத்தில் குழந்தைப் பத்திரிகை உலகில் ஒரு திருப்புமுனையாகப் பாப்பா மலர் திகழ்ந்தது. பாலர் மலர், அணில், கண்ணன், சங்கு, அம்புலிமாமா போன்ற பல சிறுவர் இலக்கிய இதழ்கள் வெளிவந்தன. தமிழகத்தின் ஈடுபாடு மலேசியச் சிறுவர் இலக்கியத்திலும் நிகழ்ந்தது.

1956–ல் 'மாணவர் பூங்கா' என்ற தனி இதழ் சிறுவர்க்கென வெளிவந்தது. இவ் விதழ் வெளிவர இதன் ஆசிரியரான மு. அப்துல் லத்தீப் அவர்களின் பெருமுயற்சியே காரணமாய் அமைந்தது. இவ் விதழ்

தோன்றிய வேகத்தில் மறைந்தும்விட்டது. பிறகு 1961–ல் 'மாணவன்' என்ற இதழ் பசீரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. 1965–ல் 'மாணவர் உலகம்' என்ற பத்திரிகையை ஜானகி வெங்கடேசன் தொடங்கி, கு. ஏழுமலை 'அன்னை' என்ற பெயரில் 1963–ல் வெளியிட்டார். மலேசியச் சிறுவர் இந்த 'அன்னை'யை விரைவில் இழந்துவிட்டனர். 1969–லிருந்து 'திருமகள்' தொடர்ந்து இலக்கியச் செல்வத்தை வாரி வழங்கி வருகிறது.

மலேசியாவைப் பொறுத்தவரை இலக்கிய வானில் சிலகாலத்திற்கே ஒளிரும் விண்மீன்களாகச் சிறுவர் இதழ்கள் திகழ்ந்து சிறுவர்களுக்கு ஒளிக்கருத்துகளை வழங்கிப் பின்னர் மறைந்துவிடுகின்றன. இது சிறுவர் இலக்கியத் துறைக்குமட்டும் உள்ள குறையன்று. பொதுவாக மலேசியப் பத்திரிகை உலகில் உள்ள குறையுமாகும். மக்களின் ஆதரவின்மையாலும், போதிய விற்பனை இன்மையாலும் எத்துணையோ இதழ்கள் இடையிடையே தம் இலக்கியச் சுற்றுலாவை முடித்துக்கொண்டன.

பொதுவாக நாளிதழ்களிலே இடம்பெறும் சிறுவர் பகுதிகளாயினும், சிறுவர்க்கெனத் தனியே தோன்றிய இதழ்களாயினும் சிறுவர்க்காகப் பெரியவர்கள் படைக்கும் கைவண்ணங்களையும், சிறுவர்களின் சிந்தனை வண்ணங்களையும் வெளியிட்டுச் சிறப்புச் செய்கின்றன. சிறுவர் களிடையே மொழிபற்றிய விழிப்புணர்வையும், இலக்கியப் படைப் பாற்றலையும் வளர்க்கும் வண்ணம் இவை அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்க செய்தி. கவிதை, கட்டுரை, நெடுங்கதை, சிறுகதை, விடுகதை போன்ற பல வடிகால்கள் வழியே சிறுவர் இலக்கியச் சிந்தனைகள் பெருக்கெடுத்து ஓடுகின்றன.

வானொலியின் வளர்ச்சிப் பணி

தமிழகத்தே வானொலி நிலையங்கள் படைப்பிலக்கியங்களை வளர்த்து வருவது, யாவரும் அறிந்த ஒன்று. சிறுவர்க்கெனத் தனி நிகழ்ச்சிகள், 'பிள்ளைக்கனியமுது' போன்ற பெயர்களில் ஒலிபரப்பப் படுகின்றன. இவை தவிரக் கல்வி ஒலிபரப்புகளும் சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு உதவுகின்றன. அதுபோல மலேசியாவிலும் 1966–ல் கல்வி ஒலிபரப்பு இடம்பெற்றது. இக் கல்வி ஒலிபரப்பில் ஒலிபரப்பப்படும் கவிதை, கதை, கட்டுரை, கதைகளை அச்சிட்டு அனைத்துப் பள்ளிகட்கும் அனுப்பிவருகின்றது. இது போற்றத்தக்க நிகழ்ச்சியாகும்.

கல்வி ஒலிபரப்பில் சிறுவர் மொழியறிவை வளர்க்கும் வண்ணம் கவிதை, கதைகள் ஒலிபரப்பப்படுகின்றன; தமிழகக் குழந்தை எழுத்தாளர்களின் படைப்புகளும் ஒலியேறுகின்றன. முரசு. நெடுமாறன், சி.வேலுசுவாமி, ந. மகேசுவரி, இரா.தண்டாயுதம் போன்றோர் கல்வி ஒலிபரப்புக்குத் தங்கள் கைவண்ணங்களை அளித்துத் தொண்டாற்றியது குறிப்பிடவேண்டிய செய்தியாகும். எடுத்துக்காட்டாக 1981–ல் இரண்டாம் வகுப்புக்கான தமிழ்ப்பாடப் புத்தகத்தில் உள்ள 'ஏமாந்த ஆடுகள்' என்ற பாடலைக் கூறலாம்.

"அன்பு மிக்க ஆடுகளே
ஆவ லோடு வந்திடுவீர்
இனிய புல்லும் தழைகளுமே
ஈடில் லாத நீர்நிலையும்
உங்க ளுக்குக் காட்டிடுவேன்
ஊக்கத் தோடு வந்திடுவீர்
எ ன்றும் நீங்கள் மகிழ்ந்திடலாம்
ஏற்றத் தோடு வாழ்ந்திடலாம்
ஐயங் கொள்ள வேண்டாவே
ஒன்று சேர்ந்தே எல்லாரும்
ஓடி என்னுடன் வாருங்கள்
ஔவியம் இல்லை நம்பிடுவீர்"

(ரேடியோ மலேசியா மலர், 1981)

கல்வி ஒலிபரப்பே அன்றிச் சிறுவர்க்கென வானொலி நிகழ்ச்சியும் சனிக்கிழமைதோறும் முப்பது நிமிடத்திற்கு ஒலிபரப்பப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் சிறுவர்களின் திறமைகளை வெளிக்கொணர வாய்ப்பும் வழங்கப்படுகிறது. தற்போது மலாயாப் பல்கலைக்கழகத்தில் சூழியல் இணைப் பேராசிரியராக உள்ள முனைவர் வி. எம். பழனியப்பன் 'பழனிமாமா' என்ற பெயரில் 1962 முதல் வாரம் ஒருமுறை என்ற கணக்கில், ஏறத்தாழ ஆயிரத்து முந்நூறு கதைகள் கூறியுள்ளதை மலேசியத் தமிழர்கள் ஒருபோதும் மறக்க முடியாது. தமிழகத்துச் சிறுவர் நெஞ்சங்களில் 'வானொலி அண்ணாவும், வானொலி மாமாவும்' ஏற்படுத்திய ஈடுபாட்டை மலேசியாவில் 'பழனிமாமா' ஏற்படுத்தி உள்ளார்

என்றால் அது மிகையாகாது. மலேசியச் சிறுவர் மனங்களில் நீங்கா நினைவாக நிலைத்து நிற்கும் பழனிமாமா 'சிறுவர் மலர்' என்ற வானொலி நிகழ்ச்சிக்குப் பொறுப்பாளராகத் திகழ்ந்து சிறுவர் இலக்கியம் வளரத் திறமான தொண்டாற்றினார்.

தொலைக்காட்சியில் சிறுவர் இலக்கியப் பணி

தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகள் இடம்பெறுவதே அரிதாக உள்ள சூழ்நிலையில், தொலைக்காட்சியும் சிறுவர் இலக்கியம் வளர வழிவகுக்க வேண்டும் என்பது செல்ல விரும்பாத ஊருக்கு வழிகாட்டுவது போலாம். தொலைக்காட்சி நிலையத்தார் தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பத் தரும் வாய்ப்பில் மலேசிய மக்களின் திரைப்பட மோகத்தைக் குறைத்துச் சிறுவர் நிகழ்ச்சிகளை வாரம் ஒரு முறை முப்பது நிமிட நேரமாவது ஒளியேற்றலாம். இதனால் தத்தித் தவழ்ந்து தளர்நடையிடும் சிறுவர் இலக்கியங்கள் வளர வாய்ப்பு உண்டு. குழந்தைகளின் மொழிப்பற்று, மொழித்திறன், கலைப்பற்று, கலைத்திறன் ஆகியவை வளரும்.

மலேசியவில் சிறுவர் இலக்கிய வகைகள்

கவிதைகள்

மலேசியாவில் குழந்தைப் பாவலர்கள் பெருகி வருகின்றனர். இவர்களுள் முதன்மையானவர் சோமசன்மா. இவரின் இயற்பெயர் மா. சி. அண்ணாமலை; "கவிச்சுடர்", "மலேசியக் கவியரசு" என்ற சிறப்புப் பட்டங்கள் பெற்றவர். இவருடைய பாடல்கள் நூல்வடிவு பெறாமை மலேசியத் தமிழிலக்கியத்திற்கு ஒரு குறையாகவே காட் சி அளிக்கிறது. நற்கருத்துகளைக் கொண்ட இவர் பாடல்கள் மொழிப்பற்றை ஊட்டுகின்றன. இதில் எவ்வித ஐயமுமில்லை.

"தாய்மொழியில் பற்றுக்கொண்டு நடநட தம்பி
தாய்மொழியை மறக்க வேண்டா நடநட"

இப் பாடல் சற்றுப் புதுமையானதுங்கூட!

பெரும்பாலும் மலேசியக் குழந்தைப் பாவலர்கள் அனைவரும் (ஒருவர் தவிர) தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களாக இருப்பது குறிப்பிடத்தக்க ஒன்று. முரசு. நெடுமாறன், சி.வேலுசுவாமி, கவிஞர் பரிதி, பொன்முடி என்ற கெ.சுப்பிரமணியன், மதிதாசன், மா.இராமகிருஷ்ணன், லாபீஸ் மாயவன், எம்.பகதூர், கலியபெருமாள், சு.கிருஷ்ணன், ஜோசப் செல்வம்,

ந.சிவராமன், ஆ.சின்னத்தம்பி, சி.காவேரிநாதன், தங்கா தமிழ்ப்பாணன், கோவி.தியாகராசன் எனக் குழந்தைப் பாவலர்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களாகப் பணியாற்று வதனால் இப் பாவலர்கள் குழந்தைகளின் உள்ளங்களைப் புரிந்து கொண்டு, பாடல்களைக் குழந்தைகளின் விழைவிற்கேற்பப் பாட இயலுகிறது.

பெரியவர்களுக்காக எழுதும் கவிஞர்களான கா. பெருமாள், தமிழ்க்குயில் கலியபெருமாள் போன்றோரும் கவிதைகளைச் சிறுவர்க்காகப் பாடியது உண்டு. மேற்குறிப்பிட்ட குழந்தைப் பாவலர்களுள் எம். பகதூர் பிறப்பால் நேப்பாளி இனத்தவர்; ஆயினும் காந்தத் திறன்கொண்ட தமிழால் கவரப்பட்டுத் தமிழைக் கற்றவர்; தமிழர்கள் தமிழில் கவிபாடுவதிலும், வேற்றுநாட்டவர் – வேற்றுமொழியினர் தமிழில் கவிதைகள் வடிப்பது போற்றுதற்குரிய செய்தி. மலேசியத் தேசிய மலராம் செம்பருத்தியைப் பெயராகக் கொண்ட 'பூங்கா ராயா' என்ற தொகுப்பு, பகதூரின் சிறுவர் இலக்கியப் பணிக்குச் சீரிய சான்றாகும். கதைகள், கட்டுரைகள் போன்றவற்றையும் பகதூர் எழுதி அவை அச்சிடப்பட்டு வருகின்றன.

மலேசிய இலக்கிய உலகில் எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளை நூல் வடிவில் வெளியிடுவது அருமை உடைய செயல். ஏனெனில் மக்களின் ஆதரவு மிகமிகக் குறைவு. இலக்கியம் யாருக்காகப் படைக்கப்படுகிறதோ அவர்களின் புறக்கணிப்பே இலக்கிய முயற்சி களுக்குத் தடையாகிறது. இதனாற்றான் மலேசியத் தமிழ்நூல்கள் குறைவாகவே வெளியிடப்படுகின்றன. இக் குறையையும் பொருட் படுத்தாது மலேசியக் குழந்தைப் பாவலர்கள் மலிவு விலையில் நூல்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். நூலாக வெளிவந்த சிறுவர் இலக்கியங் களை எளிதில் எண்ணிவிடலாம்.

நூற் பெயர்	ஆசிரியர் பெயர்
1. முழுநிலா	பரிதி
2. கத்திக்கப்பல்	கவிமதிதாசன்
3. பூஞ்சிட்டு	இராமகிருட்டிணன் & பொன்முடி
4. பூங்கா ராயா	பகதூர்
5. பறவைக்கப்பல்	பொன்முடி

முழுநிலா

மலேசியக் குழந்தை இலக்கிய வானில் முதல் நிலவும் முழுநிலவுமாகக் காட்சி தருவது முழுநிலா என்ற நூலே. மலேசியாவில் சிறுவர்களுக்காக எழுதப்பட்ட பாடல்களைக் கொண்ட முதல் நூல் பரிதியின் முழுநிலா. பரிதியின் இயற்பெயர் மு. கந்தன் என்பதாகும். முழுநிலவின் தண்ணொளி பலருக்கு முன்னோடியாயிற்று. முரசு. நெடுமாறன், சி.வேலுசுவாமி ஆகியோர் தங்கள் எழுத்துகளை நூல் வடிவில் வெளியிடப் பரிதி முன்னோடியானார். இருபது கவிதைகளைக் கொண்ட இந் நூல் பரிதி (கதிரவன்) போலப் பல்லாற்றானும் பயனளிப்பது. இந் நூலில் பறவைகள், இயற்கை, நன்னெறிகளைப்பற்றிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

"நீலக்கடலில் ஊர்ந்து செல்லும்
ஜாலம் மிக்க ஓடம்போல்
ஞாலம் வியக்க நீந்திச் செல்லும்"

கோலம் போலப் பரிதியின் முழுநிலவு தமிழ் இலக்கிய வானில் ஒளிர்கின்றது.

கதைகள்

"தமிழ்நாட்டில் சில தலைமுறைகளுக்கு முன் சிறுவர்களுக்குக் கதையும் பாட்டும் ஊட்டி வளர்க்கும் முறை இருந்துவந்தது. கதையுணவும் பாட்டுணவும் பள்ளிக்கூடங்களில் தருவதைவிட மிகுதியாக வீடுகளில் பாட்டிமாரும் பெற்றோரும் அளித்துவந்தார்கள். காலம் மாறியது. உணவைப் பிசைந்து ஊட்டும் நிலை குறைந்து உணவைத் தாமே அள்ளி உண்ணும் நிலை உள்ளது. ஆகையால் கதை நூல்களும் பாட்டு நூல்களும் எழுதி அளிப்பவர் தேவையான காலம் இது." [15]

கதையை விரும்பாத குழந்தையே உலகில் இல்லை. மலேசியாவில் குழந்தைகளுக்கான நெடுங்கதைகளும் சிறுகதைகளும் நாளிதழ்களின் சிறுவர் மலரில் ஏராளமாக வெளிவந்துள்ளன. ஆயின் நூல்வடிவில் வெளிவந்ததவை மிகக் குறைவு. ந.மு. தேவி, கே.என். பிள்ளை, கரு. சொக்கன், ந. மகேசுவரி, மலாக்கா முத்துக்கிருஷ்ணன், கு. கிருஷ்ணன், தா. ஆரியமாலா முதலியோர் குழந்தைகளுக்குக் கதைகள் எழுதி உள்ளனர். திருமதி சரசுவதி அரிகிருஷ்ணன், பி.கே. சாமி,

சா.ஆ. அன்பானந்தன், ந. மகேசுவரி ஆகியோரின் கதைகள் கல்வி ஒலிபரப்பிலும் இடம்பெறுகின்றன. ந. மகேசுவரியின் கதைகள் பரிசு பெற்றவை என்பது சிறப்பான செய்தியாகும்.

நூலாக வெளிவந்தவை

நூற் பெயர்	ஆசிரியர் பெயர்
1. தேவகி	கரு. சொக்கன்
2. 'பூம்பூம்'	சி. வே. கிருட்டிணன்
3. கண்ணாடிமலை (1976)	கு. கிருஷ்ணன்
4. மணியோசை	–
5 இரண்டு முத்துக்கள் (1978)	கே. எம். முருகேசன்
6. மஞ்சள் வீடு	கு. கிருஷ்ணன்
7. பிறந்தநாள் பரிசு	ந. மகேசுவரி
8. மூங்கில்மரக் காடு	ந. மகேசுவரி

மலேசியக் குழந்தைகளுக்காகக் கதைகளையும் எழுதியுள்ளார் சோமசன்மா. இவர் எழுதிய 'கொக்கு டாக்டர், பாயாசம் குடித்த குருவி, கழுகும் கிளியும், தவளையும் காளையும்' போன்ற கதைகள் சிறு குழந்தைகட்கு ஏற்றன என்கிறார் வள்ளியப்பா. ஆயின், பரம்பரையாகக் கூறப்பட்டு வந்த கதைகளின் முடிவை மாற்றியுள்ளது குழந்தைகளுக்குக் குழப்பத்தையே உண்டுபண்ணும். அதற்குப் பதிலாக அவர் புதிய கதைகளை எழுதியிருக்கலாம் என்று பரிந்துரை கூறுகிறார் அழ. வள்ளியப்பா. காக்கையும் நாகப்பாம்பும் எனும் கதையின் முடிவை மாற்றிய அவர் கதையின் இறுதியில் "ஆகையால் பிள்ளைகளே" எனக் கடைசியில் நீதி கூறுவது பொருத்தமற்றது என்பது அழ. வள்ளியப்பாவின் கருத்து.

கட்டுரைகள்

குழந்தைகளுக்கான கட்டுரைகளை மு. ப. சரசுவதி, குமாரி காந்தீஸ்வரி பாலையா, குமாரி, சந்திரா சூரியா, பழ. அடைக்கலம் செ. பெருமையினார், கே.எம். முருகேசன், அப்பளசாமி, மா. அகம்மது, குமாரி கெஜலட்சுமி போன்றோர் எழுதியுள்ளனர்.

நாடகங்கள்

சிறுவர்க்கான நாடகங்கள் எழுத்துருவில் வருபவை மிகமிகக் குறைவு. அத்திபூத்தது போல் அரிதாக இதழ்களிலே ஒரிரு நாடகங்கள்

வெளிவருகின்றன. ஆயின் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர்தின விழாக்களிலும், வானொலியிலும் சிறுவர் நாடகங்கள் பல அரங்கேறுகின்றன.

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட எழுத்தாளர்கள்

மலேசியாவில் குழந்தை எழுத்தாளர்கள் பெருகி வருவது யாவரும் ஏற்கும் உண்மை. ஆயின் தங்கள் எழுத்துகளை அச்சிட்டு நூல்வடிவில் கொடுத்தவர்கள் முரசு. நெடுமாறனும், சி. வேலுசுவாமியும் ஆவர். இவ் விருவரின் குழந்தை இலக்கியப் பணிகள் தமிழகத்தினரும் அறிந்தவை. 'சிறுவர் இலக்கியச் செல்வர்கள்' என்ற பூவண்ணனின் நூலில் இவ் விருவர் கவிதைகள்பற்றிச் சிறப்பாகக் கூறப்படுகிறது. இவ் விருவரும் மலேசியக் குழந்தை இலக்கியம்பற்றிய கட்டுரைகளையும் வெளியிட்டவர்கள். பாம்பின் கால் பாம்பறியுமாப் போல இவ்விரு குழந்தைக் கவிஞர்களைத் தமிழகத்துக் குழந்தைப் பாவலர்கள் போற்றியுள்ளமை மனங்கொள்ள வேண்டிய செய்தியாகும். இக் காரணங்களால் முரசு. நெடுமாறன், சி. வேலுசுவாமி ஆகிய இருவரின் படைப்புகள்மட்டும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

முரசு. நெடுமாறன்

பாப்பாவின் பாவலர் என்ற சிறப்புப் பட்டம் பெற்ற பெருமை கொண்டவர் முரசு. நெடுமாறன். இவருடைய பாடல்கள் பல தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தினரால் பள்ளிசெல்லும் பாலகர்க்குப் பாடமாய் வைக்கப்பட்டுள்ளன. இத் தகுதி முரசு. நெடுமாறனின் பெருமைக்கு மேலும் மெருகூட்டுவதாகும். இவருடைய எழுத்தோவியங்கள் பல அச்சானவை:

1. இளந்தளிர்	1969
2. அன்புப்பாட்டு	1976
3. அறிவுப் பாட்டு	1976
4. அழகுப்பாட்டு	1976
5. இன்பப்பாட்டு	1986
6. எங்கள் பாட்டு	1986

இவை தவிரப் பல நூல்கள் இவ் வாண்டில் வெளிவர உள்ளன.[17]

பொதுவியல்பு

ஆங்கிலக் குழந்தைப் பாடல்களைப் பொருளிலிப் பாடல்கள் என்றும், செவிலியப் பாடல்கள் என்றும் இருவகைப்படுத்தினர்.[18] இவ் வடிப்படையில் முரசு. நெடுமாறனின் பாடல்களில் பொருளிலிப் பாடல்களே இல. பொருளிலிப் பாடல்களில் கருத்துச் சிறப்போ. பொருட் சிறப்போ இல்லை என்று அவர் கருதிப் பாடாமல் விடுத்திருக்கலாம். ஆனால் வள்ளியப்பாவின்,

"ஜாடிக்கு மூடி
சதிருக்கு ஜோடி
பாம்புக்கு மோடி
பறந்துவா ஒடி"[19]

என்ற பாடலைப் பாடாத சிறுவர்களே தமிழகத்தில் இல்லை எனலாம். மூடி, ஜோடி போன்ற ஒலி ஒப்புமை உடைய சொற்கள் குழந்தைகளுக்கு மகிழ்வூட்டி வாய்விட்டுப் பாடவைக்கும் இயல்பின. ஆயின் முரசு ஒலிஒப்புமை உடைய சொற்களைக் கருத்துச் சிறப்போடு கையாளும் தன்மை கொண்டவர். ஆதலால் முரசுவின் பாடல்களில் சந்தமும் உண்டு; கருத்துச் சிறப்பும் உண்டு.

நூலைத் தொடங்கும்போது தெய்வத்திடம் காப்பு வேண்டிக் கடவுள் வாழ்த்துப் பாடுவது இயல்பு. விநாயகர், திருமால் போன்ற கடவுளரிடம் காப்பு வேண்டுவது தமிழ்நூல் மரபு. ஆயின் முரசு தமிழ்மொழியையே கடவுளாகக் கருதித் தமிழ்த்தாயை வாழ்த்தி நூலைத் தொடங்குகிறார். முரசுவின் முதல் நூலான இளந்தளிரில் 'தமிழே வாழ்க' என்பது முதல் தலைப்பு. அன்புப் பாட்டில் 'தமிழ் வணக்கம்', அறிவுப்பாட்டில் 'தமிழே வாழ்க', அழகுப் பாட்டில் 'தமிழால் வளர்வேன்' என்ற தலைப்புகள் அமைந்து முரசு.நெடுமாறனின் தமிழ்ப்பற்றை முரசறைகின்றன. இன்றமிழ், நற்றமிழ், அன்புத் தமிழ், அருமைத் தமிழ், அறிவுத்தமிழ், அன்னைத் தமிழ், பொற்றமிழ், புகழ்த்தமிழ், மேன்மைத் தமிழ், செழுமைத் தமிழ், நீதித்தமிழ், கன்னித்தமிழ் எனப் பல அடைமொழிகளைக் கொடுக்கிறார். இவ் வடைமொழிகள் முரசு.நெடுமாறன் தமிழை உணர்ந்த தகைமையைக் காட்டுவதோடு அவருடைய பாடல்களைப் படிக்கும் சிறுவர் மனங்களிலும் தமிழ் உணர்வைத் தூண்டிவிடும் என்பது உறுதி.

"தமிழால் இன்று வளர்வேன்
தமிழை நானை வளர்ப்பேன்" (அழகுப்பாட்டு)

இவ் வரிகள் ஒவ்வொரு சிறுவனையும் ஊக்கம் கொள்ளச் செய்வது; நூலின் தொடக்கம் மலேசியாவில் தமிழ்ச் சிறுவர்களின் நோக்கமும் பணியும் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற படிப்பினையை ஊட்டுகிறது.

மலேசிய மணம்

"பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும் நற்றவ வானினும் நனிசிறந்தன" அல்லவா? பிறந்த பொன்னாடாம் மலேசிய மண்ணினையும் புகழ்கிறார் முரசு. நம்நாடு, ரப்பர் மரம், கொடியை வணங்குவோம், ஈயக்கப்பல், டுரியான் பழம் ஆகிய கவிதைகள் மலேசிய மண்ணின் மணம் கமழும் பாடல்கள். மலேசிய நாட்டு மாண்பை மாணவர்க்கு உணர்த்தி நாட்டுப்பற்றை வளர்க்கும் நல்ல கவிதைகள் முரசு. நெடுமாறனின் கவிதைகள்.

வளம்பாடும் வளமார் கவிதைகள்

மலேசியாவிற்கு 'மலாயா' எனப் பெயர் வந்ததற்குரிய காரணத்தைப் பிஞ்சு நெஞ்சங்களில் பதியவைக்கிறார். 'மலைகள் அடர்ந்த நம்நாடு' மலாயா எனப் பெயர் பெறுகிறது. இந் நாட்டுக்குச் செல்வவளம் இரப்பர், ஈயம், செம்பனை ஆகியவற்றால் மிகுகிறது என்பதை உணர்த்துகிறார். மலேசியாவில் ஈயம் மிகுந்திருப்பதால் ஈயக்கப்பலைப் பாடுகிறார்.

தமிழர் வாழ்வோடு இரண்டறக் கலந்துவிட்ட இரப்பர் மரத்தைப் பாடாத மலேசியக் கவிஞர்களே இலர் என்று சொல்லாம். நாட்டுக்கும் மக்களுக்கும் வளந்தரும் இரப்பரை நன்றிப்பெருக்கோடு பாடிச் சிறுவர் மனங்களில் நன்றி உணர்வை வளர்க்கிறார்.

"மலேசிய நாட்டின் செல்வம் யாவும்
மகிழ்ந்து நீதரும் பாலே யன்றோ
உன்னால் வாழும் உழைப்பவ ரெல்லாம்
கண்ணாம் நாட்டைக் காப்பவ ரன்றோ" (இளந்தளிர், ப.16)

இரப்பர்மரம் பிறரை வாழ்விக்கும் பெருமையை உணர்த்துகிறது இப் பாட்டு.

மலேசியா என்றவுடன் சிறுவர் நினைவுக்கு வருவது 'டுரியான்' என்ற முள்நாறிப்பழம். இப் பழத்தின் மூலம் படிப்பினையை வழங்குகிறார் முரசு. புறத்தோற்றத்தில் முட்களைக் கொண்ட டுரியான் இனிய சுளைகளை அகத்தே கொண்டு விளங்குகிறது. இதன் வாயிலாக,

"தொல்லை என்று ஒதுங்கிடுவோர் டுரியானே – உலகில்
நல்லசெயல் செய்வதுண்டோ டுரியானே"

(இளந்தளிர், ப.28)

என அறிவுறுத்துகிறார்.

நாட்டுணர்வூட்டும் நற்கவிதைகள்

தேசியக் கொடி நாட்டின் உயிராகக் கருதப்படுவது. சுதந்திர உணர்விற்கு அடையாளமாக விளங்குவது தேசியக் கொடி. இக் கொடியைப் போற்றுவதன் மூலம் நாட்டுயர்வைச் சிறுவர்கள் மனங்களில் ஊட்டுகிறார். தமிழகத்தில். கொடிகாத்த திருப்பூர்க் குமரன் போல மலேசியாவில் குழந்தைகளை உருவாக்க உதவுவது 'கொடியை வணங்குவோம்' என்ற பாடல்.

"உரிமை காத்து வாழவே
உலகில் நிமிர்ந்து நடக்கவே
உரத்தை நமக்குச் சேர்த்திடும்
உயிராம் கொடியை வணங்குவோம்"

(இளந்தளிர், ப.54)

மொழியுணர்வு போற்றும் மோகனக் கவிதைகள்

நாட்டுப்பற்றினைப் போல மொழிப்பற்றும் வேண்டும் என்ற சிந்தனையைத் தோற்றுவிப்பன இவர் பாடல்கள். தாய்மொழியைத் தவறாது படிக்கவேண்டும். அனைத்துலக மொழியான ஆங்கிலத்தையும், தேசிய மொழியான மலாய்மொழியையும், இயன்றால் சீனமொழியையும் கற்றுச் சிறுவர்கள் பயன்பெற,

"பன்மை மொழிகள் பயில்வதால்
பண்படுமுன் உள்ளமே
நன்மை யெல்லாம் உன்னிடம்
நாடி வந்து சேருமே"

(இளந்தளிர், ப.53)

தாய்மொழி மீது கொண்ட பற்றினால் பிற மொழிகளை வெறுக்காமல், கற்றுப் பயன்பெறப் பயனுள்ள அறிவுரை கூறும் முரசு. நெடுமாறனின் பரந்த உள்ளம் பாராட்டுதற்குரியது. இப் பாடல் வலியுறுத்தும் பரந்த மனப்பாங்கு பாலகரிடமும் ஏற்பட வேண்டும்.

இயற்கையை ஏத்தும் இன்கவிதைகள்

இயற்கை வனப்பையும் கவிதைகள் வழியே காட்டத் தவறவில்லை கவிஞர். ஆலமரம், கதிரவன், வெண்ணிலவு, காற்று, வானவில், தாமரை

மலர், பசும்புல், தென்னைமரம், தொட்டாற்சுருங்கி, வாழை, முருங்கை மரங்கள், கொடி, வானம், சோலை, பனித்துளி ஆகியவற்றைப் பாடுகிறார்; இயற்கைப் பொருள்களைக் காட்டி இனிய படிப்பினைகளை ஊட்டுகிறார். தொட்டாற்சுருங்கி பொறுமையையும், வாழை, முருங்கை போன்ற மரங்கள் தடைகளை வென்றால் வெற்றி தேடிவரும் என்ற உண்மையை உணர்த்துவதாயும் கூறுகிறார். பசும்புல்லும் சிறுவர்களுக்குப் பாடம் புகட்டுவதாகவே ஆசிரியர் பாடியுள்ளமை போற்றத்தக்கது. அவரவர்க் குரிய இடத்தில் அவரவர் இருத்தலே சிறப்பு என்ற படிப்பினை பசும்புல் மூலம் பெறப்படுகிறது. தென்னைமரம் வள்ளல் போல வாரி வழங்கும் உள்ளத்தை வளர்க்கிறது. பூப்போன்ற மனங்கொண்ட சிறுவர் பூவை விரும்புவது இயற்கை. எனவே பூக்களையும் பாடியுள்ளார் ஆசிரியர்.

விலங்குகளைப் பாடும் வியன்கவிதைகள்

குழந்தைகள் விலங்குகளை விரும்புவது அவர்களின் தனிப்பண்பு. **"உயிர்களிடத்தில் அன்பு வேணும்"** என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு விடுதலையாய் அச்சமின்றி வாழும் ஆட்டுக்குட்டியைப் பாடுகிறார். தேனொழுகக் கவிபாடும் தேசிய விநாயகத்தின் 'தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு' என்ற பாடலை விரும்பாத சிறுவர்களே இரார். அதுபோலப் பசுவைப் பாடிய பாப்பாவின் பாவலர் பசுவின் மூலமாக அறச்சிந்தையைச் சிறுவர்களிடம் வளர்க்கிறார்; கன்று குடித்து எஞ்சிய பாலையே நாமும் குடித்து மகிழ்வோம் என்ற நன்னெறியை ஊட்டுகிறார். பூனையைப் பாடாத குழந்தைக் கவிஞரே இலர். அணிலை விலங்கென விலக்காமல் சின்னத்தம்பியாய்க் கருதிச் சீருடை கொடுத்துத் தின்பண்டங்களையும் கொடுப்பதாகக் கவிஞரே சிறுவராய் மாறிப் பாடியுள்ளார். சிறுவர் மகிழும் கொக்கு, சிட்டுக்குருவி, எறும்பு, புறாப்பற்றிய பாடல்களும் இடம்பெறுகின்றன.

வாழுமிடம் என்னும் தலைப்பில் பல விலங்குகள் வாழும் இடங்களைப் பாடுகிறார். மியாவ் மாமா, எலிகள் போன்ற பாடல்கள் நயமிக்க பாடல்கள். பூனை அஞ்சி வாழ்வது; புலி வீரத்திற்கு விளக்கமாகக் கூறப்படுவது. இவ் விரண்டும் உரையாடுவதாய்க் கவிஞர் படைத்துள்ளது பஞ்சதந்திரக் கதைகளை அடியொற்றியது. சிட்டுக்குருவியிடம் நீதி சொல்வது சிறுவர்க்கு நீதி சொல்வது போன்று அமைகிறது.

"திருடும் பழக்கம் தீது
தெரியச் சொன்னேன் ஒடு" (அன்புப்பாட்டு, ப.21)

சோம்பல் தீது என்ற உண்மையை உணர்த்த மரபை மாற்றிப் பாடும் போக்கையும் காண்கிறோம். எலி பூனையைக் கடிப்பதாகப் பாடிச் சோம்பித் திரிவது தீதென உணர்த்துகிறார். நாய், புறாப் போன்றவற்றிடம் காணப்படும் நன்றியுணர்வு, ஒற்றுமை ஆகியவற்றை மனிதன் பெறாவிடில், கல்வி கற்றாலும் மனிதன் மரமே என்று உணர்த்துகிறார். சிறுவர்களிடம் மனிதப் பண்புகள் மலியப் பெற்று அவர்கள் சமுதாயத்திற்குப் பயன்பட வாழவேண்டும் என்ற காரணத்தால் நல்ல மனிதனுக்குரிய நற்பண்புகளைச் சிறுவர் மனங்களில் பதியவைக்கிறார்.

நன்னெறி புகட்டும் நற்கவிதைகள்

கல்விச்செல்வம் கேடில் விழுச்செல்வம். இச் செல்வத்தின் இன்றியமையாமையை உணர்த்த நாளும் இனிப்பது கல்வி என்கிறார். கல்வி பயின்ற காலத்திலும், பயிலும் காலத்திலும் நன்மை தந்து எதிர்காலத்திலும் பயனளிப்பது. எனவேதான் எந்நாளும் இனிப்பது கல்வி என்று சொல்லிக் கல்வியின்பால் ஈடுபாட்டை வளர்க்கிறார்.

நன்னெறிகளை இயற்கைக் காட்சிகளும் விலங்குகளும் உணர்த்துவதாகப் பாடினாலும் சில நன்னெறிகளை வலியுறுத்துவதற்காக அவற்றைத் தனியே பாடும் போக்கு முரசு. நெடுமாறனிடம் காணப் படுகிறது. பல மலர்கள் சேர்ந்து உருவாகும் மாலை ஒற்றுமையின் சின்னமாகக் காட்சியளிக்கிறது. பல மலர்களை இணைத்து மாலையை உருவாக்குவது போலப் பல மனங்களை இணைத்து ஒற்றுமையை வளர்க்கலாம் என்பதனை,

"பூக்கள் ஒன்று சேர்வதால்
புனித மாலை பெறுகிறோம்"

(இளந்தளிர், ப.18)

என்று பாடுகிறார்.

பூக்கள் பல இணைந்து உருவாகும் மாலை இறைவனுக்கு உகந்தது என்பதால் புனிதமாலை பெறுகிறோம் என்கிறார்; அதுபோல மனித மனங்களும் ஒற்றுமைப்பட்டால் உயரிய செயல்களை நிறைவேற்றலாம் என்கிறார். தமிழர்களிடையே இருக்கும் வேற்றுமை உணர்வுகளை அகற்ற எண்ணிய கவிஞர் அதற்கான அடிப்படையைச் சிறுவர் நெஞ்சங்களில் விதைக்கிறார். "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என உணர்த்துகிறது இப் பாடல்.

உலகில் உயர்வதற்கு மனிதனுக்குப் பற்றுக்கோடு தேவை. இப் பற்று நற்குணங்களின்பால் அமைந்தால் உயர்நிலை தானே வந்தெய்தும் என்கிறார். அன்பும், அறனும் வாழ்வில் அமைய வேண்டியதன் அவசியத்தை,

"அன்பை அறத்தை நீபற்றி
அகிலத் தென்றும் உயர்வாயே" (இளந்தளிர், ப.20)

என்ற பாடலில் கூறுகிறார்.

வாழ்க்கையில் வெற்றி பெறத் துணிவு வேண்டும். வான்புகழ் வள்ளுவரும்,

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு"[20]

என வலியுறுத்துகிறார். இப் பண்புகளை அரசனுக்குரிய இலக்கணமாக வள்ளுவர் கூறியிருப்பினும் இன்று ஒரு மனிதன் எவ்வகையிலும், எத்துறையிலும் முன்னேற மேற்கூறிய குணங்கள் வேண்டும் என்று கொள்வதே பொருந்தும். இத் துணிவுடைமைமையைத் துணிவு, அஞ்சாமை வேண்டும், நிமிர்ந்து நில் ஆகிய பாடல்களில் பாடுகிறார். 'அச்சம் தவிர்' என்ற ஔவை கருத்தை,

"அஞ்சி அஞ்சிப் பதுங்குவோர்
அடைவ தில்லை வெற்றியே" (இளந்தளிர், ப.30)

என அழகுறப் பாடுகிறார்.

அறிவியல் விருந்து நல்கும் அருங்கவிதைகள்

தமிழகத்தில் குழந்தை இலக்கியம் படைப்போர் அறிவியல் கருத்துகளைச் சிறுவர்களுக்குக் கவிதை, கட்டுரை, கதைகள் மூலம் வழங்கி வருவது பாராட்ட வேண்டிய ஒன்று. அறிவியல் வளர்ச்சியின் வேகத்தைச் சிறுவர்கள் அறியும்பொருட்டுப் பெ. நா. அப்புசாமி போன்றோர் எண்ணிறந்த படைப்புகளை உருவாக்கிப் பல புதிய உண்மைகளையும் பாடுகின்றனர். கற்பனைக்கு விருந்தாக இருந்த சந்திரன் இன்று அறிவியல் விருந்தாக மாறி வருவதை,

"அம்புலி அம்புலி வாவா எனவே
அம்மா கம்மா பாடாதே

அம்புலி இங்கே வரமாட்டான்
அமெரிக்க மாமா விடமாட்டான்"[21]

எனப் பாடுகிறார் புத்தனேரி ரா. சுப்பிரமணியம். ஆயின் மலேசியாவில் பழைய விஞ்ஞானக் கருவிகளைப்பற்றியும், பழைய கண்டுபிடிப்புகளைப் பற்றியுமே பாடல்களைப் பாடிவருகின்றனர். சந்திரமண்டலத்தியல் கண்டு தெளியும் இன்றைய உலகில் மணிப்பொறியும், வானொலியும் பழைய கண்டுபிடிப்புகள். 'பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல' என உணர்ந்த முரசு. நெடுமாறன் சிறுவர்கள் குறிக்கோள்களோடு வளரவேண்டும் என்ற சிந்தனையை 'விஞ்ஞானியாவேன்' என்ற பாடல் மூலம் விதைக்கிறார். வான ஊர்தி, வானொலி போன்றவற்றைப் பாடுவதோடு நின்றிடாமல் காலத்திற்கேற்ப மாறிவரும் அறிவியல் கருத்துகளை அழகு தமிழ்க் கவிதைகளாகப் பாடினால் சிறுவர் மனங்களில் அறிவியல் கருத்துகள் நன்கு பதிந்து நன்மை பயக்கும்.

புதுக் கற்பனை பொங்கும் கவிதைகள்

கல்லும் காகமும் எனும் கதைப்பாடல் சிறுவர் கற்பனைக்கு நல்விருந்தாக அமைகிறது. கற்களைக் காணும் காகம் அவற்றைக் கற்களாக எண்ணாமல் கடலைகளாய் எண்ணியது எனப் புதுக்கற்பனை தோன்றப் பாடுகிறார். இப் பாடலில் காகத்தைக் கண்ணெதிரிலே காட்டுவது போன்று ஆசிரியர் பாடுவது சிறப்புடையது.

"கடலை என்ற எண்ணமோ
கண்ணுந் தெரிய வில்லையோ
என்ன நிமிர்ந்து பார்க்கிறாய்
எனது பேச்சு விளங்குதோ!"

(அன்புப்பாட்டு 2, ப.21)

சிறுவர் வரையும் ஓவியம் சிரிப்பிற்கு இடமாகும் காட்சியைக் காட்டும் பாடல் கவிஞரின் புதிய கற்பனைக்குச் சான்றாக அமைகிறது. புதிய கற்பனையும் நகைச்சுவையும் பொருந்தியுள்ளமை இப் பாடலைப் படிக்குந்தோறும் நகைச்சுவையை விளைவிப்பது, பாடல் வருமாறு:

"பறங்கி போன்ற பெருந்தலை
பளப ளக்கும் வழுக்கையாம்
கொட்டைப் பாக்குக் கண்களாம்
கூடை போன்ற பெரியவாய்

பானை போன்ற வயிற்றுடன்
புடலங் காய்போல் கால்களாம்
பயிற்றங் காய்கள் போலவே
பலமில் லாத கைகளாம்" (அறிவுப்பாட்டு 2, ப.3)

சிறுவர் தினமும் காணும் பொருள்களையே ஒவியத்திற்கு உவமை கூறியிருப்பது கவிஞரின் கூர்ந்துநோக்கும் திறத்திற்கு எடுத்துக்காட்டு.

பாட்டியின் கூனலுக்குக் கற்பனையால் கவிஞர் தரும் காரணம் புதுமையுடனும் நகைச்சுவையுடனும் விளங்குகிறது. பேரப்பிள்ளைகள் செய்த குறும்புகளால் பாட்டிக்குக் கூன் வந்தது என்கிறார்.

புது உவமைகள் பொருந்திய கவிதைகள்

'உவமை என்னுந் தவலருங் கூத்தி' புதிய ஆடல்களைப் புரிவதைக் கவிஞரின் பாடல்களில் காண்லாம். சிறுவர் விளையாட்டுகளுள் பட்டம் விடுவதும் ஒன்று. இதனை அனைத்துச் சிறுவர்களும் விரும்புவர். வானிலே சிறுவர்கள் பட்டம் விடுகையில் நூலை அசைக்கும் போது பட்டம் அசைவதை நோயாளிபோல் நடுங்குது எனப் புதிய உவமையால் கூறுகிறார்.

"நூலை அசைத்தால் ஆடுது
நோயா ளியைப்போல் நடுங்குது" (இளந்தளிர், ப. 14)

இவ் வுவமை நயம் பொருந்தியது.

சிட்டுக்குருவியின் கண்களைப் பெரும்பாலும் குன்றிமணிக்கு உவமை கூறுவது மரபு. ஆயின் முரசு. நெடுமாறன் குழந்தையின் கண்களில் அன்றாடம் காணும் கடுகினைக் காட்டி உவமை கூறுகிறார். "கடுகி னைப்போல் கண்களும்" என்ற உவமை குழந்தை சிட்டுக் குருவியினை நன்றாக நினைவுகொள்ளுமாறு நயமுடன் அமைந்துள்ளது.

சான்றோர்களை நட்பாய்க் கொண்டால் நன்மைகள் பல உண்டு என்பதைச் சிறுவர்க்குத் தெரிவிக்கிறார். ஒருவனுக்கு வலிமை தருவது பெரியார் நட்பு. இதனைத் தமிழ்மறை தந்த வள்ளுவர்,

"தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாந் தலை" [22]

என்கிறார். இக் கருத்தினைச் சிறுவர்கள் மனங்களில் பதியவைக்கக் கொடி பயன்படுகிறது. கொடி பற்றிப்படர்வதைச் சிறப்பாகக் காட்டிப் பெரியாரைத் துணைக்கோடலின் இன்றியமையாமையை உணர்த்துகிறார்.

"சின்னஞ் சிறிய தம்பி – நீயும்
சிறந்த பெரியோர் தம்மை
அன்பால் கொடிபோல் பற்றி – இந்த
அகிலத் துயர்ந்திடு வாயே" (இளந்தளிர், ப.48)

இவ் வறிவுரை மூலம் கொடி படர்வதுபோல் பெரியவர்கள்பால் அன்புப் பிணைப்புப் படரவேண்டும் என்ற கருத்துப் பெறப்படுகிறது.

இற்றைநாள் வரை கவிஞர்கள் அலைகளைக் கரங்கள் ஆகவும், கடல் என்ற கன்னிக்கு ஆடையாகவும் கற்பனை செய்தனர். ஆயின், முரசு. நெடுமாறனுக்குக் குழந்தை ஆடி அசைவதைப்போலக் கடலலைகள் காட்சி தருகின்றன. இது புதுமையே. குழந்தைகளுக்கான பாடல்களில் குழந்தையையே புதுநோக்கில் உவமை கூறியுள்ளது பொற்குடத்திற்குப் பொட்டிட்டது போலாம்.

"ஆடும் குழந்தை போலவே
அழகு கோலம் நீகாட்டி
ஓடிஓடி வருகிறாய்" (அறிவுப்பாட்டு 2, ப.12)

ஆடிவருந் தேராம் அழகு குழந்தையைக் கடல் அலைக்கு உவமிப்பது நினைந்து நினைந்து இன்புறுதற்கு உரியது.

சேவல்கள் இரண்டு சண்டையிட்டுக் கொள்கின்றன. அச் சண்டை புதிய கற்பனையை நல்குகிறது. சேவல் சண்டை உண்மையான போர் நிகழ்ச்சியை நினைவுபடுத்துகிறது. அதனால் சேவல்கள் வீரர்களாகத் தோன்றுகின்றன. இதனால் புதிய உவமை பிறக்கிறது.

"வீரர் இருவர் போலவே
வீதி ஓரம் தன்னிலே
போரைச் செய்யும் சேவல்கள்
புதுமை யான சண்டைபார்" (அறிவுப்பாட்டு, ப.12)

உயர்ந்த வீரர்களைச் சாதாரணச் சேவல்களுக்கு உவமை கூறிச் சேவல்களுக்கு உயர்வு நல்குகிறார் கவிஞர். சேவல் சண்டை

புதுமையானது மட்டுமன்று; கவிஞரின் கற்பனைக்குச் சான்றாவதும் ஆகும்.

நத்தை தன் முதுகில் நீர்க்குடம் சுமந்து செல்வதாகவே பலரும் பாடியுள்ளனர். ஆயின் கவிஞர் இம் மரபைச் சற்று மாற்றி வெறும் நீர்க்குடம் என்னாமல், பன்னீர்க்குடத்தைச் சுமந்து செல்வதாகப் பாடியுள்ளார். நத்தை செல்லும் வழியெல்லாம் நீரைத் தெளித்துக் கொண்டே செல்கிறது. ஆகவே, நத்தை பன்னீர்க்குடத்தைச் சுமந்து செல்வதாக முரசு பாடியுள்ளது பொருத்தமான புதிய உவமையே.

"பன்னீர்க் குடத்தைச் சுமந்துமே
பாதை யெல்லாம் தெளித்துநீ" (அறிவுப்பாட்டு, 1, ப.17)

எனப் பாடுவது நயமுடையது.

ஆமைக்கு ஒடு இருப்பது கவிஞருக்குப் பாறையாகவே தெரிகின்றது, எனவே, ஆமையைப் பாடும்போது,

"பாறை தன்னை முதுகிலே
பத்தி ரமாய்ச் சுமந்துமே" (அறிவுப்பாட்டு)

என்று பாடுகிறார். இவ் வுவமை ஆமை மெதுவாக நகர்வதற்குரிய காரணத்தையும் கூறுகிறது.

குளத்தில் மலரும் தாமரை கொக்கினைப் போலத்தோன்றுவதனை,

"கொக்குப் போலத் தாமரை" (இளந்தளிர், ப.29)

என்று பாடுகிறார். கொக்கின் வடிவத்தைப் போலவும், நிறத்தைப் போலவும் தாமரை மலர்ந்துள்ளதைக் கூறுவது சங்க இலக்கியத்தில் காணப்படும் உவமை. ஆயின் சிறுவர்களுக்கு அந்த உவமையைக் கூறுவது புதுமையே.

சிறுவர்களின் பட்டங்கள் வண்ணத் தாள்களால் செய்யப்பட்டவை. அதனால் பட்டங்கள் வானில் பறக்கும்போது வண்ணப்பறவைகளைப் போல விளங்கின எனப் பாடுவதும் புதுமையே. சிறுவர்களின் கட்புலனுக்கு எட்டிய பொருள்களைக்கொண்டே பல புதிய உவமைகளைப் பாடியிருப்பது, "கற்றோர்கள் என்பதைச் சீலமுட னேசொல்லும் கனவாக்கினால் காணலாம்" [23] என்ற அறப்பளீசுவர சதகக் கருத்துக்கு இயையக் கவிஞரின் புலமைத் திறத்தை வெளிக்காட்டுகிறது.

புதியன படைக்கும் புகழ்க் கவிதைகள்

கவிஞர்கள் எப் பொருளையும் இழிவென ஒதுக்காமல் அனைத்தையும் பாடும் இயல்பினர். கவிஞர் முரசு. நெடுமாறன் சோளக்கொல்லைப் பொம்மையையும் பாடுகிறார். குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டும் விளையாட்டுப் பொம்மைபோலச் சோளக் கொல்லைப் பொம்மையைப் பாடுபொருளாக்கி உள்ளார். கனவினைப் பற்றிப் பாடிப் புதுமையைப் படைத்துள்ளார் புலவர். இனிய இசை எழுப்பும் புல்லாங்குழல் மூலம் சிறுவர்கட்கு இசைமீது விருப்பம்கொள்ள வைக்கிறார். மலேசிய நாட்டின் தேசியக் கோட்பாட்டினை இளம் உள்ளங்களிலே படியச் செய்து அதற்கு ஏற்றாற்போல் சிறுவர்கள் வளர வகைசெய்கிறார்.

கழிவுப்பொருள்களும் கலைப்பொருள்களாக மாறும் என்ற எண்ணத்தைச் சிறுவர்கட்கு ஊட்டுகிறார்.

"குப்பை என்று வீணிலே
கொட்டி வைக்கும் பொருளிலே
ஒப்பில் லாத கலைப்பொருள்
உலகம் போற்றச் செய்யலாம்" (அன்புப்பாட்டு, ப.25)

'சிறுதுரும்பும் பல்குத்த உதவும்' என்ற பழமொழிக்கு இணங்கக் குப்பை என்று தள்ளிவிடாமல் பல பயனுள்ள பொருள்களைச் செய்ய முடியும் என்ற உண்மையை உணர்த்துகிறார். இப் பாடுபொருள் புதியது.

இந்தியர்கள், மலேசியர்கள், சீனர்கள் என்ற மூவினத்தாரும் ஒற்றுமை உணர்வுடன் வாழ்ந்து வருவது உலகம் போற்றும் செய்தி. குறிப்பிட்ட இனத்தாரின் திருநாள்களில் மற்ற இனத்தார் கலந்துகொண்டு சிறப்பித்து வருவது மலேசிய ஒருமைப்பாட்டுக்குச் சிறப்பளிப்பது. மலேசியர்களின் திருநாள் பெருநாள் எனப்படும். இப் பெருநாளைக் கவிஞர் பாடியுள்ளதன் மூலம் இனவேற்றுமையின்றிக் கலந்து வாழும் நற்பண்பு உள்ளவர்கள் என்ற உண்மை புலனாகிறது. தமிழர் திருநாள்களைப் பாடுவதைவிட மலேசியப் பெருநாளைப் பாடுவது மலேசியாவில் இனவேற்றுமை இல்லை என்பதை உணர்த்தும் என்ற அடிப்படையில் பிற இனத்தவர் பெருநாளைப் பாடுபொருளாக்கி உள்ளார்.

பழங்குடி மக்களைப்பற்றிச் சிறுவர்கள் அறிய வேண்டும் என்பதால் பழங்குடி மக்களைப் பற்றியும் பாடியுள்ளார். குருடனுக்குக் கோல்

வழிகாட்டுவதை அடிப்படையாய்க்கொண்டு குருட்டுப் பையனைப் பாடியுள்ளது புதுமை. குருடனின் தோழனாக இருப்பது கோல் என்பதனை,

"இந்தக் கோலைப் போல
எந்த நாளும் உதவும்
விந்தை யான தோழன் (அறிவுப்பாட்டு, 2, ப.17)

என்ற பாடலில் கூறுகிறார்.

மனிதனை நல்லாற்றுப்படுத்தும் 'அறம்' காலந்தோறும் மாறுவது. வள்ளுவர் காலத்தில் 'மனத்துக்கண் மாசில னாதலே' அறமாகக் கருதப்பட்டது. இவ் வறத்தை விதியறம், விலக்கறம் என இருவகையாகப் பகுக்கலாம். இன்னது செய்ய வேண்டும் என விதிப்பது விதியறம். இன்னவற்றை விலக்கவேண்டும் என்பது விலக்கறம். குழந்தைகள் பொய் கூறுதல், பிறர் பொருளுக்கு ஆசைப்படுதல் ஆகிய செயல்களைச் செய்யக்கூடாது என்ற நிலை மாறிவருகிறது. இப் பழக்கங்களைவிடக் கொடிய திரைப்பட மோகமும், 'கஞ்சா'ப் புகைப்பதும் மலேசியச் சிறுவர்களைப் பாதித்து வருகின்றன. இவற்றைக் கைவிட வேண்டும் என்ற நீதியை வலியுறுத்துகிறார்.

"பிச்சை யெடுத்துப் படம்பார்த்தும்
பித்துப் பிடித்தே புகையிழுத்தும்
நச்சு மனமே கொண்டவரின்
நட்பை நாடித் திரிகின்றாய்" (அறிவுப்பாட்டு 1, ப.30)

நீதி கூறுவது பழமையான மரபு என்றாலும் சொல்லப்படும் நீதி காலத்திற்கேற்றவாறு புதுமையாகி மலர்கிறது. எனவே, பாப்பாவின் பாவலர் புதுப் பாட்டுப் பொருள்களைக் கையாண்டு புதுமை செய்கிறார் எனல் தவறில்லை.

மரபு மாறாக் கவிதைகள்

'பிசி' என்ற விடுகதை அமைப்பில் பல பாடல்களைப் பாடிச் சுவை ஊட்டுகிறார் பாவலர். விடுகதையைப் பெரும்பாலும் சிறுவர்கள் உரைநடையில்தான் அறிவர். தமிழகத்துக் குழந்தைக் கவிஞர்கள் விடுகதை அமைப்பில் பாடல்கள் பாடியுள்ளதுபோல முரசு. நெடுமாறனும் விடுகதை அமைப்பில் கவிதைகள் பாடியுள்ளார். இவ் வமைப்புத் தொன்மையானதுதான். வெண்பாவில் இன்னிசைச் சிந்தியல் வெண்பா

ஒருவகை. இவ் வெண்பாவில் மறைத்து வெளிப்படுத்தும் போக்கு உண்டு. சான்றாக,

"கரையாழ அம்மி மிதப்ப – வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை"[24]

என்ற இப் பாடலைக் கூறலாம். இப் பாடலில் சுரை ஆழ்வதும், அம்மி மிதப்பதும் விடுகதை போன்று அமைந்தவை. இவ் வமைப்பில் நட்டுவைத்த விசிறி, கடிக்காத பாம்பு, தலைகுனிந்தேன் என்ற கவிதைகள் உள்ளன. இவை முறையே விசிறிவாழை, புடலங்காய், வெங்காயம் ஆகியவற்றை உணர்த்துகின்றன. 'அதன் பெயர் என்ன' என்ற கவிதையில்,

"ஒன்றன் முன்னால் நின்றதும்
உருவம் முழுதும் தெரிந்ததே
என்ன அதன்பேர் தெரியுமா?" (அன்புப்பாட்டு, 2, ப.12)

எனக் கண்ணாடியைக் கூறுகிறார். சிறுவர்களுக்கு ஆர்வமூட்டும் அடிப்படையில் விடுகதைப் பாடல்கள் உள்ளன.

"ஆடு பறந்தது வானில்
மாடு நடந்தது கடலில்
அருகில் வந்தது சிங்கம்
அன்பாய்த் தந்தது முத்தம்" (அன்புப்பாட்டு, 2, ப.32)

இப் பாடலில் ஆர்வமூட்டும் வகையில் பல புதிரான செயல்களைப் பாடி இவை அனைத்தும் கனவில் நடந்தன என்று பாடுகிறார். விடுகதை என எண்ணிச் சிறுவர்கள் ஆர்வமாக இக் கவிதையைப் படிப்பர் எனத் துணியலாம். இவ் வமைப்பில் அமைந்த மற்றொரு பாடல் வருமாறு:

"தந்தி ரத்தால் முயலுமே
சிங்கம் தன்னைக் கொன்றிடும்
மந்தி ரத்தால் மலைகளும்
அந்த ரத்தில் பறந்திடும்" (அன்புப்பாட்டு, 2, பக்.16,17)

இப் பாடலில் கூறப்பட்ட செயல்கள் நிகழுமா எனச் சிறுவர்களைச் சிந்திக்க வைத்துப் பாட்டி சொல்லும் கதைகளில் இவை அனைத்தும் நிகழும் என்று பாடுகிறார். உண்மையில் பாட்டி கூறும் கதைகளே

சிறுவர்களின் கற்பனைத்திறனை வளர்க்கின்றன என்ற உண்மை புலனாகிறது. விடுகதை அமைப்பில் அமைந்த இப் பாடல்கள் சிறுவர் நெஞ்சங்களை விட்டகலா என்பதற்கு,

"கண்முன் அதனைப் பிடித்தான்
கண்ணீர் கண்ணீர் கண்ணீர்" (அறிவுப்பாட்டு, 2, ப.13)

என்ற பாடல் சீரிய சான்றாகும். மின்மினிப் பூச்சியற்றிய கவிதை விடுகதை வடிவில்,

"எண்ணெய் இல்லை திரியும் இல்லை
எரியும் விளக்குப் பார்
மின்சா ரந்தான் பாய வில்லை
மின்னும் விளக்குப் பார்" (அறிவுப்பாட்டு, 1, ப.9)

என மலர்கிறது.

செய்யுள்களுக்கு அணியூட்டுவது முரண்தொடை. சிறுவர் பாடல்களிலும் இம் முரண்தொடை அமைந்து, 'செவிருகர் கனிகளாக'ச் சிறுவர் பாடல்கள் சுவைக்கின்றன. சிறுமையும் பெருமையும் முரணானவை. இவ் விரண்டும்,

"சிறிய உதவி செய்வதற்கோ
பெரிய உள்ளம் வேண்டுமே" (அன்புப்பாட்டு 2, ப.30)

என்ற பாடலில் இணைந்து சிறுவர் உள்ளங்களில் பெரிய நீதியை வழங்குகின்றன.

"நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஒம்புமின்" [25]

என்ற சங்க இலக்கியக் கருத்தினை 'நல்லவற்றை நாடினால் நன்மை என்றும் விளையும்' என்று வலியுறுத்துகிறார்; நன்மை – தீமை, ஆக்கம் –அழிவு ஆகிய முரணான செயல்களைக் காட்டி நன்மையை நாடுமாறு செய்கிறார். முரணான சொற்களைக் கையாண்டு சிறுவர்களின் சொல்லாற்றலை வளர்க்கிறார். வெள்ளம் – வெல்லம், மூளை – மூலை என்பன சிறுவர்களின் சொல்வளத்தைப் பெருக்குவன.

எண்களைக்கொண்டு பாடுவதும் தொன்மையான மரபுதான். இவ் வடிப்படையில்,

"ஒன்றும் ஒன்றும் இரண்டாகும்
உண்மை அன்பே உயர்வாகும்

. . . . . .

ஐந்தும் ஐந்தும் பத்தாகும்
ஆன்றோர் மொழியே முத்தாகும்" (அறிவுப்பாட்டு, 2, ப.6)

என்ற பாடல் அமைகிறது. கணக்கினை அறிய இக் கவிதை பயன்படுவதோடு, பல உயர்பண்புகளையும் அறிவுறுத்துகிறது. ஒன்று, இரண்டு என நிரலாகப் பாடிய புலவர், நான்கும் நான்கும் எட்டு என்ற உண்மையைப் பாடாது விடுத்தமை மேலும் ஆய்தற்குரியதாகும்.

நகைச்சுவை பயக்கும் நல்ல கவிதைகள்

சிறுவர்கள் நகைச்சுவையைப் பெரிதும் விரும்புவர் என்பது உளநூல் கூறும் உண்மை. அரிய கருத்துகளையும் நகைச்சுவையோடு எளிமையாகச் சிறுவர் மனங்களில் பதியவைக்கலாம் என்பது கவிஞரின் கருத்து. எனவே, கதைப்பாடல்களை நகைச்சுவையோடு பாடுகிறார். தும்பி தோசை திருடியது, அசையாத ஆமை, கொய்யாமரத்தில் மாங்காய், அத்தைக்கு மீசை ஆகியன நகைச்சுவை மலிந்த பாடல்கள்.

அறிவுக்கு விருந்தாகும் அருங்கவிதைகள்

நூலறிவின் இன்றியமையாமையைப் படித்துச் சொல், நாளும் இனிக்கும் என்ற தலைப்புகளில் பாடுகிறார். வள்ளுவரின் திருக்குறள் வாழவைக்கும் திருக்குறள் எனப் போற்றுகிறார்.

உத்திகளுடைய உயர்கவிதைகள்

எவ்வகையான இலக்கியம் படைக்கவும் புலவர்கள் சில அணுகுமுறைகளைக் கையாள்கின்றனர். இவையே உத்திகள் எனப்படும். கவிக்கூற்று, குழந்தைகள் கூற்று, குழந்தைகள் உரையாடல், விலங்குகளிடையே உரையாடல், குழந்தை பறவைகள் உரையாடல், வினாவிடை, விடுகதை, கதைப்பாடல்கள் போன்ற பல உத்திகளைக் கையாண்டுள்ளார் முரசு. நெடுமாறன்.

நாடகங்கள் மூலம் நற்பணி

கவிதைகள் மூலமே அன்றி நாடகங்கள் மூலமும் மலேசியச் சிறுவர் இலக்கியத்திற்கு நற்பணி புரிந்து வருகிறார். அரசப்பற்று என்ற கவிதை

நாடகம், உயிரா மானமா? போரும் புலமையும், நான்கு கோடி, எதுவீரம்? மருள்நீக்கியார், ஔவையார் போன்ற இலக்கிய நாடகங்களையும், பயங்கொள்ளி யானை, விந்தையான விருந்து, பாரதியார் வந்தார் போன்ற உருவக நாடகங்களையும் எழுதியுள்ளார். இவை மாணவர்களால் நடிக்கப்பட்டவை. விரைவில் நூல் வடிவில் வெளிவர உள்ளன.

புதிய முயற்சிகள்

மாணவர் மணிமன்றத்தில் எழுதத் தொடங்கிய முரசு. நெடுமாறன் பாரதியைப்போலக் குழந்தைகளை எதிரில் வைத்துக்கொண்டும் கவிமணியைப்போலக் குழந்தையாக மாறியும் பாடல்களைப் பாடியுள்ளார்; மாறிவரும் தேவைக்கேற்பப் பல புதிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்; இசையறிவு கொண்டவர் ஆதலால் குழந்தைப் பாடல்களை இசையமைத்து, பாடல்களை ஒலிப்பதிவு நாடாக்களில் பதிவுசெய்து அவற்றை விற்பனை செய்யவும் ஏற்பாடுகள் செய்துவருகின்றார்; மாணவர் பண்பாட்டு விழா மூலம் சிறுவர்களின் ஆற்றலை வெளிக்கொணர்ந்து வருகிறார். கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடைபெறும் பண்பாட்டு விழா, பல சிறுவர் இலக்கிய வகைகளைச் சிறுவர் நடைமுறையில் பயன்படுத்த வாய்ப்பாக உள்ளது. தமிழகத்தில் வெளியிடப்பட்ட முதல் மலேசிய நூல் இளந்தளிர் என்ற சிறப்பும் இவருக்கே உரியது.

சி. வேலுசுவாமி

குழந்தைப் பாவலர்களுள் முரசு.நெடுமாறனை அடுத்துப் பல நூல்களை வெளியிட்டுச் சிறுவர் இலக்கியப் பணிபுரிபவர் சி. வேலுசுவாமி. "வேலுசுவாமி ஓர் வீட்டின் விளக்கு' எனக் கண்ணதாசனால் பாராட்டப்பட்ட சி. வேலுசுவாமி 1) தேனீயைப் பார், 2) பாட்டுப் பாடலாம், 3) அருள்புரிவாய், 4) பாட்டெழுதப் பழகுங்கள் போன்ற கவிதை நூல்களை வெளியிட்டவர்.

மலேசிய மணம்

மலாய்ச் சொற்களின் பொருளைத் தமிழில் கூறிச் சிறுவர்க்கு மலாய்மொழி அறிவைப் புகட்டும் வேலுசுவாமியின் பார்வை முற்றிலும் புதியது. 'மலாய் படிப்போம்' என்ற கவிதையில்.

"ஆப்பா என்றால் என்ன?
ஆபாங் என்றால் அண்ணன்" (பாட்டுப்பாடலாம், ப.23)

எனக் கூறி மலாய் படிக்கும் வழியையும் காட்டுகிறார்.

மலாய்–தமிழ் அகராதி வெளியிட்டவர் வேலுசுவாமி என்ற செய்தியும் இவண் நினையத்தகும். மலாய்ச் சொற்களையே பாடலின் தலைப்பாகக் கொடுத்துள்ளார். எடுத்துக்காட்டாகப் 'பூங்கா ராயா' என்ற பாடலைக் கூறலாம். வேலுசுவாமியின் பாடல்களில் மலாய்மொழிச் சொற்கள் அதிகமாக இடம்பெறுவதால், முரசு.நெடுமாறனிடமிருந்து இவர் வேறுபடுகிறார். கட்டி, பெர்மைசூரி, பாமத்திக் போன்றவற்றை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

மலேசிய நாட்டுத் தலைவர்களையும், மலாய் மொழியையும் வாழ்த்திப் பாடும் போக்கு வேலுசுவாமியிடம் சிறப்பாகக் காணப்படுவது. துங்கு அப்துல் ரஹ்மான், துன் ரசாக் ஆகிய தலைவர்களையும் போற்றுகிறார்; இந்தியாவின் நேரு போல, மலேசியாவில் துங்கு எனப் பாராட்டுகிறார். மலாய் நாட்டு வளத்தைப் பாடுவதோடன்றிச் சில மலாய் மொழிப் பாடல்களையும் தமிழாக்கம் செய்துள்ளார். வேலுசுவாமியின் பாடல்களில் மலேசிய மணம் அதிகமாகவே கமழ்கிறது.

தமிழ்மணம் கமழும் தகைசால் கவிதைகள்

"சொல்வில் உயர்வுதமிழ்ச் சொல்லே – அதைத்
தொழுது படித்திடடி பாப்பா"[26]

எனப் பாரதி பாப்பாவை வேண்டியது போல வேலுசுவாமியும்,

"இன்பத் தமிழுக்கிணை பாப்பா – இங்கு
எதுவுமே இல்லையடி பாப்பா
அருமைத் தாய்மொழியைப் பாப்பா – நீ
அசட்டை செய்திடாதே பாப்பா" (பாட்டுப் பாடலாம், ப.26)

என்று பாப்பாவுக்கு அறிவுரை வழங்குகிறார். இருபது அடைமொழிகளைத் தமிழுக்குக் கொடுத்து வா வா என அழைக்கிறார். தமிழ்ப் புலவர்களிடம் கவிஞருக்கு உள்ள ஈடுபாடு சிறுவர்களிடமும் வளர வேண்டும் என்பதனால் பாரதியையும், பிற புலவர்களையும் பாடியுள்ளார்.

பாடுபொருட் புதுமை

பல புதிய பொருள்களைக் கவிதைகளின் பாடுபொருளாகக் கொண்டுள்ளமையால், வேலுசுவாமியின் கவிதைகள் சிறப்பாகக் கருதப் படுகின்றன. மழை சிறுவர்க்கு மகிழ்வைத் தருவது. ஆயின் வேளையில் தன்னுடைய படிப்புக்குத் தடையாக மழை இருப்பதைச் சிறுவன்,

"பள்ளிக்கூடம் போக வேண்டும்
பஸ்ஸும் இல்லையே
படிப்புக் கெட்டுப் போச்சுதின்று
பாரும் தொல்லையே" (பாட்டுப் பாடலாம், ப.12)

என்று வருந்துவதாகப் பாடுகிறார். சிறுவனின் இருவேறுபட்ட மனநிலையை ஒரே பாடலில் பாடியுள்ளது புதுமை.

விந்தை மனிதர் என்ற பொருளில் ஜோன் மெக் ஆடம், ஜார்ஜ் ஸ்டீவன்சன், டைம்லர் ஹென்றி போர்ட், டன்லப், கிரகாம் பெல், எடிசன், ரைட் சகோதரர்கள் ஆகியோரின் அறிவியல் கண்டுபிடிப்புகளைப் பாடுகிறார். வானொலி, மணிப்பொறி போன்றவற்றைப் பாடும் கவிதைகளின் மத்தியில் பல புதிய கண்டுபிடிப்புகளாக இருப்புப் பாதை, தொலைபேசி, நீராவி இயந்திரம் ஆகியவற்றைப் பாடுவது புதுமையானது.

உடல் நன்கு வளர்ந்தால்தான் உள்ளமும் வளரும். உடல் வளர்வதற்குச் சத்துணவு தேவை. ஆகவே,

"விட்ட மின்கள் உணவிலே
மிகுந்தி ருக்கச் செய்குவோம்" (அருள்புரிவாய், ப.33)

என்றும், சாலை விதிகளையும், சுற்றுப்புறங்களைத் தூய்மையாக வைத்துக்கொள்ளும் பழக்கங்களையும் பாடியுள்ளார். இவை பிற குழந்தைக் கவிஞர்கள் பாடாத புதிய பொருள்கள். இதனால் குழந்தைகள் தங்களோடு தொடர்புடைய பிற செய்திகளையும் அறிய வாய்ப்பாகும். மிட்டாயை விரும்பாத குழந்தைகள் இலர். அதுபோல இன்று ஐஸ்கிரீமை விரும்பாத குழந்தைகள் இருக்க முடியாது. இதனை உணர்ந்த வேலுசுவாமி ஐஸ்கிரீமையும் பாடியுள்ளார். இது புதுமை.

நாளிதழ் படிக்கும் பழக்கம் சிறுவர்களிடம் அமைய வேண்டும் என்ற விழைவின் அடிப்படையில்,

"அறிவை வளர்க்கும் நாளிதழ்
அருமை நண்பன் ஆகுமாம்
முறையாய்ப் படித்து வருபவர்
மூத றிஞர் ஆவாராம்" (அருள்புரிவாய், ப.44)

என்ப் பாடுகிறார்.

எதுகைப் பாடல்கள்

தமிழ்க் கவிதைகளில் சந்தம் பெறும் இடத்தையும், குழந்தைப் பாடல்களில் சந்தம் பெற வேண்டியதன் தேவையையும்,

"எந்தக் கவிதை எழுதிய போதும்
சந்தம் அதிலே தழைப்பது முக்கியம்
. . . . . .
தன்னிக ரில்லாத தனித்தமிழ் மொழியில்
தாளம் சந்தம் தவறா தெடுத்துக்
குழந்தைப் பாடல் கூட்டிய சிலரைத்
தேசம் அறியும் சிறுவரும் அறிவர்"[27]

எனக் கண்ணதாசன் கூறுவார். சந்தப் பாடல்களை வேலுசுவாமி 'எதுகைப்பாடல்' என்றே அழைக்கிறார். இது தவறான சொல்லாட்சி. ஒருசில பாடல்களில் எதுகை ஒத்து அமைந்து ஓசையின்பம் வழங்குகின்றது. எதுகை அமையாத பாடல்களை எதுகைப்பாட்டு என்று அழைப்பது எவ்விதம் பொருந்தும்? சந்தப்பாடல்களை 'ஓசைப்பாடல்கள்' என்று அழைப்பது பொருந்தும். ஒலி ஒப்புமை உடைய சொற்களைக் கொண்டு ஓசையின்பத்தை வழங்கும்போது பாடல்களின் பெயரைப் பாடுபொருளை அடிப்படையாய்க் கொண்டு வழங்கலாம். ஆனால்,

"ஆறும் ஒன்றும் ஏழு
அம்மா சொல்லைக் கேளு' (அருள்புரிவாய், ப.8)

என்ற பாடலை எதுகைப் பாட்டு என்று அழைப்பதைவிட ஓசைப்பாட்டு என்றழைப்பது பொருந்தும். பறவை ஒலிகளை அப்படியே பாடலில் காட்டி ஓசையின்பத்தை வழங்கும் வேலுசுவாமியின் போக்கு,

"சிட்டுக் குருவி வந்ததுமே
சிட்சிட் என்று சொன்னது" (அருள்புரிவாய், ப.8)

பாராட்டுதற்குரியது. இப் பாடல் சிறுவர்களை மிகவும் ஈர்க்கும் எனலாம்.

கதைப்பாடல்கள்

சிறுவர்களுக்குப் பழைய கதைகளையே பாடிப் புதிய நீதிகளை வழங்குகிறார். காகமும் குடமும், குரங்கும் குருவியும், காக்கையும்

வடையும் போன்ற பல கதைகளைப் பாடல்களாகப் பாடியுள்ளார். காக்கையும் வடையும் கதையில் ஆசிரியர் இடையிட்டுப் பேசுகிறார்.

"இந்தக் கதையில் காக்கைதான்
ஏமாந் ததுபோல் நீங்களும்
எந்தச் சமயம் தன்னிலும்
ஏமா றாமல் இருக்கணும்"

என்று நீதி கூறுகிறார். சில கதைகளில் முடிவை மாற்றி உள்ளார். கர்வம் கூடாது என்ற படிப்பினையைக் காக்கையும் சேவலும் கதை கூறுகிறது. புத்தி உள்ள சின்னப் பையன் மலாயா நாட்டுப் பின்னணியில் எழுதப்பட்ட கதைப்பாடல். தன்னை 'எடை குறைந்தால் பாரமாய் இராது' என முதலாளி ஏமாற்றியதால் காசைக் குறைத்துக் கொடுத்தான் சிறுவன் என்றும், 'குறைத்தால் எண்ணச் சுலபந்தான்' என்றும் கூறியுள்ளது, பெரியவர்கள் ஏமாற்ற நினைத்தால் சிறுவர்களும் ஏமாற்றுவார்கள் என்ற படிப்பினையை ஊட்டுகிறது.

தந்தையைத் திருத்திய தனயன் என்ற கதைப்பாடல் சிறந்த கதைப்பாடல்.

"தப்பா தடியேன் பெரிதாகித்
தானே உங்களுக் கூற்றணுமே
புதிய பானை வாங்குவதற்காம்
பொருளுக் கென்ன செய்திடுவேன்?'

எனத் தனயன் தந்தையைத் திருத்தியுள்ளதாகப் பாடுவது வரவேற்கத் தக்கது.

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்' மெய்ப்பொருளைக் காணும் அறிவைச் சிறுவர்களுக்கு ஊட்டியுள்ளமை போற்றுதற்கு உரியது. தென்னைமரத்தில் புல் என்ற கதைப்பாடல் நகைச்சுவை பயப்பது.

புதுநோக்கு

வேலுசுவாமி தாம் கவிஞராய் இருந்ததோடன்றிப் பல எதிர்காலக் கவிஞர்கள் உருவாக வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் 'பாட்டெழுதப் பழகுங்கள்' என்ற நூலின் மூலம் பாட்டெழுதப் பயிற்சியைக் கொடுக்கிறார். எடுத்துக்காட்டாக,

". . . . . நிலா வானிலே
வந்து . . . . . .
கொக்க ரக்கோ என்றுமே
. . . . . சேவல் . . . . . .
பட்டம் . . . . . ஏறுது
. . . . . காற்றில் ஆடுது"

விடுபட்ட இடங்களில் கருத்துகளுக்கு ஏற்பச் சொற்களை அமைக்க வேண்டும். முதல் எழுத்துக்குத் தகுந்தாற் போலத் தொடங்க வேண்டும். இப்படிப் பல பாடல்களைப் பயிற்சி செய்வது பயனுள்ள கலை. இளங்கவிஞர்கள் உருவாக இவ் வழி உயர்ந்த வழியாகும்.

விடுகவிதைகள்

உரைநடையில், வழங்கிய விடுகதைகளைக் கவிதை வடிவில் எழுதியதோடன்றி மலேசியாவிற்குத் தகுந்தவாறு,

"வேர்தான் உண்டு மரமல்ல
உறையும் உண்டு மலரல்ல
அதனைப் பயிரிட முடியாது
அதிகம் கிடைக்கும் பாசாரில்"

எனக் காளானையும்,

"தாடி உண்டு கிழவனல்ல
ஈட்டி உண்டு வீரனல்ல
கையிலும் காலிலும் கோல்உண்டு
தலையில் நிறைய மயிருண்டு"

என இறாலையும் விடுகவிதையாகப் பாடியுள்ளார். "விடுகவிதைகள் நூறு" என்ற வேலுசுவாமி நூல் சிறுவர்களால் விரும்பப்படும் தன்மை உடையது.

கட்டுரை நூல்

சிறுவர்க்குப் புரியும் எளிய நடையில் "திருவள்ளுவர் பேசுகிறார்" என்ற கட்டுரை நூலை வெளியிட்டார்.

சிறுகதைகள்

ஆங்கில, மலாய்மொழிக் கதைகளைத் தமிழில் மொழிப்பெயர்த்துத் 'திருமகள்' என்ற மாணவர் இதழில் வெளியிட்டுள்ளார். சில நூலாகவும் வெளிவந்துள்ளன.

நாகராணி, வெண்கலப் பன்றி ஆகிய நெடுங்கதைகளும், சேவல் சண்டை போன்ற சிறுகதைகளும் நூலாக வெளியிடப்பட்டுள்ளன.

தான் நூல் எழுதி வெளியிடுவது ஒருவகை இலக்கியத் தொண்டு; பிறருடைய எழுத்துகளை அச்சுவாகனமேற்றி மக்கள் மத்தியில் உலவவிடுவது மற்றொரு இலக்கியத் தொண்டு. இவ்விரு வகையாலும் ஒல்லும் வகையெல்லாம் குழந்தையிலக்கியத் தொண்டாற்றி வருபவர் வேலுசுவாமி. பொன்முடியின் 'பறவைக் கப்பல்', மகேசுவரியின் 'பிறந்தநாள் பரிசு', பார்வதியின் 'சின்னக் கோழிக்குஞ்சு', சி. வே. கிருஷ்ணனின் 'பூம்பூம்' ஆகியவை வேலுசுவாமிக்கு உரிய 'திருமகள்' அச்சக வெளியீடுகள்.

முடிவுரை

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இரு கவிஞர்களில் முரசு. நெடுமாறனின் பணியே தொடர்கின்றது. ஆயின் வேலுசுவாமி சமயத் துறையில் மனம் ஒன்றிச் சமயத் தொண்டாற்றுகிறார். முரசு, நெடுமாறனின் பாடல்களில் தமிழ்மணமும் வேலுசுவாமியின் கவிதை களில் மலேசிய மணமும் கமழக் காணலாம். மொழியின் நோக்கம் உணர்த்துவது என்ற அடிப்படையில் தமிழினையும் மலேசியச் சொற் களையும் கலந்து கவிதை பாடியுள்ளார் வேலுசுவாமி எனலாம்.

தொடரும் முரசுவின் இலக்கியப் பணிகளாலும், மாணவர் பண்பாட்டு விழாப் போன்ற நடைச் செயலாக்கப் பணிகளாலும் அவரை 'மலேசிய வள்ளியப்பா' என அழைத்தல் முற்றிலும் பொருந்தும்.

பாவலர்க்கோர் பரிந்துரை

அழ. வள்ளியப்பா குழந்தை எழுத்தாளர்களை ஒருங்கிணைத்துக் குழந்தை எழுத்தாளர் சங்கம் ஒன்றை ஏற்படுத்தினார். பல நூல்கள் எழுதிய குழந்தைக் கவிஞரின் பணியிலும் சங்கந் தொடங்கிய சால்பு போற்றுதற்கு உரியது. மலேசியாவில் தமிழ் எழுத்தாளர் சங்கம், அகில மலாயாத் தமிழர் சங்கம், மலேசியத் திராவிடர் கழகம், தமிழ் இளைஞர் மணிமன்றம், தேசிய நிலநிதிக் கூட்டுறவு சங்கம் போன்ற அமைப்புகள் உள்ளன. மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெரும்பங்கு ஆற்றியுள்ளது.

அதுபோல மலேசியாவில் பெருகிவரும் சிறுவர் இலக்கியச் செல்வர்களை ஒருங்கிணைத்துக் குழந்தை எழுத்தாளர் சங்கம்

உருவாதல் வேண்டும். தனிப்பட்ட விருப்பு வெறுப்பின்றி நடுவு நிலைமையோடு, இலக்கியப் பணியையே முழு நோக்கமாகக் கொண்டு, சிறுவர் இலக்கியங்களை மலிவுப் பதிப்புகளாக வெளியிட்டுப் பொதுமக்களிடையே சிறுவர் இலக்கியங்களுக்கு ஆதரவைப் பெருக்க வேண்டும். இதன் மூலம் சிறுவர் இலக்கியங்கள் பெருக வழிவகுக்கலாம். குழந்தை எழுத்தாளர்கள் வேறு துறைகளில் ஈடுபட்டுச் சிறுவர் இலக்கியப் பணியைக் கைவிடும் முயற்சியைத் தடுத்து அவர்களை ஊக்குவிக்கலாம்.

மலேசியச் சிறுவர்க்கு உரிய கவிதைகள் சில குழந்தைகளுக்குப் புரியும் எளிமையுடன் எழுதப்படுவதில்லை. சில கவிதைகள் சிறுவருக்காக உரியன என்ற முத்திரையோடு வெளிவருகின்றன. ஆயின், அவை பொருளாலும், சொல்லும் முறையாலும் பெரியவர்கட்கு எழுதப்பட்ட கவிதைகளாகவே தோன்றுகின்றன.

சிறுவர்களுள் ஆறு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் பாடக்கூடிய ஓசை நயமிக்க பாடல்கள் பெருகவேண்டும். 'நிலா நிலா ஓடிவா' போன்ற பாடல்கள் பெருக வேண்டும். 'டிவிங்கிள் டிவிங்கிள், ஹிக்கரி டிக்கரி டாக்' போன்ற ஆங்கிலப் பாடல்களை ஒத்த ஓசைச் சிறப்புடைய பாடல்களைத் தமிழில் எழுதுவதால் மொழி ஆர்வத்தை அப் பாடல்கள் மூலமாகச் சிறுவர்களிடையே ஊட்டலாம்; சந்தத்தால் குழந்தை மனங்களைக் கவர்ந்துவிடலாம். 'எனவே கவிதை என்பது செவியால் உணரப்படும் கலை; அது ஒலிச்சித்திரம்' என உணர்ந்து கவிஞர்கள் கவிதை படைக்க வேண்டும். புலமைக்குச் சற்று இடையீடு கொடுத்துச் சிறுவர்க்குப் புரியும் பொருளிலேயே பாடவேண்டும். பாரதியின் அறிவுரை குழந்தைப் பாவலர்க்குப் பயனளிக்கும் பொருளுரையாகும்.

> "உலகத்தாருக்குப் பொருள் விளங்காதபடி இலக்கியம் செய்வோன் அந்தச் சக்தியைக் கரித்துணியாலே மூடுகிறான்; வெள்ளைக் கலை உடுத்துவதில்லை. இலக்கியத்துக்குத் தெளிவும் உண்மையும் உயிரெனலாம்." [29]

குழந்தையின் பிஞ்சு மனத்தில் நஞ்சை விதைக்காதவாறும் பாடவேண்டும்.

தமிழகத்தின் இலக்கிய வளர்ச்சி மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஒரு தூண்டுகோலாய் விளங்கியது மறுக்க இயலா உண்மையாகும். தமிழகக் குழந்தை எழுத்தாளர்கள் விஞ்ஞான

உண்மைகளைக் குழந்தைகளுக்குக் கூறுவதில் சாதனை புரிந்திருக் கிறார்கள். ஆயின், மலேசியாவில் அன்றாட வாழ்வில் அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்தும் தமிழர்கள், தங்கள் குழந்தைகளுக்குச் சமகால அறிவியல் சிந்தனைகள் ஊட்டப்பட வேண்டும் என்பதை மறந்துவிடுகிறார்கள். இத்தகு சமகால அறிவியல் கண்டுபிடிப்புகளைத் தமிழ்ச் சிறுவர்கள் அறியத் தமிழ்ச் சிறுவர் இலக்கியம் படைக்கும் எழுத்தாளர்கள் அறிவியல் கண்டுபிடிப்புகளைக் காட்டிப் புதிய சிந்தனைகட்கு வழிவகுக்க வேண்டும்.

அடிக்குறிப்புகள்

1. கலைக்களஞ்சியம், தொகுதி 4, ப.102
2. வே. தா. கோபாலகிருட்டிணன், குழந்தை இலக்கிய வரலாறு, பக். 4–7
3. தொல்காப்பியம், பொருளதிகாரம், 488
4. மேலது – உரை
5. மேலது – 487ஆம் நூற்பா உரை
6. தொல்காப்பியம், புறத்திணை இயல், 8
7. கதி. கணேசன், வள்ளியப்பா ஒரு வழிகாட்டி, ப.16
8. பூவண்ணன், சிறுவர் இலக்கியச் செல்வர்கள், ப.5
9. அழ. வள்ளியப்பா, வளரும் குழந்தை இலக்கியம், ப.9
10. மேலது, ப.10
11. கதி. கணேசன், வள்ளியப்பா ஒரு வழிகாட்டி, ப.27;
    கோ.வில்வபதி, 'குழந்தை இலக்கியம்' இன்றும் நாளையும்;
    முரசு.நெடுமாறன், 'குழந்தை இலக்கியம்'; ஆசிரியதீபம், மலேசியா
12. அழ.வள்ளியப்பா, வளரும் குழந்தை இலக்கியம், பக்.14–15
13. கதி.கணேசன், வள்ளியப்பா ஒரு வழிகாட்டி, ப.163
14. மா.இராமையா, மலேசியத் தமிழ் இலக்கிய வரலாறு, ப.28
15. அழ. வள்ளியப்பா, வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம் ப. 52
16. மேலது, பக். 54–55
17. கட்டுரையாளர் – கவிஞர் முரசு.நெடுமாறன் நேர்காணல், 26.7.87

18. கதி.கணேசன், வள்ளியப்பா ஒரு வழிகாட்டி, ப. 43
19. மேலது, ப. 43
20. திருக்குறள், 383
21. அழ.வள்ளியப்பா, வளர்ந்துவரும் குழந்தை இலக்கியம், ப. 42
22. திருக்குறள், 444
23. நற்றிணை நானூறு, 280
24. அறப்பளீசுவர சதகம், ப.31
25. யாப்பருங்கலக்காரிகை, ப. 74
26. புறநானூறு
27. பாரதியார் கவிதைகள், ப. 175
28. கண்ணதாசன், அருள்புரிவாய், முன்னுரை
29. அழ. வள்ளியப்பா, வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம், ப.20
30. அழ. வள்ளியப்பா, வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம், ப.50

துணைநூற் பட்டியல்

கட்டுரைகள்

1. பூவண்ணன், மலேசியச் சிறுவர் இலக்கியம், மலேசியத் தமிழ் இலக்கியம், கருத்தரங்கம். சென்னை – 19
2. முரசு. நெடுமாறன், குழந்தை இலக்கியம், ஆசிரியதீபம், மலேசியா, 1974–75
3. முரசு. நெடுமாறன், பரிதி மறைந்தது, கையெழுத்துப்படி
4. வள்ளியப்பா, அழ. குழந்தை இலக்கிய வளர்ச்சி, 5 ஆம் உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்புமலர், சென்னை, 1981
5. வில்வபதி, கோ. குழந்தை இலக்கியம் இன்றும் நாளையும், மாணவர் மன்றம், சென்னை
6. வேலுசுவாமி, சி., குழந்தை இலக்கியத் துறை, தமிழ்நேசன், 11.8.1968
7. வேலுசுவாமி, சி., மலேசியாவில் குழந்தைக் கவிஞர்கள், திருமகள் வெளியீடு
8. மலேசியத் தமிழ் நூல்கள் உலகில் குழந்தைப் பாவலர்கள், தமிழ் ஒளி, இதழ் 13, 1981–82

நூல்கள்

1. இராமையா, மா., மலேசியத் தமிழ் இலக்கிய வரலாறு, முதல் பதிப்பு சூன், 1978
2. இராமகிருட்டிணன், மா, சுப்பிரமணியம், கெ., பூஞ்சிட்டு.
3. கணேசன், கதி, குழந்தை இலக்கியத்தில் வள்ளியப்பா ஒரு வழிகாட்டி, அருள்சிவம் நூலகம், காரைக்குடி, இரண்டாம் பதிப்பு, நவம்பர், 1984
4. பரிதி, முழுநிலா, பூங்கா பிரகரம், கோலாலம்பூர், முதல் பதிப்பு, 1980
5. பூவண்ணன், சிறுவர் இலக்கியச் செல்வர்கள், வானதி பதிப்பக வெளியீடு, முதற்பதிப்பு, ஜனவரி, 1976
6. வள்ளியப்பா, அழ. (தொ.ஆ) சிறுவர் கதைப் பாடல்கள், தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு சங்க வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, 1977
8. கலைக்களஞ்சியம்
9. சதகத்திரட்டு, கழகவெளியீடு, மறுபதிப்பு, 1964
10. பாரதியார் கவிதைகள், பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு, ஐந்தாம் பதிப்பு, 1975

6

பாரதியும் நாமக்கல் கவிஞரும்

சிவ. மாதவன்

சுப்பிரமணிய பாரதியார் (1882–1921), நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை (1888–1972) இருவரும் இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் வீறுகொண்டெழுந்த நாட்டு விடுதலைப் போராட்டத்தில் பல வழிகளில் பங்குகொண்டு தமது கடமையை ஆற்றினர். இவ் விரு கவிஞர்களும் தத்தம் கவிதைகளின் வாயிலாகத் தமிழக மக்களிடையே விழிப்புணர்வையும் விடுதலை உணர்ச்சியையும் தூண்டினர்; அந்நிய ஆதிக்கத்தை விரட்டிட வேண்டி மக்களை ஒன்றுதிரட்டினர்; இவர்களது நாட்டு விடுதலை தொடர்பான படைப்புகள் அக்காலத்தில் போராட்ட வீரர்களுக்கு நல்ல ஆயுதங்களாக விளங்கின. இவ்விரு கவிஞர்களின் நாட்டு விடுதலை குறித்த படைப்புகளை ஒப்பிட்டு ஆராய்வது இக் கட்டுரையின் நோக்கம்.

பாரதியார், நாமக்கல் கவிஞர் இருவரின் நாட்டு விடுதலைப் பாடற்கருத்துகள், இருவரும் விடுதலையுணர்வை வெளிப்படுத்தியுள்ள பாங்கு, நாமக்கல் கவிஞரிடம் காணப்படும் பாரதியின் தாக்கம் என்னும் மூப் பிரிவுகளில் இவ் வொப்புமை முயற்சி அமைகிறது.

இரு கவிஞர்களின் நாட்டு விடுதலைப் பாடற்கருத்துகள்

பாரதி நாட்டு விடுதலை தொடர்பாகப் பாடிய பாடல்களின் எண்ணிக்கை 42; நாமக்கல் கவிஞரின் பாடல் எண்ணிக்கை 20. பாடல்

எண்ணிக்கையைப் பொறுத்த அளவிலும் அவற்றில் இடம்பெற்றுள்ள கருத்துகளின் அடிப்படையிலும் பாரதியே முதன்மையானவராகத் திகழ்கின்றார். இக் கவிஞர்களின் நாட்டு விடுதலைப் பாடல்கள் நாட்டின் பெருமையுரைத்தல், விடுதலையின் மேன்மை கூறல், ஒற்றுமையை வலியுறுத்தல், கொடியை வணங்கிப் புகழ்தல், தலைவர்களைப் புகழ்தல் என்னும் கருத்துகளின் அடிப்படையில் அமைந்துள்ளன.

நாட்டின் பெருமையுரைத்தல்

பாரதியின் பார்வையில் பாரத நாடு தாயாக, தெய்வமாக உருவகிக்கப்பட்டுள்ளது. அவரது பாடல்களில் 'முன்னோர்கள் சிறப்புற வாழ்ந்த நாடு; அவர்களுடைய பெருமை சீரியது; நாட்டின் நீர்வளம், நிலவளம், கனிவளம் போன்றவற்றிற்கு ஈடில்லை; இறைமை நெறியைப் பின்பற்றி எங்கும் எதிலும் இறைவனைக் காணும் மக்களின் உரிமையுடைய பூமி' என்று பாரத நாட்டின் பெருமை வலியுறுத்தப்பட்டுள்ளது.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே –அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் – வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே" (பாரதி : ப. 135)

என்னும் பாடலில் முன்னோரின் மேன்மையை முன்னிறுத்தி நாட்டுப் பற்றை விளக்கும் பாங்கு இடம்பெறக் காணலாம்.

ஞானத்தில், மோனத்தில், மானத்தில், அன்னதானத்தில், கானத்தில், கவிதையில், தீரத்தில், வீரத்தில் ..... இப்படிப் பல நிலைகளில் பாரதநாடு பாரிலுள்ள நாடுகளுக்கெல்லாம் திலகமாகத் திகழ்வதைப் பாரதி மொழிந்துள்ளார் (பாரதி : ப.136). "மன்னும் இமயமலை யெங்கள் மலையே; இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே" (பாரதி : ப. 139); "இனியநீர்ப் பெருக்கினை; இன்கனி வளத்தினை" (பாரதி : ப. 161) என வருவன பாரத நாட்டின் வளத்தை விளக்கும் பாரதியின் பாடலடிகளாம். பாரத நாட்டை ஆரியராணியாகவும், பராசக்தியாகவும் (பாரதி : ப. 142) கருதும் நிலையைப் பாரதியிடத்துக் காண முடிகிறது. இறைவன் வேறு; நாடு வேறு; நாட்டுமக்கள் வேறானவர் என்னும் இருமை நிலை கடந்த ஒருமையுணர்வில் நிலைத்த பாரதியின் உளப்பாங்கை இதன்வழி அறிகின்றோம். நாட்டுப் பெருமையை – பழம்பெருமையை – எடுத்துக் கூறுவதன்வாயிலாக மக்களிடையே விடுதலை உணர்வை ஊட்ட முடியும் என்னும் பொதுக்கொள்கையைப் பாரதி பின்பற்றியுள்ளார்.

நாமக்கல் கவிஞரும் பாரதியைப் பின்பற்றி நாட்டின் பெருமையை எடுத்துக் கூறியுள்ளார். இவர், பாரத நாட்டைக் கடவுள் கட்டிய வீடு நம் பாட்டன் சொத்து எனவும், நமக்கே முற்றிலும் சொந்தமானது எனவும் உரிமை கொண்டாடிப் போற்றுகின்றார் (நா. க. பக். 116–17). பாரதி போன்றே பாரத நாட்டை மாதாவாக – இந்தியத் தாயாக – உருவகித் துள்ளார். இவர் தமது பாடலொன்றில்,

"காடும் மலைகளும் கனிதரும் சோலைகள்
ஓடும் நதிகள் உள்ளன எவையும்
இங்கே பிறந்தவர் எங்களுக் கில்லையோ?" (நா.க.ப.13)

என வினாவெழுப்பி நமது நாட்டின் வளம் நமக்குப் பயன்படாத நிலையை எடுத்துக் காட்டி நாட்டுப்பற்றினை ஊட்டுகின்றார்.

பாரதி, பாரத நாட்டை இறைமையோடு இணைத்தது போன்று இவர் இணைக்கவில்லை. விடுதலைக்காக இறைவனை நோக்கி வேண்டுவதாகப் பாடியுள்ள போதிலும் நாட்டையே கடவுளாக எண்ணும் நிலை நாமக்கல் கவிஞரிடம் அழுத்தமாக வெளிப்படவில்லை என்றே கூட்ட வேண்டும். மேலும் பாரதியின் நாட்டுப் பெருமை கூறும் பாடல்கள் ஏற்படுத்தும் உணர்வுச் சுழிப்பை நாமக்கல் கவிஞரின் பாடல்கள் ஏற்படுத்தவில்லை.

விடுதலையின் மேன்மை கூறல்

விடுதலையின் மேன்மை இரு கவிஞர்களாலும் ஆழமாகவும் உணர்ச்சியை மிகுவிப்பதாகவும் பாடப்பட்டுள்ளது. பாரதி விடுதலையைப் பயிராகவும், தேவியாகவும், தாகமாகவும் உருவகிக்கின்றார். பாரதி, 'சுதந்திரப் பயிர்' கருகிவிடக் கூடாது என இறைவனை நோக்கி விடுக்கும் வேண்டுகோளில் துன்ப இழையும், துயருற்ற உள்ளத்தின் வேதனையும், ஆறுதல் வேண்டி நிற்கும் ஆதரவற்றோரின் அவலம் போன்றதோர் உணர்வும் வெளிப்படுகின்றன. பாரதியின் 'சுதந்திர தேவியின் துதி'ப் பாடல் எத்துணை இடர்வந்தபோதும் விடுதலையுணர்வை மறக்காத நிலை ஒவ்வோர் இந்தியனுக்கும் தேவை என்பதை வலியுறுத்துகிறது. உண்மையான விடுதலையை வேண்டி நிற்பவர் வேறெதையும் விரும்ப மாட்டார் என்பதைச் 'சுதந்திரப் பெருமை' என்னும் பாடல்வழிப் புலப்படுத்து கிறார். இவை யனைத்தையும்விட, விடுதலை கிடைத்துவிட்டதாகக் கற்பனை செய்துகொண்டு மகிழ்ச்சிப் பெருக்கால் ஆடிப்பாடும் நிலையைச் 'சுதந்திரப்பள்ளு' மூலம் அறிகின்றோம்.

நாமக்கல் கவிஞரும் விடுதலையை ஒரு பயிராகவும் (கற்பகச் செடி), தேவியாகவும் உருவகித்துள்ளார். விடுதலையில்லா நாட்டில் விளையும் கேடுகளைச் சுட்டிக் காட்டி அதன் மேன்மையையும் இன்றியமை யாமையையும் இவர் வலியுறுத்துகின்றார்.

"அன்பறம் வளர்ந்திடாமல் ஆற்றலும் அறிவும் குன்றும்
வன்புகள் சூதும் வாழும் வழக்குகள் வளரும் ....
கல்வியும் கலைகள் யாவும் களைமிகும் பயிர்க ளாகும்
..... நடுநிலை ஞாயங் கெட்டுத்
தொல்லைகள் கட்சி கட்டும் சுதந்தரம் இழந்த நாட்டில்"

(நா.க.,ப.133)

என்னும் பாடலடிகள், விடுதலையில்லா நாட்டில் விளையும் கேடுகளைப் பட்டியலிட்டுள்ளன. இதுபோன்றே இவரது 'சுதந்தரமில்லா ஒரு நாடு' என்னும் தலைப்பமைந்த பாடலில் விடுதலையடையாத நாடு புலியும் பேயும் மிகுந்துள்ள பெருங்காடு (நா.க.,ப.135) என உருவகிக்கப்பட்டுள்ளது. இத்தகு நிலையினை நீடிக்கவிடாமல் விடுதலைக்கு முயற்சி செய்ய வேண்டும் என்னும் உணர்வினை நாட்டு மக்களுக்கு ஊட்டியுள்ளார் நாமக்கல் கவிஞர்.

'கற்பகச் செடி' என்னும் தலைப்பமைந்த கவிஞரின் பாடல் நாடு விடுதலையடைந்த பிறகு எழுதப்பட்ட பாடலாகும். இதிலும்,

"சுதந்தரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகந்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதந்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?" (நா.க., ப.140)

என விடுதலையின் மேன்மை விளக்கப்பட்டிருக்கின்றது. இப் பாடலின் இறுதியில் விடுதலையைக் கற்பகச் செடியாக உருவகித்து அதைக் காயவும் கருகவும் விடமாட்டோம்; பக்தியுடன் காப்போம்; அவ்வாறு காப்பதற்கு ஈசன் துணைபுரிவான் என உறுதி கூறுகின்றார் கவிஞர்.

"கைத்தலம் கிடைத்துள கற்ப கச்செடி – இதைக்
காயவும் கருகவும் விடமாட்டோம்
சத்திய சபதம் பக்தியில் காப்போம்
சர்வேசன் துணைபுரிந் திடுவான்" (நா.க., ப.140)

என்னும் நாமக்கல் கவிஞரின் உறுதியுரை,

"தண்ணீர்விட் டோவளர்த்தோம்? சர்வேசா இப்பயிரைக்
கண்ணீராற் காத்தோம்; கறுகத் திருவுளமோ?" (பாரதி:ப.176)

என்னும் பாரதியின் உருக்கமிகு வேண்டுகோளுக்கு விடைபோன்று அமைந்துள்ளமை ஈண்டு நினைக்கத்தக்கது.

'சுதந்தரதேவி' பாடலும் விடுதலைக்குப் பிறகு எழுதப்பட்ட பாடலாகும். இதன்கண்,

"சுதந்தர தேவியைத் தொழுவோம் வாரீர்....
கெடுதலை நீக்கிடக் கிருபைகள் செய்யும்
கேண்மையின் வடிவே சுதந்தர தெய்வம்" (நா.க.ப.135)

என விடுதலையைத் தேவியாக – தெய்வமாகச் சித்திரித்துள்ளார். இதில் இவ்விரு கவிஞர்களும் ஒரே மாதிரியாகச் சிந்தித்துள்ளமை வெளிப் படுகின்றது. விடுதலையின் மேன்மையை வலியுறுத்துவதில் இவர்க ளிருவரும் சிறப்பாகவும் நிறைவாகவும் செயல்பட்டுள்ளனர்.

ஒற்றுமையை வலியுறுத்தல்

நம் மக்களிடையே மொழி, சாதி, சமயம் காரணமாகப் பிரிவுகளும் வேற்றுமைகளும் ஏற்றத்தாழ்வுகளும் மிகுந்து இருந்தமையால் ஆங்கிலேயர் நம்மை நெடுநாள்கள் அடிமைப்படுத்தி வைத்திருந்தனர். நம்மிடையே தோன்றிய பிரிவுகளும் பூசல்களும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு மேலும் வலிவூட்டின. இந்த நிலையில் அந்நியரிடமிருந்து விடுதலை பெறும் நோக்கில் மேற்கொள்ளப்படும் போராட்டத்திற்கு மக்களின் ஒன்றுபட்ட – ஒருமித்த – ஆதரவு தேவை என்பதைப் பாரதியும் நாமக்கல் கவிஞரும் உணர்ந்தனர். இந்து – முகமதியர் கலகச் சூழல், இந்தியருள் ஒவ்வொரு மாநிலத்தவரும் தாமே மற்றவர்களைக் காட்டிலும் சிறந்தவர்கள், அறிவுடையோர், திறமையுடையோர் என்று இறுமாப்புப் பேசி வேற்றுமை பாராட்டி வந்த சூழல் ஆகியவற்றிற்கிடையே இந்தியர் அனைவரும் ஒருதாய் வயிற்று மக்கள்; அவர்களிடையே வேற்றுமை இல்லை என்னும் கருத்தை இவ்விரு கவிஞர்களும் ஆழமாக வலியுறுத்தினர்.

"ஜாதி மதங்களைப் பாரோம் – உயர்
ஜன்மம்இத் தேசத்தில் எய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே – அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே" (பாரதி: ப.133)

எனவும்,

"ஒன்றுபட் டால்உண்டு வாழ்வு – நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே" (பாரதி: ப.134)

எனவும் வருகின்ற பாரதியின் பாடற்பகுதிகள் நம்மிடையே பிரிவுகள் இல்லை எனக் கூறுவதுடன் நாம் ஒன்றுபடுவதால் விளையும் பயன் களையும் சுட்டுகின்றன.

பாரதியார், தம் கவிதைகளில் அடிக்கடி ஒற்றுமையை வலியுறுத்துவதை நாம் காணமுடிகிறது. அவர் காஷ்மீரம் முதல் கன்னியாகுமரிவரை பாரத நாட்டை ஒரு குடும்பமாகவே எண்ணியுள்ளார். முப்பது கோடி மக்கள் என்று அவர் குறிப்பிடுவது அன்றைய இந்தியரின் மொத்த எண்ணிக்கையையே. பல பாடல்களில் இந்த எண்ணிக்கையைக் குறிப்பிட்டு நாமனைவரும் ஒரே நாட்டினர்; ஒரே குடும்பத்தினர்; ஒரே பிரிவினர்; நல்லது தீயது எதுவரினும் நம் மனைவருக்கும் அது பொதுவானது என்னும் எண்ணத்தை எழுப்பி நம்மை ஒன்றுபடுத்தி ஓரணியில் திரட்டுகின்றார். சான்றாக,

"முப்பது கோடியும் வாழ்வோம் – வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்" (பாரதி:ப.134)

"முப்பது கோடி முகமுடையாள் – உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள்" (பாரதி: ப.144)

"அறுபது கோடி தடக்கை களாலும்
அறங்கள் நடத்துவள் தாய்" (பாரதி: ப.144)

முப்பது கோடி ஜனங்களின் ஸங்க
முழுமைக் கும்பொது உடைமை" (பாரதி: ப.160)

"முப்பது கோடிவாய் நின்னிசை முழங்கவும்
அறுபது கோடிதோள் உயர்ந்துஉனக் காற்றவும்" (பாரதி: ப.161)

என வரும் பாடலடிகளில் இக் கருத்து அழுத்தம் திருத்தமாக வெளிப்படக் காணலாம்.

நாமக்கல் கவிஞரும், நாட்டின் விடுதலைக்கு நம்மிடையே ஒற்றுமை இன்றியமையாதது என்பதை வலியுறுத்தியுள்ளார். 'இளைஞரின் சபதம்' என்னும் தலைப்பிலமைந்த,

"இமயம் தொட்டுக் குமரி மட்டும்
இங்கி ருக்கும் யாவரும்
இந்தி யாவின் மக்க ளென்ற
சொந்தம் காணச் செய்குவோம்
சமயம் என்றும் ஜாதி என்றும்
சண்டை யற்று வாழவும்
... ...
அமைதி யாக தேச சேவை
அச்ச மின்றி ஆற்றுவோம் " (நா.க.,ப. 153)

என்னும் இப் பாடலடிகள் ஒன்றுபட்ட வாழ்வை மேற்கொள்ளும் இளைஞரின் சூளுரையாக அமைகின்றன.

ஒற்றுமையை வலியுறுத்தும் பாடல்களை நாமக்கல் கவிஞரைவிடப் பாரதியார் மிகுதியாகப் பாடியுள்ளார். எண்ணிக்கையோடு அல்லாமல் ஒற்றுமையின் இன்றியமையாமை பாரதியின் பாடல்களில் தெளிவாகவும், அழுத்தம் திருத்தமாகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. பாரதியின் இப் பாடல்கள் 'ஒற்றுமையின்றேல் உயர்வில்லை' என்னும் கருத்தைப் படிப்போர் மனத்தில் எளிதில் இடம்பெறச் செய்கின்றன. நாமக்கல் கவிஞரின் பாடல்களில் ஒற்றுமையுணர்வு அங்குமிங்குமாகவே வலியுறுத்தப்படுகின்றது. மேலும் அக் கருத்துகள் பாரதியின் கருத்துகள் போன்று பளிச்செனப் பாய்ந்து, ஊடுருவிச் சிந்தையை நிறைப்பதாகக் கொள்ளவியலாது. எனவே நாட்டுமக்களின் ஒற்றுமையை வலியுறுத்தும் தன்மை பாரதியின் கவிதைகளில் மேலோங்கி நிற்கின்றதெனலாம்.

கொடியை வணங்கிப் புகழ்தல்

அடுத்து, இரு கவிஞர்களிடையேயும் 'கொடி வணக்கம்' கவிதைப் பொருளாகியுள்ளமை நோக்கத்தக்கது. பாரதியார் 'மாதாவின் துவஜம்' என்னும் தலைப்பில் இந்திய நாட்டுக்குரிய கொடியைத் தாமே கற்பனையில் உருவாக்கிப் புகழ்கின்றார். பாரதியின் பாடலில் புகழப்படும் கொடி இன்று நாம் காணும் தேசியக் கொடியன்று. 'தாயின் மணிக்கொடி' எனக் குறிக்கப்பெறும் அக் கொடியில் இந்திரனின் வச்சிரமும், இளம்பிறையும் இடம்பெறுகின்றன. இந்திரனின் வச்சிராயுதம் இந்துக்களின் மதிப்புக்குரிய ஒன்று. இளம்பிறை முகமதியரின் வழிபடுபொருள். இவ் விரண்டும் அக் கொடியில் இடம்பெற்றிருப்பதன்

மூலம் இந்து–முகமதியர் ஒற்றுமையை வலியுறுத்தும் நோக்கில் அவர் சிந்தை செலுத்தியுள்ளமையை அறிகின்றோம். தமிழர், தெலுங்கர், கன்னடர், மராட்டர் முதலான இந்தியப் பெருமக்கள் அனைவரும் ஒருங்கு திரண்டு, கொடிவணக்கம் செய்வதாக இப் பாடலைப் பாரதி அமைத்துள்ளார். இதன் வாயிலாக இந்தியமக்களின் ஒற்றுமையை அவர் வலியுறுத்தியுள்ள பாங்கு புலனாகின்றது.

நாமக்கல் கவிஞர் கொடிவணக்கமாக மூன்று பாடல்களைப் புனைந்துள்ளார். இப் பாடல்கள், 'சாந்தி தரும் கொடி', 'இணையில்லாக் கொடி', 'கொடி வணக்கம்' என்னும் தலைப்பில் அமைகின்றன. இப் பாடல்கள் இன்றுள்ள தேசியக் கொடியையே குறிக்கின்றன. கொடியில் உள்ள மூவண்ணங்கள் சுட்டும் கருத்துகளை எடுத்துக்கூறி அக் கொடி பற்பல ஊழி பறந்திட வேண்டும் என்று கவிஞர் வாழ்த்துகிறார். கொடியின் கீழ் நின்று வணங்கிடும்போது நம்மிடையே யுள்ள ஏற்றத்தாழ்வுகள் மறைவதாக இவர் குறிப்பிடுகின்றார். எல்லாவற்றிற்கும் மேலாக,

"நற்பெயர் நாட்டிற் காக்கும்
நமக்கிந்தக் கொடியே தெய்வம்"

(நா.க.ப.151)

என்று கொடியைத் தெய்வமாகப் போற்றும் பாங்கு நாமக்கல் கவிஞரிடம் காணப்படுகிறது. இங்கு, பாரதியைவிட ஒருபடி மேலே சென்றுவிடுகிறார். இவர் தாம் வாழ்ந்த காலத்தில் நிலவிய கொடிவணக்க மரபினைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டமை இப் பாடல்களின் வழிப் புலனாகின்றது. ஆழ்ந்து நோக்கும்பொழுது இவ்விரு கவிஞர்களின் கொடிவணக்கப் பாடல்கள் நாட்டு ஒற்றுமையை வலியுறுத்துவனவாக உள்ளமை தெளிவு.

தலைவர்களைப் புகழ்தல்

விடுதலைக்காகப் பாடுபட்ட – பாடுபடும் – தலைவர்களைக் கவிஞர்கள் புகழ்ந்து பாடுதல் எங்கும் காணக்கூடிய மரபாகும். அவ்வகையில் பாரதி, நாமக்கல் கவிஞர் இருவரும் பாடல்கள் பல பாடியுள்ளனர். பாரதி பாலகங்காதர திலகர், தாதாபாய் நவரோஜி, பூபேந்திரர், லஜபத்ராய், வ.உ.சி., மகாத்மா காந்தி ஆகியோர் ஆற்றிய தொண்டின் அடிப்படையில் அவர்களைப் புகழ்ந்துள்ளார். பாரதி பாடிய இத் தலைவர்களுள் மகாத்மா காந்தி மட்டுமே விடுதலைப் போராட்டத்தில்

மிதவாதப் போக்கை மேற்கொண்டவர். பாரதியார் பிற மிதவாதத் தலைவர்களைப் பாடாததன் காரணம் அவர் திலகரின் தீவிரவாதத்தை ஆதரித்தமையே யாகும்.

நாமக்கல் கவிஞர் திலகர், தாதாபாய் நவரோஜி, கோபாலகிருஷ்ண கோகலே, வ.உ.சி., மகாத்மா காந்தி, வ.வே.சு. ஐயர் ஆகியோரைப்பற்றிப் பாடல்கள் இயற்றியுள்ளார். இவர்களுள் காந்தியின்மீது மட்டும் 35 பாடல்கள் பாடியுள்ளார். காந்தியின் அரசியல் இயக்க நுழைவை ஒட்டியே கவிஞரின் அரசியல் ஈடுபாடும் அமைந்தது. நாமக்கல் கவிஞர் காந்தியைத் தம் அரசியல் ஆசானாக ஏற்றுக்கொண்டார்; காந்தியின் கொள்கை களையும் விடுதலைப் போரில் அவர் மேற்கொண்ட நெறிமுறைகளையும் பெரிதும் போற்றிப் பின்பற்றினார். எனவே, மற்றத் தலைவர்களைவிடக் காந்திகுறித்து அவர் அதிகமாகப் பாடியுள்ளார். பாரதிக்கு இளம் வயதிலேயே வாய்ந்த மரணம் காந்திமீது மிகுதியான பாடல்களைப் புனையாது போனதற்குக் காரணமாகக் கூடும். அவர் நீண்டநாள் வாழ்ந்திருந்தால் காந்திமீது பல பாக்கள் புனைந்திருப்பார் என எண்ண இடமுண்டு. எனினும் இரு கவிஞர்களுள் நாமக்கல் கவிஞரே காந்தியின் தலைமைச் சீடராகக் கருதப்படுகிறார். திலகர் தூவிய விதை பாரதியாகவும், காந்தி தூவிய விதை நாமக்கல் கவிஞராகவும் விளைந்தது என்னும் இராஜாஜியின் கருத்து அனைவரும் ஏற்றுக்கொள்ளத் தக்க ஒன்றாக அமைந்துவிட்டது. எனவே, நாமக்கல் கவிஞரைக் 'காந்தியக் கவிஞர்' என்றே சுட்டலாம்.

இரு கவிஞர்களின் புதுமை நோக்கு

இனி, பாரதியின் நாட்டு விடுதலைப் பாடல்களுள் பாரதமாதா திருப்பள்ளி யெழுச்சி, பாரதமாதா நவரத்னமாலை, பாரதமாதா திருத்தசாங்கம், சுதந்திரப்பள்ளு ஆகியன குறிப்பிடத்தக்கன. இடைக்காலத்தில் தோன்றிய சிற்றிலக்கியங்களின் போக்கை ஒட்டிப் புது இலக்கிய வகைகளைப் பாரதி படைத்து அவற்றின் வாயிலாக நாட்டுப்பற்றையும் இறையுணர்வையும் ஒன்றாக இணைத்துள்ளமை புதுமையானது. நாமக்கல் கவிஞரிடம் இப் புதுமை காணப்பெறவில்லை.

ஆயினும் அவர் 'நாட்டுக்கும்மி' என்னும் தலைப்பில் புதிய இலக்கியம் ஒன்றே ஆக்கியுள்ளார். 97 பாடல்கள் கொண்ட அவ் விலக்கியத்தில் இந்திய நாடு இழிநிலையுற்றமை, அதன் காரணம்,

இந்தியத் தாயின் சிறப்பு, இந்தியாவின் எல்லை மற்றும் சிறப்பு, இழிநிலையிலிருந்து விடுபட நாம் செய்ய வேண்டியவை, அவ்வாறு செய்தால் கிடைக்கும் பயன் ஆகிய கருத்துகள் கும்மிப் பாடல்களின்மூலம் அழகாக வெளிப்படுத்தப்படுகின்றன. 'பெண்கள் விடுதலைக் கும்மி' பாடிய பாரதி, நாட்டுக் கும்மி' பாடாது விட்டது ஏன் என்பது புலனாகவில்லை. இவ்வகையில் நாட்டுக் கும்மியின் மூலம் நாமக்கல் கவிஞரின் புதுமைப் போக்குப் பொலிவுறுகின்றது.

விடுதலை உணர்வை வெளிப்படுத்தியுள்ள பாங்கு

இவ்விரு கவிஞர்களின் நாட்டு விடுதலைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள கருத்துகள் பெருமளவு ஒத்திருந்தாலும், கருத்து வெளியீட்டு முறையில் இவர்களிடையே வேறுபாடு காணப்படுகிறது. பாரதியின் கருத்துகள் தொடக்க காலத்தில் தீவிர வாதத்தை ஆதரிக்கும் போக்கிலும் இறுதிக் காலத்தில் மிதவாதத்தை ஆதரிக்கும் போக்கிலும் வெளியிடப்பட்டன. பாரதியின் அரசியல் இயக்க நுழைவின் போது இந்திய விடுதலைப் போராட்டம் மிதவாதிகள், தீவிரவாதிகள் என்னும் இரு பிரிவினரின் பிடிக்குள் சிக்கியிருந்தது. தொடக்கத்தில் அவர் தீவிரவாதிகளின் பக்கம் சார்ந்திருந்தார். அப்போது மிதவாதிகளைச் சாடிச் சில பாடல்கள் புனைந்தார். 'மேத்தா திலகருக்குச் சொல்வது', 'நிதானக் கட்சியார் சுதேசியத்தைப் பழித்தல்', 'நடிப்புச் சுதேசிகள்' என்னும் தலைப்பிலான பாடல்கள் மிதவாதிகளை எள்ளி நகையாடும் போக்கில் அமைந்தவை. இவ்வாறு மிதவாதிகளைச் சாடுவதன்மூலம் தாம் ஒரு தீவிரவாதி என்பதைப் பாரதி வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் 'குருகோவிந்தர்' குறித்த பாடலில் 'தருமத்தெய்வம் பலி கேட்கின்றாள்; ஐவர் உயிர்த்தியாகம் செய்ய முன்வர வேண்டும்' என்று குருகோவிந்தர் வேண்டுகோள் விடுப்பதாகப் பாடியுள்ளார்.

". . . . . தீர்கிலா விடாய்கொள்
தருமத் தெய்வந் தான்பல குருதிப்
பலிவிழை கின்றதால் பக்தர்காள்! நம்மிடை
நெஞ்சினைக் கிழித்து நிலமிசை யுதிரம்
வீழ்த்தித் தேவியின் விடாயினைத் தவிர்ப்பு
மார்வரு கின்றீர்?"

(பாரதி. ப.201)

"மானுடர் நெஞ்சிலிவ் வாளினைப் பதிக்கச்
சித்தநான் கொண்டேன் தேவிதான் பின்னுமோர்
பலிகேட் கின்றாள் பக்தர்காள் நும்முளே
இன்னுமிங் கொருவன் இரத்தமே தந்திக்
காளியைத் தாகங் கழித்திடத் துணிவோன்
எவனுளன்?" (பாரதி ப.202)

எனவும் அவ் வேண்டுகோள் அமைகின்றது. இதன்கண் தருமத்தெய்வம் இந்திய நாடெனும் தெய்வமாக மறைமுகமாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இந்திய நாடு விடுதலை பெற வேண்டுமெனில் இளைஞர்கள் தம் உயிரையும் பொருட்படுத்தாது போருடற்ற முன்வர வேண்டும் என்னும் தீவிரவாதப் போக்கு இப் பாடலில் சுட்டப்படுவதை நாம் உய்த்துணரலாம்.

இது போன்றே சத்திரபதி சிவாஜி தன் படைவீரர்களுக்குக் கூறுவதாக அமையும் பாடலிலும் தீவிரவாதத்தைப் பாரதி வெளிப் படுத்தியுள்ளார்.

" போரெனில் இதுபோல் புண்ணியத் திருப்போர்
பாரினில் ஒன்று பார்த்திடற்கு எளிதோ?
யாட்டினைக் கொன்று வேள்விகள் இயற்றி
வீட்டினைப் பெறுவதை விரும்புவர் சிலரே
நெஞ்சக் குருதியை நிலத்திடை வடித்து
வஞ்சக மழிக்கும் மாமகம் புரிவம்யாம்" (பாரதி ப. 186)

என்னும் பகுதியில் சுட்டப்பெறும் படைவீரர்களை விடுதலைப் போராட்ட வீரர்கள் என்றே குறிப்பிடலாம். நாட்டு விடுதலைக்காகப் போராட்டப் பொறுப்பேற்று நடத்திச்செல்லும் தலைவன் ஒருவன் தன் வீரர்களுக்குக் கூறும் எழுச்சியுரையாக இதனைக் கருதலாம். ஆயுதந் தாங்கிப் போருடற்ற வேண்டும் என்னும் தீவிரப் போக்கினைப் பாரதியார் கொண்டிருந்தார் என்பதை இப் பகுதி தெளிவாக்குதல் திண்ணம். மேலும்,

" ஒன்றாய் நின்றினி வென்றா யினும்உயிர்
சென்றா யினும்வலி குன்றாது ஓதுவம்" *(வந்தே மாதரம்)*
(பாரதி ப. 135)

என்னும் பாடற்பகுதியையும் 'இதந்தரு மனையின் நீங்கி இடர்மிகு சிறைப் பட்டாலும்' என்னும் சுதந்திரதேவியின் துதியிலுள்ள பாடற்பகுதியையும்

தீவிரவாதப் போக்கினைப் பாரதி கொண்டிருந்தார் என்பதற்குச் சான்றுகளாகக் கொள்ளலாம்.

பாரதியின் இப் போக்கிற்குக் காரணங்கள் உண்டு. அவர் இயல்பாகவே விடுதலை உணர்வு படைத்தவர். தமது கொள்கைக்குப் பிடிக்காத எதையும் அவர் செய்வதில்லை. அவரது தந்தையார் ஆங்கிலேயரின் வஞ்சகத்தால் தாம் நடத்திவந்த தொழிலில் பெரும் நட்டமடைந்து, மனமுடைந்து வறுமை எய்தி இறந்தார். இந் நிகழ்ச்சி பாரதியாரைப் பெரிதும் பாதித்திருக்க வேண்டும். எனவே தம் தந்தையின் பொருளிழப்புக்கும் மறைவுக்கும் காரணமாக இருந்த ஆங்கிலேயர்பால் கொண்ட வெறுப்பு, விடுதலைப் போரில் அவர்களுக்கு எதிராகத் தீவிரப் போக்குடன் செயல்படக் காரணமாய் அமைந்தது எனலாம். அதனுடன் விடுதலைப் போரில் பாரதி திலகரின் தலைமையை ஏற்றுக்கொண்டவர். திலகர் தீவிரவாதப் போக்கை வலியுறுத்தியவர். எனவே பாரதியும் அவ் வழியைப் பின்பற்றியமை இயல்பே. மேலும், பாரதி தமிழ்நாட்டில் வ.உ.சி., சுப்பிரமணிய சிவா, பிற மாநிலத்தில் விபின சந்திர பால், லாலா லஜபதிராய், புதுவையில் அரவிந்தர், வ.வே.சு. ஐயர் போன்ற தீவிரவாதிகளுடன் கொண்டிருந்த தொடர்பும் அவரைத் தீவிரவாதப் போக்கை மேற்கொள்ளும்படி செய்ததெனலாம்.

நாளடைவில் பாரதியிடம் இருந்த தீவிரவாதப் போக்குச் சிறிது சிறிதாக மறைந்து மிதவாதத்தை ஆதரிக்கும் தன்மை மேலிட்டது. அவர் 'தாதாபாய் நவரோஜி' குறித்து 4.7.1917–ல் சுதேசமித்திரனில் எழுதியுள்ள கட்டுரையில் 'விடுதலைப் போரைச் சமாதானப் போக்கில் மேற்கொள்வது சிறந்தது' என்று குறிப்பிட்டுள்ளார் (பெ.தூரன், பாரதி தமிழ், பக். 220–24). மேலும் 5.10.1918–ல் 'ஸ்வராஜ்யம்' என்னும் தலைப்பில் சதேசமித் திரனில் எழுதியுள்ள கட்டுரையில்,

> "இவ்வித அதிகாரிகளின் (சில ஆங்கிலேயே அதிகாரிகளின்) கையினின்று நம்மை மீட்டு நமக்கு ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டுமென்று மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தியிடம் அழுத்தமாகப் பிரார்த்தனை செய்கிறோம்; எங்களுக்கு உடனே ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டுமென்று வணக்கத்துடனும் எங்களுடைய பரிபூரண ஜீவபலத்துடனும் ப்ரார்த்தனை செய்து கொள்ளுகிறோம்"

என்று சுட்டியுள்ளார் (பெ.தூரன், பாரதி தமிழ், பக்.257–58). இவ் விரு கட்டுரைகளிலும் பாரதியின் கவிதைகளில் நாம் காணும் வீராவேசப்

போக்கு மங்கியிருக்கக் காணலாம். குறிப்பாக, 'ஸ்வராஜ்யம்' கட்டுரையில் 'ப்ரார்த்தனை' செய்வதாகப் பாரதி குறிப்பிடுவதில் அவருக்கே உரித்தான வீச்சு மறைந்து அதில் ஒரு தொய்வுநிலை தோன்றக் காணலாம்.

அதனுடன் 1920ஆம் ஆண்டில் மகாத்மா காந்தியின் தலைமையில் விடுதலைப் போர் புதுவடிவம் கொண்டது. 'ஒத்துழையாமை' இயக்கத்தின் வாயிலாகக் காந்தி தமது போராட்டத்தை வலிமைப்படுத்தினார். பாரதி அப் போராட்டத்தைப் புகழ்ந்துள்ளார் (பாரதி. பக். 199–200). இதன் வாயிலாகவும் அவர் மிதவாதப் போக்கைச் சார்ந்து நின்றமை புலப்படுகின்றது. தாம் போற்றி வந்த தலைவர்கள் ஆங்கிலேயரின் அடக்குமுறையில் சிக்கிச் சிறையில் வாடியதைக் கண்டு பாரதி கொண்ட மனவருத்தமும் அவருக்கு நேர்ந்த சொல்லொணா வறுமைத் துன்பமும் அவரது குடும்பத்தினரின் குறுக்கீடும், காந்தியின் தலைமையிலான போராட்டம் ஏற்படுத்திய நம்பிக்கையும் அவரை மிதவாதப் போக்கின்பால் செலுத்தின எனலாம்.

நாமக்கல் கவிஞரின் பாடல்களில் தீவிரவாதப் போக்கினைக் காண முடியவில்லை. அவர் பாடல்களில் மிதவாதத் தன்மையே மேலோங்கி நிற்கின்றது. விடுதலை அடைய அகிம்சையைப் பின்பற்றுவதே சாலச் சிறந்தது என்னும் காந்தியின் தத்துவத்தை நாமக்கல் கவிஞரும் பின்பற்றினார். 1930ஆம் ஆண்டில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகப் போரின்போது பாடுவதற்காக நாமக்கல் கவிஞரால் எழுதப்பட்ட 'கத்தியின்றி ரத்தமின்றி'ப் பாடல் ஒன்றே அவர் ஒரு மிதவாதி என்பதை வெளிப்படுத்தப் போதுமானது.

"கத்தி யின்றி ரத்த மின்றி
யுத்த மொன்று வருகுது
சத்தி யத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர்
ஒண்டி அண்டிக் குண்டு விட்டிங்
குயிர்ப் றித்தல் இன்றியே
மண்ட லத்தில் கண்டி லாத
சண்டை யொன்று புதுமையே"

என்னும் இப் பாடலின்மூலம் ஆயுத பலத்தை நம்பாமல் மக்களின் ஒன்றுபட்ட அன்புணர்வில் நம்பிக்கைகொண்டு விடுதலைக்கான முயற்சிகளை மேற்கொள்ளத் தூண்டினார் கவிஞர்.

"சத்தியம் சாந்தத்தில் முற்றிலும் நின்றே
சடுதியில் விடுதலை அடைவது நன்றே" (நா.க.ப.117)

என்பது அவர் விருப்பமாய் அமைந்தது.

"மன்னவரைச் சதிபுரிந்து வெட்டி மாய்த்தும்
மாறுபட்ட கருத்துடைய வார்த்தை யொன்றைச்
சொன்னவரைச் சுட்டெரித்தும், துன்மார்க் கத்தால்
அயல்நாட்டைப் படையெடுத்துத் துன்பம் செய்தும்
இன்னபல கொடுமைசெயும் பிறநாட் டாரை
இந்நாட்டின் விடுதலைக்குப் பின்பற் றாமல்
முன்னையநம் நாகரிகம் முரண்ப டாமல்
முடிவுசெய்வீர் சுதந்தரப்போர் முறைக ளெல்லாம்"

(நா.க.,ப.148)

எனவும்,

"அடிமைகொளும் நம்விலங்கை அகற்ற வேண்டும்
அதையும்உயர் அன்பின்வழி அகற்ற வேண்டும்
கொடுமைசெயும் வழக்கமெல்லாம் கொளுத்த வேண்டும்
ஒருவருக்கும் கொடுமையின்றிக் கொளுத்த வேண்டும்"

(நா.க.,ப.149)

எனவும் வருகின்ற கவிஞரின் பாடற்பகுதிகள் அவரது மிதவாதத் தன்மையைத் தெளிவுறக் காட்டுகின்றன. - பொருளிழப்பு, உயிரிழப்பு நேராத வழியை மகாத்மா காந்தி மேற்கொண்டு விடுதலைப் போரினை நடத்திச் சென்றார். அவ் வழியையே நாமக்கல் கவிஞரும் பின்பற்றியுள்ளார்.

நாமக்கல் கவிஞர் விடுதலைப் போரில் மிகத் தீவிரமாகச் செயற்பட வேண்டும் என்றே எண்ணிச் செயற்பட்டு வந்தார். எனினும் காந்தியின் தலைமை எவ் உயிரையும் துன்புறுத்தாத புதிய வழியை – சத்தியாக் கிரகத்தை – விடுதலைப் போரில் ஆயுதமாகப் பயன்படுத்தியதைக் கண்ட கவிஞர் தாமும் அவ்வாறே செயல்பட முனைந்தார். காந்தியின்மீது நம்பிக்கை கொண்ட முறையை அவரே தமது சுயசரிதையிலும் குறிப்பிட்டுள்ளார் (நா.க. என் கதை பக். 148–49). மேலும், பாரதியின் தந்தை அடைந்த துயரமோ, பாரதிக்கு நேர்ந்த துன்பங்களோ நாமக்கல் கவிஞருக்கு ஏற்படவில்லை. நாமக்கல் கவிஞரின் தந்தை ஆங்கிலேய

அரசின் காவல் துறையில் அதிகாரியாகப் பணியாற்றினார். இந்நிலையில், கவிஞர் தீவிரவாதத்தை மேற்கொள்வது தமக்குத் தீங்காக முடியும் என்று கூறி அவர் தந்தை தடுத்திருக்கலாம். தந்தையை மீறி எச்செயலும் செய்யாத பண்பும், கவிஞரின் இயல்பான அமைதிக் குணமும் அவரைத் தீவிரவாதத்தை மேற்கொள்ளாமல் தவிர்க்கச் செய்தன. கவிஞருக்கு வறுமைத்துன்பம் ஓரளவே ஏற்பட்டதென அறிகின்றோம். அவையும் உடனுக்குடன் நண்பராலும் பிறராலும் தீர்த்துவைக்கப்பட்டன. தீவிரவாதத்தை மேற்கொள்ள வேண்டிய அளவிற்கு அவர் எவ்வகை அடக்குமுறைக்கும் ஆளாகவில்லை என்பதால் எளிதாகத் தம்மை மிதவாதப் போக்கில் இணைத்துக்கொண்டார். எல்லாவற்றிற்கும் மேலாக அவர் காந்தியத்தில் கொண்ட நம்பிக்கையே அவரைத் தீவிரவாதத்தி னின்று மீட்டு மிதவாதத்தில் சேர்த்தது, அவர் இறுதிவரை காந்தியக் கொள்கையில் உறுதியாக இருந்தமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

நாமக்கல் கவிஞரிடம் பாரதியின் தாக்கம்

நாமக்கல் கவிஞரும் பாரதியும் ஒரே நோக்கத்திற்காக வேறுவேறு வழிமுறைகளில் செயல்பட்டபோதிலும் நாமக்கல் கவிஞர் சில இடங்களில் பாரதியைப் பின்பற்றியிருக்கக் காண்கிறோம். அவர் பாரதிமீதும், பாரதியின் கவிதைமீதும் கொண்டிருந்த பற்றின் விளைவு இதற்குக் காரணமாகும். கவிதையின் பாடுபொருள், கவிதையின் வடிவம் இருநிலையில் பாரதியின் தாக்கம் நாமக்கல் கவிஞரிடத்து இருக்கின்றது.

பாரதி, 'நெஞ்சு பொறுக்குதிலையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்' என்னும் பாடலில் குறிப்பிட்ட கருத்துகள் நாமக்கல் கவிஞரின் 'நாட்டை மறந்தனை மன்மே' என்னும் பாடலில் எதிரொலிக் கின்றன.

"சாதமும் வயிற்றிற் கில்லாமல்
சாகாதும் பிணமெனத் தளர்ந்தோம்
ஏதுதன் காரணம் என்றே
எண்ணவும் மாட்டனை நெஞ்சே" (நா.க.,ப.157)

என்னும் நாமக்கல் கவிஞரின் கருத்து,

"கஞ்சி குடிப்பதற் கில்லார் – அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்" (பாரதி.ப.157)

என்னும் பாரதியின் பாடற்பகுதி ஏற்படுத்திய தாக்கத்தால் விளைந்தது என எண்ண முடியும்.

"தாயின் மணிக்கொடி பாரீர் – அதைக்
தாழ்ந்து பணிந்துபு கழ்ந்திட வாரீர்" (பாரதி.ப.154)

என்னும் பாரதியின் கவிதை வடிவத்தை,

"புதுமையான கொடி பாரீர் – வேறு
பூதலத் திலிலை தேரீர் " (நா.க.,ப.159)

என நாமக்கல் கவிஞரிடமும் காண்கிறோம். பாரதி சுதந்திர தேவியின் துதியாகப் பாடிய 'இதந்தரு மனையின் நீங்கி' என்ற பாடலின் வடிவம் போன்றே நாமக்கல் கவிஞரின் 'கற்பகச்செடி' எனும் தலைப்பில் உள்ள,

"சுதந்தரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகந்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?"

என்னும் பாடலின் வடிவமும் உள்ளது. சுதந்தரம், சுகந்தரும், பதந்தரும், இதம் தரும், நிதம்தரும் முதலான நாமக்கல் கவிஞரின் சொல்லாட்சிகள் இதந்தரு, பதந்திரு, விதந்தரு, சுதந்திர போன்ற பாரதியின் சொல்லாட்சிகளோடு ஒப்புமையுடையன .

1921ஆம் ஆண்டோடு உலக வாழ்வை நீத்தவர் பாரதியார். 1914ஆம் ஆண்டு முதல் விடுதலைப் போரில் பங்குகொண்டவர் நாமக்கல் கவிஞர். பாரதியின் கவிதை தமிழகத்தில் ஏற்படுத்திய விளைவுகளுக்கு நாமக்கல் கவிஞரும் ஆட்பட்டவர்; பாரதியைச் சந்தித்து உரையாடி அவரால் புகழப்பட்டவர்; பாரதி விட்டுச்சென்ற பணியை மேற்கொண்டவர். எனவே, நாமக்கல் கவிஞரிடம் பாரதியின் தாக்கம் இருத்தல் இயல்பெனலாம்.

முடிவுரை

பாரதி, நாமக்கல் கவிஞர் இருவரும் இந்திய விடுதலைப் போராட்டத்திற்குத் தமது கவிதைகளின் வாயிலாகப் புதிய எழுச்சியையும் உணர்ச்சியையும் ஊட்டினர். இருவரது கவிதைகளும் ஒரே குறிக்கோளை மையமிட்டிருந்தன.

பாரதியின் கவிதைகளில் நாட்டுப் பெருமை, விடுதலையின் மேன்மை, மக்கள் ஒற்றுமை ஆகியன நாமக்கல் கவிஞரைவிட

ஆழமாகவும், திறமாகவும், கவிதைச் சுவையுடனும் கூறப்பட்டுள்ளன. இவ் விருவரின் கொடிவணக்கப் பாடல்கள் ஒற்றுமையை வலியுறுத்துகின்றன. தேசியத் தலைவர்களைப் புகழும் பாடல்களைப் பாரதியைவிட நாமக்கல் கவிஞர் மிகுதியாக இயற்றியுள்ளார். அவற்றுள்ளும் காந்திகுறித்து எழுதிய பாடல்களே மிகுதி. எனவே, அவர் 'காந்தியக் கவிஞர்' எனப் புகழப்படுகின்றார்.

விடுதலை உணர்வை வெளிப்படுத்தும் பாங்கில் பாரதி முதலில் தீவிரவாதத்தையும் பின்னர் மிதவாதத்தையும் மேற்கொண்டார். நாமக்கல் கவிஞர் தொடக்க முதல் இறுதிவரை மிதவாதப் போக்கைச் சார்ந்திருந்தார். இரு கவிஞர்களின் குடும்பப் பின்னணியும் அரசியல் பின்னணியும் அவர்கள் முறையே தீவிரவாதத்தையும் மிதவாதத்தையும் மேற்கொள்ளக் காரணமாயின. பாரதியின் தாக்கம் கவிதையின் பாடுபொருள், வடிவம் என இருநிலைகளில் நாமக்கல் கவிஞரிடத்து எதிரொலிக்கின்றது.

இவையனைத்தையும் சீர்தூக்கிக் காணுங்கால் பாரதியின் கவிதை ஆற்றல் முனைமுகத்து நிற்கும் மறவன்போல் துடிப்புடன் விளங்குகிறது; நாமக்கல் கவிஞரின் கவிதை ஆற்றல் இறைவன்முன் வணங்கி நிற்கும் பக்தன்போல் அமைதியுடன் தோற்றமளிக்கிறது.

நூல்கள்

இராமலிங்கம் பிள்ளை, வே., சங்கொலி, ஐந்தாம் பதிப்பு சென்னை, அருணா பப்ளிகேசன்ஸ், 1955

என்கதை, ஐந்தாம் பதிப்பு, சென்னை, பழனியப்பா பிரதர்ஸ், 1977

தூரன், பெ. (தொ.ஆ), பாரதி தமிழ், சென்னை, அமுத நிலையம், 1953

தணிகை உலகநாதன் (தொ.ஆ.), நாமக்கல் கவிஞர் பாடல்கள் சென்னை தி லிட்டில் பிளவர் கம்பெனி, 1960

சீனி. விசுவநாதன், டி.வி.எஸ். மணி பாரதியார் கவிதைகள் (ப.ஆ .), மறுபதிப்பு, சென்னை, வானவில் பிரசுரம், 1982

7

புதுஉத்தி நாடகங்கள் - ஒரு பார்வை

திருமதி சக்திப்பெருமான்

கடந்த பதினைந்து ஆண்டுகளாகத் தமிழகத்தில் ஒரு புதிய நாடக வகை தோன்றி இயங்கிவருகிறது. நாடகக்கரு, வெளிப்பாட்டுமுறை, கையாளப்பெறும் உத்திகள் ஆகியவற்றான் இவை இதுவரை இருந்துவந்துள்ள நாடகங்களினின்றும் வேறுபடுகின்றன. வீதி நாடகங்கள் என்றும், நிஜ நாடகங்கள் என்றும் இவை அழைக்கப்பெறும். இவையனைத்துமே புதுஉத்திகளைக் கையாளல் என்னும் பொது வியல்பைக் கொண்டு இருத்தலால் புது உத்தி நாடகங்கள் என்று குறிப்பிடப்பெறுகின்றன. அரங்கேறி வரும் புதுஉத்தி நாடகங்களுள் நூல் வடிவம் பெற்று வெளிவந்துள்ள நாற்காலிக்காரர் (ந.முத்துசாமி,1974), பசி, ஒளரங்கசீப் (இந்திரா பார்த்தசாரதி,1977,78), முட்டை (பிரபஞ்சன் ,1983) என்ற நாடகத் தொகுப்புகளே இவ் ஆய்வுக்கு அடித்தளமாக உள்ளன.

புதிய உத்தி நாடகங்கள் தோன்றிவரும் சூழல்

1.1 மேலைநாடுகளில் 1950–க்குப் பின்னர்த் தோன்றிவரும் புது உத்தி நாடகங்கள், இந்திய தேசிய நாடகப் பள்ளியின் முயற்சியால் அறிமுகமாகி வருகின்றன.

மேலைநாடுகளில், புதிய இத்தகைய புது நாடக இயக்கங்களைத் தோற்றுவித்துச் செயல்படுபவை பின்வரும் அரங்குகள்: பெக்சு (Becks) என்பாரின் வாழ் அரங்கு (The Living Theatre, 1951), கிராட்டாவ்ஸ்கியின்

(Crotowsky) ஆய்வக அரங்கு (Lab Theatre, 1959), ஜோசப் சைக்கிளின் (Joseph Chaiklin) திறந்தவெளியரங்கு (The Open Theatre, 1963), டென்மார்க்கில் யூஜின் பார்பரா (Eugene Barbara) தோற்றுவித்த ஒடியான் அரங்கு (Odeon Theatre) போன்றவை குறிப்பிடத் தக்க அரங்குகள். இவை புது உத்தி நாடகங்களை அரங்கேற்றி வந்தன. இவற்றின் தாக்கம் இன்றைய நாடகங்களில் இடம்பெற்றுள்ளது.

1.2 பழைய மரபுகளைத் தகர்த்துப் புதுமை படைக்க வேண்டும் என்ற ஆர்வம், பொழுதுபோக்குக் கலையாகவன்றி, நாடகம் மக்களைப் சிந்திக்கத் தூண்டும் கலையாக மாறவேண்டும் என்ற எண்ணம் இப் புதிய நாடகங்கள் தோன்றக் காரணமாக அமைந்துள்ளன.

"நாடகம் எப்போதும் நிகழ்காலத்தைச் சார்ந்திருக்க வேண்டும். உயிருடன் பார்த்துக்கொண்டிருக்கிறவருக்குப் படைப்புக் கலைஞன், மேடை என்று சொல்லப்படுகிற ஒன்றில் நாடகம் என்று தான் உணர்ந்த ஒன்றை நிகழ்த்தி முற்றிலும் புதிய அனுபவத்தில் அவர்கள் பிரக்ஞையில் இதுவரையில்லாததை ஏற்படுத்திவிடுகிறதாகவே நாடகம் இருக்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன்"[1] என்கிறார் ந.முத்துசாமி. தமிழில் முதன்முதலில் புதிய உத்தி நாடகத்தை வெளியிட்டவர் இவர்.

"மாயாஜால தந்திரக் காட்சிகள், வண்ணப்படுதாக்கள் சீன் செட்டிங்குகள் முதலிய நாடகத்தோடு அவசியமில்லாத விஷயங்களைக் புறக்கணிக்கும் [2] நோக்கும்" இந் நாடக முயற்சிகளுக்குக் காரணம்.

2.0 இன்றைய வாழ்க்கைச் சிக்கல்களை, சமூக அரசியல் பிரச்சினைகளை, அவற்றின் பாதிப்புகளைத் தனிப்பட்ட சமூகவியல், உளவியல் நோக்குடன் ஆராய்ந்து இந் நாடகங்கள் வெளியிடுகின்றன.

2.1 அரசியல் நாடகங்கள் குறியீடுகளால், உருவகமாக நின்று உணர்த்துவனவாய் அமைந்துள்ளன. அவையோரின் சிந்தனைத் திறனுக்கேற்ப இந் நாடகங்கள் புதுப்புது பொருள் தருவனவாக அமைந்துள்ளன. மூவரும் எழுதி வெளியிட்டுள்ள பன்னிரண்டு நாடகங்களுள் நாற்காலிக்காரர், கோயில், முட்டை என்ற மூன்று நாடகங்களும் அவ்வாறு அமைந்தவை.

நாற்காலிக்காரர் என்ற நாடகம் அரசியல் ஒரு விளையாட்டுப் போலாகி வாழ்க்கையைச் சுவையாக்கும் சிக்கல்களுடன் எவ்வாறு இருந்துகொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

சீட்டு விளையாடுகிற கூட்டம், கோலி விளையாடுகிற கூட்டம் என்ற இரண்டையும், வேடிக்கை பார்க்க வந்தவன் ஊக்கப்படுத்துவதாகக் காட்டித் தூண்டிவிடுகிறான். கோலிக்குண்டுக் கோஷ்டி, சீட்டுக்கட்டுக் கோஷ்டி என்ற இரு பிரிவினராக்கி அவர்களிடையே குழு மனப்பான்மையை வளர்த்து, வாழ்க, ஒழிக என்று கோஷம் போடத் தூண்டிப் போட்டியை வளர்க்கிறான். "மக்களுக்கு நன்மையென்ற நோக்கம்" என்ற தொடரையும் சேர்த்துக்கொள்ளச் சொல்கிறான். வெற்றி, தோல்வியென்ற விறுவிறுப்புள்ள விளையாட்டாக்கி இரண்டிற்கும் இடையே போட்டியைத் தூண்டிவிடுகிறான். ஒதுங்கியிருக்கிற நாற்காலிக்காரனை அழைத்து, இவர்களின் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கும் பொறுப்பைத் திணிக்கிறான்; இரண்டு குழுவிலும் சேர மனமில்லாத அவனும் சூழ்நிலையின் கட்டுப்பாட்டினால் ஒரு குழுவின் வெற்றிக்குத் துணையாகிறான். முடிவாகத் தோற்ற குழுவினர் அவனை அடித்து நொறுக்குகின்றனர். இன்றைய அரசியல் கட்சிகள் விளையாட்டாகத் தோன்றும் முறை, தோன்றிய பிறகு மக்கள் நன்மை என்ற லட்சியத்தை ஒட்டிக்கொள்ளுதல், வெற்றி தோல்வி என்ற விறுவிறுப்பான விளையாட்டாகத் தேர்தலில் ஈடுபடுதல், ஒரு கட்சி தன் பெருமையை உயர்த்தியும் பிறரைத் தாக்கியும் கோஷம் போட்டுக் காலம் தள்ளுவது, இரண்டு கட்சிகளிலும் ஈடுபாடில்லாதவனும்கூட வாக்களிக்கும் கடமையென்ற பெயரில் அவற்றின் வெற்றி தோல்வியில் பங்கு பெறுதல், இறுதியில் பழிவாங்கப்பெறுதல் அனைத்தும் குறிப்பாக, அவையோர் உய்த்துணருமாறு சுட்டப்பெறுகின்றன.

இந்திரா பார்த்தசாரதியின் **கோயில்** என்ற நாடகம் இந்திய அரசியல் பொருளாதாரத் திட்டங்களின் நோக்கம், அவை செயல்படும் முறை ஆகியவற்றைக் குறிப்பாகச் சுட்டுகின்றது. பெரியண்ணன் என்ற தலைவன் கோயில் கட்ட விரும்புகிறான். "எல்லாப் பண்பாட்டையும் இணைச்சு ஒரு கோயில். ஒரு பக்கம் பார்த்தா மசூதி, இன்னொரு பக்கம் பார்த்தா சர்ச், மொத்தமா பார்த்தா நம்ம கோயில்;[2] நான் ஐடியாதான் சொல்லுவேன். செயலாக்க வேண்டியது உங்க பொறுப்பு" என்கிறான். அவனைச் சுற்றியிருந்து பக்கப்பாட்டுப் பாடிக்கொண்டிருப்போர் ஆறு பேர், இருபத்தைந்து ஆண்டுகள், இரண்டாயிரம் டன் பேப்பர் செல வழித்துத் திட்டம் தீட்டுகிறார்கள். மக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கல் கொடுக்கிறார்கள். வார்த்தைகள் அடுக்கப்பெறுகின்றன. "நீங்கதான்

நாங்க, நாங்கதான் நீங்க", "கோயிலுக்கேற்ற சமுதாயம், பேதமற்ற சமுதாயம்" போன்ற தொடர்கள் மிஞ்சுகின்றன. பெரியண்ணன் தொடங்கிய பணி சின்னண்ணன் காலத்திலும் தொடருகிறது. கோயிலைக் கட்டி முடிக்கவில்லை. மக்கள் சிந்திப்பதைத் தடுக்கப் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப் பெறுகின்றன. "கோயில் கட்டுவதைத் தடுக்கும் எதிரிகள் யாரென்று சொல்லிக்கிட்டே இருக்கணும்", "உள்ளூர் எதிரிகளைச் சொல்லி அலுத்துப் போச்சுன்னா வெளியூர்க்காரங்களையும் சுட்டிக்காட்டணும்"[4] என்கிறார். ஆறுபேரும் ஆறு பெண்களுடன் கைகோத்து ஆடுகிறார்கள்; புள்ளிவிவரங்கள் மக்களை மயக்க அள்ளி வீசப்பெறுகின்றன; இறுதியில் தலைவன், 'பசி ஒழிக' என்ற கோஷத்தால் மயங்காத மக்களிடம், தம் ஊர் வியாபாரிகள்தாம் கோயில் கட்டிமுடிக்கத் தடையாக இருந்தவர்கள் என்று சுட்டிக்காட்டி, அவர்களை உள்ளே தள்ளுகிறான்.

நேரு காலம் முதல் இந்திராகாந்தி வரையுள்ள அரசியல் போக்கினை உருவகமாக நின்று இந் நாடகம் காட்டுகிறது.

முட்டை என்ற நாடகம் ஆட்சியாளரிடமும் அதிகார வர்க்கத்தினரிடமும் பாமர மக்கள் படும்பாட்டினைக் காட்டுகிறது. முட்டை விற்கச் சென்ற கிராமத்து முதியவன் தன் கூடை முட்டைகளை ஒருவன் சைக்கிளால் மோத, நீதி கேட்கப் போய்க் குற்றவாளியாக்கப்படுகிறான். சொற்களை அள்ளி வீசி அவன் குற்றமற்றவன் என்று நிலைநாட்ட ஆதாரம் இல்லையாதலால், குற்றவாளி என்ற சட்டத்தைத் துணைக்கொண்டு அவனைத் தண்டிக்கிறது அதிகாரவர்க்கம். அவனைத் தேடிச் சென்ற அவனுடைய இளம்பெண்ணும் தொரையின் விலங்குப் பசியால் விழுங்கப்படுகிறாள்.

"நமக்கும் அக்கா தங்கைகள் இருக்காங்க; நாளைக்கு அவங்களுக்கும் இது நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்"[5] என்ற கேள்வியுடன் நாடகம் முடிகிறது. இந் நாடகத்தில் ஓரளவு வெளிப்படையாகவும் சில செய்திகள் திறனாய்வு செய்யப்படுகின்றன.

2.2 புதுஉத்தி நாடகங்களில் மனித சமுதாயத்தை மொத்தமாகப் பிணித்திருக்கும் சிக்கலை விளக்கும் நாடகமும் உருவகமாகவே காட்டப்பெறுகிறது.

தானாகவே இருந்து அலுத்துப்போன மனிதன் அறிவியலை நாட, அறிவியல் பசி எல்லையில்லாது சென்று ஆளையே விழுங்க முற்படுவதை உருவகமாகப் பசி என்ற நாடகம் காட்டுகிறது. நாய்க்குட்டிக்குப் பால் ஊட்டி வளர்த்து, அது பசியால் குரைக்கிறது; அண்டாவின் பால் முழுவதையும் குடிக்கிறது. "பகவான் குதிரை மேலேயும் வரல்லே நாயாகவும் வரல்லே, பசியாப் பொறந்து ஒலகத்தையே சாப்பிட்டுண்டிருக்கார்", "மறுபடியுமா பசி", "அப்போ உடம்புப் பசி இப்போ அறிவுப் பசி"[6] என்கிறார்கள். இறுதியில் அவர்களையே விழுங்கிவிட நாய்க்குட்டி முறைக்கிறது. குரைத்தே அதை வெளியேற்றுகிறார்கள்.

2.3 "அறிவு எனும் யாகத்தீயை வளர்த்து வாழ்க்கையைச் சொர்க்கமாக்க முயன்றோம் நாங்கள். இப்பொழுது சொர்க்கத்திலா இருக்கிறோம்?"[7] என்ற வினாவை எழுப்பி வினாவிற்கு விடைபகருவதாக அமைகிறது மற்றொரு சமூக நாடகம் கால எந்திரங்கள். எந்திரங்களுக்கு நடுவே எந்திரமாக மாறி மனைவியையும் மகனையும் இழந்து பழுதுபட்ட எந்திரமாகத் தூக்கி எறியப்படுகிற ஒருவனைக் காட்டி, "உயிரோடு இருக்கும் மனிதர்களின் சவ ஊர்வலம்தான் இன்றைய உலகம்"[8] என்று முடிகிறது.

2.4 பிறழ்நிலை மனவியலால் பாதிக்கப்பட்டவர்கள், நெறி கெட்டவர்கள் என்று சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவர்கள் ஆகியோரின் வாழ்க்கை இந்த நாடகங்களில் புதிய கண்ணோட்டத்துடன் ஆராயப் பெறுகின்றன. அவ்வாறு அமைந்தவை மழை போர்வை போர்த்திய உடல்கள் என்ற நாடகங்கள். ஒருவர் வளர்ந்த சூழ் நிலைக் கோளாறினால் வாழ்க்கையில் நல்ல அம்சம் இருக்கு என்று நம்ப மறுக்கிற பிடிவாதத்தினால் அவதிப்படும் ஒரு பெண் தனி மனித சுதந்திரத்தை நாடித் தந்தையின்மீது கொண்ட விருப்பை வெறுப்பாக மாற்றி அவதிப்படுவதைக் காட்டுவது மழை என்ற நாடகம்; விலங்காக இருக்கும் மனிதர் போர்வைக்குமேல் பேர்வை போர்த்திப் பெரிய மனிதனாகக் காட்டிக் கொள்ளும் நிலையைக் காட்டுவது போர்வை போர்த்திய உடல்கள்.

2.5 இந்த நாடகங்களில் பழை புராணங்களும் புதுக் கண்ணோட்டங்களும் ஆராயப்பெறுகின்றன. மணிக்கொடி காலத்திலிருந்து சிறுகதை வடிவில் புத்துருக் கொண்டுவரும் அகலிகையின் கதை நாடகமாகியுள்ளது. "எது செய்தபின் மனம் குறுகுறுக்கிறதோ அதைச் செய்யாமல்

இருப்பதே அறம்; எதைச் செய்தபின் மனம் சந்தோஷிக்கிறதோ அதுவே அறம்"[9] என்ற விளக்கத்தை இந்த நாடகம் வழங்குகிறது.

2.5.2 நந்தன் கதை என்பது, சமூகவியல் நோக்கில் புதுக்கோலம் கொண்டு வரும் பழைய புராணத்தின் நாடகவடிவம், பெரியபுராணத்தில் திருநாளைப்போவார் புராணமாகத் தோன்றிய கோபால கிருஷ்ண பாரதியார் படைப்பில் நந்தனார் சரித்திரம் என்னும் கீர்த்தனை நாடக வடிவம் பெற்று, இந்திரா பார்த்தசாரதியின் புதுநாடகப் படைப்பில் நந்தன் கதையாகியுள்ளது. "இது நந்தன் கதைதான், நந்தனார் கதை அல்ல. 'ஆர்' என்பது சிறப்பு விகுதி அன்று, சிலுவை! சமூக ஏற்றத் தாழ்வுகளைக் கண்டு சீறிய நந்தன் இந்த 'ஆர்' என்ற சிறப்பு விகுதிக்காக, பார்ப்பானுடைய கைதட்டல் பெறுவதற்காக நெருப்பில் எரிந்து போன சோகக் கதையைக் சொல்லுகிறது இந்த நாடகம்."[10] பார்ப்பான் என்ற சொல்லுக்குச் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்று நினைக்கிற எவனாக இருந்தாலும் அவன் பார்ப்பான் என்ற புதிய விளக்கமும் தருகிறார் ஆசிரியர். பறையன் பார்ப்பனாவது எப்படி? பார்ப்பாரச் சாமியைக் கும்பிடணும்"[11] என்று நினைத்துச் சாதியற்றவன் காதுக்குள் புகுந்து கொள்ளப் பார்க்கிறான். அவனை அழிக்க வேதியர் நால்வர் திட்டமிடுகின்றனர். "நந்தன் நாக்கு நீண்டா – பறையனுக்கு வரும் நாட்டாண்மை, புலையன் ஆள்கின்ற நாட்டிலே புல்லுப் பிடுங்கிறது யாரு? ஜாதியத்துப் போனா நாதியத்துப் போவோம்" என்று நினைத்து நந்தனைத் தீர்த்துக்கட்ட வழிசெய்கின்றனர். குருக்கள் துணையுடன், நந்தனுக்குப் பூணூல் போட்டுப் பார்ப்பானாக்கி, அவனுடைய பக்தியைக் கொண்டு அவனுடைய இனத்துக்கே எதிரியாக்கி, நந்தன் தன் கையாலே தன் கண்ணைக் குத்திக்கொண்டது போல, அவனை எரியில் இறங்கச் செய்கின்றனர். "இது படிப்பதற்காக எழுதப்பட்ட நாடகமல்ல; மேடைக் கென்றே எழுதியது. எந்த நூற்றாண்டில் மேடையேறினாலும் அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை"[12] என்ற அவரது ஐயத்தைக் காட்டுகிறது.

2.6 வரலாற்று நிகழ்ச்சிகளுக்குக் காரணங்களை உளவியல் நோக்கில் ஆய்ந்து அகமனத்தேடல்களால் உண்மையை எடுத்துக்காட்டும் முயற்சியும் இந் நாடகங்களின் கருப்பொருளாகின்றன. வரலாறு ஒளரங்கசீப்பை இரக்கமற்ற கொடியவனாகக் காட்டி வந்துள்ளது. கொடியவன் என்று அவனை வெறுத்து ஒதுக்காது அவனுடைய கொடுமைக்குக் காரணமாக அமைந்தவற்றை ஆராய்ந்து அவனுக்காக

இரங்கவைக்கிறது ஒளரங்கசீப் என்னும் நாடகம். சிறுவயதிலேயே தந்தையால் புறக்கணிக்கப்பட்டு அதனால் ஏற்பட்ட தனிமையுணர்ச்சி விருப்பை எவ்வாறு வெறுப்பாக மாற்றுகிறது என்பதனை உளவியல் நோக்கில் அணுகி வெளிப்படுத்துகிறது.

3. இந் நாடகங்களில், மனித சமுதாயத்தில் பொதுவான சிக்கல்களை உணர்த்தும் போதும், அரசியல் சிக்கல்களை உணர்த்தும் போதும் நாடக மாந்தர்கள் சிறப்புப் பெயர்களால் சுட்டப் பெறுவதில்லை. இவ் வுத்தி நாடகத்தில் சுட்டப்பெறும் சிக்கல்களைப் பொதுமைப் படுத்திக்காட்ட உதவும். பசி என்ற நாடகத்தில் அவன், அவள், அது என்ற பெயர்கள் நாடக மாந்தரைச் சுட்டுவது.

நாற்காலிக்காரர் என்ற நாடகத்தில், வேடிக்கை பார்ப்பவன், நாற்காலிக்காரர், சீட்டுவிளையாடுபவர் கோலிக்குண்டுக்காரர், ஒருவன் இன்னொருவன் அடுத்தவன் மற்றவன் என்று நாடக மாந்தர்கள் சுட்டப் பெறுகின்றனர்.

கோயில் என்ற நாடகத்தில் அவன் பெரியண்ணன், சின்னண்ணன், முதலாமவன், இரண்டாமவன் மூன்றாமவன், நான்காமவன், ஐந்தாமவன், ஆறாமவன், பெண்கள் என்று சுட்டப்பெறுகின்றனர். நந்தன் கதையில் நந்தன், அபிராமி என்ற இருவரைத் தவிர மற்றையோர் வேதியர் 1,2,3,4 குருக்கள், உடையார், முதலியார், கிழவன், ஆண் 1,2,3, 4, பெண், ரிஷிகள், அசுரர் என்று குறிக்கப்பெறுகின்றனர். ஏனைய நாடகங்களில் நாடக மாந்தர்கள் அவரவர்தம் சிறப்புப் பெயரால் சுட்டப் பெறுகின்றனர்.

4. புதுஉத்தி நாடகங்கள், நாடகக் கலைஞர்களுக்கும், அவையோராகிய மக்களுக்குமிடையே உள்ள இடைவெளியைக் குறைக்கும் நோக்கம் கொண்டவை. மக்கள் அரங்குகளைத் தேடிச் சென்று இருளில் அமர்ந்து நாடகம் காணும் நிலைமை மாற்றி, திறந்த வெளி அரங்கில் சுற்றியமர்ந்திருக்கும் மக்களுக்கு நடுவே நாடகங்கள் நடிக்கப்பெற வேண்டும். இந் நோக்கம் புது உத்தி நாடகங்களில் அரசியல் நாடகங்களில் மட்டுமே வெற்றிபெற்றுள்ளது. நாற்காலிக்காரர், கோயில் என்னும் நாடகங்கள் திறந்தவெளியில் நடிக்கப்பெறக் கூடியவை.

4.2. சமூக, வரலாற்றுப் பின்னணியுள்ள நாடகங்களில் பழைய அரங்குகளே பயன்படுகின்றன. எளிய காட்சிப் பின்னணிகள் அமைப்பதில்

நாடகாசிரியர்கள் கவனம் செலுத்துகின்றனர். போர்வை போர்த்திய உடல்கள் என்ற நாடகத்தில் – வீடு காட்சிப் பின்னணியுடன் சோபா, திவான் என்ற காட்சிப் பொருள்களும் தேவைப்படுகின்றன.

கால எந்திரம் என்ற நாடகத்தில் இராட்சசக் கடிகாரம் தேவைப்படுகிறது. மேசை நாற்காலிகள், பாட்டில், டம்ளர், சீட்டுக்கட்டு ஆகியவை காட்சிப் பொருள்களாகின்றன.

மழை என்ற நாடகத்தில் வசதியான குடும்பப் பின்னணிக்காட்சி தேவைப்படுகிறது.

மூட்டை என்ற நாடகத்தில் நீளப் பெஞ்சு ஒன்றைப் போட்டு டீக் கடையைக் காட்டலாம் பெரிய நாற்காலியொன்றைப் போட்டு நீதிமன்றத்தைக் காட்டலாம் என்று நாடகாசிரியர் குறிப்புகளும் காட்டுகின்றன.

நந்தன் கதை திரையுள்ள அரங்கிலேயே ஆடப்பெற நாடகாசிரியர் குறிப்பு வரைந்துள்ளார்.

ஆனால் கோயில் என்ற காட்சிப் பின்னணியை அமைக்க, "இரண்டு பெண்கள் தங்கள் சுண்டுவிரல்கள் தொடும்படியாக இடக் கைகளைத் தூக்கி ஒருவரிடமிருந்து மற்றொருவர் தள்ளி ஒரு கோயில் உருவம் தோன்றும்படியாக நிற்க வைக்கிறார்.

4.3 போர்வை போர்த்திய உடல்கள் என்ற நாடகத்தில் அவையோருள் ராமசாமி, விசுவநாதன் ஆகியோர் நாடகமாந்தர் களாகின்றனர்.

5. அரங்க அமைப்பிற்குத் துணையாக, இந் நாடகங்களில் ஒலி, ஒளி உத்திகள், ஒப்பனை உத்திகள் சிறப்பிடம் பெறுகின்றன. பசி என்ற நாடகத்தில் நாய் குரைத்தல் ஒலி அரங்கின் பின்னணியிலிருந்து எழுப்பப் பெறுகிறது. மங்கல் ஒளி, குறைந்த ஒளி, அதிக ஒளி என்ற அளவில் ஒளி வேறுபாடுகள் நாடக நிகழ்ச்சிகளுக்குப் புதிய பொருளாழம் தருகின்றன.

மழை என்ற நாடகத்தில் மழை பெய்யும் ஓசை இடைவிடாதிருந்து, நாடக மாந்தராகச் செயல்படுகிறது.

கால எந்திரம் என்ற நாடகத்தில் கெடியார மணி ஓசை, டெலிபோன் மணி ஓசை, இருள், வெளிச்சம் போன்றவை நாடகப் போக்கிற்குத் துணையாக அமைகின்றன.

6. புதுஉத்தி நாடகங்களில் "நடிகன் தன் உடம்பு மாத்திரம் கொண்டே, எழுதப்பட்ட வாழ்க்கையை, சூழலை நிகழ்த்திக் காட்ட முடியும்" என்ற நாடகாசிரியர்களின் ஆவல் வெளிப்படுகிறது. நடிகர்களின் உறுப்பசைவுகள், மெய்ப்பாடுகள் உணர்த்தும் செய்திகளுக்குத் துணையாகத் தந்தி மொழி போல் சொற்கள் அமைய வேண்டும். சொற்கள் சிக்கனமாகக் கையாளப்பெறும் கவிதைத் தன்மையுடன் செறிவாக அமைந்து புதுப் புது பொருள்களைத் தரவேண்டும். மௌனம், அவிநயம் என்பது உலக மொழி. உலக மக்கள் அனைவரும் புரிந்துகொள்ளக் கூடிய மொழியில் புது உத்தி நாடகங்கள் அமையவேண்டும். இந் நோக்கம் அச்சில் வெளிவந்துள்ள நாடகங்களுள், நாற்காலிக்காரர், கோயில், நந்தன் கதை என்ற நாடகங்களைத் தவிர ஏனையவற்றில் நிறைவேறவில்லை.

நாற்காலிக்காரர், கோயில், நந்தன் கதை என்ற நாடகங்களிலும் சொற்கள் குறைந்த அளவு பயன்படுகின்றனவேயன்றி ஒழிக்கப் பெற வில்லை; சிறுசிறு தொடர்களாலான உரையாடல்கள் அமைந்துள்ளன.

நந்தன் கதை என்ற நாடகத்தில், வசன கவிதை போன்ற சுருக்கு நடை கையாளப்பெற்றுள்ளது. இந் நாடகாசிரியர் இந் நாடகத்தில் தம் மொழிநடையை "Stylized Prose" என்று குறிப்பிடுகிறார். "கதா பாத்திரங்கள் வசனம் பேசும்போது மிகக் கவனமாக டைரக்ஷன் தேவை. ஒவ்வொருவரும் நிற்கும் இடம், காலப்பிரக்ஞை, மொத்தமாக உருவாகும் உணர்ச்சிச் சூழ்நிலை ஆகியவற்றைப்பற்றி மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" [14] என்றும் குறிப்பு வழங்குகிறார்.

மற்ற நாடகங்களுள் சொற்சிக்கனத்தைப் பற்றிய நாடகாசிரியரின் உணர்வு அவ்வப்போது எட்டிப்பார்த்தாலும், ஏனைய மரபு நாடகங்களில் காணப்படுவதைப் போல நீண்ட உரையாடல்கள் அமைந்துவிடுகின்றன.

6.2 உரையாடல்களில் மட்டுமன்றி நாடகாசிரியர்களின் குறிப்புகளிலும், வடமொழியும் ஆங்கிலமும் மிகையாகக் கலந்த மொழி நடை காணப்பெறுகிறது.

முட்டை என்ற நாடகத்தில் டிக் கடையில் பிரவேசித்து நீள் பெஞ்சில் உட்கார்ந்து பத்திரிகை படிக்கிறதாகச் சொல்லப் பெறுகிறது."

இந்திரா பார்த்தசாரதியின் நாடகங்களுள் பசி, போர்வை போர்த்திய உடல்கள், மழை, கால எந்திரம் போன்ற நாடகங்களில் இடம் பெறும் மாந்தர்கள் நகர்ப்புற நாகரிகத்தில் மூழ்கியவர்கள்.

"யுவர் வீக்னஸ் பார் ஒல்ட் பீடில் பீபில்"

"யு நீட் ஏ பாதர் இமேஜ்" என்பன போன்ற ஆங்கிலம் கலந்த தமிழில் உரையாடுகிறார்கள்.

6.3 இந்த நாடகங்கள் மக்களின் நடைமுறை வாழ்க்கையை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதால், படிக்காதவர்கள், பண்பற்றவர்கள் போன்றோர் பேச்சுமொழியில் காணும் இடக்கரடக்கர்ச் சொற்களும் கால வரையறையற்ற சொற்களும் அப்பாவும் பிள்ளையும், ஆட்டை ஆகிய நாடகங்களில் இடம்பெறுகின்றன.

ஆடல் பாடல் அவிநயம் கலந்தது பண்டைத் தமிழ் நாடகம். ஆங்கிலேயரது தொடர்பால் பாடல்கள் ஆடல்கள் குறைந்து உரையாடல்கள் மட்டுமேயுடைய நாடகங்கள் பெருகின. இந்த நிலையை மாற்றிப் பண்டைக் கூத்துமுறையை ஒட்டிய ஆடல்கள், பாடல்களுள்ள இந்த நாடகங்கள் நாடகக்கதையோட்டத்தோடு இணைத்து மேடையேற்றி வருகின்றனர்.

நாற்காலிக்காரர் என்ற நாடகத்தில் கோலிக்குண்டு விளையாடல், சீட்டுக்கட்டு, கோலிக்குண்டு குழுவினர் தனித்தனியாகப் பிரிந்து சுற்றி வருதல், கோஷம் போடல் போன்றவை செயற்கையான ஆடல்களாகப் பாடல்களாக அமைந்துள்ளன.

அப்பாவும் பிள்ளையும் ன்ற நாடகத்தில் கோபாலா! ஏன் சார்? போன்ற கோஷம், ஜிஞ்சாவென்ற தாளமிட்டுக் கொண்டு ஊருக்கெல்லாம் கோடியிலே எனத் தொடங்கப்படும் பள்ளுப் பாட்டு, ஆணை ஆணை அரசாணை என்ற பாடல், இவற்றிற்கேற்ப ஆடல்கள் இடம்பெற்றுள்ளன.

பசி யென்ற நாடகத்தில் 'தாந்திமிதிமி தந்தக் கோனாரே' என்ற பாடலும் அதற்கேற்ற ஆடலும், கேளப்பா சீடனே, மன்னுபுகழ் கோசலை, சாலமன் கிரண்டி என்ற தொடக்கங்களையுடைய பாடல்களும் இடம் பெற்றுள்ளன.

ஆடல்கள் பாடல்கள் நிறைந்த நாடகம் நந்தன் கதை. கோபாலகிருஷ்ண பாரதியின் பாடல்கள், தேவாரப் பாடல்கள் பள்ளுப் பாடல் ஆகியனவும் நாட்டுக் கூத்துகள், பள்ளுக்கூத்து, பரதநாட்டியம் ஆகியனவும் இடம்பெற்றுள்ளன.

முட்டை என்ற நாடகத்தில் ஞானக்கூத்தன் இயற்றிய பாடல்களும் அதற்கேற்ற ஆடல்களும் இடம்பெற்றுள்ளன.

முடிவுகள்

புதுஉத்தி நாடகங்களில் அரசியல், சமூகவியல், புராண, வரலாற்று நிகழ்ச்சிகள் புதிய கண்ணோட்டத்தில் துணிவுடன் திறனாயப் பெற்று நாடகத் தளங்களாகின்றன.

அரசியல், பொதுமனிதப் பிரச்சினைகளைப்பற்றிய நாடகங்கள் உருவகங்களாக அமைந்துள்ளன; கற்றோர் அல்லது காண்போரது அறிவு, அனுபவத்தின் பொருளைப் புலப்படுத்துவனவாக உள்ளன.

பொதுவான சிக்கல்களைக் குறிக்கும் நாடகங்களில் நாடக மாந்தர்கள் பொதுமைப் பெயரால் சுட்டப் பெறுகின்றனர். நாடகம் உணர்த்தும் சிக்கல்களே பொதுமை உணர்வாகப் பயன்படுகின்றன.

நாடகக் கலைஞர்களுக்கும் அவையோருக்குமிடையேயுள்ள இடைவெளியினைக் குறைக்கும் முயற்சி காணப்படுகிறது. அவையோரும் நடிப்பில் பங்குபெறுகின்றனர். எல்லா மக்களும் காண்பதற்குரிய எளிய கலையாகிறது.

காட்சிப் பின்னணிகள் எளிமைப்படுத்தப்பெறுகின்றன. ஒலி, ஒளி, உத்திகள் நாடகப் போக்கிற்குத் துணைசெய்கின்றன.

சொற்கள் சிக்கனமாகப் பயன்படும் பாடல்கள், நாட்டுக் கூத்துகள் நாடகப் போக்கினூடே இடம்பெறுகின்றன.

அடிக்குறிப்புகள்

1. க. முத்துச்சாமி, நாற்காலிக்காரர், கிரியா வெளியீடு திருமூர்த்தி நகர். சென்னை – 34
2. பிரபஞ்சன், முட்டை, மீரா அச்சகம், புதுக்கோட்டை, 1983, ப.80
3. இந்திரா பார்த்தசாரதி, ஔரங்கசீப், தமிழ்ப் புத்தகாலயம், 576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை, 1978
4. ஷி ஷி
5. பிரபஞ்சன், முட்டை, ப.58
6. இந்திரா பார்த்தசாரதி, பசி, தமிழ்ப் புத்தகாலயம், திருவல்லிக்கேணி, சென்னை, 1977, ப.22

7. ஷை ஷை ப.87

8. ஷை ஷை ப.90

9. பிரபஞ்சன் – முட்டை – ப.72

10. இந்திரா பார்த்தசாரதி, **ஔரங்கசீப்**, ப.5

11. ஷை ஷை ப.9

12. ஷை ஷை ப.12–13

13. ஷை ஷை ப.21

14. ஷை ஷை ப.6

15. ஷை ஷை ப.104

8

குறவஞ்சியின் இலக்கியக் கட்டமைப்பு

மா. இராமலிங்கம்

தமிழ் இலக்கியம் காலந்தோறும் புதிய புதிய இலக்கிய வடிவங்களைப் பெற்று வளர்ந்து வந்திருக்கிறது. குறவஞ்சி என்பது பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றி மலர்ந்த ஒரு புத்திலக்கியம். குறவஞ்சி நூல்களுள் முதற்கண் வைத்து எண்ணப்படத்தக்கது திரிகூட ராசப்பக் கவிராயரின் திருக்குற்றாலக் குறவஞ்சியே ஆம். அதன் கட்டமைப்பு இத்தன்மைத்து என்று காட்ட முயல்வதே இக் கட்டுரையின் நோக்கம் என்க.

கட்டமைப்பு, வடிவம், உருவம், புறச்சட்டகம் என்பன திறனாய்வுத் துறையில் ஒரே பொருண்மை கொண்ட சொற்கள். பழைய உரையாசிரியர்களின் நடையிற் கூறினால் கட்டமைப்பெனினும் வடிவமெனினும் உருவமெனினும் புறச்சட்டகமெனினும் ஒக்கும். ஓர் இலக்கியப் படைப்பில் காணப்படும் பல்வேறு கூறுகளின் ஒருங்கிணைப்பே கட்டமைப்பு எனப்படும். ஒரு முழுமையின் பகுதிகளுக்கிடையே நிலவும் உறவுகளின் கோப்புநிலையையே உருவம் என்று குறிப்பிடுகிறோம். இதுவே படைப்புக்கு அழகு தருவது. வனப்பு என்னும் சொல்லுக்கு விளக்கம் தர வந்த பேராசிரியர் "பெரும்பான்மையும் பல உறுப்புத் திரண்டவழிப் பெறுவதோர் அழகு" என்று எழுதிச் செல்வது ஈண்டு நினைவுகூரத்தக்கது. எனவே கட்டமைப்பு என்பதை நாம் பழைய உரையாசிரியர்வழி நின்று 'உறுப்புகளின் திரள்நிலை' என்று விளக்கலாம்.

கட்டமைப்பு அல்லது வடிவம் என்பது தானே தனிநிலையில் விளைவதன்று. அது படைப்பின் நுவல்பொருளை ஒட்டியது. வேறு வார்த்தைகளில் கூறினால் படைப்பின் உள்ளடக்கமே அதன் வடிவத்தை நிர்ணயிக்கிறது. ஏதோ ஒருவகையில் முன்னரே அமைந்துவிட்ட வடிவங்கள் புதிய வடிவங்களுக்குத் தடையாக இருக்குமென்றும், புதிய உள்ளடக்கங்கள் பழைய வடிவங்களுக்குத் தடையாக இருக்குமென்றும், புதிய உள்ளடக்கங்கள் பழைய வடிவங்களின் கட்டுமானங்களை உடைத்தெறிந்துவிட்டுப் புதியனவற்றைப் படைக்கின்றன என்றும் உருசிய நாட்டுக் கலை–இலக்கிய நுண்ணார்வலர் எர்னஸ்ட் பிஷர் கூறுகிறார்.[1] எனவே குறவஞ்சியின் கட்டமைப்பை ஆராய்கிறபோது அதன் உள்ளடக்கத்தை விவாதிக்காமல் இருத்தல் இயலாது.

குறவஞ்சி ஒரு நாடக இலக்கியம். சிறந்தனவற்றையெல்லாம் தமிழ் என்று சுட்டி மகிழ்வது நம் மரபல்லவா? திரிகூடராசப்பர் அம் மரபை ஒட்டியே "குறவஞ்சித் தமிழ்" என்று கூறி மகிழ்கிறார். "செழித்த குறவஞ்சி நாடகம்" என்றும், "பலவளம்சேர் குறவஞ்சி நாடகம்" என்றும் அவர் இதன் சிறப்பைப் பேசுவார்.


II

திருக்குற்றாலக் குறவஞ்சியில் இடம்பெறும் ஒவ்வொரு கதை நிகழ்வுகளையும் ஒரு கருத்தலகாகக் கொண்டு (Thematic Unit) தொகுத்து நோக்கினால் அந்த நாடகம் சற்றேறக் குறைய அறுபது கருத்தலகுகளில் முடிவதைக் காணலாம். குற்றாலநாதரின் பவனி, அவரைக் கண்டு வசந்தவல்லி மையல் கொள்ளுதல், ஆற்றாளாய் வருந்தும் அவளைக் குறத்தி ஒருத்தி குறிசொல்லித் தேற்றுதல் என்னும் கதையின் முக்கிய நிகழ்ச்சிகள் நாற்பத்தைந்தாவது அலகோடு நறுக்கென முடிந்துவிடுகின்றன. எஞ்சியுள்ள அலகுகள் நாடகத்திற்கு இன்றியமையாதன என்று கூறுவதற்கில்லை. குறவன்–குறத்தி தொடர்பான நிகழ்வுகள் மற்றொன்று விரித்தல்போல் நீண்டு போகின்றன. பழைய வீட்டை மாற்றியமைக்க எண்ணிய ஒருவர், பின்பகுதியைமட்டும் விரிவுபடுத்தி அதனோடு இணைத்தாற்போல் ஏதோ ஒரு செயற்கைத் தன்மை – தனித்தனியானவற்றை ஒட்டவைத்தது போன்ற இடை முறிவுநிலை குறவஞ்சியில் புலனாகிறது. இந்த இடைமுறிவு புறத்தே புலனாகாத அளவுக்கு இரண்டையும் குறத்தி இணைத்துவிடுகிறாள். நாடகத்தின் முன்னோக்கிய இயக்கத்திற்கு மைய விசைமுனை அவளே.

எனவேதான்போலும் நாடகம் அவள் பெயரால் அமைகிறது. நாடகம் பயில்வோரின் கவனம் அனைத்தையும் முழுமையாக ஈர்க்கும் மையப்பாத்திரம்போல் வசந்தவல்லியை ஆசிரியர் படைத்தாலும், மெல்ல மெல்லப் படிப்போரின் கவனத்தைத் திசைமாற்றிக் குறவஞ்சிபால் ஆசிரியர் கொண்டுசெல்கிறார். தம் காலத்து வழங்கிய 'குறம்', 'குறவநாடகம்' என்னும் இருவேறு இலக்கிய வடிவங்களை ஒட்ட வைத்துக் காண வேண்டும் அவாவே திரிகூடராசப்பரை இந் நாடகத்தை எழுதுமாறு தூண்டியிருக்கிறது. வடிவத்தில் சோதனை புரிந்து புதியதைப் படைக்க முனைந்த அவர், தம் முயற்சியில் வெற்றி பெற்றுள்ளார் என்பது ஒருதலை. வேறுபட்டவற்றை இணைப்பதன் மூலம் ஒரு கலவைநிலை இலக்கியத்தை உருவாக்க அவர் முயன்றிருக்கிறார். வேறு பொருத்தமான தொடர் கிட்டாமையால் 'கலவைநிலை' என்பதையே இக் கட்டுரை முழுவதும் கூட்ட விழைகிறேன்.

குறவஞ்சியை அழகுற அமைந்த ஓர் ஓரங்க நாடகம் எனலாம். நாடகம் என்று கூறுகிறபோது கதை மாந்தர்களை உரையாடும்படி விட்டு விட்டு ஆசிரியன் மறைந்து நிற்பது போன்ற நாடகமன்று. அவனும் தன் இருப்புநிலையைப் படிப்போர்க்கு உணர்த்துவதுபோல் இடையிடையே பேசுகிற நாடகம் இது. நவீன நாடகங்களில் இருப்பது போன்ற காட்சிப் பிரிவுகள், மேடையமைப்புக் குறிப்புகள் இதில் இல்லை. எனினும் இதனைக் காட்சிகளாகப் பிரித்துக் காட்டலாம். நாடகத்தின் சந்திகளான முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் ஆகியன இதிலும் இடம் பெற்றிருப்பதை விளக்கலாம். மேற்கண் ஐந்து சந்திகளும் போராட்டத்தைச் சித்திரிக்கும் ஐந்து படிநிலை என்பது நாம் அனைவரும் அறிந்ததே. குற்றால நாதரின் பவனியை முகமாகவும், வசந்தவல்லி உலாக் காண்பதைப் பிரதிமுகமாகவும், அவளது காமம் மிக்க கழிபடர் கிளவிகளைக் கருப்பமாகவும், குறத்தியின் வருகையை விளைவாகவும், அவள் குறிகேட்டு அமைதி பெறுவதைத் துய்த்தலாகவும் நாம் எண்ணிப் பார்க்கலாம். அதேபோல் குறவன்–குறத்தி தொடர்பான நிகழ்வுகளிலும் போராட்டச் சித்திரிப்பை உணரலாம். சிங்கனின் வருகையே முகம்; குணவானைச் சந்தித்தல் பிரதிமுகம்; சிங்கியைக் காணாது வருந்துதல் கருப்பம்; அவளைக் கண்டு மகிழ்தல் விளைவு; அனைவரும் குற்றாலநாதரைப் போற்றல் துய்த்தல். துண்டு துண்டான இரு நாடகங்களைப் பொருத்துவாய் தெரியாமல் இணைத்துக் காட்டியிருப்பதில்தான் ஆசிரியரின் வெற்றி அடங்கி இருக்கிறது. பின்

வரும் வரைகோட்டுப் படம் அதன் கட்டமைப்பை ஓரளவுக்குப் பருநிலையில் புலப்படுத்தும் என்று நம்புகிறேன்.



திரிகூடராசப்பர் காலத்தில் ஓரங்கமாக அமையும் இசைநாடகம் முற்றிலும் புதுமையானதே என்பதில் ஐயம் இல்லை. புதியன புனைவதில் திறன் காட்டிய ஆசிரியர் பழமையை அதனோடு கலப்பதிலும் வெற்றி பெற்றிருக்கிறார். புதுமை, பழமை ஆகிய இரண்டின் கலவைநிலை இந்நாடகத்தைக் கூர்ந்து நோக்குவார்க்குப் புலனாகாமற் போகாது.

உயிர்களின் வாழ்வில் தோற்றமும் மலர்ச்சியும் ஒழுக்கமும் இருப்பது போலவே இலக்கியத்தின் வாழ்நிலையிலும் இவை உண்டு. வாழ்வதற்காகப் போராடுவதும், வல்லமை வெற்றி பெறுவதும் உலக வாழ்வில் நிகழுமாப் போலவே இலக்கிய உலகிலும் நிகழ்கின்றன. இலக்கிய வடிவங்கள் தத்தம் நிலைபேற்றுக்காக நடத்தும் போராட்டத்தைப் பின்னின்று நடத்துபவன் புலவனே. அவனே, வாழ்விழந்து நிற்கும் சிலவற்றிற்கு வாழ்வு தருகிறான்; சிலவற்றை வேண்டா என ஒதுக்குகிறான்; சிலவற்றைச் செப்பம் செய்து புதுக்குகிறான். திரிகூட ராசப்பர் 'தசாங்கம்', 'கேசாதிபாதம்' போன்ற நிலைப்பாடிழந்த இலக்கிய வடிவங்களுக்கும் மறுவாழ்வு தருகிறார்; உலாப் போன்ற இலக்கிய வடிவங்களில் வேண்டாதன நீக்கி மெருகூட்டிப் புதுக்குகிறார். உலா என்னும் இலக்கிய வடிவம் பல கூறுகளைக் கொண்டது. சிற்றில் இழைத்தல், பாவையாடல், கழங்காடல், ஊசல் எல்லாம் அதில் வரவேண்டும் என்பது பாட்டியல் விதி. இவற்றையெல்லாம் விலக்கித் தலைவன் பவனி வருதல், தலைவி அவனைக் கண்டு காமுறுதல் ஆகிய இரண்டை மட்டுமே அவர் ஏற்கிறார். பண்டை இலக்கியத் துறைகள் சிலவும்,

இடைக்காலப் பிரபந்த வடிவங்கள் சிலவும் திரிகூடராசப்பரின் படைப்பில் கரந்துறை கோலத்தில் அமர்ந்துகொண்டு வாழ்வு பெற்றுவிடுகின்றன. பழமையின் உரத்தையும், புதுமையின் நலத்தையும் கலவைநிலையில் கூட்டிப் படைக்கப்பெற்றதே குறவஞ்சி என்பது வெளிப்படை.

III

குறவஞ்சி நாட்டியத்தை முதன்மைப்படுத்திப் படைக்கப்பட்ட கலை–இலக்கிய வடிவம். கலைகள் செவ்வியற் கலைகள் (Classical Art) என்றும், நாட்டுப்புறக் கலைகள் (Folk-Art) என்றும் இருவகைப்படும். நாட்டுப்புறக் கலை, உழைக்கும் மக்களின் உணர்ச்சி வெளிப்பாடாக மலர்வது; செய்யும் தொழிலோடு இணைந்து இயங்குவது; அவை மலரும் இடத்தை ஒட்டி அந்தந்த வட்டாரத்தின் தன்மை கொண்டது. செவ்வியற் கலையோ இதற்கு நேர் மாறானது. உழைப்பிலிருந்து தம்மை அந்நியப்படுத்திக் கொண்டோரே இதில் ஈடுபட்டனர்; செய்தொழில் சார்பு இன்றி வெறுமனே அமையும் முருகியல் உணர்வே மலர்ச்சிக்கு உந்துசக்தி ஆயிற்று; வட்டாரத் தன்மைக்கு அப்பாற்பட்ட, அனைவர்க்குமான பொது நிலையில் அவை விளங்கின. இருவேறுபட்ட இக் கலைகளைக் கலவை நிலையில் காட்டுவதும் ராசப்பக் கவிராயரின் நோக்கமாக இருந்திருக்க வேண்டும். வசந்தவல்லி செவ்வியற் கலைத்துறைக்கு உரியவள்; குறவனும் குறத்தியும் நாட்டுப்புறக் கலைஞர்கள். வசந்தவல்லியின் வருகையைப் பாடுவதைவிடக் குறத்தியின் வருகையைப் பாடுவதற்கே கவிஞர் வாயூறி நிற்கிறார். இலக்கியத்தில் சமுதாயத்தின் மேல்நிலை மக்களே தலைமை இடம்பெற்றிருந்த நிலையை மாற்றி, அடித்தள மக்கட்கும் முதன்மை தர விழையும் ஆசிரியரின் ஜனநாயக மனோபாவம் குறவஞ்சியில் நன்கு எதிரொலிக்கிறது. "பெயரளவில் தாழ்ந்த மரபினர் என்று கருதப்படும் குறவர் வாழ்வைச் சித்திரிப்பதே இதன் நோக்கம்" என்றும், "தெய்வங்களையும் குறுநில மன்னர்களையும் பாடி வந்த நமக்கு இது புதுமையல்லவா?" என்றும் அறிஞர் வையாபுரியார் இதனை வியந்து பேசுவார்.[2]

திருக்குற்றாலக் குறவஞ்சி ஒரு பக்தி இலக்கியம் என்பதில் ஐயமில்லை. பக்தி இலக்கியங்களெல்லாம் இறையனுபவத்தை வெளிப் படுத்துவன. திரிகூடராசப்பர்,

"கிளைகளாய்க் கிளைத்தபல கொப்பெலாம் சதுர்வேதம்
கிளைகள் ஈன்ற
களையெலாம் சிவலிங்கம் களியெலாம் சிவலிங்கம்
கனிகள் ஈன்ற
சுளையெலாம் சிவலிங்கம் வித்தெல்லாம் சிவலிங்கம்
சொரூபம் ஆக
விளையுமொரு குறும்பலவின் முளைத்தெழுந்த சிவக்கொழுந்தை
வேண்டு வோமே"

என்று பாடும்போது அவர்தம் இறையனுபவத்தைக் கண்டு நாம் மெய்சிலிர்க்கிறோம். இறையனுபவத்துக்குத் தடையாக நிற்பன உலக இன்பங்களே. சிற்றின்பங்களைத் துறந்து இறையின்பத்தைப் பெற வேண்டுமென்றே பக்திப் பனுவல்கள் வற்புறுத்துகின்றன. திரிகூடராசப்பர் ஒன்றை மறுத்து ஒன்றைப் பெற விழைபவரல்லர். ஒன்றற்கொன்று உறுதுணையாக அமைய இரண்டையும் ஆரத் துய்க்கும் இன்ப அனுபவமே வாழ்வின் பயன் என்று கருதுபவர் அவர். இடையறாத இறைநாட்டம் உலக இன்பங்களை ஒரு கட்டுக்குள் நிறுத்தி மனிதனைத் தூய தொண்டு வாழ்வில் கொண்டுசெலுத்தும். உடல் இன்பத்தை ஆரத் துய்ப்பது; மனித மனத்தைப் பக்குவப்படுத்தி இறைநிலைக்கு ஈர்த்துச் செல்லும். ஆசிரியர் இக் கருத்துடையராக இருந்தமையாற்றான் தம் நூலின் முற்பகுதியில் தெய்வக் காதலையும், பிற்பகுதியில் மானுடக் காதலையும் பாடுகிறார். மானுடக் காதலைப் பாடும்போது சற்றே எல்லை கடந்து சிருங்காரச் சுவையையும் வருணித்துப் பாடுகிறார். இருவேறு தன்மைகளின் கலவை நிலையாகக் குறவஞ்சி விளங்குகிறது என்பது இதனாலும் பெறப்படும்.

பக்தியை மையமாக்கி அடித்தள மக்களைத் தலைமை மாந்தராகக் கொண்டு இசைநாடகம் படைக்க முயன்ற திரிகூடராசப்பர் இசையிலும் கலவை நிலையைக் காட்டுகிறார். ஏட்டிலக்கியத்தோடு நாட்டுப்புற இலக்கியம் அர்த்தநாரீஸ்வரக் கோலத்தில் கலந்து நிற்கும் நிலை எல்லாக் குறவஞ்சியிலும் உண்டு. இனிய இயற்றமிழ்ப் பாக்களோடு கீர்த்தனை, வண்ணம், கண்ணி, சிந்து போன்ற இசைப்பாக்களும் சங்கமித்துப் புதுப்புனலாய்ப் பொங்கி வழிகின்றன; கர்நாடக இசையும் நாட்டுப்புறப் பாடலிசையும் கைகோத்து நின்று களிநடம் புரிகின்றன.

செவ்வியல் இலக்கியம் செவ்விய மதுரம் சேர்ந்த சீரிய கூரிய தீஞ்சொற்களால் இயன்றது; கற்றுத் துறைபோய வித்தகப் புலவர்க்குக்

கற்குந்தோறும் இன்பம் பயப்பது. நாட்டுப்புற இலக்கியமோ நேர் மாறானது. பேச்சுமொழியே இதன் மூச்சுநிலையாகும். வழக்குச் சொற்களும் கொச்சைப் பிரயோகங்களும் பழமொழிகளும் இதன்கண் இடைமிடைந்து வரும். குறவஞ்சி இலக்கியம் மொழியமைப்பிலும் இரு வார்ப்புநிலை கொண்டது.

iv

உலக நாடகப் பின்னணியில் நம் குறவஞ்சி இலக்கியத்தை ஒரு நெட்டோட்டமாக ஒப்பிட்டுப் பார்க்கலாம். இது மேலைநாட்டினர் கூறும் "Opera" என்னும் இசைநாடகத்தை ஒத்தது. கதைப் புலப்பாடு எடுப்பு, தொடுப்பு, முடிப்பென முப்பிரிவாக அமையும்; இசைப்பாட்டுகள், இன்னியத்தோடு இணைந்தொலிக்கும் குழுப்பாடல் முதலியன ஒருங்கமைந்ததே "Opera" எனப்படும். `Ballad Opera', `Grand Opera', `Comic Opera' என அதை மூவகைப்படுத்திப் பேசுவதும் உண்டு. இத் தமிழிசை நாடகத்திலோ இவ்வாறு பிரித்துப் பார்க்க இடமில்லை. கதைப் புலப்பாடும், செவ்வியற் பாங்கும், நகைச்சுவை நலனும் ஒன்றிக் கலந்துள்ளன. பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கில மொழியில் படைக்கப்பட்ட பல இசைநாடகங்கள் சமுதாயத்தின் அடித்தள மக்களைக் கதைமாந்தராகக் கொண்டு விளங்கின என்றும், அக்காலத்தில் பலராலும் அறியப்பட்டிருந்த பழம்பாடல்கள் அவற்றில் இடம்பெற்றிருந்தன என்றும் சொல்லப்படுகிறது. "The Beggers Opera" (1728) என்னும் இசை நாடகத்தை ஆங்கிலத் திறனாய்வாளர் அதற்கு உதாரணம் காட்டுவர்.[3]

குறவஞ்சியை நாம் இந்நிலையிலும் ஒப்பிட்டுப் பார்க்க வாய்ப்புண்டு.

மேலைநாட்டில் மட்டுமன்றி நம் இந்திய மொழிகள் பலவற்றிலும் நாடகங்கள் மலர்ந்துள்ளன. 1853ஆம் ஆண்டு உருதுமொழியில் "இந்திய சபா" என்னும் இசைநாடகம் புனையப்பட்டதாகவும், அதை முன் மாதிரியாகக் கொண்டு இந்திமொழிக் கலைஞர்கள் பல நாடகங்கள் உருவாக்கினர் என்றும் அறிஞர் இந்திராநாத் சௌத்ரி தம் அரிய ஆய்வுக் கட்டுரை ஒன்றில் கூறுகிறார்.[4] கன்னடத்திலும் காஷ்மீர மொழியிலும் 'கீத நாடகங்கள்' (Musical Plays) இயற்றப்பட்டுள்ளன. இந்திய மொழிகளில் எழுதப்பட்டுள்ள இசைநாடகங்கள் பெரும்பாலும் தொன்மங்கள் (Myths), பழங்கதைகள் (Legends), நாட்டுப்புறவியல் (Folklore) முதலியவற்றைத்

தம் தோற்றக் களமாகக் கொண்டுள்ளன. திருக்குற்றாலத் தலத்தை ஒட்டிய புராணச் செய்திகளும், அடியொட்டுப் பாறை போன்ற தொன்மங்களும், சிங்கன்–சிங்கியின் கிராமிய மணம் கமழும் உரையாடல்களும் குறவஞ்சியில் இடம்பெறுவதைச் சுட்டவும் வேண்டுமோ?

திரிகூடராசப்பர் வடமொழி நாடக மரபையும் அறிந்திருக்க வேண்டும். வடமொழி நாடகங்களில் சூத்திரதாரன் வருவதுபோல இவர் படைப்பில் கட்டியங்காரன் காட்டப்படுகிறான். எனினும் அவனுக்கு வடமொழி நாடகங்களில் இருப்பதுபோல் சிறப்பிடம் தரப்படவில்லை. அப் பாத்திரத்தை எடுத்த எடுப்பில் அறிமுகப்படுத்தி அதே வேகத்தில் அவனைக் கதையினின்றும் அப்புறப்படுத்திவிடுகிறார். வடமொழி மரபைத் தமிழ் மரபோடு கலக்க நினைக்கும் ஆசிரியரின் ஆரா விழைவே இதற்குக் காரணம். இதைத் தவிர வேறு எக் காரணத்தையும் நாம் அறியுமாறில்லை.

உலக நாடக மரபும் இந்திய நாடக மரபும் இப் படைப்பில் துண்டு துணுக்காக நம் பார்வையில் தட்டுப்படுகின்றன. இதற்கும் மேலாக எனக்கு மற்றொரு கருத்தும் புலனாகிறது. திருக்குற்றாலக் குறவஞ்சி என்னும் பெயரில் இந்த இசைநாடகம் அமைந்திருந்தாலும் தமிழம் என்னும் எல்லைக்கப்பாலும் விரிந்து இந்தியம் என்னும் முகட்டை, இப் புலவரின் சிந்தனை தொட்டு நிற்கிறது.

திரிகூடராசப்பர் படைப்பான குறத்தி இந்திய தேசிய உணர்வை எதிரொலிக்கிறாள்.

"கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை அம்மே
கொழுநனுக்குக் காணிமளை பழநிமலை அம்மே
எல்லுலவு விந்தைமலை எந்தைமலை அம்மே
இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே"

என்பது குறத்தியின் கூற்று. ("இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே" என்னும் பின்னாளைய பாரதீய சிந்தனைக்கு வித்துத் தெரிகிறது அல்லவா?) அம்மட்டோ,

"கங்கையெனும் வடஅருவி தங்குமிந்திர சாபம்,
கலந்தாடிற் கழுநீராய்த் தொலைந்தோடும் பாவம்"

என்று இந்திய நம்பிக்கையை அவள் உயர்த்திப் பேசுகிறாள். குறவனோ இந்திய நாடு முழுவதையும் ஒருசேரச் சுற்றிவரும் நாடோடியாகக்

காட்டப்படுகிறான். குமரிமுனை முதல் குருச்சேத்திரம் வரை அவன் பாதங்கள் படாத ஊரே இல்லையாம். குறவன்–குறத்தி பாத்திரப் படைப்பை நீள நினைத்தால் தமிழ் தேசியத்தை இந்திய தேசியமாக விரித்துக் காணும் திரிகூடராசப்பரின் அகல்மனம் நமக்குப் புலனாகும். வடக்கும் தெற்கும் ஊடாடி நிற்கும் கலவை நிலை இது.

எனவே, இதுகாறும் கூறியவற்றை ஒருங்கு தொகுத்து ஒரு வாய்பாடாகச் சுருக்கிக் கூறினால் "திருக்குற்றாலக் குறவஞ்சி கலவை நிலை என்னும் கட்டமைப்புக் கொண்டது" என்று ஒரே வாக்கியத்தில் தெளிவுபடுத்திவிடலாம். 'கலவை நிலை' என்னும் தொடரைச் சற்றே மிகையாகக் கலந்துவிட்டேனோ என்னவோ, இதன் கட்டமைப்பை விளக்க வேறு புதுத்தொடர் எனக்குக் கிட்டவில்லை.

வசந்தவல்லி, குறத்தியை நோக்கி "ஒன்று போடாமற் குறி சொல்லியே வந்தாய், பின்னை உழப்பிப் போட்டாய் குறியைக் கழப்பிப் போட்டாய்!" என்று குறை கூறுவதுபோல நீங்கள் என்னைக் குறைசொல்ல மாட்டீர்கள் என்றே நம்புகிறேன்.

அடிக்குறிப்புகள்

1. The Necessity of Art - A Marxist Approach, p. 125
2. இலக்கிய விளக்கம், ப. 115
3. McGraw-Hill, ***Encyclopaedia of World Drama***, Vol.3, p. 374
4. I.A. Choudhuri, ***Comparative Indian Literature***, Vol.I, (Ed.), K.M. George, p. 507

9

முல்லைப் பாட்டு
- ஒரு திறனாய்வு நோக்கு

சி. பாலசுப்பிரமணியன்

தோற்றுவாய்

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார் தம் தொல்காப்பியத்தில் அகத்திணையியலில் அகப்பொருட்குரிய திணைகளை,

> *"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்*
> *முற்படக் கிளந்த எழுதிணை என்ப"*[1]

என ஏழாகக் கூறுகின்றார். கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என்ற ஏழு திணைகளுக்கும் புறனான பாடாண், வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி என்ற புறத்திணைகள் ஏழனைப் பிற்படப் புறத்திணை இயலில் கூறுகின்றார்.

> *"பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே"*[2]
>
> *"வெட்சி தானே குறிஞ்சியது புறனே"*[3]
>
> *"வஞ்சி தானே முல்லையது புறனே"*[4]
>
> *"உழிஞை தானே மருதத்துப் புறனே"*[5]
>
> *"வாகை தானே பாலையது புறனே"*[6]
>
> *"காஞ்சி தானே பெருந்திணைப் புறனே"*[7]

இத் தொல்காப்பிய நூற்பாக்கள் ஏழனுள் 'வஞ்சி தானே முல்லையது புறனே' என்ற இலக்கணத்திற்கு இலக்கியமாக முல்லைப்பாட்டு அமைந்த திறத்தைக் காண்போம்.

முல்லையும் வஞ்சியும்

முல்லை என்ற அக ஒழுக்கத்திற்கு இயைந்த புற ஒழுக்கமாக வஞ்சி ஒழுக்கம் திகழ்கிறது. வஞ்சி எனப்பட்டதற்குக் காரணம் கூறவரும் இளம்பூரணர் "காடுறை உலகமாகிய முல்லைப்புறம் மண்ணசை வேட்கையால் எடுத்துச் செலவு புரிந்த வேந்தன்மேல் அடல்குறித்துச் செலவு புரிதலான் அவ் விருபெரு வேந்தரும் ஒருவினையாகிய செலவு புரிதலின் அது வஞ்சி என ஒரு குறி பெற்றது" எனக் கூறுகின்றார்.[8] இவற்றின் இயைபுபற்றிக் குறிக்கின்ற நிலையில், "மாயோன் மேய காடுறை உலகமும், கார் காலமும் முல்லைக்கு முதற்பொருளாதலானும் பகைவயிற் சேறலாய வஞ்சிக்கு நிழலும் நீருமுள்ள காலம் வேண்டுமாதலானும், பருமரக் காடாகிய மலைசார்ந்த இடம் ஆகாமையானும் அதற்கு இது சிறந்த தென்க" எனக் குறிக்கின்றார்.[9]

தலைவி தலைவனைப் பிரிந்து காட்டின் நடுவே அமைந்த தன் மனைக்கண் இருப்பதுபோலத் தலைவனும் தலைவியைப் பிரிந்து பகைவர் நாட்டிற்கு அரணான காட்டின்கண் அமைந்த பாடிவீட்டில் தங்கி இருப்பான். ஆதலால் முல்லையும் வஞ்சியும் தம்முள் இயைந்து காணப்படுகின்றன. இனி முல்லைப்பாட்டில் வஞ்சித்திணை ஒழுக்கம் இயைந்து நிற்றலைக் காண்போம்.

முல்லையில் வஞ்சி

'வஞ்சி தானே முல்லையது புறனே' என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு ஏற்றபடி முல்லை என்னும் அகத்திணைக்கு இயைந்த புறத்திணை ஒழுக்கமான வஞ்சி முல்லைப்பாட்டின் இடையில் அமைவுறப் பொருந்திவருகிறது. தலைவியின் இருப்பினையும், கார்காலத்தில் வருவதாகக் கூறிச்சென்ற தலைமகனின் தேர் காணாமல் வருந்துகின்ற பிரிவுத் துயரினையும் திறம்படக் கூறி, தலைமகன் தங்கியிருக்கும் பாசறையின் அமைப்பினையும் அங்கு நிகழும் செயல்களையும் பொருத்தமுற விளக்குகின்றார் நப்பூதனார். முதல் 23 அடிகளில் முல்லைத்திணை ஒழுக்கத்தினையும், 24ஆம் அடி முதல் 80 வரை உள்ள அடிகளில் வஞ்சித்திணை ஒழுக்கத்தையும், மீண்டும் 80 முதல் 103 வரை

உள்ள அடிகளில் தலைமகள் இல்லிருத்தலையும், கார்காலச் சிறப்பையும், தலைமகன் திரும்பி வருகின்ற செய்தியையும் அமைக்கின்றார் ஆசிரியர் நப்பூதனார்.

நினைந்து அவள் புலம்பல்

'வினையையே உயிராகக் கொண்ட தலைமகன்'[10] கருங்கடல் மேய்ந்த கமஞ்சூல் எழிலி இருங்கல் இறுவரை ஏறி யுயிர்க்கும் பெரும்பதக் காலையில் திரும்பி வருவதாகக் கூறிச் செல்கின்றான். அவன் கூற்றில் நம்பிக்கை வைத்து அவளும் அவன் பிரிவை ஆற்றியிருக்கின்றாள். இமிழிசை வானம் முழங்குகின்றது; கல்லோங்கு கானம் களிற்றின் மதம் நாறுகிறது; முல்லை மலர்கள் செவ்வியுடையனவாகின்றன; கார்கண்ட தலைமகள் தலைமகன் தேர்காணாமல் வருந்துகின்றாள். இவ்வாறு தலைமகள் வருந்துகின்ற வருத்தத்தைக் கண்ட பெருமுதுபெண்டிர்,

"நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"

காலத்தில் அருங்கடி மூதூர் மருங்கிற் சென்று யாழிசை இனவண்டு ஆர்ப்ப, நெல்லொடு நாழி கொண்ட நறுவீ முல்லை, அரும்பவிழ் அலரி முதலியவற்றைத் தூவிக் கைதொழுது விரிச்சி கேட்கும் பொருட்டு நிற்கின்றனர். இந்நிலையில் முல்லைநிலப் பெண் ஒருத்தி, பால் உண்ணாமை காரணமாகக் கலங்கித் துன்புறுகின்ற இனிய பசுங்கன்றை நோக்கி "உங்கள் தாயர் இடையர்கள், பின்னே இருந்து செலுத்த இப்பொழுதே வந்துவிடுவர்" எனக் கூறுகின்றாள்.

"சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
நடுங்குசுவல் அசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
இன்னே வருகுவர் தாயர் என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்" (14–19)

இவ்வாறு அவர்கள் விரிச்சி கேட்டமையால் தலைமகனும் தன் செயலை இனிதே முடித்து ஒன்னார்ப் பணித்துத் திறை பெற்று விரைந்து வருவன் எனத் தலைவியைப் பலவாறு ஏதுக்கள் கூறி வற்புறுத்தவும், அவள் ஆற்றமாட்டாமல் வருந்துகின்றாள். அவள் பூப்போன்ற கண்களினின்றும் முத்துப்போன்ற கண்ணீர்த் துளிகள் துளிர்த்து நிற்கின்றன.

"நல்ல நல்லோர் வாய்ப்புள் தெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருதல் தலைவர் வாய்வது நீநின்
பருவரல் எவ்வம் களைமா யோயெனக்
காட்டவும் காட்டவும் காணாள் கலுழ்சிறந்து
பூப்போ லுண்கண் புலம்பமுத் துறைப்ப" (18–23)

தலைவி தனிமைத் துயரால் வாடுகின்றாள். இவ்வாறாக, முல்லைப்பாட்டு ஆசிரியர் நப்பூதனார் பாடலின் தொடக்கத்தில் முதல் இருபத்து மூன்று அடிகளில் முல்லைத்திணை ஒழுக்கமான 'இருத்தலை' மிக அழகாக அமைத்துச் செல்கின்றார்.

வஞ்சி ஒழுக்கம்

பாடலின் முதற்பகுதியில் தலைவியின் ஆற்றாமை நிலையைக் கூறியவர், அடுத்த பகுதியில் வஞ்சி ஒழுக்கத்தை – எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன் அஞ்சுதகச் சென்று அடல் குறித்த செயலை– விளக்குகின்றார். வேந்து வினை காரணமாகப் பிரிந்த தலைமகன் பாசறை அமைத்து அப் பாடிவீட்டில் தங்கியிருந்தமையை – பாசறை நிலையை – மிகத் தெளிவாக விளக்கிச் செல்கின்றார்.

பாசறை அமைப்பு

போர்மேற் சென்ற தலைமகனும் அவன் வீரர்களும் காட்டாறு சூழ்ந்த அகன்ற நெடிய புறவில் சேணாறு பிடவம், பசிய தூறுகளையும் வெட்டி, அங்கிருந்த வேட்டுவரின் அரண்களையும் அழித்துக் காட்டு முள்வேலியாகிய மதிலினை அமைத்து அதன் அகத்தே கடல்போல் பரந்த பாடிவீட்டினை அமைக்கின்றனர். இதனை,

"கான்யாறு தழீஇய அகனெடும் புறவில்
சேணாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி

வேட்டுப்புழை யருப்பம் மாட்டிக் காட்ட
இடுமுட் புரிசை ஏமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி" (24–28)

என்ற முல்லைப்பாட்டுப் பகுதியால் தெளியலாம்.

யானைப்பாகர் செயல்கள்

இவ்வாறு அமைத்த பாசறையின் உட்பகுதியில் உவலைக்கூரை ஒழுகிய தெருவில் நாற்சந்தி கூடுமிடத்தில் காவலாக நிறுத்தப்பட்ட தேம்படு கவுள யானை கரும்பொடு நெருங்கக் கட்டிய நெற்கதிர்களையும், அதிமதிரத் தழையையும் உண்ணாமல் அவற்றினால் நெற்றியைத் தேய்த்துக்கொண்டும், அயில்நுனை மருப்பில் தம் கையிடைக் கொண்டும் நிற்றலைக் கண்ட யானைப்பாகர் கவைமுட் கருவியால் வடமொழி பயிற்றி அதனை உண்ணுமாறு செய்கின்றனர்.

"உவலைக் கூரை யொழுகிய தெருவில்
கவலை முற்றம் காவல் நின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
ஒங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த
வயல்விளை யின்குள குண்ணாது நுதல்துடைத்து
அயில்நுனை மருப்பில்தம் கையிடைக் கொண்டெனக்
கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா இளைஞர் கவளம் கைப்ப" (29–36)

என்பது முல்லைப்பாட்டு.

மறவரின் அரண்கள்

பாசறைக்கண் பல்வேறு மறவர்க்குரிய அரண்கள் இருந்தமையைக் கூறுகின்ற ஆசிரியர் நப்பூதனார் அவை அமைந்த திறத்தை விளக்குகின்றார். காவிக் கல்லிலே தோய்த்து உடுத்த உடையை உடையவனும், முக்கோலை உடையவனுமாய அந்தணன், அம் முக்கோலை நட்டு அதன்மேல் அவ் வுடையை இட்டுவைத்த தன்மைபோல மறத்திலும் அறம் வழுவாத போரிலே வெந்நிட்டு ஓடாமைக்குக் காரணமான வலிய வில்லைச் சேர ஊன்றி அவற்றின்மேல் தூணிகளைத் தொங்கவிட்டுக் கூட்டமாகக் கால்களை நட்டுப் பின் கிடுகுபடைகளை நிரலாகப் பிணைத்துப் பல்வேறு அரண்களை அமைத்தனர் எனக் கூறுகின்றார்.

இதனை,

"கல்தோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோல் அசைநிலை கடுப்ப நற்போர்
ஓடா வல்வில் தூணி நாற்றிக்
கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கை
பூந்தலைக் குந்தம் குத்திக் கிடுகுநிரைத்து
வாங்குவில் அரணம் அரண மாக
வேறுபல் பெரும்படை" (37–43)

என்ற பகுதியால் உணரலாம்.

மன்னன் இருக்கை

இவ் வரண்களுக்கு நடுவே மன்னனின் தனி இருக்கை அமைக்கப் பட்டுள்ளது. வில்லரண்களின் மதில் வளைத்து அரசனுக்கென்று தனிக்கோயில் சமைக்கப்பட்டுள்ளது. இக் கோயிலின் உட்பகுதியில் குறுந்தொடி முன்கைக் கூந்தல் சிறுபுறத்து மங்கையர் கச்சிலே வாளைப் பூண்டவராய் நெய்யினை உமிழ்கின்ற திரிக்குழாயினால் பாவையினைக் கையிலே அமைத்த விளக்கின் சுடர் குறையுந்தொறும் திரியைக் கொளுத்தி எரிக்கின்றனர்.

"... ... ... நாப்பண் வேறோர்
நெடுங்காழ்க் கண்டம் கோலி யகநேர்பு
குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்து
இரவுபகற் செய்யும் திண்பிடி யொள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்
நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்
கையமை விளக்கம் நந்துதொறு மாட்ட" (43–49)

மெய்காப்பாளர்

இவ்வாறு பாசறையின்கண் மகளிர் இருந்தமையை உணர்த்தியவர் அடுத்து மன்னன் மெய்காப்பாளர் சூழ இருந்தமையைப் புலப்படுத்து கின்றார். யானை, குதிரை முதலியன உறங்கலின் அவற்றின் கழுத்தில் கட்டப்பட்ட மணியோசை அடங்கிய நடுயாமத்தில் புனலிபூத்து அசைகின்ற சிறு தூறுகள் துவலையோடு வருகின்ற காற்றுக்கு அசைந்தது போன்று, துகில் முடித்துப் போர்த்த தூங்கல் ஒங்குநடைப் பெருமுதாளர் காவலாகச் சுற்றி நிற்கின்றனர் என்பதை,

"நெடுநா ஒண்மணி நிழற்றிய நடுநாள்
அதிரல் பூத்த ஆடுகொடிப் படாஅர்
சிதர்விரல் அசைவளிக் கசைவந் தாங்குத்
துகில்முடித்துப் போர்த்த தூங்கல் ஒங்குநடைப்
பெருமூதாளர் ஏமம் சூழ" (50–54)

என்ற முல்லைப் பகுதிவழி உணர்த்துகின்றார் ஆசிரியர்.

நாழிகைக் கணக்கர்

இவ்வாறு மன்னனின் தனி இருக்கையில் குறுந்தொடி மகளிரும், பெருமூதாளரும் மட்டுமன்றி எடுத்த காரியம் இனிதே நிறைவுறப் பொழுதினைக் கண்டு கூறும் மெய்யறிவுடையவர்களும் ஆங்கு இருந்தமையை,

"பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள்
தொழுதுகாண் கையர் தோன்ற வாழ்த்தி
எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்நின்
குறுநீர்க் கன்னல் இனைத்தென் றிசைப்ப" (54–58)

என்று முல்லைப் பகுதி உணர்த்துகின்றது.

யவனரும் மிலேச்சரும்

அரசனின் இருக்கையில் உள்நாட்டு மெய்காப்பாளர்கள் மட்டுமன்றி அயல்நாட்டுக் காப்பாளர்களும் இருந்தனர் என்பதை முல்லைப்பாட்டு உணர்த்தி நிற்கிறது. அரசன் பள்ளியறையில் அகப்பணி செய்தற்கு அயல்நாட்டுக் காப்பாளர் அமைந்திருந்தனர். இவ் அயல் நாட்டுக் காப்பாளர்களில்,

"மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்" (59–61)

என்பவர்கள் ஒருவகையினர்;

"உடம்பின் உரைக்கும் உரையா நாவின்
படம்புகு மிலேச்சர்" (65–66)

என்பவர்கள் ஒருவகையினர். இவர்கள் புலித்தொடர் விட்ட புனைமாண் நல்லில்லில் மணிவிளக்கை எரிய வைத்துகொண்டு திண்நாண் எழிலி

வாங்கிய ஈரறைப் பள்ளியுள் உள்அறையாகிய பள்ளிஅறையின்கண் அரசனின் உழையராய் இருந்து காவல் புரிகின்றனர்.

மன்னன் மனநிலை

இவ்வாறாகப் பாசறையில் இருந்த மகளிர், மெய்காப்பாளர், நாழிகைக் கணக்கர், யவனர், மிலேச்சர் இவர்கள் சூழல் இருந்த மன்னனின் மனநிலையை அடுத்து உரைக்கின்றார். வினைமுற்றியிருந்த தலைமகன் பகைமேற் செல்லும் விருப்பத்தால் உறக்கங்கொள்ளாமல், முன்னாளில் பகைவர் எறிந்த வேல் நுழைந்தமையால் புண்கூர்ந்து அதனால் வருத்தமுற்றுத் தம் பெண்யானைகள் மறந்த களிற்று யானைகளை நினைந்தும், யானைகளின் பரிய கைகளை வெட்டி வீழ்த்தித் தாம் அணிந்த வஞ்சின மாலைக்கு வெற்றி உண்டாகும்படி செஞ்சோற்றுக் கடன் கழித்த மறவர்களை நினைந்தும், வைந்நுனைப் பகழி மூழ்கலினால் புண்மிகுந்து அத் துன்பத்தால் புல்லுண்ணாமல் செவிசாய்த்து வருந்துகின்ற குதிரைகளை நினைத்தும்,

"ஒருகை பள்ளி யொற்றி யொருகை
முடியொடு கடகம் சேர்த்தி நெடிதுநினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொள் நோன்விரல்
நகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி
அரசிருந்து பனிக்கும் முரசுமுழங்கு பாசறை"

யில் இன்துயில் வதிகின்றமையைக் காட்டுகின்றார்.

இவ்வாறாக முல்லைப்பாட்டு ஆசிரியர் நப்பூதனார் பகைமேற் சென்ற வேந்தனின் பாசறை நிலையைக் கூறுவதன்மூலம் முல்லைத் திணைக்கு இயைந்த வஞ்சியொழுக்கத்தை விளக்குகின்றார்.

படர்மெலிந்து இரங்கும் தலைமகள்

பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்டுவந்து ஆற்றுவிக்கவும் ஆற்றமாட்டாதவளாய்ப் பூப்போலுண்கண் புலம்பு முத்துறைக்க நின்ற தலைமகள் அரசிருந்து பனிக்கும் முரசு முழங்கு பாசறையில் இன்துயில் வதியுநனைக் காணாது வருந்துகின்ற முல்லையொழுக்கத்தை மீண்டும் இறுதியில் வற்புறுத்துகின்றார் ஆசிரியர். உருமிடி வானம் இழியவும், வரிநிறப் பாதிரி விடவும், திருவில் விலங்கலன்றித் தீம்பெயல் தாழவும் தொடங்கிய கார்காலத்தில் வருவதாகக் கூறிச் சென்ற தலைமகனின்

வரவினைக் காணாத தலைமகள் தன் நெஞ்சினை அவன்பாற் போக்கி நிறையழிந்து வருந்துகின்றவள் இவ்வாறு தன் கொழுநன் சொல்லைத் தவறியதாம் எனக் கூறித் தன்னைத் தானே தேற்றியும், கழலும் வளைகளைக் கழலாமல் திருத்தியும், மீண்டும் மயங்கியும் நெட்டுயிர்த்தும், அம்பு பாய்ந்த மஞ்ஞையைப் போல் மயங்கி தன்னக நெகிழ இடஞ்சிறந்துயரிய எழுநிலை மாடத்தின்கண்ணே இருந்து முடங்கிறைச் சொரிதரும் மாத்திரள் அருவியின் ஓசையிலே மனம் பறிகொடுத்து நிற்கின்றாள்.

"இன்றுயில் வதியுநற் காணாள் துயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியும் ஒடுவளை திருத்தியும்
மையல் கொண்டு மொய்யென உயிர்த்தும்
ஏவுறு மஞ்ஞையின் நடுங்கிஇழை நெகிழ்ந்து
பாவை விளக்கிற் பரூஉச்சுட ரழல
இடஞ்சிறந் துயரிய எழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி
இன்பல் இமிழிசை யோர்ப்பனள் கிடந்தோள்" (80–88)

எனத் தலைமகள் தலைமகனைப் பிரிந்து எழுநிலை மாடத்தில் தனித் திருந்தமையை – பிரிவிடை ஆற்றாது வருந்துகின்றமையை–உணர்த்து கின்றார் ஆசிரியர். பேராசிரியர் டாக்டர் மு.வ. அவர்கள் முல்லைக்கு விளக்கம் கூறுகையில் 'கற்பு' எனப் பொருள் கூறுகின்றார். அதாவது தலைமகன் தலைமகள் இருவரும் சொற்றிறம்பாமல் நடத்தலே கற்பு – முல்லை – எனக் கூறுகின்றார் அவர். இதற்கேற்பவே தலைமகள், தலைமகன் பிரிந்து சென்றபோது அவன் பிரிவை ஆற்றியிருப்பதாகக் கூறிய சொல்லைத் திறம்பாமல் கடைப்பிடிப்பதை ஆசிரியர் நப்பூதனார் 'நீடு நினைந்து தேற்றியும்' என்ற தொடர்வழிப் புலப்படுத்துகின்றார். தலைமகனும் தலைமகளைப் போன்றே சொற்றிறம்பாமல் கற்புடன் ஒழுகுவதைக் கார்காலத்தில் விரைந்து திரும்புகின்ற செயலின்மூலம் விளக்குகின்றார். இவ்வாறாக ஆசிரியர் நப்பூதனார் முல்லைத்திணை ஒழுக்கத்தைப் பாடலின் முதற்பகுதியிலும் இறுதிப் பகுதியிலும் அமைத்துக் காட்டுகின்றார்.

தலைமகன் மீளல்

விரிதிரை வெள்ளம் வெறுப்பப் பருஇவ் வெருவிறல் வானம் பெருவரை சேருங் கருவணி காலத்தில் வருதும் என மொழிந்து சென்ற தலைமகன் வினைமுற்றி மீண்டு வருகின்றான். வேண்டுபுலங் கவர்ந்த ஈண்டுபெருந் தானையோடு விசயம் வெல்கொடி யுயரி வலனேர்பு வயிரும் வளையும் ஆர்ப்பவும் அயிரவும்,

"செறியிலைக் காயா அஞ்சனம் மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை அங்கை யவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கானம் நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகின்
திரிமருப் பிரலையொடு மடமா னுகள
எதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்
முதிர்காய் வள்ளியங் காடு" (93–101)

பின்னாகும்படி வருகின்றான் தலைமகன். தலைமகனின் வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவின் குளம்படி ஓசையானது அரசிருந்து பணிக்கும் முரசமுழங்கு பாசறையின் இன்துயில் வதியுநனைக் காணாது இடஞ்சிறந் துயரிய எழுநிலை மாடத்து முடங்கிறைச் சொரிதரும் மாத்திரள் அருவியின் இன்பல் இமிழிசை ஓர்ப்பனள் கிடந்தோளாய தலைமகளின் அம்செவி நிறைய ஆலின என்று முடிக்கின்றார் ஆசிரியர். இதனால் தலைமகனும் சொன்ன சொல் தவறாமல் இருக்கின்ற பான்மையை உணர்த்திநிற்கின்றார். தலைமகன் மீண்டும் வருகின்ற நிலையைக் கூறாமல் விடுத்திருந்தால் இம் முல்லைப்பாட்டு முழுமை பெற்றதாகாது. தலைமகனும் தன் பண்பில் குறைந்தவனாயிருப்பான். இவற்றைத் தவிர்க்கவே ஆசிரியர் நப்பூதனார் தலைமகன் மீண்டு வருகின்ற காட்சியினையும் அமைக்கின்றார்.

இறுவாய்

இவ்வாறாக முல்லைப்பாட்டு ஆசிரியர் நப்பூதனார் பாடலின் தொடக்கத்தில் கடனீர் முகந்த கமஞ்சூல் எழிலி குடமலை யாகத்துக் கொள்ளப்பு இறைக்கும் காலத்தில் திரும்பி வருவதாகக் குறிசெய்து பிரியத் தலைமகள் அவன் பிரிவை ஆற்றாது வருந்துகின்றமையைக்

கூறிப் பின்னர் அவன் கூறிச் சென்றபடி தன் கற்பு ஒழுக்கத்திற்கேற்றபடி இல்லிருந்து ஆற்றுகின்றமையைப் பின் கூறுகின்றார். இடைப்பகுதியில் தலைமகன் தலைமகளைப் பிரிந்து பாசறை வீட்டில் இருக்கின்றமையைக் கூறுகின்றார். இவ்வாறு தலைமகன் தலைமகள் இருவரும் ஒருவரை ஒருவர் பிரிந்து தத்தமக்குரிய இடத்தில் சொற்றிறம்பாமல் இருப்பதாகக் கூறும் இருத்தல் நிமித்தத்தை விளக்கி நிற்பதால் 'வாஞ்சி தானே முல்லையது புறனே' என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு இயைய முல்லைப்பாட்டு அமைந்துள்ளது எனத் துணியலாம்.

பாடிவீட்டின் அமைப்பு

எஞ்சா மண்ணசை காரணமாக வந்த வேந்தன்மேல் தன் வீரத்தை நிலைநாட்டுதற்காகச் சென்ற முல்லைப்பாட்டுத் தலைமகன் தன் வீரர்களுடன் பகைப்புலத்தில் பாசறை வீட்டில் தங்கியிருந்தமையைக் கூறும் ஆசிரியர் நப்பூதனார் பாசறை அமைப்பினை,

"கான்யாறு தழீஇய அகனெடும் புறவின்
சேணாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி
வேட்டுப்புழை யருப்பம் மாட்டிக் காட்ட
இடுமுட் புரிசை ஏமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி" (24–28)

என விளக்குகின்றார். அதாவது காட்டாறு சூழ்ந்த அகன்ற நெடிய காட்டிடத்தே, சேய்மைக்கண்ணும் சென்று மணம் வீசுகின்ற பிடவஞ் செடிகளையும், பசிய தூறுகளையும் வெட்டி வீழ்த்திப் பின்னர் ஆங்குக் காவலாக அமைந்திருத்த வேடுவர்களின் குடியிருப்புகளையும் அழித்துக் கடல்போல் பரந்த பாடிவீட்டினை அமைத்தனர் என அப் பாடிவீட்டின் அமைப்பினைத் தெளிவுறுத்துகின்றார்.

"இன்துயில் வதியுநற் காணாள் துயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு (80–81)

கிடந்த தலைவிக்குப் பெருமுது பெண்டிர் பெரும்பெயல் பொழிந்த சிறுபுன்மாலைப் போதில் விரிச்சி கேட்டு ஆய்மகள் கூறிய நன்மொழிகளைக் காட்டவும் காட்டவும் காணாதாளாய்க் கலுழ்சிறந்து பூப்போல் உண்கண் புலம்புமுத் துறைப்ப நின்ற தலைமகள் அரசிருந்து பணிக்கும் முரசு முழங்கு பாசறையில் இன்துயில் வதியுநனாய

தலைமகனைக் காணாது வருந்துகின்றவள், தன் நெஞ்சினை அவன்பாற் போக்கி நிறையழிந்து மிக்க துன்பத்தினால் ஒடுகின்ற வளையைத் திருத்திக்கொண்டும், மையல்கொண்டு உயிர்த்தும், பகழி பாய்ந்த மஞ்ஞையினைப் போல் நடுங்கி இழை நெகிழ எழுநிலை மாடத்தின்கண் இருந்து முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவியின் இன்பல் இமிழிசையைக் கேட்டு நிற்கின்றனள். அவ்வாறு நிற்கின்றவள் தன் தலைவன் அக்காலத்தில் கூறிச் சென்ற சொற்களை நினைந்து பார்க்கின்றாள். உடனே அவளுக்குத் தலைமகன் உருமிடி வானம் முழக்குகின்ற கார்காலத்தில் திரும்பி வருவதாகக் கூறித் தான் வருந்துணையும் அவளை ஆற்றி யிருக்குமாறு கூறிச் சென்ற சொற்கள் நினைவிற்கு வருகின்றன. வரவே தலைமகன் கூறிச் சென்றிருப்பதால் அவன் சொற்களை மீறி இவ்வாறு வருந்துதல் தன் ஆருயிர்த் தலைவன் பெருமொழியைத் தவறியதாம் என்று கருதித் தன்னைத் தானே தேற்றிக் கொண்டு பிரிவுத்துயரை ஆற்ற நினைக்கின்றாள். இவ்வாறு தலைமகள் இன்துயில் வதியுநனைக் காணாது நெஞ்சாற்றுப்படுத்த நிறைதபு புலம்பொடு எண்ணுகின்றமையை ஆசிரியர் நப்பூதனார் 'நீடுநினைந்து தேற்றியும் ஒடுவளை திருத்தியும்' என்ற பகுதிவழி உணர்த்துகின்றார்.

அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், 1
2. தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், 10
3. ஷெ. 1
4. ஷெ. 6
5. ஷெ. 8
6. ஷெ. 15
7. ஷெ. 18
8. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை
9. ஷெ. ஷெ
10. 'வினையே ஆடவர்க் குயிரே' – குறுந்தொகை, 135:1

10

காதவிழ் புரிகுழல் மாதவி அல்லது இளங்கோவின் பாத்திரப் படைப்பு உத்தி

பொன். சௌரிராசன்

'இலக்கியக் கலைநுட்பத்தில் தலையாய அடையாளங்களுள் ஒன்று நடமாடும் நம்பத்தக்க பாத்திரங்களைப் படைக்கும் திறனாகும்.'[1]

'தான் படைக்கும் பாத்திரங்களுக்குப் பின்னணியில் படைப்பாளன் மறைந்திருக்கிறான்.' [2] இவ்வாறே ஒரு படைப்பாளன் தன் படைப்பின் குறிக்கோளை, தான் படைக்கும் பாத்திர அறிமுகத்தில் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ அமைத்துவிடுகிறான்.

காப்பியக் கதைமாந்தர்களை அறிமுகம் செய்வது ஓர் அரிய கலை. இந்தக் கலையில் மகாகவிகள் அனைவரும் வல்லவர்களாகவே திகழ்கிறார்கள். 'கொடியாரை அழித்து அடியாரைக் காக்கும்' இறைவனது இயல்பு இராமாவதாரத்தில் விளக்கப்பெறுகிறது. இந்த விளக்கம் தொடக்கத்திலேயே புலப்படுமாறு மகாகவி கம்பர் இராமனைப் பின்வருமாறு அறிமுகம் செய்கிறார்.

'ஆதிமூலமே!' என்று அழைத்த அரசுகளிற்றைக் (கசேந்திரன்) காக்க அறிதுயில் நீங்கி ஒடோடி வந்து உதவிய திருமாலது திறம் புலப்படுமாறு இராம அவதாரத்தை அறிமுகம் செய்து வைக்கின்றார்.

"கராம லையதளர் கைக்கரி எய்த்தே
'அரா அணை யில்துயில் வோய்!என அந்நாள்
விராவி அளித்தருள் மெய்ப்பொரு ளுக்கே
இராமன் எனப்பெயர் ஈந்தனன் அன்றே"[3]

(பாலகாண்டம் திருஅவதாரப். 117)

என இராமாவதாரத்தின் நுட்பமும் நோக்கமும் புலப்படுத்துவது கம்பருடைய அறிமுக உத்தியாக அமைந்துள்ளது. இப்படியே கம்பர் அறிமுகப்படுத்தும் ஒவ்வொரு கதைமாந்தரும் இராமாவதார நோக்கத்திற்கு உடன்பாட்டு வகையாலோ எதிர்மறை வகையாலோ அவதார நோக்குப் புலப்படுமாறு அறிமுகம் செய்யப்பெறுகின்றனர். இது கம்பர் மேற்கொண்ட பாத்திர அறிமுக உத்தி.

இப்படியே ஒவ்வொரு காப்பியக் கவிஞரும் சிறப்பான அறிமுக உத்தி ஒன்றைக் கையாளுகின்றார். இந்த வகையில், இளங்கோவடிகளார் தாம் இசைத்த சிலப்பதிகாரத்தில் கைக்கொண்ட பாத்திர அறிமுக உத்தி கற்பார் நெஞ்சை அள்ளும் கவின்மிகு உத்தியாக விளங்குகிறது.

கோவலனும் கண்ணகியும் விண்ணகம் ஏகினும் இக் காப்பியம் நெஞ்சில் இறுதியில் நிறுத்துவது அவலச்சுவையே (Tragic emotion) ஆகும். எனவே, இளங்கோவடிகளார் தம் கதைமாந்தர்களை அறிமுகம் செய்யும் போதெல்லாம் இந்த அவலக்குறிப்பு வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ அமைந்து திகழ்கின்றது. 'போதிலார் திரு', 'தீதிலா வடமீன்', 'மாதரார் தொழுதேத்தல்' இவையெல்லாம் கண்ணகியை அறிமுகப்படுத்தும்போது இளங்கோ அடிகள் தருகின்ற அடைமொழிகள்.

திருமகளும், அருந்ததியும் கணவரைப் பிரியாது கற்பில் திண்ணியராய்த் திகழ்ந்து மாதரார் தொழும் தெய்வமாக விளங்கினும், இல்லற இன்பத்தில் இயைந்து மகிழ்ந்தனரல்லர். கண்ணகி வாழ்வு, மண்ணுலகில் துன்பமயமாய் அமைதற்கான குறிப்பு இந்த அறிமுகத்தில் மறைமுகமாக அமைந்திருக்கக் காணலாம். அதுபோலவே கோவலனை அறிமுகப்படுத்தும் சொற்களிலே 'மண்தேய்த்த' தொடரை முன்வைத்து, 'தேய்ந்துபோகும் குறிப்போடு' அறிமுகப்படுத்துகிறார்.

இப்படியே கவுந்தியை, 'சிறையகத் திருந்த' என்ற தொடரால் அறிமுகப்படுத்தி, 'உயிர்பதிப் பெயர்த்தமையை' அவர்கள் முடிவாக்கி உரைக்கின்றார்.

இவ்வாறே 'கூற்றுத் தூதன்' என முடிவுக்கு ஏற்ப முன்னறிமுகம் ஒன்றினோடு பொற்கொல்லன் அறிமுகம் செய்யப்பெறுகிறான்.

இத்தகு அறிமுகங்களிலிருந்து இளங்கோஅடிகளார் உள்ளத்தில் கொண்ட அறிமுக உத்தி இன்னதென நமக்குப் புலப்படுகின்றது.

தொடக்கத்தில் மணக்களத்தில் கோவலனையும் கண்ணகியையும் அழைத்து, இறுதியில் பிணக்களத்தில் அவர்களைக் காட்டப்போவதால், தம் காப்பிய அறிமுகங்களிலெல்லாம் அவலக்குறிப்பு ஒன்று எதிர்நோக்கி நிற்கும் அறிமுக உத்தியைத் தமக்கே உரிய தனித்ததோர் உத்தியாக அடிகளார் கைக்கொண்டுள்ளார். இந்த உண்மையை நன்கு புலப்படுத்துகின்றது மாதவியின் அறிமுகம்.

மாதவியைத் 'தாதவிழ் புரிகுழல் மாதவி' என்று அறிமுகப்படுத்தக் காண்கிறோம். பின்னரெல்லாம் 'கோலம் கொண்ட மாதவி', 'செங்கண் மாதவி', 'மங்கை மாதவி', 'மாமலர் நெடுங்கண் மாதவி', 'மாநெடுங்கண் மாதவி' என்றெல்லாம் பற்பலவாறு பற்பல அடைமொழிகளால் மாதவியின் அழகைப் புனைத்துரைக்கும் இளங்கோவடிகள் அவளை அறிமுகப் படுத்தும்போது மட்டும் 'தாதவிழ் புரிகுழல் மாதவி' என்று அவளது கூந்தல் அழகினை அறிமுகம் செய்யும் அவலஉத்தி, தொடர்ந்து கற்பார் நெஞ்சைக் கசிந்துருகச் செய்கிறது.

இளமை, அழகு இவற்றோடு மங்கலத்தின் குறிப்பாகவும் இலக்கியங்களில் கூந்தல் எழில் குறிப்பிடப்பெறுகின்றது.

'ஊடற் கோலமோடு இருந்தோன்' உவப்பதற்காக மாதவி தன்னைப் புனைந்துகொண்டதாக இளங்கோவடிகள் குறிப்பிடும்போது ஆறு அடிகளில் அவள் கூந்தலை நீரில் ஆட்டி, புகையில் உலர்த்தி, கொழுஞ்சேறு ஊட்டி அழகு செய்துகொள்ளும் சீர்மையை அழகாகப் புலப்படுத்துகின்றார்.

"பத்துத் துவரினும் ஐந்து விரையினும்
முப்பத்து இருவகை ஓமா லிகையினும்
ஊறின நல்நீர் உரைத்தநெய் வாசம்
நாறிருங் கூந்தல் நலம்பெற ஆட்டிப்
புகையில் புலர்த்திய பூமென் கூந்தல்"

(கடலாடுகாதை, 76–80)

அதனுடன் அமையாது அணிபலவற்றால் அழகிய கூந்தலுக்கு மேலும் அழகு செய்துகொள்கிறாள்.

"தெய்வ உத்தியொடு செழுநீர் வலம்புரி
தொய்யகம் புல்லகம் தொடர்ந்த தலைக்குஅணி
மைஈர் ஒதிக்கு மாண்புற அணிந்து"

(கடலாடு காதை, 106–108)

'மாலை வருவர்; மாலை வாராராயினும் இரவெலாம் என்னை நினைந்து ஏங்கிக் காலை வந்துவிடுவர் என்ற நம்பிக்கை பாழ்படுமாறு குலப்பிறப்பாட்டியொடு இரவோடு இரவாகப் புகார்விடுத்துப் போய்விடுகின்றான் கோவலன். அவ்வாறு போகும்போது மாதவிபற்றி இனி நினைப்பதில்லை என்ற நெஞ்சத்து உறுதியோடு அவள் நினைவைப் புகாரிலேயே நிறுத்திவைத்துவிட்டு நீங்குகின்றான்.

அவ்வாறு நீங்கி, மதுரைக்குச் சென்றுகொண்டிருக்கும் கோவலனை மாதவி அனுப்பிய கோசிகமாணி கண்டுகொண்டு அவள் தந்த ஓலையை அவன்பால் நீட்டுகின்றான். மாதவியின் நினைவை நீக்குதலில் உறுதிபூண்ட கோவலன், அந்த ஓலையை வாங்கத் தயங்குகின்றான். என்றாலும், அவ் வோலையில் கமழ்கின்ற மாதவியின் கூந்தல் மணம் அவன் மனத்தை நெகிழ்விக்க, விடுதல் அறியா விருப்பினனாய் அவ் வோலையை ஏற்கின்றான்.

கோவலன் மனப்போராட்டமும் மாதவியின் கூந்தல் வெற்றியும் புலப்படுமாறு அடிகளார் பாடல் அடிகளை அமைத்து விளக்குகின்றார்.

"மாதவி ஓலை மலர்க்கையின் நீட்ட
உடன்உறை காலத்து உரைத்தநெய் வாசம் ,
குறுநெறிக் கூந்தல் மண்பொறி உணர்த்திக்
காட்டியது ஆதலின் கைவிட லீயான்
ஏட்டகம் விரித்தாங்கு எய்தியது உணர்வோன்"

(புறஞ்சேரி இறுத்தகாதை, 82–86)

இப்படி, தாதவிழ் புரிகுழல், ஆடற்கலையில் மாதவிக்கு அழகு தந்தது; கோவலனைத் தனக்கு அளித்துத் தன்னோடு இறுத்தி, தன்னை மறக்கும்போதெல்லாம் அவனுக்கு நினைவூட்டித் தன்வயப்படுத்திக் கொள்ளத் துணைசெய்தது. அந்தத் தாதவிழ் புரிகுழல் அடியோடு அகற்றப்பெறும் அமங்கலக் காட்சியை இளங்கோவடிகள் பின்வரும் தொடர்களில் தொகுத்துத் தருகின்றார். அவளொடு அவள் மகள் வாழ்வும், அமங்கலமாக்கப் பெறுகிறது. இதுவே, 'நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்' என்று எழுதத்தொடங்கிய தம் காப்பியத்தில் மாதவிபற்றி அவர் எழுதும் இறுதி அடிகள். மாதவி தன்னொடு தன் மகள் கூந்தலையும் களைந்து துறவுக்கோலம் பூண்ட காட்சி யை மாதவிபற்றிய இறுதி எழுத்துகளில் விரல் தழுதழுக்கப் பின்வருமாறு எழுதி வைத்துள்ளார்:

". . . . . மாதவி மடந்தை
நற்றாய் தனக்கு நற்றிறம் படர்கேன்
மணிமே கலையை வான்துயர் உறுக்குங்
கணிகையர் கோலம் காணாது ஒழிகெனக்
கோதைத் தாமம் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்துஅறம் கொள்ளவும்"

(நீர்ப்படைகாதை, 103–108)

தானும், தன் மகளும் ஏன் தன் பரம்பரையே இம் மண்ணுலக இன்பம்பெறாது போகும் அவலம் இத் தொடர்களில் அமையக் காணலாம்.

கண்ணகி வாழ்விற்குப் படிமமாகச் சிலம்பு அமைந்தாற்போல, மாதவி வாழ்வில் படிமமாகத் 'தாதவிழ் புரிகுழல்' அமைகின்றது. இன்பத்தின் ஏற்றமாக, இயக்கமாக, எழிலாக, ஏக்கமாக மாதவி வாழ்வில் அது அமைந்து இறுதியில் துன்பத்தின் தோற்றமாக அது களையப்பெறும் காட்சி அவலச்சுவையின் மாட்சியாகச் சிலப்பதிகாரத்தில் அமைந்துவிட்டது.

இவ்வாறு அவலச் சுவையில் அமையப் போகும் தம் கதை மாந்தர் தம் வாழ்க்கை முடிபுகளை அவர் தம் அறிமுகத்திலேயே அமைத்துக் காட்டவல்ல, உள்ளம் உருக்கும் காப்பிய உத்தி ஒன்றனுக்கு வித்தாக விளங்குகின்றார் கலைஞர் இளங்கோவடிகளார்.

அடிக்குறிப்புகள்

1. 'The ability to create compelling and believable characters is one of the hall marks of the Literary artist'.
   The Encyclopaedia Americana, Vol.6.p.290

2. 'As happens with every true dramatist Shakespeare is for the most part hidden behind the persons of his creation'.

   Frederick. S. Boas, ***An Introduction to the Reading of The Shakespeare,*** Oxford University Press, London. p.53

3. **கம்பராமாயணம்,** பாலகாண்டம் திருஅவதாரப். 117

4. **சிலப்பதிகாரம்,** கடலாடுகாதை, 76–80

5. **சிலப்பதிகாரம்,** கடலாடுகாதை, 106–109

6. **சிலப்பதிகாரம்,** புறஞ்சேரி இறுத்தகாதை, 82–86

7. **சிலப்பதிகாரம்,** நீர்ப்படைகாதை, 103–108

11

திருவிளையாடலில் பரஞ்சோதியார்

பி. கோபாலன்

உலகுக்குணர்த்தும் நற்செய்திகள்

ஒரு சிறந்த இலக்கியம் வாழ்க்கையின் பேருண்மைகளை அடிப்படையாகக் கொண்டமைதல் வேண்டும். இது பேரிலக்கியத்தின் சிறப்புகளில் ஒன்றாகும். உணர்ச்சி, கற்பனை, வடிவம், பொருள்நயம், சொல்லாட்சி, நடை இன்னோரன்னவை இலக்கியத்திற்குரிய பண்புகளாகும். ஓரிலக்கியத்தில் இவையனைத்தும் சீரிய முறையில் அமைந்திருப்பினும் எக்காலத்தும் மாறாத உண்மையாக நிலைபெற்று, மனித சமுதாயத்தை நன்னெறிப்படுத்தி உயர்த்தவல்ல வாழ்க்கையின் பேருண்மைகள் அதன்கண் ஊடுருவியில்லையேல், அது சிறந்த இலக்கியமாகாது. எனவே, ஓர் இலக்கியத்தின் கருத்துகள் அனைத்தும் மனித வாழ்க்கையின் மாறா உண்மைகளின் அடித்தளத்தினின்றும் எழுந்தவையாகும். கவிஞன் தான் காணும் வாழ்க்கைக் கூறுகளைத் தன் கற்பனையில் புடமிட்டுப் புலமை மெருகேற்றி இலக்கியமாகப் படைக்கிறான். எனவே, வாழ்க்கையின் படமே இலக்கியமாகும். ஆனால் வாழ்க்கையின் அமைப்புகளை உள்ளது உள்ளபடியே சித்திரித்துக் காட்டுவதைச் சிறந்த இலக்கியமாகக் கொள்ளும்பொழுது வாழ்க்கையின் உள்ளுயிரையும், அகவிதிகளையும் உண்மையாக அறிவுறுத்தும் இலக்கியமே பேரிலக்கியமாகப் போற்றப்பெறும்.

தமிழ்மொழியின் தலைசிறந்த தலபுராணங்களில் ஒன்றாகிய பரஞ்சோதி திருவிளையாடல் புராணத்தில், உலகமாந்தர் பண்பட்டு

உயர்தற்குரிய பேருண்மைகள் அடித்தளத்தில் வேரூன்றி நின்று அதனைத் தலைசிறந்ததொன்றாகக் கருதுமாறு ஆக்கியுள்ளன. என்றும் மாறா நிலைபேறுடைய பேருண்மைகளே அறமென நம் ஆன்றோர்களால் போற்றப் பெறுவனவாகும். இவ் வுண்மைகள் பழமையானவையே.

திருவிளையாடல் கதை நிகழ்ச்சிகளிலும், பாத்திரப் பண்புகளிலும், பாத்திரங்களின் உரையாடல்களிலும், ஆசிரியர் விளக்கங்களிலும், வருணனைகளிலும் பலவகை நற்செய்திகள் ஊடுருவியுள்ளன. ஆசிரியர் பரஞ்சோதியார் இறைவனின் திருவிளையாடல் நிகழ்ச்சிகளைக் கூறிச் செல்லுகின்ற போக்கில் நூற்பயனாக அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் ஆகிய நான்கு உறுதிப்பொருள்களையும் ஆங்காங்கே அமைத்து, அதன் வாயிலாகத் தாம் சமுதாயத்திற்குக் கூறவேண்டிய நற்செய்திகளை வெளிப்படுத்தியுள்ளார் என்பது புலனாகிறது. ஒரு சிறந்த இலக்கியத்தைப் படித்தால் அந் நூலில் உள்ள செய்திகள் மனித சமுதாயத்தின் மகிழ்ச்சிப் பெருக்கிற்கு உதவ வேண்டும்; தாழ்த்தப்பட்டு ஒடுக்கப்பட்டவர்களை விடுதலை பெறச் செய்ய வேண்டும்; நம்மைப்பற்றியும் இவ் வுலகைப்பற்றியும் அறிந்துகொள்வதற்கு உதவ வேண்டும்; இதனுடன் நின்றுவிடாமல் நம் வாழ்வு பிறருக்கும் பயன்படுகின்ற நெறிகளைக் கூறுவதாகவும் அமைய வேண்டும். மேற்கூறிய மனித வாழ்வுக்கு வேண்டிய கருத்துகளைத் திருவிளையாடற் புராண ஆசிரியர் பரஞ்சோதியார் கூறாமல் இல்லை என்பதை அந் நூல் வாயிலாக அறியலாம்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் வாழ்க்கைக் கூறுகள். இந் நான்கினுள் உலகியல் வாழ்க்கைக் கூறுகள் அனைத்தும் அடங்கிவிடும். 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' உலக வாழ்வில் நடைபெறக்கூடிய மாறாத உண்மைகள். ஆதலால் அறம் என்பதும், பொருள் என்பதும், இன்பம்பற்றிக் கூறுவதும் ஆகிய கொள்கைகள் காலந்தோறும் மாறும் தன்மையன. பரஞ்சோதியார் தம் நூலில் எஞ்ஞான்றும் மாறாது காலத்தை வென்று நிற்கும் நல்ல கருத்துகளை எவ்வாறு எடுத்தாண்டுள்ளார் என்பதையும், அதனால் அவர் சமூகத்திற்கு விடுத்த அறைகூவல் என்ன என்பதையும் திருவிளையாடல் நிகழ்ச்சிகளை எடுத்தாண்டிருப்பதிலிருந்து அறியலாம்.

உறுதிமொழி வழுவாமை

இந்திரன் முடிமேல் வளையெறிந்த திருவிளையாடலில் இந்திரனுக்கும், அவன் மேகங்களைச் சிறையிட்ட உக்கிரவழுதிக்கும் நடைபெற்ற போரில் இந்திரன் முடி தகர்க்கப்பட்டது. தோல்வியை ஏற்று வானோடு சென்ற இந்திரன் நட்புக்கொள்ள நாடினான். தூதுவன் மூலமாக "மழைவளம் உண்டாக்கச் செய்கிறேன்; கொண்டல்களை விடுவிக்க வேண்டும்" என்று எழுதப்பட்ட திருமுகத்தைக் கொடுத்தனுப்பி யிருந்தனன். உக்கிரபாண்டியன் இந்திரனுடைய வார்த்தையை நம்பாமையால் மேகங்களைச் சிறைநீக்க மறுத்துவிட்டான். இந்திரனுக்கு நண்பனாக ஏகவீரன் என்னும் வேளாளன் தான் பிணை இருப்பதாக முன்வந்தான். இடுக்கண் வந்து உயிருக்கே இடையூறு விளையினும் வாய்மையைப் பாதுகாத்துக் குற்றமற ஒழுகும் வேளாள மரபிற் பிறந்த அவனுடைய வார்த்தையை நம்பிக் கொண்டல்களை விடுவித்தான்.[1]

இதனால், இடுக்கண் வந்து உயிர்க்கு இறுதி எய்தும் காலத்தும் தான் கூறிய உறுதிமொழியினின்றும் வழுவலாகாது என்பதைக் கூறுகிறார் என்று கொள்ளலாம்.

பழிக்கு அஞ்சும் பண்பு

பழியஞ்சின படலத்தில் குற்றம் சுமத்தப்பட்ட வேடன் 'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' என்பதற்கு இலக்கணமாகத் தான் தவறு செய்யாத நிரபராதியாக இருந்த காரணத்தால், பாண்டியனின் வீரர்கள் கடுமையாக ஒறுப்பதற்கும் அஞ்சாமல் தன் கூற்றில் மாற்றமின்றி ஒன்றே உரைக்கின்றான், சிறிதளவும் அவன் முகத்தில் கொலைக்குறி காணப்படவில்லை[2] என்று கூறுகிறார். உள்ளத்தில் உண்மையொளி உண்டானால் எத்தகைய ஒறுத்தலுக்கும் அஞ்சாது மக்கள் உண்மை பேசுவதினின்றும் தவறமாட்டார்கள் என்பதை இந் நிகழ்ச்சியால் உணர்த்துகிறார்.

ஒரு நாட்டில் நீதிவழுவா அரசியல்முறை நிலவுமாயின் அதன்கண் அன்பும் அமைதியும் பண்பும் பல்வளனும் நிறையும் என்பது பரஞ்சோதியார் நம்பிக்கை. இதனைப் பழியஞ்சின படலத்தின் வாயிலாகப் புலப்படுத்துகிறார்.

குலோத்துங்க பாண்டியனின் ஆட்சிக்காலத்தில் திருப்புத்தூரி லிருந்து ஓர் அந்தணன் தன் மனைவியோடும் கைக்குழந்தையோடும் மதுரைநோக்கிச் சென்றான்; வழியில் ஓர் ஆலமரத்தின்கீழ்த் தாயையும்

சேயையும் இருக்கச் செய்து குடிநீர் கொணடுவரச் சென்றான்; திரும்பி வந்தபோது முன்பு மரத்திலே சிக்கியிருந்த கூரிய அம்பு, காற்று வீசக் கீழே இருந்த பார்ப்பனி வயிற்றில் பாய்ந்து தைத்ததால் அவள் இறந்து கிடப்பதைக் கண்டான்.

அப்போது வேடன் ஒருவன் நிழல்தேடி அம் மரத்தின் மறு பக்கத்தில் வந்து நின்றிருந்தான். நீருடன் திரும்பிய அந்தணன் இறந்த மனைவியைக் கண்டு துன்பத்தால் துடித்தான்; அருகிலிருந்த வேடனே தன் மனைவியைக் கொன்றான் என்று கருதி, அவனை அழைத்துக் கொண்டு குழந்தையையும், பிணத்தையும் தூக்கிக்கொண்டு அரசனிடம் சென்று முறையிட்டான். அவன் கூறியவற்றைக் கேட்ட அரசன் வேடனைப் பார்த்தான். வேடன், "அரசே, நான் இளைப்பாறும்பொருட்டு அம் மரநிழலில் நின்றேன்; இவளை நான் கொல்லவுமில்லை; கொன்றவரைக் காணவுமில்லை" என்றான். அந்த வேடன் கடுந்தண்டத்திற்கும் அஞ்சாமல், தான் கூறியதையே மீண்டும் மீண்டும் கூறுவதைக் கேட்ட மன்னன், சோமசுந்தரக் கடவுளை வணங்கி உண்மையை உணர்த்தியருள வேண்டினான். அப்போது வானினின்று, "பாண்டியனே, இன்று இரவு செட்டித் தெருவில் நடைபெறும் திருமணத்திற்கு நீயும் அந்தணனும் வந்து பார்த்தால் உண்மை விளங்கும்" என்று அசரீரி தோன்றியது.

அவ் வசரீரியின் உண்மையை உணரும்பொருட்டு அரசனும் அந்தணனும் அத் திருமண வீட்டிற்குச் சென்றிருந்தனர். அவ் வமயம் எமதூதுவர் இருவர் பேசிக்கொண்டிருக்கும் பேச்சுகள் அவர்கள் காதில் விழுந்தன. அவர்களில் ஒருவன் மற்றவனைப் பார்த்து, 'ஒரு நோயும் இல்லாத இம் மணமகனின் உயிரை எவ்வாறு எடுத்துச் செல்வது?' என்றான். மற்றவன், 'நாம் இன்று பகலில் ஆலமரத்தில் தொங்கிக்கொண்டிந்த அம்பைக் காற்றினால் விழும்படி செய்து பார்ப்பனியின் உயிரைக் கவர்ந்தோமன்றோ? அதுபோல இந்தத் திருமண ஆரவாரத்தில் தோட்டப்புற வெளியில் வெருண்டு நின்ற பசுவைத் தூண்டிவிட்டு இம் மணமகனை முட்டும்படி செய்து இவன் உயிரைக் கவர்வோம்' என்றான்.

அதுகேட்ட பாண்டியன் அந்தணனை நோக்கி, 'இந்த வார்த்தையைக் கேட்டாயா?'என்றான். அதற்கு அந்தணன் 'இவன் இப்படி இறந்தால் என் மனைவியும் அப்படியே இறந்திருப்பாள் என்று தெளிவேன்' என்றான். திருமணம் தொடங்கும்போதே பசு ஒன்று வெருண்டு ஓடிவந்து மணமகனை முட்டியது. அதனால் அவன் இறந்தான். இக் காட்சியைப் பரஞ்சோதியார்,

"மணமகனே பிணமகனாய் மணப்பறையே பிணப்பறையாய்
அணியிழையார் வாழ்த்தொலிபோய் அழுகையொலி யாய்க்கழியக்
கணமதனிற் பிறந்திறும்இக் காயத்தின் வரும்பயனை
உணர்வுடையார் பெறுவர்உணர் வொன்றுமிலார்க் கொன்றுமிலை"
(40)

என்று பாடிச் சிறந்த அறிவுரையைக் கூறியிருக்கிறார்.

மன்னன் ஆராயாமல் தண்டனை கொடுத்திருந்தால் வேடனே ஒறுத்தற் குற்றத்திற்கு ஆளாகியிருப்பான். உண்மை மாறிய நெறியிறழ்ந்த பழி தன்னைச் சாருமோ என்ற ஐயத்தோடு, வரும் பழிக்கும் அஞ்சிய மன்னன் இறைவன் துணை நாடி நீதி வழுவாது மன்னுயிர் மக்களைக் காக்க வேண்டும் என்பதோடு குற்றவாளி தண்டனைக் குள்ளாகாமல் இருப்பினும் அமையும். ஆனால் குற்றமே செய்யாத நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது என்பதைக் குறிப்பினால் பரஞ்சோதியார் உணர்த்தியுள்ளார்.

தவத்தின் ஆற்றல்

தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்தலும், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமையும் தவம் செய்வார் மேற்கொள்ள வேண்டிய செயல்களாகும்.[3] இவ்விரு செயல்களையும் மேற்கொண்டு தவம் இயற்றாதவர்கள் தவமல்லாத அவம் செய்பவர்களாகக் கருதப்படுவர்.

யானையெய்த படலத்தில் சோழ மன்னனின் சொற்படி கேட்டொழுகும் சமணர்கள் தவம் செய்பவர்கள், பிறவுயிர்களுக்குக் கேடு சூழாதவர்களாக இருக்க வேண்டும். பாண்டிய வீரனான விக்கிரமனைக் கொல்வதற்கு வேள்வி ஒன்றைச் செய்து கூற்றுவனும் அஞ்சத்தக்க யானையை அழைப்பித்தனர். இதனால் தவம்புரிந்து அவமே செய்பவர்கள் பொருளாசையின் பொருட்டு யாதும் செய்வர் என்பதை உணர்த்தியுள்ளார்.

வேதாகம நெறியொழுகும் விக்கிரம பாண்டியனுடைய கோல் செங்கோல் என்றும், அதனால் அவனது நாட்டில் அறம் நிலைபெற்றுள்ளது என்றும் குறிப்பால் உணர்த்தும் ஆசிரியர், "பொய்யொழுக்க மகலாத மனத்தையுடைய சமணர்கள், பாவநெறியில் ஒழுகுதலை மேற்கொண்ட கொடிய சோழ மன்னனுடைய கொடுங்கோலை வெண்மை தங்கிய கொம்பாக ஏந்தி, மதமயக்கம் பொருந்திய யானை வடிவங் கொண்டு வந்த கொடிய கலியை, விக்கிரம பாண்டியனுடைய செங்கோலானது சிவ

பெருமானுடைய நரசிங்காஸ்திரமாக அமைந்து அவர்களுடைய செயலகள ஈடேறாதவாறு அழித்தது" என்பர்.[4] இதனால் உண்மைத் தவமுடையார் ஆற்றலின்றிப் பொய்யொழுக்கம் பூண்டவர் செயல் வெற்றி பெறவியலாது என்பதைக் கூறுகிறார்.

நாடாள்வாரின் கடமை

போர் என்பது வரலாற்றுக் காலம் முதற்கொண்டு இன்றுவரை சான்றோரால் வெறுத்து ஒதுக்கப்படுவதொரு நிலைபேறுடைய வாழ்வியல் நெறியாகும். போரில் இருபடையினருள்ளும் வீரர்கள் இறப்பர். அப்படிப்பட்ட போர்களையும் வேந்தர்கள் மிக விரும்பிப் போர் புரிந்து பல வீரர்களின் உயிரைக் குடித்துள்ளனர். ஒரு நாட்டினைப் பாதுகாக்கின்ற தலைவன் தன் நாட்டு மக்களின் உரிமையினையும் அச்சமின்மை யினையும் பிறர் பறிக்காதவாறு காத்தல் கடமையாகிறது.

நன்மையும் வன்மையும்

நாட்டில் நல்லவர்களாக மட்டும் இருந்தால் வாழமுடியாது. நல்லவர்கள் வல்லவர்களாகவும் இருக்க வேண்டும். அதனால்தான் சங்ககாலம் முதற்கொண்டு தற்காலம் வரையிலும் போர் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்துவருகிறது. தனது வலியினை உலகம் உயர்த்திப் புகழ்தலையே பொருளாகக் கருதிப் போர்மேற்கொண்டு வந்த வேந்தனை மாற்றுவேந்தன் எதிர்த்துச் சென்று அவனுடைய தலைமையினைச் சிதைக்கும் நிலையில் அவ்விரு வேந்தரும் ஒருகளத்துப் போர் செய்தல் தும்பைத்திணை எனப்படும்.

பரஞ்சோதியார் தடாதகைப் பிராட்டியார் திருமணப் படலத்தில் அன்னை காஞ்சனமாலை தன் திருமகளாரைப் பார்த்து "வளையும் வண்ணம் பூத்த பூங்கொம்பு போன்ற நீ இன்னும் திருமணமின்றியிருப்பது வருத்தமாக இருக்கிறது" என்றாள். அதற்கு மகள் தடாதகைப் பிராட்டியார், "தாயே, நீ எண்ணிய வண்ணம் நிறைவேறும் காலத்தில் முடியும்; நான் சென்று எல்லாத் திக்குகளிலும் எனது வெற்றியை நிலைநிறுத்தி வருவேன்; நீ யிருப்பாயாக" என்று கூறிப் போருக்குப் புறப்பட்டார்.[5]

தடாதகைப் பிராட்டியார் போர்மேற் சென்றதும் வெற்றியுடன் மீண்டதும் அக்காலத்தில் அரச குடும்பத்தில் பிறந்தவர்கள் ஆற்ற வேண்டிய செயல்களாகும். தடாதகைப் பிராட்டியார் தன் ஆற்றலைப் பிறர்

அறிதல் பொருட்டுப் போர் மேற்கொண்டாள் என்று கூறுவதிலிருந்து படைபலம் பெற்றவர்கள் தமது ஆற்றலைப் பிறர் அறியவும் போர் தொடுப்பர் என்பதை உலகுக்குக் கூறுகிறார். இப்படிப்பட்ட போர்களை நாம் கண்கூடாகவும் காண்கிறோம். மேலும் 'அன்னைநீ நினைந்த வெண்ணம் ஆம்பொழு தாகும் வேறு பின்னைநீ இரங்கல்' என்று தடாதகைப் பிராட்டியார் கூறுவதன் மூலம் ஒரு செயலின்பொருட்டு நாம் முயற்சி செய்தாலும் செய்யாமல் வெறுமனேயிருந்தாலும் நிகழ்வன நிகழ்ந்தே தீரும் என்பதோடு நல்லவர்கள் வல்லவர்களாகவும் விளங்க வேண்டும் என்பதையும் உணர்த்துகிறார்.

வலியார்முன் தன்னை நினைத்தல்

போர் நிகழ்ச்சிகளிலும் அறத்துடன் கூடிய மறப்போர்தான் நடைபெறவேண்டும் என்று விழைந்தவர் பரஞ்சோதியார் என்பது பின்வரும் நிகழ்ச்சியால் உறுதிப்படுத்தப்படுகிறது.

தண்ணீர்ப் பந்தல் வைத்த திருவிளையாடலில் காடு வெட்டிய சோழன் படைகளுக்கும் இராசேந்திர பாண்டியன் படைகளுக்கும் இடையே போர் நடைபெற்றது. அப்பொழுது வில்வித்தையிற் பழகிய வீரர்களோடு வில்வித்தையிற் பழகிய வீரர்களே, வாள் வீரர்களோடு வாள் வீரர்களே, கொலைத் தொழில் தேர்ந்த வேல் வீரர்களோடு கொலைத்தொழிலில் தேர்ந்த வேல் வீரர்களே, மற்போரில் பழகிய மல்லர்களோடு மற்போரில் பழகிய மல்லர்களே போர் புரிந்தனர்.[6] போர் நிகழ்ச்சிகளை இங்ஙனம் அமைத்துக் கூறுவதால் பொன்றா உலகத்தில் தம் புகழை நிலைநாட்டும் பொருட்டுப் போர்புரியும் போர்வீரர்களும் வீரத்தில் தமக்குச் சற்றும் குறையாத வீரர்களுடன்தான் வெஞ்சமர்புரிதல் வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகிறார். போர்ப் படைக்கருவிகள் அற்றாருடன் போர்புரிவதும், தம் வீரத்திற்கு இணையில்லாதவர்களுடன் போர் செய்ய முனைவதும் கடியப்படல் வேண்டும் என்பதை அந்நாளைய ஏன் இன்றைய நட்சத்திரப் போருக்கு அணியமாகிற மக்களுக்கும் உணர்த்தினார்.

நம்பியோர் நாயகன்

எல்லாம் வல்ல இறைவன் தஞ்சம் என்று தன்னை நாடிவந்தவர் களைக் காக்கும் பெற்றியன் என்பதை எல்லாத் திருவிளையாடல்களின் வாயிலாகவும் நமக்கு உணர்த்துகிறார். இதனால் நலிந்தவர்கள்

வலிந்தவர்களை நாடி வந்தால் அவர்களுக்கு இரங்கி உதவுதல் வேண்டும் என்பது தெரிகிறது. இறைவனின் அருள் இரக்கமும் நூற்றுக்கு நூறு விழுக்காடு நம்பிக்கை கொண்டால்தான் கிடைக்கும் என்பதையும் உணர்த்துகிறார்.

சென்று அருளும் பண்பினன் இறைவன்

மாபாதகந் தீர்த்த திருவிளையாடலில் அவந்திநகர் அந்தணனின் மகன் அன்னையிட முண்ட காமக்கள்ளால் அறிவிழந்த கொடியவன். மண்வெட்டியால் தன் தந்தையைத் துண்டமாக்கத் துணிந்தனன். பிரமசாயை இப் புல்லறிவினனைப் பிடித்தது. பல இடங்களிலும் அலைந்துழன்று இறுதியில் கூடலை அடைந்தான். அவன் செயலையும் அவன் நிலைமையினையும் சோமசுந்தரர் உமையம்மையாருக்குத் தெரிவித்தார். அதைக் கேட்டு "இக் கொடியவன் செய்த பாவத்திற்கு அளவில்லாத காலம் கொடிய நாலேழுகோடி நரகிலே வீழ்ந்தாலும் உய்வகையில்லையன்றோ? இவன் உய்யுமாறு செய்யும் வகையென்ன?" என்று வினவ, "கொல்லும் பழிக்குப் பயப்படாத நீசர்களானாலும், நினைக்கினும் அவர்களுக்கு அச்சமுறுத்தும் பழிக்கஞ்சானாகிச் செய்த மாபாதகத்திற் கட்டுண்டு எந்த ஸ்தலத்திற்குச் சென்றாலும் அப் பாதகம் தன்னை விடுத்தலில்லாமலும் வேறு பற்றுக்கோடு இல்லாமலும் அழியக் கடவோனைப் பாதுகாப்பதல்லவா உண்மையான பாதுகாப்பு"[7] என்று கூறினார். இதனால் நீக்குதற்கரிய கொடும் பாவங்களையும் நீக்க வல்லவன் உமையொருபாகன் என்பதையும் திக்கற்றவருக்குத் தெய்வமே துணை என்பதையும் இத் திருவிளையாடல் வாயிலாகப் பரஞ்சோதியார் கூறுகிறார்.

செயலும் வாழ்வும்

மக்கள் தம் பிறப்பு முதல் இறப்புவரையும் செய்யும் செயல்களுக்கு ஏற்பட்ட பயன் நுகர்வர் என்பது எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகின்ற பொதுவான நியதி. இவ் வுலக வாழ்வில் பெரும்பாலான நாள்களில் அறச்செயல்களே செய்தும் மிகக் குறைந்த நாள்களில் அறமல்லாத தீச்செயல்களைச் செய்திருப்பினும் அவரவர் செயலுக்கு ஏற்பத்தான் வாழ்வு அமையும் என்பதைப் பரஞ்சோதியார் கரிக்குருவிக்கு உபதேசித்த திருவிளையாடலிலும் வலைவீசின திருவிளையாடலிலும் உணர்த்துகிறார்.

வலிமை மிக்க ஒருவன் முற்பிறப்பில் பெரும்பாலுந் தருமத்தையே செய்து மாறுதலில்லாத பாவத்தைச் சிறுபான்மை செய்து, அப் பாவ வன்மையால் அசேதனமாகிய கரிக்குருவியாய்ப் பிறத்தலால், காகம் முதலிய பறவைகள் இயமனைப் போல இடையூறு செய்தன[8] என்று கூறுகிறார்.

முன்வினைப் பயன்

வலை வீசின திருவிளையாடலில் ஒருவன் முற்பிறப்பில் செய்த பெருந்தவத்தினால் புனிதமுள்ள தேவர்களிலும் புனிதமுள்ளவனாய் இருந்தும், தான் செய்த சிறிய தீவினையின் பகுதியால் திண்ணிய தோணியில் மீன்பிடித்து வாழ்வோர் பிறந்த பரதவர் குலத்தில் பிறந்துள்ளான்[9] என்பர். இதனால் நற்செயல்களில் ஒருசிறிதும் தீமை கலத்தலாகாது என்பதும், அப்படித் தீமை கலக்குமேயானால், நாகம் மிக நல்லதாக இருப்பினும் அதனிடம் மிகச் சிறிதளவு உள்ள நஞ்சு அதன் கொடூரத்தன்மையினைக் காண்பிக்குமாறுபோல் சிறிய தீவினையும் அதன் பயனைக் கூட்டியே தீரும் என்பதை அறிவிக்கிறார்.

இல்வாழ்வான் கடமை

இல்வாழ்வானுக்கு வேண்டும் அறத்தைத் கூறும் குறளாசிரியர், "பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான் என்று சொல்லப்பட்ட ஐந்து இடத்தும் செய்யும் அறநெறியை வழுவாமல் செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்பான அறம்"[10] என்பர். மேருவைச் செண்டாலடித்த திருவிளை யாடலில் உக்கிரப் பெருவழுதியார், பொன்மலைக் கடவுள் அளித்த பொற்குவையினை யாசித்தவருக்குக் கொடுத்துப் பல குடிகளையும் பாதுகாத்துத் தெய்வத்தையும் தென்புலத்தாரையும், உறவினரையும் தம் மனைக்கு வந்த விருந்தினரையும் ஒம்பி மகிழ்வுடன் இருந்தார்[11] என்று பரஞ்சோதியார் கூறுவதிலிருந்து இல்வாழ்வானின் விருந்தோம்பும் பண்பு எக்காலத்தும் நிலவ வேண்டும் என்பதையும், நம்மிடமிருக்கும் பொருளைப் பிறருக்கும் ஈந்து அதனால் வரும் பயனை அடைதல் வேண்டும் என்பதையும், பிறர்க்கென வாழ்தல் ஒரு பேரறமாகக் கருதப்படும் என்பதையும் உய்த்துணர வைத்துள்ளார்.

செல்வத்தின் சிறப்பு

உலக மக்கள் இன்பமாக வாழ்வதற்குச் செல்வம் இன்றியமை யாதது. ஒரு பொருளாக மதிக்கப்படாதாரையும் மதிக்கப்படுபவராகச்

வலிந்தவர்களை நாடி வந்தால் அவர்களுக்கு இரங்கி உதவுதல் வேண்டும் என்பது தெரிகிறது. இறைவனின் அருள் இரக்கமும் நூற்றுக்கு நூறு விழுக்காடு நம்பிக்கை கொண்டால்தான் கிடைக்கும் என்பதையும் உணர்த்துகிறார்.

சென்று அருளும் பண்பினன் இறைவன்

மாபாதகந் தீர்த்த திருவிளையாடலில் அவந்திநகர் அந்தணனின் மகன் அன்னையிட முண்ட காமக்கள்ளால் அறிவிழந்த கொடியவன். மண்வெட்டியால் தன் தந்தையைத் துண்டமாக்கத் துணிந்தனன். பிரமசாயை இப் புல்லறிவினனைப் பிடித்தது. பல இடங்களிலும் அலைந்துழன்று இறுதியில் கூடலை அடைந்தான். அவன் செயலையும் அவன் நிலைமையினையும் சோமசுந்தரர் உமையம்மையாருக்குத் தெரிவித்தார். அதைக் கேட்டு "இக் கொடியவன் செய்த பாவத்திற்கு அளவில்லாத காலம் கொடிய நாலேழுகோடி நரகிலே வீழ்ந்தாலும் உய்வகையில்லையன்றோ? இவன் உய்யுமாறு செய்யும் வகையென்ன?" என்று வினவ, "கொல்லும் பழிக்குப் பயப்படாத நீசர்களானாலும், நினைக்கினும் அவர்களுக்கு அச்சமுறுத்தும் பழிக்கஞ்சானாகிச் செய்த மாபாதகத்திற் கட்டுண்டு எந்த ஸ்தலத்திற்குச் சென்றாலும் அப் பாதகம் தன்னை விடுத்தலில்லாமலும் வேறு பற்றுக்கோடு இல்லாமலும் அழியக் கடவோனைப் பாதுகாப்பதல்லவா உண்மையான பாதுகாப்பு"[7] என்று கூறினார். இதனால் நீக்குதற்கரிய கொடும் பாவங்களையும் நீக்க வல்லவன் உமையொருபாகன் என்பதையும் திக்கற்றவருக்குத் தெய்வமே துணை என்பதையும் இத் திருவிளையாடல் வாயிலாகப் பரஞ்சோதியார் கூறுகிறார்.

செயலும் வாழ்வும்

மக்கள் தம் பிறப்பு முதல் இறப்புவரையும் செய்யும் செயல்களுக்கு ஏற்பட்ட பயன் நுகர்வர் என்பது எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகின்ற பொதுவான நியதி. இவ் வுலக வாழ்வில் பெரும்பாலான நாள்களில் அறச்செயல்களே செய்தும் மிகக் குறைந்த நாள்களில் அறமல்லாத தீச்செயல்களைச் செய்திருப்பினும் அவரவர் செயலுக்கு ஏற்பத்தான் வாழ்வு அமையும் என்பதைப் பரஞ்சோதியார் கரிக்குருவிக்கு உபதேசித்த திருவிளையாடலிலும் வலைவீசின திருவிளையாடலிலும் உணர்த்துகிறார்.

வலிமை மிக்க ஒருவன் முற்பிறப்பில் பெரும்பாலுந் தருமத்தையே செய்து மாறுதலில்லாத பாவத்தைச் சிறுபான்மை செய்து, அப் பாவ வன்மையால் அசேதனமாகிய கரிக்குருவியாய்ப் பிறத்தலால், காகம் முதலிய பறவைகள் இயமனைப் போல இடையூறு செய்தன[8] என்று கூறுகிறார்.

முன்வினைப் பயன்

வலை வீசின திருவிளையாடலில் ஒருவன் முற்பிறப்பில் செய்த பெருந்தவத்தினால் புனிதமுள்ள தேவர்களிலும் புனிதமுள்ளவனாய் இருந்தும், தான் செய்த சிறிய தீவினையின் பகுதியால் திண்ணிய தோணியில் மீன்பிடித்து வாழ்வோர் பிறந்த பரதவர் குலத்தில் பிறந்துள்ளான்[9] என்பர். இதனால் நற்செயல்களில் ஒருசிறிதும் தீமை கலத்தலாகாது என்பதும், அப்படித் தீமை கலக்குமேயானால், நாகம் மிக நல்லதாக இருப்பினும் அதனிடம் மிகச் சிறிதளவு உள்ள நஞ்சு அதன் கொடூரத்தன்மையினைக் காண்பிக்குமாறுபோல் சிறிய தீவினையும் அதன் பயனைக் கூட்டியே தீரும் என்பதை அறிவிக்கிறார்.

இல்வாழ்வான் கடமை

இல்வாழ்வானுக்கு வேண்டும் அறத்தைத் கூறும் குறளாசிரியர், "பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான் என்று சொல்லப்பட்ட ஐந்து இடத்தும் செய்யும் அறநெறியை வழுவாமல் செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்பான அறம்"[10] என்பர். மேருவைச் செண்டாலடித்த திருவிளை யாடலில் உக்கிரப் பெருவழுதியார், பொன்மலைக் கடவுள் அளித்த பொற்குவையினை யாசித்தவருக்குக் கொடுத்துப் பல குடிகளையும் பாதுகாத்துத் தெய்வத்தையும் தென்புலத்தாரையும், உறவினரையும் தம் மனைக்கு வந்த விருந்தினரையும் ஓம்பி மகிழ்வுடன் இருந்தார்[11] என்று பரஞ்சோதியார் கூறுவதிலிருந்து இல்வாழ்வானின் விருந்தோம்பும் பண்பு எக்காலத்தும் நிலவ வேண்டும் என்பதையும், நம்மிடமிருக்கும் பொருளைப் பிறருக்கும் ஈந்து அதனால் வரும் பயனை அடைதல் வேண்டும் என்பதையும், பிறர்க்கென வாழ்தல் ஒரு பேரறமாகக் கருதப்படும் என்பதையும் உய்த்துணர வைத்துள்ளார்.

செல்வத்தின் சிறப்பு

உலக மக்கள் இன்பமாக வாழ்வதற்குச் செல்வம் இன்றியமை யாதது. ஒரு பொருளாக மதிக்கப்படாதாரையும் மதிக்கப்படுபவராகச்

செய்யும் தன்மையைத் தன் பண்பாகக் கொண்டது பொருட்செல்வம் என்றால், அதன் ஆற்றலை விரித்துரைக்காமலேயே விளங்கிக் கொள்ளலாம். இத்தகு ஆற்றல் வாய்ந்த பொருளினையும் அதைத் தம் வைப்புநிதியாகக் கொண்டவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நியதி, நெறிமுறைகளையும் ஆசிரியர் பரஞ்சோதியார் திருவிளையாடல் நிகழ்ச்சிகளினூடே கூறிச் செல்வதையும், அதிலிருந்து அவர் தம் பொருட்கொள்கையினையும் அறியலாம்.

அடக்கம் காத்தல்

குண்டோதரனுக்கு அன்னமிட்ட திருவிளையாடலில் வெள்ளி யம்பலத் திருக்கூத்து முடிந்ததன் பின்னர் அனைவர்க்கும் அறுசுவையுண்டியும் ஏனைய பரிசுகளையும் அவரவர் விரும்பியாங்கு அளித்ததன் பின் அவரவர் தத்தம் இருப்பிடம் ஏகினர். மடைத்தொழில் வல்லோர் வந்து பிராட்டியாரை அடைந்து வணங்கி, "நாங்கள் சமைத்த உணவிலே ஆயிரத்திலொரு பங்கேனும் செலவழிந்திலது என் செய்வோம்?" என்று தங்கள் செல்வத்தையும் அட்டிற்கலையின் உயர்வையும் வெளிப்படுத்தினர். இதைப் பிராட்டியார் முக்கட்பெருமானிடம் முறையிட அவர், "அளவில்லாத நின் செல்வத்தின் பெருக்கை யாமறிய விளைவு செய்தனைபோலும்" என்று கூறிக் குடையெடுக்கும் குறுங்காற் பூதத்திற்கு ஒருபிடி சோறு கொடுக்குமாறு பணித்தார். மலைபோல் குவித்திருந்த சோற்றுக்குவியல் போதாததாகிவிட்டது. இதைக் கண்ட கோதையார் நாணத்துடன் நம்பர்முன் சென்று நின்றார். பெருமிதம் இன்றி அடங்குதல் எல்லார்க்கும் ஒப்ப நன்று என்பர். அவ் வெல்லாருள்ளும் தான் பெற்ற பொருட்செல்வத்துடன் அடக்கமாகிய செல்வத்தையும் பெற்றிருப்பது வேறு ஒரு செல்வம் ஆகும் சிறப்பினை உடையது.[12] இந்நிகழ்ச்சியின் வாயிலாகச் செல்வர்களின் வீண் வெளியாரவாரத்தைக் கண்டித்துப் பெருஞ்செல்வர்களும் அடக்க முடைமையினை எக்காலத்தும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை அறிவிக்கிறார்.

ஈகையின் சிறப்பு

மக்கள் உயிர்க்குப் பயன்படத்தக்கது என்பது பிறருக்கு உதவுதல், அதனால் நிலைத்த பயனை அடைதல் என்று அறநூல்கள் கூறும். ஈதலே பெருமையும் சிறப்பும் கொண்டது. இல்லை என்று பிறரிடம் சென்று

இரத்தல் இழிந்தது என்பதைப் பரஞ்சோதியார் ஆங்காங்குக் குறிப்பிடுகின்றார்.

மாணிக்கம் விற்ற திருவிளையாடலில் இந்திரன் வலன் என்னும் அவுணனைக் கொல்வதன் பொருட்டுப் போர்புரிந்தும் இயலாமல் தந்திரமாக அவனை அடைந்து, பெறுதற்கரிய வரத்தைப் பெற்றான். மேருவை வில்லாக வளைத்த பெருமானார் உறையும் வெள்ளிமலைச் சாரலிலே வேள்வியொன்றைப் புரியப் போகின்றேன். அந்த வேள்வியில் வானவர்க்கு உண்பிக்க வேள்விப் பசுவாக நீ வருதல் வேண்டும் என்று வேண்டினான். இதைக் கேட்ட அவுணன் சிறிதும் மனக் கலக்கமின்றி அவ்விதமே வருகிறேன் என்று பதிலுரைத்தனன். ஈகையின் ஏற்றத்தை ஆசிரியர் வலன் வாயிலாகவும், இரப்பதன் இழிவை வானவர் தலைவன் மூலமாகவும் வெளிப்படுத்துகின்றார்.[13] இதனால் செல்வர்கள் தாம் ஈட்டிய பொருளைத் தமக்கே பயன்படுத்திக் கொள்ளாமல் ஈதலாகிய அறத்தைச் செய்து மனித சமுதாயம் அனைத்தும் பயன்படச் செய்யவேண்டும் என்பது பரஞ்சோதியார் நோக்கம்.

பொருளீட்டும் நெறியும் ஈவோர் பண்பும்

மாமனாக வந்து வழக்குரைத்த திருவிளையாடலில் மாமனாக வந்த மன்றாடியார் தாயத்தாரிடம் வந்து அனைவரும் வருந்தும்படி வாய்விட்டழுது தங்கையையும் மருமகனையும் கண்ணீரை மாற்றித் தேற்றினார். "வருந்தாதீர்கள்; வஞ்சகரின் வழக்குச் சோர்ந்துவிடும்" என்று கூறி முதுகை அன்புடன் தடவிக் கொடுத்தார். பின்பு "நட்புக் கொண்டவரிடத்தில் வஞ்சம் செய்தும், நம்பி யடைந்தவர்கட்கு மயக்கங் கலந்த உணவூட்டித் தமது வசப்படப் பொருளைக் கவர்ந்தும், யாசித்தவருக்கு இம்மியும் கொடாதவராகியும், வட்டியில் வரம்பில்லாத வாறு பேசி வாங்கியும் சிலர் போலத் தேடப்பட்ட பொருள் அல்ல; தரும வழியிற்றேடிய நம்பொருள் கெடாது"[14] என்றும் கூறினார். இக் கூற்றினால் மறத்தாற்றிலே ஈட்டிய பொருள் நமக்கு உதவாமல் அழியும் என்பதையும் குறிப்பாகப் புலப்படுத்தி, நற்செய்கைகளாலேயே பொருளீட்ட வேண்டும் என்று கூறுகிறார்.

தருமிக்குப் பொற்கிழியளித்த திருவிளையாடலில் இளவேனிற் காலத்தைக் கூறுகின்ற ஆசிரியர் பரஞ்சோதியார், "செவ்வந்தியும், வகுளமும் மலர்ந்து வாடி யுதிர்ந்து கிடந்தன. அம் மலர்களில் ஒட்டிய

தேனை வண்டுகள் உறிஞ்சிக்கொண்டிருந்தன. இக் காட்சியானது மனக்குறைவில்லாத நல்லோர் தம் செல்வம் குன்றினும் அடைந்தோர்க்கு இல்லை என்னாமல் உயிரை மாறியாயினும் கொடுப்பது போல் இருக்கிறது"[15] என்றார். இதனால் ஈகைப் பண்புடைய நல்லோர் இரந்தவர்க்கு இல்லை என்னாமல் தம் செல்வம் குன்றிய காலத்தும் உதவுவர் என்பதைக் கூறுகிறார்.

இறைவன்மீது இடையறாத பேரன்பும், இறைவனுக்காக இடையறாத் திருத்தொண்டும் ஆற்றித் தம் வாழ்வினை நடத்துபவர்கள் இவ் வுலக ஆசைகளையும் பொருளையும் மதிக்கமாட்டார்கள் என்பதும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதே அவர்களின் உயரிய உயிர்க்கொள்கையாக இருக்கும்[16] என்பதும் வாதவூரடிகளுக்கு உபதேசித்த திருவிளையாடலில் வாதவூரடிகளின் வாக்கினால் பரஞ்சோதியார் உணர்த்துகிறார்.

இறைவன்பால் ஆராக் காதல்கொண்டு முப்போதும் அவனுக் காகவே திருப்பணிகள் ஆற்றி அத் திருத்தொண்டால் ஒப்புரவு அடைந்தாலும், வேறு எல்லாவித இன்னலுக்கும் தன்னை உட்படுத்திக் கொண்டாலும் புனிதமான சிவத்தொண்டினை உள்ளத்தில் மாசின்றிச் செய்யும் அடியார்களின் பொருட்டு இறைவன் அவர்களுக்குத் தக்க சமயத்தில் வந்து உதவுவான். அறத்தாற்றில் ஈட்டிய பொருள்கொண்டே அடியவர்கள் சிவத்தொண்டினைச் செய்ய வேண்டும்[17] என்பதை மண்சுமந்த திருவிளையாடலில் பிரம்படிபட்ட சோமசுந்தரக் கடவுளுடைய அசரீரியின் வாயிலாக உணர்த்துகிறார். மேலும், இறைவன், வேட்கையெம்பால் வைத்து உனக்கு இம்மையோடு மறுமையுந் தேடித் தந்த உத்தமன்; தொடை சந்தாதிப் புறப்பற்றும் ஒழிந்த நீரான் என்னும் யாருடைய பொருள் இறைவன்பொருட்டு செலவழிக்கப்பட்டதோ அவர்களுக்கு இம்மையோடு மறுமையும் எளிதாகக் கிடைக்கும் என்பதையும் உணர்த்துகிறார்.

சிற்றின்பத்தின் சிறுமை

உலகில் உள்ள எல்லா உயிரினங்களாலும், ஆறறிவு படைத்த மக்களாலும் சாலவும் விரும்பப்படுவது இன்பம் என்னும் மனநிறைவு என்று மிக எளிதில் கூறலாம். இன்பமும், சிற்றின்பம் பேரின்பம் என இருவகைத்து. சிற்றின்பம் என்பது சிறிது நேரம் இருந்து மறையும் தன்மையது; பேரின்பம் என்பது எஞ்ஞான்றும் நிலைபேறுடையது.

இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடலில் பரஞ்சோதியார் பின்வருமாறு ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறார். ஒருநாள் இந்திரன் வண்டுமுரலும் மந்தார நிழலிலே அரிமா சுமந்த அணையிலே கதிர்விடும் அணிகள் இமைக்க அமர்ந்திருந்தான். அவனெதிரில் அரம்பையர் ஆடினர். அவர்களுடைய ஆடலிலும் பாடலிலும் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து மதுவினைப் பருகியதால் மயங்கியவன்போல் ஆனான். அந்நிலையில் அவனுக்கு ஆசிரியனான வியாழபகவான் அங்குச் சென்றான். தன்னாசிரியன் அங்கு வந்ததையும் நின்றதையும் அறியாமல் மயங்கிக் கிடந்தான். குலமகளிரல்லாத பிற பெண்களின் கூட்டுறவிலே மயங்கியவர்கள் அறிவு விளக்கந்தருதலில்லை என்பதை எடுத்தியம்பப் போந்த ஆசிரியர் "தையலார் மயலிற் பட்டோர் தமக்கொரு மதியுண் டாமோ" என்கிறார்.

வெள்ளையானை சாபந் தீர்த்த திருவிளையாடலிலும் தேவேந்திரன் தன் செல்வச் செருக்கின் காரணமாகவும் அசுரரை வென்ற படைச்செருக்கின் காரணமாகவும் பெருக்கத்து வேண்டும் பணிதலை மேற்கொள்ளாமல், துருவாச முனிவர் மகிழ்வுடன் வாழ்த்தித் தம் அங்கையிலிருந்த தாமரைமலரை அன்புடன் நீட்டவும் அதனை ஒரு கையாலே வாங்கி வெள்ளையானையில்மேல் வைத்தான்.[18] அதை அவ் வெள்ளையானை துதிக்கையால் எடுத்து, உரலனைய காலடியில் இட்டுச் சிதைத்தது. சீற்றமுற்ற துருவாச முனிவர் வெள்ளையானையைக் காட்டானை யாகுக எனச் சாபமிட்டார். தேவேந்திரனின் இச் செயலைக் கூறி, "ஒருவர் மகிழ்ச்சிக் கடலுள் ஆழ்ந்திருப்பினும் தம்முடைய செயலால் பிறருக்கும் இன்பம் கிடைக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்; மக்கள் இன்பத்தில் மூழ்கித் தோய்ந்திருக்கும்போது, முற்காலத்தில் இன்பத்தில் ஆழ்ந்து அதனால் ஏற்பட்ட சோர்வினால் கெட்டொழிந்தவர்களை நினைவிற் கொள்ளவேண்டும்"[19] என்பதையும் குறிப்பாகப் புலப்படுத்துகிறார் ஆசிரியர்.

தேசிய ஒருமைப்பாடு பரவல்

தடாதகைப் பிராட்டியாரின் திருமணப்படலத்தில் பிராட்டியாருக்குத் திருமணம் என்ற செய்தியைக் கேட்டுச் சேய்மை நாட்டினரும் அண்மை நாட்டு மன்னர்களும் வழிகள்தோறும் நெருங்கிப் பூமியானது முழுவதும் மறையும்படி வருகின்றார்கள்[20] என்ற அவர்களின் வருகையினைக் கூறுவார் பரஞ்சோதியார். இதனால் நாட்டின் ஒரு கோடியில் நடக்கின்ற

மன்றல் நிகழ்ச்சியில் பல நாட்டினரும் தம்முள் வேறுபாடின்றிக் கலந்துகொண்டார்கள் என்று கூறுவதிலிருந்து ஆரா அன்பினால் மட்டுமே தேசிய ஒற்றுமையினை நிலைநாட்ட முடியும் என்பதை இந்நிகழ்ச்சியின் மூலம் புலப்படுத்துவதாகத் தோன்றுகின்றது.

நல்லார் பெறும் பயனைப் பாரடையும்

வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய திருவிளையாடலில் தடாதகைப் பிராட்டியாரை மணம் புரிந்ததன் பின்னர் நெற்றிக்கண்ணராகிய பாண்டியர் திருமணத்திற்கு வந்திருந்தோரை உண்பதற்கழைத்தார். அப்பொழுது புலிக்கால் முனிவரும், அரவ முனிவரும் சோமசுந்தரரை வணங்கி, "அடியேம் தாங்கள் மன்றுளாடும் கூத்தை வணங்கியுண்ணும் ஒழுக்கமுடையேம்" என்றனர். அடியவர் வேண்டுகோளுக்கு இணங்கிய தென்னவர் அவர்களின் விருப்பத்தின்பொருட்டு அந்தக் கூத்தை இங்குக் காட்டுகிறோம் என்று ஆடியருளினார்.

இரு முனிவர்களின் நிமித்தத்தினால் முனிவரும் கந்தருவரும் தேவரும் அசுரரும் மௌன நிலையடைந்த யோகிகளும் தூய்மை பொருந்திய கிம்புருடர் முதலிய புலவரும் அன்புடன் பணிந்து இனிய பேரின்பத்தில் அழுந்தினார்கள். திருமணத்தைத் தரிசிக்க வந்த மானிடர்களும் கண்டு களித்தனர்[21] என்று பரஞ்சோதியார் கூறுவதிலிருந்து, இறைவன் அடியார்களின் இன்பத்தை நிறைவேற்றித் தருபவன் என்பதும், அவர்களின் இன்பத்தால் சாதாரண மக்களும் இன்பம் பெறுவர் என்பதும் உணர்த்துகிறார்.

தலைவன் துயரம் தரணியின் துயரம்

மேருவைச் செண்டால் அடித்த திருவிளையாடலில், சித்தர் கனவில் வந்துரைத்த வண்ணம் உக்கிரவழுதியர் வடதிசைச் செலவினை மேற்கொண்டு மேருமலையினை யடைந்தார். முதற்கண் மேருவைப் புகழ்ந்து துதித்தார்; காலம் தாழ்த்தவே வெகுண்டு மேருவின் செருக்கு மாயுமாறு செண்டினால் அம் மலையை அடித்தார்; அதனால் அசையா மலை அசைந்தது; பொற்பந்து போலத் துடித்தது,

அதன் முடிகளும் வானவர் வசிக்கும் கோயில்களும் வெடித்தன; கதிரவன் மண்டலம் வெடித்துப் பிதிர்வதுபோலப் பல மணிகளும் உதிர்ந்தன; சூழ்ந்துள்ள எட்டு மலைகளும் நான்கு பொற்பட்டைகளும்

நான்கு மலர்ப் பொழில்களும் நான்கு தருக்களும் இதனால் சலித்தன. இச் செயலால் தலைவனுக்கு இடுக்கண் நேர்ந்தால் சார்ந்தவர்க்கு மகிழ்ச்சியேது [22] என்னும் கருத்து வெளிப்படுத்தப்படுகிறது.

பரஞ்சோதியார் மேருமலையினைத் தலைமகனாகவும் மேருவைச் சுற்றியிருந்த கதிரவன் மண்டலம், எட்டு மலைகள், நான்கு பொற்பட்டடைகள், மலர்ப் பொழில்கள், தருக்கள் ஆகியவற்றைத் தலைமகனைச் சார்ந்துள்ள மக்களாகவும் கொண்டு தலைவனின் மகிழ்வே மக்களின் மகிழ்ச்சி என்றும், அவனுடைய துன்பம் மக்களின் துன்பம் என்றும் நமக்கு எடுத்துரைக்கிறார்.

பிறர் துன்பம் உணர்தல்

கால்மாறி யாடின திருவிளையாடலில் இராசசேகர பாண்டியன் வெள்ளியம்பல வாணரின் கூத்துக்கலையைப் பயிலுங்காலை, தன்னுடம்பில் சாலவும் அயர்வு நோயின் இன்னலை யுணர்ந்தான். இந்த அயர்வு நான்மறையும் அறியாத பொருளாய் வெள்ளிமன்றிலே ஆடும் திருக்கூத்தனார்க்கும் உண்டாகுமே என்று உள்ளத்தில் நினைத்தான். எனவே, மாறியாடி இறைவனின் பாதங்களின் வருத்தத்தைத் தணிவிக்கக் கருதிய பாண்டியன் வெள்ளியம்பலமடைந்து பன்முறை வணங்கி, கண்ணீர்வாரக் கைகள் முடிமீதேறக் குவித்து நின்று, "தூக்கிய திருவடியை நிலமீது வைத்துக் கீழேயூன்றிய திருவடியை யெடுத்து வீசி அடியேன் காண மாறியாடியருளி என் வருத்தத்தைப் போக்குதல் வேண்டும். இன்றேல் அடியேன் உயிர்விடுவேன்" [23] என்று வேண்டியதாக அறிகிறோம். இதனால் தன்னைப்போல் பிறரையும் நேசிக்க வேண்டும் என்பதையும், பிறர் துன்பம் கண்டு வாளாவிராமல் இயன்ற வரையில் அதனைப் போக்கி அதனால் வருவதாகிய இன்பத்தை மக்கள் அனுபவிக்க வேண்டும் என்பதையும் இதன் மூலம் அறிவிக்கிறார்.

காமம் கடிந்து இன்பம் துய்த்தல்

மாபாதகந் தீர்த்த திருவிளையாடலில் ஆசிரியர் பரஞ்சோதியார் அவந்திநகர் அந்தணனின் குடும்பத்தை நிலைக்களனாகக் கொண்டு அறிவினை இழக்கச் செய்கின்ற காமத்தையும் இன்பம் எனக் கொண்டு மக்கள் பாழ் நரகிடை வீழ்தல் ஆகாது என்பதை எடுத்துரைக்கின்றார்.

"கல்லாக் களிமகன் இளமையின் சூழ்விலே சிக்குண்டான்; காமத்திலே கண்மயங்கினான்; தன்னைச் சுமந்து பெற்ற அன்னையை

விரும்பினான்; அன்னையாகிய அந்த இழிசெயலாளும் மனம் ஒப்பினாள். "இன்பமோ சிற்றின்பம்; இதனால் வரும் துன்பமோ கரையற்ற கடல்" [24] என்பதை எவருமறியப் பரப்புதற்குப் போலும் "இக் கொடியோன் கொடுவினையிலே ஈடுபட்டான்" என்று கூறி, உலகில் வாழும் மக்களுக்குக் காமத்தின் கேட்டினைப்பற்றிக் "காமமே கொலைகளுக் கெல்லாம் காரணம்; இயமனும் அச்சப்படும் காமமே கள்ளுண்டற்குக் காரணம். ஆனபடியால் காமமே நரகபூமியை உரிமையாகக் கொடுப்பது" [25] என்றும் உமையம்மையிடம் சிவன் கூறுகிறார். இதனால் காமத்தை மூல காரணமாகக் கொண்டொழுகுகின்ற பிற தீய செயல்களையும் கூறி அவற்றினின்றும் மக்கள் விடுபட்டு, மக்கள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்பம் கண்டு வாழவேண்டும் என்பதை உணர்த்துகிறார்.

தன்னிலையில் தாழாமை

பன்றிக்குட்டிக்கு முலை கொடுத்த திருவிளையாடலில், பன்றியரசன் போர்வந்த ஞான்று மனம்பூரித்து, தன் உயிர்க் காதலியை நோக்கி, "இன்று நான் பாண்டியனோடு போர் புரியப் போகிறேன்; வென்று வாகை சூடி வருவேன்; அன்றேல் வீரச் சாவுறுவேன்; நீ உன் புதல்வரைப் பாதுகாத்துக்கொண்டு நன்றாக இருத்தல் வேண்டும்" என்று கூறப் பன்றியரசி, "எனது பிராணன் அங்குப் போருக்குச் செல்ல இவ் வுடம்பு இவ் விடத்திற் சுகமாயிருப்பது வழக்கோ? முற்பிறப்பில் இந்தப் பாவமிகுதியையுடைய எனக்கோ இக் குட்டிகளைத் தெய்வம் தந்தது. போர் செய்து வருவாயானால் வாழ்வேன்; அதுவன்றி நீ இறந்தவிடத்தில் இறப்பேன்; உனது தேக நிழல்போலப் பின்செல்லும் எனக்கும் வேறு செயலுளதோ?" [26] என்று கூறியது. இதனால் அஃறிணை உயிர்க்கும் தங்கள் வாழ்வில் இன்பம் எனக் கொள்வது கணவன் மனைவி பிரியாது தம் புதல்வரைப் பேணிப் பாதுகாத்துவருதலும், தன்னிலையில் தாழாமையும், தாழ்வு வந்தவழி வாழாமையும் ஆம் என்பது பெறப்படுகிறது. இதிலிருந்து மக்களுக்கும் இந் நேரியவாழ்வு எடுத்துக்காட்டாக அமைய வேண்டும் என்பதே அவர்தம் விருப்பமாகும்.

பிறந்த குடியைப் பேணி உயரச் செய்தல்

கரிக்குருவிக்கு அருளுரை வழங்கிய திருவிளையாடலிலும், நாரைக்கு வீடுபேறளித்த திருவிளையாடலிலும் முறையே கரிக்குருவியும் நாரையும் ஒப்பற்ற பரம்பொருளைத் துதித்துத் தமக்கு வேண்டிய வரத்தை

மட்டும் பெற்றுத் தந்நல இன்பத்தை நாடாமல் தம் மரபில் உள்ளனவும் தமக்குப்பின் வருவனவுமாகிய அனைத்தும் பயன்பெறுதல் வேண்டும் என்று துதித்து வேண்டித் தம் மரபிலுள்ளவற்றுக்கு நற்கதியைத் தேடித்தந்தன என்பதைப் பின்வருமாறு கூறுவர்: "வலியை யாகவென எனக்கருளிய பேறு என் மரபிலுள்ள பறவைகட்கெல்லாம் எந்நாளும் குறைவின்றி விளங்கவும், நீயருளிய ஒலியையுடைய திருமந்திரத்தை யிடையீடின்றிப் பயின்று நாங்கள் துன்பத்தைப் புறங்காணவும் கருணை செய்தருள்க" [27] என்று கரிக்குருவி வேண்டி வரம் பெற்றது. நாரையோ, "தயாவள்ளலே, என் மரபிலுள்ள பறவைச் சாதிகளும் ஏனைய பறவைகளும் இந்தக் களங்கமில்லாத பொற்றாமரைத் தீர்த்தத்திலுள்ள மீன்களினுயிரைக் கொள்ளை கொண்டால், எந்தக் காலத்திலுந் தள்ளுதற் கரியதாகிய பாபம் வந்து சம்பவிக்கும்;[28] எக்காலத்திலும் இந்தத் தீர்த்தத்தில் மீன்கள் இல்லாதிருக்கும்படி வரந்தந்தருள்வா"யென்று குறையிரந்தன.[29]

சிந்தித்துத் துணியும் மதிநுட்பம் கொண்ட திருவிளையாடல் நிகழ்ச்சியின் பாத்திரங்களில் மனிதன் முதல் தேவன்வரை பங்கேற்றவர்கள் அவரவர்க்கு நேர்ந்த இன்னலைப் போக்கி இன்பம் பெறவே முற்பட்டனர். தன்னல முனைப்பால் இன்பம் பெற மக்கள் முயன்ற காரணத்தால் மக்கள் வாழ்வில் பாலைவனச் சோலையாகவே இன்பம் நிலவுகிறது. இதற்கு மாறாகப் புள்ளினங்கள் இரண்டும் தங்கள் துன்பத்தைப் போக்கிக்கொள்வதோடு அமையாமல் பிறவும் இன்பம் அடைய வேண்டும் என்று வரம்பெற்றன என்று ஆசிரியர் பரஞ்சோதியார் கூறுவதிலிருந்து, 'பெரும்பாலும் அறமே செய்தும், செய்த சிறு பாவத்திற்காக மீண்டும் பிறப்பெடுப்பவர்கள் அறத்தாற்றிலேயே அவர்கள் மனம் செல்லுகின்றபடியால் உலகில் உள்ள அனைவர்க்கும் இன்பம் பல்க வேண்டும் என்று விழைகின்றனர்' என்பதை ஆசிரியர் கூறுகிறார் என்று இயம்பலாம்.

ஆசிரியர் பரஞ்சோதியார், அகப்பற்றினையும் புறப்பற்றினையும் ஒழித்து மேலும் மேலும் தத்தம் வினைகளுக்கேற்பப் பிறந்துழன்று பிறவிநோயை அணுகாதிருப்பதையும், அதற்குரிய உபாயங்களையும், வாழ்க்கையின் நிலையாமைக் கருத்துகளையும் கூறியுள்ளார் என்பதும் திருவிளையாடல் நிகழ்ச்சிகளின் வாயிலாகப் பெறப்படுகின்றன.

இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடலில் இந்திரன் விருத்திரனுடன் போர்புரிந்து தோற்றதால் அவனை வெற்றிகொள்ளும் வகையினைத் திருமாலிடம் கேட்கத் ததீசி முனிவரின் முதுகெலும்பினை வச்சிரமாகப் பெற்றால் வெற்றியடையலாம் என ஆற்றுப்படுத்தினார். இந்திரன் ததீசி முனிவரை அடைந்து "அடிகளே தங்களால் மறுக்க முடியாத ஒன்றை விரும்பியே வந்தேன். அது கொடிய அவுணரைக் குலைத்து வானவர் குடியை வாழ்விக்கும் தன்மையது. அது தங்கள் யாக்கையிலே சார்ந்த முதுகெலும்பே" என்று சிறிதும் கூசாமல் கூறினான். அதைக் கேட்ட ததீசி முனிவர், "நாய்கள் நம்முடைய தென்றும், நரிகள் நம்முடையதென்றும், தந்தையும் தாயும் நம்முடையதென்றும், இயமன் தன்னுடையதென்றும், பிணி பேயும் நம்முடையதென்றும் மனத்திற் கருதுந்தன்மை போலாகி நம்முடையதென்று நினைக்கப்படும் இவ் வுடம்பு யாவர்க்கு உரியது?"[30] என்று யாக்கையின் நிலையாமையினையும், நிலையாத உடம்பை நிலைத்த பயனுள்ள நன்மைகளின் பொருட்டு அழித்துப் பேரின்பப் பயனாகிய வீடுபேற்றை அடையலாம் என்பதையும் கூறுகிறார்.

தடாதகை திருமணப் படலத்தில் தடாதகைப் பிராட்டியாரின் திருமணக் கோலத்தை நேரில் பார்த்த மன்னவர் இமையவராயினர்; இறைவர் அருணோக்கம் பெற்றதால் தானவரும் வணங்கும் பேறு பெற்றனர். திருமணக் கூடத்தில் மண்ணவரும் விண்ணவரும் வேற்றுமையின்றிக் கலந்து நின்றனர். திருநடனஞ் செய்தருளும் முக்கட் பெருமானது அருள் நோக்கத்தால் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பேதம் ஒருசிறிதும் இல்லை.[31] என்கிறார். இதனால் இறைவனின் அருள் நோக்கத்திற்கு இலக்கானோர் யாவராயினும் பேரின்ப நிலையினை எவ்விதச் செயல்பாடுமின்றி எய்துவர் என்கிறார்.

எல்லாம் வல்ல சித்தரான திருவிளையாடலில், சித்தரான சிவபரம்பொருள் செய்து காட்டிய செயற்கரும் செயல்களைக் கண்ட மதுரை முதுநகர் மக்களெல்லாம் சித்தர் செய்யும் திருவிளையாடலிலே ஈடுபட்டுத் தத்தம் தொழிலையும் மறந்து நின்றனர்; இதனை ஏவலரால் அறிந்த செழியன் அந்தச் சித்தரை யழைத்துவரப் பணித்தான். வந்தவரும் மறந்து சித்தர்பாலே சித்தம் வைத்து நின்றுவிட, அமைச்சரை ஏவினான். அவர்கள் சித்தரை வணங்கி அழைத்தனர். "எமக்கு மன்னனாலென் பயன்?" என்று இறைவன் கூறினார் என்று பரஞ்சோதியார் கூறுகின்றார்.

சிவானுக்கிரகம் பெற்று இம்மைமறுமைப் பயன்களையும் வெறுத்த யோகவான்கள் இப் பூவுலக மன்னர்களை மாத்திரமோ இந்திரன், பிரமன், திருமால் முதலிய பிற தேவர்களையும் மதிப்பார்களோ? மதிக்க மாட்டார்கள் [32] என்று வேந்தன் உணர்ந்தனன் என்று கூறுவதிலிருந்து, உண்மை யோகிகளின் தன்மையினைக் கூறுகிறார். இம்மை மறுமைப் பயன்களை வெறுத்த யோகியர்களே வீடுபேற்றினை எய்தும் தகுதியினை அடைவர் என்பதை உணர்த்துகிறார்.

இசைவாது வென்ற திருவிளையாடலில் பாணபத்திரன் மனைவி சோமசுந்தரப் பெருமானைப் பார்த்து, "தேன்போலும் சுவைபொருந்திய மொழியையுடைய மாதர்களின் கட்பார்வையின் வழியே செல்லாத சிவயோகிகட்கே மோட்சமென்று பலவகைப்பட்ட வேதப் பொருளை நீயே விரித்துக் கூறினை. பல்வகைப்பட்ட வேதப்பொருளை விரித்துக் கூறிய நீயே இப் பாதிப் பெண்ணுருவாயினை யெனப் புறச்சமயிகள் இகழ்ந்தால் அடியேன் யாது விடையாகக் கூறுவேன்?"[33] என்று கேட்கின்றாள்.

இதில் பிற சமயத்துப் பெண்களும் பெண்களைச் சார்ந்தோரும் வீடுபேற்றுக்கு உரியவர் அல்லர் என்று கூறியிருக்கவும் மாதினை ஒரு கூறாக உடையோய் நீ எவ்வாறு பிறருக்கு வீட்டின்பத்தைக் கொடுக்கமுடியும் என்பதை ஐயமாகக் கொண்டு வினவுவதாக அமைந்துள்ளது. சிவமின்றிச் சக்தியும், சக்தியின்றிச் சிவமும் செயலாற்றமுடியாது. சிவமும் சக்தியும் இணைந்தே சிவசக்தியாகி அறம் பொருளின்பம் கடந்த வீட்டுலகினைத் தரவியலும் என்பதையும், வீட்டுலகையடையப் பெண்களும் வழிகாட்டிகளெனவும், அவர்களும் வீட்டின்பத்தை அடைவர் என்பதையும் இதனால் கூறுகிறார்.

நாரைக்கு வீடுபேறளித்த திருவிளையாடலில், நாரை நல்வாழ்வு பெற்றதனாலே அறியாமை நீங்கி, வினைத்தொடர்பைப் போக்கி உறுதியான மெய்யுணர்வு பெற்றுச் சிவபரஞ்சுடரின் திருவடிமலரிலே ஆராத காதல் கொண்டது. உணவின்றிப் பதினைந்து நாள் கழிந்ததும் பதினோராம் நாள் பொற்றாமரை வாவியிலே படிய வந்த நாரை பசியினால் மிக வருந்தி ஒளிவிடும் வேல்போல் துள்ளுகின்ற மீன்களைக் கண்டு பற்றியுண்டு பசிதணிய எண்ணியது, அப்பொழுது அந்த நாரை,

"எளியமீ னருந்த ஆசை யெழுந்ததே யெனக்கிப் போதிப்
பிறவியென் றொழிவ தென்னாப் பேரரு ளடைந்து பின்னும்"

சோமசுந்தரப் பெருமானின் திருவடியை நினைவிலே பதித்து நெகிழ்ந்து மீண்டும் பிறவிநோயைத் தீர்த்தருள வேண்டியது. 'தான்' என்கின்ற அகப்பற்றும், 'தனது' என்கின்ற புறப்பற்றும் இம்மியும் தன்பால் இல்லாதவர்க்கே இறைவன் வீட்டின்பம் கொடுப்பான் என்பதும், பற்றற்றவர்க்கே வீடு நல்கும் பரமயோகி சிவன் என்பதும் நாரையால் நானிலத்தோர்க்கு ஆசிரியர் உணர்த்துகிறார்.

இலக்கியம், இல்லது புனைதலை மிகுதியாகக் கொண்டிருப்பினும் அவ் வில்லது புனைதலை மக்களின் மேனிலைக்குப் பயன்படுமாறு ஆசிரியர் அமைத்து, அதன் வாயிலாக உய்வதற்குரிய நீதிகளையும் அவ்வக் காலத்தில் நிலவிய நம்பிக்கைகளையும் வெளியிடுவதற்குரிய வாயிலாக அமைத்திருப்பின் அவ் விலக்கியமும் காலத்தை வென்று நிலைத்து நிற்கும். ஆசிரியர் பரஞ்சோதி முனிவர் இறைவனின் எண்ணெண் திருவிளையாடல்களை விரித்துரைக்கின்ற பொழுது அக்காலத்தில் நிலவிய சில பழக்கவழக்கங்களையும் மறவாதிருக்க வேண்டிய சில நெறிகளையும் கூறியுள்ளார்.

இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடலில், பிரமசாயையால் பற்றப்பட்ட இந்திரன் மறைந்துகொண்டான்; தேவருலகம் தலைவ னின்றித் தளர்ந்தது; அக்காலை சந்திரன் மரபில் தோன்றிய நகுடன் என்பவன் நூறு பரிவேள்வி செய்து இந்திர பதவிக்குத் தகுதி பெற்றிருந்தான்; அவனை வானவ ரழைத்துவந்து முடிசூட்டி இந்திரனாக ஏற்றனர்; இந்திரனாகப் பதவியேற்ற நகுடன் கற்பிற் சிறந்த இந்திரன் மனைவி சசிதேவியை அழைத்துவர வானவரை ஏவினான்; அதைக் கேட்ட இந்திராணி தன் குருவான வியாழபகவானை அடைந்து கலங்கிநின்றாள்; அருள்வடிவான ஆசானும் "ஏழு முனிவரும் சுமக்கும் மாணிக்கச் சிவிகையில் எவன் வருகின்றானோ அவனே இந்திரன்; அவனே உன் காதலன்" என்று இயம்பினார். இதைக் கேட்ட சகி,

"என்னுயிர்த் துணைவ னாங்கே யிருக்கமற் றொருவ னென்னைத்
தன்னுயிர்த் துணையாக் கொள்கை தருமமோ அடிக ளென்றாள்"

(1 : 62)

இதனால் பலதாரக் கொள்கையிருந்தது என்பதையும், ஒருவன் ஒருத்தியுமாக வாழ்தலே சிறப்புடையது என்பதை ஆண்களிலும் பெண்களே மிகவும் வற்புறுத்தி வந்துள்ளனர் என்பதையும், தன்

உயிர்த்துணைவன் இருக்க மற்றொருவனை உயிர்த்துணையாகக் கொள்ளுதல் தகாது என்ற பெண்மையறத்தையும் ஆசிரியர் அறிவிக்கிறார்.

இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடலில், இந்திரன் தன் குருவை அவமதித்த காரணத்தால் தன் செல்வம் குன்றுவதை அறிந்தான்; குருவாகிய வியாழனைத் தேடிக் காணமுடியாமல் நான்முகனை அடைந்தான்; நான்முகன், "தொன்மையுடைய ஆசிரியராகிய பிரகஸ்பதி முனிவரை நீ காணுமட்டும் துவட்டா என்பவன் பெற்ற புதல்வனும், மூன்று கிரகங்களை உடையவனும், அசுரகுலத்திற் பிறந்தும் செய்கையாலும் அறிவாலும் மேம்பட்டவனும், விச்சுவவுருவன் என்னும் பெயரை உடையவனுமாகிய அவனை ஆசிரியராக வைத்துக்கொள்வாயாக"[34] என்று சொன்னான்.

இதனால் அசுரர்குலத்தில் பிறந்திருப்பினும் தன்னுடைய நற்செயலாலும் அறிவாலும் மேம்பட்டு விளங்குபவனாகிய துவட்டாவின் திருக்குமரன் விச்சுவ உருவனைக் குருவாகக் கொள்ளக் கடவாய் என்று கூறுவதாக அறிகிறோம். எக்குடியில் பிறந்தவராயினும் வினையினாலும் அறிவாலும் மேம்பட்டு விளங்கும் தன்மையினைத் தம்பால் கொண்டவர்கள் ஆசிரியர்களாக அமையத் தக்கவர்கள் என்பதையும், எத்துணைச் செல்வம் பெற்றவர்களாக இருப்பினும் மாணவன் என்கிற நிலையிலிருந்து ஆசிரியன் வாயிலாக அறிவு விளக்கம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார்.

தடாதகைப் பிராட்டியாரின் திருமண விழாவின்போது சிவனாரின் திருக்கோலத்தைக் கண்ட பெண்களின் நிலையினைப் பின்வருமாறு கூறுகிறார். "நண்பர்களுக்கு விபத்து நேர அவரைவிட்டுப் பிரியும் நன்றிமறந்தவர்போலக் கையில் அணிந்த வட்டமாகிய வடிவம் வாய்ந்த தொடியும் வளையலும் இடையில் அவிழ்ந்த வஸ்திரமும் சோரவும், அவர் செய்த நன்றியைப் பாராட்டி அவரைவிட்டுப் பிரியாதவர்களைப் போல் இட்ட பொன்னாலாகிய சிலம்பு இட்டபடியே கிடக்கப் பூக்களைச் சிந்தி நிற்கும் பூங்கொம்பை யொத்தவர்களாயும் நின்றார்கள்"[35] என்பர். சமுதாயத்தில் தாம் கண்டறிந்த அனுபவத்தை இப் பெண்களின் செயல்களுக்குப் பொருத்தமான உவமையாகப் பயன்படுத்தி மக்கட்பண்பினை விளக்கிக் காட்டி, முன்னதை விலக்கிப் பின்னதைப் பின்பற்ற வேண்டும் என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறார்.

நரிபரியாக்கிய திருவிளையாடலில், சிவபரஞ்சுடராகிய மறைப்பரிவீரர், "இந்தத் தாவுங் குதிரைகளை என்னிடத்தினின்றும் கயிறுமாறி உன்னதாக வாங்கிக் கொள்ளுதலால் அவையனைத்தும் நின்னதேயாகும். மன்ன! நாளை இக் குதிரைகள் எவ்வாறாயினும், உனக்கும் எனக்கும் இக் குதிரைகளின் தொடர்பாக யாதொரு விவரமும் கிடையாது. இதுவே குதிரை வியாபாரத்தின் முறைமை"யென்று[36] கூறியருளினர்.

வாணிபத்தில் பொருளைக் கொடுப்பவர்களும் பெறுபவர்களும் பொருள்களைக் கொடுத்துப் பெற்றதன் பின்னர் நேருகின்ற மாற்றங்களுக்குப் பொறுப்பாளிகளல்லர் என்பதும், வாணிபம் செய்வோர் நடுவுநின்ற நன்னெஞ்சினராகவே இருப்பர் என்பதும், கொள்ளுதல் இயலாது என்பதும் இதனால் பெறப்படுகிறது. தாள் நிலந்தோய வந்த சிவனார் கலியுக மனிதப்பண்பினை உளங்கொண்டு உரைத்ததிலிருந்து 'சமகால மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பது இலக்கியம்' என்பதும் உணர்த்தப்பட்டுள்ளது.

இந்திரன் முடிமேல் வளையெறிந்த திருவிளையாடலில், உக்கிரபாண்டியன் காலத்தில் கோள்நிலை பிறழ்ந்தமையால் மேகங்கள் மழைபெய்யாதொழிந்தன. அதனால் தமிழ்நாடாகிய சேர, சோழ, பாண்டிய நாடுகள் மூன்றும் வறுமையில் வாடி வருந்தின. மூவேந்தரும் அகத்திய முனிவரை அடைந்து தங்கள் நாட்டிலே மழையின்மையால் வறுமை மிக்கதை எடுத்துக் கூறினர். அது கேட்ட அகத்திய முனிவர் கிரகங்கள் நிற்கும் நிலையை ஆராய்ந்து அம் மூவரையும் நோக்கி, "கட்டு வருத்தும் கோபத்தையுடைய சூரியனும், அங்காரகனும் முன்னே செல்ல, சுக்கிரன் அக் கோள்களுக்குப் பின்பு சென்று நடக்கும் இந்தக் காரணத்தால் கடலை ஆடையாகவுடைய இப் பூமியில் பன்னிரண்டு ஆண்டுகள் மழை குறையுமென்று நூல்கள் கூறின. இதனால் "கோள்நிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்" என்ற மணிமேகலைக் கருத்தை உறுதிப்படுத்துவதுடன் கோணிலைகளை ஆராய்ந்தறிகின்ற அறிஞர்களின் மதிநுட்பம் பொய்ப்பதில்லை என்பதும் ஆசிரியர் காலத்திலும் சோதிடத்தில் நம்பிக்கை கொண்டோர் இருந்துள்ளனர் என்பதும் தெரிகின்றன.

வருணன் விட்ட கடலை வற்றச் செய்த திருவிளையாடலில், இந்திரன் மூலமாக வருணன் சிவலிங்க மூர்த்தியின் ஆற்றலைக் கேட்டுணர்ந்தான்; பின்னர்த் தனக்கு இருக்கும் வயிற்றுநீர் நோயினைத்

தீர்த்துக்கொள்வான் வேண்டி மன்றுளாடும் பெருமானின் திருவிளை யாடலைக் காண வேண்டிக் கடலினை அழைத்து 'நீ மதுரை நகர் முழுவதையும் அழிப்பாயாக' என்று ஏவினன். உடனே கடல்மேலெழுந்து அசையும் பொருள்களையும் அசையாப் பொருள்களையும் பெயர்த்து வீசியது. வருணனின் சூழ்ச்சியை அறியாத தேவர்கள் எமது நகரத்துக்கும் அழிவுகாலம் வந்ததுபோலும் என்று எண்ணினர். மதுரை மாநகரத் திருந்தோர் அனைவரும் "சூலத்துடன் நெருப்பையும் தாங்கிய சொக்கலிங்கப் பெருமானுடைய திருவிளையாடலின் மான்மியமோ? இப் பெருக்கு நாம் செய்த பாவத்தின் பாகுபாடோ, நஞ்சோ? எல்லா உலகங்களும் அழியும்படி தோன்றும் பெரூழிக்காலமோ?" என்று மனம் கலங்கி நடுங்கினர்.[38] இதனால் மனித ஆற்றலுக்கு மேற்பட்ட ஒரு செயல் நடைபெற்றால் அல்லது அவ் வாற்றலை நம் ஆற்றலால் கட்டுப்படுத்தா நிலை ஏற்படுகின்ற பொழுது அச் செயல் தெய்வச்செயல் என்றோ, வினையினால் ஏற்பட்டது என்றோ மக்கள் எளிதில் முடிவுகட்டுவர் என்னும் மக்களின் உள்ளக் கருத்தைப் பிரதிபலிக்கின்றார்.

கல்லானைக்குக் கரும்பு அருத்திய திருவிளையாடலில், எல்லாம் வல்ல சித்தராக உருமாறி வந்த சோமசுந்தரப் பெருமானின் செயற்கரும் செயல்களைக் கேள்விப்பட்ட அபிடேகபாண்டியன், சித்தர் கூறிய மெய்யுரைகளை நம்ப இயலாதவனாய், "முடியாத ஒரு செயலைச் செய்து காண்பித்தால்தான் அவரையும் அவர் செயலையும் உண்மையென ஏற்றுக்கொள்வதாகவும், வல்லவரும் நீரே மதுரைப் பெருமானும் நீராகத்தான் இருக்க முடியும்"[39] என்பதாகவும் மொழிந்தான்.

பிறரால் எண்ணியும் பார்க்க இயலாத செயல்களை மிக எளிமை யாகச் செய்து முடிப்பவர்களை வல்லவர்களெனவும் அப்படிப்பட்ட வல்லவர்களுள்ளும் சிறந்தவர்களை மானிட வடிவில் வந்த தெய்வம் எனவும் உலகோர் கூறுவர் என்பதைத்தான் இந் நிகழ்ச்சியால் உணர்த்துகிறார்.

பழியஞ்சின திருவிளையாடலில், அமைச்சர்கள் குற்றம் சுமத்தப் பட்ட வேடனைப் பலவாறு தண்டித்தும் குற்றமற்ற அவ் வேடன், முன்பு தான் கூறிய சொற்களினின்றும் சிறிதும் முரண்பாடின்றியே சொல்லி, "இன்னும் நன்றாக ஆராயுங்கள்" என்றான். இதனைக் கேட்ட பாண்டியன், வேடன் கடுந்தண்டத்திற்கு அஞ்சாமையினையும் மாறுபாடின்றிக் கூறும் மொழியினையும் கண்ட அரசன் "இன்னும் இஃது

அறநூலால் ஆராய்ந்து தெளியத்தக்கது" என்றான். உடனே அமைச்சர்கள் "நூலாலமையாததாயின் மன்னா தெய்வத்தாலே தேறும் வழி" யென்றார்.

இதனால் நம் சிந்தனையாலும் நூல்களின் துணையாலும் ஆராய்ந்து ஒன்றினை அறிய முடியாதவிடத்து, எல்லாம் அறிந்த எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல இறைவனின் துணையாலேதான் நாம் ஒன்றை அறிந்துகொள்ள முடியும் என்பதைப் பரஞ்சோதியார் உணர்த்தினார். 'பாண்டியன் கனவிலே வந்து பரம்பொருள் இந்த நிகழ்ச்சிக்கு ஏது காட்டினார்' என்பதைக் கூறித் தெய்வத்தால் முடியாதது ஒன்றுமில்லை என்பதை நாம் அறிவதோடு, இக் கொள்கையின் நம்பிக்கைதான் சங்க காலத்தில், 'விரிச்சிகேட்டல்' என்றும், தற்காலத்தில் ஒரு செயலை ஆரம்பிக்கும் முன் 'பூக்கேட்டல்' என்றும் பழக்கம் வழக்கமாக மாறியிருக்கும் என்று கூறவும் ஏதுவாக அமைகிறது.

விறகு விற்ற திருவிளையாடலிலும், இசைவாது வென்ற திருவிளையாடலிலும் திருவுடை மன்னனும் தெய்வமும் ஒன்றெனவும், மண்ணாள் வேந்தனின் அன்பும் பரம்பொருளின் அருளும் அவர்கள்மீது முழு நம்பிக்கை வைத்திருக்கும் அடியார்களுக்குக் கிட்டுமானால் எத்தகைய பேரிடர் வந்துற்றபோதும் தினகரன் முன் பனிபோல் மாயும் என்பதையும், அவரவர் ஆற்றலின் எல்லையினை உணர்ந்து எல்லையற்ற ஆற்றல் படைத்த பரம்பொருளின் உதவியை நாடவேண்டும்; அங்ஙனம் நாடுங்கால் பணிவும் மிகமிக இன்றியமையாதது என்பதையும் ஆசிரியர் பரஞ்சோதியார் இரு கூற்றுகளால் உலக மக்களுக்கு அறிவுறுத்துகிறார்.

வரகுண பாண்டியனின் அவையினை அடைந்த வடநாட்டு யாழ்ப்பாணன் ஏமநாதனின் இசையினைக் கேட்டுப் பாண்டியன் செய்த வரிசைகளைப் பெற்ற செருக்கினாலும், பல அரசர்களிடம் பெற்ற விருதினாலும் பெருமைமிக்க தன்னோடு இசைபாட வல்ல யாழ்ப்புலவர் ஒருவருமில்லை என்று கருதி இறுமாப்புக் கொண்டான். இதனை அறிந்த பாண்டியன், ஏவலாளரை விளித்துப் பாணபத்திரனை அழைத்துவரப் பணித்தான். வந்த பாணபத்திரனைப் பார்த்து "நீ இசையில் வல்லவனாகிய ஏமநாதனோடும் பாடவல்லையோ?" என்று வினவ, பாணபத்திரன் வணங்கி நின்று "அடியேன் உனது திருவுளத்தின் வன்மையும், மதுராபுரியில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளின் திருவருளும் கூட்டி முடிக்கும் நன்முயற்சியின் வழியே சென்று இசைபாடி

அவ் வேமநாதனுடைய விருதினை வாங்கி அவனைச் செருக்கழிப்பே" னென்று [40] கூறினான்.

வரகுணபாண்டியன் சிவகதியடைந்தபின் அவனுடைய மகன் இராசராச பாண்டியன் அரியணையில் அமர்ந்தான். அவன் தன் காமக்கிழத்தியின் சொல்லாணைக்கு அடிபணிந்து பாணபத்திரன் மனைவியை இசையில் வெல்லும் தகுதிவாய்ந்த பாடினியை ஈழத்தினின்றும் வரவழைத்தான். நடுநிலைமையினின்றும் நீங்கிய பாண்டியன், பாணபத்திரன் மனைவியை இசைவாதுக்கு வருமாறு ஈழநாட்டுப் பாடினி வலிய அழைத்தாள். இதனை அறிந்த பாணபத்திரனின் மனைவி, "அரசே! போகுதலில்லாத அருந்தகை மையுடைய கற்பும், இம் மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளின் அழிவில்லாத அருளும் எனக்குக் கூடியிருத்தலால் [41] நான் பாடி வெற்றி கொள்வதேயன்றித் துன்புற்று வாட்டமுறேன்" [42] என்று கூறினாள்.

மேலும் இந் நிகழ்ச்சிகளால் ஆசிரியர் பரஞ்சோதியார் அறிவிப்பது என்னவென்றால், இறைவன்பால் நம்பிக்கைகொண்டு தங்களுக்கு நேர்ந்த சோதனையில் வெற்றி பெற்று அதை ஒரு சாதனையாக மாற்றிக்கொண்ட பாணபத்திரனுக்கும், மனைவிக்கும் அருள்புரிந்த செயலால் கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதைத் தெளிவு படுத்துகிறார்.

நூல்களில் கூறுகின்ற அறமும், பிற நெறிகளும், உலகமக்களால் மக்களின் நன்மைக்காக ஏற்படுத்திக்கொண்ட சட்ட விதிமுறைகளும் அனைவருக்கும் ஒரே தன்மையதாக இருத்தல் வேண்டும். சட்டத்தின்முன் எல்லோரும் சமம் என்று கூறினாலும் சிற்சில சமயங்களில் பொது, சிறப்பு என்கிற சமுதாய மக்களின் வேறுபாட்டால் விதி ஒழுங்குமுறை பின்பற்றப்படுவதில்லை. அப்படிப் பின்பற்றப்படாதபோது அது தன் நெறியினின்றும் பிழைபடுகிறது. பொய்யாத நீதிநெறிகளின் முன்பு அனைவரும் சமமே. நெறிமுறைகளைக் கடந்து தவறி நடப்பவர்கள் அதற்குரிய தண்டனைகளை அனுபவித்தே தீரவேண்டும் என்பதைச் சங்கப் பலகை கொடுத்த திருவிளையாடலிலும் வலைவீசின திருவிளையாடலிலும் உணர்த்துகிறார்.

ஒருகால் நான்முகன் மறைவழி நின்று காசியிலே வேள்வி ஒன்றினைச் செய்து முடித்ததன் பின்னர் நன்னீராடத் தன் காதலியரான கலைமகள், சாவித்திரி, காயத்திரி என்னும் மூவருடனும் கங்கையாடச்

சென்றான். செல்லும் வழியிலே விஞ்சைமாதொருத்தி பாடிய இசை வெள்ளத்திலே கலைமகள் மூழ்கி மெய்மறந்து நின்றுவிட்டாள். நான்முகனும் மற்றைய மாதரிருவரும் கங்கையாற்றை அடைந்து நீராடி வெளியேறினர். கலைமகள் அப்போதுதான் வந்தாள்; "என்னைவிட்டு நீங்கள் மட்டும் நீராடினீர்களே" என்று வெகுண்டாள். இதைச் செவிமடுத்த நான்முகன் "குற்றம் உன்பேரில் இருப்பதாக, நீ நம்மைக் கோபிப்பது என்னை?" என்று கூறி, இக் குற்றத்தை எண்ணிறந்த மானிடப் பிறப்படைந்து ஒழிப்பாயென்று சபித்தனன்.[43] சாபமேற்ற பொன்னாலாகிய வளையலையணிந்த கலைமகள் அச்சமுற்றுப் புலம்பித் துன்பம் எய்தினள்.

வலை வீசின திருவிளையாடலில், நான்மாடக் கூடல் நீலகண்டர் அங்கயற்கண் ணம்மையுடன் தனியிடத்திலமர்ந்து மறைப்பொருளை உணர்த்திக்கொண்டிருந்தார். இறைவர் இனிய அருளுடன் கூறும் இனிய மறைப்பொருளையெல்லாம் அம்மை எக்காரணத்தாலோ அச்சம் அடைந்தவர் போல ஆவலின்றிக் கேட்டார். உணர்ந்த உமையொரு பாகனார் பிற அறியாமை பொருந்திய பேதையர் போலவே நீயும் இப் பொருளை மனம் ஒன்றாது பாராமுகமாய்க் கேட்டனை; இக் குற்றத்தால், நோன்பும் தருமமுஞ் சிறிதுமில்லாமல் மீன்பிடிக்கும் இழிதொழிலுடைய வரான நெய்தல் நிலத்தவர் மகளாகக் கடவா"யென்று பணித்தார்;[44] அவ்வாறு பணிக்க, இரத்தினமாலை தொங்கியசையும் சந்தனக் குழம்பையணிந்த மெல்லிய தனத்தையுடைய உமாதேவியார் அஞ்சி, "வரதரே தேவரீரைப் பிரிந்து வாழ வன்மையுடையனோ?" என்று வணங்கினார்.

தேவரில் ஒருவனாகிய நான்முகனும் தேவரின் தலைவனாம் சிவனும் தங்கள் பன்னியர் செய்த செயலை மறந்து கொடிய சாபங்கூறி அலைக்கழிக்காமல் செய்திருக்க முடியும். அவர்கள் அப்படிச் செய்திருப்பார்களேயானால் அவர்களுடைய நீதியும் நேர்மையும் அவர்களின் மறைபொருளும் எல்லாராலும் பழித்துரைக்கப்படும். பின்னர்த் தேவர்க்கும் மனிதர்க்கும் வேற்றுமையில்லாது போய்விடும் என்பதைத் தான் இவ்விரு நிகழ்ச்சிகளால் ஆசிரியர் மக்களுக்கு உணர்த்துகிறார்.

பன்றிக்குட்டிகளை அமைச்சர்களாக்கிய திருவிளையாடலில், இறைவனின் அருட்டிறத்தின் மாண்பை யாவருக்கும் அறிவிக்க விரும்பி, கொடிய இழிந்த விலங்குகளாகிய பன்றிக்குட்டிகளுக் கிரங்கித் தாயாய்ப்

பாலளித்த அருளின் திறம் யாதென உமையார் வினவ "எல்லா மறைகளும் எல்லா ஆகமங்களும் நம்மை எல்லாவுயிர்க்கும் இன்னருளாளன் என்கின்றன. ஆகவே நாம் அறிவற்ற வுயிருக்கும் நடுநிலையிலே வேறுபாடின்றி இருப்போம்[45] என்று அறிக. ஆதலால் தாயிழந்து வெம்பசித் தழல் வெதுப்பவும் அனலை அள்ளிவீசிக் கதிரவன் வெகுண்டு காயவும் காட்டிலே கிடந்து தீயும் பன்றிக்குட்டிகளின் வாட்டத்திற்கிரங்கித் தாயாய்ப் பாலூட்டி உயிரளித்தோம்.[46] அதனால் எல்லையில்லாத வல்லமையும் திறமும் பெறுதற்கரிய நல்ல கல்வித் தோச்சியும் ஞானமும் அடைந்தார்கள். இனிமேல் பாண்டியனுக்குக் கோடாத செங்கோலை யுடைய மந்திரிகளாய்ப் பல செல்வ வளங்களையும் பெருகச் செய்து, நீங்குதலில்லாத பாசங்களினின்று நீங்கி எமது பெரிய சிவகணத் தலைவராவார்கள்"[47] என்றார். சம்பந்தர் இளமையிலேயே உமையம்மை யாரிடம் ஞானப்பால் உண்ட காரணத்தால் ஞானசம்பந்தனாகிச் சிவஞானம் கைவரப் பெற்றுத் திருக்கோயில்கள் பலவற்றையும் கண்டு பாண்டிய நாட்டிலே சைனருடைய எதிர்ப்பையெல்லாம் அடக்கி விந்தைகள் பல புரிந்து நல்லூரில் திருமணக் கோலத்துடன் நம்பன் திருவடியுற்றவர் என்று அறிகிறோம்.

திருவிளையாடலில் சிறப்பிக்கப்படுகின்ற முழுமுதல் இறைவன் சிவன். ஆதலால் அவன் தன்னிகரில்லாத தலைவனாக விளங்குதல் வேண்டும். எனவே அவ் வண்ணலே இரங்கிப் பன்றிக்குட்டிகளுக்குத் தாயாய்ப் பாலூட்டிய காரணத்தால் தந்தையறிவு மகனறிவு என்றாப் போலச் சிவபெருமானின் ஆற்றலைப் போன்று அளவிறந்த வலியும் வெற்றியும் பெற்று நல்ல கல்வியின் முதிர்வும் மெய்யுணர்வும் கைவரப் பெற்றனர். எப்பிறப்பாயினும் இறைவரிள் அருள்நோக்கம் மாசற்ற உயிர்களிடம் திரும்பும் என்பதில் ஐயம் இல்லை.

இதுகாறும் கண்ட செய்திகளால் அவர் தனிமனிதனுக்கும், சமுதாயத்திற்கும் கூறியுள்ள நற்செய்திகளாவன:

ஒருவன் ஒருத்தி என்ற வாழ்க்கையினையே பெரிதும் வற்புறுத்து கிறார்; இல்வாழ்வானுக்கு இன்றியமையாத விருந்தோம்பலை மேற்கொள்ளு மாறு பணிக்கிறார்; காரிகையரின் கூட்டுறவிலே மட்டும் கருத்துக் கொண்டிருப்பவர்கள் பழியினை அடைவர். எனவே அவர்களின் கூட்டுறவு ஆற்றவேண்டிய நற்செயல்களுக்குத் தடையாக இருத்தல் தகாது.

யாக்கையும் பிற செல்வங்களும் நிலைபேறுடையன அல்ல. ஆசிரியருக்கு மதிப்புத் தருதல் வேண்டும். ஆணவத்தால் பிறரை அவமதித்தால் அல்லலுற ஏதுவாகும். போரிலே அறம் பின்பற்றப்பட வேண்டும். நாட்டில் தேசிய ஒற்றுமையும், ஒருமைப்பாடும் நிலவி இன்பமும் பெருக வேண்டும். தெய்வத்தின் முன் அனைவரும் சமம்.

நல்லோர் நன்மையடைந்தால் அந் நன்மையால் பலரும் பயன்பெறுவர். செல்வர்கள் அடக்கமுடையவர்களாக இருத்தல் வேண்டும்; வாய்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

மேலே கூறிய திருவிளையாடல் நிகழ்ச்சிகளின் வாயிலாகப் பின்வருவனவற்றை நிலைபேறுடைய உண்மைகளாகவும் வாழ்வாங்கு வாழும் மக்கள் பின்பற்றற்பாலனவாகவும் கொள்ளலாம்.

இடுக்கண் வந்து உயிருக்கு இறுதி தருமாயினும் அவரவர் கூறிய சொல்லினின்றும் வழுவுதல் கூடாது;[48] உள்ளம் குற்றமற்றுத் தூய்மையுடன் இருப்பின் சொல்லும் செயலும் மாறுபாடின்றி இருக்கும்;[49] எக்காரணத்தைக் கொண்டும் எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாதவர்களே தவம் செய்யத் தகுதியுடையவர்கள்;[50] நல்லவர்கள் வல்லவர்களாகவும் இருக்க வேண்டும்; நல்லவர்கள் வல்லவர்களாகின்ற பொழுதும் அறநெறியைப் பின்பற்ற வேண்டும்;[51] தம் தகுதிக்குக் குறைந்தவர் களிடமும் போர் புரிதல் கூடாது. நிகழும் காலத்தில் நிகழ்வன நிகழ்ந்தே தீரும்;[52] இறைவனே மாபாதகங்களை நீக்க வல்லவன்;[53] அவரவர் செய்யும் நன்மை தீமை ஆகியவற்றிற்கு ஏற்பப் பிறந்து முறையே நன்மையும் தீமையும் அனுபவிப்பர்;[54] இல்வாழ்வான் என்பவன் பிறருக்குப் பயன்படுமாறு வாழவேண்டும்.

செல்வர்கள் அடக்கமுடைமையைப் பின்பற்றி வாழவேண்டும்;[55] ஈகையால் வரும் இன்பமே சாலச் சிறந்தது;[56] நல்வழியிலே ஈட்டிய பொருளைப் பிறர் எத்தகு சூழ்ச்சியாலும் அழிக்கவோ கவரவோ இயலாது;[57] நல்லோர் செல்வம் குன்றிய காலத்தும் பிறருக்கு உதவ முன்வருவர்;[58] உண்மை இறையன்பு கொண்டவர்கள் இவ் வுலக நிராசைகளை நாடமாட்டார்கள்.[59]

அறவழியில் ஈட்டிய பொருளைக்கொண்டே இறைவனுக்குத் திருத்தொண்டு புரிதல் வேண்டும்;[60] இறைப்பணிக்குப் பொருள் கொடுத்தோர் இம்மையினையும் மறுமையினையும் மிக எளிதாகப்

பெறுவர்;[61] அறிவைக் கெடுக்கும் சிற்றின்பத்தை நாடாமல் இருக்க வேண்டும்;[62] பிறருடைய செயலுக்கும் கருத்துக்கும் மதிப்புத் தருதல் வேண்டும்;[63] தேசிய ஒற்றுமையால் இன்பம் காண வேண்டும்;[64] சிறந்த தலைவனின் இன்பத்திலும் துன்பத்திலும் சாதாரண மக்களுக்கும் பங்கு உண்டு;[65] பிறர் துன்பம் கண்டு நெகிழ்ந்து அதனைப் போக்க முனைதல் வேண்டும்;[66] ஒரு செயலால் நேரும் நன்மை தீமை ஆகியவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து நன்மைமிக்கிருப்பின் அதனை ஏற்கலாம்; இன்றேல் நீக்கலாம்;[67] உயிர்த்துணைவர் இன்றேல் மகளிர் உயிர்வாழ்தல் சிறப்பற்றது என்பதைப் பெண்கள் ஏற்றுக்கொண்டனர்;[68] தன்னலம் நாடி உழலாமல் பிறர் நலம் நாடவேண்டும்.[69]

யாக்கையும் பிறவும் நிலையற்றவை. நிலையற்றவற்றை நிலைத்தவற்றின் பொருட்டு அழித்து அதனால் இன்பம் பெறலாம்;[70] இம்மை மறுமைப் பயன்களை வெறுத்த யோகியர்களே வீடுபேற்றினை அடைவர்;[71] வீட்டின்பத்தை அடையப் பெண்கள் தடைக்கற்களல்லர்;[72] ஆசிரியர் வாயிலாக அறிவைப் பெறுதல் வேண்டும்;[73] நன்றி பாராட்டும் பண்பினரும் நன்றி கொல்லும் கயவர்களும் சேர்ந்து இருக்கும் ஒரு கூட்டமே சமுதாயம்;[74] வியாபாரம் என்பது என்றும் நேர்மையாக நடந்ததில்லை;[75] "எவ்வழி ஆடவர் அவ்வழி வாழிய நிலனே" என்ற புறக்கருத்துக்கு மாறாகக் கோள்களின் நிலை காரணமாகவே மழை பெய்வதும் பெய்யாதொழிவதும் நிகழ்கின்றன;[76] நம் ஆற்றலுக்கும் அப்பாற்பட்டதொரு செயலைத் தெய்வச் செயல் என்கிறோம். நம் தீவினை அல்லது நல்வினை காரணமாக விளைந்தது என்று கூறும் வழக்கம் தொன்றுதொட்டு நிகழ்ந்து வருகிறது;[77] செயற்கரிய செய்வர் பெரியார்;[78] கற்றது கைமண்ணளவு என்பது முதுமொழி உண்மை;[79] கடவுளை நம்பினோர் கைவிடப்படார்;[80] உயிர்கள் சார்ந்ததன் இயல்பைப் பெறும் என்பதையும் பரஞ்சோதியார் ஆங்காங்கு அறிவித்திருக்கின்றார்.

பரஞ்சோதியார் அறிவுறுத்தும் பெருநெறிகளில் 'கடவுள் நம்பிக்கை' தலையாயதும் முடிவானதும் ஆகும். உண்மையான இன்பமாவது மனக்கவலையின்றி வாழ்தலாகும். எத்துணை வளமும், நலமும், சீரும், சிறப்பும் எய்தி ஒருவன் வாழ்ந்தாலும் கவலைகளிலிருந்து அவன் அறவே விடுபட இயலாது. ஒருவன் மனக்கவலையின்றி அமைதியுற வேண்டுமானால் 'தன்முனைப்பு' நீங்கி இறைவன் திருவடிகளை அடைக்கலமடைய வேண்டும். இங்ஙனம் இறைவனே தமக்குக் கதி என்று

அவனை அடைகின்றவர்களுக்கு எக்காலத்தும் துன்பங்கள் உண்டாகா. இச் சீரிய கருத்தினை,

"தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது" (திருக்குறள், 7)

என்னும் திருக்குறளில் தெளிவாக விளக்கிப் போந்தார் திருவள்ளுவர். இதனையே பரஞ்சோதியாரும், பழியஞ்சின படலம், விடையிலச்சினை யிட்ட படலம், சோழனை மடுவில் வீட்டிய படலம், மாமனாக வந்து வழக்குரைத்த படலம், விறகு விற்ற படலம், இசைவாது வென்ற படலங்களின் வாயிலாகத் தன்னை அடைக்கலம் என்று அடைந்த தன்னுடைய அடியார்பொருட்டுத் தம்மைப் பல சோதனைகட்கு உட்படுத்தி அவர்களின் மனக் கவலைகளை மாற்றி அவர்களின் சோதனையை அவர்கட்குச் சாதனையாக மாற்றித் தந்தார் என அறிவிக்கின்றார்.

அடிக்குறிப்புகள்

1. இடுக்கண்வந் துயிர்க்கும் ஊற்றம் எய்தினும் வாய்மை காத்து
வடுக்களைந் தொழுகு நாலாம் மரபினான் உரையை ஆத்தன்
எடுத்துரை மறைபோல் சூழ்ந்து சிறைக்களத் திட்ட யாப்பு
விடுத்தனன் பகடு போல மீண்டன மேக மெல்லாம். (14 : 58)

2. ஆற்ற வொறுக்குந் தண்டமு மஞ்சா னறைகின்ற
கூற்றமு மொன்றே கொன்ற குறிப்புமுகந் தோற்றான். (25 : 27)

3. உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு. (திருக்குறள், 261)

4. பொய்யறா மனத்தார் தேற்றும் புன்னெறி யொழுக்கம் பூண்ட
வெய்யகோன் கொடுங்கோல் தன்னை வெண்மருப் பாகத் தாங்கி
மையல்மா வடிவங் கொண்டு வந்தவெங் கலியைத் தென்னன்
செய்யகோ லையன் சிங்க வாளியாய்ச் சிதைத்த தன்றே. (22 : 34)

5. அன்னைநீ நினைந்த வெண்ணம் ஆம்பொழு தாகும் வேறு
பின்னைநீ யிரங்கல் யான்போய்த் திசைகளும் பெருநீர் வைப்பும்
என்னது கொற்றம் நாட்டி மீள்வலிங் கிருத்தி யென்னாப்
பொன்னவிர் மலர்க்கொம் பன்னாள் பொருக்கென வெழுந்து.
போந்தாள் (5 : 5)

6. "சிலைபயின்ற வீரரோடு சிலைபயின்ற வீரரே
கலைபயின்ற வாளரோடு கலைபயின்ற வாளரே
கொலைபயின்ற வேலரோடு கொலைபயின்ற வேலரே
மலைபயின்ற மல்லரோடு மலைபயின்ற மல்லரே. (35 : 17)

7. அடுபழி யஞ்சா நீச ராயினும் நினைக்கின் அச்சம்
படுபழி யஞ்சான் செய்த பாதகத் தொடக்குண் டெங்கும்
விடுவகை யின்றி வேறு களைகணு மின்றி வீயக்
கடவனைக் காப்ப தன்றோ காப்பென்றான் கருணை மூர்த்தி
(26 : 35)

8. ஆற்றல்சா லொருவன் மேனா ளாற்றவு மறனே யாற்றி
மாற்றயில் சிறிது பாவஞ் செய்ததன் வலத்தால் வந்து
தேற்றமில் கயவா யாகிச் சினித்தலாற் காக மாதி
கூற்றென வூற்றஞ் செய்யக் குருதிசோர் தலைய தாகி (47 : 3)

9. ஆய பட்டினத் தொருவன்மே லாற்றிய தவத்தால்
தூய வானவர் தம்மினுந் தூயனாய்ச் சிறிது
தீய தீவினை செய்தியாற் றிண்டிமில் வாணர்
மேய சாதியிற் பிறந்துளான் மேம்படு மனையான். (57 : 20)

10. தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றாங்கு
ஐம்புலத்தா றோம்பல் தலை. (திருக்குறள், 43)

11. பொன்மலைக் கடவு ளீந்த புண்ணிய நிதியை அந்த
நன்மலை மானக் கூப்பி நல்கிப்பல் குடியும் ஓம்பித்
தென்மலைக் கிழவன் தெய்வம் தென்புல வாணர் ஒக்கல்
தன்மனை விருந்து காத்துத் தருக்கினான் இருக்கும் நாளில். (15 : 39)

12. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. (திருக்குறள், 125)

13. ஈவதே பெருமை யன்றி இரக்கின்ற திழிவே யன்றோ? (17 : 30)

14. நட்பிடை வஞ்சஞ் செய்தும் நம்பினோர்க் கூன்மா றாட்டத்
துட்படக் கவர்ந்து மேற்றோர்க் கிம்மியும் உதவா ராயும்
வட்டியின் மிதப்பக் கூறி வாங்கியுஞ் சிலர்போ லீட்டப்
பட்டதோ? அறத்தா றீட்டும் நம்பொருள் படுமோ? என்னா (39 : 27)

15. மலர்ந்தசெவ் வந்திப் போதும் வகுளமு முதிர்ந்து வாடி
உலர்ந்துமொய்த் தளித்தே னக்கக் கிடப்பன வுள்ள மிக்க
குலந்தரு நல்லோர் செல்வங் குன்றினுந் தம்பா லில்லென்
றலந்தவர்க் குயிரை மாறி யாயினுங் கொடுப்ப ரன்றோ? (52 :17)

16. ஊரெலா மட்ட சோறு நம்மதே யுவரி சூழ்ந்த
பாரெலாம் பாய றுன்னற் கோவணம் பரிக்கு மாடை
சீரெலாம் சிறந்த சாந்தஞ் தெய்வநீ றணிபூண் கண்டி
நீரெலாம் சுமந்த வேணி நிருத்தனாட் கொண்ட வன்றே. (58 : 85)

17. மறத்தாறு கடந்த செங்கோல் வழுதிநின் பொருள்க ளெல்லாம்
அறத்தாற்றி னீட்டப் பட்ட வனையவை புனித மான
திறத்தாலே நமக்கு நம்மைச் சேர்ந்தவர் தமக்கு மார்வம்
உறத்தாவில் வாத வூர ஐதவினா னாத லாலே. (61 : 62)

18. தாங்கரிய செல்வத் தருக்காலோர் கையோச்சி
வாங்கிமத யானையின்மேல் வைத்தான் மதியில்லான். (2 : 9)

19. இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. (திருக்குறள், 539)

20. கலிங்கர் சாவகர் கூவிள ரொட்டியர் கடாரர்கள் காந்தாரர்
குலிங்கர் கேகயர் விதேகர்கள் பௌரவர் கொல்லர்கள் கல்யாணர்
தெலுங்கர் குர்ச்சரர் மச்சர்கள் மிலேச்சர்கள் செஞ்சையர்
முதலேனைப்
புலங்கொள் மன்னருந் துறைதொறு மிடைந்துபார் புதைபட
வருகின்றார். (5 : 75)

21. முனிவர்கந் திருவர் வானோர் தானவர் மோன யோகர்
புனிதகிம் புருட ராதிப் புலவரு மிறைஞ்சி யன்பிற்
கனிதரு மின்பத் தாழ்ந்தார் திருமணங் காண வந்த
மனிதருங் காணப் பெற்றார் மாதவர் பொருட்டான் மன்னோ? (6:18)

22. உடையவ விடையூ றுற்றா லடுத்தவர்க் குவகை யுண்டோ?
(15:27)

23. நின்றதா ளெடுத்து வீசி யெடுத்ததாள் நிலமீ தூன்றி
இன்றுநாங் காண மாறி யாடியென் வருத்த மெல்லாம்
பொன்றுமா செய்தி யன்றேற் பொன்றுவ லென்னா அன்பின்
குன்றனான் சுரிகை வாண்மேற் குப்புற வீழ்வே னென்னா (24:20)

24. இன்ப மோசிறி தாகு மிதில்வருந்
துன்ப மோகரை யில்லாத் தொடுகடல் (26:8)

25. காமமே கொலைகட் கெல்லாங் காரணங் கண்ணோ டாத
காமமே களவுக் கெல்லாங் காரணங் கூற்ற மஞ்சுங்
காமமே கள்ளுண் டற்குங் காரண மாத லாலே
காமமே நரக பூமி காணியாக் கொடுப்ப தென்றான். (26 : 27)

26. ஆவியங் கேக இந்த வாகமிங் கிருப்ப தேயிப்
பாவியோ மேனா ளிந்தப் பறழினை வகுத்த தெய்வ
மாவம ராடி வென்று வருதியேல் வருவே னன்றி
நீவிளிந் திடத்து மாய்வே னிழலுக்குஞ் செயல்வே றுண்டோ? (45 : 25)

27. வலியை யென்பதென் மரபி னுக்கெலாம்
பொலிய வேண்டுமெப் போது நீசொன
ஒலிய மந்திர மோதி யோதிநாங்
கலியை வெல்லவுங் கருணை செய்கென (47:19)

28. வள்ள லென்மா புள்ளவு மற்றைய
புள்ளு மிந்தப் புனித மலர்த்தடத்
துள்ள மீனுயி ருண்ணினெக் காலமுந்
தள்ளொ ணாத பழிவந்து சாருமே. (48 : 20)

29. என்று மித்தட மீனில வாகநீ
நன்று சால்வர நல்கென (48 : 21)

30. நாய்நம தெனநரி நமதெ னப்பிதா
தாய்நம தெனநமன் றனதெ னப்பிணி
பேய்நம தெனமன மதிக்கும் பெற்றிபோ
லாய்நம தெனப்படும் யாக்கை யாரதே. (1:32)

31. காணிட நடனஞ் செய்யுங் கண்ணுத லருட்க ணோக்கால்
ஊனிட ரகலு நாளி லுயர்ந்தவர் இழிந்தோ ருண்டோ? (5:191)

32. மன்னன்மு னமைச்சர் சித்தர்மறுத்துரை மாற்றங் கூற
முன்னவ னருள்பெற் றிம்மை மறுமையு முனிந்த யோகர்
இந்நில வேந்தர் மட்டோ இந்திர னயன்மா லேனோர்
தன்னையு மதிப்ப ரோவென் றிருந்தனன் தரும வேந்தன். (20:24)

33. தேனார் மொழியார் விழிவழியே செல்லா தவர்க்கே வீடென்று
நானா வேதப் பொருளு ரைத்தாய் நீயே மதுரை நம்பரனே
நானா வேதப் பொருளுரைத்தாய் நீயே பாதி நாரியுரு
ஆனா யென்று பிறர்பழித்தா லடியேன் விடையே தறைவேனே?
(44:35)

34. இந்திரன் பழிதீர்த்த படலம் (1:8)

35. தடாதகைப் பிராட்டியார் திருமணப்படலம் (5:129)

36. நரியரியாக்கிய திருவிளையாடல் (59:83)

37. இந்திரன் முடிமேல் வளையெறிந்த திருவிளையாடல் (14 :4)

38. வருணன் விட்ட கடலை வற்றச்செய்த படலம் (18:15)

39. கல்லானைக்குக் கரும்பருத்திய படலம் (21–12)

40. விறகு விற்ற படலம் (40:7)

41. இசைவாது வென்ற படலம் (44:8)

42. ஷை (44: 9)

43. சங்கப் பலகை கொடுத்த படலம் (51:6)

44. வலை வீசின படலம் (44:5)

45. பன்றிக்குட்டிகளை மந்திரியாக்கிய படலம் (46:5)

46. ஷை (46;6)

47. ஷை (46:7)

48. இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்

49. பழியஞ்சின புடலம்

50. யானையெய்த படலம்

51. திருமணப் படலம்

52. திருமணப் படலம்

53, மாபாதகந் தீர்த்த படலம்

54. இந்திரன் பழிதீர்த்த படலம்

55. குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்; மாணிக்கம் விற்ற படலம்

56. மாமனாக வந்து வழக்குரைத்த படலம்

57. தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்

58. வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்

59. மண் சுமந்த படலம்

60. ஷி

61 இந்திரன் பழிதீர்த்த படலம்

62. வெள்ளையானை சாபந்தீர்த்த படலம்

63, திருமணப் படலம்

64. கால் மாறியாடிய படலம்

65. மாபாதகந் தீர்த்த படலம்

66. பன்றிக்குட்டிக்குப் பால்கொடுத்த படலம்

67. ஷி

68. கரிக்குருவிக்கு உபதேசஞ் செய்த படலம்

69. இந்திரன் பழிதீர்த்த படலம்

70. ஷி

71. தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்

72. இந்திரன் பழிதீர்த்த படலம்

73. தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்

74. நரிபரியாக்கிய படலம்

75. இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்

76. வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம்

77. கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்

78. பழியஞ்சின படலம்

79. விறகு விற்ற படலம், இசைவாது வென்ற படலம்

80. சங்கப் பலகை கொடுத்த படலம், வலைவீசிய படலம்

12

மஸ்தான் சாகிபு போற்றும் மனித ஒருமைப்பாடு

சி. நயினார் முகம்மது

1. முன்னுரை

உலகில் நிறத்தாலும், நிலத்தாலும், இனத்தாலும், குலத்தாலும், சாதி சமயங்களினாலும் வேற்றுமைகள் மிகுந்துள்ளன. இவற்றால் வேறுபட்ட மக்கள் மாறுபட்டுப் பகையும் மிகையும் கொண்டு, போரும் பூசலும் விளைவித்து வருகின்றனர்.

2. சமயம்

சமயம் எனும் சொல் சமையம் எனும் சொல்லிலிருந்து மருவியது[1] என்பர். சமைக்கப்படுவது– 'நான்', 'எனது' எனும் முனைப்புடைய மனிதரைப் பதப்படுத்திப் பேரின்பத்திற்கு இட்டுச் செல்வது– எனலாம். சமைக்கப்பட்டது என்று கொண்டு அமைக்கப்பட்டது– வகுக்கப்பட்டது – இறைவனை அடைவதற்கு வகுக்கப்பட்ட நெறி என்றும் பொருள் தருவர்.[2] இவ்வாறு செருக்கடங்கி மனிதர் இறைவனை அடைவதற்கு அமைந்த மார்க்கங்கள் பல. இவற்றுள் இஸ்லாம் குறிப்பிடத் தக்க ஒன்று.

3. இஸ்லாம்

இஸ்லாம் எனும் அரபிச் சொல்லிற்கு அடிபணிதல், ஈடேற்றம், சாந்தி எனும் பொருள்கள் உள்ளன. இறைவனுக்கு முற்றிலுமாக அடிபணிந்து,

இறைநெறியில் நடந்து, ஈடேற்றம் பெற்று, சாந்தியில் திளைப்பர் எனும் கருத்தினைக் கொண்டது. இஸ்லாம் முகம்மது நபியால் தோற்று விக்கப்பட்டது எனும் கருத்துப் பரவலாக நிலவிவருகிறது; இது தவறு. இஃது ஆதிமனிதர் ஆதம் நபி முதல் இறுதித் தூதர் முகம்மது நபிவரை இலட்சக்கணக்கான இறைதூதர்கள் போதித்து விளக்கிய மார்க்கமாகும். இறைதூதர் அனுப்பப்பெறாத இனமே இல்லையெனத் திருக் குர்ஆன் கூறுகிறது.[3] இவர்கள் பல்வேறு இடங்களில், பல்வேறு காலகட்டங்களில் வந்து வழிகாட்டியுள்ளனர். முஸ்லிம்கள் இறைதூதர்கள் அனைவரையும் போற்றி அவர்களின் போதனைகளின்படி நடக்க வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகிறது. மனிதகுலம் ஆதியிதா ஆதம் நபியிலிருந்து தோன்றிப் பெருகியது. பல்வேறு நிலங்களில் பரவி, பல்வேறு மொழிகள் பேசிவந்த போதிலும் அனைவரும் சகோதரர்களே என்றும் தெளிவுபடுத்துகிறது. இவ் வொருமைப்பாட்டைப் போற்றும் இஸ்லாமிய சமயத்தில் தோன்றியவரே சூபி ஞானி மஸ்தான் சாகிபு.

4. சூபிநெறி

சிற்றின்பத்தில் மூழ்கிப் பேரின்பத்தை மறந்துவிடாமல் பரம் பொருளை அடைவதையே குறிக்கோளாகக் கொண்ட வழி சூபிநெறி; ஆசாபாச அழுக்குகளைப் போக்கிப் பரிசுத்தத்தைப் போற்றுவது; இறைவனின் கல்யாண குணங்களின் குடியிருப்பாகத் தம்மை ஆக்கிக்கொள்ளச் சாதகரைத் தூண்டுவது. இத்தகைய சூபிநெறியில் ஊறித் திளைத்தவர் மஸ்தான் சாகிபு. இவரின் இயற்பெயர் சுல்தான் அப்துல் காதிர் என்பது. இறைக்குணங்கள் நிறைந்தவராக இருக்க விரும்பிக் "குணங்குடியான்"எனப் பெயர்பெற விழைந்துள்ளார். இவர் சாத்திரம் சடங்குகளைக் கடந்து வேற்றுமையில் ஒற்றுமை காணும் மெய்யுணர்வுக் கவிஞராகவும் விளங்குகிறார்; இயற்பெயர் மறைந்து குணங்குடி மஸ்தான் என அழைக்கப்பெற்றுள்ளார். 'மஸ்த்' எனும் பார்சிச் சொல் போதை, மயக்கம் எனப் பொருள் தரும். இறைக்காதல் எனும் போதை மிகுந்திருந்தார் என்பதை இவர் பெயர் புலப்படுத்துகிறது.

5. சமய வேற்றுமை

சாத்திரங்களிலும் சடங்குகளிலும் சமயங்கள் வேறுபட்டிருப்பினும் படைத்துப் பாதுகாக்கும் இறையன்பைப் பெறுவதையே நோக்கமாகக்

கொண்டுள்ளன. அன்பு, இரக்கம், பொறுமை முதலான பண்புகளைப் போற்றி வரவேண்டும்; இறைவனின் படைப்புகளாகிய மக்களிடம் பாசமும் நேசமும் காட்டி உதவி வரவேண்டும் என வலியுறுத்தி வருகின்றன. இத்தகைய உயர்ந்த இலட்சியங்களைக் கொண்ட சமயங்களைச் சார்ந்தோரோ, இறைவனுக்கு எண்ணற்ற பெயர்களையும் கதைகளையும் கற்பித்துக்கொண்டு, பல்லாயிரக் கணக்கான பிரிவுகளையும் படைத்துக்கொண்டு, 'என் தெய்வம்', 'உன் தெய்வம்' என்று மாறுபட்டுச் சண்டையிட்டு வருகின்றனர். காக்கப்பட வேண்டிய உயிர்கள் போக்கப்படுகின்றன; ஆக்கப்பட வேண்டிய அறங்கள் அழிக்கப்படுகின்றன. இவ் அவலநிலையைக் கண்டு மஸ்தான் சாகிபு வேதனைப் படுகின்றார்; மாச்சரியம் செய்யும் மதவேற்றுமைகளை வெறுத்து அவற்றை விலக்குவதற்குப் பல உத்திகளில் பாடுகிறார்; சண்டை நின்றிடுவதும், மண்டை பிண்டுடைவதை வெறுப்பதும் எக்காலமோ என்று ஏங்கித் தவிக்கின்றார்.[6] அவரவர் தத்தம் தெய்வமே பெரிதென்று வாதிட்டு, வம்பு வளர்த்துக் கேடு சூழ்வது அறியாமையே என்று வருந்திக் கூறுகின்றார்; சமயங்கள் தோன்றுதற்குக் காரணமும் இறைவனே; அவர்களுக்கு அருள்புரிபவனும் இறைவனே என்று விளக்குகிறார்;[7] யோகநெறியில் சமாதி நிலைக்கு விளக்கங் கூறவந்தவர், சாதி பேதத்தையும் மாதர் போகத்தையும் தள்ளிநிற்பது சமாதி என்று பாடுகிறார்;[8] மாச்சரியம் செய்யும் மதம் என்று சாடி, அது ஒடுங்கினால்தான் இறைக்காட்சி கிட்டும் என்று கூறுகிறார்.[9] இறைவனைக் காணத்தவிக்கும் மஸ்தான் சாகிபு மதபேத மோதிடச் செய்வையோ, இல்லை மதமற்ற ஞானத்தைப் படித்திடச் செய்வையோ என முரண்நிலையில் ஏங்கிப் பாடுகின்றார்;[10] வகையற்ற சமயக் குதர்க்கம் எனக் கடிந்து, ஆன்மப் பயணத்தின் தடையாக இருக்கும் அக் குதர்க்கத்தைக் கடத்தி வழிவிட்டு அருள்புரிய வேண்டுகிறார்;[11] மதபேதம் ஒதுபவர் மதிகெட்டவர் எனக் கடுமையாகச் சாடுகிறார்; அம் மூடர்க்கு எட்டாத வான்கருணை வெள்ளம் இறைவன் என அறுதியிட்டுக் கூறுகிறார்.[12]

6. இறைஒருமை

இவ்வாறு சமய பேதங்களால் விளையும் கேடுகளை வேதனையுடன் கூறிய மஸ்தான் சாகிபு அவற்றை நீக்குவதற்குப் பல வழிமுறைகளைக் காட்டுகின்றார்; பல பெயர்கள் கூறி, பல முறைகளால் வழிபடும் இறைவனின் ஒருமையையும் பொதுமையையும் பல நிலைகளில் புலப்படுத்துகின்றார்; எல்லாப் படைப்புகளையும் படைத்து ஆகாரமளித்து

ஆதரிப்பவன் இறைவன் ஒருவனே; வேறு எவருமல்லர் என்று உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் விளக்குகின்றார்;[13] 'பார்க்கப் பல விதமாகத் தோன்றுகின்றான்; அவற்றைக் காக்கும் நிலைக்கு உயிராகவும் இருக்கின்றான்; அனைத்திற்கும் காரணமான பூரண நாதனாகவும் விளங்குகின்றான் என்று போற்றுகிறார்;[14] அங்கிங்கு என்று கூறவியலாத எங்கும் நிறைந்த அகண்ட பரிபூரணமாகவும் இறைவனை வர்ணிக்கிறார்.[15] நான்மறையின் உட்பொருளாகக் கூறி இறைவனின் எங்கும் இருக்கும் உண்மையைப் புலப்படுத்துகிறார்.[16] இவ்வாறு பல பாடல்களில் எல்லாச் சமயங்களுக்கும் காரணமாகவும் இலட்சியமாகவும் உள்ள இறைநிலையை விளக்குகிறார்.

7. நபிகள் நாயகம்

சொல்லாலும் செயலாலும் விளக்கி, சன்மார்க்க நிறைவுகண்ட முகம்மது நபியைப் போற்ற வந்த மஸ்தான் சாகிபு அவரை முத்திப்பயிர் விளைத்த வெற்றிச் சமுசாரியாக ஒரு பாடலில் உருவகிக்கின்றார்.[17] மிக நீண்ட அடிகொண்ட கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் அமைந்த இப் பாடலில் சாதிபேதங்களையும் பழக்கவழக்கங்களையும் சமயவயலில் அமைந்த சேறாகவும், கட்டிகளாகவும் குறிப்பிட்டு அவற்றை நன்றாகக் கலக்கி மிதித்துச் சமரசமெனும் பரம்படித்துப் பயிரிட்டு ஆன்மிக வேளாண்மை செய்ததாக உருவகிக்கின்றார். இதில் நடைமுறைப்படுத்திய சமத்துவ சமரசம் போற்றப் பெறுவதைக் காணமுடிகிறது.

8. குருநாதர்

இறைவனை யடைதற்குரிய ஆன்மப் பயணத்தில் தம்மை ஆற்றுப்படுத்தத் தம் குருநாதரை வேண்டிப் பாடும் இடங்களிலும் சாதி சமய வேற்றுமைகளைச் சாடுகின்றார்; சமயப் பொதுமையைப் போற்றுகிறார்.

சாதி வரையற்ற குருநாதன்[18]
மதமற்ற மதமுற்ற தவராஜ சிங்கம்[19]
வாதங்கள் நிகழ்த்திடும் சமயக்கடல் கடந்தவர்[20]
மாதவ அபேதநிலை உள்ளவர்[21]

என்றெல்லாம் வருணித்து வந்தவர் மதமத்தனையுமற்ற மதமுற்ற உம் மதம் ஈமக்கருள்புரியவும் என்று வேண்டுகிறார்;[22] இங்கு "மதம் அத்தனையும்

அற்ற மதம்" எனச் சமயபேதம் நீங்கிய உயர்நிலை யொன்றைக் கண்டு அதுவே தம் குருநாதரின் மதம் என்று கூறி, அத்தகு மதத்தினைத் தமக்குத் தந்தருள வேண்டும் என இரக்கிறார். 'மதம் அத்தனையும் அற்ற மதம்' என்பதில் சர்வசமய சமரச தத்துவம் புதுமையொளி வீசுகிறது.

9. சொல்லாட்சி

மஸ்தான் சாகிபின் சொல்லாட்சியிலும் சமரசம் விளக்கம் பெறுகிறது. இறைவனுக்குப் பல திருநாமங்கள் கூறித் துதிப்பது சமய மரபாகும். முஸ்லிம்களும் பல திருநாமங்கள் கூறித் துதிப்பர். மஸ்தான் சாகிபு பாடல்களில் இத் திருநாமங்களில் பல இடம்பெற்றுள்ளன. அவற்றை மூன்று வகையாகப் பிரிக்கலாம்:

1. அல்லாஹ், ஹூ, றப்பில் ஆலமீன், றகுமான், றகீம் முதலியன அரபி மூலங்கள்.
2. பல அரபி மூலங்களின் தமிழ் ஆக்கங்கள்; கத்தனே, நாயனே, மாயனே, தூயனே போல்வன.
3. இவையல்லாமல் பிற சமயத்தார் தம் தெய்வங்களுக்கு வழங்கும் திருநாமங்களையும் அவற்றின் மூலப்பொருளில் வழங்கி யுள்ளார். முறையே நன்மை, அகத்தினுள் உள்ள இறைவன், குரு, பரம்பொருள் எனும் பொருள் தரும் சிவன், அகத்தீசன், நந்திகேஸ்வரன், பரவாசுதேவன் ஆகிய திருநாமங்கள் இடம் பெற்றுள்ளன.

10. பரிபாஷை

சூபிநெறிக்கும் தமிழ்நாட்டுச் சித்தர்நெறிக்கும் பல ஒற்றுமைகள் உள்ளன. மஸ்தான் சாகிபு பாடல்களில் சித்தர்களைப்பற்றிய பல செய்திகள் காணப்படுகின்றன. ஆதலின் இவரை முஸ்லிம் சித்தர் என்பர். சித்தர் பரிபாஷைகளை ஆண்டு தம் ஆன்மிக அனுபவத்தை ஆற்றலுடனும், இலக்கிய நயத்துடனும் விளக்குகிறார். அம்பிகை, மனோன்மணி, உமை, சக்தி, பரை முதலியன குண்டலினியைக் குறிக்க வந்துள்ளன. இவ்வாறே சிவன், வாசுதேவன், சிற்றம்பலம், சிதம்பரம், மன்று, திருநடனம், திருக்கூத்து முதலிய பாரிபாஷைகளை யோக அனுபவத்தை விளக்கப் பயன்படுத்துகிறார். மேலும் தெட்சணாமூர்த்தம், இந்திரன், அளகேசன், கன்னன் முதலியவற்றை முறையே குருநாதன்,

உயர்பதவி, செல்வம், கொடை முதலிய பொருள்களைத் தரும் குறியீடுகளாகவும் ஆளுகிறார்.

11. பொதுச்சொல்லும் பொருள் வேற்றுமையும்

தமிழ் இலக்கிய வழக்கிலிருக்கும் சமயம் சார்ந்த பல மரபு தொடர்புகளையும் சொற்களையும் தம் சமய அநுபவங்களையும் கருத்துகளையும் விளக்குவதற்குப் பெருமளவில் பயன்படுத்தி யிருக்கிறார். நான்மறை, நான்குநெறி, பஞ்சாட்சரம், வினை, மாயை, பிரணவம் முதலியன பொருள் வேற்றுமை கொண்ட பொதுச் சொல்லாட்சிகள்.

	இந்து சமயம்	இஸ்லாம்
நான்மறை	இருக்கு	ஜபூர்
	யஜுர்	தௌராத்
	சாம	இன்ஜீல்
	அதர்வணம் ஆகிய வேதங்கள்	குர் ஆன் ஆகிய வேதங்கள்
நான்கு நெறி	சரியை	ஷரிஅத்
	கிரியை	தரீகத்
	யோகம்	ஹக்கீகத்
	ஞானம்	மஃரிபத்
பஞ்சாட்சரம்	நமசிவாய மூலம்	அல்லாஹ் என்பதன் அரபி
வினை	முற்பிறப்பில் செய்த பழவினை	இவ்வுலகில் செய்த நல்வினை, தீவினை
மாயை	மும்மலங்களுள் ஒன்று	மயக்கம்
பிரணவம்	நமசிவாய	லாயிலாஹ இல்லாஹ் எனும் மூல மந்திரம்

12. இவ்வாறு பிற சமயத்தவர் போற்றித் துதிக்கும் திரு நாமங்களையும், பெயர்களையும், சொற்றொடர்களையும் போற்றிப் பாடியுள்ளதன் நோக்கம் தமிழ்மக்களுக்குத் தம் பாடல்கள் அந்நியமாக ஆகிவிடக் கூடாது என்று கருதியதே. சாதிமத பேதமற்றுத் தம்

பாடல்களை அனைவரும் விரும்பிப் படித்து, எளிதில் புரிந்து பயனடையவேண்டும் என்னும் தம் விருப்பத்தை ஒரு பாடலில் வெளியிடுகிறார்.[23] இவரின் விருப்பம் வீணாகிவிடவில்லை. சாதி சமய வேறுபாடின்றிப் பலரும் இவரின் வாழ்வையும், வாக்கையும் போற்றிப் பாடித் துதித்துள்ளனர். இவர்களுள் மகாவித்துவான் திருத்தணிகை சரவணப் பெருமாள் ஐயர், சிவயோகி ஐயாசாமி முதலியார், கோவளம் சபாபதி முதலியார், வேங்கடராயப் பிள்ளைக் கவிராயர், புலவர் நாயகம் என்று போற்றப்பெறும் செய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை, ஆலிம் புலவர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர். புலவர் மட்டுமன்றி மன்னரும், வணிகரும், மகளிரும் இவரின் சீடர்களாகத் திகழ்ந்துள்ளனர்.

13. பல புலவர்கள் பிற சமயங்களையும் அவற்றின் தெய்வங் களையும் தாழ்த்தியும் தூற்றியும் பாடியுள்ளனர். ஆனால் மஸ்தான் சாகிபு எந்த ஒரு சமயத்தையும், தெய்வத்தையும் குறைத்தோ கடிந்தோ பாடவில்லை. மாறாக, பிற சமயங்கள் போற்றும் பெயர்களையும், சொற்றொடர்களையும் வெறுப்பின்றி விரும்பிப் போற்றியுள்ளார்.

14. சர்வசமயம் பாடியுள்ள மஸ்தான் சாகிபு சமரசம் என்ற சொல்லையும்-பல இடங்களில் ஆளுகிறார்.[24]

15. பொதுவாகப் புலவர் பெருமக்கள் நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும், இனப்பற்றையும் வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ பாடுவர். ஆனால் மஸ்தான் சாகிபு இப் பற்றுகளை எந்நிலையிலும் பாடவில்லை; பற்றற்றுப் பற்றற்றான் பற்றினைப் பாடிப் பேரின்பத்தில் திளைக்கிறார்; உலக மக்கள் அனைவரும் தாம் பெற்ற பேரின்பம் பெறவேண்டும் என விழைகின்றார்.

16. முடிபுகள்

இதுவரை கண்டவற்றால், மஸ்தான் சாகிபு சமய வாதங்கள் பேசி வேற்றுமைகளை வளர்த்துச் சண்டையிடுவதை வன்மையாகக் கண்டித்துள்ளார்; இறைவனின் ஒருமையையும், சமயங்கள் அனைத்திற்கும் உரிய பொதுமையையும் வலியுறுத்துகின்றார்; நபிகள் நாயகமும், குருநாதரும், சமயபேதம் நீக்கியவர் என்று விளக்குகிறார்; சாத்திரங்களையும், சாதி சமயச் சடங்குகளையும் கடந்த சித்தர் நெறியைப் போற்றி யோக பரிபாஷைகளையும், திருநாமங்களையும், மரபு தொடர்களையும் ஆண்டுள்ளார்; பிற சமயங்களையும், கடவுளரையும்

தாழ்த்திக் கூறவில்லை; எவ்விதப் பற்றுமின்றிச் சமரச கீதம் பாடி உலக மக்களின் ஒருமைப்பாட்டைச் சிறப்பாகப் போற்றியுள்ளார்; மக்களனை வரும் அமைதியில் இன்பங்காண அரிய வழிகாட்டியுள்ளார்.

அடிக்குறிப்புகள்

1. கா. சுப்பிரமணியப் பிள்ளை, தமிழர் சமயம், ப.10
2. இரா. மாணிக்கவாசகம், திருமந்திர ஆராய்ச்சி, சென்னை, 1982, ப.17
3. மனிதர்களே நீங்கள் இறைவனுக்குப் பயந்து (நடந்து) கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து உற்பத்தி செய்தான். (திருக் குர்ஆன், 4:1)
4. அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும் (நம்முடைய) தூதர் வாராத எந்த வகுப்பாரும் (பூமியில்) இருக்கவில்லை (திருக் குர் ஆன், 35:24)
5. நற்குணங் குடியா னெனப்பே ரெனக்கருளும்
ஞான திருநாம மாகி (முகியத்தீன் சதகம், 29:2)

   எனைக் குணங்குடியா னென்றுங் குறிப்பாய் (நந்தீஸ்வரக் கண்ணி, 40 :2)

   ..... அடியானு மாக்கிக் குணங்குடி யானெனப்
பிரியங் கொடுப்பாய் (மனோன்மணிக் கண்ணி, 90)
6. சண்டைநின் றிடுவதும் மண்டைபின் னுடைவதும்
சன்னென்ப தெக்கா லமோ (முகியித்தீன் சதகம், 82:2)
7. அறியாம லென்தெய்வ முன்றெய்வ
மென்பார்க்கு மல்வகைக் காரணத்தை (முகியித்தீன் சதகம், 17:2)
8. சாதிபே தத்தையும் மாதர்போ கத்தையும்
தள்ளி நிற்பது சமாதி (முகியித்தீன் சதகம், 44:1)
9. மாச்சரியஞ் செய்யு மதமொடுங்கி முத்திபெறக்
காட்சி தருவதெப்போ கண்ணே பராபரமே

   (பராபரக் கண்ணி, 57)
10. மதபேத மோதப் படுத்திடச் செய்வையோ
மதமற்ற ஞானம் படித்திடச் செய்வையோ

    (கீர்த்தனை 8, சரணம் 4)

11. வகையற்ற சமயக் குதர்க்கங் கடத்திநல்
வழிவிட்டு அருள்புரியவும் (அகத்தீசன் சதகம், 36:2)

12. மதபேத மோதிமதி கெட்டவர்க் கெட்டாத
வான்கருணை வெள்ள மாகி (முகியித்தீன் சதகம், 28:2)

13. எல்லாப் படைப்பும் படைத்து மிரணங்கா ளீபவனே
அல்லா லொருவ னவன்றி வேறில்லை
(தவமே பெறவேண்டுமெனல், 5)

14. பார்க்கப் பலவித மாயும் – ஆகப்
பல்லாயிரங் கோடி யண்டம தாயும்

காக்கு நிலைக்குயி ராயும் – நின்ற
காரண பூரண நாதனைப் போற்றி
(இரக்கத் துணிந்து கொண்டேனே, 31)

15. அங்கிங் கெனலொண்ணா வகண்டபரி பூரணமே
எங்கு நிறைந்த இறையே நிராமயமே (நிராமயக் கண்ணி, 17)

16. நான்மறையு மறியாத நான்மறையி னுட்பொருளை
நானறிய வருள்புரியவும் (அகத்தீசன் சதகம், 96:3)

17. மகுமூது நபி யாண்டவரைச் சுகானுபவமுறத் துதித்தல்

18. சாதிவரை யற்றகுரு நாதனே முத்திநிலை
தருவதினி யெக்கா லமோ (முகியித்தீன் சதகம், 89:3)

19. மதமற்ற மதமுற்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே (அகத்தீசன் சதகம், 7:4)

20. வாதசம யக்கடல் கடந்தநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வரு கவே (முகியித்தீன் சதகம், 89:4)

21. மாதவ வபேதநிலை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வரு கவே (முகியித்தீன் சதகம், 61:4)

22. மதமத்த வையுமற்ற மதமுற்று யானுமும்
மதமாக வருள்புரி யவும் (அகத்தீசன் சதகம், 97:5)

23. ஏழையடி யேனறிவி லாமலுள றுந்தமிழ்க்
கிரங்குவது மெக்காலமோ?
தீதுமத பேதங்க ளற்றுமே யெங்குமிது
செல்வதுவு மெக்காலமோ? (முகியித்தீன் சதகம், 89:1–2)

24. தத்தியே கங்குலறப் பெருகிவரு மானந்த
சமரசப் பெருவாரியை (முகியித்தீன் சதகம், 15:1)

சாடாது சமநிலையில் நின்றுசம ரசமது
சார்ந்திடுவ தெக்காலமோ? (முகியித்தீன் சதகம், 82:3)

.....பல்வருண பேதமென்னும்
பாலிதச் சாதிவரை கின்றகளி யளறது
பழுக்கஅழு கக்கலக்கிப்
பழக்கமெனு அடைகலுங் கட்டியு மிதித்தபின்
பழகரிய சமரசமெனும்
படிகொண்ட மூலமுத லாதார மாறும்
பரப்பிப் பரம்ப டித்து .....

(மகுமூது நபி யாண்டவரைச் சுகாறுபவமுறத் துதித்தல்)

18

தமிழ்ப் பாட்டாளி நிலை கூறும் மலையகக் கவிதைகள்

க. நவசோதி

1. முன்னுரை

1.1 தமிழகத் தொழிலாளர்கள் அலைகடல் கடந்து பிஜி, மொரிசியஸ், தென்னாப்பிரிக்கா, பர்மா, மலேசியா, அந்தமான், இலங்கை போன்ற பகுதிகளிற் குறிப்பாகத் தொழிலாளராய்த் தோட்டங்களில் வாழ்ந்த வாழ்க்கை, சிறந்த கவிஞரது ஆக்கங்களுக்கு அடிப்படையாய் அமைந்தது.[1]

1.2 மலேசியாவிலும் இலங்கையிலும் கோப்பி, ரப்பர், தேயிலைத் தோட்டங்களில் குடியேற்றப்பட்ட பாட்டளிகளினால் பாடப்பட்டுவந்த நாட்டுப்புறப் பாடல்கள் குறித்துச் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றன.[2] தோட்டத் தொழிலாளர் வரலாறு கூறும் மலையகத் தனிப்பாடல்கள் குறித்து, ஈழத்து யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டில் ஆய்வுரை மேற்கொள்ளப்பட்டது.[3] இலங்கை மலையகத் தமிழரின் கதை கூறும் இசைப் பாடல்களும் தமிழகத்தில் இயற்றப் பட்டுள்ளன.[4]

1.3 எமது இவ் ஆய்வுக் கட்டுரைக்கு ஈழத்து மலையகத் தமிழ்ப் பாட்டாளிகள் குறித்து ஈழத்து ஏடுகளில் சிறந்த மலையகக் கவிஞர்களால்

1982 – 87ஆம் ஆண்டு காலப் பகுதியில் எழுதி வெளியிடப்பட்ட கவிதைகள் சான்றுகளாய்க் கொள்ளப்பட்டுள்ளன. (பார்க்க பின்னிணைப்பு – அ)

1.4 'அடிமைகளாய்ச் சுதந்திரத்தை அனுபவித்தவர்கள்' என எமர்சென், ரென்னர் போன்ற ஆங்கில வரலாற்று வல்லுநராலும், 'உழைக்கப் பிறந்தவர்'[5] என மக்கள் கவிமணி வேலுப்பிள்ளை போன்ற பண்பாட்டு ஆய்வாளர்களினாலும் பரிந்துரைக்கப்பட்ட பாட்டாளி மக்களே ஈழநாட்டு மலையகத்தினைப் பசும்பொன் விளையும் பொழிலாக்கிய தமிழ்த் தொழிலாளர்கள்.

1.5 ஆய்வுக்குரிய கவிதைகளில் இவர்கள் பொதுவாக உழைப்பாளராய் (அ) பாட்டாளி, (ஆ) தொழிலாளி எனவும், தமிழினப் பண் பாட்டாளராய் (அ) தமிழர், (ஆ) தமிழ்க்குலம் எனவும், குறிஞ்சி நிலத்து வாழ்பவராய் (அ) மலைமக்கள், (ஆ) மலைமங்கையர், (இ) மலையக மாந்தர், (ஈ) மலைநாட்டார், (உ) குன்றின் தமிழ்க்குலம் எனவும், வசதியும் வளமும் வாய்ப்பும் உரிமையும் அற்றவராய் (அ) நாடற்றவர், (ஆ) வீடற்றவர், (இ) ஏழைமகன் எனவும் சுட்டியுரைக்கப்படுவர்.

2. பிறப்பும் இறப்பும்

2.1 உழைப்பதற்கென்றே பிறந்த தமிழ்ப் பெருங்குடி மக்களைப் "பாட்டாளியாய் மண்ணில் பிறந்தது போலும்" எனக் கூறுகின்றது கவிதை. மலைநாட்டின் வளம் பெருக்குவதே அவர்தம் வாழ்க்கையாய் அமைந்தது; தக்க பொருள்வனம் பெறாதவராய் இறப்புவரை நலன் காணாதவராகவே ஓயாது உழைத்தனர். பிறந்த மண்ணிற்கே உரமான அவர்களது உடலத்தால் அவர்கள் பயிரிட்ட தேயிலைச் செடியும் செழித்து வளர்ந்தது. இதனைப் பின்வரும் கவிதைக் கண்ணிகள் எடுத்தோது கின்றன.

(அ) *"தேயிலைச் செடிகளா?*
உங்களுக்காக உரமான அவர்களுக்கு"

(ஆ) *"நாட்டுக்காய் உழைப்பதுதான் அவர்தம் வாழ்க்கை– ஒரு நலனுமின்றிச் சுடுகாடு ஏகும் யாக்கை"*

2.2 மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் ஒரு காலகட்டத்தில் தமது உழைப்பை நல்கிய மண்ணைத் தாயகமாய்ப் போற்றி வாழ்ந்தவர்கள்

என்பதற்கு இலங்கையின் தலைசிறந்த சிங்கள நாவலாசிரியர் மாட்டின் விக்கிரமசிங்க போன்றோரின் கூற்றுகள் சான்றாகும்.

2.3 இலங்கைத் தமிழ் இளைஞரின் வாழ்க்கை வரலாற்றினைத் தரப் படுத்தல் திட்டம் வெகுவாகப் பாதித்த போதிலும், வாக்குரிமை, குடியுரிமை இழந்த மலையகத் தொழிலாளர்கள் அத் திட்டத்திலும் பாதிப்பானதான ஐந்தாம் வகுப்பு வரை அமைந்த தோட்டப் பாடசாலைக் கல்வி முறையினைக்கூட முற்ற முழுமையாகப் பயன்படுத்தாது உழைப்புக்கே முக்கியத்துவம் அளித்துவரலாயினர்.

3. மூத்த தலைமுறை

பல தலைமுறைகளாகத் தொடர்ந்து தோட்டத் தொழிலுக்கே தம் வாழ்க்கையினை அர்ப்பணித்தவர்கள் தமிழ்ப்பாட்டாளிகள். இச் செய்தி மலையகக் கவிதைகளில் பின்வருமாறு கூறப்படுகிறது:

(அ) *"எத்தனையோ வருசங்களா*
இடுப்பொடியப் பாடுபட்டும்"

(ஆ) *"முன்னே பொறந்தவங்க*
முதுகொடிய ஒழைச்சதெல்லாம்"

4. பிறர்நலம் பேணுகை

4.1 உழைத்த மண்ணிற்கே உயிரைக் கொடுத்து உரமான அவர்கள், உரிமைகள் இழந்த வாழ்க்கைப் பயணத்தில் உயர்தமிழ்ப் பண்புகளைப் புறக்கணிக்கவில்லை. மலைநாட்டில் பொன்வளம் பெருக்கி நின்றவர்கள் "மற்றோரையும் வளர்க்கும் மக்கள்" என்றே கவிதைகளிற் போற்றப்பட்டனர். புத்தாண்டுப் பிறப்பின் போதும், பொங்கல் திருநாளன்றும் உலக மனித சமுதாயம் நன்மை பெற்று மகிழ வேண்டியதையே மனத்து வேண்டுதலாய்க் கொண்டிருந்தனர் என்பதற்குப் பின்வரும் அடிகள் சான்றாகும்.

(அ) *"பாரினின்பம் நன்மைகள்*
இலங்கச் செய்வாய்"

(ஆ) *"மண்ணிலே மனிதர் யாரும்*
மகிழவும் பொங்கல் வைப்போம்"

4.2 விருந்தோம்பும் பண்பு தமிழ்ச் சமுதாயத்துடன் பின்னிப் பிணைந்ததாகும். வறுமை வந்துற்ற போதும் விருந்தினரை வரவேற்று

உபசரிக்கும் பண்பினை மலைவாழ் மக்கள் மறந்துவிடவில்லை என்பதன் எடுத்துக்காட்டே மங்கை நல்லாளின் மனத்தின் வெளிப்பாடாயமைந்த கீழ்க்காணும் அடிகளாகும்:

"நாவிற்கு ருசியாய்ச் சமைத்திடனும் மச்சானே – இன்று
நாலு பேருக் களித்திடனும் மச்சானே"

4.3 நாட்டுநலன்

மலையகப் பாட்டாளிகள் உழைப்பொன்றே போதுமென எண்ணி வாழ்ந்ததனால் ஏனைய சுகங்களை விரும்பினாரல்லர். ஆங்கிலேய முதலாளிகள் இவர்களது உழைப்பில் நம்பிக்கை வைத்தனர். உழைப்புக்கு அழைப்புக் கொடுத்த கடல் கடந்த நாடுகளுக்கெல்லாம் ஓடோடிச் சென்று ஒப்பாரும் மிக்காரும் இன்றி உழைத்தமை யினாலேயே இதுகுறித்து,

(அ) *"ஒப்பில்லா துழைக்கும் வர்க்கம்"*

(ஆ) *"நாட்டுக்காய் உழைப்பதுதான் அவர்தம் வாழ்க்கை"*

எனும் பாடலடிகள் எழுந்தன.

4.4 நாட்டுவளம்

இத்தகைய தமிழர்தம் உழைப்பினால் எழுப்பப்பட்ட தேயிலைத் தோட்டங்களினால் நாட்டின் பொருள்வளம் செழுமை பெற்ற செய்தி,

"மலைநாட்டின் எழில்கூறும் தேயிலைத் தோட்டம் –தரும்
வளந்தானே இந்நாட்டின் குறையாத் தேட்டம்"

எனும் அடிகளிலே பொதிந்திருப்பதனைக் காணலாம்.

5. குடிமனைகள்

தமிழ்ப் பாட்டாளிகளின் உழைப்பால் குவித்துக் கொட்டப்பட்ட செல்வச் செழிப்பால் மாளிகைகளும் அடுக்கு வீடுகளும் முதலாளி வர்க்கத்தினரால் எழுப்பப்பட்டன. ஆயினும் தமிழ்த் தொழிலாளரின் வாழ்க்கையோ லயத்துக் காம்பறாக்களிலேயே அடங்கிக்கொண்டது. குடும்பத்தில் மூத்த வயோதிகரும், இளையோரும், சிறியோரும் அனைவரும் ஒரே லயத்து அறைகளிலேயே வாழ்க்கை நடாத்தினர். அந்த லயன்கள்கூடப் பழங்காலச் சின்னங்களாகவே விளங்கின. வசதியான குடிமனைகள் இன்றி இருள்மண்டிய லயத்து அறைகளிலேயே வாழவேண்டிய சூழலே தொடர்கதையாயிற்று. இதனை,

(அ) *"பத்தடி லயத்திலில்*
பாட்டன் பூட்டன் வாழ்வும்"

(ஆ) *"நிலையான பழங்கால லயன்கள்"*

"இருட்டிலே மிதக்கின்ற
இலயத்தினது அறைகளே"

என்னும் அடிகளில் காணலாம். பருவத் தங்கையும், மாலைசூடி வந்த மணமங்கையும் ஒரே லயத்து அறையில் உறங்கவேண்டிய வசதியும் வழியுமற்ற யதார்த்த வாழ்க்கையைக் கவிஞர் பாடியுள்ளனர்.

6. தொழில்முறை

6.1 கவ்வாத்து மலைகளும், கொழுந்து மலைகளும் ஆண் பெண் தொழிலாளர்களுக்கான தொழிலை அளித்துவந்தன. மலையகக் கவிதைகளிலே,

(அ) *"வெற்றில் தொழில் செய்வார்"*

(ஆ) *"கொழுந்துதனைக் கொய்வார்"*

எனக் குறிப்பிடப்படும் பெற்றோர்களுக்குத் தமது கல்வியைப் புறக்கணித்து உதவி நல்கும் சிறார்கள் குறித்தும், இன்னலும் இடரும் மலிந்து தொடரும் தொழில் வாழ்க்கைமுறை குறித்தும் நிறைந்த தகவல்களை மலையகக் கவிதைகள் தருகின்றன.

6.2 லயத்துப் பையன்கள்

பெற்றோரின் தொழிற்களத்திற்குத் தேநீரும் ரொட்டியும் தூக்கிவரும் சிறுவர்கள், பெற்றோர்களின் உழைப்புக்கு உதவி செய்து "தம் கல்வியை மறந்த வருங்காலப் பிரஜைகள்" என வருணிக்கப் படுகின்றனர்.

6.3 வாத்தியார்

சிறுவர்களுக்குக் கல்வி புகட்டும் ஆசிரியர் எண்ணற்ற மாணவர்களுக்கு ஏணியாகவும் தோணியாகவும் வாழ்ந்து வருபவர். ஏணியில் ஏறியவர்களும், தோணியில் தொற்றியவர்களும் எங்கேயோ உயர்ந்து ஏகிவிட அதற்குக் காலான அந்த ஆசிரியரின் வாழ்க்கையோ அணுவும் அசையவில்லை. அவ்வாறான அவலநிலையை ,

(அ) *"ஏணியில் ஏறியோர் எங்கே ?*
தோணியில் தொற்றியோர் எங்கே?"

(ஆ) *"ஆனால்*
அந்த வாத்தியார் என்றும் இங்கே"

என முடித்துரைக்கின்றது கவிதை.

6.4 உழைப்புக் கடுமை

"உழைக்கத் தெரிந்த மக்கள் உயரத் தெரியாத மக்கள்" எனக் கவிதைக்குரியவர்களாகிய மலையகப் பாட்டாளிகள் கடும் உழைப்பில் வல்லவராய் விளங்கினர். அதிகாலையில் எழுப்பப்பட்ட சங்கொலி தொழிற்கடமையினைத் தொழிலாளர்களுக்கு நினைவூட்டியது. காற்று, மழை, வெய்யிலெல்லாம் உறவாகக் கொண்ட மலையகத் தமிழர் சொரிகின்ற வியர்வையே தேயிலையின் சாயமாய்ப் போற்றப்படுகின்றது. இயற்கையின் தாக்கம் ஒருபுறம்; இரத்தம் உறிஞ்சும் அட்டைகள் மறுபுறம். இவை தமிழ் உழைப்பாளிகளின் வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்து நின்றமைக்கான சான்றுகளாய்ப் பின்வரும் பாடலடிகளைக் காணலாம்:

(அ) *"சங்கினொலி செவிப்பறையில் வந்தே தட்டும் – உடன்*
பாட்டாளி நெஞ்சில்தொழில் எண்ணம் மூட்டும்."

(ஆ) *"அங்கத்தெழும் வியர்வையது மண்ணிற் சேரும் – இங்கு*
அதுவேதான் தேயிலையின் சாய மாகும்"

(இ) *"அட்டை கடித்துறிஞ்ச அவதிகள் பட்டிடுவார்"*

(ஈ) *"கொட்டும் மழையினிலும் கோடையின் வெயிலினிலும்*
சொட்டும் வியர்த்துளிகள் சொரிந்துவிழ உழைத்திடுவார்.'

7. ஏழ்மைநிலை

கடுமையான உழைப்பினை நல்கினாலும் போதிய வருமானம் இன்றி வறுமையில் உழல்பவராகவே மலையகத் தமிழரின் வாழ்க்கை அமைந்திருந்தது. தைப் பொங்கல் போன்ற திருநாள்களில் தமது ஏழ்மை நிலையினை எண்ணி இரங்குவா ராயினர். "சொத்துசுகம் தேட நாங்க வரலிங்க" என்று தம் கள்ளங் கபடமற்ற உள்ளத்தை வெளிப்படுத்தும் தொழிலாளர், தைத் திருநாளை வரவேற்கின்றபோது,

(அ) *"வறுமையை விரட்டுதற்கு*
வரையிலே பொங்கல் வைப்போம்"

(ஆ) "தட்டுப்படா வாழ்வைத்
தந்தருளாய் தைப்பாவாய்"

என்று வேண்டுதல் செய்து,

(அ) "பட்டினிக்குப் பாகுபாடு ஏதுங்க – கொஞ்சம்
பழங்கஞ்சி இருந்தாலும் ஊத்துங்க"

(ஆ) "புத்தாடை புதுமோஸ்தர் ஏதுங்க – நாங்க
புதுகோட்டுப் பழகாத ஆளுங்க"

எனத் தம் ஏழ்மை நிலையினையும் எளிய வாழ்க்கையினையும் சுட்டியுரைக்கின்றனர்.

8. கல்விப் புறக்கணிப்பு

8.1 தேயிலைத் தோட்டத்தொழில் வளர்ச்சிக்குத் தொழிலாளர்கள் சக்தி இன்றியமையாததாய் இருந்ததுடன் தொழில் ஆற்றவும் கல்வி அத்தியாவசியமானதாய் அமையவில்லை. இத் தன்மையால் ஆட்சி யாளரும், ஆங்கிலேயே முதலாளிகளும், அதிகாரிகளும், தமிழ்த் தொழிலாள சமுதாயத்திற்குத் தக்க கல்வி வசதியை ஏற்படுத்திக் கொடுக்க முன்வரவில்லை.[8] நாட்டில் ஏனைய சமூகத்தவருக்குக் கிடைத்த இந்த உயர்கல்வியை மட்டுமன்றி ஐந்தாம் வகுப்பு வரையிலுமான மட்டுப்படுத்தப்பட்ட வசதியையும் தொழிலாளர்கள் உதாசீனம் செய்தனர். இதனைச் சில கவிஞர் இடித்துரைத்தலைப் பின்வரும் சான்றடிகளிற் காணலாம்.

(அ) "ஏட்டை எடுத்திடுக்கி
ஏழைமகன் பள்ளி சென்றால்
தீட்டாத ஐந்தோடு
தீர்ந்துவிடும் அவன்கல்வி"

(ஆ) "நாட்டில் யாவருக்கும்
நாநயக்கும் உயர்கல்வி"

(இ) "உழைப்பொன்றே போதும் என்று எண்ணாதீர்
உதாசீனம் செய்யாதீர் கல்விதன்னை"

8.2 சமூக விரோத சக்திகள்கூடக் கல்வி போன்ற சலுகைகள் பெற்று வாழ்வதைப் "பூட்டுடைக்கும் பேர்களுக்கும் பூரிக்கும் சலுகை யெல்லாம்" என்று பாடி மனக்குமுறலைக் கொட்டுகின்றார் ஒரு கவிஞர்.

9. சுரண்டல் வாழ்க்கை

கல்வித் துறையுடன் தொழில்துறையிலும் தமிழ்ப் பாட்டாளிகள் சுரண்டப்படலாயினர். மேலதிகாரிகளினதும், மேற்பார்வையாளரதும் தயவில் அவர்கள் தங்கவேண்டியதாயிற்று. பல வழிகளிலும் ஆண்பெண் தொழிலாளர்கள் ஒடுக்கப்படலாயினர். இதற்கான சான்றுகளே இப் பாடல்கள்:

(அ) *"கங்காணி கணக்கப்புள்ளை*
தொரைமார்கட்கு
அடிவருடியும்
ஆளாக்கப்படும்
லயத்துப் பையன்கள்"

(ஆ) *"உதிரத்தே உறிஞ்சிறவன்*
ஒன்னே என்னே
ஒடுக்கிறாண்டி"

10. தொழிற்சங்கத் தலைவர்கள்

தொழிலாளரின் நலனுக்காய் உருவாக்கப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களின் வாய்ச்சொல் வீச்சை நம்பிக் காலங் கடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் தொழிலாளர் வாழ்ந்தனர். தலைமுறை தலைமுறையாய் உழைத்து வந்த வரலாற்றை உரத்த குரலில் எடுத்தியம்பும் தலைவர்களுக்கு மாலைசூடி வரவேற்கும் தொடர்கதையை எழுதிவரும் பரிதாப நிலையில் பட்டாளி மக்கள் காணப்பட்டனர்.

(அ) *"முன்னே பொறந்தவங்க*
முதுகொடிய ஒழைச்ச தெல்லாம்
ஒன்னொன்னா சொன்னவங்க
என்னபண்ணிக் கிழிச்சாங்க"

(ஆ) *"ஒலிபெருக்கி முன்னால்*
உரத்த குரல்கொடுக்கும்
ஒருசிலர் கழுத்துக்கு
மலர்தேடி அலைகின்றோம்"

அவர்தம் வாழ்க்கை வளம் காணவியலாது தத்தளித்ததையே மேலமைந்த இரு கவிதைகளும் வெளிப்படுத்துகின்றன.

11. சங்கங்களும் சங்கடங்களும்

11.1 அரசியற் கட்சிகள்போலத் தொழிற்சங்கங்களும் பலவேறு முளைத்தமை தொழிலாளரின் திரண்ட சக்தியைக் கூறுகளாக் கிற்று. அவர்தம் முன்னேற்றத்திற்குத் தடைக் கற்களாய்ச் சங்கங்கள் விளங்கி இடையூறுகளையும் இன்னலையும் அளித்ததை,

"சங்கங்கள் தொழிலுக்கு என்று வைத்து
சந்தாப் பணத்தையும் வசூலித்து
சங்கடங் களில்எமை மாட்டி வைத்து
சாகஸம் செய்யும் மனித ருண்டு"

எனப் பாடுகின்றார் ஒரு மலையகக் கவிஞர்.

11.2 பாட்டாளி தினம் 'மே' நாள்

பாட்டாளி விடுதலைக்காய் – உலகத் தொழிலாளர் ஒற்றுமைக்காய்– உருவான 'மே' தினத்தில் மலைநாட்டுப் பாட்டாளிகளோ நாலாறு கூறுகளாய் நாட்டி நிற்கும் பிரிவுகளை எண்ணி ஒற்றுமைக்கான குரல் கொடுக்கின்றார் ஒரு கவிஞர்.

"குழிதோண்டிப் புதைத்திடுவீர்
குன்றத்தில் பலசங்கம்
தொழிலாளி வழிநடத்தத்
தோற்றுவிப்பீர் ஒருசங்கம்"

11.3 தொழிலாளரின் கல்வியறிவின்மை ஒற்றுமையின்மை நிலைகளைப் பயன்படுத்தித் தமது வாழ்க்கையை வளப்படுத்தி நன்மை கண்டவர் பலராவர். இதையுணர்ந்த கவியொருவர் உண்மை நிலையை,

"பிழைத்துப் போனார் யார்யாரோ – உடல்
இளைத்து ஒய்ந்தோம் நாமிங்கு
நரிபோல் தந்திரம் செய்தெமக்குள்
நன்மைகள் கண்டோரும் சிலருண்டு"

என எடுத்தியம்புகின்றார்.

12. பொதுநலப் பணியாளர்

தமிழ்த் தோட்டத் தொழிலாளர் தமது உரிமைகளுக்கும் மேம்பாட்டிற்குமாய்ப் பணியாற்றி வந்த தலைவர்களுக்குத் தக்க மதிப்பளித்துப் போற்றத் தவறவில்லை. அரசியல் துறையிலும் பண்பாட்டுத்

துறையிலும் இக் காலகட்டத்தில் அரும்பணியாற்றிய இரு தலைவர்கள் மறைந்தபோது பாடப்பட்ட இரங்கற் கவிதைகள் இதனை எடுத்தியம்புவன வாகும்.

12.1 அன்னை இந்திரா

இலங்கை இந்தியத் தமிழ்த் தோட்டத் தொழிலாளரின் எதிர்கால நலன் குறித்து அரசியல் அரங்கில் பாரதப் பிரதமர் இந்திரகாந்தி காட்டிய அக்கறை அகிலம் அறிந்ததொன்றாகும். அடுக்கடுக்காய் ஏற்பட்ட அடக்குமுறைகளுக்கும் வன்செயல்களுக்கும் உயிரிழப்புகளுக்கும் மத்தியில் தீர்க்கப்பட வேண்டியதாய குடியுரிமை போன்ற பல பிரச்சினைகள் இருந்த ஒரு காலகட்டத்தில் ஏற்பட்ட அவரின் மறைவு பாட்டாளிகளின் உள்ளத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திற்று. நம்பிக்கை நட்சத்திரமாய்த் திகழ்ந்த அவர் மறைந்தபோது ஆருயிர் அன்னையை இழந்த அருமைச் சேய்களாய்த் தவித்தனர் தமிழ்த் தோட்டத் தொழிலாளர். இதனை அறைகூவுகின்றது பின்வரும் மலையகப் பாடல்:

"அடடா! நாம் என்செய்வோம் தாயி ழந்தோம்
அமைதியெனும் தீபவொளி அணைந்த தந்தோ!"

12:2 பண்பாட்டுக் காவலன் – வேலுப்பிள்ளை

அரசியல்வாதி, தொழிற்சங்கவாதி, நாவலாசிரியர், கவிஞர், இலக்கிய விமர்சகர், பன்மொழியாளர் எனப் பலநாட்டு அறிஞர் பெருமக்களாலும் போற்றப்பட்டவர் மக்கள் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளை ஆவார். மலையக மக்களின் பாராளுமன்ற உறுப்பினராகவும் தொழிற் சங்கவாதியாகவும் ஆற்றிய பணியிலும் மலையகப் பாட்டாளி மக்களின் பண்பாட்டைப் பேணிக் காக்க அரும்பணி ஆற்றிய மக்கள் படைப் பாளியாகவே அவர் சிறப்பாகப் போற்றப்பட்டார். (பார்க்க பின்னிணைப்பு – ஆ)

அரசியல் செல்வாக்குடன் பெரும் தொழிற்சங்கங்களை நிருவகித்து வந்தவர்கள்கூடத் தமிழ்ப் பண்பாட்டுத் துறையினை ஒதுக்கி நிற்கையில்[9], மலையகப் பண்பாட்டுக் காவலனாய் மறைந்த வேலுப்பிள்ளை ஆற்றிய பணியின் நினைவுச் சின்னங்களே பின் வரும் கவிதைகள்:

(அ) *"கலையின்பம் தருகின்ற களிப்பை யல்லால்*
கருதிடார் இன்பமென்று மற்றெ தையும்

துன்பமுறு தொழிலாளர் சமூகத் திற்குத்
துணைபுரியத் துடிதுடித்த தூய நெஞ்சன்"

(ஆ) *"கலைகளைப் பாடிவந்த கருத்தான மூத்த பிள்ளை"*

"பழுதில்லாப் பாவலனே பண்பாட்டுக் காவலனே"

"தேயிலைச் செடியனைத்தும் சி.வி.யின் கதைகள் கூறும்"

அவரின் ஆங்கிலக் கவிதைகள் வங்கக் கவிஞர் இரவீந்திரநாத் தாகூரின் கவிதைகளுடன் ஒப்பிடக்கூடியவை எனும் சிறப்புக்குரியன.[10]

13. தமிழர் துயர்

தைப்பொங்கல், தீபாவளி போன்ற திருநாள்களை மலையகப் பாட்டாளி மக்கள் வறுமை வாழ்க்கைக்கும், பெரும்பான்மையினரான சிங்கள மக்களும், அரசாங்கப் படையினரும், கூலிப் பட்டாளமும் மேற்கொண்ட தாக்குதல், கோரக் கொலை, கற்பழிப்பு, எரியூட்டல், குடிமனை, கல்விக்கூடம், நூலகங்கள், கோயில் தலங்கள் அழிப்பு[11] போன்றவற்றிற்கு மத்தியிலும் எளிய முறையிலாயினும் கொண்டாடி வந்தனர். இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளில் பல்லாயிரம் ஆண்டுகளாய் வாழ்ந்து வந்த, தாம் அகதியாய்த் தஞ்சமெனப் புகுந்த சகோதரத் தமிழ்க்குடி மக்களும் தமது தாயக மண்ணிலேயே அகதிகளாய் ஆன நிலை கண்டு தீபத் திருநாளன்று இதயத் துயரைப் பின்வரும் அடிகளிலே வெளிப்படுத்துகின்றார் ஒரு கவிஞர்:

"தீபமெங்கும் ஏற்றிடனும் மச்சானே – நம்மைத்
தீமை விட்டகன்றிடனும் மச்சானே.
தூபமெங்கும் காட்டிடனும் மச்சானே – தமிழர்
துயரமினி யழிந்திடனும் மச்சானே."

14. புதுயுக நம்பிக்கை

மலையகப் பாட்டாளி மக்கள் ஒடுக்கப்பட்டுவரும் நிலைக்கு மூடிவைக் காணக் காலம் காலமாகக் காத்திருந்தனர். உண்மையை உணர்த்துதற்கும், உரிமைகள் கிடைப்பதற்கும், பகையை விரட்டுகின்ற தொழிலாளர் அணி திரள வேண்டுமெனச் சிலர் சிந்தித்தினர். கூறுபட நிற்கும் தொழிலாளர் சமுதாயம் ஒற்றுமைப்பட்டுத் திரண்ட சக்தியை விடிவுக்கும் விடுதலைக்கு மான செயலுக்குப் பயன்படுத்தினால் உறுதியாய் இலக்கினை அடையலாமென இடித்துரைக்கும் அவசியம் கவிஞர்களுக்கு ஏற்பட்டதைப் பின்வரும் பாடலடிகளிற் காணலாம்:

(அ) "பலமுங்கள் கையினைப்பில்
படைத்திடுவீர் புதுயுகத்தை"

(ஆ) " செல்வானம் மொளைச்சிருச்சி
காரியத்தில் கண்ணு வச்சா
கதைமுடியும் நிச்சயமா"

15. புதிய வரலாறு

அண்மைக்கால அடக்குமுறை வரலாற்றுச் சம்பவங்கள் மலையகத் தமிழரின் அவலநிலையப் போக்கிப் புதிய வரலாறு படைக்கும் நிலைக்கு மாற்றியமைத்துள்ளது. நிலைகெட்டு நெடுங்காலம் உழலும் நிலை மாற்றப்பட வேண்டியதை உணர்ந்தனர். பல நூற்றாண்டு கடந்தும் சீலம் கெட வாழ்ந்து சிறுமையுற்றுத் தாழ்ந்த நிலையினைப் போக்கத் துடித்தனர். இதுகாறும் போற்றிவந்த பொறுமையைப் போக்கிப் புதிய வரலாறு படைக்கப் பொங்கி எழும் எண்ணம் மலையகப் பாட்டாளி இளைஞர் மத்தியில் எழுந்தமைக்கு,

"எங்கள் பொறுமைக்கும் எல்லையுண்டு
எரிமலை வெடித்தால் தொல்லையுண்டு
சங்கம் முழங்கடா சகோதரனே – நாமோர்
சரித்திரம் புதிதாய் எழுதிடவே."

எனும் மலையகக் கவிதை தக்க சான்றாகும். இனிப் படைக்கப் பெறும் மலையகக் கவிதைகள், மலரும் புதிய வரலாற்றின் சான்றுப் பெட்டகங்களாய் அமையுமென்பதில் ஐயமில்லை.

அடிக்குறிப்புகள்

1. (அ) பாரதியார் கவிதைகள், கரும்புத் தோட்டத்திலே பூம்புகார் பிரசுரம், சென்னை, 1984, ப. 89

   (ஆ) காசி ஆனந்தன், தமிழச்சி, காசி ஆனந்தன் கவிதைகள், உணர்ச்சிக் கவிஞர் பதிப்பகம், மதுரை, 1982, ப. 26

2. (அ) நவசோதி, க. இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளரின் வரலாற்றினை ஆய்ந்து தேர்வதற்குரிய மூலாதாரமாக நாட்டுப்பாடல்கள் வகிக்கும் இடம்

இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு நிகழ்ச்சிகள் , மூன்றாம் தொகுதி. (பதிப்பாசிரியர் வி.ஐ. சுப்பிரமணியம்) உலகத் தமிழாராய்ச்சி மன்றம், சென்னை, பக். 122–29

(ஆ) பெருமாள், க., உழைப்போர் இலக்கியம், மேலது, பக்.130–39

3. நவசோதி, க. தோட்டத் தொழிலாளர் வரலாறு கூறும் மலையகத் தனிப் பாடல்கள், நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சிகள் முதலாம் தொகுதி, (பதிப்பாசிரியர் – கு. வித்தியானந்தன்), அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளை, யாழ்ப்பாணம், 1977, பக். 217–27

4. (அ) அரு கோபாலன். நாங்கள் யார்? (இலங்கை மலையகத் தமிழர் கண்ணீர்க் கதை) தேனிசை செல்லப்பா குழுவினர் வில்லுப்பாட்டு, எழுகதிர், சென்னை, 1986

(ஆ) ஈழத்தில் பெரியசாமி என்பவர் பல்லாண்டு காலம் தேயிலையின் கதையாய் இதனைப் பாடி வருவார்.

5. Velupillai, C.V., ***Born to Labour,*** Colombo, 1970

6. Martin Wickramasinghe (in Born to Labour) "Estate Labourers are kith and kin of all Common People who treat Ceylon as their Mother Country"

7. இரத்தினசபாபதி,இ., இலங்கையில் ஈழவர் இன்னல் உருப்பெற்ற விதம், மாணவர் இளைஞர் பொது மன்றம், (Guys), 1986, ப. 12

"பத்து இலட்சம் மக்களது வாக்குரிமையைப் பறித்த குடியுரிமைச் சட்டத்தாற் செய்யமுடியாததை, அரசின் குடியேற்றச் சட்டங்கள் ஏற்படுத்தத் தவறியதை, அரசின் தரப்படுத்தல் திட்டம் ஏற்படுத்தியது. அது இளைஞர்களைத் தனிநாடு கேட்கும் நிலைக்குத் தள்ளியது. சீரமைதிக் குலைவுடைய தமிழர் வரலாற்றில் ஒரு புதிய யுகம் ஏற்பட்டது."

8. அய்யாத்துரை, டி. (தலைவர்,தொழிலாளர் தேசிய சங்கம்) மலையகப் பாடசாலைகளுக்கு விமோசனம் எப்போது? வீரகேசரி, பெப்ருவரி, 1985

"தோட்டப் பகுதிகளில் ஆரம்பத்தில் நிறுவப்பட்ட பாடசாலைகள் தோட்டத் தொழில் வளர்ச்சியை மையமாகக் கொண்டு செயற்பட்டதேயன்றி மலையகப் பிள்ளைகளின் அறிவு, ஆற்றல், சிந்தனை வளர்ச்சியடைய வேண்டுமென்ற பெரும் நோக்குடன் கல்வி புகட்டப்படவில்லை."

9. (அ) தொண்டமான்,எஸ் (தலைவர், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்) வீரகேசரி, பெப்ருவரி, 1987
"நாம் சமூக கலாசாரப் பிரச்சினைகளில் இக் காரணங் களால் ஈடுபடாமல் ஒதுங்கிப் போக வேண்டிய நிலையும் ஏற்பட்டது."

(ஆ) Devarajah. P. (Director, Congress of Labour Foundation) ***Identity of Plantation Tamils***

Logos, Vol. 23; No. 3 Colombo. 1984. p. 38

"Long years of neglect has kept this community backward educationally, culturally and socially, upward mobility has been extremely slow."

10. கந்தையா, பி.வி.,"தோட்டத் தொழிலாளர் வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டியவர் எஸ்.வி."வீரகேசரி, நவ. 1985

11. ***Plight of Hindus in Lanka,*** Proteg, Madras - 1996. Appendix II and III pp. 17-19

பின்னிணைப்பு – அ

சான்றுக் கவிதைகள்

1. அமைதியெனும் தீபம் அணைந்த தந்தோ (சி.அழகுப்பிள்ளை –1984)
2. எமது வாழ்வு (ஏ.எஸ். நஜீதீன் – 1986)
3. ஓ மலையகமே (மலைத்தம்பி –1986)
4. கோலப் புதுவாழ்வு கொடுப்பாயே (சி.அழகுப்பிள்ளை –1985)
5. சொத்து சுகம் தேட நாங்க வரலிங்க (கண்டி எஸ். மனோகரன் – 1983)
6. தம்பிகளே கேளுங்கள் (மு. முனியாண்டி – 1986)

7. தைப்பொங்கல் வருக (சி. அழகுப்பிள்ளை –1986)
8. தோட்டத்து வாழ்க்கை (குறிஞ்சிவாணன் – 1986)
9. நன்மைகளே இலங்கட்டும் (எஸ்.எஸ். காந்தி – 1983)
10. படைத்திடுவீர் புதுயுகத்தை (சி. அழகுப்பிள்ளை –1986)
11. பழுதிலாப் பாவலனே பண்பாட்டுக் காவலனே (எம்.எஸ். நாதன் – 1984)
12. புதிய சரித்திரம் படைப்போம் (கே. ராம்ஜி உலகநாதம் –1982)
13. புதுப் பொலிவு தாராய் (எஸ்.எஸ். காந்தி – 1984)
14. புது வாழ்வு மலர்ந்திடனும் மச்சானே (எட்டியாந்தோட்டை எஸ். ரெங்கையா – 1986)
15. பூப்பறிப்போம் (மல்லிகை சி. குமார் – 1986)
16. பொங்கல் (மலைத்தம்பி – 1986)
17. மலையகக் கவிமணி (சி. அழகுப்பிள்ளை, 1984)
18. லயத்துக்குப் போவோம் (கோளவரம்பன் – 1986)
19. லயத்துச் சிறார்கள் (திருமலை இரா. செல்வம் –1986)
20. வழியிறக்கும் கோகிலமே (எம்.எஸ். நாதன் – 1987)
21. வாத்தியின் வாழ்வு (ஏ.எஸ். நஜீதீன் – 1986)

பின்னிணைப்பு – ஆ

பண்பாட்டுக் காவலர் வேலுப்பிள்ளையின் ஆக்கங்கள்:

இனிப்படமாட்டேன் (நாவல்)
தேயிலைத் தோட்டத்திலே (கவிதை–சக்தி பாலையா தமிழாக்கம்)
மலைநாட்டு மக்கள் பாடல்கள் (நாட்டுப்பாடல் தொகுப்பு)
வீடற்றவன் (நாவல்)

Born to Labour (Sketches)
In Ceylon's Tea Garden (Poem)
Vismajini (Play)
Way Farer (Prose - Poems)

உசாத்துணை (REFERENCES)

இரத்தினசபாபதி, இ., இலங்கையில் ஈழவர் இன்னல் உருப்பெற்ற விதம், நாங்கள் வெளியீடு, மாணவர் இளைஞர் பொது மன்றம், (GUYS) சென்னை, 1986

இராஜநாயகம், என்., மலையகத் தமிழரின் பிரச்சினைகளும் தீர்வுகளும், கலை கலாசார அரசியல் வட்டக் கருத்தரங்கு. இலண்டன், 1986

உமாமகேஸ்வரன், மலையக மக்கள்பற்றி விடுதலைக்குரல், குரல் 1;இல 4. மே. ஜெர்மனி, ஏப்பிரல், 1984

எரிமலை, மலையக மாணவர் இளைஞர் முன்னணி மலை.1. குமுறல் 4. அக்டோ. 1986

சந்திரசேகரம், சோ. கல்வி விரிவுரையாளர், கொழும்புப் பல்கலைக்கழகம்

தேசிய கல்வி வளர்ச்சி – தோட்டத் தொழிலாளர்களுக்கு அதன் பலாபலன் ஏன் கிட்டவில்லை, வீரகேசரி, கொழும்பு, 1985

தமிழ்க்குடிமகன், பேராசிரியர், செந்நீர்க்கடலில் ஈழத் தமிழன், அறிவொளி பதிப்பகம், மதுரை, 1983

நாடற்றவரானோம், 1948 நவம்பர் 15–ல். ஈழப்புரட்சி அமைப்பு, சென்னை, 1985

மலையக மக்கள், ஈழம் மலர் 1. இதழ் 12.சென்னை, 1986

மோகன்ராஜ், க., இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம் (மலையக மக்களின் வரலாறு) ஈழ ஆய்வு நிறுவனம், வடக்கு வெம்பிளி (U.K.), 1984

A Plea for Justice for the Plantation Workers of Indian Origin in Sri Lanka

Sri Lanka Coordinating Centre Kassel, Federal Republic of Germany, July, 1981

Chandrakasan, S.C. ***Genocide Against Tamils in Sri Lanka***, Carpa Bulletin (Committee Against Repression in the Pacific and Asia) No.16, Australia, Feb. 1984

Plight of Hindus in Sri Lanka, Proteg, Madras, Mar.1986

Ponnambalam, Satchi, *Sri Lanka :* ***National Conflict and the Tamil Liberation Struggle***, Tamil Information Centre, Surrey, U.K. 1983

Rajaratnam, A., ***The History of Thamiraparani***, Chelvanayagam Publication, Madras

Senewiratne, Brain. ***Disenfranchisement of the Plantation Tamils, Human Rights Violations in Sri Lanka***, Melborune, Australia, 1986, pp. 88-94

Sri Lanka's Ethnic Problem, Logos, Vol 23, No.3, Colombo, Oct. 1984

Sri Lanka: ***July 1983 Violence Against Indian Tamils***, Tamil Information Centre, Madras

Thornton and Niththynathan. ***Sri Lanka: Island of Terror An Indictment***, Eelam Research Organisation, Middlessex, U.K. 1984

14

இக்காலக் கவிதைகளில் புதுப்பார்வை

மு. தமிழ்க்குடிமகன்

சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், சமய இலக்கியம் என வகைமை அடிப்படையில் இலக்கியங்களைப் பிரித்துள்ளோம். அச்சுக்கலை தந்த அளவிடற்கரிய வாய்ப்பால் இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களை இக்கால இலக்கியம் (Modern Literature) என்றே பெயர் கொடுத்து அழைக்கிறோம். அதுவும் உரைநடை ஆட்சி வளர்ந்துவிட்ட பிறகு, செய்தித்தாள்களும், நூல் வெளியீடுகளும் உரைநடை வளர்ச்சியில் இடையறாது ஈடுபட்டு வரும்போது உரைநடைக்கு முதன்மை கிட்டிவிட்டது என்பது மறுக்க முடியாத உண்மை. கவிதை வடிவில் இருந்த காப்பியம் உரைநடை வடிவம் பெறும்போது புதினம் ஆகிவிடுகிறது; கவிதை வடிவில் அமைந்த குறுங்காப்பியம் உரைநடையில் சிறுகதையாகிவிடுகிறது.

'வடிவம்' என்ற ஒன்றை இழந்தவுடனேயே எந்தப் படைப்பையும் உரைநடை தாங்கிப் பிடித்துப் புதுப்பெயரையும் கொடுத்துவிடுகிறது.

நாடகங்கள் மட்டும் இதில் ஒரு விதிவிலக்கைப் பெறுகின்றன. கவிதையில் இருந்தாலும், உரைநடையில் இருந்தாலும் 'நாடகம்' தன் பெயரை இழக்கவே இல்லை.

எனவே நாடகம், புதினம், சிறுகதை மட்டுமன்றி உரைநடையும் இக்கால இலக்கியத்தின் வகைகளாகிவிட்டது. இதற்கு மேலும் –

இத்தனை அளவு உரைநடையின் செல்வாக்கு மிகுந்து நிற்கும் நிலையிலும் – கவிதைமட்டும் கவிதையாகவே நிற்கிறது. தொல்காப்பியர் காலத்திலும், அதற்கு முன்பும், பின்பு இந்த இருபதாம் நூற்றாண்டு வரையிலும் கவிதை கவிதையாகவே நிற்கிறது. கவிதை வேண்டுமானால் 'வடிவம்' அற்ற காரணத்தால் 'புதுக்கவிதை' எனும் புதுப்பெயரைத் தாங்குகிறது என்றாலும் கவிதை கவிதைதான்.

உரைநடையின் செல்வாக்கு ஒங்கி வளர்ந்துவிட்டதாலும் கட்டுரை, புதினம், சிறுகதை, உரைநடை, நாடகம் எனப் பலவகையிலும் உரைநடை விரிந்து பரந்து செல்வதனாலும் கவிதையின் ஆட்சி குறைந்துவிட்டதோ என்று எண்ணத் தோன்றும். மேற்போக்காக அப்படித் தோன்றினாலும் ஆய்வு நோக்கில் ஒன்றை உறுதிப்படுத்தலாம். கவிதை இலக்கியமும் உரைநடை இலக்கியத்தைப் போலவே வளர்ந்து வந்திருக்கிறது. வேகமாகவும், விறுவிறுப்பாகவும், 'மரபு – புதுமை' என்ற போட்டியுணர்வோடும் வளர்ந்துள்ளது எனலாம். எனினும் இதை மற்றொருகால் ஆராயலாம்.

வளர்ந்து வந்துள்ள கவிதை இலக்கியங்களை ஊன்றிப் படிக்கும்போது பல உண்மைகள் புலப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் ஆழமான கருத்துகளும் நுட்பமான உணர்வுகளும் புலப்படுத்தப்பட்டன. பக்தி இலக்கியங்களில் இறைவனைப் போற்றுதல்செய்து வானளாவப் புகழ்ந்து, நெகிழ்ந்து நெக்குருகும் போக்கு இருந்தது.

சிற்றிலக்கியங்களில் புரவலர் மனநிலைக்கும் விருப்புக்கும் ஏற்பக் கருத்தோட்டங்களில் மாறுதல் ஏற்பட்டது. அதனால் 'உலா'ப் போன்ற தன்மைக் குறைவுகளும் ஏற்பட்டன. 'கூளப்ப நாயக்கன் காத'லில் இருப்பது போன்ற புலனுணர்ச்சித் தூண்டல்களும் தோன்றின. எனினும் சந்த இனிமை கொடிகட்டிப் பறந்தது. 'விருத்தம்' பாடும் வாய்ப்பும், பிற்காலத்தில் சிந்து, பண்ணத்தி முதலியன பாடும் வாய்ப்பும் பெருகிய பிறகு 'ஓசை' உயர்ந்து நின்றது. காதுக்கு இனிமை சேர்க்கும் வண்ணம் கவிதை வளர்ந்தது.

இலக்கியக் கூறுகளான வடிவம், உணர்ச்சி, கற்பனை ஆகியவை மெருகுகொண்டு திகழ்ந்தன. கருத்தோட்டம் மட்டும் சற்றுத் தடுமாறிவருவதுபோல் ஒரு தோற்றம் உள்ளது. வீரத்தையும் காதலையும் பாடும் சங்க இலக்கியங்கள் உண்மையான காதலையும் வீரத்தையும்

பாடின. இக்காலத்தில் காதல் உணர்வுமட்டும் மாறாமல் வருகிறது; கவிதையிலும் அழகுற ஆட்சி செய்கிறது. ஆனால் வீரமோ – வாய் வீரமாக – வெற்றுணர்ச்சி ஆரவாரமாகத்தான் இருக்கிறது.

எதிரிகளை எச்சில் துப்பியே விரட்டிவிடுவோம் என்றும், மூச்சுவிட்டே எதிரிகளைத் திணற அடித்துவிடுவோம் என்றும் வீரவரிகள் வெளிவருகின்றன.

நடப்பியலைப் பார்க்கும் எவனுக்கும் இந்த வெற்று உணர்ச்சியும் வேகச் சொற்களும் கேலியாகப் படுகின்றன. அதனால் கவிஞன் கூற விரும்பும் கருத்தும் வலிமையிழந்து போகின்றது. வரவர நம் கவிஞர் களிடத்தில் மரபுணர்ச்சிகள் குன்றி, நல்ல தமிழ்நடையும் இன்றிச் சொற்களைத் திரட்டியளிக்கும் போக்கு வளர்ந்துவிட்டது என்றுகூடச் சொல்லலாம். பொருந்தாக் கூற்றுகளும், வெற்றுச் சொல்லாட்சிகளும், ஆழமற்ற கருத்துப் போக்குகளும் மிகுந்துவிட்டன என்றே சொல்லலாம்.

பண்டைப் புலவர்களைப்போல் இலக்கியத்தைக் கலைநோக்கிலும், வாழ்வியல் நோக்கிலும் பார்க்காமல் இக்காலத்தில் வணிக நோக்கிலும், உலகியல் நோக்கிலும் படைப்பதால் ஏற்படும் விளைவு இது. அரசியல் சார்புகள் ஊடாடுவதாலும் பலரது கவிதைகளில் உண்மை செத்துவிடுகிறது; அவர்கள் கூறும் கருத்தை ஒரு காலகட்டத்தில் அவர்களே தவறு என்று தள்ளும் நிலை ஏற்படுகிறது.

என்றாலும் தரமான கவிஞர்கள் தோன்றாமல் இல்லை; தரமும், நயமும், நிலைபேறும் படைத்துக் காலங்கடந்தும் வாழும் கவிதைக் கூறுகள் இல்லாமல் இல்லை. குப்பைகளைக் குவித்துப்போட்டு அதற்குள் மணிகளைத் தேட வேண்டியிருக்கிறதே என்ற இடர்ப்பாடு இருந்தாலும் மணிமணியான கவிதை வரிகளும், நயம் காட்டும் சொல்லாட்சிகளும், வளங்குறையாக் கருத்துச் செல்வமும் இன்றும் மேலோங்கி நிற்கின்றன.

இக்காலக் கவிஞர்களில் சிலர் புதிய சொல்லாட்சிகளைக் கையாள்வதிலும், புதிய பார்வைகளை நமக்கு எடுத்துச் சொல்லி வியப்பூட்டுவதிலும் முன்நிற்கின்றனர்.

❋❋❋

நமக்கு ஏற்கெனவே தெரிந்த நிகழ்ச்சி. நாம் பல நூறு முறை படித்த வரிகள் – பாடமாகச் சொல்லிக் கொடுக்கப்பட்ட – உரை விளக்கம் செய்யப்பட்டு அனைவர்க்கும் நன்கு அறிமுகப்படுத்தப்பட்ட வரிகள்.

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் அந்த வரிகளை இக்காலக் கவிஞர் ஒருவர் புதுக்கோணத்தில் சிந்தித்துப் பார்க்கிறார். நாம் இதுவரையிலும் கொண்டிருந்த கருத்தே மாறிப் போகிறது. "ஏன் இப்படி யிருக்கக் கூடாது?" என்று அவர் கேட்கும்போது நாமும் ஒரு நொடி திகைத்து நிற்கிறோம். அவர் கூறுவதிலும் உண்மை இருக்கலாம் என்று எண்ணத் தொடங்குகிறோம்.

கண்ணகியே மதுரையை எரித்தாள் என்பது செய்தி. அவள் ஏவல் கேட்டு எரியங்கி வானவன் அச் செயலைச் செய்தான்.

"மாபத் தினிநின்னை மாணப் பிழைத்தநாள்
பாயெரி இந்தப் பதியூட்டப் பண்டேயோர்
ஏவ லுடையேனால் யார்பிழைப்பார் ஈங்கென்ன?"[1]

அவன் கேட்கிறான்.

"பார்ப்பார் அறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க"[2]

என்று கண்ணகி ஏவுகிறாள்.

இதில் எரிக்கப்படாமல் விதிவிலக்களிக்கப்பட்டோர் பட்டியலை மீண்டும் ஒருமுறை கூர்ந்து நோக்கினால் புறநானூற்றிலும் ஓர் இடத்தில் இத்தகைய விதிவிலக்குத் தரப்பட்டிருப்பதைக் காணலாம்.

"எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்"

என்று கூறி இயலாதோர் பலர்க்கு முன்னறிவிப்புச் செய்த சால்பு ஈண்டு எண்ணத்தக்கது.

இந்தச் சார்பின் அடிப்படையில்தான் இளங்கோவடிகளும் தீயினால் எரிக்கப்படாமல் காப்பாற்றப்படக் கூடியவர்கள் பட்டியலை வெளியிடுகிறார். தீ, 'தீத்திறத்தார் பக்கமே' சேர்கிறது.

இந்த அளவோடு நம் சிந்தனை நின்று போயிருந்தது. பன்னூறாண்டுகட்குப்பின் கவிஞர் தணிகைச்செல்வன் இந்த வரிக்குப் பொருள் விளக்கம் செய்கிறார்.

எரிக்கப்பட்ட தீத்திறத்தார் யார்? விதிவிலக்களிக்கப்பட்டோர் யார்? விதிவிலக்களிக்கப்பட்டோர் உயர்ந்த சாதிமக்கள்; எரிக்கப்பட்டவர்கள் ஏழை அரிசன மக்கள் என்கிறார் அவர்.

"கண்ணகியார் வீசிவிட்ட மதுரைத் தீயிலே – அன்று
கருகிப்போன மக்கள்எங்க ஜாதி மக்களே
கண்ணகிபோய் ஒசந்தஜாதி ஜனங்களை மட்டும் – அவ
காப்பாத்தினாள் பிறகுயாரு? நாங்கள்தான் மிச்சம்!"[3]

என்கிறார்.

இவ்வாறு சிலப்பதிகாரக் காலத்திலேயே தாங்கள் கொடுமைக் காளாக்கப்பட்டதாக அரிசனங்கள் நினைக்கிறார்களாம். தணிகைச் செல்வனை இப்படிக் கருதவைத்தது வெண்மணியாக இருக்கலாம்; இக்காலச் சமூகநிலையாக இருக்கலாம். அவர் கண்ணகியின் பார்வையில் போய் இப்படிப் பிழைகாண்பது சரியா இல்லையா என்பதை ஆராய்ச்சியாளர்கள் முடிவுகட்டலாம்.

ஆனால் இப்படியும் இக்காலக் கவிஞர்கள் பார்க்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டவே இதனைக் குறிப்பிட்டேன். அவர் மேற்காணுமாறு ஒரு பார்வையைச் செலுத்திவிட்டுத் தற்கால அரிசன மக்களின் மனக்குமுறலையும் காட்டிவிடுகிறார்.

"நொந்துநொந்து வெந்துவெந்து இன்று வரையில் – நாங்க
நூறுநூறு ஆண்டுகளாய் இந்தப் பூமியில்
சொந்தமென்று என்னகண்டோம் பசியைத் தவிர – எங்க
சொத்துஎன்று என்னகண்டோம் உசிரைத் தவிர?"[4]

வாழ்வின் அடிமட்டத்தில் உழல்கின்ற மக்கள் தங்கள் இழிநிலைக்கு யாரெல்லாம் காரணமானவர் என்று ஆழ்ந்து ஆராயும்போதும் அவர்களில் கண்ணகியும் ஒருவராக, முதல்வராக இருந்துள்ளாளே எனும் அளவுக்கு ஆராய்ச்சி நீள்கிறது. உண்மையில் கவிஞர் தணிகைச்செல்வனின் இந்தப் பார்வை முற்றிலும் புதியதுதான்.

சங்க இலக்கிய நடையிலிருந்து இக்காலக் கவிதைநடை பெருமளவுக்கு மாறிப் போய்விட்டது என்பது மறுக்க முடியாத உண்மை. சங்க இலக்கிய நடையில் எழுதினால் இக்காலத்தார்க்குப் புரியாது என்பதும், விரும்பிப் படிக்கமாட்டார்கள் என்பதும் ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மையே. ஆனாலும் நல்ல இலக்கியப் புலமையும் கவிதைச் சொல்லாட்சித் திறனும் உடைய சிறந்த பாவலர்கள் இக்காலத்திலும் உள்ளனர். அவர்களால் செம்மாந்த நடையிலும் எழுத முடியும்; தெளிவான கருத்துடனும் தேர்ந்த சொல்லாட்சியுடனும் நல்ல இலக்கியத்தைப் படைக்க முடியும் என்பதற்குப் பெருஞ்சித்திரன் வழங்கும் 'மகபுகு வஞ்சி' ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

'மகபுகு வஞ்சி' எனும் இவ் விலக்கியம் புதிதாகத் திருமணஞ் செய்விக்கப்பெற்று, கொண்டான் வீடு குடிபுகும் தலைமகள் ஒருத்திக்கு, அவள் மேற்கொள்ளவிருக்கும் வாழ்வியலுக்குத் துணையாக, நினைவில் இறுத்திக்கொள்ள வேண்டிய அறவுரைகளை முறையாக எடுத்துச் சொல்லும் முறையில் அமைந்தது.[5] இதனை அகவியல், புறவியல், பொதுவியல் என்று பிரித்து வழங்கியுள்ளார்.

இதோ இதில் முதல் பாடல்:

"அயன்மனைபுகு அதிர்சிலம்படிஇ!
பயன்சுவைமொழி, பணிவுறழ்நடை,
மீத்துயர்பொறை, பிழைமறப்பளி,
காத்துயர்நிறை, கரைசேர்களி,
கொளீஇ,
ஒருநாள் ஒருநாள் உறுகொண் கனொடு
திருநாள் காண்குவை தலைநாட் டகவே!'[6]

ஆழ்ந்து படிப்பார்க்கு இதில் உள்ள அரும்பொருளும் நயமும் விளங்காமற் போகா.

இதில் முதலடி விளி; இறுதி இரண்டடிகள் பயன்கூறும் முடி; இடை மூன்றடிகளும் அறவுரை.

இந்தக் கோணத்தில் பாடப்பட்டு வெளிவந்த நூல் இக்காலத்தில் இதுவொன்றே. இதில் மற்றொரு புதுமையும் உண்டு. ஆசிரியப்பா அறுசீர், எண்சீர் விருத்தங்களிலும் சந்தப்பாக்களிலும்தான் இக்காலக் கவிதைகள் அமைகின்றன.

ஆசிரியம், வெண்பா பெருவழக்காகவும் கலி (கலிவிருத்தம் மட்டும்) அருகியும் வழங்கி வருகின்றன. ஆனால் வஞ்சிப் பாவில் யாரும் பாடுவதில்லை. இந் நிலையில், இக்காலக் கவிதைகளில் குறளடி வஞ்சிப் பாவால் அமைந்த ஒரே நூல் இதுதான்.

இவரே எளிய சொற்களால் நெஞ்சைத் தொடும் கவிதைகளைப் பாடவல்லவர் என்பதற்குப் பல நூல்கள் சான்றாக உள்ளன.

எடுத்துக்காட்டும் ஒன்று தரலாம்:

"களிப்பாள்என்று எதிர்பார்த்தேன் காணேன்; இன்பக்
காதலெனும் உணர்வுவெள்ளத்து அவளும் வந்து
குளிப்பாள்என்று எதிர்பார்த்தேன்; குறியும் காணேன்;
கூடலுக்கு முன்னூடல் காட்டி முத்தம்
அளிப்பாள்என்று எதிர்பார்த்தேன்; அதுவும் காணேன்;
அறுகுநுனி விளக்கொளிக்கும் உடலைக் காட்டாது
ஒளிப்பாள்என்று எதிர்பார்த்தேன்; ஒன்றும் காணேன்;
ஒடிந்துவிட்ட மலர்க்கொடியாய்க் கால்வீழ்ந் தாளே."[7]

முதலிரவில் தலைவனது எதிர்பார்ப்பு எப்படி இடிந்து தரைமட்டமாகிறது என்பதை விளக்கும் பாடல் இது.

இப்படி, வல்லமையிருந்தும் வஞ்சிப்பாவைத் தேர்ந்தெடுத்து வாழ்வியல் நூல் படைத்தது ஒரு புதுமைதான்.

தமிழ் இலக்கியத்தில் கையறுநிலை என்பது நெருக்கமாக நமக்கு அறிமுகமாகி நிற்கும் ஒன்று. பாரியின் பிரிவால் கபிலர் சிந்திய கண்ணீர், இன்னும் ஒல்லையூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன் மறைவு குறித்துக் குடவாயிற் கீரத்தனார் குறிப்பிடும் பிரிவுத் துன்பம் ஆகியவை தமிழறிந்தாரிடைத் தெரிந்த செய்திகள்.

"வல்வேல் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே"

என்று அவர் வேதனைப்பட்டதுபோலவே இக்காலக் கவிஞரும் தம் வேதனையை வெளிப்படுத்துகிறார். ஆனால் ஒரு வேறுபட்ட பார்வையில், வியப்புக்குரிய முறையில் கவிதை அமைகிறது.

சிவகங்கைச் சண்முக மன்னர் மறைந்தபோது கவிஞர் மீரா பாடிய கவிதை இத்தகைய புதுப்பார்வை யுடையது.

சாவையே சாடிப் பாடும் அவரது போக்கினை உரையால் விளக்க வேண்டியதில்லை.

"இருந்தாலும் இதுகொடுமை! கொடுமை சாவே!
இரக்கமற்ற செய்கைஉன் செய்கை!" [8]

என்று 'சாவை' நேரடியாகச் சாடுகிறார்.

மறைந்துபோன மன்னரை ஒரு மரமாக உருவகித்து அவர் பாடுவது அழகாக உள்ளது.

"பட்டமரம் வெட்டுண்டால் பரவா யில்லை;
பாதத்தில் தைக்கின்ற முள்வ ளர்க்கும்
நெட்டைமரம் வீழ்ந்திட்டால் கவலை யில்லை;
நிழல்நாடி நிற்போர்க்கு மயக்கம் நல்கும்
கெட்டமரம் – நச்சுமரம் நிலத்தில் வெட்டிக்
கிடந்திட்டால் வருத்தமில்லை; ஆனால் உன்கை
தொட்டமரம் நல்லமரம் – கனிப முத்துத்
தொங்கிக்கொண் டிருந்தமரம் வீழ்த்த லாமா?" [9]

என்று சாவைப் பார்த்துக் கேட்கிறார்.

சாவு தந்த துன்ப விளைவை ஒரு பாட்டில் குறிப்பிடுகிறார்:

"கல்யாண மாலைகட்டித் தந்தோன் இன்று
கல்லறைக்கு மாலைகட்டக் கலங்கு கின்றான்;
கல்யாணப் பாட்டிசைத்த பாணன் இன்று
கல்லறைக்குப் பக்கத்தில் புலம்பு கின்றான்;
கல்யாணப் படமெடுத்த கலைஞன் இன்று
கல்லறையை நோக்கிக்கை நடுங்கு கின்றான்;
கல்யாண ஊர்வலத்தைக் கண்டா ரெல்லாம்
கண்ணீர்ஊர் வலங்காண வைத்தாய் சாவே!" [10]

சாவு வருவதைத் தடுக்க முடியாதென்பது கவிஞர்க்கும் தெரியும். அதனால் முதலில் சாவைச் சாடிய அவர், அதன் வரவு எப்படியிருந்தால் நல்லது என்று அறிவுரை கூறத் தொடங்கிவிடுகிறார்:

"நீவருதல் கூடாதென் றுரைக்க வில்லை;
நேர்மையுடன் மெதுவாக மந்தை விட்டே
ஆவருதல் போல்வந்தால் வரவேற் போமே
அநியாய மாய்நகரை அழிக்கப் பாயும்
தீவருதல் போல்வந்தாய்; இரக்க மின்றிச்
சீறிவரும் புயல்போல வந்தாய் சாவே!
நீவருதல் முதுமையிலே என்றால் நன்று;
நெருங்கிவந்தாய் இளமையிலே; நன்றா கூறு?" [11]

இப்படியொரு புதுக்கோணத்தில் சாவைப் பார்த்துப் பாடிக் 'கையறு நிலை' இலக்கியத்துக்கு ஒரு புதுச்செல்வத்தை நெஞ்சைத் தொடும் நடையில் படைத்துத் தந்துள்ளார் கவிஞர் மீரா.

இக்காலக் கவிதைகளில் பாடுபொருள்கள் பழையனவற்றிலிருந்து பெருமளவுக்கு மாறியுள்ளன. சமுதாயத்தின் அடிமட்டத்தில் காணப்படும் எதனையும் பாடுபொருளாக்கிப் பாடுவதில் கவிஞர்கள் தயக்கம் காட்டவில்லை; அதை ஒரு பெருமையாகக்கூடக் கருதுகிறார்கள்; பழைய கவிஞர்கள் பார்க்கத் தவறிய ஒன்றைத் தாங்கள் பார்த்து, கவிதை வார்த்து, உலகிற்கு அளித்திருப்பதாகக் கர்வம்கூடக் கொள்கிறார்கள். கவிஞர் வைரமுத்து கல்லூரி மாணவனாக இருந்தபோதே இந்தப் பார்வையில்தான் இயங்கியிருக்கிறார் எனலாம்.

'உலகத் தொழுநோயாளர்களே! ஒன்றுபடுங்கள்' என்பது அவரது கவிதைத் தலைப்பு. இது சென்னையிலிருந்து அரசியல் ஊர்வலங்களைக் கண்டதால் ஏற்பட்ட தாக்குரவு (influence).

தொழுநோயாளர்களை யாரும் தொடுவதில்லை; உலக அரங்கில் பெயர்பெற்ற சமூகத் தொண்டர்களை இங்கு ஒப்பிடவேண்டா.

பொதுவாக நாம் – சராசரி மனிதர்கள் – தொழுநோயாளிகளைக் கண்டதும் முகஞ்சுளிக்கிறோம். பிறகு தொடுவதெப்படி? ஆனால் கவிஞர் வைரமுத்து கொஞ்சமும் தயக்கமின்றிச் சாரமுள்ள சொற்களால் (சொற்களால் மட்டும்தான்) தொழுநோயாளியை வாரி அணைக்கிறார். உரையெழுதாமல் நேரடியாக அவர் கவிதையையே பார்க்கலாம்.

"தன்மேனிக் குள்ளேயே உணர்வுகளின் கல்லறையைச்
சரியாகக் கட்டிவிட்ட இறுமாப்பு

இன்றுவரை வெளிவந்த இறைவனது கவித்தொகுப்பில்
எவருக்கும் பிடிக்காத புதுயாப்பு" [12]

என்று அருமையாகப் படம்பிடிக்கும் அவர் தொழுநோயின் கொடுமை கண்டு புலம்புகிறார்.

'மனிதஇனக் கூட்டுக்குள் மனிதனையே பிரித்துவைத்து
மறைக்கிறதே இதன்பேர்தான் தொழுநோயா?
பனிநனைத்த இரவிருட்டைப் பங்கிட்டுக் கடன்வாங்கும்
பாழ்நாற்றச் சாக்கடைகள் தொழும்நோயா?" [13]

நெஞ்சில் நிற்கும் சந்தமும், நினைவில் நிற்கும் வடிவமும், சிந்தையைக் கிளறும் கருத்தும் இவரது கவிதையில் மிளிர்ந்து நிற்கின்றன.

இவ்வாறு வடிவத்திலும், ஓசை இனிமையிலும், கருத்திலும் புதுப்புது பார்வையுடன் பல கவிதைகள் வெளிவந்துள்ளன. எடுத்துக்காட்டாக இரண்டொன்றைத் தந்தாலும் இக்காலக் கவிஞர்கள் எந்த வகையிலும் தாழ்ந்து போய்விடவில்லை என்பதை மார்தட்டிச் சொல்லும் அளவுக்கு நல்ல கவிதைகள் பல வெளிவந்துள்ளன என்று உறுதியாகக் கூறலாம்.

இந்தப் பார்வை வளரட்டும்!

தரமான கவிதைகளை மறைத்து நிற்கும் போலிப் போர்வைகள் விலகட்டும்!

அடிக்குறிப்புகள்

1. சிலம்பு – வஞ்சின மாலை, 50–52
2. ஷெ 53–55
3. தணிகைச்செல்வன் கவிதைகள், ப.69
4. ஷெ ப.71
5. பெருஞ்சித்திரன், மகபுகுவஞ்சி, ப.9
6. ஷெ ப.13
7. பெருஞ்சித்திரன், பாவியக்கொத்து, ப.17
8. மீ. இராசேந்திரன் (தொ.ஆ.), புகழ்மண்டபம், ப.87
9. ஷெ ப.90
10. ஷெ ப.93
11. ஷெ ப. 1
12. இரா. வைரமுத்து, வைகறை மேகங்கள், ப.78
13. ஷெ ப.79

15

வள்ளுவர் வகுத்த உளவியல்

சி. கே. தாசன்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழ்மண்ணில் தோன்றி மறைந்த வள்ளுவன் தந்த குறளின் கருத்தாழத்தையும் சொல் வன்மையையும், பொருட்செறிவையும் ஆராய்ந்து முடித்த தமிழ்ச் சான்றோர் எண்ணற்றோர். இதனையெல்லாம் விடுத்துக் காலத்தால் அழியாத உலகப் பொதுமறையாம் குறளை விஞ்ஞானக் கண்ணோட்டத்தோடு நோக்கி, ஓர் உளவியல் பேராசிரியர் என்ற முறையில், இன்றைய உளவியல் நெறிமுறைகளை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வள்ளுவர் தாம் படைத்த குறளில் ஆங்காங்கே கையாண்டிருக்கும் முறை எள்ளளவும் இன்றைய உளவியல் வல்லுநர் களின் கருத்தாராய்வுக்குக் குறைந்ததில்லை என்ற திட்டமான முடிவுக்கு வந்து, "வள்ளுவர் வகுத்த உளவியல்" என்ற இந்தப் புதுமையான படைப்பினைப் படைக்க அவாக் கொண்டேன். அந்த முயற்சியில் ஓரளவு வெற்றியும் கண்டு, என்றும் தன் இளமை குன்றாக் கன்னித் தமிழுக்கு என் காணிக்கையாக இதனை இங்குச் செலுத்த முன்வந்துள்ளேன்.

குறள் என்ற அந்த ஆழ்கடலின் அடியில் படிந்து கிடக்கும் ஆயிரத்து மு ந்நூற்று முப்பது முத்துகளில் சில முத்துகளைக் கடுமையான தேர்வுக்குப் பின் எடுத்து "வள்ளுவர் வகுத்த உளவியல்" என்ற எனது மாலையில் கோத்துள்ளேன். தமிழர்தம் முன்னேற்றத்தில்தான் தமிழின் மறுமலர்ச்சி உள்ளது என்பது என்னுடைய தாழ்மையான அசைக்க

முடியாத கருத்தாகும். ``கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தகுடி'' என்று பழம் பெருமையைப் பேசுவதை விடுத்து, நம் முன்னேற்றத்திற்குத் தேவையான பல விஞ்ஞான நூல்களை இயற்றவும், மொழிபெயர்க்கவும் தமிழ் அறிஞர்கள் முன்வர வேண்டும் என்பதே இதன் அடிப்படை நோக்கமுமாகும்.

வள்ளுவர் தீட்டிய 1330 குறள்களிலும் என்னை மிகவும் கவர்ந்த குறள், விருந்தோம்பல் என்ற அதிகாரத்தின்கீழ் வரும்,

"மோப்பக் குழையு மனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

என்ற குறளாகும்.

இக் குறளை உளவியல் வாயிலாக நோக்கும்போது இன்றைய உளவியல் வல்லுநர்களின் ஆராய்ச்சியில் உட்பட்டிருக்கும் "முகத் தோற்றத்தின் மூலம் ஒருவனது மனக்கிளர்ச்சியை அறியும் முறை" என்ற அடிப்படைத் தத்துவம் நமக்குப் புலனாகிறது. இதனையே உளவியல் வல்லுநர்கள் ஆங்கிலத்தில் 'Judgement of emotions through facial expressions' என்று கூறுகின்றனர்.

இதற்கான ஆராய்ச்சியில் "ஒருதிறம்பட்ட நடிகரைப் பலவிதமான மனக்கிளர்ச்சியை வெளிப்படுத்த வைத்து அதனைப் புகைப்படாக்கிப் பல இளைஞர்களிடம் காண்பித்து அவர்களின் திறமையை ஆராய்கின்றனர். இஃது இளைஞர்களுக்குப் பிற்காலத்தில் ஒருவரின் முகத்தோற்றத்தை வைத்து அவர்களது மனநிலையை அறிந்து, அதற்கேற்ப அவர்களிடம் பழக ஏதுவாகும்" என்று உளவியல் வல்லுநர் கருதுகின்றனர். அது மட்டுமல்லாது விருந்தினரை எவ்வாறு வரவேற்க வேண்டும், எவ்வாறு வரவேற்கக்கூடாது என்ற சமூகப் பண்பாடு அல்லது 'Social Etiquette' யையும் வள்ளுவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிறந்ததொரு உவமான உவமேயத்துடன் விளக்கிச் சென்று உள்ளாரென்றால் அது மிகையாகாது.

மற்றும் இல்லறவியல் என்ற அதிகாரத்தின்கீழ் வரும்,

"அன்பு மறனு முடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனு மது"

என்ற குறளும், இன்சொல் என்ற அதிகாரத்தின்கீழ் வரும்,

"இனிய உளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

என்ற குறளும், ஆழமான உளவியல் தத்துவத்தின் அடிப்படையில் வடிக்கப்பட்டனவாம்.

உதாரணமாக அமெரிக்க தேசத்து உளவியல் வல்லுநர்கள் நடத்திய ஓர் ஆராய்ச்சியில், கணக்கற்ற குற்றங்களையும் கொலை களையும் செய்து, தூக்குக் கயிற்றை முத்தமிடக் காத்திருக்கும் இளைஞர்களின் கடந்தகால வாழ்க்கையை (Case History and Biographical method) ஆராய்ந்தால் அவர்களது குழந்தைப் பருவம் மிக்க வேதனை தரக்கூடிய ஒன்றாக அமைந்துள்ளதைக் காணலாம். இன்சொல் என்றால் என்னவென்று அறியாது, கடுஞ்சொற்களையே உதிர்க்கும் பெற்றோர்களை இவர்கள் பெற்றுள்ளார்கள் என்பதைத் தெளிவுபடுத்தி யுள்ளனர். இவ்வாறு சிறு வயதில் கடுஞ்சொற்களையே கேட்டு மனம் நொந்துபோன குழந்தைகள் வாலிப வயதை அடையும்போது சமூகத்தில் உள்ள மற்றவர்களைத் தண்டித்து அதன் மூலம் ஒருவகையான இன்பத்தைப் பெறுகின்றனர் என்றும், சமூகத்தில் செய்யப்படும் ஒரு சிறு தவற்றுக்குக்கூடக் கடுமையான தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்ற மனப்பாங்கை வளர்த்துக் கொள்கின்றனர் என்றும் இந்த உளவியல் வல்லுநர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். வள்ளுவரின் அடக்கமுடைமை என்ற அதிகாரத்தில் வரும்,

"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு"

என்ற குறளும் இதனையே சுட்டுகிறது.

பிரான் பெக் பெர்னர் என்ற உளவியல் வல்லுநர் தமது நீண்ட கால ஆராய்ச்சிக்குப்பிறகு ஒரு சமுதாயத்தில் நடுத்தர வகுப்பினரைவிடக் கீழ்த்தர வகுப்பினர் குற்றங்களை அதிகம் புரியக் காரணம், அவர்கள் சிறு வயதில் தம் பெற்றோர்களிடமிருந்து பெறும் கடுமையான தண்டனையும் கடுஞ்சொற்களுமே என்கின்றார்.

உளவியலின் அடிப்படைத் தத்துவத்தை வள்ளுவர் மிக அழகாகவும், ஆழமாகவும் கையாண்டிருக்கும் மற்றொரு குறள் ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்தில் வரும்,

"உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்"

என்ற குறளாகும்.

இந்தக் குறளினுடைய கருத்து இன்றைய உளவியல் வல்லுநருக்கும் வியப்பைத் தரக்கூடியதாக உள்ளது.

இன்றைய விண்டக்றென், ஆன்போர்ன், நியூகோம்ப், ஸ்டேன்லிஸ்கேட்சர் போன்ற சமூக உளவியல் வல்லுநர்கள் நடத்திய பல ஆராய்ச்சிகளின்படி எவனொருவன் சமுதாயத்தில் வாழ்கின்ற மற்றவர்களின் எண்ணங்களையும் கொள்கைகளையும், புரிந்துகொண்டு அதன்படி தன் வாழ்க்கையை அமைத்துக்கொள்கிறானோ அவனே அந்தச் சமுதாயத்தில் புகழையும் பெருமையையும் அடைவதோடு அந்த இனத்தின் தலைவனாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகிறான் என்று நீண்டகால ஆராய்ச்சியின் முடிவில் தெளிவாக விளக்கியுள்ளனர்.

திருக்குறளை உளவியலோடு இணைக்கும் பாலமாக அமைந்த மற்றொரு சிறந்த குறள் 'நடுவு நிலைமை' என்ற அதிகாரத்தில் வரும்,

"தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

என்பதாம்.

இதனையே இன்றைய உளவியல் வல்லுநர்கள் "ஒரு குழந்தையின் மனப்பாங்கின் சிறப்பும், தாழ்வும் பெற்றோர்களின் குணப்பாங்கைப் பொறுத்தே அமைகின்றன" என்றனர். ஆங்கிலத்தில் "Characterisation through parental influence" என்கின்றனர். இதனையே சமூக உளவியல் வல்லுநர்கள் ஆங்கிலத்தில் 'identification' மற்றும் 'imitation' என்கின்றனர். ஒரு குழந்தை பிற்காலத்தில் தனக்காக அமைத்துக் கொள்ளப் போகும் வாழ்க்கை, அவனது பெற்றோர்களின் குணநலன், இளம்பருவத்தில் அவனது வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகள், சமுதாயத்தால் அவனுக்கு ஏற்படும் நன்மை தீமைகள் என்ற மூன்றின் அடிப்படையிலேயே அமைகின்றன என்பது உளவியல் வல்லுநர்களின் ஆழமான கருத்தாகும்.

போரை நம்பி அரசியல் நடத்தும் சில நாடுகள் மற்ற நாடுகளையும் அழிவுப்பாதையில் தள்ளத் துடிக்கின்றன. உளவியல் வல்லுநர்களின்

கருத்துப்படி மனிதனின் ஒருசார்பு தன்மையே (prejudice) போருக்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது. இந்த ஒருசார்பு தன்மையினால் ஈர்க்கப்படும் மனிதன் மடமை சாராத பகுத்தறிவுக்கு விலை பேசுகிறான்; இனத்தாலும், தோலின் அடிப்படை நிறத்தாலும், மதத்தாலும் மனித இனத்தை வேறுபடுத்துகிறான். இந்த நிலைமை மாற வேண்டுமானால் ஒவ்வொரு மனிதனும் தன்னை நடுநிலைமைப்படுத்தி, பகுத்தறிவின்வழி நின்று **கிரேக்க** நாட்டு அறிஞன் சாக்ரட்டீஸ் கூறியதுபோல் "ஏன்", "எதற்காக", "எப்படி" என்ற வினாக்களைத் தனக்குத் தானே தொடுத்து அதன்படி செயல்பட வேண்டும்.

இந்த அடிப்படை உளவியல் தத்துவத்தைத்தான் வள்ளுவர்,

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி"

என்று ஒன்றே முக்கால் அடிகளில் தமக்கே உரித்தான பாங்கில் ஒரு குறளை அமைத்துத் தந்து நமது உள்ளங்களில் நீங்க இடம்பெற்றார். "ஒருபாற் கோடாமை" என்று வள்ளுவர் குறிப்பிட்டது ஒருசார்பு தன்மையை விட்டு ஒழிக என்பதேயாம்.

இன்றைய உளவியல் வல்லுநர்களின் கருத்துப்படி ஒரு மனிதனின் மனநலத்தைக் (mental health) கெடுக்கக் கூடிய ஒன்று அவனது மனத்தில் ஏற்படக் கூடிய பொறாமையாகும். ஒரு மனிதனின் மனத்தைப் பொறாமை ஆட்கொள்ளும்போது, அவன் தனது பகுத்தறிவையும், நடுநிலைமையாக நின்று சிந்திக்கக் கூடிய திறனையும் இழக்கிறான்; தனது உடல்நலத்தையும் மனநலத்தையும் இழக்கின்றான். "பொறாமை என்பது, பொதுவாகப் பிரித்துப் பகிர்ந்துகொள்ள முடியாத ஒரு பொருளை இருவர் அடைய நினைக்கும்போது ஏற்படுகின்ற உணர்ச்சி" என்பது உளவியல் வல்லுநர்களின் கருத்தாகும். இதனையே வள்ளுவர் தமது அழுக்காறாமை என்ற அதிகாரத்தில்,

"அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்"

என்றார்.

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுத் துணையும் புகழ்"

என்ற குறளில் பேசப்படும் பொறுமை என்ற சிறப்பும்,

"கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்நோக்காச் சொல்"

என்ற குறளில் தொனிக்கும் புறங்கூறாமை என்ற ஈடிலாக் குணமும்,

"தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்"

என்ற குறளில் ஒலிக்கும் தெரிந்து தெளிதல் என்ற சிறப்பும்,

"உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்"

என்ற குறளில் வரும் ஊக்கமுடைமை என்ற குணமும் பீட்டர், ரிச்சர்ட் மேன்மார்கியூஸ், மெகார்க் போன்ற இன்றைய புகழ்பெற்ற சமூக உளவியல் வல்லுநர்களால் ஒரு தொண்டன் தன்மை தலைவன் நிலைக்கு உயர்த்திக்கொள்ள முக்கிய அம்சங்களாகக் கருதப்படுகின்றன.

குறளை உளவியலோடு இணைக்கும் முயற்சியின் சிகரமாக விளங்குவதுதான் பின்வரும் வள்ளுவரின் குறள்.

"வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு."

இங்கு வள்ளுவர் ஒருவனது உயர்ச்சி அவனது ஊக்கத்தின் அளவினதாகும் என்றார். அதை ஆங்கிலத்தில் 'Level of aspiration' என்கிறோம். இதனையே ஆப்ரகாம் மாஸ்லோவ் என்ற உளவியல் வல்லுநர் சிறுபிள்ளைப்பருவத்தில் இருக்கும் சில பள்ளிமாணவர்களின் ஊக்க நிலையை ஆராய்ந்து, அதன்பின் பல ஆண்டுகளுக்குப் பிறகு சமூக ஏணியில் அவர்களின் நிலைமையைக் கண்டு ஆராய்ந்தபோது சிறுவயதில் ஊக்கமுடைமையில் அதிக ஆர்வம் காட்டியவர்கள், தமது நடுத்தர வயதில் சிறந்ததொரு பதவியை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர் என்றும், ஊக்கமுடைமையில் ஆர்வம் காட்டாதவர்கள் சமுதாயத்தின் அடிமட்டத்தில் தள்ளப்பட்டிருந்தனர் என்றும் தெளிவுபட விளக்கியுள்ளார்.

'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"

என்று சொல்வன்மை என்ற அதிகாரத்தில் வள்ளுவர் ஒருவனது

சொல்வன்மையின் பெருமையைப்பற்றிப் பேசியது, மெக்கார்மிக் மற்றும் நியூகோம்ப் என்ற சமூக உளவியல் வல்லுநர்களின் கருத்துக்கு ஏற்ப உள்ளது. இந்த உளவியல் வல்லுநர்கள், நாவன்மை என்பது ஒரு தலைவனுக்கு மட்டுமல்லாது சமுதாயத்தில் மற்றவர்களைத் தன்பக்கம் ஈர்க்க நினைக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையான ஒன்று என்கின்றனர்.

குறிப்பறிதல் என்ற அதிகாரத்தில்,

"அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம்"

என்ற வள்ளுவரின் வரிகளும், மனித உணர்வுகளை முகத்தோற்றத்தின் மூலம் வெளிப்படுத்தும் தன்மை, ஒரு மனிதனின் வயதையும் வளர்ச்சியையும் பொறுத்து மாறுபடுகிறது என்ற உளவியல் வல்லுநர்களின் தெளிவுபட்ட கருத்தும் 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து விஞ்ஞானத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்திய மாமேதை சார்லஸ் டார்வின் கண்டுபிடிப்பும் ஏறக்குறைய ஒரே தன்மை உடையவையே.

இன்றைய உளவியல் வளர்ச்சிக்கும், ஆராய்ச்சிக்கும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இட்ட ஒரு வித்தாக விளங்குவது வள்ளுவரின்

"அற்றார் அழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"

என்ற இனிய குறளாகும்.

'உட்கோள்' அல்லது 'Motivation' என்பதை இன்றைய உளவியல் வல்லுநர்கள் இருபெரும் பிரிவாகப் பிரித்துப் பார்க்கின்றனர். முதல் வகை மனித உடலைச் சார்ந்தது. இதனை ஆங்கிலத்தில் 'Philological motivation' என்றும், உள்ளத்தைச் சார்ந்ததை 'Psycological motivation' என்றும் கூறுகின்றனர். உலகப் புகழ்பெற்ற உளவியல் வல்லுநரான ஆப்ரகாம் டாஸ்லோவ் பலவிதமான ஆராய்ச்சிகளுக்குப் பிறகு எடுத்த முடிவு இதுதான்.

உடல்வகையைச் சார்ந்த உட்கோள்களில் ஒரு மனிதன் நிறைவு பெற்றால்தான் உள்ளத்தைச் சார்ந்த உட்கோள்களில் கவனத்தைச் செலுத்த முடியும் என்பதுதான்.

உடல்வகையைச் சார்ந்த உட்கோள்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஒருவனது 'பசி'யேயாகும். அந்தப் பசியிலிருந்து அவன் விடுபட்டால் ஒழிய உள்ளத்தைச் சார்ந்த உட்கோள்களில் தன் கவனத்தைச் செலுத்த இயலாது. இதைத்தான் வள்ளுவர் "ஒரு மனிதன் தான் பாடுபட்டுத் தேடிய செல்வங்களைச் சேர்த்து வைக்கக் கூடிய சிறந்த இடம் மற்றவர்களின் கொடிய பசியை நீக்கிச் சிறந்த அறத்தைத் தேடிக் கொள்வதுதான்" என்றார் போலும்!

வள்ளுவரின் நட்பு என்ற அதிகாரத்தில் கீழ்வரும்,

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு"

என்ற குறளின் கருத்தும் நட்புத் தொடக்கத்தில் மொழி, நாடு, இனம், பொருளாதாரம் போன்றவற்றைச் சார்ந்திருந்தாலும் இறுதியில், ஒத்த மனப்பாங்கை உடையவர்களிடத்தில்தான் நிரந்தரமாக நிலைத்து நிற்கிறது என்று கூறிய சமூக உளவியல் வல்லுநர்களான [illegible] மற்றும் ஷாக்கின்ஸ் போன்றவர்களின் கருத்தும் ஒத்துப்போவதைக் காண்கிறோம்.

பழைமை என்ற அதிகாரத்தில்,

"பழைமை எனப்படு தியாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு"

என்ற வள்ளுவர் குறள் இன்றைய உளவியல் வல்லுநர்களின் "சமூக உடன்பாடு" என்ற கருத்தை ஒத்து, உயிருக்கு உயிராகப் பழகிய நண்பர்களின் சில உரிமைகளை, செயல்களைப் பெருந்தன்மையோடு ஒத்துப்போவதே மனித குணத்தில் சிறந்த ஒன்றாகும் என்பதேயாகும். இதனைக் கொள்கை அடிப்படையில் ஏற்றுக்கொள்ளாத மனிதன் அவனுடைய சமூகத்திலிருந்து விலகி வெகுதொலைவில் சென்று விடுகிறான் என்றும் உளவியல் ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

இகல் என்னும் அதிகாரத்தின்கீழ் வரும்,

"இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு நணித்து"

என்ற குறளும் இக் கருத்தையே தெளிவாக வெளிப்படுத்துகிறது.

இன்று இவ் வுலகில் வாழும் பல சமூக உளவியல் வல்லுநர்களின் கவனத்தை ஈர்த்திருப்பது மனப்பான்மை அல்லது உருவமைதியேயாகும். ஆங்கிலத்தில் 'attitude" என்று இதனைக் கூறுகிறோம். உருவமைதி என்பது ஒருவன் தனது எண்ணத்தை ஒரு செயல் மூலமோ மொழி மூலமோ அல்லது சைகை மூலமோ வெளிப்படுத்தல் என்பதே.

சமூக உளவியல் வல்லுநர்களின் கருத்தின்படி ஆறறிவு படைத்த மனிதன் சில சமயங்களில் சூழ்நிலையின் காரணமாகத் தன் மனத்தில் இருப்பதை மறைத்து அதற்கு நேர்மாறான தோற்றத்தையும் செயலையும் வெளிப்படுத்துகிறான் என்பதாம். இதனால் இவன் விலங்குகளிடமிருந்து மாறுபட்டு நிற்கிறான் என்றும் உளவியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

இதே கருத்தைத்தான் வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்,

"தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னார்
அழுதகண் ணீரு மனைத்து"

என்று மிக அழகாக விளக்கிச் சென்றுள்ளார்.

வணங்குகிற கைகளிலும், சிந்துகின்ற கண்ணீரிலும்கூடக் கொடிய ஆயுதங்கள் மறைந்திருக்கக்கூடும் என்பதே இதன் கருத்து.

"கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்"

என்று கள்ளுண்ணாமை என்ற அதிகாரத்தில் வள்ளுவர் செப்பியது – இன்று உலகம் முழுவதிலும் உள்ளது – உளவியல் வல்லுநர்களுக்கு ஓர் அறைகூவலாக அமைந்துள்ளது. இதைத்தான் ஆங்கிலத்தில் 'Alchoholism' என்றும், சமூக உளவியல் வல்லுநர்கள் 'Social evil' என்றும் அழைக்கின்றனர். ஒரு சமூகத்தில் உள்ளவர்களில் பெரும்பாலோர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகும்போது நாட்டின் முன்னேற்றம் தடைப்படுகிறது. மனிதன் தன் ஊக்கத்தை இழக்கிறான். போதைப் பொருள்மீது அவனுக்கு ஏற்படும் நாட்டத்தினால் தன் சுயமரியாதையையும் அவன் இழக்கத் தயங்குவதில்லை. எனவே அளவற்ற குடிப்பழக்கம் கொண்ட மனிதர்கள் உள்ள சமூகம் கலாசாரத்தையும் பண்பையும் இழந்த ஒரு சமுதாயமாகக் கருதப்படுகிறது. இதனையே உளவியல் வல்லுநர்கள் "சில கசப்பான உண்மைகளை ஏற்றுக்கொள்ள முடியாத அல்லது

ஏற்றுக்கொள்கின்ற அளவுக்கு மனப்பக்குவம் அடையாத மனிதர்களே செயற்கை முறையில் தனது மதியை மயக்கத்தக்க மதுவிற்கு விலைபோகின்றனர்" என்பர். இன்றைய உளவியல் வல்லுநர்கள் ஒரு மனிதனின் வளர்ச்சியிலேயே மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதுவது சமுதாயத்திற்குத் தக்க பண்பை வளர்த்துக்கொள்வது என்பதே. இதனைத்தான். ஆங்கிலத்தில் 'character formation' என்கின்றனர். இதில் ஒருவனது பெற்றோரும், மதம் மற்றும் சமுதாயத் தலைவர்களும், பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களும் முக்கியப் பங்கேற்கின்றனர். எந்த ஒரு மனிதனும் கொடிய மனிதனாகப் பிறப்பதில்லை; சமுதாயச் சூழ்நிலையின் காரணமாகக் கொடியவனாக மாற்றப்படுகிறான் என்பதே உளவியல் வல்லுநர்களின் அசைக்க முடியாத கருத்தாகும்.

இதனையே வள்ளுவர்,

"அரம்போலும் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்"

என்று ஒரு குறளாக வடித்துப் பண்பில்லா மனிதன் ஓரறிவுயிரான மரத்திற்கு ஒப்பானவன் என்றார்.

இன்று வல்லரசு நாடுதொட்டு வளர்ந்துவரும் நாடுவரை உளவியல் வல்லுநர்கள் முக்கியத்துவம் தருவது "குழும வளர்ச்சி" அல்லது 'Community Development' என்பதாகும். சமுதாயத்தையே தன்னுடைய இல்லமாகக் கருதக்கூடிய உள்ளப்போக்கை ஒவ்வொரு மனிதனும் வளர்த்துக்கொண்டால் ஒழிய, எந்த ஒரு சமுதாயமும் நாம் எதிர்பார்க்கின்ற அளவிற்கு முன்னேறுவது மிகக் கடினம் என்கின்றனர்.

இதனையே வள்ளுவர்,

"குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்"

என்று கூறிக் குடியை உயரச் செய்யும் முயற்சியில் இறங்கும் ஒருவனுக்குத் தெய்வம் ஆடையை வரிந்து கட்டிக்கொண்டு முன்வரும் என்றார்.

வள்ளுவரை ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த ஒரு சிறந்த ஒப்பற்ற உளவியல் வல்லுநர் என்று நான் கருதுவது வள்ளுவரின் பின்வரும் குறளை வைத்துத்தான்.

"இரந்து முயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

இது வள்ளுவரின் குறள்.

இரந்துதான் இந்தச் சமூகத்தில் வாழமுடியும் என்ற நிலை உண்மையில் இருக்குமேயானால் இவ் வுலகைப் படைத்த கொடியோன் இரப்போரைப் போன்றே எங்கும் திரிந்து கெடக்கடவன் என்றார்.

"அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்று தம்முடைய நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களில் அடங்கிய 1330 குறளுக்கும் இறைவனை முதன்மையாக வைத்து எழுதிய வள்ளுவரே சமுதாயத்தில் சிலர் இரந்துதான் வாழவேண்டும் என்ற நிலைவரின் இவ் வுலகைப் படைத்த இறைவனும் இரப்போரைப் போன்று தன் நிலை தாழ்ந்து அழியட்டும் என்றார்.

இதன் அடிப்படையில்தான் பாரதி,

"தனிஒருவனுக்கு உணவில்லை யெனில்
சகத்தினை அழித்திடுவோம்"

என்றார்.

இரந்து வாழ்தல் என்பது இன்றைய உளவியல் வல்லுநர்களின் கருத்துப்படி சமுதாயத்தின் அடிப்படைப் பெருமையை அழித்து மனிதர்களை விலங்கினத்தைவிடக் கேவலமாக ஆக்கிவிடும்; ஊக்க முடைமை என்ற மனிதனுக்கே உரித்தான தனிச்சிறப்பு இதனால் அழிந்து ஒழியும். இதனால்தான் இதனை "greatest social evil or menace" என்கின்றனர். தனி ஒரு மனிதனின் பெருமையை அழிப்பதோடு சமுதாய நிலையையும் சீர்குலைக்கும் சக்தியும் இதற்கு உண்டு என்கின்றனர். கடினமான உழைப்பின்றி உயிர்வாழ, இரத்தல் பெரும்பாலும் உதவுவதால் சிலர் இப் பழக்கத்திற்கு அடிமையாகின்றனர் என்றும், பெற்றோரின் செயல்விளைவினால் இது ஒரு குடும்பப் பழக்கமாக மாறுகிறது என்றும் உளவியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

ஒரு நாட்டில் ஒருசிலரே இப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருப்பினும், வெளிநாட்டவர்களிடையே ஒருவிதமான சமுதாயச் சார்புதன்மை வளர்ந்து அதன்பொருட்டு அந் நாட்டில் பெரும்பாலோர் இரந்தே வாழ்கின்றனர் என்ற எண்ணத்தை மற்றவர்களிடையே ஏற்படுத்தும் தன்மையுடையது என்றும், வளர்ந்து வரும் நாடுகள் இதன்பொருட்டு இத்தகைய சமுதாயச் சீர்கேட்டைக் களைவதில் மிக்க கவனத்தைச் செலுத்த வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

மக்கட்பேறு என்ற அதிகாரத்தில் வள்ளுவர் படைத்த,

"தந்தை மகற்காற்றும் நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்ற குறள் இன்றைய புகழ்பெற்ற சமூக உளவியல் வல்லுநர்களான மால்கம் ஷெல்பர், கார்பீல்ஸ்ட், கோல், நீல், பிரான்பென், பிரன்னர் போன்றவர்களின் கருத்தை ஒத்திருப்பதை உணருகிறோம். இதை உளவியல் வல்லுநர்களின் கருத்துப்படி நோக்கினால் இன்றைய சமுதாயத்தின் முன்னேற்றத்தில் நடுத்தர வகுப்பினரே பெரும் பங்கேற்கின்றனர் என்றும், இவர்களே கல்விக்குத் தமது வாழ்க்கையில் முக்கியத்துவம் அளிக்கின்றனர் என்றும், பெற்றோர்களின் ஆதரவே இதற்கு அடிப்படைக் காரணமாக அமைகிறது என்றும் மிகத் தெளிவாக ஆராய்ச்சிகள் மூலம் விளக்கியுள்ளனர்.

இன்றைய உளவியல் வல்லுநர்களின் ஆராய்ச்சி, கவனத்தைக் கவர்ந்து இருப்பது 'செய்தி இணைப்பு' அல்லது ஆங்கிலத்தில் "Communication" என்று நாம் அழைக்கும் துறையாகும். டேன்யல் காட்ஸ், ராபர்ட் கான் என்ற சமூக உளவியல் வல்லுநர்களின் கருத்துப்படி 'செய்தி இணைப்பே' சமுதாயத்தில் வாழும் மக்கள் இனத்தின் சமூகத் தொடர்பாட்டை இணைக்கும் பாலமாக அமைகிறது என்பதாகும்.

இந்தச் செய்தி இணைப்பில் மிக முக்கியப் பங்கேற்பது "செவிவழிச் செய்தி" அல்லது கேள்விச் செல்வம் என்பதாம். இந்தக் கேள்விச் செல்வம் என்பது கல்லாதவர்களுக்கும், குழந்தைகளுக்கும் சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் முக்கியத் தூண்டுகோலாகும் என்கின்றனர். இன்றைய உளவியல் வல்லுநர்களின் கருத்துப்படி சொல்வன்மை வாய்ந்த ஒருவரால் உதிர்க்கப்படும் கேள்விஞானம்,

மக்களின் மனத்தின் அடித்தளத்தில் ஊடுருவிப் பாய்ந்து எப்போதும் நிலைத்துநிற்கிறது என்கின்றனர்.

இவையெல்லாம் உணர்ந்துதானோ, என்னவோ வள்ளுவர் அன்றே,

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாம் தலை"

என்றார்.

நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களில் அடங்கிய ஆயிரத்து முந்நூற்று மூப்பது குறள்களில் ஒருசில குறள்களை எடுத்து ஆராயும் போதே இந்த அளவுக்கு உளவியல் தத்துவங்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தென்படுமேயானால், முழுக் குறளையும் எடுத்து ஆராய்ந்து எந்த அளவுக்கு வள்ளுவர் தம் குறளில் உளவியல் நெறிமுறைகளைக் கையாண்டு உள்ளார் என்பதை உற்றுநோக்கினால் வள்ளுவர் நமக்களித்த குறள் இலக்கியத்தாலும், இலக்கணத்தாலும் மட்டுமன்றி உளவியல் நெறிமுறைகளாலும் உலகப் பொதுமறை என்பதும், காலத்தால் அழியாத காவியம் என்பதும் நமக்குத் தெளிவாகப் புலப்படும்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ் ஆராய்ச்சி!!

16

THE THEME OF INJUSTICE IN PARADISE LOST AND CILAPPATIKARAM

R. POONGOTHAI

A comparative study of the theme of injustice in **Paradise Lost** and **Cilappatikāram** throws abundant light on the meaning of both the epics. In **Paradise Lost** it is an unconscious, though a major theme, Satan's complaint about God's injustice to him runs through the whole peom. In its repetitive pattern it becomes a theme. However, it initiates the action of the whole poem and hence a major theme. It is an equally important theme in **Cilappatikāram** also, as it leads the action of the poem to the crisis. Inspite of the wide difference in the nature of the subject-matter, there are a number of points of similarity as well as of dissimilarity.

The major points of contrast in the study of the theme are: the subject for treatment of the English epic is biblical and that of the Tamil poem, social; the atmosphere in which the action takes place is cosmic in **Paradise Lost**, and totally earthly in **Cilappatikāram**; and in the former, it is a false notion of Satan, *i.e.*, blinded by his pride, he considers God's declaration of Christ as His successor, unjustifiable; but in the latter, it is beyond doubt that the king Neḍuñcelian is wrong and he himself admits and regrets it, when he realises it. Nevertheless, the victims of injustice are Satan and Kaṇṇaki respectively.

The bare outline of the subject-matter of **Paradise Lost** treating the concerned theme may be presented as follows:

Satan has been enjoying the status of the archangel "great in power". He feels his pride `impair' when God one day suddenly declares Christ as His son, His heir, and Head to all the other angels. He, out of his wrath, wages

a war against God for the injustice done to him. He is defeated by Christ and is banished from Heaven along with his followers and put in Hell to dwell there in eternal pain for ever. To avenge God, Satan decides to seduce man whom God has created to be good and he is triumphant in his mission.

Even though the theme is a major one in Cilappatikāram, it is treated only in six cantos out of the thirty. Kōvalaṉ, having lost all his family-wealth and resolved to lead a virtuous life hereafter, comes to Madurai with Kaṇṇaki to earn back his riches with a pair of her anklets, the only remaining property. At Madurai, he approaches the royal goldsmith who had himself stolen the queen's anklet and who makes the king believe that Kōvalaṉ is the thief. The king, in his anxiety to pacify his queen who is angry with him, suspecting his interest in the dancing-girls, passes death-sentence on Kōvalaṉ without any enquiry. Thus Kōvalaṉ is murdered unjustly. The grief-stricken Kaṇṇaki rises in fury, goes to the court and proves her husband innocent. Realising his guilt, the king dies instantly and with him, the queen. Kaṇṇaki's rage does not get quenched until she avenges her beloved's murder by burning the whole city of Madurai.

In the scrutiny of the theme, an interesting comparision of Satan and Kaṇṇaki may be made. As stated earlier, they both are the victims of injustice. In Satan's case, even though originally he is self-centred, he becomes the leader of a group who think alike; his personal grievance gets converted into a public cause and he fights for his devotees singly; it is absolutely personal and selfish with Kaṇṇaki. She is raising her voice against injustice to her husband. Her selfish motive remains so till the end. In the conception and the execution of their desire for revenge, they act very differently from each other; Satan intrigues quite systematically and strategically, with all his companions, like an ablehanded general of an army: but Kaṇṇaki's is a sudden outburst of rage; she does not indulge in any conspiracy; she is reckless and wants to avenge her husband's death, and that is all her motive is. Even in the court she has no time to think and talk; she does not observe any courtly conventions in encountering the king; she just bursts out. Such a gulf of difference in the enforcement of their plans may be attributed to their awareness of what they are pursuing good or evil. Satan's first speech in Book I reveals that he is for evil and his attempt is against good;[2] but Kaṇṇaki has not the slightest doubt about the righteousness of her deed, even though it is against the king. So it is their moral despair and moral courage which persuade them to adopt foul and fair means respectively. Satan is intellectual and Kaṇṇaki is emotional and sentimental. She is more just than him.

Satan may also be compared with the king Neḍuñceḻiyaṉ. Both are the sufferers of retribution; Satan, for his revolt in Heaven, is thrown out into Hell, devoid of all his previous glory; Neḍuñceḻiyaṉ for his hasty judgement, faces sudden death. Satan is directly responsible for his action but the king is not. Satan has a definite motive behind his deed-to acquire power-and he is conscious of what he is doing; but the king has no motive as such; he does it in his anxiety about his consort, persuaded by the villainous goldsmith; or as Iḷaṅkō puts it, the actions of Kōvalaṉ's past life have become ripe and fate drives the king who has never swerved from virtue so far, to utter such a judgement.[3] However, both are admirable even in their misery; Satan unfolds enormous leadership qualities, undaunted spirit, immense optimism, will-power and so on; and the king perishing so instantly, sets right his wrong.

Analysing the parallel incident, first, God's proclamation of Christ as His successor, and Neḍuñceḻiyaṉ's hasty declaration of death-sentence on Kōvalaṉ. Both are done as an exercise of their regal power, without any consultation with other. It hurts Satan's pride, when he as one of the chief archangels in Heaven is bypassed and someone else suddenly getting declared as God's successor. Neḍuñceḻiyaṉ also does not conduct any probe into the charge, which is the duty of a king and which he never failed to do so far, before passing judgement. Here his reason is swayed by emotion. Thus both the actions of God and the Pāṇḍiyaṉ king initiate the action of the epic and the crisis respectively.

The sudden emergence of Christ and Kaṇṇaki as heroic figures are also identical. Both of them are not in the scene for long, so significantly as hereafter; Christ is sent by God to put down the rebellion of Satan and his followers; and Kaṇṇaki comes by herself to avenge the murder of her husband. To both this is the first opportunity to mainfest their potency. Both their endeavours are to set right the wrong. Both are successful in their attempts; Christ defeats Satan and Kaṇṇaki besides proving her husband innocent, avenges his murder.

The other parallel incidents that may be worth mentioning are: Satan's journey into chaos and Kaṇṇaki's going to the royal court; the villainy of Satan and the goldsmith; Satan and Kaṇṇaki mourning their loss; Satan's determination to be fully evil and Kaṇṇaki's becoming a fury and justifying her action of burning the city of Madurai and the element of incest and lust in Paradise Lost as illustrated is Satan's relationship with Sin and Death, and that of love and chastity as explicit in the relationship of king and the queen and also in Kaṇṇaki's character in Cilapatikāram.

Regardless of the nature of the subject-matter, the study of the theme of injustice in **Paradise Lost** and **Cilappatikāram** proves the presence of some common features in them. A major difference in the poet's treatment of the theme is, Milton's has religious, political and autobiographical overtones, but Iḷaṅkō's is purely ethical. While dealing with the theme, Milton voices forth his ideas as a politician and a democrat, against monarchy and in the contemporary politics, against Charles II. He was opposed to the divine right of kings. So he has made the best use of the chance of speaking through Satan in his poem. As for Ilanko, he believes in the divine right of kings but attacks whenever a king swerves from the righteous path. He even celebrates such benevolent kingship by portraying Neḍuñceliyaṉ commiting a wrong and paying for it with his life. Iḷaṅkō; also deals with the Hindu concept of the law of karma and its impact on life in his portrayal of Kōvalaṉ and Neḍuñceliyaṉ.

REFERENCES

1. Grierson, Herbert, J.C. Milton and Wordsworth: ***Poets and Prophets***; Cambridge, at the University Press, 1937,p.116
2. ***Paradise Lost***, I. 11. 159-60
3. Danielou, Alain. ***Shilappadikaram*** (The Ankle Bracelet) by Prince Ilango Adigal. London: George Allen & Unwin Ltd., 1967, p.109

BIBLIOGRAPHY

John Milton, ***Complete Poems and Major Prose***, Ed. Merritt Y. Hughes. New York: The Odessey Press, 1957

Grierson, Herbert, J.C. Milton and Wordsworth: ***Poets and Prophets***. Cambridge: At the University Press, 1937

Danielou, Alain, ***Shilappadikaram*** (The Ankle Bracelet) by Prince Ilango Adigal. London: George Allen & Unwin Ltd., 1967

17

ASPECTS OF SOCIOLOGY OF RELIGION OF THE TAMILS OF THE SANGAM AGE

R. SHANMUGAM

Modern Sociological Approach

MODERN sociological research has come to emphasise especially in the works of Durkheim, Gluck, Kirkpatrick, Hoult, Max Weber, Marett, Nottingham, Pittman, Simmel, Sorokin, Wach, Minger and others, that religion is the highest expression of the concept of social unity. The social modes of life, more than anything else, help us to apprehend the sources of religious life.[1]

In this paper State and Society are looked upon as the embodiment of the religious spirit. From this point of view, Georg Simmel's views are here elucidated and with the materials available, applied to the study of the Sangam Age.

Man's Relation with His Environment

From a sociological point of view, man's relation with his human environment becomes the centre to which the others are to be linked. There is the casual impulse and God is the first cause, demanded and created by this impulse. Religious sacrifice is an extension of the known necessity of paying a price for what is wanted an desired. Fear or terror or the feeling of aesthetic well being is an enlargement of the realization of the terrifying super-power of Nature.[2] God as creator, is often emphasised in **Paripāḍal**[3] and the casual impulse is beautifully brought out in the song of **Kaṇiyaṉ Pūṅkuṉṟaṉ** (கணியன் பூங்குன்றன்).[4] The

majestic and the terrific aspect of physical nature is also brought out in many **Sangam** poems, describing floods, lightning and thunder. The terms ***teyvam aṟcal*** and ***ēṉaṟu kaḍavuḷ*** (தெய்வம் அஞ்சலும் ஏனறு கடவுளும்) etc., are important.[5] The rising sun, the dark forests, the first showers, and the blooming ***kāntal*** (காந்தள்) inspire in us a sense of reverence, as may be seen from the opening lines of ***Tirumurukaṟṟuppaḍai*** (திருமுருகாற்றுப்படை).[6] Perhaps, some such aesthetic revelation is also responsible for the story of **Pāri** (பாரி) and the **mullai** (முல்லை) and for the of **Pēkaṉ** (பேகன்) and the **peacock.**[7]

Custom as a Form of Social Life

One of the most typical forms of social life securing the proper behaviour of its members, is custom. In the Sangam Age the state administered justice with the help of ***avaiyam*** (அவையம்), the assembly or court of law.[8] But all the same there was the code of conduct,[9] the etiquette of the warriors,[10] the conventions of the artists,[11] and other social practices which were guaranteed by "the curious and immediate supervision of neighbour by neighbour" called custom. All these standards were followed as a religious rite and any transgression was looked upon as a sin. It would be difficult to differentiate religion, law, and custom from each other in the Sangam Age - a state of affairs which continued in India until very recent times. This is not to deny the existence of humanitarian considerations irrespective of religious sanctions. "Āy (ஆய்) is not the trader in Dharma who does anything good for reaping it manifold in future birth", [12] "To give is good even though it were said that those who do so cannot obtain Heaven"[13] and other such statements in which the proper righteous conduct is recommended and followed, even if one were to be punished in hell, testify to this.

Religion Leading to Patriotism and Political Homogeneity

When law becomes powerful there is greater conciousness; when there is religious sanction there is a greater tension between motivating emotions and purpose of actions. One may expect here a dedication and an act of religiosity instead of an etiquette of honour; when one has the conception of Heaven, specially from warriors and heroes, heroism becomes a religious sacrifice and patriotism becomes religion and leads to political homogeneity.[14] Thus we see the mother willingly sacrificing her son for the sake of the state and society. This is very well brought out in the story of the mother who after the loss of her father and husband willingly sends her only son to the battle-field.[15] The importance of religion does not lie here in any dogmatic notion about

transcendental truth, but in the degree of stability, an emotion of harmony obtained by social requirements and in the consecration expressing the degree of necessity for a social norm. The inner emotions and tensional meanings project this social norm on this religious level and thus religious sanctions arise. It was an etiquette amongst warriors to dread the cowardly act of turning one's back to the enemy. When the conception of a warrior's Heaven developed, this act, even when unconscious, was dreaded as a sin. A king, we are told, practised the penance of fasting unto death for this unconscious act. The penance is called *puṟappuṇāṇi vaḍakkiruttal* (புறப்புண்நாணி வடக்கிருத்தல்).[16]

Prayer Becomes Social

According to Simmel, "the elementary basis by which the religious category is transformed into a social relation is given in the strange analogy existing between the attitude of the individual towards Godhood and social collectivity. Love, humility, ecstasy, remorse, despair, and trust, the belief in attaining salvation through one's own efforts, the relation of the child to the parent and the patriot to the mother land, and the cosmopolitan to the mankind, in its psychic aspect are called a religious key, related to what is called piety.[17] Even prayer becomes social. This is seen in various songs, including folk-songs such as the *Vēṭṭuva Vari* (வேட்டுவ வரி), *Maṅkala Vāḻttu* (மங்கல வாழ்த்து) and *Kāṉal Vari* (கானல் வரி) in Cilappathikāram (சிலப்பதிகாரம்) in addition to *Kalittokai* (கலித்தொகை) already referred to. These songs end with prayer for the success of the king.

King as Life of the State

King is looked upon as the life of the state.[18] The divine right theory of kings emphasises this conception of Simmel. **Naṉmāṟaṉ** (நன்மாறன்) the great **Pāṇḍiyā** (பாண்டிய) monarch, is compared to Siva, Vishṇu, Balarama and Muruka, and **Karikālaṉ** (கரிகாலன்) the great **Cōla** (சோழ) monarch, and **Peruvaḻuti** (பெருவழுதி), the great **Pāṇḍiya** (பாண்டிய) monarch to Krishna and Balarama. This comparison of king to divine beings has come to be recognized as *Pūvai Nilai* (பூவைநிலை). Even when the king is compared to the five elemental forces, the same conception is emphasised.[20] These are not poetic exaggerations but the expressions of the beliefs of Sangam Age. The various sacrifices or *yākās* (யாகம்) like the *Rāja śūyā* (ராஜசூயம்) had for their object this deification of the king.[21] The offering to the Mother Goddess or the offering to the war drum assume a political significance. [22]

Humanitarian Principle without Reference to God

The objects of love is the loved one and it is in one sense the object of the creation of the lover. As Simmel points out, this image of a lover or a king, though identified, exists only in the ideal world. Simmel also points out that there live pious men who do not turn their piety to God.[23] Some of the verses in Sangam poetry, especially of **Kaṇiyan Pūṅkuṉṟan** (கணியன் பூங்குன்றன்),[24] and **Kaḍalul māinda Ilamperuvaḻuti** (கடலுள்மாய்ந்த இளம்பெருவழுதி)[25] emphasise the humanitarian principles without any reference to God.

Faith as a Basic Sociological Attitude

Coming to discuss the function of religion in society, he brings out the importance of faith, which gives strength and tranquility and a kind of relief from the toils of the weary world. It was a sure relief, generating forces out of one's own confrontation with outside forces, which reciprocate and modify these outside forces. Even superstition has this value.[26] **Pūdap Pāṇḍiyaṉ Tēvi** (பூதப்பாண்டியன் தேவி) chiding others and welcoming ***sati*** can be understood from this religious point of view.[27] Chastity on which society depends is thus deified.

This practical faith, as Simmel points out, is a basic sociological attitude of the soul. Is this not faith, which is responsible for social conscience, revealed later in ***Āicciyar Kuravai*** (ஆய்ச்சியர் குரவை), ***Vēṭṭuva vari*** (வேட்டுவ வரி) in the age of **Cilappatikāram** (சிலப்பதிகாரம்). Man objectifies himself and this ability is the foundation of our entire national notions. Submissive obedience does not depend upon the knowledge of the right and of the superiority of the other one. As is said of **Āy** (ஆய்) the path of Dharma is followed because it is the traditional path.[28] This feeling protects the social status of both the great and the small. As one poet sings. "we do not over praise the great; we do not condemn the mean, beyond measure."[29] The submissive obedience to God, Providence, or Fate is based on the faith in power, merit, irresistability and goodness of the other one.

Faith in God Transferred to King and Society

God, as the object of faith, is all powerful, all pervasive, and all love, as described clearly in the verses of **Paripāḍal** (பரிபாடல்).[30] The restless soul with constantly alternating objects of material images finds its quest achieved in the absolute God.[31] This faith in God is completely transferred to king and society. The king also, at least in the world of faith, is recognized as God in human form and has quintessence of

primitive Nature as described by Sangam literature, already referred to.[32] It is only from this point of the religious faith that one can understand the willing sacrifice of his life by the warrior on the battle-field and the silent submission of the people to the king and the glorious picture of kings and chieftains given in **Puṟanāṉūṟu** (புறநானூறு)[33] and **Pattuppāṭṭu** (பத்துப்பாட்டு).[34] Even the wild beasts and serpents are believed not to hurt the travellers in the forests which are under the suzerainty of monarchs and chieftains, as can be seen in **Perumpāṇāṟṟuppaḍai** (பெரும்பாணாற்றுப்படை).[35] Seen from this point of view these poems are not exaggerations; they are realistic in that they express the honest belief of poets. Otherwise these disturb our belief in the realistic poetry of the Sangam Age. The clouds, the rain and the trade-winds are also said to obey the king.[36] Even the chastity of women depends on the king, as it does on God. This supreme faith is beautifully expressed in **Tirukkuṟaḷ, Cilappatikāram** and **Maṇimēkalai.**

Coalescence of the Individual and the Group

The social and religious phenomenon reveal an identity of form so that the social form approximates the religious aspects, while the religious presents itself as the symbol. The absolute of the social form presents itself as a unity, which according to Simmel is a second concept. The confusing multitude of things, from which here and there emerges a casually related pair of phenomena, gives to more primitive epochs only an opportunity to experience multiplicity as unity. The unity as multiplicity is to rise to the social group, as against the other groups apart from the consciousness inspired by outside pressure. There is the attitude of the group to its individual elements as the outcome of coalescence.[38]

இதுவரை முருகப்பா, பெரியார், ரங்கார்யா, நமச்சிவாய முதலியார், பொற்கோ, கிருஷ்ணமூர்த்தி, கலைமணி, கொடுமுடி சண்முகம், கொடுமுடி சண்முகப் பிரகதம், தெ.பொ.மீ., திருமலை முத்துச்சாமி, பேனா ஒட்டி, சிரம்பான் பரமசிவானந்தம், குழந்தைசாமி, நல்லதம்பி, மு.வ., புலவர் குழந்தை, வே. தில்லைநாயகம், சுந்தர், இராசகோபாலன், மகாதேவன், ஆதித்தர், ஞானதேமா, வி.கே.தில்லைநாயகம், சுப.நாராயணன் ஆகியவர் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்பற்றி ஆராய்ந்து திருத்த வடிவங்களைப் பரிந்துரைத்துள்ளனர் என அறிகிறோம்.[7]

இவர்கள் பரிந்துரைகளில் எழுத்துச் சீர்திருத்தம் வேண்டும் என்று வலியுறுத்தப்படுவதும், இன்ன இன்ன எழுத்துகள் திருத்தப்பட வேண்டும் என்பதும், இவ்வகைத் திருத்தம் என்பதும் சிறப்புடன் காணப்படினும் சில குறைபாடுகளும் வெளிப்படுகின்றன.

1. சில பரிந்துரைகள் தெளிவும் சீர்மையும் இல்லாதன; எளிமையும் இல்லாதன.
2. ஆ, இ, உ, எ, அய், ஓ, அவ் எனத் திருத்தம் செய்வது ஒரொலிக்கு ஒரு வடிவம் என்னும் கொள்கைக்கு முரணாகிறது.
3. இப்போதிருக்கும் சில உயிரெழுத்துகள் எளிமையில்லாதிருத்தலைத் திருத்தவில்லை.

4. குழந்தைசாமி முறையில் புள்ளியும் கோடுகளும் நிறைந்து குழப்பம் தருகின்றன. இதுபற்றிச் சண்முகம் அவர்கள்,

"1. ஒரு ஒலியுடைய உயிரெழுத்துகளும் தனிமெய்யும் இரண்டு வடிவங்களாகவும், இரண்டு ஒலிகளையுடைய அகர உயிர்மெய் ஒரு வடிவமாகவும் அமைப்பானேன்?

2. அகர வுயிர்க்கு ஒரு வடிவும் ஏனையவற்றிற்கு இரண்டு வடிவும் அமைப்பானேன்?

3. பொறியியல் நோக்கில் ஒரு பிரச்சினையைக் கிளப்புகிறது. புள்ளியை மேலே வைக்கத் தட்டச்சில் நிறுத்தச் சாவி தேவைப்படும். அதே தொல்லை மானோ டைப், லினோ டைப் அச்செழுத்திலும் தொடரும். இது வேகத்தைக் குறைக்கும்" [8]

என்று குறிப்பிடுகின்றார்.

உயிர்க்கணத்தில் ஐ, ஔ நிலை

எழுத்துச் சீர்திருத்தம் என்னும் பெயரில் ஐ, ஔ என்னும் ஒலிவடிவங்களை நீக்க முயல்கின்றனர், பெரியோர் சிலர்.

"அவ்வழிப்
பன்னீ ருயிரும் தன்னிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்" [9]

"ஔகார இறுவாய்ப்
பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப" [10]

என்பவற்றுள் உயிரெழுத்துகள் பன்னிரண்டு எனவும்,

"ஆ ஈ ஊ ஏ ஐ
ஓஔ என்னும் அப்பால் ஏழும்
ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப" [11]

என்பதனுள் ஐ, ஔ இரண்டும் உயிர்நெட்டெழுத்தாகும் எனவும் தொல்காப்பியர் கூறுதலானும்,

"உயிரு முடம்புமா முப்பது முதலே" [12]

எனவும்,

"அம்முதல் ஈராறு ஆவி"[13]

எனவும் நன்னூலார் கூறுதலானும் ஐ, ஔ இரண்டும் உயிர் எழுத்துகளே.

மேலும் நன்னூலார்,

"அம்முன் இகரம், யகரம் என்றிவை
எய்தின் ஐயொத் திசைக்கும் அவ்வொடு
உவ்வும் வ்வ்வும் ஔவோர் அன்ன"[14]

என்னும் நூற்பாவில் அஇ, அய் என்பனவும் அஉ, அவ் என்பனவும் கூடி நின்று கூட்டொலியாகி, ஒத்து இசைக்கும் என்று கூறினாரேயன்றி, அஇ, அய் எனவும், அஉ, அவ் எனவும் கூட்டொலியாக ஐ, ஔ ஒலிக்குமெனக் கூறினாரில்லை.

ஐ, ஔ இரண்டையும் உயிர் எனவே கொண்டுள்ளனர் முன்னோர். கூட்டொலியாக – கூட்டொலிபோலே ஒலிப்பதாகக் கொண்டாலும் உயிராகக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஒலிநுட்பங் கண்டு போற்ற வேண்டுமேயொழிய நீக்குதல் கூடாது.

ஐ, அய் என்பன நுணுக்கமாக ஒலி வேறுபாடு உடையன என்பதை உணர்தல் வேண்டும். இதைப் போலக் கை என்பதற்கும் கய் என்பதற்கும் நுண்ணிய ஒலி வேற்றுமை உண்டு என்பதாலேயே ஐகாரத்தைச் சொல்லியதோடு, ஐகாரத்துக்கு அய் போலி எனக் கொண்டனர். ஔ, அவ் என்பனவும் அவ்வாறே.

"ஐ, ஔ இரண்டையும் உயிர் வரிசையிலிருந்து நீக்குதல்பற்றி மீண்டும் சொல்கிறேன். தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் என்ற பெயரில் உயிர் எழுத்துகளில் எந்த ஒரு எழுத்தையும் இழக்காமல் இருப்பது அவசியம்"[15] என்று ம.பொ.சி. அவர்களும்,

"எண்ணிக்கையைக் குறைப்பதில் நாட்டம் செலுத்தும்போது, வழக்கில் இருக்கும் எந்த ஒரு ஒலியையும் இழந்துவிடாமல் மிகவும் கவனமாகச் செய்தல் வேண்டும்,"[16] என்று பாலசுந்தரம் அவர்களும் சொல்வதை மறந்திடுதல் கூடாது.

சண்முகம் அவர்கள், "உயிரில் 10 தான் கற்பிக்க வேண்டும். ஆனால், உயிர்மெய்யில், கை,சை என்று வடிவம் இருப்பதால் மொத்தம்

11 உயிர்மெய் வரிசைகள் ஆகின்றன. ஆகவே, உயிருக்கும் உயிர்மெய்க்கும் நேரடித் தொடர்பு இல்லாமல் போய்விடுகிறது. அப்போது புதிதாக எழுத்தைக் கற்றுக்கொள்வோர்க்குக் கொஞ்சம் குழப்பம் ஏற்படும்" [17] என்கிறார்.

இவ் விரண்டொலிகளையும் உயிர்க்கணத்திலிருந்து நீக்கியோரும் உயிர்மெய் வரிசையில் நீக்கினாரில்லை. பெரியார் திருத்திய இம் முறைபற்றிச் சண்முகம் அவர்கள் "பெரியார் செய்த முக்கியச் சீர் திருத்தங்கள் இரண்டு: 1. கூட்டுயிர்களைக் (ஐ,ஔ) கூட்டெழுத்தாகக் கொண்டு, இரண்டு உயிர் எழுத்துகளைக் குறைத்தது. 2. ஆகார ஐகார உயிர்மெய் வரிசைகளில் ஒரே மாற்று வடிவத்தை முறையே ா, ை என்று எல்லா மெய்களோடும் சேர்த்தது. இதில் ஒரு குறை இருப்பது குறிப்பிடத்தக்கது. அதாவது, ஔகார உயிரை நீக்கியது போலவே உயிர்மெய்யையும் கூட்டு எழுத்துகளாக மாற்றிவிட்டு, ஐகார வரிசையில் மட்டும் உயிரைப் போல உயிர்மெய்யைக் கூட்டெழுத்தாக ஆக்காமல் துணை எழுத்தாக வைத்துக்கொண்டது, கல்வி நோக்கில் குழப்பம் விளைவிக்கும் தன்மையது. அதாவது 'ை' என்னும் மாற்று வடிவத்தின் மூலவடிவம் அல்லது எழுத்தன் எது? என்னும் வினா எழும். உயிரில் பத்து எழுத்தையும் உயிர்மெய்யில் பதினொரு எழுத்தையும் கற்கும்படி நேர்வதால் உயிர்க்கும் உயிர்மெய்க்கும் ஒன்றுக்கொன்று நேரடித் தொடர்பு இல்லாமல் அமைந்து, கற்போர்க்குக் குழப்பம் ஏற்படும்," [18] என்று கூறுகின்றார்.

"அய், அவ் ஆகியவற்றைப் போலி எழுத்துகள், 'கொள்ளற்க' என்று எச்சரிக்கிறார் இளம்பூரணர்" [19] என்பார் கி.வா.ஜ.

ஆகவே ஐ,ஔ இரண்டையும் பிற உயிர்களைக் கொள்வது போலவே வரிவடிவம் திருத்தி வைத்துக்கொள்ளல் நன்று.

இனி உயிர்கள் வரிவடிவத் திருத்தம்

1. அ, ஆ, உ, எ, ஏ ஆகிய எழுத்துகளை அப்படியே கொள்ளலாம்.

2. இ, ஈ—இரண்டும் ஒப்புமையும் சீர்மையும் இல்லாதன. மேலும் எழுத எளிமையில்லாதன. முயற்சி மிகுதியும் வேண்டியுள்ளன. ஆகையால் மாற்றம் வேண்டும்.

'இ' எழுதச் சுழித்துத் தொடங்கிச் சற்று நீட்டிய நிலையே போதுமானது – ' '

3. 'ஈ' – இகரப் புது வடிவமாகிய ' ' என்பதன் இறுதியில் சுழித்து நிறுத்தலாம் – ' '

இவை யிரண்டும் சற்றுச் சரிந்த நிலையில் எழுதப்பெறும்.

4. ஊ – இரண்டு வரிவடிவம்; நீக்கப்பட வேண்டும்.

பரிந்துரைக்கப்பட்டவற்றுள் திருமலை முத்துசாமியின் பரிந்துரை ஏற்கக் கூடியது; ஒ என்பது அது. உ எழுதி இறுதியில் சுழித்து முடித்தல், அல்லது சுழித்து மேலேற்றி நிறுத்தலாம். ' '

5. ஐ – எளிமை இல்லை. இதனை நெடுக்கில் வெட்டி மேல்பகுதியை இறுதியில் சுழித்து நிறுத்தலாம். ' ' என அமையும்.

6. ஒ, ஓ – இரண்டும் எழுதுவதற்கு எளிமையில்லாதன, அதனால் வேறு வடிவம் அமைதல் வேண்டும்.

ஒ –
ஓ –

என அமையும்.

ஔ – இரண்டு வரிவடிவம், நீக்கப்பெறல் வேண்டும்; எளிமைப்படுத்தப்படல் வேண்டும்.

' ' எனக் கொள்ளலாம்.

ஆய்த எழுத்து : முப்புள்ளி வடிவாக இருத்தலான், ஏற்படும் முன்சொன்ன குறைகளை நீக்கத் திருத்தம் வேண்டும். 'ஃ' என்று ஏற்கலாம்.

மெய்யெழுத்துகள் : 1. மெய்யெழுத்துகளைப் புள்ளி நீக்கியே எழுதுதல் நன்று. ஏனெனில் எழுதத் தொடங்கியபின் நிறுத்தித் தனியே புள்ளி இடவேண்டியுள்ளது. அதனால் காலவிரயம் ஆகிறது. மேலும் தட்டச்சில் புள்ளிக்காகத் தட்டுதலினால் காலவிரய மாவதோடு தாளும் பொத்துக்கொள்கிறது.

அதனால் அகர உயிர்மெய்யாக இதுகாலம்வரை எழுதிய வரிவடிவத்தை மெய்யாகவே கொள்ளலாம். க, ங.

2. மெய்யெழுத்துகளில் ஞ்,ந் என்பனவற்றை ஞ,ந எனக் கொள்ளலாம்.'ர்' என்பதை 'ா' எனத் தவறாக எழுதுவதைத் திருத்தமாக 'ர' எனக் கொள்ளலாம்.

உயிர்க்குறியீடுகள் : உயிர்க்குறியீடுகள் உயிர்மெய்களுக்கே வேண்டுவன. இவை மெய்யின் வழியதாய்த் தனியே எழுதப்பெறல் வேண்டும். இதனால் கற்பார்க்கு எளிய எழுதும் முறை வாய்க்கும். எழுதுமிடம் கூடினாலும் மனமுயற்சிக்கும் உடல் முயற்சிக்கும் விரைவு கிடைக்கும்.

1. புள்ளி நீங்கிய வடிவே மெய்யெனக் கொண்டதால், அகரமேறிய உயிர்மெய்க்கு ஒரு புது உயிர்க்குறியீடு தேவை. ' ◌ ' எனக் கொள்வோம்.

2. ஆகார உயிர்க் குறியீடு, அகர உயிர்க்குறியீடாகிய ' ◌ ' என்பதன் இறுதியில் சுழித்து நிறுத்தல். 'ா' என அமையும்.

3. இகர, ஈகார உயிர்க்குறியீடுகள் மற்றவர்கள் பரிந்துரைத்த குறிகளைச் சற்று நீட்டி அமைப்போம். ி , ீ என அமையும்.

4. உகர, ஊகார உயிர்க்குறியீடுகள் மற்றவர்கள் பரிந்துரைத்தவை தெளிவும், எளிமையுமில்லாதன. புதியதாய் ◌ு, ◌ூ என அமைக்கின்றோம்.

5. எகர, ஏகார உயிர்க்குறியீடுகள் முன்பு இருந்ததையே, மு.வ. காட்டியது போல மெய்க்குப் பின்பு அமைப்போம். க◌ெ க◌ே, என அமையும். ஐகாரக் குறியீடு முன்பிருக்கும் 'ை' என்பது கையெழுத்தில் 'ன' என்பதனோடு இயைபுடையதாகிறது. வேறுபாடு வேண்டும். அது ' ◌ை ' என அமையும்.

6. ஒகர, ஒகார உயிர்க்குறியீடுகள், மூன்று வடிவங்கள் நீக்கப்பட வேண்டும். வேறு ஒரு வடிவம் வேண்டும். அவை ெ , ே என அமையும்.

7. ஔகார உயிர்க்குறியீடு மூன்று வடிவங்கள்; நீக்கப்பட வேண்டும். வேறு ஒரு வடிவம் வேண்டும். அது ' ' என அமையும்.

இக் குறியீடுகளுள் சில மற்றவர்களால் பரிந்துரைக்கப் பெற்றன. எளிமையும் தெளிவும் கருதி உயிர்களுக்கு மாற்றியும், நிலைமாற்றம் செய்தும் அமைக்கப்பட்டுள்ளன. இதனால்,

உயிர் :

இப்போதிருக்கும்
வடிவம் : அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

புதிய வடிவம் : அ ஆ ி ீ உ ூ எ ஏ ை ொ ோ

மெய்கள் :

இப்போதிருக்கும்
வடிவம் : க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

புதிய வடிவம் : க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன

ஆய்தம் :

இப்போதிருப்பது : ஃ

புதிய வடிவம் : ா

உயிர்க்குறியீடுகள் :

உயிர் : அ ஆ ி ீ உ ூ எ ஏ ை ொ ோ ்

உயிர்க்குறியீடு : ் ா ி ீ ு ூ ெ ே ை ொ ோ

உயிர்மெய்கள் :

இப்போது
இருப்பன : க கா கி கீ கு கூ கெ கே
கை கொ கோ கௌ

தமிழ் நெடுங்கணக்கு – இப்போதைய வடிவம்

ஃ	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

புதிய வடிவம்

ா	அ	ஆ	ி	ீ	உ	ஊ	எ	ஏ	ை	ஒ	ோ	ஃ
க	கா	கை	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கஃ
ங	ஙா	ஙை	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙஃ
ச	சா	சை	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சஃ
ஞ	ஞா	ஞை	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞஃ
ட	டா	டை	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டஃ
ண	ணா	ணை	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணஃ
த	தா	தை	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தஃ
ந	நா	நை	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நஃ
ப	பா	பை	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பஃ
ம	மா	மை	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மஃ
ய	யா	யை	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யஃ
ர	ரா	ரை	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரஃ
ல	லா	லை	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லஃ
வ	வா	வை	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வஃ
ழ	ழா	ழை	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழஃ
ள	ளா	ளை	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளஃ
ற	றா	றை	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றஃ
ன	னா	னை	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னஃ

ஆக புதிய தமிழ் எழுத்துகள் :

உயிர்	–	12	43
மெய்	–	18	
உயிர்க்குறியீடு	–	12	
ஆய்தம்	–	1	

பிறமொழி ஒலிகளை ஏற்றல்

பிற மொழி ஒலிகள் தமிழில் கலத்தல் இன்றியமையாததாகலின், அ ப் பிற மொழிகளின் ஒலிகள், தடிப்பொலிகளைக் குறிக்கத் தனி வடிவம் தேவைப்படுகின்றன. வடமொழி எழுத்தொழிகளுக்கு முன்பே வரிவடிவம் கண்டிருக்கின்றனர். எனினும், அவையும் எழுதும் எளிமையில்லை. எஃப் ஒலியைத் தமிழில் ஆய்தம் சேர்த்து எழுதப் பழகிக் கொண்டு விட்டோம். அதைப் போலவே பிற ஒலிகளையும் தமிழ் எழுத்தாலேயே எழுத நாம் முயலலாம். இப்போது நாம் மேற்கொள்ளும் எழுத்து வடிவத்தால் உலகத்து மொழிகளின் சிறப்பொலிகளைத் தமிழில் பொது வரிவடிவத்தால் ஏற்க முடியும்.

கொள்ளத் தக்க சிறப்பொலிகள்

(1) f, h, ஸ, ஹ, ஸ்ரீ

(2) b, d, g, j, z, ஜ

(3) ஷ, Sh

(1) உரசொலிகள் அனைத்தையும் ஆய்தவெழுத்து ஒன்றைச் சேர்ப்பதாலேயே காட்டலாம்.

f	h	ஸ	ஹ	ஸ்ரீ
ஃப	ஃக	ஃச	ஃக	ஃசறி

(2) வல்லொலிகளனைத்தையும் காட்ட ஒரே பொதுக்குறி வேண்டும்.

b	d	g	j	z	ஜ
ஞப	ஞத	ஞசி	ஞசெ	ஞச	ஞச

இக்குறியீட்டுக்கு ஆய்கம் எனப் பெயர் கொடுக்கின்றோம்.

(3) நாக்கை மடித்தொலிக்கும் இவ் வுரசொலிகளை,

ஷ	sh
ஞச	ஞச

என அமைக்கலாம்.

இக் குறியீட்டுக்கு ஆய்சம் எனப் பெயர் கொடுக்கின்றோம்.

பிற மொழி ஒலி எழுத்து என்பதை அறிதற்கும் பயன்படுமாறு இக் குறியைத் தமிழ் எழுத்துக்கு முன் சேர்த்தல் வேண்டும்.

பிற மொழி ஒலி எழுத்து என்பதாலும் பல மொலிகளுக்கு ஒரு பெரது வரிவடிவம் கொடுப்பதாலும் இரண்டாக அமையும்.

உயிர்மெய்யாக ஒலிக்கும்போது மூன்று வரிவடிவம் பெறும்.

ஃபா, ஃபெ பா, ஃசா

என அமையும்.

ஒப்புமையுடைமையால் J, Z, ஜ என்னும் ஒலிகளை ஃச என்னும் ஒலியாகச் சேர்க்கலாம். க்ஷ ஒலியைத் தமிழ் ச ஒலியாலேயே வழங்கலாம். சிறிது வேறுபாடுடைமையிருந்தாலும் பிறமொழி ஒலிகளாகையால் தமிழில் ஒரொலியாக ஒலிப்பதால் குறையுடையதாகாது.

கம்பர் வடமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்தியிருப்பதும், (இலக்குவன், வீடணன்), வீரமாமுனிவர் ஈப்ருமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்தியிருப்பதும் (இயேசு) நமக்கு நல்ல எடுத்துக்காட்டுகள். தொல்காப்பியர் காட்டிய,

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ,
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

என்னும் விதியை அவர்கள் கைக்கொண்டவாறு நாமும் கடைப் பிடித்தல் இன்றியமையாதது.

ஸ்ரீலங்கா என்பதை சிறீலங்கா என யாழ்ப்பாணத்தார் வழங்குவதையும் கவனிக்க வேண்டும். தவிர்க்க முடியாத நிலையில்தான் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும். அப்போது மேற்காணும் மூன்று வகைக் குறியீடுகளாகிய வரிவடிவம் கொள்ளுதல் வேண்டும்.

ஆக, ஆய்கம், ஆய்சம் என்பவற்றோடு 45 எழுத்துகள்.

நடைமுறைத் திட்டம்

சிறுவர்களுக்கும் கற்றறிந்த பெரியோர்களுக்கும் புதிய எழுத்துகளை அறியப் பயிற்சியளித்தல் வேண்டும். நீண்டகாலத் திட்டம் வகுத்துச் செயற்படுத்தல் நன்று.

1. இந்த ஆராய்ச்சி முடிவை, செயற்குழுத் தமிழ்நாட்டரசு ஏற்குமாறு செய்தல் வேண்டும். அவ் வரசே பெரியார் நூற்றாண்டு விழாத் தொடர்பாகத் திருத்திய எழுத்துகளைப்பற்றி அரசாணை மூலம் நிறைவேற்றியதைப் போல இச் சீர்திருத்திய எழுத்துகளையும் ஏற்று அரசாணை வெளியிட வேண்டும்.
2. அதன்பின்பு, செய்தியிதழ்கள் மூலம் விளம்பரம் வெளியிடுதல் வேண்டும்.
3. செய்தியிதழ்களே குறிப்பிட்ட காலம்வரை தொடர்ந்து நாள்தோறும் சீர்திருத்திய எழுத்து வடிவங்களைப் பெட்டிச் செய்தியாக வெளியிட வேண்டும்; புதிய எழுத்துகளைப் பயன்படுத்த வேண்டும்.
4. சுவர், பதாகை போன்ற விளம்பரங்களில் இவ் வெழுத்துகளைப் பயன்படுத்தத் தூண்டுதல் வேண்டும். வணிக நிறுவனப் பலகைகளில் இவ் வெழுத்துகளைப் பயன்படுத்தத் தூண்டுதல் வேண்டும்.
5. படிப்படியாகப் பாடநூல்களில் ஏற்ற வேண்டும்.
6. இறுதியாக நூல்களை அச்சேற்றும்போது நூல்களில் பயன்படுத்த வேண்டும்.
7. முந்திய நூல்களைப் புதிய எழுத்துகளோடு பதிப்பித்தல் வேண்டும்.

திருந்திய எழுத்துகளை நடைமுறைப்படுத்தல்

1. இ, ஈ, ஊ – ி, ீ, ூ
   மூன்று திங்கள்வரை
2. ஐ, ஒ, ஓ, ஔ – ை, ொ, ோ, ௌ
   ஆகிய நான்கையும் அடுத்த மூன்று திங்கள்
3. ஃ, ஙி, ஞீ, ணூ, ந, ஏ – உயிர்க்குறியீடுகள்
   ஆறினையும் அடுத்த மூன்று திங்கள் வரை.
4. ஙா, ஞா, ணி, ஏ
   ஆகிய நான்கு குறியீடுகள் அடுத்த மூன்று திங்கள் வரை.

5. இ,ஈ,உ,ஊ, ஆகிய உயிர்க் குறிகளைப் பிரித்து எழுதுதலைக் காட்ட வேண்டும். அடுத்த ஒரு திங்கள் வரை.

6. உயிர்க்குறிகளை மெய்யின் பின்பு எழுதுதலைக் காட்ட வேண்டும். க ெ , க ே , க ை , க ோ ,க ௌ – அடுத்த ஒரு திங்கள் வரை.

8. உலகத்தில் அனைத்து நாடுகளிலும் வெளியாகும் தமிழ்ச் செய்தியிதழ்களோடும் தொடர்புகொண்டு இம் முறையைக் கையாளத் தூண்டுதல் வேண்டும்.

9. வானொலிச் சொற்பொழிவு மூலம் மக்களைக் கவனிக்கச் செய்தல் வேண்டும்.

10. தொலைக்காட்சியில் திருத்திய வடிவங்களை எழுதிக் காட்ட வேண்டும்.

இன்னொன்று

இடைப்பிறவர லென்றாலும் இன்றியமையாத தொன்றையும் குறிப்பிட விரும்புகிறோம்.

இற்றைப்போது நாம் பிழைபடச் 'ச'என்னும் ஒலியை ஸ என்றோ `S என்றோ ஒலிக்கின்றோம். அதனால் பள்ளியிலேயே இளந்தலை முறையினர்க்கு முறையாக ஒலிக்கப் பயிற்ற வேண்டும். இதைப்போலப் பிற தமிழ் ஒலிகளையும் முறையாக ஒலிக்கப் பயிற்றுவிக்கத் தொடக்கப் பள்ளியாசிரியர்க்குப் பணியிடைப் பயிற்சி கொடுப்பது நலம் தரும்.

முடிவுரை

தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தமிழ்மூலம் தகவல் தொடர்பு வளர்ச்சிக்கும் இவற்றின் வளர்ச்சியால் அறிவியல் முன்னேற்றத்துக்கு ஈடு கொடுக்கும் முறையில் தமிழ் எழுத்து அமைய வேண்டுமென்பதால், எளிமையும் சீர்மையும் தெளிவும் விரைவும் உடையனவாகத் தமிழ் எழுத்துகள் சீர்திருத்திப் பரிந்துரைக்கப் பெற்றுள்ளன. அறிஞர் உலகம் ஆராய்ந்து ஏற்பதாக.

அறிவியல மனை னறேசதலை
தமிழிமை வளரருத தமிழிச சமை
தியம பரிமை பயனளரிய
அறிஞர உலகம தமிழி எழிதிதச
சோதிரிததத வரிரிவில நடர
மறர பபடிதிவதகள

தமிழி லல வடிவஙகளகை
கறரகமல வரி வடிவஙகளரித
திரிதத அமதிதளளம. இதனலை
ருடேஙகணைகளில எணணிகக
கறரிருத தடடசசு மதலனை
கரிவுகளனை எதிரி லபம
மிகதிியகினறதி.

தமிழி எழிதிதச சோதிரிததத
ரி நிரிருத்தரக கலரியகள ஆகம
மல-கலம கடதிதமல- வரிரிவில
தமிழிலகம பயனளரிவதகள.

[அறிவியல் முன்னேற்றத்தால் தமிழும் வளர்ந்து தமிழ்ச் சமுதாயம் பெரும் பயனடைய அறிஞர் உலகம் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை விரைவில் நடைமுறைப்படுத்துவதாக.

தமிழ் ஒலி வடிவங்களைக் குறைக்காமல் வரி வடிவங்களைத் திருத்தி அமைத்துள்ளோம். இதனால் நெடுங்கணக்கில் எண்ணிக்கை குறைந்து தட்டச்சு முதலான கருவிகளின் எந்திர லாபம் மிகுதியாகின்றது.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை ஒரு நிரந்தரக் கலையாக ஆக்காமல் – காலம் கடத்தாமல் விரைவில் தமிழுலகம் பயனடைவதாக.]

அடிக்குறிப்புகள்

1. சண்முகம், செ.வை., டாக்டர், எழுத்துச் சீர்திருத்தம்
2. பாலசுந்தரம், இரா. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், ப. 30
3. மு.வ. டாக்டர், கலைக்களஞ்சியம் – 2, எழுத்தொலியியல், ப. 576
4. சண்முகம், செ.வை., டாக்டர், எழுத்துச் சீர்திருத்தம், ப. 6
5. சண்முகம், செ.வை., டாக்டர், எழுத்துச் சீர்திருத்தம், ப. 219
6. பாலசுந்தரம், இரா. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், ப.28
7. 2. பாலசுந்தரம், இரா. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், இயல் 4 அட்டவணை
8. சண்முகம், செ.வை., டாக்டர், எழுத்துச் சீர்திருத்தம், பக். 54,55
9. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நூற்பா, 84
10. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நூற்பா, 8
11. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நூற்பா, 4
12. நன்னூல் – நூற்பா, 59
13. நன்னூல் – நூற்பா, 63
14. நன்னூல் – நூற்பா, 125
15. எழுத்துச் சீர்மை, ப. 140
16. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், ப. 34
17. சண்முகம், செ.வை., டாக்டர், எழுத்துச் சீர்திருத்தம், பக். 225, 226
18. சண்முகம், செ.வை., டாக்டர், எழுத்துச் சீர்திருத்தம், ப. 34
19. காண்க அ.கு. 5இ ப. 141

22

தொல்காப்பியர் கண்ட வேற்றுமை இலக்கணம் -

ஓர் இயக்கவிலக்கண ஆய்வு

கி. லோகநாத முத்தரையன்

வேற்றுமை என்பது ஓர் கிளவிக்கூறு. பலதன்மைய சொற்கள் தொடுக்கப்பட்டு, கிளவி சமைக்கப்பட்டு, அதன்வழி ஒரு கிளவிச் செய்தி நிகழும்பொழுது, ஒருசில சொற்களுக்கு அமையும் இலக்கணக் கூறே வேற்றுமை. இவ் வேற்றுமைக் குறிப்பின்றி எக் கிளவியும் எம்மொழியிலும் இருப்பதாகத் தெரியவில்லை. வேற்றுமைக்குறிப்பு, கிளவிகளின் புறப்பண்பினது என்று கருதி அதனை விடுப்போர் கூற்றுத் தவறானது என்று தெரிகிறது. இவ் வேற்றுமைக்குறிப்பு மொழிகளில் பல்வேறாக நடக்கும் என்பது அனுபவ அறிவு. தமிழ் போன்ற ஒட்டுமொழிகளில் வேற்றுமைக் குறிப்புகள் உருபுகள்வழி நிகழும். இவ் வுருபுகளும் பெயர்ச் சொற்களது ஈற்றிலோ, அவற்றை அடுத்தோ, சாரியைகளுடனோ, சாரியைகள் இன்றியோ விளங்கும். பிற மொழிகளில் தனிச் சொற்களாலோ, இசைவேறுபாடுகளாலோ, சொற்றொடர்மையாலோ, இன்னும் பல்வேறு வகையாலோ அது உணர்த்தப்படும். இனி வேற்றுமை என்னும் கிளவிக்கூற்றினை ஆராய்ந்தோர், அதனை மூன்று வகையால் ஆராய்ந்துள்ளனர் எனத் தெரியவருகிறது. மொழியின் புறவுருப் பண்பாகிய உருபுகள்வழியும் ஏனைய புறப்பண்புகள்வழியும் ஆராய்வர் ஒரு

திறத்தர். அதனைவிட்டுச் சற்றே உட்சென்று பொருண்மை (meaning, semantic) நிலையில் விளக்குவர் ஒருதிறத்தர். இன்னும் சிலர் அதற்கு மேலும் சென்று கிளவியாம் தன்மைக்கு ஏதுவாகிய சில அடிப்படை உணர்வு விளக்கத்திற்கே வேற்றுமைக் குறிப்பினைக் கொண்டுசெல்வர். எல்லாக் கிளவிகட்கும் மூலவுரு, ஏரணவுரு, புறவுரு என்னும் மூன்றுருக்கள் உண்டு என்ற கொள்கையைக் கொண்டாடும் இயக்க விலக்கண மொழியியல்வழி, வேற்றுமை எனும் சொல்லிலக்கணக் கூற்றை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கம்.

உருபுகள்வழி வேற்றுமை என்றால் என்ன என்பதை விளக்குதல் ஒவ்வாது. உருபுகளைத் தனியாகப் பிரிப்பதற்கும், வேறு இடைச் சொற்களினின்றும் பயனிலைச் சொற்களினின்றும் வேறுபடுத்துதற்கும் அடிப்படையாய் இருப்பது வேற்றுமையுணர்வு. ஆகவே வேற்றுமை என்பது இத்தகைய உருபுகள் குறிப்பது என்ற கருத்தோடு ஆராய்ச்சி செய்வது ஒக்குமே எனினும், வேற்றுமை என்பது இது என்ற புரிந்துணர்வு அதன்வழி வாராது. வேற்றுமைதான் என்ன என்பதன்கண், இத்தகைய ஆராய்ச்சி செல்லாதும் விடுகிறது.

அடுத்துப் பொருண்மைநிலையில் வேற்றுமையாய்வு. புலவர் ஆதித்தன், தொல்காப்பியர் தரும் செய்தியினை அடிப்படையாகக் கொண்டு, இக் காலப் புலவர் பலர் வேற்றுமை இலக்கணத்தைக் கீழ்வருமாறு விளக்குவர் என்று குறிப்பிடுகிறார்:

> "தொடரில் ஒரு பெயர்ச்சொல்லுக்கும் ஒரு வினைச்சொல்லுக்கு மிடையேயுள்ள பொருட்டொடர்பாகிய இலக்கண உறவே வேற்றுமை எனப்படும். இவ் வுறவு சில ஒட்டுகளால் (வேற்றுமை உருபு) வெளிப்படுத்திக் காட்டப்பெறுதலும் உண்டு."
>
> (மொழியியல் (1981) 5.1 ப.90)

இவ் விளக்கம் பிழையானது; முரண்பாடானது. தொல்காப்பியரது கூற்றாகவும் இஃது அமையவில்லை. எவ்வாறு என்பதை இனிக் காண்போம்.

1.0 பெயர்ச்சொல், வினைச்சொல் என்னும் சொற்பாகுபாடு வேற்றுமை உணர்வின்றி அமையாது. எந்தவொரு கிளவியை எடுத்துக் கொண்டாலும், இந்த வேற்றுமையுணர்வு தோற்றுவிக்கும் ஆற்றலை யறிந்தும், பொருள்மேல் ஆகும் உணர்வுகளைத் தோற்றுவித்தலும்

தோற்றாவிடுத்தலும் ஆகிய பண்புகளையறிந்தும் கிளவி உறுப்புகளைச் சொற்களென்றும், மேலும் பெயர்ச்சொல், வினைச்சொல், உரிச்சொல், இடைச்சொல் என்றும் கணிக்கிறோம். 'பூனை பாலைக் குடித்தது' என்ற தொடரில், 'பூனை', 'பாலை' என்னும் சொற்கள் காலம் குறிக்காது, வேற்றுமை யுணர்வினை உணர்த்துகின்றன. 'குடித்தது' என்னும் சொல்லே 'வினைமுதல்', 'செயப்படுபொருள்' என்னும் பிற குறிப்புகளையும் கொண்டுள்ளது. இவ் விருவேறு இலக்கணச் சொற்கள், வேற்றுமை யுணர்வினை உணர்த்துமாற்றில் வேறுபாடு உண்டு. உருபுகளை ஈற்றில் கொண்டும் அல்லது கொள்ளாதும் பெயர்ச்சொல் எனப்படுபவை வேற்றுமை யுணர்த்தும். இத்தகைய சொற்கள் எவ்வாறான வேற்றுமை கொண்டிலங்க வேண்டும் என்ற கடப்பாடோ வரையோ இல்லை. பெயர்ச்சொற்கள் எனப்படுபவற்றுடன் ஊர்ந்து பிரிக்க வாராது வரும் வேற்றுமைகள் யாதும் இல்லை. பெயர்ச்சொற்களுக்கு வேறதாய், அந்நியமாய், ஒரு கிளவியில் திகழுங்காலே பெயர்ச்சொற்களுடன் புணர்ந்து நிற்பதாய் விளங்குபவை வேற்றுமைகள் என்னும் கிளவிக் கூறுகள். 'பூனை' என்பன போன்ற சொற்கள் தனித்து ஒரு சொல்லாக விளங்கும்பொழுது, எந்தவொரு வேற்றுமையையும் குறிப்பதில்லை. 'பூனை', 'பூனை–ஐ', 'பூனை–ஆல்', 'பூனை–கு', 'பூனை–இன்', 'பூனை–அது', 'பூனை – கண்' என்றெல்லாம் வருவதைக் காண்க.

இனி வினைச்சொற்கள் எனப்படுபவை வேற்றுமையுணர்த்துமாறு வேறு. எந்தவொரு வினைச்சொல்லும், தனித்து விளங்குங்காலும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட வேற்றுமைகளைக் குறிப்பாய் உணர்த்தியே நிற்கிறது. மேலும் இக் குறிப்பு, வினையடியிலேயே நிகழ்ந்துவிடுகிறது. காலம், இடம், பால், எண் போன்றவற்றைத் தெரிபுநிலையில் உணர்த்தும் ஒட்டுகளாகிய இடைச்சொற்கள் வழியாக வினைச்சொற்கள் வேற்றுமைகளை உணர்த்துவதில்லை. தான் சுட்டும் தனித்த பொருள் காட்டும் முகத்தானே வேற்றுமைக் குறிப்பும் நிகழ்ந்துவிடுகிறது. தான் குறிக்கும் வினை என்ற பொருளுடன், சில வேற்றுமை யுணர்வுகளையும் தோற்றுவித்துவிடுகிறது. காண்க:

அடி	–	வினைமுதல். செயப்படுபொருள், (கருவி)
நட	–	வினைமுதல், இடம்
பார்	–	வினைமுதல், செயப்படுபொருள்
தோண்டு	–	வினைமுதல், செயப்படுபொருள், கருவி

மேலும் ஒரு வினையடிக்கண் நின்றிலங்கும் வேற்றுமைகள், அதனைவிட்டு நீங்காது, அதனது தற்பண்பாய் விளங்குவதைக் காண்க. 'அடி' என்னும் சொல்லுடன் விட்டு நீங்காது இருப்பவை 'வினைமுதல்', 'செயப்படுபொருள்' என்னும் இரண்டு வேற்றுமைகள்; இயைந்து வருபவை 'இடம்', 'கருவி' என்பவை. எக் கிளவியிலும் எந் நிலையிலும், 'அடி' என்னும் இச் சொல் செய்தி ஒன்றினை நிகழ்த்தும் கிளவியது கூறாய் அமையுங்கால், இவ் வேற்றுமைகளைப் பிறழாது குறித்துக்கொண்டே அச் சொல் நிற்கும் பெயர்ச்சொற்கள் போலன்றி வேறு வேறு வேற்றுமை களைக் கொண்டிலங்காது.

பெயர்ச்சொற்கள் என்ப்படுபவை வேற்றுமைக் கருத்துடன் இயைவன, இயைந்து வருவன என்பதைக் கண்டோம். இனி இவ்வாறு வேற்றுமைக் கருத்துடன் புணராது கிளவிகளில் திகழும் சொற்களும் பல உள. 'உம்', 'ஒ' என்ற எண்ணிடைச் சொற்களும், 'அங்ஙனம்', 'இங்ஙனம்' 'போல்', 'மாதிரி', 'இவ்வாறு', 'அவ்வாறு' என்பன போன்ற உவமச் சொற்களும், 'பல்', 'சில்' என்பன போன்ற வரையா எண்ணியற் சொற்களும், 'வேகமாய்', 'தயங்கி', 'கடி', 'வெகு' போன்ற வினையுரிச் சொற்களும் (adverbs) இவை போன்றவையும் இத்தன்மையன.

இவற்றையெல்லாம் தொகுத்துக் காணும்பொழுது ஒன்று தெற்றெனத் தெளிவாகிறது. வேற்றுமை இன்னது என்று விளக்குவதற்கு வினைச்சொற்களே போதும். பெயர்ச்சொற்களையும் பிறசொற்களையும் அல்லிலக்கணம் கூறுமுகத்தான் குறிக்கப்பட வேண்டுவன, உள்ளிலக்கணம் கூறுங்கால் வேண்டுவன அல்ல. வினையடிகள் எனும் சொற்கள், தொழில் எனும் பொருளைக் குறிப்பதோடு, வேறு சில குறிப்புகளையும் கொண்டுள. அவற்றில் ஒன்றே வேற்றுமை. இவ்வாறு வினைகளது இலக்கணம் கூறுமுகத்தான், வேற்றுமை என்ன என்பதை விளக்கிவிட்டு, அதன்பின் பெயர்ச்சொல் இலக்கணம் கூறுவதே தொல்காப்பியரின் நோக்கு என்பது கீழ்க்காணுமாறு அவர் வினைகளது இலக்கணம் கூறுமாற்றால் தெளிவு.

"வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி என்றா
இன்னதற்கு இதுபய னாக வென்னும்
அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
ஆயெட் டென்ப தொழில்முதல் நிலையே" (சொல்.112)

இங்குத் தொல்காப்பியர், 'தொழில்முதல் நிலை' என்று சொல் லிலக்கணம் கூறாது, பொருளிலக்கணம் கூறுவதை உள்ளல்வேண்டும். இங்கு விளக்கமுறுவது 'தொழில்' என்னும் பொருளறிவு. இஃது எத்தன்மைய செயல் என்பதுடன் அஃது ஒன்றால் செய்யப்படுவதோ, ஒன்றின்மேல் ஆகுவதோ, கருவியுடன் நிகழ்த்தப்படுவதோ, ஓர் இடத்திலும் காலத்திலும் நிகழ்த்தப்படுவதோ என்பனபோன்ற வேற்றுமையறிவுடன், அதனைச் செய்தால் பயன் என்ன என்ற அறிவும் கலந்து நிற்கும் ஒன்று. இத்தகைய தொழில் என்னும் பொருளை உணர்த்துபவை வினைச்சொற்கள். இன்னும் துல்லியமாக வினைப் பெயர்கள் என வரும் சொற்கள். இத்தகைய வினைப்பெயர்கள், ஒரு கிளவியின்கண் பெயர்ப்பண்பு கெடாது, அத் தொழில் நிகழ்ச்சியாதலை, நிகழ்த்தப்படுதலை உடன் குறிக்குமாற்றால், காலக் குறிப்பினையும் கொண்டு வினைச்சொல்லாகிறது. இஃது இவ்வாறு என்றால் பெயர்ச்சொற்களைக் கொணராமலேயே, வினைச்சொற்கள் உணர்த்தும் செயல்களை ஆய்வதின்வழியே வேற்றுமை விளக்கம் கிடைத்துவிடுகிறது என்று முடிக்கவேண்டும். புலவர் ஆதித்தன் கூற்றும் அவர் குறிப்பிடும் வேறு புலவர்களது கூற்றும் பொருந்தாத ஒன்று என்றும் நாம் துணிய வேண்டும்.

2.0 இவ் விளக்கமும் முற்றானது அன்று. கீழ்வருமாறு தடைகளை எழுப்பலாம்:

(அ) இஃது உண்மையெனில், காரக வேற்றுமைகளே வேற்றுமைகள் எனப்படும்; '–அ' '–அது' '–உடைய' போன்ற உருபுகளால் உணர்த்தப்படும் கிழமை வேற்றுமைகளும், '–இன்', '–ஐவிட' போன்ற ஒப்புவேற்றுமைகளும், விளி வேற்றுமையும் வேற்றுமை யல்லாதுவிடும்.

(ஆ) இயக்கவிலக்கணத்தில் பொருளறிவு வெற்றுணர்வு (அஃதாவது பெயரொடு புணராச் சுட்டுணர்வு), கற்றுணர்வு ('கல்' என்ற அறிவு விளக்கம்வழி அது என்று அறிந்த பொருளை இன்னது என்று அறிதல்) என்றவாறு இருதிறப்படும் என்று கூறப்பட்டுளது. வரையுணர்வு (Conceptual knowledge) மேலோங்க விளங்கும் கற்றுணர்வாகிய பொருளறிவின்கண்ணேயே இன்னது என்ற அறிவு விளங்கும். பொருள் இன்னது என்ற அறிவில் வேற்றுமை

உணர்வு வெளிப்படுமானால், பொருண்மைப்பால்படுவதே வேற்றுமையுணர்வு, கற்றுணர்வின் ஒரு கூறே என்று கொள்ளத் தகும். இவ்வாறெனில் பொருண்மைகள் விளங்கும் ஏரணவுருவில்தான் வேற்றுமைக் குறிப்புகள் தென்படும். ஏரணவுருக்கள் தோற்றுவதற்கு அடிகோலும் மூலவுருக்களில் வேற்றுமைக் குறிப்பு இராது. இல்லவே கிளவியாந்தன்மை விளக்கும் ஆற்றல் மூலவுருக்களுக்கு இல்லாதொழிகிறது; ஒழியவே அவையும் பயனற்றதாய் முடிகிறது.

3.0 இனி இத் தடைகளை அலசுவோம். இத் தடைகளின்வழி வேற்றுமைகள் பல் வகைய என்பது தெளிவாகிறது. கீழ்க் காணுமாறு அவற்றை வகுக்கலாம்:

(i) காரக அல்லது தொழின்முதல் நிலை வேற்றுமைகள்

வினைமுதல், செயப்படுபொருள், கருவி, கொடைஎதிர்தல், நிலன் போன்றவை.

(ii) காரக ஒட்டு வேற்றுமைகள்

'உடன்', 'ஒடு', 'ஒடு', 'கொண்டு' போன்ற உருபுகளும் சொற்களும் உணர்த்தும் வேற்றுமைகள்.

(iii) கிழமை வேற்றுமைகள்

'அ', 'அது', 'உடைய' என்பன போன்ற உருபுகள் குறிப்பது.

(iv) ஏற்றல் வேற்றுமைகள்

வினையல்லா உறங்கல், இறத்தல் போன்ற உரிப்பொருள் ஒன்று, ஒரு பொருட்குச் சார்த்தப்படும்பொழுது, அதனை ஏற்பதாய் நிலைபெறும் அப் பொருளது வேற்றுமை.

(v) உயர்திணைப்பொருள் முறைமை வேற்றுமைகள்

ஒருவன் பரனை ஏவும் பொழுதோ விளிக்கும் பொழுதோ அவ் வுயர்திணைப் பொருள்களிடையே அமையும் வேற்றுமைகள்.

(vi) ஒப்பு வேற்றுமைகள்

'–இன்', '– ஐ விட' போன்ற உருபுகள் குறிப்பவை.

இந்த வேற்றுமை வகுப்புகளில் முதலிரண்டும் காரக வேற்றுமைகள் பாற்படுபவை. ஆகவே தடைகள் யாதும் இங்கில்லை. பிற வேற்றுமை வகுப்புகளே தடைக்குள்ளாவன. இத் தகையவை வேற்றுமைகள் அல்லவென்றே பல புலவர்கள் ஒதுக்கிவிடுகின்றனர். இதன் திறத்தினை இனிக் காண்போம்.

முதலில் நாம் காணவேண்டியது, கிழமை வேற்றுமைகட்கும் ஏற்றல் வேற்றுமைகட்கும் உள்ள நெருங்கிய தொடர்பு.

இலை பச்சை	→	இலையது பச்சை
கந்தன் கற்றவன்	→	கந்தனது கல்வி
சாத்தி இளையள்	→	சாத்தியது இளமை
வானம் நீலம்	→	வானத்து நீலம்
மலை உயரம்	→	மலையது உயரம்

இத்தகைய உறவுகளை இயக்கவிலக்கணம் கூறும் மொழித் திரிபுகள்வழி உணர்த்த முடியும்.

(அது, இலை) 0 (அது, பச்சை) → (அவ்) இலை பச்சை

'அது இலை' என்று இது இன்னது என்ற கற்றுணர்வு பொருளறிவு பெற்று, அவ்வாறு அறியப்பட்ட அதே பொருள், பச்சை என்ற நிறத்தையும் உடையதாய் விளங்குகிறது என்றும் அறிந்து ('அது, பச்சை' என்பதின் கருத்து இதுதான்) இவ் வறிவினைக் கூற்றாக்குங்கால் வெளிப்படுவதே 'இலை பச்சை' என்ற கிளவி. இங்கு 'இலை' என்ற சொல், 'பச்சை' என்ற சொல்லிற்கு முன் தோன்றுமாற்றால், பின்வரும் சொற்குறிக்கும் பொருளைத் தன்னதாய்க் கொண்டிலங்குவதாய் வேற்றுமை பெற்று விளங்குகிறது என்றும் கொள்ளலாம். அல்லது கிளவி முதல்வோன் முகமாய் நின்று, இலை என்ற சொல்லால் அறியவரும் பொருள், பச்சை என்ற சொல்லால் அறியவரும் பொருளை ஏற்றுநிற்குமாறு அவனால் வேற்றுமைப்படுத்தப்படுகிறது என்றும் கூறலாம். கிளவி முதல்வோன் காணும் போக்கினை ஒழித்து, உலகில் கிளக்கப்படும் பொருள்கள் எவ்வாறு இருக்கின்றன என்ற வினாவில் நம் அறிவு செல்லுமேயெனில், உடைமைக் கருத்துத் தோன்றுகிறது. அவ்வாறன்றிக் கிளவி முதல்வோன் உலகினை எவ்வாறு காண்கின்றான் அக் கூற்றில் என்ற வினாவில் நம்மறிவு செல்லுமேயெனில், ஒரு பொருள் ஏற்பதாய் வேற்றுமைப்பட்டும் பிறிதொன்று அதற்கு அமைவதாயும் காட்சி தோன்றுகிறது. இவ்வாறு

நோக்கும்பொழுது கிழமைத்தொடர்பு உலகில் நிலவும் ஒன்று என்றும், அதனைக் காணும்பொழுது ஒரு பொருள் ஏற்பதாயும் பிறிதொன்று ஏற்கப்படுவதாயும் அமைகிறது என்றும் தெளியலாம். கிழமைத் தொடர்பு பொருள்களிடையே உள்ள ஓர் அடிப்படையான தொடர்பு நிலை. 'இலை பச்சை', 'வானம் உயரம்', 'கந்தன் ஏழை' போன்ற கிளவிகளில் கிழமை வேற்றுமையை விளக்கமாகக் கூறும் உருபுகள் இல்லையெனினும் கிழமைக் குறிப்பு உண்டு என்று நாம் முடிக்கவேண்டும். 'இலை பச்சையது', 'மரம் உயரத்தது', 'கந்தன் ஏழ்மையன்' என்பன போன்ற கிளவிகள் முற்கூறிய கிளவிகளுடன் பொருளில் வேறுபடாது நிற்பதைக் காண்க. மேலும் இக் கிழமைக் குறிப்புத் தெளிவாகும் இடங்களும் உண்டு. 'இலை பச்சை' என்ற கிளவி உண்மையென்று மேற்கொள்ளப்பட்டுக் 'கொளூஉ' நிலைக்குத் தள்ளப்பட்டு, எழுவாய்ப் பொருளே மீண்டும் எழுவாயாக ஆக்கப்படும்பொழுது, உரிப்பொருட்சொல் ஓர் அடையாக மாறுகிறது.

(இலை பச்சை) o (அது உதிர்ந்தது)

→ பச்சை இலை உதிர்ந்தது.

ஆயின் உரிப்பொருளே எழுவாயாக ஆக்கப்படும் பொழுது கிழமைத் தொடர்பு தெளிவாக உணர்த்தப்படுகிறது.

(இலை பச்சை) o (அது நன்று)

→ இலையது பச்சை நன்று.

இவ்வாறு தெரித்து உணர்த்தும் பொழுதுதான் 'அது', 'அ', 'உடைய' என்ற கிழமை வேற்றுமை உருபுகள் பெயர்ச்சொற்களின் ஈற்றில் ஐயம் நீக்கி யாதனது என்ற குறிப்புடன் நிற்கின்றன. கிழமைத்தொடர்பு முன்பும் உண்டு, பிறிதோர் கிளவியுடன் புணர்க்கப்படும்பொழுது, கிழமைபால் ஐயம் தோன்றவே அவ் வையம் நீக்கித் தெளிவுடன் கிழமைத்தொடர்பு குறிக்கப்படுங்கால் வேற்றுமை உருபுகள் தெரிவுநிலையில் வந்தமைகின்றன என்று முடிப்பதே பொருந்தும். கிழமை வேற்றுமை புதிதாக வந்தமைவதல்ல, கொளூஉ நிலைக்குத் தள்ளப்படும் கிளவிக் கண்ணேயே இருக்கிறது என்று நாம் துணியவேண்டும். இவ்வாறெனில் கிழமை வேற்றுமை ஒரு வேற்றுமை அன்றெனில், மேற்கூறிய கிளவிகளில் விளங்கும் பெயர்ச்சொற்கள் வேற்றுமைகொண் டிலங்கவில்லை என்று

கூறவேண்டும். இஃது பொருத்தமுடைத்தன்றாதலால், கிழமை வேற்றுமை ஒரு வேற்றுமையே என்று முடிப்பதே சிறந்தது.

கிழமை வேற்றுமை ஓர் அடிப்படையான வேற்றுமையாக இருப்பதற்குக் காரணமும் உண்டு. 'பச்சை', 'உயரம்', 'நீளம்', 'கடினம்' என்பனவும் இவைபோன்றனவும் பண்பு, குணம், தன்மை என்றவாறு வரும் உரிப்பொருட்டொகுதி. முன்பு விளக்கியவாறு (கி. லோகநாத முத்தரையன், 1982) உரிப்பொருள்களின் இலக்கணமாவது, ஒன்றிற்கு உரியதாய் அன்றி வேறுநிலையில் நிலவாமை. இத்தன்மைய பொருள்கள் தனித்துச் சுட்டப்படும்பொழுது, கருப்பொருள் ஒன்றினைச் சுட்டி அதனது என்றவாறு குறிக்கப்படவில்லை எனில், எந்த உரிப்பொருள் கிளவியது குறிப்பு என்ற தெளிவு கேட்போன்மாட்டு எழாது. உரிப்பொருள்கள் பொருட்பொதுவிகள் (universals); இந்தப் பொருட்குத்தான் உரிமை பூண்டு நிற்கும் என்பது அனுபவ அறிவு. ஒருசில பொருட்கே உரிமையதாக நிற்றல் அதனது பண்பல்ல. ஒன்றிற்கு உரிமையாய் நிற்கும்பொழுது யாதற்கு என்ற தெளிவறிவு வேண்டியதாகிறது.

இனி இத்தன்மைய விளக்கத்திற்கும் ஒரு தடையையும் எழுப்பலாம். 'இலை பச்சை' என்பது 'இலை பச்சையாய் இருக்கிறது' என்பதன் திரிபு; இதைப்போன்றே குறிப்பாய் உடைமை வேற்றுமையை உணர்த்தும் அனைத்துக் கிளவிகளையும் 'ஒன்று ஒன்றாய் இருக்கிறது' என்றவாறு மாற்றிவிடலாம்; பொருளில் வேறுபாடில்லை. ஆயின் உடைமை வேற்றுமைக்குறிப்பு ஈங்கில்லை. இவ்வாறெனில் கிழமை வேற்றுமை 'இலையது பச்சை ...' என்றவாறு வரும் மொழித்திரிபுகளில் தோன்றுவது அடிப்படையானதன்று என்று முடிப்பதே பொருந்துவது என்றும் கூறலாம்.

இதன் மறுப்பாவது இது முடியாது, ஒவ்வாது என்பது. 'இலை பச்சை' என்பதிற்கும், 'இலை பச்சையாய் இருக்கிறது' என்பதிற்கும் பொருளில் வேறுபாடு உண்டு. இத்தகைய மொழியாக்கத்திற்கு மூலமாய், தூண்டியாய் (stimulus) அமையும் உலகநிகழ்ச்சி ஒன்றாயிருப்பினும், அதைக் காணும் போக்கில் வேறுபாடு உண்டு. இந்த வேறுபாடு 'இலையது பச்சை' என்றவாறு இரண்டாவது கிளவியைப் பெயர்த்தொகை யாக்குதற்கு ஒரு தடை இருப்பதால் தெளிவு. 'இலை பச்சையாய் இருக்கிறது' என்ற கிளவியை 'இலை பச்சையாய் இருத்தல்' என்ற பெயர்த்தொகையாகத் திரிக்க முடியும்; 'இலையது பச்சை' என்றவாறு திரிக்க முடியாது. இவை இரண்டும் வெவ்வேறு உரைப்புகள் (propositions). ஆகவே காரகவேற்றுமைகளுடன்,

கிழமை வேற்றுமைகளையும் கொண்டு இரு தன்மைய வேற்றுமைகளாவது உண்டு என்று முடித்து மேற்செல்வோம்.

3.1 இனி ஒப்புமை வேற்றுமைகள் வேற்றுமைகளா என்பது. '–இன்', '–ஐவிட' என்ற உருபுகள் குறிக்கும் வேற்றுமைகள் காரகவேற்றுமை களிலும் கிழமை வேற்றுமைகளிலும் அடங்காது தனித்த ஒன்றாய் விளங்குவது தெளிவு. இரண்டு பொருள்களை, அவை கொண்டு நிலவும் பண்பு, குணம் போன்ற உரிப்பொருள்களை ஒருவன் அளந்து, அந்த அளவையில் உள்ள குறைதல் மிகுதல் என்றவாறு கண்டதன்வழி, இத்தன்மைய வேற்றுமைகள் தோன்றுகின்றன. 'தென்னை மாமரத்தை விட உயரமானது' எனும் பொழுது, 'தென்னை உயரமானது', 'மாமரம் உயரமானது' என்ற இரண்டு கூற்றுகளை உண்மையென்று கொண்டு, கொளூஉவிற்குத் தள்ளி, அவற்றிற்கு உரித்தாய் விளங்கும் உயரம் என்ற பண்பினை அளந்து ஒன்று மற்றதைவிட மேற்பட்டிருத்தலைக் குறிப்பதே இக் கிளவியின் செய்தி.

$\{$(தென்னை உயரம்$_1$) ○ (மாமரம் உயரம்$_2$)$\}$ ○ (உயரம்$_1$ > உயரம்$_2$)

→ தென்னை மாமரத்தைவிட உயரமானது.

இங்கு 'உயரம்$_1$ > உயரம்$_2$' என்றவாறு இரண்டு பொருள்களின் உயரங்கள் வேறுபட்டிருத்தல் பொருள்நிலை; அளப்பதால் அது தெளிவாகிறது. இவ்வாறு ஒரு பண்பு பிறிதொன்றுடன் சமனாய் இருத்தல், மிகுந்திருத்தல், குறைந்திருத்தல் போன்றவை அளந்து தெரியவரும் தொடர்புநிலைகள். ஆகவே இவற்றை ஒருதன்மைய வேற்றுமை களிலேயே அடக்குதல் பொருந்தும். இவ்வாறு உவம வேற்றுமைகளையும் அடக்கிக்கொள்ளலாம்.

3.2 இனி உயர்திணைப்பொருள் முறைமை வேற்றுமைகள். இத்தன்மைய வேற்றுமைகள் ஒருவனை விளிக்கும்பொழுதும், ஏவும்பொழுதும் அமைகின்றன. 'கந்தா!' என்று விளிக்கும் பொழுது, விளிக்கப்படுவோன், வேறுமுகமாய் இருப்பதொழித்து, விளிப்பானின் கண் தன்முகமாய் நிற்கின்றான். விளிப்போனும் அதே சமயத்தில், அவன் முகமாகின்றான். ஆக விளிப்பதன்வழி, இரு உயர்திணைப் பொருள்கள் தன்நிலை – எதிர்நிலை என்ற நிலையில் தொடர்புற்றுப் புதியதோர் முறைமை பெற்றுத் திகழ்கின்றன. இவ்வாறு தொடர்புற்று நிற்றல் ஒரு வேற்றுமையே யாதலால், விளியையும் ஓர் வேற்றுமையாகக்

கொள்ள வேண்டும். இனி ஏவல் தொழில் நடக்கும்பொழுது, ஏவப்படுவோன் எதிர்முகமாக்கப்பட்டே ஏவப்படுகிறான் ஆதலின், ஏவற்கண் விளங்கும் வேற்றுமையும் விளிவேற்றுமையே என்று முடிப்பது பொருந்தும்.

இந்த உயர்திணைப் பொருள்முறைமை வேற்றுமைகளின் சிறப்பாய பண்பு என்னவென்றால், இத்தகைய வேற்றுமைகள் உயர் திணைப் பொருள்கள்மாட்டுதான் நிகழும்; இரு அஃறிணைப் பொருள்களோ, ஓர் உயர்திணைப் பொருள் பிறிதோர் அஃறிணைப் பொருளுடனோ இவ்வாறு முறைமை பெற்று விளங்குதல் இல்லையெனத் தெரிகிறது. நேர் – எதிர் என்ற நிலையில் நிற்றல் ஓர் அறிவுப் புணர்ச்சி; இந்தச் சிறப்பு உயர்திணைப் பொருள்கள் மாட்டே நிகழுவது போலும். ஆராய்ச்சி இன்னும் தேவை.

4.0 இனி வேற்றுமைக்குறிப்பு ஏரணவுருக் கூற்றது, மூல வுருக் கூற்றது அன்று என்று கூறி, அதாவது வேற்றுமைக் கருத்துகள் சொற் களின் பொருண்மைப்பாற்படுவன. ஆகவே பொருண்மைகள் விளங்கும் ஏரணவுருக்களிலே இருக்கக்கூடும். அவை இல்லாது விளங்கும் மூலவுருக்களில் திகழாது எனக் கூறி, மூலவுருவினைப் பயனற்றதாகச் செய்யும் இரண்டாம் தடையின் வலிமையை ஆராய்வம்.

மூலவுரு, ஏரணவுரு, புறவுரு என்ற கருத்துகளும், மேலும் புறவுருவும் அடிப்புறவுரு, முடிப்புறவுரு என்று இரண்டாகும் என்ற கருத்துகளும் மொழியியல் உலகில் புதிய கருத்துகளாதலால் அவற்றைச் சற்றே விளக்குவம். விரிவான விளக்கத்தைப் பிற கட்டுரைகளில் கண்டுகொள்க. (கி. லோகநாத முத்தரையன், 1975, 1979, 1981, 1982 (a)).

1. பூனை பாலைக் குடித்தது.

இக் கிளவி மொழியப்படுவது – மொழிவதன்வழி ஒரு கிளவிச் செய்தி நிகழ்த்தப்படுகிறது. இக் கிளத்தல் வினை அடிப்புறவுரு ஒன்றினைத் திரிப்பதால் வருவது. இதன் அடிப்புறவுருவாவது கீழ் வருவது:


2. $_P[[$ ஒன்று$_1$ ஒன்று$_2$ஐக் குடித்தது$]]_P$


$_q[[$அது$_1$ பூனை$]]_q$ $_r[[$ அது$_2$ பால்$]]_r$

அடிப்புறவுருவில் விளங்கும் p, q, r என்ற மூன்று கிளவிகளும் அணுக்கிளவிகள். இரட்டை அடைகோடுகள் அக் கிளவிகள் உண்மையென்று மேற்கொள்ளப்படுவதை, அவை 'கொளூஉ' நிலைக்குத் தள்ளப்படுவதைக் குறிக்கும். 'அது பூனை', 'அது பால்' என்பவை இன்னது இது என்ற கற்றுணர்வின் வெளிப்பாடுகள். 'ஒன்று ஒன்றைக் குடித்தது' என்னும் கிளவி, ஒரு வினை, ஒரு செயல் நிகழ்ச்சியாதலைக் குறிக்கும். யாது யாதை என்ற கற்றுணர்வு ஆங்கில்லை. செயல் நிகழ்ச்சியறிவும், வினைமுதலாயும் செயப்படுபொருளாயும் விளங்கும் பொருள்களின் கற்றுணர்வும் சேர்ந்து முகிழ்ப்பதே அடிப்புறவுரு. 'அது$_1$', என்ற சுட்டு நீக்கப்பட்டு அவ்விடத்தில் 'பூனை' என்ற சொல் நிறைக்கப்பட்டும், 'அது$_2$' என்ற சுட்டு நீக்கப்பட்டுப் 'பால்' என்ற சொல் புகுத்தப்பட்டும், 'p' என்ற கிளவியிலிருந்து 'பூனை பாலைக் குடித்தது' என்ற முடிப்புறவுரு ஆக்கப்படுகிறது.

இந்த அடிப்புறவுருவைக் கீழ்க்காணுமாறும் விளக்கலாம்:

3.






குறிப்பு: இரட்டைக்கோட்டம்புகள் மெய்யென்று மேற்கொள்ளலைக் (presupposing) குறிக்கும்.

S என்ற தொடரிலிருந்து, S_2 ஒன்று$_1$ என்ற இடத்திலும், S_3 என்பது ஒன்று$_2$ என்ற இடத்திலும் நிரப்பப்பட்டு, கிளவி (1) பெறப்படுகிறது என்பதே இதன் கருத்து. 'குடி' என்ற சொல்லிற்குக் கீழ், அதன் முதல்நிலைகளாகிய வினைமுதல், செயப்படுபொருள், நிலன் என்ற வேற்றுமைகள் குறிக்கப்பட்டுள்ளன. குடி என்ற வினைமுற்றுதலைக் குறிக்க இறந்த கால இடைநிலையே பயன்படுகிறது.

இனி இவ்வாறு ஆக்கப்பட்ட கிளவியின் செய்தி, அக் கிளவியால் ஆவது, தமிழிற்கே உரியதன்று. அச் செய்தி பிறமொழிகளாலும் நிகழ்த்த வரும். அடிப்புறவுருவும் முடிப்புறவுருவும் தமிழ், ஆயின் நிகழ்த்தப்படும் செய்தி ஒரு மொழிப்பொதுவி (linguistic universal). 'The cat drank the milk' என்று ஆங்கிலத்திலும், ***'Kucing minum susu'*** என்று மலாய் மொழியிலும் அதே செய்தி நிகழ்த்தப்படும். செய்தியை நிறுத்தும் பொருண்மைகளும் பொருள்களும் மொழிப்பொதுவிகள். இத்தன்மைய மொழிப்பொதுவிகளைத் தேர்ந்து, செய்தி யுண்டாக்கி அதுவே கிளக்கப்படுகிறது. இந்தச் செய்தியே, சொற்றோர்வு, உருபு தேர்வு, சொற்றொடர்த்தேர்வு போன்ற கிளவியாக்கவினைகளை வரைசெய்து நிற்கிறது. இந்தச் செய்தியின் உருவே ஏரணவுரு. மேற்குறித்த கிளவியின் செய்தியினை – ஏரணவுருவினைக் பின்வருமாறு காட்டலாம்.

4



x_1 = பூனை; x_2 = பால்; α = குடித்தல்

இங்கு 'U' என்பது கருப்பொருள் உலகு; 'V' என்பது வினைகளையும் உள்ளடக்கிய உரிப்பொருள் உலகு; X, Y என்பவை பொருண்மை அல்லது கற்றுணர்வு (கல் + உணர்வு) 'கல்' வகுப்புகள்; 'i' இறந்த காலம்; க,உ வினைமுதல் செயப்படுபொருள் வேற்றுமைகள்; ⊃ என்ற குறி 'கல்' ஒன்றின்வழிச் சுட்டுணர்வுப் பொருள் ஒன்று அறியப்படுதலைக் காட்டும்; Δn : 'n' என்ற எண்ணுள்ள உரியது உட்கிடக்கை; $V^{க,உ}$ எனற் குறி க,உ என்ற வேற்றுமைகள் விளங்கும் உரிப்பொருள் குமுகாயத்தைக் காட்டும்; Yக,உ என்ற நீ, க,உ என்ற வேற்றுமைகள் விளங்கும் 'கல்' உலகைக் காட்டும்; 'டீ' என்ற குறி இடப்புறத்தில் உள்ளவை மெய்யென்று கொள்ளப்படுதலைக் குறிக்கும்; 'φ' என்பது பொருள்மாறி (object variable); '–>'மாறி நீக்கப்பட்டுப் பிறிதொன்றனைப் புகுத்தலைக் காட்டும்.

இனி 'மாடு புல்லை மேய்ந்தது', 'சிறுவன் புத்தகத்தைக் கிழித்தான்', 'உழவன் மரத்தை வெட்டினான்' என்பன போன்ற எண்ணற்ற கிளவிகளின் செய்தியை, ஏரணவுருக்களை நோக்கும் பொழுது, பொருண்மைத் தேர்ச்சியில் அவை வேறுபடுகின்றனவே ஒழியப் பிற கூறுகளில் அல்ல என்பது தெளிவாகும். இவ்வாறு ஏரணவுருக்களில் புதைந்து கிடக்கும் பொதுமைகளைக் கொண்டுளதாய் ஏரணவுரு வாக்கத்தை வரைசெய்து நிற்கும் ஒன்றே மூலவுரு. இந்த மூலவுருவினை எந்தவொரு ஏரணவுரூவினின்றும், ஆங்கு விளங்கும் 'கல்'களை, பொருண்மைகளை நீக்கி, பதிலாக மாறிகளை (variables) அல்லது

பதிலிகளை இட்டு நிரப்பிக் காணமுடியும். காட்டாக மேல்விளங்கும் ஏரணவுருவினின்று x_1, x_2, α என்ற பொருண்மைகளை நீக்கி, அவ்விடத்தில் அத்தன்மைய பொருள்களை மட்டிலும் ஏற்கும் பதிலிகளை (ψ_1, ψ_2,) இட்டு நிரப்பினால், அதற்றது மூலவுரு கீழ்வருமாறு வரும்:

5.

$$\left[\begin{array}{c|c|l} X_{\psi_1,\psi_2} & U_{a,\,b} & \psi_1 \supset a \\ & & \psi_2 \supset b \\ Y_{\theta}^{\text{க},\,\text{உ}} & Y_{\theta}^{\text{க},\,\text{உ}} & \varphi_1^{\text{க}}\varphi_2^{\text{உ}}\alpha\text{ -}i \\ & & (\Delta_1\Delta_2\Delta_3)_o\varphi_1^{\text{க}}\ \varphi_2^{\text{உ}}\alpha\text{ -}i \\ & & \quad\uparrow\quad\uparrow \\ & & \quad `a' \ `b' \end{array}\right]$$

இம் மூலவுருவில் கற்றுணர்வுக்குறி, மெய்யென்று கொண்டேகல், வேற்றுமை ஏற்றல், காலத்துடன் புணர்தல், புகுத்தல் போன்ற நுண்ணக வினைகளும், முதல், கரு, உரி என்ற பொருளறிவுடன் பொருண்மை அல்லது 'கல்' என்ற பிறிதொரு பொருளறிவும் விளங்குவதைக் காண்க. பொருண்மை இன்னதுவென்ற சுட்டொழிந்து ஏனைய ஏரணவுருக் கூறுகளைக் கொண்டிலங்குவது மூலவுரு. இங்கு நாம் கவனிக்க வேண்டியது, தடைக்குள்ளாகி இருப்பதான வேற்றுமைக் குறிப்புகள் இம் மூலவுருவிலும் இருப்பதே. இது பொருந்துவதா என்பதே கேள்வி.

இதை அலசா முன், கிழமை வேற்றுமையைக் குறிப்பாய் உணர்த்தும் கீழ்வரும் கிளவியின் ஏரணவுருவினையும் மூலவுருவினையும் காண்பம்.

6. அவ்விலை பச்சை

இதன் அடிப்புறவுருவாவது,

7. (அது$_1$ இலை) o (அது$_1$ பச்சை)

இதன் ஏரணவுருவாவது

8. $$\left[\begin{array}{c|c|c} X_x & U_a & x_1 \supset a \\ & & a^{\kappa}_1\ \alpha\ (j) \\ Y_\alpha & V_\alpha & \Delta_1 \circ a^{\kappa}\alpha\ (j) \end{array}\right]$$

இங்கு 'j' என்பது நிகழ்காலக்குறி, வளைகோடுகளில் அடைக்கப் பட்டிருப்பது குறிப்பாய் இக்கால வுணர்வு குறிக்கப்படுதலைக் காட்டும்.

இனி இதன் மூலவுருவாவது,

9. $$\left[\begin{array}{c|c|c} X\psi & U_a & \psi \supset a \\ & & a^{\kappa}\alpha\ (j) \\ Y_\theta & V_\theta & \Delta_1 \circ a^{\kappa}\alpha\ (j) \end{array}\right]$$

இம் மூலவுருவினையும் முன்வந்த மூலவுருவினையும் ஒப்புநோக்கி ஆராயும்பொழுது ஒர் உண்மை தெளிவாகிறது. வினைமுற்றுக் கிளவிகளின் மூலவுருவில் பொருண்மைவீட்டிலும், பொருள்வீட்டிலும் வேற்றுமைகள் உண்டு; வினைக்குறிப்புக் கிளவிகளின் மூலவுருவாவது பொருண்மைவீட்டிலோ, பொருள் வீட்டிலோ அது இல்லை யென்பதே. அவ் வுண்மை வினைக்குறிப்புக் கிளவிகட்கண், நுண்ணக வினைகள் விளங்கும் மூலவுருவின் மூன்றாம் வீட்டில்தான் வேற்றுமைக் குறிப்புத் தென்படுகிறது. இதற்குத் தக்க காரணமும் உண்டு. 'பச்சை' என்பனபோன்ற பண்பு உரிப்பொருள்கள் தம் முதல்நிலைகளாக எந்தவொரு வேற்றுமையையும் கொண்டிருக்கவில்லை; கருப்பொருள் களைப் போன்றும் முதற்பொருள்களைப் போன்றும் எத்தன்மைய வேற்றுமைகளையும் அவை ஏற்கும். தொழில் என்னும் பொருள்கள் அவ்வாறல்ல – தமது முதனிலைகளாகச் சில வேற்றுமைகளைக் கொண்டிலங்கும் – ஒரு தொழில் இன்னது என்று அறியும் மாத்திரையானே அதனது உறுப்பாக விளங்கும் சில வேற்றுமைகளின் அறிவும் உடன் வந்துவிடுகிறது. ஆகவே, மூலவுருவின் முதலிரண்டு வீடுகளிலும் அமைந்துவிடுகிறது.

இதற்குத் தடையும் இவ்வாறு எழுப்பலாம். முன்னைய தடையின் கருப்பொருள் இதுவே. மூலவுருவில் இன்ன தொழில் என்ற அறிவில்லை; ஆகவே இன்னின்ன வேற்றுமைகள் ஆங்கு நிலவும் என்று கூறுதற்கு இயலாது என்பதே அது.

இத் தடையை இவ்வாறு நீக்கலாம். 'வினைமுதல்', 'செயப்படு பொருள்' போன்ற காரகவேற்றுமைகள் பற்பல வினைகட்குப் பொது; ஆகவே குறிப்பாய் இன்னதொழில் என்ற அறிவு இல்லை என்றாலும், இத்தன்மைய வேற்றுமைகளைத் தனது முதனிலைகளாய்க் கொண்டுள்ள தொழில் வகுப்பு ஒன்றனதே ஆங்கு ஆகும் என்று ஆணைசெய்து நிற்கும் மாண்பு மூலவுருக்களுக்கு உண்டு என்று துணிவது பொருந்துவதே. இவ்வாறு கிளவியாக்க வினையை ஒருவாறு வரைசெய்து நிற்பதே மூலவுருவது பண்பாதலின். வினைமுற்றுக் கிளவிகட்குத் தேரப்படும் பொருள்களின் இயல்பால் வேற்றுமை வரையறை உண்டு; வினைக்குறிப்புக் கிளவிகட்குத் தேரப்படும் பொருள்களால் வேற்றுமை வரையறை இல்லை.

இனி 'வினைமுதல்' போன்ற வேற்றுமையறிவு, உயிர்ப்பொருள், உயர்திணைப்பொருள் போன்ற கற்றுணர்வுடன் பிரியாது நிற்பது; உயரல்லஃறிணைப் பொருள்கள் வினைமுதல் ஆவதில்லை. ஆதலால் வினைமுதல் குறிப்பு மூலவுருவில் உண்டெனின், பொருண்மைகளும் ஆங்கு உண்டு; எனவே மூலவுரு என்பதும் ஏரணவுரு என்பதும் வேறல்ல என்றவாறு புதிய தடையொன்றும் எழல்கூடும்.

இத் தடையையும் இவ்வாறு நீக்கலாம். மூலவுருவில் முதற்பொருள், கருப்பொருள், தொழில், பண்பு போன்ற உரிப்பொருள் என்றவாறு வரும் பகுத்தறியப்பட்ட பொருளறிவு உண்டு. இவ்வாறு அமைந்துள்ள பொருளறிவின்றி மொழி நிகழ்ச்சி, கிளவிக்கூற்று மெய்பெறவியலாது. மேலும் இவ்வாறான பொருள்திணை அறிவு கற்றுணர்வின்பாற் பட்டதன்று. கற்றுணர்வு இந்தப் பொருட்பாகுபாட்டை உட்கொண்டு, அதனை மீறாது மேல்செல்வதொன்று. இனி இத் தடை யாதைக் காட்டுகிறதோவெனின், கருப்பொருட் கூட்டத்தையும் உயிர்ப்பொருள் உயிரல்பொருள் என்றோ (சேதன அசேதனப்பொருள்கள்), உயர்திணை அஃறிணை யென்றோ மேலும் பகுத்து, அவ் வறிவையும் அடிப்படைப் பொருளறிவின்மாட்டு நிறுத்த வேண்டுமென்பதே. இவ்வாறு செய்தோ மெனின் இத் தடையும் நீங்கும்; வேற்றமைக் குறிப்பு மூலவுருவில் கூடாது என்ற கொள்கையின் வலிமையும் மடியும்.

இனி வினைக்குறிப்புக் கிளவிகளின் மூலவுருவது மூன்றாம் வீட்டில் வேற்றுமைக் குறிப்பு வேண்டுமாவென்பது. 'இலை பச்சை' என்ற ஒரு செய்தியைக் கிளக்கும் கிளவி 'இலை, பச்சை' என்றவாறு வரும் பொருள் எண்ணும் கிளவியின் வேறுபட்டது. இவ்வாறு பொருள்களை எண்ணி அடுக்குதல் வேறு, ஒன்று ஒன்றின்கண் திகழ்வது, உரிமைபூண்டு நிற்பது என்றவாறு செய்தி ஒன்றினைக் கிளப்பது வேறு. இந்த வேறுபாடு வேற்றுமைக் கருத்தின்றி அடையாததைக் காண்க.

ஆகவே, முடிவாக வேற்றுமைகள் பொருண்மைபாற்பட்டதல்ல, மூலவுருவில் வரும் பொருளறிவினையொட்டிக் கிளவியாக்க வினையின் இலக்கணத்தை நிறுவும் மொழியியற் கூறாய் மூலவுருவிலேயே அமையும் ஒன்று என்று முடிக்கவேண்டும்.

5.0 இனி வேற்றுமைதான் என்ன என்ற கேள்விக்கு வருவோம். வேற்றுமைக் குறிப்பு மூலவுருவில் அமையும் பாங்கால், அது பொருளறிவில் ஒன்றன்று என்பது தெளிவு. வேற்றுமைகள் கருப்பொருள்களல்ல; முதற்பொருள்களல்ல; அவற்றுக்கு உரியதாய் விளங்கும் வினைகளிலும், பண்பு, குணம் போன்ற உரிப் பொருள்களிலும் ஒன்றல்ல; வினையுரி, பண்புரி போன்ற அளவைகளில் ஒன்றுமல்ல. இனி இவற்றுள் அகப்படாது, பொருளறிவினையொட்டி எழும் உம்முதல், ஒவ்வுதல், மெய்யென்று மேற்கொள்ளல், மறுத்தல், முன்பினாக்கல் போன்ற மொழி மனோ வினைகளே, நுண்ணக வினைகளே எஞ்சியிருப்பதால், வேற்றுமைகளை இவற்றில் ஒன்றாகக் கருதல் ஒவ்வும். இனி இத்தகைய நுண்ணக வினைகள் பொதுவாக இடைச்சொற்களால் உணர்த்தப்படுதலின், அழிந்தும் அழியாதும் முடிப்புறவுருவில் திகழும் வேற்றுமையுருபுகளை இடைச்சொற்கூட்டத்தில் ஒன்றினதாய் நாம் கொள்ளுதல் வேண்டும். இது தொல்காப்பியரது கருத்தும் ஆகும். தொல்காப்பியர் இடைச்சொற்களைத் 'தமக்கியல்பில' என்றும், 'பெயரொடும் வினையொடும் நடைபெற் றியலும்' என்றும் கூறி, 'வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுந' வையும் இவற்றில் ஒன்றாகக் கூறிச் சென்றுள்ளார் (சொல். இடையியல்). மேலும் 'இடைச் சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே' என்றும் கூறியுள்ளார் (சொல். எச்சவியல்). இவற்றை எல்லாம் கருதும்பொழுது தொல்காப்பியர்தம் கருத்து வேற்றுமையென்பது நுண்ணக வினைகளில் ஒன்று என்பது போல்வதாகும். அவர் தெரித்து விளக்காது விட்டுச் சென்றதை ஒருவாறு இவ் வியக்கவிலக்கண ஆராய்ச்சி தெரித்து உணர்த்துகிறது.

இன்னும் நாம் சொல்லலாம். 'மரத்தை வெட்டிக்கொண்டிருந்த கந்தனைப் பாம்பு கடித்தது' என்ற கிளவியில், கந்தன் என்ற இயற் பெயரால் குறிக்கப்படும் ஒரே பொருள், ஒரே சமயத்தில் வினைமுதல் எனவும், வினைப்படுபொருள் எனவும் இரண்டு வேற்றுமைகளை ஏற்றுக்கொண்டு நிற்கிறது. இன்னும் பல கிளவிகளை ஆராயும்பொழுது, ஒன்றுக்கு மேற்பட்ட வேற்றுமைகள் ஒரே பொருள்மேல் ஒரே சமயத்தில் ஆகும் என்று நாம் அறியவருவம். இத்தகைய பண்பு முறைமைகளுக்கே (role relationship) உரித்தாயதொன்று. ஒரு மாது குழந்தைக்குத் தாய், கணவனுக்கு மனைவி, பெற்றோர்க்கு மகள் என்றவாறு ஒரே சமயத்தில் பல்வேறு முறைமைகளை உடைத்தாயதோர் பொருளாய்த் தோன்றுவதைக் காண்க. இதன்வழி நோக்கும்பொழுது வேற்றுமைகள் உலக நிகழ்ச்சியில் உறுப்பாய் விளங்கும் பொருள்களுக்கு அவற்றிடையே அமையும் முறைமையே என்று கொள்ள வரும். அஃதாவது பொருள்களை ஒன்றோடொன்று உறவுபடுத்தும் ஒரு பொருள்முறைமைநிலை. கல்லாடனார் கருத்தும் இதுவென்றே தெரிகிறது. 'வேற்றுமையியல்' என்ற சொல்லதிகாரப் பகுதிக்கு அவர் ஆற்றிய உரையில் கீழ்வரும் விளக்கம் வருகிறது.

> "வேற்றுமை என்னும் பொருண்மை என்னையெனின், பொருள்களை வேற்றுமை செய்தலின் பெயர் முதலிய எட்டற்கும் வேற்றுமை என்னும் பெயராயிற்று."
>
> "யாதோ வேற்றுமை செய்தவாறெனின், ஒரு பொருள் ஒருவழி ஒன்றினைச் செய்யும் வினைமுதலாகியும், ஒருவழி ஒன்று நிகழ்தற்கு ஏதுவாகியும், ஒருவழி ஒன்று செய்தற்குக் கருவியாகியும், ஒருவழி ஒன்று செய்தற்குச் செயப்படுபொருளாகியும், ஒருவழி ஒன்று கொடுப்பதனை ஏற்பதாகியும், ஒருவழி ஒன்றற்கு உவமமாகியும், ஒருவழி ஒன்று நீங்குதற்கு இடமாகியும், ஒருவழி ஒன்றற்கு எல்லையாகியும், ஒருவழி ஒன்றற்கு உடைமையாகியும், ஒருவழி ஒன்று செய்தற்கு இடமாகியும், ஒருவழி முன்னிலையாதற்பொருட்டு விளிக்கப்படுவதாயும், இன்னோ ரன்ன பிறவுமாகிய பொதுப்பட நிற்றலுடைத்து."
>
> "அவ்வாறு நின்றதனைப் பெயர் முதலிய ஒரோ ஒன்றாகச் சென்று அப் பொதுமையின் வேறுபடுத்தி ஒருபொருட்கு உரிமை செய்து நிற்றலின் வேற்றுமை எனப்பட்டது."

உலகில் பொருள்கள் பொதுமை நிலையில் நிற்கின்றன. முதலென, கருவென, உரியென, 'கல்'லெனப் பொருள்கள் இவ் வுலகாய் நிற்கின்றன.

உலகாய் அவை நின்று நிலவும் நிலை அவற்றின் பொதுமை நிலை (objectivity) ஒருவனது காட்சியாயன்றி, எல்லாருடைய காட்சிக்கும் பொதுவாய், புலனறிவின் விளக்கமாய் அவை நிற்கின்றன. இவ்வாறு அவற்றை அவை நிற்கும் பொதுமைநிலையினின்று வேறுபடுத்தி, முறைமைத் தொடர்புற்ற பொருள்களால் அவற்றைப் பிணைத்து, பந்தப்படுத்தி ஒருவன் அவற்றைக் காணும்பொழுது, பொருள்களுக்குப் பொதுமைநிலையினின்று வேறுபட்ட வேற்றுமைநிலை அமைகிறது. இதனால் பொருள்கள் பொதுமை நிலையினின்று பிறழ்கின்றன என்று சொல்ல முடியாது. மானிட அறிவில் அவை விளங்கும்பொழுது வேற்றுமைப்பட்டுத் தொடர்புற்ற பொருள்களாகவே அவை தோன்றுகின்றன என்று கூறலாம். பொருள்களை வேற்றுமைப்படுத்தியே உலகினை அறியவேண்டும் என்ற ஒரு தளையுடன்தான் மானிட அறிவு செயல்படுகிறது போலும். இந்தத் தளை இருப்பதால்தான் தொடரியல் பண்பு (syntactic structure) மொழிக்கு அமைகின்றது என்று கூறுவதும் ஒவ்வும்.

இனி இந்த மானிட அறிவு ஏன் வேற்றுமைப்படுத்தியே உலகறிவு பெறல் வேண்டும் என்ற தளையுடன் விளங்குகிறது என்ற கேள்வியையும் எழுப்பலாம். ஆயின், அது மொழியாய்வு அல்லாததால் அதனை விடுப்பம். பண்டைய தமிழர்கள் இந்தக் கேள்வியையும் எழுப்பினர்; ஆழ்ந்த பல கருத்துகளையும் கூறியுள்ளனர். தொல்காப்பியர் விட்டுச் சென்ற அறிவுநிலையினின்று இன்னும் ஆழம் சென்று கண்டறிந்த உண்மைகளே சைவசித்தாந்தம் என்று விளங்குகிறது. இத்தன்மைய கேள்விகளில் ஊக்கமுடையோர் மெய்கண்டார், அருணந்தி, உமாபதி, சிற்றம்பலவர், தத்துவப் பிரகாசர், கண்ணுடைய வள்ளல், சிவஞான வள்ளல், சட்டைநாத வள்ளல் என்பார் போன்றவர்களது நூல்களைக் கற்று அறிந்துகொள்க.

6.0 இவ்வாறு வேற்றுமை எனும் மொழியியற்கூற்றின் இலக்கணப் பண்புகளை உணர்த்திய பின்றை, தொல்காப்பியத்தில் விளங்கும் எழுவாய் வேற்றுமைபற்றிய சில முரண்பாடுகளை எடுத்துக் காட்டவும் கடமைப்பட்டுள்ளோம்.

"யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்"

(சொல். வேற்றுமை மயங்கியல், 106)

என்ற சூத்திரத்தில், உருபுகள் வேறுபட்டாலும் அவற்றின் குறிப்பு

ஒன்றுமேயெனின், அவை ஒரே வேற்றுமை உருபுகளாகின்றன. இவ் வேற்றுமை உருபுகள், உணர்த்துவதும் இடைச்சொற்கள் உணர்த்துவ தோர் பொருள்போன்றதே என்றும் தொல்காப்பியர் கூறியுள்ளார் என்பதையும் கண்டோம். இதைத் தொல்காப்பியர் எழுவாய் வேற்றுமை என்றதோர் வேற்றுமை உண்டென்றும் கொண்டு அதனைப் 'பெயர் தோன்று நிலை' என்றும் விளக்குவர்.

இனி இப் 'பெயர்தோன்று நிலை' என்பதை உருபுகள் யாதேனும் ஏலாது பெயர்ச்சொற்கள் தோன்றுநிலை என்று கொண்டோமெனில் 'பொருள்செல் மருங்கின் வேற்றுமை' என்பதோடு முரணும். 'பெயர் தோற்று நிலை', 'பெயர் தோற்றாநிலை' என்ற இருநிலைகள் பெயர்ச் சொற்களுக்கு உண்டு; அதனில் 'பெயர் தோற்றுநிலை' உடைத்தாகிய பெயர்ச்சொற்கள் எழுவாய் வேற்றுமையைக் குறிக்கும் என்றும் கொள்ளலாம். இவ்வாறுதான் தெய்வச்சிலையார் கொண்டார் என்பது கீழ்வரும் விளக்கத்தால் தெளிவு :

> "அஃதேல், பெயர் என அமையும்; தோன்றும் நிலை என்றதனாற் பயன் என்னையெனின், பெயர் கண்டுழியெல்லாம் வேற்றுமையென்று கொள்ளற்க என்பது அறிவித்தற்கெனக் கொள்க. அஃது யாதோ எனின், 'ஆயன் சாத்தன் வந்தான்' என்றவழி ஆயன் என்பது சாத்தற்கு அடையாகி நிற்றலானும், வருதற்றெழில் சாத்தனொடு முடிதலானும், இரு பெயருள் ஒருபொருட்கண் வருதலின் இரண்டினையும் வேற்றுமை எனப் படாது ஆகலானும் இறுதி நின்றதே வேற்றுமை எனப்படுவது என்று கொள்க."

வேற்றுமைப்பட்டு நிற்றலாய பொருளைக் குறிப்பது மரம், மரத்தை, மரத்தால், மரத்திற்கு என்றவாறு பல்வேறு வேற்றுமைகளைக் குறிக்கும் அனைத்துப் பெயர்ச் சொற்களுக்கும் உள்ள பொதுவானதோர் பண்பாதலால், 'எழுவாய் வேற்றுமை' என்பதோர் வேற்றுமைக்குச் சிறப்பாகி அதனைத் தனிப்படுத்தாது. இவ்வாறு தனிக்காது பொதுவாய் நிற்பதைக் காட்டுவதெனில், பொதுமையினின்று வேறுபட்டு நிற்பதே வேற்றுமைநிலை என்பதனொடு முரணும்.

இனிப் 'பெயர்தோன்று நிலை' என்ற தொடரின் பொருண்மையைத் தெய்வச்சிலையார் கூறுவது போன்று, பயனிலைச் சொல்லால் குறிக்கப்படும் பொருளை ஏற்பதாய், கொண்டுமுடிவதாய் நிற்கும் ஒரு பொருளது நிலையே என்று நாம் கொண்டால் முற்கூறிய வேற்றுமை

விளக்கத்துடன் முரணாத வகையில் இலக்கணம் கிடைக்கும். அடையாகிய 'ஆயன்' என்பன போன்ற சொற்கள், தனித்ததொரு பொருளின்மேல் நோக்குச் சென்று முடியுமாறு நிற்பதிலையாகலின், 'ஆயன் சாத்தன்..' என்ற தொடரில் 'ஆயன் அடையாகிப் பெயர்ச் சொல்லிலாதுவிடுகிறது. ஆகப் 'பெயர்தோன்று நிலை' என்பதை ஒரு கூற்று நிகழுங்கால், கிளப்போன் குறிக்கக் கேட்போன் அறியவருமாறு நிற்கும் பொருட்சுட்டொடு, அப் பொருள் பயனிலைத் தொடரால் குறிக்கப்படு பொருளை ஏற்கும் ஒன்றாய் வேற்றுமைப்பட்டு நிற்கும் ஒரு நிலைமை என்று கொள்வது ஒக்கும்.

இனித் தொல்காப்பியர் இப் பெயர்தோன்று நிலையைக் கீழ்வருமாறு விரிப்பர்:

"பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்
றன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே"

(சொல். வேற்றுமையியல், 66)

உண்டென்று சுட்டுதற்கண் அமையும் பொருளது வேற்றுமை நிலையும், விளிக்குங்கால் விளிக்கப்படுபொருளது நிலையும், வினாவுதற் கண் தன்முகப்படுத்தப்பட்ட பொருளது நிலையும், பண்பொன்றினை ஏற்பதாய் நிற்கு நிலையும் இவை போன்றவையும் எழுவாய் வேற்றுமை எனப்படும் பெயர்தோன்று நிலைகள் என்பதே தொல்காப்பியரது கருத்து என்பது இச் சூத்திரத்தால் தெளிவு.

இதுவே தொல்காப்பியரது கருத்தெனில், பல முரண்பாடுகளைத் தொல்காப்பியரது இக் கூற்றில் காணலாம். இவற்றை இனிச் சற்றே காண்போம்.

(அ) 'உண்டு' என்று சுட்டப்படும் பொழுது அதனைப் பெறுவதாய் நிற்கும் பொருள் வேற்றுமையே பெற்றிருக்கவில்லை. அவ்வாறு கொண்டோ மெனில் முரண்பாடுகள் தோன்றும். எவ்வாறு என்று காண்போம்.

தொல்காப்பியரே ஓரிடத்தில்,

'எதிர்மறுத்து மொழியினும் தத்த மரபில்
பொருணிலை திரியா வேற்றுமைச் சொல்லே'

(சொல். வேற்றுமை மயங்கியல்)

என்று கூறியுள்ளார். ஆகவே பொருள் இன்மையைச் சுட்டும் 'ஆ இல்லை', 'பேய் இல்லை', 'ஆகாயப்பூ இல்லை' என்பனபோன்ற கிளவிகள் 'ஆ உண்டு', 'பேய் உண்டு', 'ஆகாயப்பூ உண்டு' என்பனபோன்ற கிளவிகளின் எதிர்மறையாகலின், இவ்விருதன்மைய கிளவிகளும் ஒரே வேற்றுமைப் பொருளைக் கொண்டிலங்குகின்றன என்று முடிக்க வேண்டும். எனவே இன்மை கிளக்கும் கிளவிகளில் அமையும் 'ஆ', 'பேய்', 'ஆகாயப்பூ' என்பன போன்ற சொற்கள் 'பெயர்தோன்று நிலை' ஒன்றினைக் குறித்தாக வேண்டும். பெயர் உண்டெனச் சுட்டிலாது பெயர் தோன்று நிலை இல்லையாதலால், இன்மை கிளக்கும் கிளவிகளின் பெயர்ச் சொற்கள் பொருள் உண்மையைக் குறிக்கின்றன என்று கொள்ள வேண்டும். இவ்வாறு கொள்வோமெனில் 'ஆ இல்லை' என்பன போன்ற கிளவிகளின் பொருளுணர்வில் முரண்பாடிலாது விளங்க, தொல்காப்பியர் வழிச் சென்ற நம் ஆராய்ச்சி முரண்பாடு உண்டெனக் காட்டுகிறது.

இனிப் பொருண்மை சுட்டலைத் தனித்துக் கிளந்தமையால் அதன் தற்சிறப்பினை ஒருவாறு தொல்காப்பியர் உணர்ந்திருந்தார் என்று கொள்வது தகும். தெய்வச்சிலையார் உரையாலும் இது தெளிவு. அவர் கூறுகிறார்:

> "அஃதேல், இவையெல்லாம் பெயர்ப்பொருண்மையைச் சுட்டி நிற்றலின், பொருண்மை சுட்டல் பொருண்மை மாத்திரத்தைக் குறித்தலாலும், வியங்கொள வருதல் அப் பொருண்மை புடைபெயர்தற்கு நிமித்தம் ஆகி வருதலாலும், வினைநிலையுரைத்தல் அப் பொருளின் புடைபெயர்ச்சி யாகலாலும், வினாவிற்கேற்றல் அவ்வாறன்றி வினவப்படும் நிலைமையதாகி நிற்றலாலும், பண்புகொள வருதல் அப் பொருட்கண் உள்ளதோர் குணத்தைக் குறித்துநிற்றலாலும், பெயர் கொள வருதல் அப் பொருண்மை முழுதும் உணரப் பிறிதோர் வாய்பாடாக வருதலாலும், வகுத்துக் கூறினார் என்க."

இனிப் பொருள் உண்மை மாத்திரத்தையுணர்த்தும், 'ஆ உண்டு', பொருள் இன்மை மாத்திரத்தை யுணர்த்தும் 'ஆ இல்லை' என்பன போன்ற கிளவிகள் எனில், இத்தன்மைய கிளவிகளில் விளங்கும் பொருள்சுட்டுச் சொல், பிறிதொரு பொருளை ஏற்பதாய் வேற்றுமைப்பட்டு நிற்கும் பெயர்தோன்று நிலையைக் குறிக்காது வேறொன்றினைக் குறிப்பதாகக் கொள்ள வேண்டும். கொள்ளவே அவை எழுவாய் வேற்றுமைச் சொற்களே அல்ல என்றும் முடிக்க வேண்டும். வேறு வேற்றுமைக் குறிப்பும்

ஆங்கில்லையாதலின், இத்தகைய சொற்கள் பெயர்ச்சொற்களேயல்ல என்று துணிய வேண்டும். எனவே 'ஆ உண்டு', 'ஆ இல்லை' என்பன போன்ற கிளவிகள் எழுவாய்–பயனிலைத் தொடர்களே யல்ல; வேறொன்று என்று நாம் துணிய வேண்டும். அஃதாவது, தொல்காப்பியர் கூற்றிற்கு மாறாகப் 'பொருண்மை சுட்டல்' ஒரு பெயர்ப் பயனிலையே அல்ல என்று நாம் முடிக்கவேண்டும். இவ்வாறு துணிந்தால் முற்கூறிய முரண்பாடு இல்லாது ஒழியும். இயக்கவிலக்கணம் இதற்குத் தகுந்ததோர் காரணத்தையும் தருகிறது.

'அது மாடு', 'அது பால்' என்பன போன்ற கிளவிகள் 'அது ஒடுகிறது', 'அது பச்சை' என்பன போன்ற கிளவிகளுடன் முடிப்புறவுருவில் ஒத்திருப்பதுபோல் தோன்றினும், அவற்றின் மூலவுருக்கள் வெவ்வேறான தன்மையன. 'அது மாடு' என்பன போன்ற கிளவிகள் 'அது' என்ற சுட்டால் குறிக்கப்படும் வெற்றுணர்வுப் பொருள், 'மாடு' என்ற சொல்லால் உணர்வில் தோன்றும் 'கல்' நிற்க அது கற்றுணர்வுப் பொருளாகுவதை வெளிப்படுத்தி நிற்கின்றன. வெற்றுணர்வு கற்றுணர்வாதல், பொருளறிவில் தோன்றும் மாற்றம் – இரு பொருள்களிடையே ஒரு முறைமையினை, ஒரு தொடர்பினைக் கண்டு அதனால் வரும் உலகறிவு அன்று. 'அது' எனும் சுட்டு இங்கு ஒரு பொருளினைச் சுட்டும்; அதற்கு மேலாக அப் பொருளது வேற்றுமை நிலையைக் குறிக்காது. ஆகவே அவை சுட்டுச் சொல்லாயினும் பெயர்ச்சொற்களல்ல. இனி 'அது ஒடுகிறது' என்பன போன்ற கிளவிகளில் வரும் 'அது'வெனும் சுட்டு, ஒரு பொருளைச் சுட்டுவதுடன், ஒன்றினைச் செய்வதாய் நிற்கும் வேற்றுமை நிலையையும் காட்டுகிறது; ஆகவே பெயர்ச்சொல்லாகிறது. சுட்டுணர்வாகிய ஒரு பொருள் இன்னது எனக் கற்றுணர்வாகியதைக் குறிப்பது முன்னது; சுட்டுணர்வாகிய ஒரு பொருள் ஒரு வினைசெய்வதாய், ஒரு பண்பினைக் கொண்டிருப்பதாய் வேற்றுமைநிலைப் படுவதைக் காட்டுவது பின்னது. சுட்டுணர்வுப் பொருள் கற்றுணர்வுப் பொருளாதல் பொருளது அறிவில் ஏற்படும் மாற்றம். பிறிதொரு பொருட்குறிப்பு ஆங்கில்லை யாதலால் முறைமைக் குறிப்பிற்கு ஆங்கிடமில்லை. எனவே, வேற்றுமைக் கருத்திற்கும் ஆங்கிடமில்லை. 'அது' எனும் சுட்டுச் சொல்லும் பெயர்ச் சொல்லிலாது நிற்கிறது.

இனி 'அது மாடு' என்பது உண்மையாக 'மாடு உண்டு' என்பதும் உண்மையாவதைக் காண்க. இம் மொழிமாற்றம் 'அது' எனும் தனிப்

பொருள் சுட்டினை நீக்கி, பொருளுலகு முழுவதிலும் சுட்டினைப் பரப்புவதால் வரும் மாற்றம். இவற்றின் மூலவுருவினைக் கீழ்வருமாறு கணிக்கலாம்:

(1) அது மாடு

$$\left| X_x \right| U_u \left| \quad (x \supset a) \quad \right| \qquad x = \text{மாடு}$$

(2) மாடு உண்டு

$$\left| X_x \right| U_A \left| (\Sigma A_\varphi)\ (x \supset \varphi) \right| \quad x = \text{மாடு}$$

இங்கு 'Σ' எனும் குறி 'யாதோ ஒன்று' என்ற கருத்துள்ளது 'A' என்பது ஒரு பொருள் வகுப்பு, 'φ' என்பது ஒரு பொருள்மாறி (variable).

இதன் கருத்தாவது, பொருளுலகில் யாதோவொன்று மாடென்பது.

இவ் விரண்டினையும் ஒப்பிடும்பொழுது, பொருண்மை சுட்டு கிளவிகளில். பொருள் சுட்டு ஒன்றின்மேல் நிற்பது தவிர்ந்து பொருளுலகு முழுவதிலும் படருகிறது என்பது தெளிவாகும். இவ்வாறு சுட்டுப் படரும்பொழுது, பொதுமைநிலையில் நிற்கும் உலகப் பொருள், பொதுமை நிலை நீங்கி வேற்றுமைநிலை பெற்று நிற்குமாறு ஆவதில்லை. பொதுமை நிலையிலேயே அவை நிற்கின்றன என்பதால், 'பொருண்மை சுட்டல்' ஒரு பயனிலையே அன்று, பொருளைச் சுட்டும் சொல்லும் வேற்றுமைக் குறிப்பு உள்ள ஒன்றன்று. ஆகவே அஃது எழுவாய் – பயனிலைத் தொடர் எனக் கொள்ளவும் வாராது.

(ஆ) இனி 'இலை பச்சை' என்பன போன்ற கிளவிகளில், 'இலை' போன்ற பெயர்ச்சொற்கள், பண்புகொள வருதல் என்ற எழுவாய் வேற்றுமையது என்பார் தொல்காப்பியர். 'கொளவருதல்' என்பதால், இது நாம் கூறிய ஏற்றல் வேற்றுமையே யன்றிப் பிறிதொன்றன்று. அவ்வாறெனில் ஏற்றல் வேற்றுமை எழுவாய் வேற்றுமையாகிவிடும். ஆயின் நாம் முற்கூறியவாறு, இங்கு ஏற்றல் வேற்றுமை போலத் தோன்றினும், உண்மையில் அது கிழமை வேற்றுமையே என்று கொள்ளின், பண்புகொள வருதல் ஓர் எழுவாய் வேற்றுமையா கிழமை வேற்றுமையா என்ற கேள்வி எழுகிறது.

தெய்வச்சிலையார் பண்புகொள வருதல் அப் பொருட்கண் உள்ளதோர் குணத்தைக் குறித்து நிற்கும் என்பார். 'இலை பச்சை' என்பதின் கருத்து, 'இலையின்கண் பச்சை உண்டு' என்றோ, 'இலை பச்சை உரித்து/உடைத்து' என்றோ பொருள் காணலாம். ஒரு பொருள் பிறிதொரு பொருட்கண் உள்ளமையை, அதாவது பண்பாகக் கிடப்பதைக் கிழமை வேற்றுமையின் ஒரு கூறாகக் கொள்வது பொருத்தமாகத் தெரிகிறது. இவ்வாறு கொள்வதால் 'இலை பச்சை' என்ற கிளவி, 'இலையது பச்சை...' என்றவாறு ஒரு பெயர்த்தொகையாவதற்கு நல்லதோர் விளக்கமும் கிடைப்பதால், இங்கு நின்றிலங்கும் வேற்றுமை கிழமைவேற்றுமையே என்று துணிவது பொருந்தும். ஆகவே 'பண்பு கொள வருதல்' என்பது ஓர் எழுவாய் வேற்றுமையே அன்று என்று முடிக்க வேண்டும்.

(இ) அடுத்து வினைநிலை யுரைத்தற்கண்ணும் எழுவாய் வேற்றுமை இலக்கணம் பொருந்துவதாகத் தெரியவில்லை. 'கந்தன் மரத்தை வெட்டினான்', 'நாய் பூனையைக் கடித்தது' என்பன போன்ற கிளவிகளில், உருபில்லாப் பெயர்ச்சொற்கள் வினைமுதல் என்ற பொருள் வேற்றுமையைக் குறிக்கின்றன. இனிக் 'கந்தன் உறங்கினான், பிறந்தான், வளர்ந்தான், இறந்தான்' என்பன போன்ற கிளவிகளில் உள்ள பெயர்ச்சொல் உணர்த்துவது வினைமுதல் வேற்றுமையல்ல. 'உறங்கல்', 'பிறத்தல்', 'வளர்தல்', 'இறத்தல்' போன்றவை செய்வினைகள் அல்ல. அவை வெளைவுகள் (வெளைவு – விளைவு); உலகில் ஓர் இடத்திலும் காலத்திலும் நடப்பவை (processes); ஒரு பொருளுக்கு நேர்பவை. ஆகவே இங்குத் திகழும் வேற்றுமை ஏற்றல் வேற்றுமையேயன்றி வினைமுதல் வேற்றுமையன்று.

'கந்தன் உறங்கினான்' என்பதில் 'உறங்கல்' எனும் வெளைவை, கந்தன் ஏற்று நின்றான்; ஏற்றுநின்ற பொருளொன்றாய் வேற்றுமைப்பட்டு நின்றான் என்ற குறிப்புண்டு. வெளைவு ஒன்றினை ஏற்று நிற்பது, கிழமை வேற்றுமைக்கு இறக்கவொண்ணாததையும் காண்க. ஒருவன் 'உறங்கல்', 'இறத்தல்', 'மயங்கல்' போன்ற வெளைவுகட்குப் படல், அவற்றிற்கு உரிமை பூண்டு நிற்பதல்ல. அவ் வெளைவுகள் நேரிடும் இடமாய் நிற்பதே ஏற்றல் வேற்றுமை.

இந்த ஏற்றல் வேற்றுமையும் வினைமுதல் வேற்றுமையும் ஒன்று அல்ல என்பதையும் நாம் தெளிவாக அறியவேண்டும். 'கடித்தல்',

அடித்தல்' போன்றவை செய்வினைகள். ஒருவனோ ஒன்றோ அவற்றை முற்றுவிக்காவிடில், அவை பொருளாக உலகில் நிலவா. இவ்வாறு செய்வினைகளை முற்றுவிக்கும் பொருளே வினைமுதல்; முற்றுவித்தலே வினைசெய்தல். ஏற்றல் வேற்றுமைப்படும் பொருள், வினை ஒன்றினை முற்றுவிப்பதில்லை; வெளைவு ஒன்றினை ஏற்பதாயே நிற்கிறது.

இவ்வாறெனின் வினைநிலை உரைத்தற்கண் வரும் எழுவாய் வேற்றுமை வினைமுதல் வேற்றுமை, ஏற்றல் வேற்றுமை என்று இரண்டாகிறது. ஆயின் இவ் விரண்டு வேற்றுமைகட்கும் பொதுவாய், பிற வேற்றுமைகட்கு இல்லாது நிற்கும் பொருள்தோன்று நிலை ஒன்று இருப்பதாகத் தெரியவில்லை. பொதுமை நிலையினின்று வேற்றுமைப்பட்டு நிற்பதேயல்லாது வேறொரு பொதுவி ஊடுருவி நிற்பதாகத் தெரியவில்லை. எனவே இங்கும் எழுவாய் வேற்றுமை என்ற ஒன்றிற்கு இலக்கணம் கிடைக்கவில்லை.

(ஈ) 'வியங்கொள வருதல்' என்ற வேற்றுமையை உயர்திணை முறைமை வேற்றுமைகளில் நாம் அடக்கியுள்ளோம். விளித்துப் பிறிதொன்றினைத் தன்முகமாக்குதல் உயர்திணைக்கண் மட்டுமே நடப்பதொன்றாகையால், நாம் கூறுவதே சிறப்புடைத்தாகத் தெரிகிறது.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து ஒன்று தெளிவாகிறது. எழுவாய் வேற்றுமை என்று ஒரு வேற்றுமை இல்லை என்பதே அது.

பொருண்மை சுட்டல் வேற்றுமையே உடையதல்ல; பண்பு கொள வருதல் கிழமை வேற்றுமையின்பாற்படும்; வினைநிலை யுரைத்தல் ஏற்றல் வேற்றுமை, வினைமுதல் வேற்றுமை என்று இரண்டாகிறது; வியங்கொள வருதலும் உயர்திணைகட்கே அமையக்கூடிய ஒரு முறைமை நிலையென்று கொள்வதே சிறப்பு. இவற்றையெல்லாம் ஊடுருவி நின்றும் பிற வேற்றுமைகளினின்று வேறுபடுத்தி நிற்பதாயும் உள்ள ஓர் எழுவாய் வேற்றுமை இலக்கணம் இருப்பதாகத் தெரியவில்லை.

இதுவே உண்மையெனில், ஏன் இவ்வாறு பல்வேறு இலக்கணப் பண்புகளையுடைய வேற்றுமைகளைத் தொகுத்து ஒரு வகுப்பாக்கினார் தொல்காப்பியர் என்ற கேள்வியும் எழும். அவர் தொகுத்த எழுவாய் வேற்றுமைகள் அனைத்தும் புறப்பண்பில் ஓர் ஒற்றுமையுடையன. அனைத்தும் தனித்ததோர் உருபின்றிப் பெயர்ச்சொல்லாலேயே உணர்த்தப்படுவது என்பதே. அது. 'பொருள்செல் மருங்கில் வேற்றுமை

சாரும்' என்று தொல்காப்பியர் கூறினாரேனும், இப் பொதுவாகிய புறப்பண்புநிலை ஒரு மயக்கத்தை ஏற்படுத்தி, எழுவாய் வேற்றுமை யொன்று இருப்பதாக அவரை முடிக்கச் செய்தது என்றே நாம் கருதவேண்டும். அடிப்புறவுரு, முடிப்புறவுரு என்ற இரண்டு புறவுருக்களைக் கண்ட நாம், வீரசோழிய ஆசிரியர் சொல்லுமாறு போல, அடிப்புறவுருவில் வினைமுதலுக்கு 'சு' வென்றும், பிற வேற்றுமைகட்கு வேறு உருபுகளையும் இட்டு, முடிப்புற உருவில் அவை அழிக்கப்படு கின்றன உண்மையில் வெவ்வேறு வேற்றுமைக் குறிப்பு உடையதாயினும் புறப்பண்பில் உருபிலாமை என்ற பொதுப் பண்புடன் இவை திகழ்கின்றன என்று அப் புறப்பண்பு ஒற்றுமையை விளக்கி அமைதி காணலாம்.

முடிவுரை

இவ் வியக்கவிலக்கண வேற்றுமையாய்வுவழி, எழுவாய் வேற்றுமை என்பதோர் வேற்றுமை இல்லையென்று பெறப்படுகிறது. எனவே அத்தன்மைய வேற்றுமையுண்டென்ற நிலையினின்று கழன்று, வேற்றுமைகளைக் காரக வேற்றுமைகள், காரகச் சார்பு வேற்றுமைகள், கிழமை வேற்றுமைகள், ஏற்றல் வேற்றுமைகள், உயர்திணைப் பொருள் முறைமை வேற்றுமைகள், ஒப்பு வேற்றுமைகள் என்றவாறு வகுத்து, அதன் வழி அவற்றை ஆராய்வதே சிறப்புடைத்தாகத் தெரிகிறது. இவ்வாறு அவற்றை வகுப்பதற்குத் தகுந்ததோர் விளக்கமும் இருப்பதால், இதுவே உண்மைநிலை என்று கொள்வதற்கும் இடமுண்டு.

இரண்டாயிரம் ஆண்டுகட்குமேல் நின்று விளங்கிய ஓர் இலக்கணக் கருத்துப் பிழையுடையது என்று கூறுதற்கு ஒரு தறுகண்மை வேண்டும். இயக்கவிலக்கணம் தந்த அறிவின் விளக்கத்தில் அமைந்ததே இக் கூற்று என்பதால் அத் தறுகண்மை தோன்றிற்று. அதன் சிறுமையையும் பெருமையையும் ஆராய்வது அறிஞரது கடன்.

நூல்கள்

1. ஆதித்தன், தமிழில் வேற்றுமைகள் மொழியியல், 5:1 (1981)' பக். 89–106

2. லோகநாத முத்தரையன், கி.

1975 தொல்காப்பியர் மரபுவழி மொழிப்புணர்ச்சி இலக்கணம்

1979 இயக்கவிலக்கணக் கிளவியாக்க விளக்கம்

1981 'என்று', 'என்பது', ஓர் இயக்கவிலக்கண விளக்கம்

(இவை மூன்றும் உலகத் தமிழாராய்ச்சி மையம் வெளியிடும் தமிழியல் ஆய்விதழில் வந்திருக்கின்றன)

1983 a Process Grammar : An Integrated Theory of Acts, Speech Arts and Language Structure IIDL Vol.XII No.2

1983 b Process Grammar, Agamic Psychology and the Social Sciences ***Tamil Civilization*** Vol.I. No.3

1985 The Concept of Linguistic Competence in Process Grammar - Some Reflections *IJDL* Vol. XIV No.1

1986 தொல்காப்பிய மொழியியலும் கிளவியாக்க விளக்கமும் (Unpublished).

23

இதழ்வழிச் சொல்லாக்கங்கள் - திறனாய்வும் நெறிமுறையும்

இலக்குவனார் திருவள்ளுவன்

உலகமொழிகள் அனைத்திலும் உள்ள கலை, அறிவியல் கருத்து வளங்களை எல்லாம் தமிழிலும் படைக்க வேண்டும் என்ற உணர்வு வளர்ந்துவருகிறது. இம் மொழிமாற்றப் படைப்பிற்கு அடித்தளமாய் அமைவன சொல்லாக்கங்களே ஆகும்.

பல்வேறு கலை, அறிவியல் துறைகள் தமிழில் இன்னும் அறிமுகம் ஆகா நிலையில் உள்ளன. ஆனால் இவற்றை மொழிமாற்றம் செய்கையில் உதவ வேண்டிய கலைச்சொற் கருவூலம் வெறுமையாய்க் காட்சி தந்து நம் வறுமையைப் புலப்படுத்துகின்றது. கலைச்சொற் கருவூலத்தை நிலைத்த நிறைவுடன் காண விழைவோர், சொல்லாக்க முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இருப்பினும் நோக்கத்தில் ஒன்றுபடுவோர் வழிமுறைகளில் மாறுபட்டு வளங்காணும் வகையின்றி உள்ளனர்.

சொல்லாக்க முயற்சிகள் எவ்வாறு அமையவேண்டும் என்பதைக் காணலே இக் கட்டுரையின் நோக்கம். நடைமுறை எளிமை கருதி ஆங்கிலக் கலைச்சொற்களுக்கான தமிழ்ச் சொல்லாக்கங்களை இங்குக் கூறினாலும், இவ் வழிமுறைகள் பிறவற்றிற்கும் பொருந்தும்.

சொல்லாக்கம் எவ்வாறு இருக்க வேண்டும்? பெரும்பாலான இடங்களில் சொல்லுக்கான நேரிடைப் பொருள்தான் மொழிபெயர்க்

கப்படுகின்றன. முனைவர் ஔவை நடராசனார் கூறுவதைப்போல் சொல்லுக்கான பொருளை மொழிபெயர்க்காமல், அந்தச் சொல் உணர்த்தும் பொருளுக்கான சொல்லை மொழிபெயர்த்தால்தான் சொல்லாக்கம் சிறப்புற அமையும்.

எடுத்துக்காட்டாக, நாம் 'தட்டு' என்றவுடன் உணவுத்தட்டைத் தான் கருதுவோம். ஆனால் இச் சொல்லே இடத்திற்கு ஏற்ற பல்வேறு பொருளைத் தரும்பொழுது அதற்கேற்ற பொருளில்தானே மொழிபெயர்க்க வேண்டும்.

'அவனுக்குப் பணத்தட்டு',
'ஒருதட்டுத் தட்டி வீழ்த்தினான்',
'மேல்தட்டில் உள்ளது',
'தட்டுத்தடுமாறும் நெஞ்சம்',
'வீட்டின் முன்தட்டில் வாழ்கிறார்'

என வரும் சொற்றொடர்களில் 'தட்டு' என்னும் சொல் எந்தப் பொருளில் கையாளப்படுகிறது என்பதை உணர்ந்தல்லவா பிறமொழியில் பெயர்க்க வேண்டும். அதுபோலத்தான் பிறமொழிச் சொற்களையும் அவை கையாளப்படும் பொருள்களை உணர்ந்து மொழிபெயர்க்க வேண்டும்.

இன்றைக்குச் சொல்லாக்கப் பணியில் ஆங்காங்கே பல்வேறு தனிப்பட்ட அன்பர்களும் குழுக்களும் அமைப்புகளும் அரசின் துறைகளும் ஈடுபட்டு, மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகின்றது. இவ்வாறு சொல்லாக்கப் பணியில் ஈடுபடும் பொழுது, கருத்தில் கொள்ள வேண்டிய சில அடிப்படை நெறிமுறைகளை நாம் காண வேண்டியுள்ளது.

இதற்குச் சில நடைமுறைச் சொல்லாக்கங்களை எடுத்துக்காட்டி விளக்குவது நன்றல்லவா?

தமிழில் பல்வேறு கட்டுரைகளை வெளியிடுவதன் மூலம், எல்லா இதழ்களும், அறிந்தோ அறியாமலோ, ஏதோ ஒருவகையில் சொல்லாக் கங்களுக்கு உதவிவருகின்றன.

இவற்றுள் தென்மொழி போன்ற இதழ்களின் படைப்புகளில் புதுச் சொல்லாக்கங்களைப் பரவலாகக் காண முடிந்தாலும் இவற்றின் தொகுப்பு முயற்சி இடம்பெறவில்லை. கலைக்கதிர், மஞ்சரி போன்றவை தமிழ்வழிக்

கலை, அறிவியல் படைப்புகளை வெளியிடுவதையே மூச்சாகக் கொண்டிருப்பினும் சொல்லாக்கத்தில் முழுமையாகக் கருத்தினைச் செலுத்தவில்லை. எனவேதான் கலைக்கதிரின் தொகுப்பு, சொல்லாக்கத்திற்கு முதன்மையான வழிகாட்டியாக அமையினும், நிறைவாய் அமையவில்லை. தமிழ்ப்பாவை போன்ற இதழ்களில் சொற்பிறப்புக் கட்டுரைகளும், ஏற்கெனவே உள்ள மொழிபெயர்ப்புப் பட்டியல்களும் வெளியிடப்படினும், இக்கால அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான சொல்லாக்கங்கள் இடம்பெறவில்லை. களஞ்சியம் சொல்லாக்கம் குறித்த கட்டுரைகளுடன் நின்றுவிடாமல், 'சொல்லாக்க மேடை' மூலம் சிறப்பான பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. இவை அனைத்துமே தமிழன்பர்கள், அறிஞர்கள் இடையேதான் உலவுகின்றன.

இவைபோல், 'இராணி' இதழில், 'ஆக்க வாரீர் அறிவியல் தமிழ்' என்னும் தலைப்பில் சொல்லாக்கப்பணி நடைபெற்று வருவதும் பெரிதும் பாராட்டிற்கு உரியது; ஒரு பிரிவினருக்குத் தெரிந்த சொல்லாக்கத்தை அனைவரும் அறிந்துகொள்ளவும், பயன்படுத்தவும், புதுச் சொல்லாக்கத்தில் ஈடுபடவும் அடிப்படையாய் அமைவது. இதன்வழி, மக்கள் இயக்கமாகச் சொல்லாக்கம் மாறும் போக்கும் தோன்றியுள்ளது என்ற போதும் இவற்றில் வருவனவற்றுள் நிறைகளுடன் குறைகளும் காணப்படுகின்றன. ஆதலின், இதழ்வழிச் சொல்லாக்கங்களுக்கு எடுத்துக்காட்டாக, இவ் விதழ்களில் வெளிவந்த சொல்லாக்கங்களை அடித்தளமாகக் கொண்டு நாம் நெறிமுறைகளைக் காண்போம்.

தரப்பட்டுள்ளவற்றுள் குறிக்கத்தகுந்த அளவு சொல்லாக்கங்கள் நடைமுறையில் உள்ளவைதாம். நடைமுறையில் நல்ல சொல்லாட்சி இருக்கும்பொழுது பொருந்தாச் சொல்லாக்கமும் சிலவற்றிற்குத் தரப்பட்டுள்ளன. ஏற்கெனவே ஒரு பகுதியில் வழங்கிவரும் சொல்லாக்கங்களை அனைவருக்கும் வெளிப்படுத்தும் வண்ணம் அளித்துள்ள பட்டியல்களைக்கூடச் சிலர் தங்களின் புத்தாக்கங்கள் போல் காட்டியுள்ளனர். ஒரே சொல்லுக்கு வெவ்வேறு ஆக்கமும் தரப்பட்டுள்ளன. அனைவரும் நடைமுறைப்படுத்த வேண்டிய நல்ல சொல்லாக்கங்களும் வெளிவந்துள்ளன.

நமது நோக்கம் சொல்லாக்கம் சரியா, தவறா எனப் பார்ப்பதன் மூலம் நெறிமுறை காண்பதுதானே தவிர, தவறான சொல்லாக்கம் அளித்தவரைக் குற்றஞ்சுமத்துவது அன்று. பல வேளைகளில், தவறான

சொல்லாக்கமே புதிய நல்ல சொல்லாக்கத்திற்கு இட்டுச் சென்றுவிடுகின்றது. எனவே சரியாய் இருந்தாலும் தவறாய் இருந்தாலும் சொல்லாக்க முயற்சியில் ஈடுபடுவதே பாராட்டிற்குரியதுதான். எனவே, இங்கு யாருடைய சொல்லாக்கம் எனக் குறிப்பிடாமல் நெறிமுறை காண்போம்.

வங்கித்துறைச் சொற்களில்,

சேப்ரூம் (Safe Room) – கருவூலம்

எனத் தரப்பட்டுள்ளது.

டிரசரி (Treasury) – கருவூலம்

என வழங்கப்படுவதை உணராது இங்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

Safe Room – காப்பறை

எனப்படுவதே சரி.

கிளியரிங் ஆபிசு (Clearing Office) – பிரிப்பகம்

என்பதும் தவறு.

சார்ட்டிங் ஆபிசு (Sorting Office) – பிரிப்பகம்

எனப்படுவதை அறியாமல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

Clearing Office – தீர்வகம்

எனக் குறிக்கப்படுவதையும் தெரிந்துகொள்ளும் ஆர்வம் இல்லை போலும்.

பிக்சட் டெபாசிட் (Fixed Deposit) – வைப்புச் சேமிப்பு

என்பதும் பொருந்தாது.

சேவிங்சு (Savings) – சேமிப்பு

டெபாசிட் (Deposit) – வைப்பு

என உரிய பொருளில் பயன்படுத்துவதால்,

பிக்சட் டெபாசிட் (Fixed Deposit) – நிலைவைப்பு

எனக் குறிக்கப்படுவதே மிகச் சரி.

டேம் டெபாசிட் (Term Deposit) – கெடுச் சேமிப்பு

சார்ட் டேம் டெபாசிட் – சிறுசேமிப்பு

எனவும் தவறாகத் தரப்பட்டுள்ளன.

ஃச்மால் சேவிங்சு (Small Savings) – சிறுசேமிப்பு
என எங்குப் பார்த்தாலும் ஒலிப்பது இவருக்கு எட்டவில்லை போலும்.

டேர்ம் டெபாசிட் (Term Deposit) – தவணை வைப்பு
என்று பாங்கியல் கலைச்சொற்களில்[1] குறிக்கப்பட்டுள்ளது. என்றாலும் குறிப்பிட்ட கால அளவில் வைப்பு வைக்கப்படுவதால்,
Term Deposit – கால வைப்பு
எனச் சொல்லப்படுவதே ஏற்புடைத்து. இதன் அடிப்படையில்,

Short Term Deposit – குறுங்கால வைப்பு
எனப்படுவதே பொருத்தம்.

Long Term Deposit – நெடுங்கால வைப்பு
என்னும் வழக்கு உள்ளதையும் ஏற்க வேண்டும்.

ஆக, நாம் கலைச்சொல்லை உருவாக்கும்பொழுது நடைமுறையில் உள்ள சொல்லை அறிய வேண்டும். அது பொருத்தமாக இல்லை என்றால்தான் புதுச் சொல்லாக்கத்தில் ஈடுபட வேண்டும்.

அதுபோல் நாம் உருவாக்கிய (தாய்க் கருதும்) சொல், நடை முறையில் என்ன பொருளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதிலும் கருத்துச் செலுத்தவேண்டும். இல்லையேல் ஒரே சொல் ஒவ்வொருவரால் ஒவ்வொரு பொருளில் குறிக்கப்பட்டு, வீண் குழப்பம் மிஞ்சி, எதுவும் நிலைக்காது.

இங்கு, 'சேப் ரூம் – காப்பறை' எனத் தெளிந்தோம் அல்லவா? இது தொடர்பான,

ஃச்டிராங் ரூம் (Strong Room) – அரண் அறை
எனப்படின் நன்றாக இருக்கும்.

எனவே, ஒரு சொல்லாக்கத்தின் பொழுது, அஃதொத்த சொற்களுக்கும் சொல்லாக்கம் காணல் நன்று.

ரெகரிங் டெபாசிட் – தொடர்சேமிப்பு
என உள்ளது. இதுவும் சேமிப்புதான் என்றாலும் ஒரு சொல்லை வெவ்வேறு பொருளிலும், ஒரே பொருளுக்கு வெவ்வேறு சொல்லையும் கையாளுவது குழப்பத்தையே விளைவிக்கும். அப்படி என்றால், இதனைத் 'தொடர்வைப்பு' எனலாமா? பொருள் சரிதான். ஆனால் வழக்கில்,

ரெகரிங் டெபாசிட் (Recurring Deposit) – வளர்வைப்பு,
கியுமுலேட்டிவ் டெபாசிட் (Cumulative Deposit) தொடர்வைப்பு

என உள்ளன. எனவே சரியான சொல்லாக்கத்தைத் தெரிவு செயினும், அது வேறு பொருளாட்சியில் உள்ளதால் எச்சரிக்கையாய் இருக்க வேண்டியுள்ளது. ஏற்பட்ட தவறுகளைச் சரிசெய்ய இரண்டிற்குமே புதுச் சொல்லாக்கம் தேவை. இவற்றுள்,

Recurring Deposit – வளர்வைப்பு

என்பதும் பொருத்தமாக உள்ளதால் அதனைப் பின்பற்றலாம்.

Cumulative Deposit – திரள்வைப்பு

எனலாம்.

எனவே, நமது சொல்லாக்கம் மிகச் சரியானதாக இருந்தாலும், ஏற்கெனவே வேறு பொருளில் வேரூன்றி இருப்பின், வேறு புதுச் சொல்லாக்கம் காணலே முறையாகும்.

பயணத் துறையில்,

எக்சுகர்சன் (Excursion) – சிற்றுலா
பிக்னிக் (Picnic) – மகிழுலா

எனத் தரப்பட்டுள்ளன. 'எக்சுகர்சன்' என்பது தொலைவு வரையறை இல்லாமல் நெடுந்தொலைவையும் உள்ளடக்கியது. இதன் பொருள், திரும்பிவரும் நோக்கில் மகிழ்ச்சியாக அமையும் பயணம்[2] என உள்ளது. இதைத்தான் 'மகிழுலா' எனக் குறிக்க வேண்டும். அப்படியானால், 'பிக்னிக்' என்பது என்ன? உணவுப்பொருள்களையும் உடன் எடுத்துக் கொண்டு ஓரிடத்திற்குச் சென்று அங்கு உண்பதைக் குறிப்பதே 'பிக்னிக்' ஆகும். பல நேரங்களில் சிற்றுலாவாக அமையும் இதனை மனைப்புற விருந்தாகவும் குறிக்கின்றனர்.[3] இதன் அடிப்படையில் 'விருந்துலா' எனலாம். எனவே,

Excursion – மகிழுலா
Picnic – விருந்துலா

என்பதே பொருத்தமாக இருக்கும்.

புதிய சொல் வேறு பொருளை உணர்த்துகிறதா என்பதை நோக்குவதுடன், அகராதியில் உள்ள சொற்பொருளைப் பாராமையாலும் புறக்கணிப்பதாலும் தவறுகள் எற்படுவதை உணர்ந்து, அவற்றின்

துணைகொண்டும், முழுமையான பொருள்களை உணர்த்தும் வகையில் சொல்லாக்கம் நிகழவேண்டும்.

ஃஇல் ஃச்டேசன் (Hill Station) – குறிஞ்சிநகர்

என ஆக்கப்பட்டுள்ளது. மலையும் மலைசார்ந்த நிலமும் குறிஞ்சி என்ற பழந்தமிழ் வரையறையின் அடிப்படையைக் கருத்தில் கொண்டுள்ளமை பாராட்டிற்கு உரியது. என்றாலும், திருநகர், அண்ணாநகர், பாவாணர் நகர் என்று நகர் என்று முடியும் நகரங்களும் ஊர்களும் பல்கிப் பெருகிவிட்டமையால், 'குறிஞ்சி நகர்' என்பது ஓர் ஊரின் பெயர்போலத் தோற்றமளிக்குமே தவிர, (மலைநகரம் என்பதுபோல்) மலைப்பகுதியைக் குறிப்பதாகக் கருதப்படமாட்டாது. ஐந்திணைய'கப் பாகுபடுத்திய முன்னோர் வரையறைகளை நாம் மறத்தலும் நன்றன்றுதான். மேலும், இதுபோல், முல்லை, மருதம், நெய்தல், பாலை நகருக்கான சொல்லாட்சிகளையும் உருவாக்க வேண்டும்.

வின்சுலோ அகராதியில்,[4]

ஃஇல் கன்ட்ரி (Hill Country) – மலைநாடு, குறிஞ்சிப்புறம்

என்றே பொருள் தரப்பட்டுள்ளது. ஆதலின்,

ஃஇல் ஃச்டேசன் (Hill Station) – குறிஞ்சிப்புறம்

ஃஇல் கன்ட்ரி (Hill Country) – குறிஞ்சிநாடு

என வகைப்படுத்தலாமா? என்றாலும், இன்று, 'புறம்' என்றதும், 'இடம்' என்ற பொருளைவிட, 'குறிஞ்சிப்புறத்தே உள்ள பகுதி' என்ற பொருள்மயக்கம் ஏற்படவும் வாய்ப்பு உள்ளதே. எனவே, 'சாரல்' என்பது மலைப்பகுதியைக் குறிப்பதால்,

Hill Station - குறிஞ்சிச் சாரல்

எனலாம். எனவே சொல்லாக்கம் பொருள்மயக்கத்தை ஏற்படுத்தாமல் தெளிவுடன் இருக்க வேண்டும்.

கல்வித் துறையில்,

ஆசுடல் (Hostel) - உணவுவிடுதி

எனக் கொடுக்கப்பட்டுள்ளது. உணவுவிடுதி என்றால், 'ஓட்டல்' (Hotel) என்றுதான் வழக்கத்தில் கொள்ளுகிறோம். அதுபோல்,

Hostel – விடுதி

என்பது வழக்கத்தில் ஊன்றி, மாணவர் விடுதி, இளைஞர் விடுதி, மகளிர் விடுதி, பணியாற்றும் மகளிர் விடுதி என்பன போன்று பல சொற்கள் பயன்பட்டு வருகின்றன. எனவே,

Hostel – விடுதி

என்பதே போதுமானது.

ஆதலின், ஏற்கெனவே சரியான பொருளில் உள்ள சொற்களுக்கு எல்லாம் சொல்லாக்க முயற்சியில் ஈடுபடுவது, நேரத்தையும் உழைப்பையும் வீணாக்குவதுடன், குழப்பத்தையும் தோற்றுவிக்கும் எனலாம்.

உணவகத்துறையில்,

ஃஓட்டல் (Hotel) – உணவகம்

எனத் தரப்பட்டுள்ளது. இது புதிய சொல்லன்றுதான். பொதுவாக வெறும் உணவுமட்டும் வழங்கும் உணவகங்களையும், 'ஓட்டல்' என்றே குறித்து வருகிறோம். ஆனால் 'ஓட்டல்' என்பது தங்கும் வசதியும் உண்ணும் வசதியும் உடைய இடத்தைக் குறிப்பதே. இப்பொழுதும் உண்டி உறையுள் விடுதிகள் 'ஓட்டல்' என்ற பெயர் தாங்கித்தான் வருகின்றன. எனவே,

உணவு வசதி மட்டும் உள்ள 'ஓட்டல்' – உணவகம்

உணவுடன் உறைவிட வசதியும் உடைய 'ஓட்டல்' – உணவு விடுதி

என வகைப்படுத்த வேண்டும்.

எனவே ஒரே சொல், இடத்திற்கு ஏற்றாற்போல் பொருளைத் தரும்பொழுது, அவ்வப் பொருள் உணர்த்தும் தனித்தனி சொற்களை உருவாக்க வேண்டும்.

வான்துறையில்,

லாஞ்ச் காம்பிளக்சு (Launch Complex) – ஏவுதளம்

எனத் தரப்பட்டுள்ளது. பொருத்தம்போல்தான் தோன்றுகிறது. இச் சொல் நீர்வழியில் முதலில் பயன்படுத்தப்பட்டது. பின்வந்த விண்வெளியிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே இரு துறைக்கும் பொதுவான சொல்லாக்கம் நன்று.

கப்பல் ஒரு தளத்தைவிட்டுப் பெயரும் தளமே இது.[5] இதுபோல் விண்ணூர்தியும், தளத்தைவிட்டு விண்ணிற்கு, மற்றொரு தளத்திற்குப் பெயரும் தளம். எனவே,

Launch Complex – பெயர்வு தளம்

எனக் கூறலாம்.

ஆதலின் ஒரு சொல், ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளில் வழங்கப்படும்பொழுது, கூடியவரை அத் துறைகளுக்கு எல்லாம் பொருந்தும் வண்ணம் சொல்லாக்கம் இருத்தல் வேண்டும்.

கட்டுரைத் தொடரின் தொடக்கத்தில், 'தையல்' என்பது 'தயால்' என்றி பிரெஞ்சுச் சொல்லின் அடிப்படையில் வந்ததாய்க் கூறி, 'தையல்காரரைத்' துன்னகாரர் என்று சொல்லலாமா எனக் கேட்கப்பட்டுள்ளது.

தையல் என்றால் அழகு என்கிறோம். அழகு என்பது 'ஆள்பாதி ஆடைபாதி' என்கிறோம். எனவே அழகூட்டும் ஆடையைத் தைக்கும் தொழிலைத் தையல் என்றால் என்ன தவறு? மேலும்,

'உள்ளம் தைக்கும்படி கூறினான்'

'காலில் முள் தைத்துவிட்டது'

என்கிறோம்.

அப்படியானால், 'தை' என்பது தமிழ்ச்சொல்தானே! எனவே 'தையல் பணிபுரிவோரைத் 'தையலாளர்' எனலாம் அல்லவா?

Tailor – தையலாளர்

என்பது தமிழ்ச்சொல்லே.

ஆக, அயற்சொல்லென மயங்கித் தமிழ்ச்சொல்லைக் கைவிடும் நிலைகூடாது.

ஊர்தித் தொடர்பான

ஃகேண்டில் பார் (Handle Bar) – குறுக்குப் பார்

பாட்டம் ஆக்சில் (Bottom Axle) – அச்சுப்பார்

எனத் தரப்பட்டுள்ளன. அரைகுறை ஆக்கத்தைத் தர முனைந்தவர்,

Handle Bar – கைப்பிடிக் காம்பு

என்று அகராதியைப் புரட்டிப் பார்த்து அறிந்திருக்கலாம். எனவே

Handle Bar – கைப்பிடி

என்பதே போதும்.

ஆக்சில் – அச்சு, இருசு எனப்படுவது சரிதான். ஆனால் 'பாட்டம்' (Bottom) எவ்வாறு அடுத்த சொல்லில் 'பார்' ஆனது?

நேரடிப் பொருளைப் பார்க்காமல், 'பார்'போல் நீளமான அச்சாக உள்ளதால் குறிப்பிட்டிருப்பின் நோக்கம் சரியே. ஆனால், முதற் சொல்லிலும் சரி, இப்பொழுதும் சரி, ஒரு பாதியை மொழிபெயர்த்தவர் மறுபாதியை விட்டுவிடுவது நற்பயன் நல்குமா? (வாசகர் பகுதியில் ஓர் அன்பர் மடல்வழி இக் கருத்தும் வெளியிடப்பட்டுள்ளது.)[6]

மிதிவண்டியைப் பொறுத்தவரை முதல், இடை, கடை என உள்ள மூன்று அச்சுகளில் நடுவில் உள்ளதே 'பாட்டம்' என வழங்கப்படுகிறது. எனவே, நடுவில் உள்ள

Bottom Axle – இடையச்சு

எனப்படுவது பொருத்தமாக இருக்கும்.

எனவே, இணைப்புச் சொல்லாயின் முழுமையும் தமிழாக்கப்பட வேண்டும்.

தொடக்கக் கட்டுரை ஒன்றில்,

'ஃச்டிராங்கா ஒரு டீ வேண்டும்'

என்பதற்குப் பதிலாக,

'திக்கா ஒரு தேநீர் வேண்டும்' எனத் தமிழில் கேட்கக்கூடாதா? என்று உள்ளது.

தமிழ்ச்சொல்தான் வேண்டும் என்பவர்கூட மயங்கும் அளவிற்குத் தமிழில் பிறமொழிச் சொற்கள் ஒன்றிவிட்ட அவலநிலையைத்தான் இஃது உணர்த்துகிறது.

திக் (Thick) – கெட்டி

என்று மொழிபெயர்க்காவிட்டாலும்,

ஃச்டிராங் டீ – Strong Tea – கடுந்தேநீர் என்று சொல்வழக்கில் உள்ளதும் நினைவிற்கு வரவில்லை போலும்.

இதுபோல்,

மீட்டர் – மானி

எனக் குறிக்கப்பட்டு, இதன் அடிப்படையில் பல சொற்கள் உருவாக்கப் பட்டுள்ளன. அளவுகருவியான

மீட்டர் (Metre) – அளவி

எனப்படுவதே சரியாகும். எனவே இதன் அடிப்படையில் பிற சொற்கள் உருவாக்கப்பட வேண்டியதே முறையாகும்.

அதுபோல்,

ஃஎல்மெட் (Helmet) – சீரா

எனத் தரப்பட்டுள்ளது. சழகுகிருதச் சொல்லிற்குப் பதிலாக இத் 'தலைக்கவசத்தை',

Helmet – தலையரணி

எனலாமே.

இவ்வாறாக ஆங்கிலத்தில் இருந்து தமிழாக்கம் செய்யாமல், ஆங்கிலச் சொல்லையோ, வேறு அயற்சொல்லையோ பயன்படுத்துவது சொல்லாக்க இயலில் தீங்காய்ப் போகும்.

வங்கியியல் தொடர்பான கலைச்சொற்களில்,

டெல்லர் (Teller) – சொல்லர்

என உள்ளது.

டெல் (Tell) – சொல்

என்ற அடிப்படையில் 'சொல்லர்' என்று எழுதியனுப்பியது அச்சுப் பிழையாயிற்றா என்றும் தெரியவில்லை. எவ்வாறிருப்பினும் தவறே!

Tell – எண்ணு

Teller – வாக்கு எண்ணுநர்; வங்கிக் காசாளர்

என்றுதான் பொருள். [7]

பணம் விரைவாக வழங்கப்படுவதால்,

Teller – விரைவுக் காசாளர்

என வங்கியியல் கலைச்சொற்களில் குறித்துள்ளது ஏற்புடைத்து,[8] 'காசு' என்பதன் அடிப்படையில் 'காசாளர்' எனக் கூறியதுபோல், 'தொகை' என்பதன் அடிப்படையில் 'தொகையாளர்' எனக் கூறலாமா என்று ஆய்ந்து பார்க்கலாம்.

ஒலி ஒப்புமை கருதிப் பொருள் உணர்த்தாச் சொற்களை ஆக்கம் செய்வதும் தவறாகும் என இதன் மூலம் அறியலாம்.

மற்றொரு தொடரில்,

பியூரெட் (Burette) – அளகுழாய்

பிப்பெட் (Pippet) – மெலிகுழாய்

எனத் தரப்பட்டுள்ளது. ஆனால் மெலிந்த குழாய் எல்லாம் 'பிப்பெட்' ஆகிவிடமுடியுமா ? அலலது 'அளத்தற்குப் பயன்படும் குழாய்' என இச் சொல் மூலம் அறிய இயலுமா?

பிப்பெட் (Pippet) – சொட்டளவி [9]

என அகராதியில் உள்ளது ஏற்கத்தக்கதே. இதனடிப்படையில்,

பியூரெட் (Burette) - வடியளவி

எனலாம். இவ்வாறாக, உரிய பொருளின் பயன் அடிப்படையிலும், ஒரு பிரிவின்கீழ் அடங்கும் சொற்கள் ஒத்த நிலையைக் காணும் வகையிலும் சொல்லாக்கம் அமைய வேண்டும்.

பள்ளிகள் குறித்த ஆக்கங்களில்,

'நர்சரி (Nursery) – மழலைப்பள்ளி, நாற்றுப்பள்ளி

என இரு பொருளுடன் வந்துள்ளது. நாற்றுப்பள்ளி என்பது சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்ததுபோல் உள்ளது. இப்போதும் 'மழலைப்பள்ளி' என்பதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது சிறப்பாக இருப்பினும், தொடக்கநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி என்ற வகையில்,

Nursery School – அரும்புநிலைப்பள்ளி

என்பது பொருத்தமாக இருக்கும்.

அரும்புநிலைப் பள்ளிக்குப் பின்வரும்,

எலிமென்டரி பள்ளி (Elimentary School)

தொடக்கநிலைப்பள்ளி

என்பது பொருத்தமாக இல்லை. எனவே,

Elementary School – வளர்நிலைப்பள்ளி

எனப்பட்டு, அரும்பு, வளர், இடை, உயர்நிலைப்பள்ளிகளாகக் கூறினால் நன்றாக இருக்கும்.

உயர்நிலைக்கு அடுத்து மேனிலை என்பது பொருத்தமன்று; முதலில் 'உயர்நிலை' இருந்தமையால் அடுத்து 'மேனிலை' வழக்கத்திற்கு வந்துவிட்டது.

Higher Secondary School –நிறைநிலைப்பள்ளி

என்பதே பொருத்தமாக இருக்கும்.

இவ்வாறாக, வளர்ச்சிநிலையைச் சுட்டும் சொற்கள், தொடர்பும் பொருத்தமும் உடையதாக இருக்க வேண்டும்.

லிப்ட் – (Lift) – ஏற்றி

என ஒரு தொடரில் தரப்பட்டுள்ளது. 'இறக்கி' என ஏதும் தனியாக இல்லையே! ஏந்திச் செல்வதால் 'ஏந்தி' எனச் சிலர் குறிப்பிடினும், இரு பயன்பாட்டையும் குறிக்கும் ஏணியாகச் செயல்படும்,

Lift – மின்ஏணி

என வழக்கத்தில் உள்ளது சரிதான்.

எனவே, சொல்லின் ஒரு பயனை வெளிப்படுத்தி, பொருட்குழப் பத்தை ஏற்படுத்தும் வகையில் சொல்லாக்கம் அமையக்கூடாது.

மற்றுமோர் இடத்தில்,

டசன் (Dozen) – பன்னீர்

எனத் தரப்பட்டு, 'பன்னீர் உயிரும்' என்னும் தொல்காப்பிய அடியும் எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ளது.

டசன் (Dozen) – பன்னிரு[10]

என்றே வின்சுலோ அகராதியில் காணலாம். உயிரெழுத்துகளின் முன் ஓர், ஈர் என வரும் என்பதால், இத் தொல்காப்பிய அடியில் 'பன்னீர்' என வந்துள்ளது. எனவே,

டசன் (Dozen) – பன்னிரு (பன்னீர்)

என்று தற்சமயத்திற்குக் குறிப்பதே ஏற்புடைத்து.

ஆதலின் ஒரு சொல்லைக் கையாளும்முன் இலக்கணப்படி சரிதானா என்று பார்த்து நாம் சொல்லாக்கத்தை அமைக்க வேண்டும்.

சுற்றுலாத் தொடர்பான சொல்லாக்கத்தில்,

டூரிசம் (Tourism) – உலாவியம்

எனத் தரப்பட்டுள்ள புத்தாக்கம் பாராட்டத்தக்கது. மார்க்சியம், லெனினியம், தேசியம் என்பன போன்று அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, ஏற்கெனவே உருவாக்கப்பட்ட சொல்லாக்க முறைக்கு ஒப்பாகவும், சொல்லாக்கம் அமைக்கலாம் என உணரலாம்.

ஒரு தொடரில்,

ஐசு (Ice) – ஆலி

எனக் குறிப்பிட்டுச் சங்கத் தமிழ் வழக்கை நடைமுறைக்குக் கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வின்சுலோவின் அகராதியில்,[11]

Ice – ஆலி

எனக் காணக்கிடக்கிறது. இதனால் ,

ஃச்நோ (snow) - பனி

என வேறுபடுத்தி அறியமுடிகிறது.

சொல்லாக்கம் சிறப்புடன் அமையப் பழந்தமிழ் வழக்கை அறிந்து புத்துயிர் கொடுப்பதும் ஒரு முறை என அறியலாம்.

பிறிதோரிடத்தில்,

டின்னர் – Dinner – அல்லுணா

எனக் குறிப்பிட்டு, கேரளாவில் 'அத்தாளம்' என உள்ளதுபோல் நாமும் குறிக்கலாம் என உள்ளது.

டின்னர் (Dinner) – விருந்துணா

சப்பர் (Supper) – அல்லுணா , அத்தாழம்

என்பதுதான் சரி.

அத்தாளம் – இரவுச் சாப்பாடு[12] எனச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியிலும் குறிக்கப்பட்டுள்ளது. மலையாளத்தில் இரவு உணவு – அத்தாழம் எனப்படுகிறது.

ஆதலின், சொல்லாக்கத்திற்கு நாம் பழந்தமிழ் இலக்கியங்களுடன் நின்றுவிடாமல், பழந்தமிழ்ச் சொல் இடம்பெற்றுள்ள தமிழ்க் கிளைமொழிகளிலும் உரியவற்றைத் தேடி உலவவிட வேண்டும்.

'பட்செட்' (Budget) குறித்துப் பலர் கருத்துக் கேட்கப்பட்டுக், கருத்துரைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒருவர், இதற்கு ஒத்த வணிக வழக்கான 'ஐந்தொகை' என்பதைக் குறித்துள்ளார். மற்றொருவர் பொருள்மயக்கம் தரும் வண்ணம் 'புதுக்கணக்கு' எனக் கூறியுள்ளார். மற்றும் இருவர், 'ஆகாறு போகாறு' என்பதைச் சுருக்கி, 'ஆபோ' என்றும், 'வரவுசெலவுத் திட்டம்' என்பதைச் சுருக்கி, 'வசெதி' என்றும் குறித்துள்ளனர். இத்தகைய சுருக்க முறைகள் மொழியாக்க வளர்ச்சிக்குத் துணைபுரியா என்பதை உணரவேண்டும்.

இது தொடர்பான முடிவுரையில் இலக்கிய வழக்காகவும், இலங்கையில் நடைமுறை வழக்காகவும் உள்ளவாறு,

Budget – பாதீடு

எனத் தரப்பட்டுள்ளது.

ஆதலின், சொல்லாக்கத்திற்குத் தமிழ்நாட்டு வழக்குடன் நின்று விடாமல், தமிழ்கூறும் நல்லுலகம் முழுமையையும் கருத்தில் கொள்ள வேண்டும் என அறியலாம்.

அதுமட்டுமன்று,

பட்செட் (Budget) – தோல்பை

என்பதுதான் பொருள். தோல்பையைக் குறிக்கும் இச் சொல், முதன்முதலில் தோல்பை ஒன்றில் கொணரப்பட்ட நிதிநிலை அறிக்கையைக் குறிப்பதாக மாறியது. இங்கு, நேரடியாக மொழிபெயர்க்காமல், இச் சொல் குறிப்பிடும் 'நிதிநிலை அறிக்கைக்கு' உரிய ஆக்கத்தைக் காணுகிறோம்.

எனவே, ஒரு பெயர் இடுகுறிப்பெயரா, காரணப்பெயரா எனக் கண்டு அதற்கேற்பவும் சொல்லாக்கம் நிகழ்தல் வேண்டும் என உணரலாம்.

இசையியலில்.

வயலின் (Violin) – கின்னரி

எனத் தரப்பட்டுள்ளது. நமது 'கின்னரி'தான் மேனாடுகளுக்குச் சென்று 'வயலின்' ஆகத் திரும்பிற்று என்பர். 'கின்னரி' வரலாறு அவ்வாறாக அனைவராலும் உணரப்படும் வரையில் பெயர்க்குழப்பம் விளையாதா? கின்னரியின் அடிப்படையாய்க் கின்னரம், கின்னியம் எனச் சொற்கள் உள்ளதுபோல், புதுச்சொல் படைத்தால் நன்றாக இருக்கும்.

எனவே, வழக்கத்தில் இருந்த சொல்லைக் கையாளுகையில் எச்சரிக்கை தேவை. ஒத்ததுபோல் உள்ளன என்று ஒரே சொல்லைப் பயன்படுத்தினால் வரலாற்று மயக்கம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

மேலும்,

லேட் ஃபீ (Late Fee) – காலக்கட்டணம்

என்று வந்துள்ளது. இது, குறித்த காலங்கடந்து தாழ்ச்சியாகக் கட்டுவதற்குச் செலுத்தும் கட்டணமே. எனவே, காலத்தாழ்ச்சிக் கட்டணமான,

Late Fee – தாழ்ச்சிக் கட்டணம்

எனப்படுவதே சரி.

எனவே, கலைச்சொல் நேரடியாகப் பொருளை உணர்த்துகிறதா? என நோக்க வேண்டும்.

இவ்வாறாகச் சொல்லாக்கத்திற்கான நெறிமுறைகளை வகுத்துக் கொண்டே போனால், 'சொல்லாக்கம்' வெவ்வேறு வடிவங்களுக்கு ஏற்பப் பொருந்திவருகிறதா? என்பது போன்று மேலும் விரிவடையும். இவற்றுள் முதன்மையாய்,

> 'கலைச்சொற்களுக்கு நமக்குப் பொருள் தெரியாமையாலேயே – அவற்றிற்கான சரியான பொருளை அறியும் முயற்சியின்றி – ஏற்கெனவே வேறு பொருள்தரும் சொற்களைக் கையாளும் முறை – அதுவும் புத்தாக்கம்போல் கூறும் முறை – சொல்லாக்கத்திற்குப் பெரிதும் தீங்கிழைக்கும்'

என்பதை எச்சரிக்கையாய் எடுத்துக்கொள்ள வேண்டும்.

சொல்லாக்கப் பணியில் ஈடுபட விழைவோர் சோம்பலின்றி, உள்ளன அறிந்து, நல்லன தெளிந்து, கொள்வன கொண்டு, இல்லன புனைதல் வேண்டும்.

இவை அனைத்திற்கும் மேலாக, எவ்வகைக் காழ்ப்புணர்ச்சியும் இல்லாதிருக்க வேண்டும். சொல்லாக்கம்பற்றிய குறைநிறை, சொல்லாக்குநர் குறித்த இகழுரை அல்லது புகழுரை என எண்ணாதிருத்தல் வேண்டும். ஒரே சொல்லுக்கு இடத்திற்குத் தகுந்தாற்போல் வெவ்வேறு பொருள் இருக்கலாம். அல்லது ஏதோ ஒரு கண்ணோட்டத்தில் சரியான சொல்லாக்கமாகப் படுவது பிறருக்குப் பிழையாகக் காட்சி தரலாம்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

எனச் செயல்படுவோர், உண்மையான குறையைச் சுட்டிக் காட்டினால், ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, தம் அறிவின் திறனைக் குறைத்து மதிப்பிடுவதாகக் கொள்ளக்கூடாது.

இங்கு நாம், இதழ்வழிச் சொல்லாக்கங்களை – அதிலுங் குறிப்பாக 'இராணி' என்னும் கிழமை இதழில் வந்த சொல்லாக்கங்களை – அடிப்படையாகக் கொண்டு, நெறிமுறைகளை விளக்கியிருப்பினும், இவை அனைத்துச் சொல்லாக்க முறைகளுக்கும் பொருந்தும்.

சொல்லாக்க முயற்சிகளை ஒன்றுபடுத்தவும், ஒப்புமை ஆக்கவும், தமிழ் உலகமெங்கும் பரவி நின்று நிலைக்க முயற்சி மேற்கொள்ளவும் அனைத்து இதழ்களும் முன்வரவேண்டும். இவற்றோடு அனைத்துப் பிரிவினரும் ஒத்துழைத்து, தமிழ்க் கருவூலத்தை வளப்படுத்துவோமாக!

அடிக்குறிப்புகள்

1. 'பாங்கியல் கலைச்சொற்கள்' – இந்திய அரசு வங்கி (யின் மொழித்துறை வட்டாரத் தலைமையகம், சென்னை) வெளியீடு
   Term Deposit – தவணை வைப்பு நிதி

2. The Greshan Comprehensive Dictionary of the English Language By The Greshan Publishing Company Ltd., London, p. 317
Excursion ... a journey for pleasure for health, with the view of return

3. English - Tamil Dictionary, University of Madras, 1965 - Reprint, 1981, p. 735
Picnic - மனைப்புற விருந்துக் குழு
(முனைவர் இராதா செல்லப்பன் 'மனைப்புற விருந்து' எனச் சுருக்குகிறார்.)

4. வின்சுலோவின் ஆங்கில – தமிழ் அகராதி, ப. 640
(Asian Educational Services, New Delhi, 1981.)
Hill Country – குறிஞ்சிப்புறம், மலைநாடு

5. ஷி ப. 780
Launch – துறைப் பெயர்

6. 24.5.87 இராணி ... ப. 29
'இராணிக்கு'...
'வேறு தமிழ் இல்லையா?' .. பார் என்பது ஆங்கிலம்தானே! அதையும் சரியாக மொழிபெயர்த்து இருக்கலாமே!
– பெ. பன்னீர்ச்செல்வன், திருவொற்றியூர்

7. The Greshan Comprehensive Dictionary of the English Language, p. 882
Teller - One appointed to count votes on a division in the House of Commons; a functionary in a banking establishment whose business is to receive and pay money over the counter.

8. பாங்கியல் கலைச்சொற்கள், ப. 13
Teller – விரைவுக் காசாளர்

9. Sura's English - English - Tamil Dictionary
By Dr. Radha Chellappan.

10. வின்சுலோவின் ஆங்கில – தமிழ் அகராதி. ப. 399
Dozen – பன்னிரு

11. ஷி ப. 661
Ice – ஆலங்கட்டி, ஆலி

12. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி, முதன் மடலம், ப. 195
அத்தாளம் – இராச்சாப்பாடு
(அல் + தாலம் – அற்றாலம் → அத்தாளம்)

24

காப்பியம் வழியில் சேக்கிழார்

தொல்காப்பியம் – பெரியபுராணம் : ஓர் ஒப்பீடு

ச. சாம்பசிவன்

முன்னுரை

"தமிழ்மொழியின் பண்பாட்டையும், தமிழிலக்கியத் தொன்மையையும், நாகரிகச் சிறப்பையும் விளக்கும் பழம்பெரு நூல் தொல்காப்பியம்.[1] கிறித்து பிறப்பதற்குப் பன்னூறு ஆண்டுகட்கு முற்பட்டதாகக் கருதப்படும் இத்தகைய இலக்கண நூலை யாத்த பெருந்தகை, 'ஒல்காப் பெரும்புகழ்'த் தொல்காப்பியனார் ஆவார். அவருக்குப் பின்னர்த் தோன்றிய தண்டமிழ்ச் சான்றோர் பலரும், அவர்தம் மொழியை அமிழ்தெனப் போற்றி அருந்தமிழ் நூல்களை யாத்தனர். அவருள் ஒருவர் 'தெய்வச் சேக்கிழார்'. இவர், தாம் அருளிய 'திருத்தொண்டர் புராணம்' எனப்படும் 'பெரிய புராண'த்தில், தொல்காப்பியர் கூறிய விதிகளை எவ்வாறெல்லாம் பின்பற்றியுள்ளார் என ஒரு சிறிது ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

காப்பியரும் சேக்கிழாரும்

'காப்பியர்' என்பது ஈண்டுத் தொல்காப்பியரைக் குறிக்கும். அவரைப்பற்றிய முழுமையான வரலாறு கிட்டிலது. பண்டைநாளில் 'காப்பியன்' எனும் இயற்பெயர், தமிழ்ப் பெருமக்களிடையே பெருவழக்காய்ப் பயின்றுவந்துள்ளது. வெள்ளூர்க் காப்பியன், பல்காப்பியன், காப்பியாற்றுக் காப்பியன்[2] என்னும் பலரினின்று வேறுபாடு தோன்றத் 'தொல்' எனும் அடைமொழி புணர்த்துத் 'தொல்காப்பியர்' என

அழைக்கப்பெற்றார். இவர் யாத்த 'தொல்காப்பியம்' எழுத்து, சொல், பொருள் எனும் மூன்று அதிகாரங்கள் – அதிகாரம் ஒவ்வொன்றும் ஒன்பதொன்பது இயல்களாக இருபத்தேழு இயல்கள் – 1595 நூற்பாக்கள்[3] கொண்டது. இவ் வினிய நூலுக்கு, இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், பேராசிரியர், தெய்வச்சிலையார், கல்லாடர் போன்றோர் உரைகண்டுள்ளனர். அண்மைக் காலத்தே வாழ்ந்த நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், அகத்திணை, புறத்திணை, மெய்ப்பாடு எனும் மூன்று இயல்கட்கு முறையான புத்துரை தந்துள்ளார்.[4]

'பெரிய புராணம்' பாடிய சேக்கிழார்பற்றிய வரலாறு கிடைத்துள்ளது. இவர், தொண்டைமண்டலத்துப் புலியூர்க் கோட்டத்தைச் சார்ந்த குன்றத்தூர் வளநாட்டுக் குன்றத்தூரில், வேளாண் மரபில் சேக்கிழார் குடியில் தோன்றினார். இவர்தம் இயற்பெயர் 'அருண்மொழித் தேவர்' என்பது. பழுத்த தமிழ்நூற் புலமை பெற்று, அநபாய சோழனின்[5] முதலமைச்சர் பணிபூண்டு, அவனால் 'உத்தம சோழப் பல்லவர்' எனும் உயர்பட்டமும் அளிக்கப்பெற்றார். சோழப் பெருமன்னனின் விருப்பத்திற்கிணங்கத் தில்லைநகர் சென்று, அம்பலத்தாடுவானின் மலர்சிலம்படி பணிந்தபோது, இறைவனே 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்து உணர்த்தத் 'திருத்தொண்டர் புராணம்' பாடியருளினார் சேக்கிழார். நூல் முடிந்ததும், சோழஅரசன், இவருக்குத் 'தொண்டர்சீர் பரவுவார்' எனும் பட்டஞ்சூட்டிப் போற்றினன். இந் நூல், பன்னிரண்டாவது திருமுறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.[6] இஃது இரு காண்டங்களைக் கொண்டது. முதற் காண்டத்தில் ஐந்தும், இரண்டாம் காண்டத்தில் எட்டுமாகப் பதின்மூன்று சருக்கங்கள் உடையது; 4286 திருவிருத்தப் பாக்களைப் பெற்றது. இத்தகைய அருளாளர்மீது பிள்ளைத்தமிழும் பாடப்பெற்றுள்ளது. 'சேக்கிழார் பிள்ளைத்தமிழ்' எனும் பெயர் பெற்ற இதனைப் பாடியவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையாவார்.

காப்பியரை அறிந்த சேக்கிழார்

காப்பியருக்கும் சேக்கிழாருக்கும் கால எல்லையில் நீண்ட இடைவெளி இருந்தபோதும், காப்பியரையும் அவரது நூலினையும் நன்கு அறிந்தவராயிருத்தல் வேண்டும்.

அநபாய சோழன், ஒரு முறை, "நிலம், மலை, கடல் இவற்றினும்

பெரியன யாவை?" என்ற வினாவைக் கேட்டதாகவும், பலரும் விடை கூறமுடியாத நிலையில் சேக்கிழார், திருக்குறட் பாக்களையே[7] விடையாகத் தந்தார் எனவும் செவிவழிச் செய்தி கூறும்.[8] திருக்குறளை நன்குணர்ந்திருந்த சேக்கிழார், தண்டமிழ் இலக்கண நூலாகிய தொல் காப்பியத்திலும் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தார் எனல் தவறாகாது.

நானிலப் பாகுபாடு பகரவந்த காப்பியர். "மாயோன் மேய காடுறை உலகமும்"[9] என்றார். இந் நூற்பா, சேக்கிழார் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்திருத்தல் வேண்டும். அதனாற்றான், திருமுல்லைவாயிலைப் பேசவந்தபோது,

"அங்கண் முல்லையின் தெய்வமென்(று) அருந்தமிழ் உரைக்கும்
செங்கண் மால்தொழும் சிவன்மகிழ் திருமுல்லை வாயில்"[10]

என்றார்.

ஈண்டுச் சேக்கிழாரால் சுட்டப்படும் 'அருந்தமிழ்' என்பது, தமிழிலக்கணப் பெருநூலாகிய தொல்காப்பியத்தையே குறிக்கும் எனலாம்.

இனித் தொல்காப்பிய உவமவியலில் வரும் 'பல்குறிப் பினவே'[11] என்பதற்கு உரைகூறவந்த, இளம்பூரணர், "அத்து என்பதும் உவமஉருபாக வரும்" என்று விளக்குவர். இதனை அறிந்த சேக்கிழாரும் "செய்யகோல் அபயன் திருமனத்து ஒங்கும் திருக்கயிலாய நீள்சிலம்பு"[12] என 'அத்து' (மனம்+அத்து=மனத்து) எனும் உவம உருபை ஆண்டுள்ளமை அறிந்தின்புறத்தக்கது.

இருவர் தமிழ்ப்பற்று

தொல்காப்பியர், இலக்கண நூல் இயம்பவந்தாரேனும், தமிழின் சீர்மையையும், மூவேந்தராண்ட தமிழகத்தின் பெருமையையும் எடுத்துரைத்த மாண்பு எண்ணத்தக்கது.

"தமிழ்என் கிளவியும் அதனோ ரற்றே"[13]

எனத் 'தமிழ்' என்னுஞ் சொல் புணருமாற்றை எடுத்தோதினார் காப்பியர். அன்றியும்.

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு"[14]

என்றும் கூறுவர். "வளப்பமான புகழையுடைய சேர, சோழ, பாண்டியர் ஆட்சிபுரியும் தமிழ்நாடு" என்பது இதன் பொருள். 'தண்பொழில் வரைப்பு' என்பது, இத் தண்டமிழ்நாட்டுக்குக் காப்பியர் இட்ட பெயராம்.

காப்பியர் வழியில் தோன்றிய சேக்கிழாரும், "இன்றமிழ்ச் செய்யுள்", "அசைவில் செழுந்தமிழ்", "பாட்டியல் தமிழ்", "தமிழ்மாலை", "மல்லல் நெடுந்தமிழ்",[15] "பாவுற்றலர் செந்தமிழ்" என்றெல்லாம் பலபடப் போற்றுவர். இத் தமிழ்மொழி,

"தருஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்"[16]

ஆக விளங்க வேண்டும் என்றும் கனவு கண்டார்.

'வண்புகழ் மூவர்' எனப் பொதுவாகச் சுட்டினார் காப்பியர். சேக்கிழாரோ, "நீடு வண்புகழ்ச் சோழர்", "மாவீற் றிருந்த பெருஞ்சிறப்பின் மன்னுந் தொன்மை மலைநாட்டில்.. சேரர் குலக்கோ", "தென்னர் கோமான் மாசில்புகழ் நெடுமாறன்" என மூவேந்தரையும் தனித்தனியாக ஏத்துகின்றார். தென்திசையாம் இத் தமிழகம், உலகில் தலைசிறந்து விளங்க வேண்டும் என்றும் எண்ணினார் இவர்.

"திசையனைத்தின் பெருமையெலாம் தென்திசையே வென்றேற"[17]

என்று இவர் பாடுவது, தமிழகத்தின்மீது இவர் கொண்டுள்ள ஆழ்ந்த பற்றினைப் புலப்படுத்துகின்றது.

தொன்மை உரைத்த சான்றோர்

காப்பியர் கூறும் செய்யுளுறுப்பு முப்பத்து நான்களுள் 'தொன்மை' என்பதும் ஒன்று.

"தொன்மை தானே சொல்லுங் காலை
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே"[18]

என்பது தொன்மைக்குரிய இலக்கணம். "நெடுங்காலமாகப் பலராலும் சொல்லப்பட்டு வழங்கிவந்த பழங்கதை தொன்மை"யாகும். "புராணம் என்பது வடசொல்" என்பர் அறிஞர்.[19] அங்ஙனமாயின், தமிழில் அதற்கொரு பெயர் இருத்தல் வேண்டும். அதுவே 'தொன்மை'. தொல்காப்பியர் காலத்தே, "அம்மை இலக்கியம், தொன்மை இலக்கியம், தோல் இலக்கியம்" எனப் பலவகையான இலக்கிய நூல்கள்

இருந்திருத்தல் வேண்டும் என்பர் அறிஞர்.[20] காப்பியர் கூறிய இத் தொன்மை இலக்கணத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகவே 'திருத்தொண்டர் புராணம்'' பாடினார் சேக்கிழார் எனல் சாலும். சேக்கிழார் காலத்தே 'புராணம்' எனும் சொல் பெருவழக்காய்ப் பயின்றமைகொண்டே, தம் நூலுக்குத் 'திருத்தொண்டத் தொன்மை' என்று பெயரிடாமல், திருத்தொண்டர் புராணம் என்று பெயரிட்டார் எனலாம்.

"எடுக்கு மாக்கதை இன்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை"[21]

என்பது இவர் வாக்கு.

பெருங்காப்பியச் சிறப்பு

காப்பியத்திற்குரிய முழுமையான விளக்கமான இலக்கணத்தைக் காப்பியர் கூறினாரல்லர்.[22] எனினும். காப்பியத்திற்குரிய சில அடிப்படை மூலக் கூறுபாடுகளைமட்டும் இயம்பியுள்ளார். முன்னர்ச் சுட்டப்பட்ட 'தொன்மை' தவிரத் 'தோல்', 'இயைபு' என்பனவும் காப்பியத் தன்மைகளைக் குறிப்பனவாம்.

"இழும் எனும் ஒசையினையுடைய மொழியால் விழுமிய பொருளை நுவல்வது; பரந்த சொற்களால் மிகுதியான அடிகளால் ஆவது" 'தோல்' வனப்பின் இலக்கணமாம்.[23] ஞ்,ண்,ந்,ம்,ன்,ய்,ர்,ல்,வ்,ழ்,ள் என்னும் இப் பதினொரு மெய்களில் ஏதேனும் ஒன்றினைப் பாட்டின் இறுதிக்கண் பெற்று வருவது 'இயைபு' எனும் வனப்பின் இலக்கணம்.[24]

பெரிய புராணப் பாடல்கள் 'இழும்' எனும் ஒசைபெற்றுச் செல்வன ; அறம் பொருள் இன்பம் மட்டுமன்றி 'வீடு' எனும் விழுமிய பொருள் நுவல்வன; பரந்த சொற்களால் மிகுதியான அடிகளால் நடப்பன. சான்றாக,

"காலெல்லாம் தகட்டுவரால் கரும்பெல்லாம் கண்பொழிதேன்
பாலெல்லாம் கதிர்ச்சாலி பரப்பெல்லாம் குலைக்கமுகு
சாலெல்லாம் தரளநிறை தடமெல்லாம் செங்கழுநீர்
மேலெல்லாம் அகிற்றூபம் விருந்தெல்லாம் திருந்துமனை"[25]

எனும் பாடலைக் கூறலாம். இஃது 'இழும்' எனும் ஒசைபெற்று ஆற்றொழுக்காய்ச் செல்லுதல் கண்கூடு. இத்தகு பாக்கள் எண்ணில் பலவாம். பரந்த சொற்களால் ஆகிய இக் காப்பியம் 4286 செய்யுள்களால்

– அஃதாவது 17,144 அடிகளால் ஆனது. ஆதலின் காப்பியர் கூறும் 'தோல்' வனப்புக்கு இப் பெரிய புராணத்தைச் சான்றாகக் காட்டலாம்.

"குலவு தண்புனல் நாட்டணி கூறுவாம்", "அறவனார் பூங்கோயில்", 'திருத்தொண் டேத்தல் உறுகின்றேன்", "தொழும்புகொண் டுரிமை கொள்வார்"[26] என்பனபோல் வரும் ஈற்று மெய்கள், ஒவ்வோர் அடியார் புராணத்து ஈற்றடிக்கண் அமைந்து, 'இயைபு' வனப்பாயின.

"சுந்தரரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்ட பெருங்காப்பியம்" இது.[27] ஒரு பெருநாட்டின் ஒரு பெருஞ்சமயத்தின் அறுபத்துமூன்று அடியார்களின் பெருமையை ஒரு பெருங்காவியமாக்கிக் கூறும் நூல், தமிழ்மொழியிலும் உலக மொழிகள் அனைத்திலும் இஃது ஒன்றே எனலாம்" எனப் போற்றுவர் அறிஞர்.[28] மேலைநாட்டுக் காப்பிய இலக்கண நூலைக் கொண்டு நோக்கினும், பெரிய புராணத்தைச் சிறந்ததொரு காப்பியம் எனலாம்.[29]

திணையும் திணைமயக்கமும்

காப்பியர், நாணிலப் பாகுபாடுகளை விரித்துரைத்து, நடுவுநிலைத் திணையாம் பாலையையும் பலபடப் பேசுவர்.

"முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

"நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனில்"[30]

என்பவர், "திணைமயக் குறுதலும் கடிநிலை யிலவே"[31] எனத் திணைமயக்கமும் பேசுவர்.

காப்பியர் கூற்றினை உட்கொண்டு சேக்கிழார் வடித்துத்தரும் பாக்கள் இவை :

"குழல்செய் வண்டினங் குறிஞ்சியாழ் முரல்வன குறிஞ்சி;
முழவு கார்கொள முல்லைகள் முகைப்பன முல்லை;
மழலை மென்கிளி மருதமர் சேக்கைய மருதம்;
நிழல்செய் கைதைசூழ் நெய்தலங் கழியன நெய்தல்"

இங்ஙனம் நாணிலப் பாகுபாடு மொழியும் சேக்கிழார்,

"கோல முல்லையும் குறிஞ்சியும் அடுத்தசில் லிடங்கள்"[32]

எனத் திணைமயக்கமும் கூறுவர்.

இந் நானிலத்திலும், மருதநிலத்தின் மாண்பைச் சேக்கிழார், பலபடப் பாராட்டுவதும் இவண் எண்ணத்தகும். காப்பியர், "வேந்தன் மேய தீம்புனல் உலகமும்" என்று கூறியதை உளத்துட்கொண்டு,

"உழுத சால்மிக ஊறித் தெளிந்தசேறு
இழுது செய்யினுள் இந்திரத் தெய்வதம்
தொழுது நாறு நடுவார்"[33]

என விளக்குவர். மேலும்,

"கருங்கதலிப் பெருங்குலைகள் களிற்றுக்கை முகங்காட்ட
மருங்குவளர் கதிர்ச்செந்நெல் வயப்புரவி முகங்காட்டப்
பெருஞ்சகடு தேர்காட்ட வினைஞர்ஆர்ப் பொலிபிறங்க
நெருங்கியசா துரங்கம்பல நிகர்ப்பனவாம் நிறைமருதம்"[34]

என்றும் பாடுவர். முதலமைச்சராய்த் திகழ்ந்த சேக்கிழாருக்கு, மருதநிலக் காட்சி, நால்வகைப் படைகளின் வரிசையை நினைப்பூட்டுகின்றது.

களவும் கற்பும்

பண்டைத் தமிழர் கொண்ட நெறி 'களவும் கற்பும்' ஆம். இதனைக் காப்பியர் அகத்திணையியல், களவியல், கற்பியல் எனப் பலவாறாக விதந்தோதுவர்.

களவொழுக்கத்தை விளக்க எழுந்த பகுதியே 'தடுத்தாட்கொண்ட புராணம்' எனலாம். காப்பியத் தலைவராம் சுந்தரர் மேற்கொண்டது, "களவின் வழிவந்த கரணம்"[35] ஆகும்.

ஒத்த கிழவனும் கிழத்தியும் முதன்முதற் கண்டு காமுறுதற்கு நல்ஊழ் வேண்டப்படுவதாம். இதனைக் காப்பியர்,

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினும் கடிவரை யின்றே"[36]

என்ற நூற்பாவால் குறிப்பர். சுந்தரர்–பரவையார் இவர்களின் முதற்சந்திப்பைப் பேசவந்த சேக்கிழார்.

".....ஆளுடைய நம்பி
நற்பெரும் பான்மை கூட்ட ... விளங்கிழை யவரைக் கண்டார்"

"அண்டர்பிரான் திருவருளால் அயல்அறியா மனம்விரும்பிப்
பண்டைவிதி கடைகூட்டப் பரவையா ருங்கண்டார்.'[37]

என்பர். காப்பியர் கூறிய "ஒன்றி உயர்ந்த பாலது ஆணை"யை விளக்கவந்த விந்தைப் பாடல்கள் இவை.

இக் 'காட்சி'யினை அடுத்து நிகழ்வது 'ஐயம்'. அஃதாவது தலை மகளைக் கண்ணுற்ற தலைமகன், "இவள் யாரோ?" என ஐயுறுவதாம்.

"சிறந்துழி ஐயம் சிறந்த தென்ப'[38]

என்பது காப்பியர் விதி. இதற்கு முழு விளக்கவுரைபோல் அமைகிறது சேக்கிழாரின் செந்தமிழ்ப்பாட்டு.

"கற்பகத்தின் பூங்கொம்போ? காமன்தன் பெருவாழ்வோ?
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ? புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ?
அற்புதமோ? சிவனருளோ? அறியேன்என் றதிசயித்தார்'[39]

பரவையாரைக் கண்டு சுந்தரர் ஐயுற்றுக் கூறியதாக அமைவது இப் பாடல்.

இனி, இக் களவொழுக்கம் நால்வகையில் நிகழ்தற்குரியது. அவை: இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கொடு தழாஅல். தோழியிற் புணர்வு என்பர் காப்பியர்.[40] இவற்றுள், 'பாங்கொடு தழாஅல்' என்பது, "இயற்கைப் புணர்ச்சியில் இன்புற்ற தலைமகன், அதனைப் பாங்கற்கு உரைத்து, 'நீ எமக்குத் துணையாக வேண்டும்' என்று கூற, அவ்வாறே பாங்கனும், தலைவன் கூறிய குறிவழிச் சென்று, தலைமகள் நிற்கும் நிலையைக் கண்டுவந்து கூற, அதன்பின் அவளைச் சென்று கூடுதல்" ஆம்.[41] இத்தகைய பாங்கற் கூட்டம் பற்றிய செய்திகள், சங்க இலக்கியங்களில் மிகுதியாகக் காண்டல் அருமை. ஆனால், தெய்வச் சேக்கிழாரோ, இதனை மிகமிக நுட்பமாகத் தம் காப்பியத்துள் எடுத்து மொழிந்துள்ளார் எனலாம்.

பரவையார்பால் காதல் மீக்கூர்ந்த சுந்தரர், அவளை அடைய வேண்டுமெனும் ஆசையால், மனம் வெதும்பினார். தமக்குரிய பாங்கன், ஆரூர்ப் பெம்மானன்றி யாராக இருக்க முடியும் என எண்ணினார். "நின்று, எனை ஆட்கொண்டவர்பால் நண்ணுவன்"[42] என உறுதி பூண்டார். இவரைப் போலவே, பரவையாரும் வெவ்வுயிர்த்து, "ஊரும் சடையீர்! விடைமேல் வருவீர்! உம தன்பிலர் போல் யானோ உறுவேன்"[43] என ஆரூர்ப் பெம்மானிடம் முறையிட்டாள். இவ் விருவர் படும் துயரினைக் கண்ணுற்ற கண்ணுதலான், "அன்றங் கவர்மன்ற லைநீர் செயும்" என அடியார்கள் அறியும்படி அருள்செய்ததனோடன்றிச் சுந்தரரிடம்,

"மங்கை பரவைதன்னைத் தந்தோம்
இன்ன வகைநம் அடியார் அறியும்படியே உரைசெய்தனம்"

என்றும், இவ்வாறே பரவையாரிடமும்,

"அணியது ஆரூரன்பால் மணம்"

என்றும் மொழிந்தருளினான். இங்ஙனம், சைவமுதல் திருத்தொண்ட ராம் தம்பிரான் தோழனார் சுந்தரர் பரவையாரை நன்மணம் புணர்ந்தார்.

சுந்தரரின் அருமைத் தோழராம் ஆரூர்ப் பெம்மானின் பணி, இதனோடு நின்றுவிடவில்லை. மேலும் தொடர்கிறது.

கயிலையில் ஆளுடைய நாயகிக்குக் காமலர் கொய்யும் பணிபூண்ட அனிந்திதையும், கமலினியும் அவனருளால் இப் பூவுலகில் முறையே, திருவொற்றியூரில் சங்கிலியாராகவும், திருவாரூரில் பரவையாராகவும் தோன்றினர். இவ் விருவருள், பரவையாரை முதற்கண் மணமுடித்த சுந்தரர், பின்பு திருவொற்றியூர்த் திருக்கோயிலுக்கு வந்தபோது, சங்கிலியாரைக் கண்டு காமுற்றார். "மின்போல் மறையும் சங்கிலியார் தம்மை விதியாற் கண்ணுற்றார்" என்பர் சேக்கிழார். சுந்தரரோ, மீண்டும் தம் தோழரைப் பார்த்து, "திங்கள் வதனச் சங்கிலியைத் தந்தென் வருத்தம் தீரும்" என வேண்டினார். இறைவனும் "கொம்பை உனக்குத் தருகின்றோம் கொண்ட கவலை ஒழிக" என்று கூறியதனோடமையாது சங்கிலியாரிடம்.

"சாருந் தவத்துச் சங்கிலிகேள்; சால என்பால் அன்புடையான்
மேரு வரையின் மேம்பட்ட தவத்தான் வெண்ணெய் நல்லூரில்
யாரும் அறிய யான்ஆள, உரியான் உன்னை எனைஇரந்தான்
வார்கொள் முலையாய்! நீஅவனை மணத்தால் அணைவாய் மகிழ்ந்து"[45]

என்றார். பின்பு, இவ் விருவருக்கும் திருமணம் நிகழ்ந்தது.

பாங்கன் செயல் மேலும் தொடர்கின்றது. சங்கிலியாரைச் சுந்தரர் மணம்புரிந்த செய்தி, பரவையாருக்குத் தெரிந்தது. எனவே ஊடல் கொண்டாள் அவள். இவ் வூடலைத் தீர்க்கும் பணியும் ஆரூர்ப் பெம்மானுக்கு உரியதாயிற்று.

".....நீர்எனக்குத்
தாயின் நல்ல தோழருமாம் தம்பிரானா ரேயாகில்..
பரவையுறு புலவிதீர்த்துத் தாரும்"

என வேண்டினார் சுந்தரர். உற்றுழி உதவும் பாங்கனாம் ஆண்டவனும்,

"துன்பம் ஒழிநீ, யாம் உனக்கோர் தூதனாகி இப்பொழுதே
பொன்செய் மணிப்பூண் பரவையால் போகின்றோம்"

என்றான். அவ்வாறே, இறைவனும் மறையவர்வேடம் தாங்கிப் பரவையார் கொண்ட ஊடலைத் தணிவிப்பான் வேண்டித் திருவாரூர்த் திருவீதியிலே இருமுறை நடந்துசென்றான். "மின்னிடை மடவாய்! நம்பி வரஇங்கு வேண்டும்" எனப் பரவையார்பால் மொழிந்தான். "நீரும் போம்" என முதலில் மறுத்தவள், பின்பு உண்மை உணர்ந்து ஊடல் நீங்கினாள்.

"ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தூதர்"[46]

என்பர் சேக்கிழார். காப்பியர், "கற்பின்கண் ஊடல் தீர்க்கும் வாயில்கள் ஆவர் பன்னிருவர்" என்பதைத் "தோழி தாயே பார்ப்பான் பாங்கன்"[47] எனும் நூற்பா வாயிலாக உணர்த்துவர். இந்த நூற்பாவுக்கு முழு விளக்கமாக அமைவதே "சுந்தரர் பரவையார்" நிகழ்ச்சி! எல்லாம் வல்ல முழுமுதற் பரம்பொருள், தன் அடியார்பொருட்டு, மானுட வடிவெடுத்து, ஊடல் தீர்த்த வரலாறு, உலகில் எங்கும் நிகழாத அரிய நிகழ்ச்சி! தெய்வச் சேக்கிழார், காப்பியத் தலைவர் சுந்தரரின் 'இடுக்கண் களையும் ' இனிய தோழனாக ஆரூர்ப் பெம்மானைக் காட்டும் திறம், அறிந்து இன்புறற்பாலது.

காப்பியர் கூறும் 'கற்பு' மாட்சியையும் சேக்கிழார் எடுத்தோதுவர்.

"கற்பும் காமமும் நற்பா லொழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவு மன்ன கிழவோன் மாண்புகள்"[48]

என்பது காப்பியர் மொழியும் இல்லாளின் பண்புகுறித்த நூற்பா.

சேக்கிழார் காட்டும் பெரியபுராணப் பெண்டிர், இத்தகைய இனிய பண்புகளைக் கொண்டிருந்தனர் என்பது வெள்ளிடைமலை.

"பொற்புடைய பகவதியார் எனப்போற்றும் பெயருடையார்
கற்புமேம் படுசிறப்பால் கணவனார் கருத்தமைந்தார்"

எனப் பகவதியாரையும்.

"அன்புமிக்க பெருங்கற்பின் அணங்குதிரு வெண்காட்டம்மை"

எனச் சிறுத்தொண்டர் மனைவியையும் சிறப்பிப்பர்.

".....விருந்துஎதிர் கொள்ளும்
பீடு தங்கிய பெருங்குடி மனையறம் பிறங்கும்'[49]

எனப் பொதுவாகவும், மகளிர் மாண்பு உரைப்பர்.

புறத்திணைச் செய்திகள்

காப்பியர், தம் புறத்திணையியலில், "வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் எனும் எழுவகைப் புறத்திணைபற்றி முப்பது நூற்பாக்களில் விரித்துரைப்பர். நாடாளும் வேந்தனின் நல்லமைச்சராய்ப் பிறங்கிய சேக்கிழாருக்கு, இப் புறத்திணைச் செய்திகள் தெரிந்திருத்தல் வியப்பன்று, பக்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடியவிடத்தும், இடையிடையே போர்ச் செய்திகளையும் நுழைத்துவிடுகின்றார்.

"வென்றி வினையின் மீக்கூர வேந்தர் முனைகள் பலமுருக்கிச்
சென்று தும்பைத் துறைமுடித்தும் செருவில் வாகைத் திறங்கெழுமி"

"வாளொடு நீள்கை துடித்தன; மார்பொடு வேல்கள் குளித்தன;
தோளொடு வாளி நிலத்தன; தோலொடு தோல்கள் தகைத்தன'[50]

எனும் பகுதிகள், காப்பியர் கூறும் 'தும்பை', 'வாகை', 'வென்றவாள்' 'கணையும் வேலும் துணையுற மொய்த்தல்'[51] என்பனவற்றை அடியொற்றியன. போர்க்களத்தே, தன் வாளால் பலரைக் கொன்று குவித்தலை 'நூழில்' என்பர் காப்பியர்.[52] இதனைச் சேக்கிழார்,

"மாறுற் றவிறற் படைவாள் அதிகன்
நூறுற் றபெரும் படைநூ ழில்பட'[53]

என விளக்குவர்.

காப்பிய மெய்ப்பாடு

காப்பியர், 'நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை' எனும் எண்வகை மெய்ப்பாடுகளையும் வேறு சில மெய்ப்பாடுகளையும், தம் 'மெய்ப்பாட்டியல்'வழிப் புலப்படுத்துவர்.[54] ஒரு பெருங்காப்பியத்திற்கு, இத்தகு மெய்ப்பாடுகள் அனைத்தும் வேண்டப்படுவன. பெரிய புராணத்தில் எப் பாடலைப் படித்தாலும் அதன்கண் ஏதேனும் ஒரு மெய்ப்பாடு அமைந்துநிற்றலைக் காணலாம். சிலமட்டும் இவண் சுட்டலாம்.

சம்பந்தப் பெருமான், விரலாற் சுட்டித் 'தோடுடைய செவியன்' எனக் காட்டியபோது, அவர்தம் தந்தையார் கொண்ட மகிழ்ச்சியைச் சேக்கிழார் வடித்துக் காட்டும் திறமாவது:

"ஈறில் பெருந்தவம் முன்செய்து தாதை எனப்பெற்றார்
மாறு விழுந்த மலர்க்கை குவித்து மகிழ்ந்தாடி
வேறு விளைந்த வெருட்சி வியப்பு விருப்போடும்
கூறும் அருந்தமி ழின்பொரு ளான குறிப்போர்வார்"[55]

இத் திருப்பாட்டின்கண், சிவபாதவிருதயர் கொண்ட உவகை, மருட்கை எனும் இரண்டும் இருவகை மெய்ப்பாடுகளாம். இவை முறையே, 'புலன்' பற்றி எழுந்த உவகை; 'புதுமை' பற்றி எழுந்த மருட்கை ஆகும்.

திருநாவுக்கரசர், திருவீரட்டம் சென்று, உரைத் தமிழ்மாலைகள் சாத்தும் உணர்வு பெற்றவராய்க் 'கூற்றா யினவாறு விலக் ககலீர்' எனும் திருப்பதிகம் பாடி, முதல்வனின் கருணைக் கடலில் திளைத்தார். இவ் வரிய நிகழ்ச்சியைச் சேக்கிழார்.

"அங்கங்கள் அடங்கஉ ரோமமெலாம்
அடையப்புள கங்கண் முகிழ்த்தலரப்
பொங்கும்புனல் கண்கள் பொழிந்திழியப்
புவிமீது விழுந்து புரண்டயர்வார்"

என மெய்ப்பாடு தோன்றச் சித்திரிப்பார். இவண், அப்பர் சிந்திய ஆனந்தக் கண்ணீர், காப்பியர் கூறும் 'அழுகை' எனும் மெய்ப் பாட்டினுள் அடங்கும்.[57] ("உவகைக் கண்ணீரும் அழுகையின்பாற் படும்" என்பர் பேராசிரியர்.)

"கொண்டதோர் பித்த வார்த்தை கோபமும் உடனே ஆக்கும்"

"இவன்என் நினைந்தான் கொல்என்று
சென்றார், வெகுண்டார், சிரித்தார்" [58]

என்பன வெகுளி, உவகை மெய்ப்பாடுகளாம்.

உவமைக் கோலம்

"சிறந்த உவமையானது, பொருளின் தன்மையை விளக்குவதன்றி, அதனைச் சிறப்பிக்கவும் வேண்டும்" என்பர் மேனாட்டறிஞர்.[59] இத்தகைய உவமையே, பிற அணிகட்கெல்லாம் தலையாயது. உவமை ஒன்றே, பிற்காலத்தில் பல்வகைக் கோலம் புனைந்தது[60] என்பர் அறிஞர். அதனாற்றான், காப்பியர், உவமை ஒன்றினையே ஓர் இயலாக வகுத்துரைத்தார். "உவமையில்லாப் பாடல் உப்பில்லாப் பண்டம் போல' எனலாம்.

"வினைபயன் மெய்உரு என்ற நான்கின்
வகைபெற வந்த உவமத் தோற்றம்"[61]

என நால்வகை உவமைகளை மொழியும் காப்பியர், அதன் பல்வேறு உட்பிரிவுகளையும் எடுத்து மொழிகின்றார். சேக்கிழார் பாடல்களில், தொட்ட தொட்ட இடமெல்லாம் உவமைமுத்து ஒளிரக் காணலாம். "பெரிய புராணத்தில் 28 வகையான உவமைகள் இடம்பெற்றுள்ளன" என்பர் ஆய்வாளர்.[62] இவற்றுள் ஒன்றினைமட்டும் இவண் காட்டலாம்.

இளையான்குடி மாறநாயனார், சிவனடியார்க்கு அமுது செய்விக்கக் கறிசமைத்தற் பொருட்டுக் கொல்லைப்புறத்திற் சென்று, கீரைதான் பறிக்கின்றார். இஃதோர் எளிய நிகழ்ச்சியே. ஆனால், சேக்கிழார் நாநலத்தால், சிந்தனைக்குரிய அரிய விருந்தாக மாறிவிடுகின்றது.

"குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க"[63]

என்பது சேக்கிழார் காட்டும் உவமை. இவ் வினிய உவமை, காப்பியர், கூறும் 'வினை' (அஃதாவது 'செயல்') பற்றி எழுந்ததாம். ஆனால், இதன்கண் தத்துவச் செறிவும், இலக்கிய இன்பமும் பொதிந்து

கிடக்கின்றன. குழி நிரம்பாத புன்செய்ப் பயிர் சிறிதாக – எளிதாக இருக்கும். அதுபோல மாறனாரின் பாசப்பசையும் சிறிதாக எளிதாக உள்ளது என்பதாம். அதுவும் பிறப்பின் சார்பால் விளைந்தது; அடியார்க்குத் திருவமுது செய்விக்கும் ஆசையால் உண்டாயது. ஒரு பயிரை வேருடன் பறிக்க வேண்டுமானால், அது வளர்ந்துள்ள நிலம் முன்னதாகவே நீர்ப்பசை பெற்று, மண் நெகிழ்ச்சி உடையதாய் இருத்தல் வேண்டும். அப்போதே நிலத்திற்கும் பயிருக்கும் உண்டாய பிடிப்பு அறுபடும். மாறனாரின் பாசப்பசை அறுபட வேண்டுமானால், அது வளர்ந்துள்ள மனம் முன்னதாகவே இறைத்தொண்டில் மூழ்கியிருக்க வேண்டும். அப்போதே அப் பாசத்தை மனமெனும் நிலத்தினின்று அடியோடு பறிக்க இயலும். மாறனாரின் மனம், இவ்வாறு பக்குவப்பட்ட நிலையைச் சேக்கிழாரன்றி வேறொருவரால் ஓர் இனிய எளிய உவமை வாயிலாக விளக்கியிருக்கமுடியுமா என்பது ஐயமே.[64]

யாப்பு வகைகள்

காப்பியர், "பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல்" எனும் இவ் ஏழினையும் யாப்பின் வகைகள் என்பர்.[65] இவற்றுள் 'பாட்டு' என்பது, 'வெண்பா' முதலாய நால்வகைப் பாக்களையும், அவற்றின் இனமாகிய 'துறை, தாழிசை, விருத்தம்' ஆகியனவற்றையும் உள்ளடக்கியதாம். சேக்கிழார் பாடிய பாக்கள், 'விருத்தம்' எனும் பாவினத்தைச் சார்ந்தவை.

காப்பியர், "உரைவகை நடையே நான்கென மொழிப"[66] என்று கூறி, நால்வகைகளை விளக்குவர். அவற்றுள் ஒன்று. "பாட்டிடை வைத்த குறிப்பு". அஃதாவது, பாட்டின் இடையே வரும் உரைநடை (வசனம்) என்பதாம்.

"பித்தனும் ஆகப் பின்னும் பேயனும் ஆக, நீஇன்று
எத்தனை தீங்கு சொன்னாய் யாதுமற்று அவற்றால் நாணேன்"[67]

எனச் சுந்தரரைப் பார்த்து இறைவன் கூறிய கூற்றுப் 'பாட்டிடை வைத்த குறிப்பு' எனலாம்.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"[68]

என 'வாய்மொழி'க்கு(மந்திரம்) இலக்கணம் இயம்புவர் காப்பியர். பெரியபுராணத்தில் இத்தகைய வாய்மொழி எனப்படும் 'மந்திர'க் குறிப்பு நிறைய உண்டு.

'ஆதிமந்திரம் அஞ்செழுத்து"

"சொற்றுணை வேதியன் எனும் தூய்மொழி"

"எந்தைநனி பள்ளியுள்க வினைகெடுதல் ஆணைநமதே"

"ஆய குறிப்பினில் ஆணைநிகழ அருளிச்செய்து"[69]

என்பன சில சான்றுகள்: காப்பியர் சுட்டும் 'ஆணை' என்பதை அப்படியே சேக்கிழார் எடுத்தாண்டுள்ளமையும் உன்னற்பாலது.

'அங்கதம்' என்பது 'வசை' (Satire). இது, செம்பொருள் அங்கதம், பழிசுரப்பங்கதம் என இருவகைப்படும் என்பர் காப்பியர்.[70] வசையினை மறைத்துச் சொல்வதாகிய பழிசுரப்பங்கதத்தை,

".....சமயங்க ளான வற்றின்
நல்லாறு தெரிந்துணர நம்பர்அரு ளாமையினால்"[71]

எனும் அடியில், மிக நயமாக அமைத்துள்ளார் சேக்கிழார்.

பெரிய புராணத்துள் வரும், "ஊனுக்கு ஊன்", "பொடிமூடு தழல்" முதலாயின 'பழமொழி' யாப்புக்குச் சான்றுகளாம்.

தொடைநயங்கள்

"தொடை யற்ற பாட்டு நடையற்றுப் போகும்" என்பது பழமொழி. மோனை, எதுகை முதலாய தொடைபற்றிக் காப்பியர், தம் செய்யுளியலில் 84 முதல் 99 முடியவுள்ள நூற்பாக்களால் எடுத்துரைப்பர். பெரிய புராணத்தில், தொடையற்ற பாட்டு, மருந்துக்கும் காண்டல் அரிது.

1. *"செம்மை வெண்ணீற் றொருமையினார் இரண்டு பிறப்பின்*
சிறப்பினார்" – முரண்தொடை

2. *"காலெல்லாம் தக்கட்டுவ்ரால்..*
பாலெல்லாம்." – அடி எதுகைத் தொடை

3. *"கடகரி துறையி லாடும்; களிமயில் புறவி லாடும்"*
– இயைபுதொடை

4. *"வந்தணைந்த வாகீசர் மந்தமா ருதசீதம்"*

– இணைமோனைத் தொடை

காப்பியர் கூறும் தொடைவகைகளில் அந்தாதித் தொடையு மொன்று. சேக்கிழார். தம் காப்பியத்திற்கு ஓர் அணியாகவே இதனைக் கருதினார்போலும்.

"உலகெ லாம்உணர்ந்து ஓதற்கு அரியவன்"[72]

என்று தொடங்குகின்றது காப்பியம்.

"நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்"[73]

என நிறைவுபெறுகின்றது காப்பியம். இஃது அந்தாதித் தொடையாய் அமைந்து, உலகெலாம் இன்புற்று வாழ ஒப்பில் காப்பியம் தந்த சேக்கிழார்தம் விரிந்த சிந்தையை வெளிப்படுத்துவது எனலாம்.

மரபு மாற்றம்

காப்பியர் கூறிய பல்வேறு விதிகளை உட்கொண்டு காப்பியஞ் செய்தார் சேக்கிழார் எனினும் ஒரோவழிச் சிறிது மாற்றமும் செய்துள்ளார் எனலாம்.

'களவி'ல் வரும் 'காட்சி'யின்போது, தலைமகளைக் கண்ணுற்ற தலைமகன், அவளைப்பற்றி ஐயங்கொண்டு கூறலாமேயன்றி, இத் தலைமகனைக் கண்டு தலைமகள் ஐயங்கொள்வதாகச் செய்யுள் செய்யப்படாது என்பது காப்பியர் கருத்து.

"ஐயக் கிளவி ஆடூஉவிற் குரித்தே"

எனும் நூற்பா இதனைத் தெளிவுறுத்தும், "தலைமகள் ஐயங்கொண்டால், அச்சம் பிறக்கும்; அதனால் காம நிகழ்ச்சி பிறவாது" என்பர் உரையாசிரியர். ஆனால், சேக்கிழாரோ, முதன்முதலில் சுந்தரரைக் கண்ட பரவையார், ஐயுற்றுக் கூறியதாகச் சுட்டுவர் :

"முன்னேவந் தெதிர்தோன்றும் முருகனோ? பெருகொளியில்
தன்னேரில் மாரனோ? தார்மார்பின் விஞ்சையனோ?
மின்னேர்செஞ் சடைஅண்ணல் மெய்பருள்பெற் றுடையவனோ?
என்னேஎன் மனந்திரிந்த திவன்யாரோ? எனநினைந்தார்"[74]

என்பது இவர் கூற்று. இங்ஙனம் இவர் கூறியதை 'மரபின்கண் நிகழ்ந்த மாற்றம்' என அமைதி கூறலாம்.

வாழ்க்கை நெறிமுறைகள்

இல்லறம், துறவறம் எனும் இருவகை நெறிகள், பண்டைத் தமிழர் மேற்கொண்டவை. இதனை விளக்குவது, தொல்காப்பியரின் பொருளதி காரம். இல்லறத்தின் முடிந்த பயன், 'வீடு' பெறுதலாம். இதனைக் காப்பியர்,

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"[75]

என்று தெளிவுறுத்துவர். "முன்னர் இல்லறம் நிகழ்த்திய தலைவனும் தலைவியும், பின்னர்த் துறவறம் நிகழ்த்தி வீடுபெறும் என்கின்றது இந் நூற்பா" எனச் சுட்டுவர் நச்சினார்க்கினியர்.

இவ் வுயரிய கருத்தை உட்கொண்டே சேக்கிழார், இப் பெரிய புராணத்தைப் பாடத் துணிந்தார் எனலாம். இவ் விருவகை நெறிகளையும் அடியார்தம் வரலாறு வாயிலாக உணர்த்திய திறம் பெரிது பெரிது!

பெரிய புராணத்தின் பயன் 'வீடுபேறு' பெறுதலேயாம். இதனைச் சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார்,

> "இப் புராணத்தின் பலனாவது, மக்களின் சிந்தையிருள் போக்கி, ஞானவொளி தந்து, இகத்தும் பரத்தும் இன்பமளித்துப் பேரின்ப முத்தி உறுதலேயாம்" 76

என்று கூறுவது கொண்டு தெளியலாம்.

முடிவுரை

இக் கட்டுரை வாயிலாக அறியத் தகுவன :

1. காப்பியர் கூறும் 'தொன்மை'யை உளங்கொண்டே சுந்தரரைத் தலைவராகக் கொண்டு பெரிய புராணத்தைச் சேக்கிழார் இயற்றியிருக்கக் கூடும்.

2. எல்லாம் வல்ல முழுமுதற் பரம்பொருள், தன் அடியார்பொருட்டு மானிட வடிவெடுத்து, ஊடல் தீர்த்த வரலாறு, உலகில் எங்கும் காண்டல் அரிது, காப்பியர் வழியில் நின்று பாங்கொடு தழா அலுக்கு விளக்கமளித்த பெருந்தகை, தெய்வச் சேக்கிழாரே யாவார்!

3. காப்பியர் வழியைப் பின்பற்றியே தம் நூலினை யாத்துள்ளார் சேக்கிழார். எனினும் மரபுமாற்றமும் ஒரோவழிக் காண முடிகின்றது.

4. காப்பியர் மொழிந்தது தண்டமிழ் இலக்கணம்; சேக்கிழார் அருளியது, அதற்கோர் அருங்கலமாம் தண்டமிழ்க் காப்பியம்.

5. இவ்விரு சான்றோரையும் தந்த பெருமை, தமிழகத்திற்குரியது.

6. "உலகம் உய்ய வேண்டும்" எனும் விரிந்த நோக்கே இவ் விருவர் பாலுமுண்டு. எனினும், தண்டமிழின் மேன்மையையும், மூவேந்தர் ஆண்ட தமிழகத்தின் உயர்வினையும் மறவாமல் போற்றிய பெருமை இவ் விருவர்க்கும் உண்டு.

7. "இல்லறம், துறவறம் எனும் இருவகை நெறிகளும் இறைவனையடையத் துணைபுரிவன" என்பதைக் காப்பியர் இலக்கண நூல் வாயிலாகக் கூறினார். அதற்கு ஓர் வரலாற்று வடிவம் தந்து பெருங்காப்பியமாக உலகுக் கருளினார் சேக்கிழார்.

8. இவ்வகையில், "வேறுபல நோக்கில், நிலைகளில் நிகழ்வன வெல்லாம் ஒருங்குசேர்த்து அவர்களிடையே அடிப்படையாய் விளங்குகின்ற பொதுமை உண்மையைப் (தொண்டு) பாடிய காப்பியம் உலகில் வேறு ஒன்றும் இல்லை"[77] என இப் பெரிய புராணத்தைப்பற்றித் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் கூறுவதும், "சேக்கிழார், தமிழ்ச் சமுதாயத்தின் முழுக் கூறும் தோன்றத் தம் காப்பியக் கலையைப் படைத்துள்ளார்"[78] என வ.சுப. மாணிக்கனார் கூறுவதும் மிகமிகப் பொருத்தமாகத் தோன்றுகின்றது.

9. இவ்விரு பெரு நூல்களையும் ஒப்பீட்டு முறையில் ஆராய்ந்தால் இன்னும் பல அரிய செய்திகளைக் காண்டல் கூடும்.

சான்றெண் விளக்கம்

1. வரதராசன், மு., 'அணிந்துரை', தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை
2. பதிற்றுப்பத்து 4ஆம் பத்து
3. இளம்பூரணர் கருத்துப்படி இவ் எண்ணிக்கை
4. நாவலர் புத்தக நிலைய வெளியீடுகள்
5. சேக்கிழார் காலம்பற்றிக் கருத்துவேறுபாடு உண்டு. மா. இராச மாணிக்கனார் "அநபாயன் என்பவன் 2ஆம் குலோத்துங்கன். அவன் காலம் கி.பி. 1113–50" என்பர், பெரிய புராண ஆராய்ச்சி, ப. 20
6. (அ) சுப்பிரமணிய முதலியார், சி.கே. பெரிய புராண வரலாறு, திருத்தொண்டர் புராணம், காசிமடத்துப் பதிப்பு, பக்.xi-xiii
   (ஆ) பாலசுப்பிரமணியம், சி., தமிழ் இலக்கிய வரலாறு, ப. 151
7. திருக்குறள், 102, 124, 103
8. மகாதேவ முதலியார், வா., பெரிய புராண ஆராய்ச்சி, ப.6
9. தொல். உவம. 10
10. பெரிய புராணம் : திருக்குறிப்பு. 18
11. தொல்.உவம. 10
12. பெ.பு. திருமலை. 12
13. தொல். எழுத்து. 385
14. தொல். செய். 75
15. பெ.பு. பாயிரம் 3; திருஞா. 24 ; திருநாடு. தடுத். 202; திருஞா. 75; திருநா. 74
16. பெ.பு. 975
17. ஷெ. திருஞா. 27
18. தொல். செய். 229
19. தண்டபாணி தேசிகர், 'முகவுரை', திரு அம்பர்ப் புராணம், ப .ஒஒ
20. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, பக்.178, 179
21. பெ.பு.பாயிரம், 2
22. தண்டியலங்காரத்தில் பெருங்காப்பிய இலக்கணம் முழுமையாகச் சொல்லப்பட்டுள்ளது.
23. தொல். செய். 230

24. ஷெ. 232
25. பெ.பு.திருநா. 4
26. ஷெ, திருமலை. 40; திருநகர. 50; தடுத். 203; ஆனாய. 42
27. இராசமாணிக்கனார், மா., பெரியபுராண ஆராய்ச்சி, ப.250
28. சஞ்சீவி. ந., பெரியபுராணப் பெருங்காப்பியப் பெருங்கவிதை, பெரிய புராணச் சொற்பொழிவுகள், ப. 388
29. "Epic, a poem that celebrates in the form of a continuous narrative the achievements of one or more heroic personages of history or tradition."

    - The Oxford Companion to English Literature. pp.273 -74
30. தொல்: அகத். 5, 11
31. ஷெ ஷெ 14
32. பெ.பு: திருக்குறிப்பு. 10, 15
33. ஷெ. திருநா. 12
34. ஷெ. திருநா. 6
35. தொல். கற்பு. 2
36. ஷெ. களவு. 2
37. பெ.பு.தடுத். 139, 142
38. தொல். களவு. 3
39. பெ.பு.தடுத். 140
40. தொல். செய் 178
41. ஷெ, களவியல் இளம்பூரணர் முன்னுரை
42. பெ.பு. தடுத். 149
43. ஷெ. 177
44. ஷெ. 179
45. ஷெ. ஏயர். 239
46. ஷெ. 328, 329, 337
47. தொல் கற்பு. 52
48. ஷெ. கற்பு. 11
49. பெ.பு. திருஞா 16; சிறுத்.53; திருக்குறிப்பு. 28
50. ஷெ. கூற்றுவ. 3

51. தொல். புறத். 11,12
52. ஷெ, ஷெ, 14
53. பெ.பு. புகழ்ச்.29
54. தொல். மெய்ப். 3
55. பெ.பு. திருஞா. 85
56. ஷெ. ஷெ. 72
57. தொல். மெய். 5; பேராசிரியர் உரை
58. பெ.பு.தடுத். 42,38
59. Dr.Samuel Johnson,. ***The Lives of the English Poets***, Vol.XI.p.175
60. வடமொழி அப்பைய தீட்சிதர், செந்தமிழ், தொகுதி 7, ப.144
61. தொல். உவம., 1
62. சங்கரி, அ., பெரிய புராணத்தில் உவமைகள், ப.12
63. பெ.பு. இளையான்குடி மாறநாயனார்
64. குன்றக்குடி அடிகளார், 'தலைமையுரை' பெரியபுராணச் சொற்பொழிவுகள்
65. தொல்.செய். 75
66. ஷெ. ஷெ. 166
67. பெ.பு. தடுத். 41
68. தொல்.செய். 178
69. பெ.பு. திருஞா. 698; திருநா.126; 2:84:11; சம்.336
70. தொல்.செய். 120–22
71. பெ.பு.திருநா. 37
72. ஷெ 1, 4286
73. தொல். பொருள். 42, 51
74. பெ.பு.தடுத். 144
75. தொல்.கற்பு. 51
76. சுப்பிரமணிய முதலியார், மு.கு.ப.
77. மீனாட்சிசுந்தரனார், தெ.பொ.மீ., பெரிய புராணம் உலகப் பொதுநூல், பெரிய புராணச் சொற்பொழிவுகள், ப.158
78. மாணிக்கம், வ.சுப., தமிழ்க் காதல், ப. 150

25

மலேசியாவில் தமிழ்மொழி கற்றலும் கற்பித்தலும் அன்றும் இன்றும்

கோ. கிருஷ்ணபகவான்

மலேசியாவில் தமிழ்மொழி கற்றலும் கற்பித்தலும் அன்றும் இன்றும் என்னும் இக் கட்டுரையின் நோக்கம், மலேசியாவில் கற்றல் கற்பித்தல் அடிப்படையில் தமிழ்மொழி அடைந்துள்ள வளர்ச்சியையும் எதிர்நோக்கும் பிரச்சினையையும் ஆய்வு செய்வதேயாகும். இக் கட்டுரையில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் வரையறை ஆரம்ப, இடைநிலைப் பள்ளிகள் அடிப்படையில்மட்டும் ஆய்வு செய்யப்படும். மேலும் எதிர்காலங்களில் தமிழ்மொழியின் வளர்ச்சி எவ் வடிப்படையில் செல்லும் என்பதனைக் கண்ணோட்டமிட்டுச் சிந்தித்துப் பார்ப்பதும் இக் கட்டுரையாளரின் எண்ணமாகும்.

வரலாற்றுக் காலந்தொட்டுத் தென்கிழக்காசியாவின் இப் பகுதி தமிழ்மொழியோடு தொடர்புடையது என்பதற்குப் பல அகப்புறச் சான்றுகள் உள்ளன. தென்கிழக்காசியாவின் மிகப் பெரிய வழக்கு மொழியான மலாய்மொழியில் உள்ள நூற்றுக்கணக்கான தமிழ்ச்சொற்கள் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். கற்றல் கற்பித்தல் அடிப்படையில் என்று நோக்கினால் அது கடந்த நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியிலிருந்துதான் ஆரம்பம் ஆகியது என்று கூறலாம்.

முறையான தமிழ்மொழி கற்றலும் கற்பித்தலும் இந் நாட்டின் தமிழ்ப்பள்ளிகளின் உருவாக்கக் காலத்திலிருந்து தொடங்கியது எனலாம்.

மலேசியாவின் முதல் தமிழ்ப்பள்ளியான 'Penang Free School' 1816ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இப் பள்ளி பினாங்குவாழ் தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ்மொழியறிவை ஊட்டவேண்டும் என்ற நோக்கத்தில் நிறுவப்பட்டது. ஆனால், கல்வியின் பயன்பாட்டு அடிப்படையில் ஆங்கிலமொழித் தாக்கமும் தேவையும் இப் பள்ளியோடு இணைந்திருந்த தமிழ்ப்பகுதி நிறுத்தப்படுவதற்குக் காரணமாயின.

காலனித்துவத்தாரின் பொருளாதாரத் தேவைக்காகக் கொண்டு வரப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழ்த் தொழிலாளர்களின் அன்றைய மொழித்தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கத்தில், நாட்டில் திறக்கப்பட்ட கரும்பு, ரப்பர், எண்ணெய்ப்பனைத் தோட்டங்களோடு கோவில்களும் கள்ளுக்கடைகளும் திறக்கப்பட்டன. அவற்றோடு தமிழ்ப்பள்ளிகளும் அமைக்கப்பட்டன. காலனித்துவத்தார் இத் தமிழ்ப் பள்ளிகளை அமைத்ததன் முக்கிய நோக்கம், தமிழ்நாட்டிலிருந்து அழைத்து வந்த தமிழ்த் தொழிலாளர்களை இங்கேயே நிரந்தரமாகத் தங்கச் செய்வதற்கான ஓர் ஏற்பாடேயொழியத் தமிழ்மொழிமீது அவர்கள் கொண்ட பற்றோ ஆர்வமோ அல்ல. இவ்வகைத் தமிழ்ப்பள்ளிகளைத் தவிர்த்து நகர்ப்புறங்களில் காலனித்துவ அரசு சார்பான அமைப்புகளான நகராண்மைக்கழகம், இரயில்வே நிர்வாகம் போன்றவற்றில் பணியாற்றிய தமிழ்த் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவதன்வழி அத் தொழிலாளர்களையும் இந் நாட்டிலேயே தங்க வைக்க முடியும் என்று கோலாலம்பூர், ஈப்போ, சிரம்பான் போன்ற நகரங்களிலும் தமிழ்ப்பள்ளிகள் திறக்கப்பட்டன. இவற்றைத் தவிர்த்துத் தனிப்பட்டவர்களும், கலாசார, சமூக, சமய இயக்கங்களும் ஆங்காங்கே, குறிப்பாக நகர்ப்புறங்களை ஒட்டித் தமிழ்ப் பள்ளிகளை அமைத்துத் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்கான சூழலை ஏற்படுத்தின.

தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் இந் நாட்டில் ஆரம்பித்த பொழுது முதல் நான்கு வகுப்புகள் என்றும், பின்னர் 1920 ஆம் ஆண்டுகளில் ஐந்தாம் வகுப்புவரை சென்று, 1930ஆம் ஆண்டுகளில் ஆறாம் வகுப்புவரை தொடர்ந்து, 1940 ஆம் ஆண்டுகளில் ஏழாம் வகுப்புவரை நீட்டிக்கப்பட்டது. நாடு சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து இந் நாட்டின் 800-க்கும் அதிகமான தமிழ்ப்பள்ளிகளைத் தேசியக் கல்வித்திட்டத்தின் கீழ்க் கொண்டுவந்ததன் காரணத்தால் தமிழ்ப்பள்ளிகளில் தமிழ்மொழிக் கல்வி மீண்டும் ஆறாம் வகுப்புடன் முடிவடையும் சூழல் ஏற்பட்டது.

1916ஆம் ஆண்டுக் கல்விச் சட்டத்தின்கீழ் அன்றைய ஆங்கில ஆரம்பப் பள்ளிகளிலும், இடைநிலைப் பள்ளிகளிலும் தமிழ்மொழி 'தாய்மொழிப் போதனை' என்ற நிலையில் போதிக்கப்பட ஆரம்பித்தது. இவ்வகை ஆரம்பப் பள்ளிகளில் மூன்றாம் வகுப்பு முதல் ஆறாம் வகுப்புவரை வாரத்திற்கு 120 நிமிடமும், இடைநிலைப்பள்ளிகளில் புகுமுக வகுப்பு முதல் ஐந்தாம் படிவம்வரை வாரத்திற்கு 120 நிமிடமும் போதிக்கப்பட்டது.

மேற்கண்ட பின்னணியில் மலேசியாவில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலைப் பாடத்திட்டம், கற்றல் கற்பித்தல் பொருள்கள், ஆசிரியர்பயிற்சி, மதிப்பீடு என்னும் நான்கு பெருந்தலைப்புகளில் ஆய்வு செய்வோம்.

பாடத்திட்டம்

கற்றல் கற்பித்தலுக்கு மையமாக அமைவது பாடத்திட்டங்களே. மாணவர்கள் பெறவேண்டிய மொழியின் குறிக்கோள், நோக்கம், மொழித்திறன்கள், மொழிக்கூறுகள், அவற்றின் அளவு ஆகியவற்றை முடிவு செய்வதுதான் பாடத்திட்டம். பாடத்திட்டத்தை உருவாக்கியவர்கள் அந்தந்தக் காலகட்டத்தின் தேவைகளுக்கிணங்கப் பாடத்திட்டங்களை உருவாக்கி வந்துள்ளனர்.

ஆரம்ப காலங்களில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலின் குறிக்கோளும் நோக்கமும் மாணவர்களுக்குத் தமிழ்மொழியின் அடிப்படைத் திறன்களான வாசித்தல், எழுதுதல் ஆகிய இரு திறன்களில் ஓரளவு திறனைக் கொடுப்பதேயாகும். அக்காலங்களில் தமிழ் நாட்டிலிருந்து வருகின்ற கடிதங்களை வாசிப்பது, கடிதங்களுக்குப் பதில் எழுதுவது, தாங்கள் செய்யும் பணித் தொடர்பான குறிப்பிட்ட செயல்களுக்குத் தேவையான மொழி அறிவைப் பெறுவது ஆகிய நோக்கங்களுக்காகவே தமிழ்மொழி போதிக்கப்பட்டது. இத்தகைய தமிழ்மொழி கற்பித்தலைப் பெரும்பாலும் பகுதிநேர ஆசிரியர்களே போதித்து வந்தனர். இவர்களுக்குத் துணைசெய்வதற்காகத் தயாரிக்கப் பட்ட பாடத்திட்டங்கள் (1926, 1928, 1936) அடிப்படைத் தமிழ் அறிவைப் போதிக்கும். குறிப்பாக வாசித்தல், எழுதுதல் ஆகிய இரண்டு திறன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தயாரிக்கப்பட்டதை நாம் அறிய முடிகின்றது.

தமிழ்மொழியின் பயன்பாடும், பள்ளிகள் எண்ணிக்கையும், பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையும் இரண்டாவது உலகப் போருக்குப் பின்

அதிகரித்தபொழுது தமிழ்மொழி போதிப்பதற்கான தேவையும் வசதிகளும் முறைப்படுத்தப்பட்டன. இக் காலகட்டத்தில்தான் தமிழ்மொழிப் போதனையும் ஆறாம் வகுப்பிலிருந்து ஏழாம் வகுப்புவரை நீட்டிக்கப் பட்டது. தமிழ்மொழி கற்றல் கற்பித்தலை முறைப்படுத்துவதற்கு அன்றைய தமிழ்நாட்டின் பாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பாடத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. மலேசியா (மலாயா) சுதந்திரம் அடைவதற்கு முன்னர், குறிப்பாகப் போருக்கு முன்னர்த் தமிழ்நாடு, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட ஆசிரியர்களும் இந் நாட்டிலேயே ஓரளவு பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் தங்கள் கற்பித்தலை முறையாகச் செய்வதற்கு, அன்றைய பிரிட்டிஷ் ராணுவ நிர்வாகத்தின்கீழ்ப் பணி யாற்றிய இந்தியப் பள்ளிகளின் கண்காணிப்பாளர் ஒரு பாடத்திட்டத்தை உருவாக்கித் தந்தார். இப் பாடத்திட்டம் தமிழ்நாட்டுப் பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததாலும், தமிழ்க் கல்வி தமிழாசிரியர்களை உருவாக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்ததாலும் இப் பாடத்திட்டத்தில் இலக்கண, இலக்கிய அறிவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டது.

இப் பாடத்திட்டத்தின்வழித் தமிழ்ப்பள்ளிகளில் தமிழ்மொழிப் போதனைக்கு ஒதுக்கப்பட்ட அதிகமான நேரமும், பிற பாடங்களுக்குத் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்தின் குறைவான பாடஅளவும் நேரமும் காரணமாகத் தமிழ்ப்பள்ளி வாயிலாக ஏழாம் வகுப்புவரை தமிழ்க்கல்வி பெற்ற மாணவர்களின் தமிழ்மொழியறிவு உண்மையில் சிறப்பாகவே இருந்தது. ஆனால், இவர்கள் பெற்ற தமிழ்க்கல்வியின் பயன்பாடு தமிழாசிரியர் பணியைத் தவிர வேறு எந்தப் பணிகளுக்கும் பயன்படாத காரணத்தினால் நடுத்தரத் தமிழ்க் குடும்பங்கள் தங்கள் குழந்தைகளின் முன்னேற்றத்தைக் கருதி ஆங்கிலக் கல்வியிலே நாட்டம் செலுத்தினர். எனவே தமிழ்மொழிக் கல்வி தோட்டத் தொழிலாளர் குழந்தைகளுக்கும், நகர்ப்புறத் தொழிலாளர் குழந்தைகளுக்கும் உரிய கல்வியாக மினங்கியது.

சுதந்திரத்திற்குப் பின் இந் நாட்டின் தமிழ்ப்பள்ளிகள் யாவும் தேசியக் கல்வித் திட்டத்தின்கீழ்க் கல்வி அமைச்சின் நிர்வாகத்தின்கீழ் இணைந்தது, இந் நாட்டுத் தமிழ்க்கல்வியின் ஒரு திருப்புமுனை ஆகும். ரசாக் கல்வித்திட்டம் (1956) என்ற தேசியக் கல்வித்திட்டத்தில் நாட்டில்

உள்ள எல்லா ஆரம்பப் பள்ளிகளுக்கும் ஒரே பாடத்திட்டம் அமலாக்கம் காணப்பட்டது. எனவே, நாட்டில் அன்றிருந்த எண்ணூறுக்கும் அதிகமான தமிழ்ப் பள்ளிகளுக்குப் புதிய பாடத்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. இப் பாடத்திட்டம் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட ஓர் ஆவணமாகும். இப் பாடத்திட்டமே கடந்த 1982ஆம் ஆண்டுவரை இந் நாட்டில் அமலில் இருந்த பாடத்திட்டமாகும். இப் பாடத்திட்டம் ஆரம்பப் பள்ளிகளில் முதல் வகுப்பிலிருந்து ஆறாம் வகுப்புவரை வாசிப்பு, வாய்மொழித் தமிழ், கையெழுத்தும் எழுதுதலும், செய்யுள், இலக்கணம் என்ற ஐந்து தலைப்புகளில் ஒவ்வொரு வகுப்பிற்கான பாடத்திட்ட வரையுடன் தயாரிக்கப்பட்டிருந்தது. இக் காலங்களில் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் தமிழ்மொழிப் பயிற்சியைத் தமிழ்மொழிப் பாடத்தில் மட்டுமல்லாது அங்குப் போதிக்கும் பிற பாடங்கள் வழியாகவும் பெற்று வருகின்றனர். இக் காலகட்டத்தில் தேசியப் பள்ளிகளிலும், தேசிய ஆரம்பப் பள்ளிகளிலும் (முன்னாள் ஆங்கிலமொழிப் பள்ளிகள்) தமிழ்மொழி மூன்றாம் வகுப்பிலிருந்து ஆறாம் வகுப்புவரை வாரம் 120 நிமிடம் போதிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும் இதற்கான தனியான பாடத்திட்டம் ஒன்றும் திட்டமிடப்படவில்லை.

ஆரம்பப் பள்ளிகளில் நிலை இவ்விதம் இருக்க இடைநிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ்மொழிப் போதனை நிலையைச் சிறிது ஆய்வோம். இடைநிலைப் பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம் 1956–ல் திட்டமிடப்பட்டு 1957 முதல் நாட்டில் அமலாக்கம் கண்டுள்ளது. இப் பாடத்திட்டமானது படிவம் ஒன்று முதல் படிவம் ஐந்துவரைக்கான பாடத்திட்டமாகும். இப் பாடத்திட்டம் படிவ அடிப்படையில் கட்டுரை எழுதுதல், கடிதம் எழுதுதல், கருத்துணர்தல், சுருக்கி எழுதுதல் (படிவம் 4, 5–க்கு மட்டும்), இலக்கணம், பழமொழி, நடித்தல் ஆகிய திறன்களுக்கான சுருக்கமான பாடத்திட்ட வரையுடன் அமைக்கப் பட்டிருந்தது. இதற்கிடையில் தமிழ்மொழி வாயிலாக ஆரம்பக் கல்வியைப் பெற்ற தமிழ்ப்பள்ளி மாணவர்கள் ஆங்கிலம் (1977 வரை) அல்லது மலாய் மொழியைப் போதனாமொழியாகக் கொண்ட இடைநிலைப் பள்ளிகளுக்குச் செல்வதற்கு முன்னர்ப் பயிலும் புகுமுக வகுப்பிற்கு எவ்விதப் பாடத்திட்டமும் தயாரிக்கப்படாமல் தமிழ்மொழிப் போதனை நடைபெற்று வந்தது.

இந் நாட்டின் கற்றல் கற்பித்தலைச் சீரமைப்புச் செய்யும் நோக்கத்தில் 1982 (1983) முதல் ஆரம்பப் பள்ளிகளுக்கான புதிய

பாடத்திட்டம் அமலாக்கம் செய்யப்பட்டது. இப் புதிய பாடத்திட்ட அமலாக்கத்தில் மாணவர்களின் அடிப்படைத் திறன்களாகிய வாசித்தல், எழுதுதல், கணக்கிடுதல் ஆகிய முத்திறன்களிலும் நல்ல பயிற்சியைப் பெறுவதில் முக்கியக் கவனம் செலுத்தப்படுகிறது. இந் நாட்டில் போதிக்கப்படும் பிற மொழிகளைப் போன்று தமிழ்மொழிக்கும் புதிய அணுகுமுறையோடு ஒரு புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இப் பாடத்திட்டத்தின்வழிக் கற்றல் கற்பித்தலில் மறுமலர்ச்சியை உருவாக்கும் நோக்கத்தில் மொழிப்போதனையில் அண்மைக் காலங்களில் ஆய்வு செய்யப்பட்ட நவீன கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகளையும் உத்திமுறைகளையும் உள்ளடக்கித் தமிழ்மொழியின் கற்றல் கற்பித்தல் கவர்ச்சிகரமானதாக ஆக்கப்பட்டுள்ளது.

அறிவைப் பெருக்கிக்கொள்வதற்கும் ஒருவர் மற்றொருவருடன் தொடர்புகொள்வதற்கும் மொழி இன்றியமையாததாகிறது. மொழியின் அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகியவற்றில் நன்கு பயிற்சி பெறுவதன் மூலம் மாணவர்கள் மொழியைத் திறமையாகக் கையாள முடியும். இதனை மனத்திற்கொண்டே ஆரம்பப் பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம், திறன்களை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கல்வியை முடித்து வெளியேறும் ஒரு மாணவன் தன் வயதிற்கு ஏற்ற மொழிவளத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

வகுப்பிற்கு உள்ளேயும், வெளியேயும் தொடர்பு சாதனமாகப் பேச்சும், எழுத்தும் இருக்கின்றன. பேச்சுமொழிக்குக் கேட்டல் திறனும் பேச்சுத் திறனும் அடிப்படைகளாகின்றன. எழுத்துமொழிக்கு வாசிப்புத் திறனும் எழுத்துத் திறனும் அடிப்படைகளாகின்றன. இந்த நான்கு அடிப்படைத் திறன்களும் பாடத்திட்டத்தில் பேச்சு, வாசிப்பு, எழுத்து என்று பிரிக்கப்பட்டு அவற்றிற்குரிய திறன்கள் தனித்தனியாகப் பட்டியலிடப் பட்டுள்ளன. அதனுடன் ஆரம்பப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குத் தேவையான இலக்கணம், செய்யுள், இணைமொழிகள், பழமொழிகள், மரபு தொடர்கள் ஆகியவற்றின் வரையறையும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப் பாடத்திட்டத்தின்வழித் தமிழ்மொழியில் ஒரு மாணவன் கீழ்க்காணும் இறுதிக் குறியிலக்குகளை அடைகிறான்:

1. அன்றாட வாழ்வில் பள்ளியிலோ, வெளியிலோ பேச்சையும் ஒலிபரப்பையும் செவிமடுத்தலும் புரிந்துகொள்ளுதலும்;

2. நண்பர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மற்றவர்கள் ஆகியோருடன் பேசும் பொழுதும், விவாதம், சொற்போர் போன்றவற்றில் பங்குபெறும் பொழுதும் பொருத்தமான முறையில் தங்கள் கருத்துகளை வெளியிடுதல்;

3. மாணவர்கள் தங்கள் பக்குவ நிலைக்கு ஏற்பப் பொருத்தமான நூல்களை உரக்கவும், மௌனமாகவும் வாசித்துக் கிரகிக்கும் ஆற்றலை வளர்க்கச் செய்தல். மேலும் அறிவு வளர்ச்சிக்கும் மனவளர்ச்சிக்கும் துணைபுரியும் வண்ணம் வாசிப்புப் பழக்கத்தை வளர்த்தல்;

4. தலைப்புக்கேற்றவாறு கட்டுரை, கடிதம் எழுதுதல், தேவையான பாரங்களைப் பூர்த்திசெய்யத் தெரிந்திருத்தல்;

5. பலவிதச் சூழ்நிலைகளில் பொருத்தமான மொழியைப் பயன்படுத்தத் தெரிந்திருப்பதோடு, மனிதன் அவன் சார்ந்திருக்கும் சுற்றுப்புறச் சூழலைப்பற்றியும் அறிந்திருத்தல்;

6. அறிவையும் அனுபவத்தையும் வளர்த்துக்கொள்ள மொழியை ஒரு சாதனமாகப் பயன்படுத்துதல்;

7. உரைநடைப் பகுதி, கட்டுரை, கவிதை போன்றவற்றினை ரசிக்கும் தன்மையை வளர்த்தல்.

இப் பாடத்திட்டத்தில் மாணவர்கள் கைவரப் பெறவேண்டிய கொள்திறன்களான வாசிப்பு, கேட்டல் ஆகிய திறன்களும், ஆக்கும் திறன்களான பேச்சு, எழுத்து ஆகிய திறன்களும் தனித்தனியாகக் கொடுக்கப்பட்டிருப்பினும் கற்றல் கற்பித்தல் அணுகுமுறையில் அவை ஒருங்கிணைத்துப் போதிக்கப்படுவதால் மாணவர்கள் மொழிகற்றலை இயல்பாகப் பெறுவதோடு நல்ல மொழி அனுபவமும் பெறுகின்றனர். இப் பாடத்திட்டத்தில் கைவரப்பெற வேண்டிய கேட்டல், பேச்சுத் திறனுக்கு 137 துணைத்திறன்களும், வாசிப்புத் திறனுக்கு 121 துணைத்திறன்களும், எழுத்துத்திறனுக்கு 124 துணைத்திறன்களும் பட்டியலிடப்பட்டுள்ளன.

ஆரம்பப் பள்ளிகளுக்கான புதிய பாடத்திட்டத்தின் (பரிசோதனை) முதல் சுற்று 1987 உடன் முடிவடைகிறது. இதன் தொடர்ச்சியாக இடைநிலைப் பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட பாடத்திட்டம் எதிர்வரும் 1988–ல் அமலாக்கம் காணவிருக்கிறது. ஆரம்பப் பள்ளியில்

போதனாமொழி நிலையைப் பெற்றிருந்த தமிழ்மொழி இடைநிலைப் பள்ளிகளில் ஒரு பாடமாக வாரத்திற்கு 3 பாடவேளைகள் வீதம் பயிற்றுவிக்கப்படவிருக்கிறது.

இடைநிலைப்பள்ளியில் தமிழ்மொழிப் பாடத்திட்டமானது மாணவர்கள் தமிழ்மொழியைத் தொடர்பு சாதனமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தேவைப்படும் மொழியாற்றலைப் பெறும்வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இப் பாடத்திட்டம் மாணவர்கள் ஆரம்பப் பள்ளியில் பெற்ற தமிழ்மொழி அறிவை வளர்ப்பதோடு தமிழ் இலக்கியங்களை அறிந்து சுவைக்கவும் வழிசெய்கின்றது; மேலும் நற்பண்புக் கூறுகளைப் பெறுவதோடு நாட்டின்பால் விசுவாசத்தை வளர்த்துக்கொள்ளவும் துணைசெய்கிறது. இடைநிலைப் பள்ளி இறுதியில் கீழ்க்காணும் நோக்குகளை அடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது:

1. அன்றாட வாழ்வில் இடம்பெறும் பல்வகைப் பேச்சு மற்றும் ஒலி, ஒளி பரப்புகள் முதலியவற்றைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்,
2. பல்வகைச் சூழலில் சரளமாகப் பேசுவதோடு கருத்துகளைத் தர்க்க ரீதியாகவும் பகுத்தாராய்ந்தும் கூறுதல்,
3. மாணவர்களின் முதிர்ச்சிக்கேற்பப் பல்வேறு வாசிப்புப் பகுதிகளை உரக்கவும், மௌனமாகவும், விரைவாகவும், திறமையாகவும் வாசித்துப் புரிந்துகொள்ளுதல்,
4. அறிவு வளர்ச்சிக்கும் மனமகிழ்வுக்கும் வாசிக்கும் பழக்கத்தை உருவாக்குதல்,
5. பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைத்தல்,
6. உரைநடை, கவிதை வடிவிலான பல்வகை இலக்கியங்களைப் புரிந்து அவற்றில் காணும் மொழிநயத்தையும், மனித, சமுதாய, பண்பாட்டுக் கூறுகளையும் அறிதல்.

இந் நாட்டில் ஆரம்பத் தமிழ்ப்பள்ளியில் ஒரு மாணவன் இடைநிலைக் கல்வியைத் தொடர்வதற்குமுன் புகுமுக வகுப்பிற்குச் செல்ல வேண்டும். இவ் வகுப்புத் தமிழ் ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்குத் தேசியமொழியாகிய மலாய்மொழியில் நல்ல மொழியாற்றலை ஏற்படுத்துவதற்கென்று சிறப்பாகத் தயாரிக்கப்பட்டதாகும். இப் புகுமுக வகுப்பில் தமிழ்மொழியும் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. அதனால்

புகுமுக வகுப்பில் தேவைக்கேற்பத் தமிழ்மொழிப் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. புகுமுக வகுப்பிற்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம் ஆரம்பப் பள்ளியில் பெற்ற தமிழ்மொழி அறிவினைத் தொடர்ந்து பேணிக் காக்கும் வகையிலும் மாணவர்களின் தேவைகளுக்கேற்பத் தமிழ் மொழியினைப் பயன்படுத்துவதில் நல்ல வளத்தைப் பெறும் வகையிலும் திட்டமிடப்பட்டுள்ளது.

கற்றல் கற்பித்தல் பொருள்கள்

ஆக்ககரமான கற்றல் கற்பித்தலுக்குப் பாடத்திட்டம் அடிப்படையாக இருந்தாலும் அப் பாடத்திட்டத்தின் குறிக்கோள், நோக்கம் மற்றும் அதன் வரையறையைக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளாக மாற்றும்பொழுது ஓர் ஆசிரியருக்கும் கற்கின்ற மாணவர்க்கும் பல கற்றல் கற்பித்தல் பொருள்கள் தேவைப்படுகின்றன. இவற்றில் பலராலும் முக்கியமானதாகக் கருதப்படுபவை பாடநூல்களாகும். பாடநூல்களைத் தவிர்த்து, கற்றல் கற்பித்தலுக்கு உறுதுணையாக இருக்கும் துணை வாசிப்பு நூல்கள், பயிற்சி நூல்கள், ஆசிரியர் கையேடுகள், ஒலி – ஒளிப்பதிவு நாடாக்கள், காட்சி வில்லைகள், ஒளி ஊடுருவிகள் போன்ற பல்வகைப் போதனைக் கருவிகள் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலை மேலும் வளப்படுத்துகின்றன.

இந் நாட்டில் ஆரம்ப காலங்களில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்காகப் பயன்படுத்தப்பட்ட பாடநூல்கள் யாவும் தமிழ்நாடு அல்லது இலங்கையிலிருந்து தருவிக்கப்பட்டவையாகும். இரண்டாவது போருக்குப் பின்னரே இந் நாட்டுப் பின்னணியில் பாடநூல்கள் எழுதப்பட்டன. இந் நூல்கள் இங்கு எழுதப்பட்டாலும் தமிழ்நாட்டின் தாக்கம் முழுமையாகத் தவிர்க்கப்பட்டதாகக் கொள்ளமுடியாது. பாடநூல்களின் அமைப்புமுறை, அவற்றின் உள்ளடக்கம் பெரும்பாலும் தமிழ்நாட்டு நூல்களைப் போன்றே இருந்தன. பெரும்பாலான நூல்கள் வாசிப்புத்திறனை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட நூல்களாகவே இருந்தன. கருத்துணர் பயிற்சிகளும் சில இலக்கணப் பயிற்சிகளும் மட்டுமே இந் நூல்களில் இடம்பெற்றிருந்தன. மற்ற மொழித் திறன்களுக்குப் பயிற்சியும் அனுபவமும் கொடுக்கக் கூடிய கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளோ பயிற்சிகளோ இந் நூல்களில் இடம்பெற வில்லை. பிறமொழிப் பாடநூல்களில் ஏற்பட்ட வளர்ச்சியும் புதுமைகளும் நமது பாடநூல்களில் பார்ப்பது அரிதாகவே இருந்தது. இதனால்

பாடநூல்கள் மாணவர்களின் ஆக்ககரமான கற்றலுக்கும் ஆசிரியரின் கவர்ச்சியான கற்பித்தலுக்கும் துணைசெய்ததாகக் கூறமுடியாது.

ஆரம்பப் பள்ளிகளுக்கான புதிய பாடத்திட்டத்தின் அறிமுகத்தோடு இந் நாட்டுத் தமிழ்மொழிக்கான பாடநூல்களில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. இப் பாடநூல்களைக் கல்வி அமைச்சின் வழிகாட்டலோடு உள்ளூர்ப் புத்தக வெளியீட்டாளர்கள் கற்றல் கற்பித்தலில் உள்ள நவீன முறைகளையும் உத்திகளையும் பயன்படுத்தி, மாணவர்கள் விரும்பிப் பயன்படுத்தும் வகையில் பல்வகைக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளையும் பயிற்சிகளையும் பாடத்திட்டத்தில் கொடுக்கப்பட்ட எல்லா வகைத் திறன்களுக்கும் பொருத்தமானவைகளாக வெளியிட்டுள்ளனர்.

இப் புதிய பாடத்திட்டத்தில் மாணவர்கள் அடிப்படைத் திறன்களாகிய வாசித்தல், எழுதுதல் ஆகியவற்றில் நல்ல திறமையை ஆரம்ப ஆண்டுகளிலேயே நன்கு பெறவேண்டும் என்ற நோக்கில் திட்டமிடப்பட்ட சொற்களஞ்சியம், வாக்கிய அமைப்பு, கருப்பொருள் ஆகிய அடிப்படையில் மாணவர்கள் மொழியைப் பயிலும் முதல் மூன்று ஆண்டுகளுக்கு 80 துணை வாசிப்பு நூல்களை நாட்டில் உள்ள எல்லாத் தமிழ்ப்பள்ளிகளுக்கும் தலைப்புக்கு எட்டு நூல்கள் வீதம் கல்வி அமைச்சு வழங்கியது. ஒரு மொழியின் ஆக்கத் திறன்களுக்கு அடிப்படையான கொள்திறனில் முக்கியத் திறனான வாசிப்புத் திறனில் முக்கியக் கவனம் செலுத்தப்படுவது ஆக்ககரமான தமிழ்மொழி கற்றலுக்கு மிகவும் அடிப்படையான ஒரு நடவடிக்கையாகும். இவற்றோடு தமிழ்மொழி அறிவோடு பொதுஅறிவையும் வளர்க்கும் நோக்கில் நாட்டிலுள்ள ஒவ்வொரு பள்ளி நூலகத்துக்கும் 250–க்கும் அதிகமான தமிழ்நூல்கள் வழங்கப் பட்டுள்ளன.

ஆசிரியரின் கற்பித்தலை எளிமைப்படுத்துவதற்கும் ஆக்ககரமாக்குவதற்கும் துணை செய்வதற்காகப் பலவகைப் போதனைக் கருவிகளைக் கொண்ட 'போதனைக்களஞ்சியம்' என்ற கற்றல் கற்பித்தல் பொருள்களும் இப் புதிய பாடத்திட்டத்துடன் வழங்கப்பட்டுள்ளன. விரைவாகப் பயிலும் மாணவர்களுக்குரிய வளப்படுத்தும் கற்றல் கற்பித்தலுக்கான பொருள்களையும் மெதுவாகப் பயிலும் மாணவர்களுக்குரிய பரிகாரப் போதனைக்கான பொருள்களையும் பினாங்கு அறிவியல் பல்கலைக் கழகக் கல்விப்பிரிவினர் தயாரித்துள்ளனர்.

எதிர்வரும் 1988–ல் அமல்படுத்தவிருக்கும் இடைநிலைப் பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்மொழிப் பாடத்திட்டத்திற்கான பாடநூல்கள் கல்வி அமைச்சின் வழிகாட்டலோடு உள்நாட்டு வெளியீட்டாளர்களால் உள்நாட்டு ஆசிரியர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

கற்றல் கற்பித்தலை மேலும் வளப்படுத்துவதற்கு ஒலி–ஒளிபரப்புகள் மற்றும் மாத, வார, நாளிதழ்கள் பயன்படுத்துவதும் அவசியமாகிறது. இவ்வகைப் பொருள்களைப் பயன்படுத்துவதால் பயன்பாட்டு நிலையில் மொழி கற்றல் கற்பித்தல் சூழலை உருவாக்கி நல்ல மொழி அனுபவத்தை மாணவர்கள் பெறமுடியும்.

ஆசிரியர் பயிற்சி

இந் நாட்டின் தமிழ்க்கல்வி வரலாற்றில் தமிழாசிரியர்களுக்கான ஆசிரியர் பயிற்சியானது இரண்டாவது உலகப் போருக்குச் சற்று முன்னர் ஆரம்பிக்கப்பட்டு, போர்க் காரணத்தால் சிறிது இடைவெளி விட்டு மீண்டும் போருக்குப் பின் ஆரம்பிக்கப்பட்டது. 1950ஆம் ஆண்டுகளில் கெடா, பினாங்கு, பேரா, சிலாங்கூர், நெகிரி செம்பிலான், ஜோகூர் போன்ற மாநிலங்களில் தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்த காரணத்தினால் தமிழாசிரியர்களுக்கான போதனாமுறைப் பயிற்சி கொடுக்கப்பட்டது. 1960–க்குப் பின்னர்த் தமிழ்ப் பள்ளிகளின் எண்ணிக்கையும் தமிழ்ப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கையும் குறைந்த காரணத்தினால் தமிழாசிரியர்களுக்கான ஆசிரியர் பயிற்சி மையம் ஒன்றாகக் குறைந்தது. ஆனால் 1980ஆம் ஆண்டிற்குப் பின்னர்த் தமிழ் மக்களிடையே ஏற்பட்ட ஒருவகை உந்துதலால் தமிழ்ப்பள்ளிகளின் மாணவர் எண்ணிக்கை உயர்ந்து அதன்வழி மூன்று ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் இன்று தமிழாசிரியர்களுக்கான பயிற்சி நடைபெற்று வருகிறது. இவ் வாண்டுமுதல் (1987) இடைநிலைப் பள்ளிகளுக்கான தமிழாசிரியர் பயிற்சியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மதிப்பீடு

இந் நாட்டில் தமிழ்மொழி கற்றலைச் சோதிக்க ஆரம்பப் பள்ளிகளுக்கும் இடைநிலைப் பள்ளிகளுக்கும் மூன்று பொதுச் சோதனைகள் நடத்தப்படுகின்றன. முதலாவது பொதுச் சோதனை ஆரம்பப் பள்ளியின் இறுதிக்கட்டத்தில் ஐந்தாம் வகுப்பில் (1986 வரை) அல்லது ஆறாம்

வகுப்பில் (1988 முதல்) நடத்தப்படுகிறது. இடைநிலைப் பள்ளிகளில் மூன்றாம் படிவ இறுதியிலும் ஐந்தாம் படிவ இறுதியிலும் பொதுச் சோதனைகள் நடத்தப்படுகின்றன. இப் பொதுச் சோதனைகள் அனைத்தும் தமிழ்மொழியின் கற்றலின் வளர்ச்சியை அளக்கின்ற கருவிகளாகும்.

இதுநாள்வரை மதிப்பீட்டுக் கருவிகள் அனைத்தும் மாணவர்களின் எழுத்துத் திறனைமட்டும் பரிசோதித்து அவர்களின் மொழித்தேர்வைக் காட்டி வந்தன. ஆனால், இம் மதிப்பீட்டுக் கருவிகளை மாணவர்களின் உண்மையான மொழி ஆற்றலை மதிப்பிடும் கருவியாகக் கருதமுடியாது. மாணவர்களின் கேட்டுப்புரியும் ஆற்றல், பேச்சுத்திறன், வாசிக்கும் திறன் ஆகியவை பரிசோதிக்க முடியாமல் இருந்துவந்துள்ளன. இந்தக் குறைபாடு ஆரம்பப் பள்ளிகளுக்கான அடைவுச் சோதனை வழியாகத் தவிர்க்கப்பட்டு வருகிறது. இச் சோதனையில் மாணவர்களின் பேச்சுத்திறன், வாசிப்புத்திறன் ஆகிய திறன்களுடன் எழுத்துத்திறனும் பரிசோதிக்கப்படுவதால் அவர்களின் உண்மையான மொழித்தேர்வு அளவிடப்படுகிறது.

இப் பொதுச் சோதனைகளின் வழியாக மாணவர்களின் மொழித் தேர்வு அளவிடப்படுகிற நன்மை கிடைத்த போதிலும் கற்றல் கற்பித்தல் அடிப்படையில் இச் சோதனைகளில் பல குறைபாடுகள் ஏற்படத்தான் செய்கின்றன. மொழி கற்றலும் கற்பித்தலும் சோதனை மையமாக நடைபெற்றால் மாணவர்கள் உண்மையான மொழிஅறிவைப் பெறமாட்டார்கள். மாறாகச் சோதனையில் தேர்வு பெறுவதற்காக, சோதனையின் நுணுக்கங்களைமட்டும் கற்றுச் சோதனையை எடுப்பர்; நல்ல தேர்வையும் பெறுவர்; ஆனால் உண்மையான மொழித்தேர்வைப் பெறத் தவறிவிடுவர்.

மலேசியாவில் எதிர்வரும் காலங்களில் தமிழ்மொழி கற்பித்தல்

சுமார் பதினைந்து இலட்சம் இந்தியர்கள் வாழும் மலேசியாவில் இந்தியர்களால் அதிகமாகப் பயன்படுத்தும் இந்திய மொழி தமிழ் மொழியாகும். அண்மைக் காலங்களில் தமிழ்மொழியை விரும்பிப் படிக்கும் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருகிறது. அதே சமயத்தில் மலேசியாவின் தேசியமொழியாகிய மலேசிய மொழியின் தாக்கமும் செல்வாக்கும் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. பல்லினம்

வாழும் மலேசியாவில் பொருளாதார, அரசியல், சமூகச் செல்வாக்கைப் பெற வேண்டுமானால் மலேசிய மொழியில் அதிக நாட்டமும் தமிழ்மொழியில் சிறிது நாட்டக்குறைவும் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். இச் சூழ்நிலையில் பெரும்பாலான தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ்மொழி இரண்டாவது மொழியாகவோ அயல்மொழியாகவோ ஆகிவிடும். இன்று தமிழ் மலேசியாவில் போதனைமுறை அடிப்படையில் முதல்மொழிப் போதனை முறையில்தான் போதிக்கப்பட்டு வருகிறது.

ஆகவே, மலேசியாவில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்குத் துணை செய்யும் பொருட்டு, தமிழ் மொழியியல் அறிஞர்களும் தமிழ்ப் போதனைமுறை அறிஞர்களும் தமிழ்மொழியைத் தமிழர்களுக்கு இரண்டாவது மொழியாகவோ அயல்மொழியாகவோ கற்பிக்கின்ற அணுகுமுறைகள், போதனை முறைகள், உத்தி முறைகள் போன்றவற்றை விரிவாக ஆய்வு செய்ய வேண்டும்.

இன்று மலேசியாவில் தமிழ்மொழியை விரும்பிக் கற்கும் இந்தியரல்லாதவர்கள் பெரும்பாலும் உயர்கல்விக் கூடங்களில்மட்டுமே காணப்படுகின்றனர். இன்னும் ஒருசில ஆண்டுகளில், பல்லின மக்களின் ஒருமைப்பாட்டு வளர்ச்சிக்காகத் தமிழ்மொழியை விரும்பிக் கற்க ஆரம்பிக்கும் ஆரம்பப்பள்ளி மற்றும் இடைநிலைப் பள்ளிக்கு இந்தியரல்லாத பிறமொழி மாணவர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கலாம். இம்மாதிரியான மாணவர்களுக்குத் தமிழ்மொழியைப் போதிக்கும் கற்றல் கற்பித்தல் போதனை முறைகளை நாம் ஆய்வு செய்ய வேண்டும்.

இந் நாட்டுக் கல்வித்திட்டத்தில் தமிழ்மொழியைக் கற்கின்ற நேர ஒதுக்கீடு குறிப்பாக, இடைநிலைப் பள்ளிகளில், குறைவாகவே இருக்கும். இக் குறைவான நேரத்தில் நிறைவான தமிழ்மொழி அறிவை எவ்விதம் உருவாக்க முடியும் என்பதை ஆய்வு செய்ய வேண்டும். இன்றைய தொழில்நுட்ப உலகில் கணினி போன்றவற்றை மொழி கற்றல் கற்பித்தலுக்கு எவ்விதம் பயன்படுத்தித் தமிழ்மொழிப் போதனையை நடத்த முடியும் என்பதனையும் ஆய்வு செய்ய வேண்டும்.

மிக விரைவாக மாறிவரும் மலேசியாவின் அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களுக்கு ஏற்ப இந்நாட்டுக் கல்வித்திட்டமும் மாறும்

என்பதில் ஐயமில்லை. அவ்வகை மாற்றங்களுக்கிடையில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலை எவ்விதம் மாற்றிக்கொள்ள முடியும் என்ற தொலைநோக்கும் நாம் பெறவேண்டும்.

பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள்

1. பிரிட்டிஷ் மலாயா கல்வி இலாகா, 1926, தமிழ்ப் பாடத்திட்டம்
2. பிரிட்டிஷ் மலாயா கல்வி இலாகா, 1928, தமிழ்ப் பாடத்திட்டம்
3. பிரிட்டிஷ் மலாயா கல்வி இலாகா, 1936, தமிழ்ப் பாடத்திட்டம்
4. மலேசியக் கல்வி அமைச்சு, 1965, ஆரம்பப் பள்ளிகளுக்கான தமிழ்ப் பாடத்திட்டம்
5. மலேசியக் கல்வி அமைச்சு, 1982, ஆரம்பப் பள்ளிகளுக்கான புதிய பாடத்திட்டத்தின் பொது வழிகாட்டி நூல்
6. மலேசியக் கல்வி அமைச்சு, 1983, ஆரம்பப் பள்ளிகளுக்கான புதிய பாடத்திட்டத்தின் தமிழ்மொழிப் பாடத்திட்டம்
7. மலேசியக் கல்வி அமைச்சு, 1987, புகுமுக வகுப்பிற்கான தமிழ் மொழிப் பாடத்திட்டம்
8. மலேசியக் கல்வி அமைச்சு, 1987, இடைநிலைப் பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்மொழிப் பாடத்திட்டம்

26

செய்துஎன் எச்சமும் செயஎன் எச்சமும்

நா. இராசகோபாலன்

தொல்காப்பியர் வினையெச்சங்கள் ஒன்பது [1] என்றார். நன்னூலார் அவை பன்னிரண்டாகும் [2] என்றார். தொல்காப்பியர் கூறும் ஒன்பதனுள் செய்து, செய்யூ, செய்பு என்னும் மூன்றும் தம் வினைமுதல் வினையான் முடியும். [3] நன்னூலார் அம் மூன்றனோடு செய்யா என்பதனையுங் கூட்டி, அந் நான்கும் வினைமுதல் வினைகொண்டு முடியும்[4] என்றார். அவற்றொடு வான், பான், பாக்கு [5] என்பனவும் அவ்வாறே வினைமுதல் வினைகொள்ளும் என்பது அவர் கருத்து. இவ் வெச்சங்கள் சினைவினையாய் வருங்கால் சினைவினையோடு வினைமுதல் வினையும்கொண்டு முடியும் என்பது இருவர்க்கும் உடன்பாடு. [6]

பிற வினையெச்சங்கள் வினைமுதல் வினையானும் தம்மொடு பொருந்தும் பிறவினையானும் முடியும். [7]

வினைகொண்டு முடிதல்பற்றிய ஆராய்ச்சியோடு எச்சங்கள் உணர்த்தும் காலம்பற்றிய ஆராய்ச்சியையும், தொழில் (அவை உணர்த்தும் பொருள்) பற்றிய ஆராய்ச்சியையும் இலக்கண ஆசிரியர் கருதியுள்ளனர்.

"பொருள்நிலை திரியா" (தொல். சொல். வினை. 39)

"தத்தம் எச்சமொடு சிவணும் குறிப்பின்"

(தொல். சொல். வினை. 40)

"பொருள் திரியா வினைக்குறை" (நன். வினை. 27)

என்னும் நூற்பாக்கள் எச்சங்கள் பொருள் உணர்த்தி வருதலைக் கூறுவன.

"செய்தென் எச்சத்து இறந்த காலம்
எய்திடன் உடைத்தே வாராக் காலம்" (தொல். சொல்.வினை. 42)

"தொழிலுடி காலமும் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே" (நன். சொல். வினை. 23)

இவை எச்சங்கள் காலமுணர்த்தி வருதலைக் குறிப்பன.

ஆதலால் வினைகொண்டு முடிதல், பொருளைத் தெளிவாக விளக்கி நிற்றல், காலம் விளங்குமாறு அமைதல் ஆகிய மூன்றும் வினையெச்சங்கட்குச் சிறப்பிலக்கணங்கள் என்று கூறலாம்.

இவ்வாறு மூவகை இலக்கணங்களும் இவற்றுக்குச் சிறப்பாயினும், ஒரெச்சம் வேறோர் எச்சமாகத் திரிய வேண்டிய இன்றியமையாமை பற்றியும், திரியுங்கால் இம் மூவகை இலக்கணங்களில் ஏற்படும் திரிபுபற்றியும் இலக்கண நூலார் – குறிப்பாக உரையாசிரியர்கள் – நிகழ்த்தியுள்ள ஆராய்ச்சிகள் குறிப்பிடத்தக்கனவாக உள்ளன. செயவெனெச்சம் செய்தெனெச்சமாகத் திரியும் நிலைபற்றித் தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியர்களும், பரிமேலழகர், சிவஞான முனிவர், அரசன் சண்முகனார் ஆகியோரும் நிகழ்த்தியுள்ள ஆராய்ச்சிகள் நுணுகி உணரத்தக்கனவாய் உள்ளன.

"உரற்கால் யானை ஒடித்துஉண்டு எஞ்சிய யர்"

(குறுந்தொகை, 232: 4)

என்னுந் தொடர் பல உரையாசிரியர்களின் நோக்கிற்கு இலக்காகி யுள்ளது. 'உண்டு' என்னும் எச்சம் 'எஞ்சிய' என்னும் எச்சத்துள் எஞ்சுதல் தொழிலோடு முடியாது ஆதலின் உண்டபின் எஞ்சிய என்று பொருள் கொள்ள வேண்டுமென்றார் சேனாவரையர். 'உண்'ணவென்னும் செயவெனெச்சம் 'உண்டு' எனச் செய்தெனெச்சமாகத் திரிந்ததெனக் கொள்ளலாகாது என்பார் அவர். காரண காரியப் பொருளில் வந்தாலன்றிச் செயவெனெச்சத்திற்கு இறந்த காலம் இல்லை; ஆதலின் உண்டு என்பதனை உண்ண என்பதன் திரிபாகக் கொள்ளலாகாது

எனவும், உண்டபின் எனப் பொருள்கொண்டு செய்தெனெச்சமாகவே கொள்ள வேண்டும் எனவும் அவர் முடித்தார்.

நச்சினார்க்கினியரோ, செய்தெனெச்சம்,

"கண்துயின்று முன்றில் போகா முதிர்வினள்" (புறம். 159:4–5)

என்று காரண காரியப் பொருட்டாய் வினைமுதலோடு முடியும் என்றும்,

"அகனமர்ந்து செய்யாள் உறையும்; முகமனார்ந்து
நல்விருந் தோம்புவான் இல்" (திருக்குறள், 84)

என்று காரண காரியமின்றி வினைமுதலோடு முடியும் என்றும்,

'தலைவன் பிரிந்து வருந்தினாள்'

என்று காரண காரியப் பொருட்டாய்ப் பிறவினையான் முடிந்தது என்றும்,

"ஞாயிறு பட்டு வந்தான்"

"உரற்கால் யானை ஒடித்துஉண்டு எஞ்சிய யா"

என்று காரண காரியம் இன்றிப் பிறவினையான் முடிந்தன என்றும் விளக்கி,

1. காரண காரியப் பொருட்டாய்த் தன்வினையொடு முடிதல்,
2. காரண காரியமின்றித் தன்வினையொடு முடிதல்,
3. காரண காரியப் பொருட்டாய்ப் பிறவினையொடு முடிதல்,
4. காரண காரியமின்றிப் பிறவினையோடு முடிதல்

என நால்வகையால் முடியும் என்று கருதுகிறார்.[8]

உண்டு என்பது வினைமுதல் வினையோடு முடியாமையின் உண்ண எனத் திரிதல் வேண்டிற்று என்றார் தெய்வச்சிலையார்.

செயவெனெச்சம் செய்தெனெச்சமாகத் திரிந்து நிற்கும் என்பர் இளம்பூரணர். ஞாயிறு பட்டு வந்தான், கோழி கூவிப் பொழுது புலர்ந்தது என்பன,

ஞாயிறு பட வந்தான்
கோழிகூவப்பொழுது புலர்ந்தது[10]

என வரும் என்பது அவர் கருத்து.

மயிலைநாதரும் [11] சங்கரநமச்சிவாயரும்[12] செயவெனெச்சம் செய்தெனெச்சமாகத் திரியும் என்பர்.

"குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு" (திருக்குறள், 604)

என்பதன் உரையில் பரிமேலழகர் "மடிந்து எனத் திரிந்து நின்ற வினையெச்சம் இலவர் என்னும் குறிப்பு வினைப்பெயர் கொண்டது" என்று கூறினார். மடிய வென்னும் செயவெனெச்சம் செய்தெனெச்சமாகத் திரிந்ததாகக் கொண்டார் பரிமேலழகர்.

"குடிபொன்றிக் குற்றமும் ஆங்கே தரும்" (திருக்குறள், 171)

என்பதன் உரையுள், "பொன்ற என்பது பொன்றி எனத் திரிந்துநின்றது" என்று கூறிச் செயவெனெச்சம் செய்தெனெச்சமாகத் திரிதலை எடுத்துக் காட்டினார்.

"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு" (திருக்குறள், 352)

என்பதன் உரையுள், "நீக்கி என்பது தொடைநோக்கி மெலிந்து நின்றது; நீங்க என்பதன் திரிபு எனினும் அமையும்" என்றுரைத்துச் செயவெனெச்சம் செய்தெனெச்சமாதலை உடன்படுகிறார் பரிமேலழகர்.

சிவஞான முனிவர் தொல்காப்பிய உரையாசிரியர்களையும் பரிமேலழகரையும் மறுத்துரைத்தார். குடிமடிந்து, குடிபொன்றி, கோழிகூவி என்பன குடிமடியச் செய்து, குடி பொன்றச் செய்து, கோழிகூவுவித்து என வரும் என்று கூறிச் செய்தெனெச்சங்களைப் பிறவினையாக்கிக் கூறினார்.[13] எனினும் செயவெனெச்சம் செய்தெனெச்சமாகத் திரிதலை அவரும் ஏற்றுக்கொண்டார் என்பது, "கரும்பார் தோள்முத்தம்" என்னும் சிந்தாமணிச் செய்யுளில் வரும் செய்தெனெச்சங்களைக் குறித்து, "இச் செய்யுளில் வரும் வினையெச்சமெல்லாம் நிகழ்காலமே குறித்துவருதலின் அவை செயவெனெச்சத் திரிபேயாம் என்பது"[14] என்று கூறும் விளக்கத்தால் புலனாகும்.

அரசன் சண்முகனார் பொன்றுவித்து, கூவுவித்து என்பன பொருந்தா என்று கூறி,

"ஒடித்து உண்டு எஞ்சிய யா"

"கோழி கூவிப் பொழுது புலர்ந்தது"

என்பன உண்டபின், கூவியபின் எனப் பொருள் கொள்ளும்[15] என்றுரைத்தார்.

செயவெனெச்சத்தையும் செய்தெனெச்சத்தையும் இவ்வாறு உரையாசிரியர்கள் தொடர்புபடுத்தக் காரணங்கள் யாவை? அவ் விரண்டிற்கும் உள்ள பொதுத்தன்மைகளே காரணங்கள். உரையாசிரியர் களின் கருத்துகளைக் கொண்டே அப் பொதுத் தன்மைகளைக் காண்போம்.

செயவெனெச்சம் காரணப் பொருளில் இறந்த காலம் உணர்த்தி வரும்:

மழை பெய்ய மரங்குழைத்தது (சேனா.[16], நச்.[17], தெய்வச்.[18]).
செய்தெனெச்சம் இறந்த காலம் உணர்த்துதல் தெளிவு:

உண்டு வந்தான் (சேனா.[19] நச்.[20] தெய்வச்.[21]).
செயவெனெச்சம் காரியப் பொருளில் எதிர்காலம் உணர்த்தி வரும்:

மழைபெய்யப் பலிகொடுத்தும் (தெய்வச்சிலையார்)[22]

நெல் விளைய மழைபெய்தது (சங்கர நமச்சிவாயர்)[23]

செய்தெனெச்சம் எதிர்காலப் பொருள் உடையதன்றாயினும் நீ* உண்டு வருவாய், உழுது வருவாய் என்னுந் தொடர்களில் முடிக்குஞ் சொல்லை நோக்கி அஃது எதிர்காலத்தில் வந்தது. சேனாவரையர், "பொருள் சிதையாமல் எதிர்காலத்து வந்தவாறு கண்டுகொள்க"[24] என்று எழுதினார். இளம்பூரணர், "இனி உழுதுவருஞ் சாத்தன் உண்டுவருஞ் சாத்தன், என்புழிச் செய்தெனெச்சம் எதிர்காலத்திற்கு ஏற்றது"[25] என்று உரை கூறினார். நச்சினார்க்கினியரும் தெய்வச்சிலையாரும் இவ் வெச்சம் எதிர்காலப் பொருளில் வருவதை உடன்படுகின்றனர்.[26]

---

* இவை முறையே, நீ உண்டு முடிக்க அதன்பின் வருவாய், நீ உழுது முடிக்க அதன் பின் வருவாய் எனச் செயவெனெச்சப் பொருளுணர்வு தோன்ற வினைக்முறுதல் நுனித்து நோக்கத்தக்கது.

செயவெனெச்சம் காரண காரியப் பொருளின்றி நிகழ்காலம் உணர்த்தும்.

மழைபெய்ய வந்தான் (தெய்வச்சிலையார்)[27]

"*வண்கமல முகங்காட்டக் கருநெய்தல் கண்காட்டும்*" [28]

(தேவா. திருரூ.பதி. 126)

செய்தெனெச்சமும் நிகழ்காலம் உணர்த்தும் என்பர் இளம் பூரணரும் சிவஞான முனிவரும். "செய்தெனெச்சம் நிகழ்காலத்திற்கு ஏற்றது, "கொடியாடித் தோன்றும் என்பது" என்று உரை கூறினார் இளம்பூரணர். [29] "கரும்பார் தோள்முத்தம்" என்னும் சிந்தாமணியில் வரும் கழன்று, விளர்த்து, கரிந்து, பெய்து, நைந்து என்னும் எச்சங்கள் நிகழ்காலமே குறித்துச் செயவெனெச்சத்தின் திரிபுகளாய் வந்தன என்பர் சிவஞான முனிவர்.[30]

காலம் உணர்த்துதல், தொழில் (பொருள்) உணர்த்துதல் ஆகிய இருவகையாலும் இவற்றினிடையே பொதுத்தன்மைகள் உள்ளன என்பதை இவற்றால் நன்கு உணரலாம்.

செய்தெனெச்சம் செயவெனெச்சமாகத் திரிதல் சேனாவரையர்க்கு உடன்பாடன்று.[31]

எனினும், ஞாயிறு பட்டு வந்தான் என்பது ஞாயிறு பட்டபின் (அஃதாவது ஞாயிறு பட அதன்பின்) வந்தான் என்று விளக்குதலின், காரண காரியப் பொருளின்றிச் செயவெனெச்சத் திரிபாக வந்ததெனக் கொள்ளலே சேனாவரையர்க்கும் கருத்தாதல் வேண்டும். ஒடித்து உண்டு எஞ்சிய என்னுந் தொடர்க்கும் ஒடித்து உண்ணலால் எஞ்சிய என்று பொருள் கொள்வதில் இழுக்கில்லை.[32]

இனி, வினைகொண்டு முடிதல் என்னும் ஒன்றுபற்றி இவ் விரண்டெச்சங்கட்கிடையே ஒப்புமை காணுதல் வேண்டும். செய் தெனெச்சம் வினைமுதல் வினையான் முடியும். செயவெனெச்சம் வினைமுதல் வினையானும் பிறவினையானும் முடியும் என்பது தொல் காப்பியர் துணிபு. செயவெனெச்சம் செய்தெனெச்சமாகத் திரிந்து தன் வினையானும் பிறவினையானும் முடிதல் இயல்பு.[33] செயவெனெச்சப் பொருளில் வரும் செய்தெனெச்சம் பிறவினையான் முடிதலும் இயல்பே. இவற்றைக்கொண்டு இவ் விரண்டினிடையே பொதுத்தன்மை காண்டல்

அமையாது. வினைமுதல் வினையானும் பிறவினையானும் முடியும் செயவெனெச்சம் போல், வினைமுதல் முடிபினதாகிய செய்தெனெச்சம் போல், வினைமுதல் முடிபினதாகிய செய்தெனெச்சம் பிறவினையானும் முடிந்தாலேயே பொதுத்தன்மை அமையும்.

சேனாவரையர் உரை இப் பொதுத்தன்மை காண்டற்கு உதவுகின்றது.

"வினைமுதல் முடிபின என்புழி வினைமுதல் வினையென்னுந் துணையல்லது பிறிதொன்றற்குப் பொதுவாகாது வினைமுதற்கே வினையாதல் வேண்டும் என்னும் வரையறை இன்மையின். அல்லாக்கால் "இவனும் இவளும் சிற்றில் இழைத்தும் சிறுபறை அறைந்தும் விளையாடுப என்பன போல்வன அமையாவாம் என்க"[34] என்னும் விளக்கம் செய்தெனெச்சம் பிறவினையுங் கொள்ளும் என்பதனை நன்கு உணர்த்துகிறது.

"இவனும் இவளும் சிற்றில் இழைத்தும் சிறுபறை அறைந்தும் விளையாடுப" என்பதனை இவன் சிற்றில் இழைக்கவும் இவன் சிறுபறை அறையவும் (இருவரும்) விளையாடுப என வேறு தொடராக்கிக் காண்க இதனுள் செயவெனெச்ச அமைப்பு விளங்குதல் காணலாம். இதனாலும் செயவெனெச்சமும் செய்தெனெச்சமும் ஒன்றற்கொன்று தொடர்புடையன என்பதை எளிதில் உணரலாம்

இலக்கண நூலார் இவ் விரண்டு எச்சங்கட்கிடையே காட்டும் பொதுத்தன்மை, உலகியல் வழக்கொன்றால் மிகத் தெளிவாகப் புலப்படுகிறது. தந்தைக்கும் மக்கட்குமிடையே இகல் நிகழுங்கால், தந்தை, "என் காலம் முடிந்து எடுத்துக்கொள்ளுங்கள்; ஏதோ என் காலம் முடிய... அப்புறம் எப்படியாவது போங்கள்" என்று கூறுகிறார். இவ் வுலகியல் வழக்கில் செய்தெனெச்சமும் செயவெனெச்சமும் ஒன்றற்கொன்று இயைபுடையனவாய்ப் பொருள் முதலியவற்றால் பொருந்தி நிற்பனவாய் விளங்கக் காணலாம்.

இலக்கணப் புலவர் அறிவு வன்மைகொண்டு பாடுபட்டு விளக்கும் விளக்கங்கள் உலகியலில் மக்கள் உணர்வு தோன்ற உரைக்கும் உரைகளில் இயற்கையாய் எளியனவாய் அமைந்திருந்தல் அறிந்து மகிழத்தக்கது.

அடிக்குறிப்புகள்

1. தொல். சொல். வினை. 31
2. நன். சொல். வினை. 24
3. தொல். சொல். வினை. 33
4. நன். சொல். வினை. 25
5. நன். சொல். வினை. 25
6. தொல். சொல். வினை. 34; நன். சொல். வினை. 25
7. தொல். சொல். வினை. 35; நன். சொல். வினை. 25
8. தொல். சொல். வினை. 34, நச். உரை
9. தொல். சொல். எச்சவியல், 55, தெய்வச். உரை
10. தொல். சொல். எச்சவியல், 60, இளம். உரை
11. நன். மயிலைநாதர், வினை. 26
12. நன். சங்கரநமச்சிவாயர், வினை. 25
13. தொல்காப்பியப் பாயிர விருத்தி. சிவஞான முனிவர், பக் 18
14. ஷி ஷி ப. 19–20
15. ஷி, அரசன் சண்முகனார், ப. 216–22
16. தொல். சொல். வினை. 35 சேனா. உரை
17. தொல். சொல். வினை. 35, நச். உரை
18. தொல். சொல். வினை. 35, தெய்வச். உரை
19. தொல். சொல். வினை. 33, சேனா. உரை
20. தொல். சொல். வினை. 33, நச். உரை
21. தொல். சொல். வினை. 33, தெய்வச். உரை
22. தொல். சொல். வினை. 35, தெய்வச். உரை
23. நன். சொல். வினை. 25, சங்கரநமச்சிவாயர் உரை
24. தொல். சொல். வினை. 24, சேனா. உரை
25. தொல். சொல். வினை. 40, இளம். உரை
26. தொல். சொல். வினை. 42, நச்., தெய்வச். உரை
27. தொல். சொல். வினை. 35, தெய்வச். உரை

28. நன். சொல். வினை. 25, சங்கரநமச்சிவாயர் உரை
29. தொல். சொல். வினை. 40, இளம். உரை
30. தொல்காப்பியப் பாயிர விருத்தி, சிவஞானமுனிவர், ப. 19
31. தொல். சொல். வினை. 33, 34; எச்சவியல், 61 : சேனா. உரை
32. தொல். சொல். எச்சவியல், 61, பூவராகவம் பிள்ளை விளக்கம், ப. 164
33. சீவகசிந்தாமணி, 15, நச். உரை
34. தொல். சொல். கிளவியாக்கம், 2, சேனா. உரை

27

நிறம் மாறிவரும் நிறப்பெயர்கள்

(ஒரு புதிய சிந்தனை)

நா. பாதர் சமால்

1.0 முன்னுரை

"பழையன கழிதலும் புதிய புகுதலும்
வழுவல கால வகையி னானே"[1]

என்றார் பன்னருஞ் சிறப்பின் பவணந்தி முனிவர்.

"புதியன கண்ட போது
விடுவரோ புதுமை பார்ப்பார்?"

என்றார் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடர். [2]

இவற்றிற்கு இணங்க நம் தமிழ்மொழி காலத்திற்கேற்பப் பற்பல துறைகளிலும் புதுப்புது மாற்றங்களைப் பெற்றுவருகிறது. கட்டை வண்டியிலிருந்து ஏவுகணைவரை, கைவிளக்கிலிருந்து கம்பியூட்டர் வரை ஒரு புறம் அறிவியலில் வளர்ச்சி! மரபு கவிதையிலிருந்து புதுக்கவிதை வரை, காப்பியம் தொடங்கிப் புதினம்வரை, தன்னுணர்ச்சிப் பாடல் தொடங்கித் தந்தனத்தான் பாட்டுவரை அகத்துறைப் பாட்டுத் தொடங்கி அழகான சிறுகதைவரை, மற்றொரு புறம் இலக்கியத் துறையில் வளர்ச்சி! ஆனால், இலக்கணத் துறையில்மட்டும் தேக்கம் காணப்படுகிறது! ஏன்? எழுத்து வடிவ

மாற்றம், மொழியியலில் ஒலிகள், ஒலியனியல், சொல்லாய்வு எல்லாம் ஒருபுறம் நடந்து வந்த போதிலும், நிகழ்ந்துவிட்ட மாற்றங்களுக்கு ஏற்பப் புதிய இலக்கணத்தை ஒருவரும் வகுக்கவில்லையே! யான் 'பழமை தேவையில்லை' என்று கூறவில்லை. ஆனால், இன்னும் இலக்கணத்திலே புதுமை புகவில்லையே! என்ற ஏக்கம்தான் இக் கட்டுரையை எழுதத் தூண்டியது.

1.1 இலக்கண வளர்ச்சி

முன்பு, அகத்தியம்தான் இலக்கணமாக இருந்தது என்பர். பின்னர்த் தொல்காப்பியம் இலக்கணமாக ஏற்கப்பட்டது. இடைக் காலத்தில் நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நம்பி அகப்பொருள் முதலியன தோன்றிய பின்னர், அவை சிறப்பாக ஏற்கப்பட்டன. ஆனால், அதற்குப் பின் இலக்கணம் வளர்ச்சி பெறவில்லை.[3]

1.2 புதிய இலக்கணத்தின் பரப்பளவு

புதிய இலக்கணத்தின் பரப்பு என்ன? என்று பலரும் வினவலாம். அதை முதலில் கூறிவிட்டு எனது ஆய்வுப் பகுதிக்குச் செல்கிறேன்.

ஒலி, ஒலியன், சொல், சொல்லியன், உருபு, உருபன், தொடர், தொடரன் முதலிய மொழியியல் கருத்துகள் புதிய இலக்கண நூலில் இடம்பெற வேண்டும்.

இப்போது தமிழ் எழுத்திலே பற்பல வரிவடிவ மாற்றங்கள் சொல்லப்பட்டு வருகின்றன. அவை முழுமையினையும் ஆய்ந்து, பொதுவான ஒரு மாற்றத்தை ஏற்று, அது புதிய இலக்கண நூலில் சேர்க்கப்பட வேண்டும்.

அறிவியல், ஆன்மீகம், கல்வியியல், பொறியியல், மருத்துவம், வேளாண்மை, இசை, நடனம், நாடகம், திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி, பொருளியல், நீதி முதலிய பல துறைகளிலும் கையாளப்படும் கலைச்சொற்களை ஆய்ந்து, வரையறைப்படுத்தி, அதையும் தமிழ் இலக்கண நூலில் சேர்க்க வேண்டும்.

தொல்காப்பியம் எவ்வளவு சிறப்புமிக்க இலக்கண நூலாக இருந்த போதிலும், பின்னாளில் எழுத்துச் சொல்லுக்கு நன்னூல், இலக்கண விளக்கம், வீரசோழியம் ஆகியனவும், பொருளுக்குக் களவியலும்

புறப்பொருள் வெண்பாமாலையும், யாப்புக்குக் காரிகையும், அணியி லுக்குத் தண்டியலங்காரமும் மாறனலங்காரமும் பின்பற்றப்பட்டன. ஏன்? ஒன்று எளிமை, மற்றொன்று சுருக்கம்! இன்னொன்று சிற்சில புதுமைகள்!

தொல்காப்பியர் பாலைநிலம் இன்னதென்று கூறவில்லை. ஆனால், இளங்கோவடிகளார் தம் நூலில்,

"மூல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்" [4] (சிலப்பதிகாரம்)

என்று பாலைக்கு இலக்கணம் கூறினார். இலக்கியம் யாத்தவர்க்கும் புதிய இலக்கணச் சிந்தனை புகுந்தது.

இப்போது காரிகையையும் மீறிக் கவிதைகள் முளைத்துவிட்டன! காரிகை நால்வகைப் பாக்களுடன் மருட்பா, தாழிசை, துறை, விருத்தங் களுக்குக்கூடச் சுருங்கிய இலக்கணமே கூறியது; யாப்பருங்கல விருத்தி விரித்துரைத்தது. ஆனால், விருத்தம்வரைதான் விருத்தி! புதியனவாகப் புகுந்த காவடிச்சிந்து, நொண்டிச்சிந்து, கும்மிச்சிந்து, தென்பாங்கு, ஏற்றப்பாட்டு, நாற்றுப்பாட்டு, தாலாட்டு, ஒப்பாரி, நலங்கு, குலவை, கீர்த்தனைகள், திரையிசைப் பாடல்கள், மெல்லிசைப் பாடல்கள், பொப்பிசைப் பாடல்கள், புதுக்கவிதைகள், ஹைக்கூக் கவிதைகள் முதலியவற்றையும் வரையறைப்படுத்தி ஓர் இலக்கணம் வகுத்து, அதைப் புதிய இலக்கண நூலில் இணைக்க வேண்டும்.

1.3 புதிய இலக்கண நூலின் வடிவம்

வகுக்கப்படும் புதிய இலக்கண நூல், நூற்பா வடிவில் இருப்பதே சிறப்பு! அதற்கு உரைகளும் இயற்றப்பட்டுச் சேர்க்கப்படல் வேண்டும். புதிய இலக்கணத்தில் ஆய்வுரைகள் – திறனாய்வுகள் – அறிவியல் நோக்கோடு இருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டைக் கொண்டு விதியைக் கண்டுபிடிக்கும் விதிவருமுறையில் புதிய இலக்கணம் இயற்றப்படல் வேண்டும். உருமுக்கடிது, கம்முக்கடிது போன்ற பழைய சான்றுகளைக் களைந்து, புதிய சான்றுகளைப் புகுத்த வேண்டும்.

1.4 புதிய இலக்கணத்தின் பயன்

இன்று பள்ளிகள், கல்லூரிகளில் பயின்று, தேர்ச்சி பெற்றுப் பட்டம் பெற்றவர்களில் பலரும் தமிழிலே பிழையின்றி எழுதவும் பேசவும் அறிந்தவர்களாக இல்லை! ஆதலின் வாக்கிய அமைப்புமுறை, குறியீடு, நன்னடை, புதுமைப் பொலிவு இத்தனையும் வாய்க்குமாறு, பல்வேறு துணைக்கருவிகளைக் கையாண்டு, புதிய முறையில் அவற்றைக் கற்பிக்கவும் வழிசெய்யப்படுதல் வேண்டும். வினாவிடை முறையில் அமையலாம்; உரையாடல் முறையில் அமையலாம்; எம்முறையில் அமையினும் வழுவின்றி எழுதவும் பேசவும் அந்த இலக்கணம் உதவ வேண்டும். ஒப்பீட்டு இலக்கணமும் கட்டாயம் தேவை.

1.5 ஒருபானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம்

நான், "ஒருபானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம்" என்பதற்கேற்பப் பொருள் உணர்த்தி வளர்ச்சி பெற்று நிற்கும் சில பண்புப் பெயர்களை (Abstracts) "நிறம் மாறிவரும் நிறப்பெயர்கள் – ஒரு புதிய சிந்தனை!" என்னும் தலைப்பில் ஈங்கு ஆய்வு செய்ய விழைகின்றேன்.

2.0 ஆய்வுப்பகுதி

நிறம் மாறிவரும் நிறப்பெயர்கள்:
ஒரு புதிய சிந்தனை!

2.1 அறுவகைப் பெயர்கள்

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் எனப் பெயர்களை ஆறுவகையாக வகுத்தனர் நம் முன்னோர்.[5] இவை தவிர இடுகுறி, காரணம், பொது, சிறப்பு எனவும் வகுத்தனர்.[6] மேலும் உயர்திணை, அஃறிணை, ஆண், பெண், பலர், ஒன்று. பல, தன்மை, முன்னிலை, படர்க்கை எனவும் திணை, பால், எண், இடவகையாலும் பாகுபாடு செய்தனர். ஆயினும், முற்கூறிய பொருள் முதலிய ஆறு வகையிலே ஒன்றாகிய பண்புப் பெயருள் சிலவற்றையே இங்கு யான் ஆய முற்படுகின்றேன்.

2.2 பண்புப் பெயரின் இலக்கணம்

"பொருளிடங் காலம் சினைகுணம் தொழிலின்
வருபெயர்"[7]

என்று ஆறுவகைப் பெயர்களைச் சுட்டிச்சென்ற நன்னூலார், பண்புப் பெயரைக் குணப்பெயர் எனக் குறித்தனர்.

"செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை உண்மை நுண்மை இவற்றெதிர்
இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே" [8]

என்று பிறிதோரிடத்தில் பெயர்கள் பலவற்றைப் பட்டியலிட்டது போல் பகர்கின்றார்.

"பண்பை விளக்கும் மொழிதொக் கனவும்
ஒருபொருட் கிருபெயர் வந்தவும் குணத்தொகை" [9]

எனப் பண்புத்தொகைக்கு வேறொரு இடத்தில் இலக்கணம் வகுத்தார்.

"அளவு,அறிவு, ஒப்பு, வடிவு, நிறம்,கதி
சாதி, குடி,சிறப்பு, ஆதிப் பல்குணம்" [10]

என்று சொல்லதிகாரத்தில் சொல்கிறார். எனவே அளவு, அறிவு, ஒப்பு, வடிவு, நிறம், கதி, சாதி, குடி, சிறப்பு முதலிய பல்வேறு பண்புகளை உணர்த்திவரும் பெயர்கள் பண்புப்பெயர்கள் என்று தெரிகிறது.

"பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி" [11]

என்றதனால், இப் பல்வகைப் பண்புப்பெயர்களுள் சில நிறப்பெயர்களை மட்டும் யான் ஈண்டு ஆய்கிறேன்.

2.3 நிறப்பெயர்கள்

நிறங்களைச் செம்மை, பகமை, கருமை, வெண்மை, பொன்மை (மஞ்சள்) என ஐந்தாகக் கூறுவர். ஐவண்ணம் எனவும், பஞ்சவர்ணம் எனவும் இவற்றைச் சுட்டுவர். இவை நிறத்தைமட்டுமன்றிப் பல்வகைப் பண்புகளையும் பகர்வதுபற்றியே ஈண்டு ஆய்கின்றோம்.

2.4 நிறப்பெயர்கள் உணர்த்தும் பொருள்

நிறப்பெயர்கள் இன்று வெறும் நிறத்தைமட்டும் உணர்த்தவில்லை; பல்வேறு பொருள்களையும் உணர்த்தி நிறம் மாறிக்கொண்டே வரும் பெயர்களாக – பச்சோந்திப் பெயர்களாக – உள்ளன.

2.4.1 செம்மை

செம்மை என்பது இன்று சிவப்பு, சிகப்பு, சேப்பு என்று பல வடிவங்களில் வழங்கப்படும். இது உணர்த்தும் பொருளோ இடத்துக்கிடம் வேறுபடுகின்றது.

தாமரையின் செம்மை (நிறம்)
அவன் காரியம் செம்மை (சிறப்பு)
செம்மையான அடி (மிகுதி)
சிவந்த மண்ணான செஞ்சீனம் (புரட்சி)
சிரித்தார்க்குச் செம்பாதி (சரிபாதிப் பங்கு)
சிவப்பு விளக்கு (அபாயம்)
சிவப்பு விளக்குப் பகுதி (விலைமாதர் வாழிடம்)
அவன் கண்ணிலே சிவப்பு (கோபம்)
அவன் வாயெல்லாம் வெற்றிலைச் சிவப்பு (மகிழ்ச்சி)
செங்கீரை (திருத்தமற்ற மழலைச்சொல்)
செந்நீர் சிந்தி (இரத்தம்)
செங்கோடு – நேர்கோடு
செங்கோணம் – நேர்கோணம்
செந்தமிழ் – திருத்தமான தமிழ்

இவ்வாறு செம்மை என்னும் நிறப்பெயர் காலப்போக்கில் எவ்வளவு பொருள்களை உணர்த்துகிறது பாருங்கள்!

2.4.2 பசுமை

பசுமை என்பது இன்று பச்சையெனவும் வழங்கும். இதன் பொருளும் இடத்துக்கிடம் வேறுபடும்.

இலை பசுமை நிறம்; பச்சை நிறம்	(நிறம்)
பசுமையான எண்ணங்கள்	(நன்மையான)
பச்சைமரம் } பசுமரம் }	பட்டுப்போகாத மரம்
பச்சைப்பிள்ளை	(இளமையான பிள்ளை)
பச்சைத் தண்ணீர்	(குளிர்ந்த நீர்)
பச்சரிசி	(புழுக்கப்படாத அரிசி)
பச்சைப்பொய்	(அப்பட்டமான பொய்)

பச்சைத் தமிழன்	(அசல் தமிழன்)
பச்சையாகப் பேசினான்	(இழிவான சொற்கள்)
	(வெளிப்படையான சொற்கள்)
பச்சைக்கொடி காட்டினான் / பச்சைவிளக்குக் காட்டினான்	போக அனுமதி அளித்தான்
பச்சையப்பன்	(திருமால்)
பச்சைமயில்	(அழகான மயில்)
பச்சைக் காய்கறி	(வேக வைக்காத காய்கறி)

இவ்வாறு பசுமை என்னும் நிறப்பெயர், எவ்வாறெல்லாம் பொருள் வேறுபடுகிறது பாருங்கள்!

2.4.3. கருமை

கருமையை இக்காலத்தில் கருப்பு என்றும், கறுப்பு என்றும் வழங்குவர். இதன் பொருளும் இடத்துக்கிடம் வேறுபடுவதைக் காணலாம்.

"களவென்னும் காரறி வாண்மை" (தீய அறிவு) [12]

எருமையின் நிறம் கருமை, கருப்பு, கறுப்பு (நிறம்)

"மனத்தினுள் கறுப்பு வைத்து" [13]

அவன் உள்ளமே கருமை, கருப்பு	(தீயது)
அவனிடம் கறுப்புப்பணம் உளது.	(தீய வழியில் சேர்த்த பணம்)
அவன் கறுப்பு உடை அணிந்தான் / கறுப்புக்கொடி அணிந்தான்	(துக்கம்)
அவன் கறுப்புக் கொடி காட்டினான்	(எதிர்ப்பு)
கருமுகில்	(சூல்கொண்ட முகில்)
கருமாரி	(கருணையுள்ள மாரி)
கருப்பையன் / கருப்பாயி	அழகு
காற்றுக்கருப்பு இருக்கும்	(பேய்)

2.4.4. வெண்மை

வெண்மை என்பது வெள்ளை எனவும் குறிக்கப்படும். அதன் பொருளும் இடத்திற்கிடம் வேறுபடும்.

மல்லிகை நிறம் வெண்மை (நிறம்)

அவன் மனம் வெள்ளை (தூய்மை)

வெள்ளாடைக்காரி (கைம்பெண்)

வெள்ளாவி (துணியை வெளுக்க வைக்கப்படுவது)

வெள்ளாடு (உண்மையில் கறுப்பு ஆடு – மங்கலம்)

வெள்ளையடித்தல் (சுண்ணாம்பு பூசல் – ஆகுபெயர்)

வெளிறன்(அறியாமை மிக்கவன்)

கையில் வெள்ளை விழுந்தது (வெண்குட்ட நோய்)

கறுப்பை வெளுப்பாக்கினான் (கள்ளப்பணத்தை நல்ல பணமாக மாற்றினான்)

வெள்ளை வேட்டிக்காரர்கள் (அலுவலகங்களில் பணிபுரிவோர்)

"'வெண்மை' எனப்படுவது யாதெனின், ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு" [14] (புல்லறிவுடைமை)

2.4.5. நீலம்

பண்டு கருமையில் அடக்கப்பட்ட நீலம், இன்று தனித்து நின்று பொருளுணர்த்துகிறது. அதன் பொருளும் இடத்துக்கிடம் வேறுபடுகிறது. அவை வருமாறு :

நீல நயனங்கள்	–	நீலமலர் போன்ற விழிகள்
நீலமலை, நீலமணி, நீலமலர்	–	நிறம்
நீலவானம், நீலக்கடல் நீலவண்ணக் கண்ணன்	–	அளவிடற்கரியவன்
கண் நீலம் பூத்தது	–	விடம் ஏறியதன் அறிகுறி
நீல அச்சு (Blue Print)	–	வரைபடம்
நீலப்படம் (Blue film)	–	ஆபாசத் திரைப்படம்

2.4.6 பொன்மை (மஞ்சள்)

பொன்மை என்பது இன்று மஞ்சள் என்று வழங்கப்படும். இதன் பொருளும் இடத்துக்கிடம் வேறுபடுகிறது. அவை வருமாறு:

ஏட்டில் மஞ்சள் பூசினான் (மங்கலகாரியம்)

மஞ்சள் கயிறு (தாலிச்சரடு)

மஞ்சள் மகிமை (இல்லறம்)

மஞ்சளாறு (மதுரை மாவட்டத்தில் ஓடும் ஆறு, சீனாவில் ஓடும் பேராறு)

மஞ்சள் நதிக்கரை நாகரிகம் (சீன நாகரிகம்)

மஞ்சள் கடுதாசி (திருமண அழைப்பு)

மஞ்சள் பத்திரிகை (ஆபாசப் பத்திரிகை)

3.0 முடிவுரை

நிறப்பெயர்கள், நிறம் (பொருள்) மாறிக்கொண்டே போவதால், பல்வகைப் பண்புகளையும் குறிப்பதால், அவற்றுள் சில பண்பாகு பெயர்களாகவும், சில பண்புப் பெயர்களாகவும் கருதப்படும். என்றாலும், அவற்றைப் 'புதிய உரிச்சொற்கள்' என ஏன் அழைக்கக்கூடாது? பல்வகைப் பண்பும் பகர்கின்றன; ஒரு குணம் அல்லது பல குணங்களைத் தழுவுகின்றன; பெயர்வினைகளைச் சார்ந்து வருகின்றன. எனவே இவற்றைப் புதிய உரிச்சொற்களாக ஏற்கலாம். ஆனால், கருக்கம் (சால, உறு, தவ, நனி, கழி, கூர்போல) இல்லை! ஆகவே, இவற்றை உரிச்சொற்களாக ஏற்கவியலாது என்றும் சிலர் கூறலாம். அங்ஙனமாயின், இந் நிறப்பெயர்கள் மட்டுமன்றிப் பல்வேறு பெயர்களும்கூடப் பொருட் செறிவுடன் வளர்ச்சியுற்றுள்ளன. அவற்றையும் பிறவற்றையும் ஆய்ந்து கூறப் புதிய இலக்கணம் வகுத்தல் இன்றைய அறிவு சான்ற புலவர்களின் கடமையாகும்.

3.0 பின்னிணைப்புகள்

3.1 துணை நூற்பட்டியல்

* Janathan Anderson , Thesis and Assignment Writing Berry H. Duston and Millicent Poole, pp.125 - 29
* ஆய்வியல் அறிமுகம் – டாக்டர் தமிழண்ணல்
  – டாக்டர் எம்.எஸ். இலக்குமணன்
* ஆய்வுக்கட்டுரை எழுதும் முறை – டாக்டர் முத்துச் சண்முகன்
  – டாக்டர் ச. வேங்கடராமன்
* நன்னூல் காண்டிகையுரை – ஆறுமுக நாவலர்
* நன்னூல் விருத்தியுரை – கழகப் பதிப்பு
* நன்னூல் காண்டிகையுரை – கழகப் பதிப்பு (1980)
  (ப.ஆ : புலவர் இரா. இளங்குமரனார்)

* கம்பராமாயணம் – கம்பன் கழகப் பதிப்பு
* திருக்குறள் – பரிமேலழகர் உரை
* தமிழ்மொழி வரலாறு – தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்
* மகாகவி பாரதியார் – வ.ரா.
* இக்கால மொழியியல் – டாக்டர் முத்துச் சண்முகன்

3.2 சிறப்புப் பெயர்ப் பட்டியல்

அகத்தியம்	தமிழண்ணல்
அகத்தியர்	திருக்குறள்
ஆய்வியல்	தொல்காப்பியம்
இலக்கண விளக்கம்	நம்பியகப்பொருள்
இளங்குமரனார்	புறப்பொருள் வெண்பா மாலை
கம்பராமாயணம்	பெரியபுராணம்
சிலப்பதிகாரம்	யாப்பருங்கலவிருத்தி
தண்டியலங்காரம்	யாப்பருங்கலக்காரிகை

3.3 அடிக்குறிப்புகள்

1 நன்னூல், 462 (கழகப்பதிப்பு)

2 கம்பராமாயணம் – பாலகாண்டம் – பூக்கொய்படலம் – 9 (கம்பன் கழகம்) (1976 – பதிப்பு)

3 ஒருசில புதிய இலக்கண நூல்கள் தோன்றினாலும் அவை அரைத்த மாவையே அரைத்தன. புதிதாக எதையும் கூறவில்லை.

4 சிலப்பதிகாரம், 2:11:64–66

5 நன்னூல், 132

6 நன்னூல், 62

7 நன்னூல், 132

8 நன்னூல், 135

9 நன்னூல், 365

10 நன்னூல், 276

11 நன்னூல், 442

12 திருக்குறள், அறத்துப்பால் – கள்ளாமை, 285

13 பெரியபுராணம், மெய்ப்பொருள் நாயனார் புராணம்

14 திருக்குறள், பொருட்பால் – புல்லறிவாண்மை, 844

28

வளர்தமிழ்

ராம. சேதுநாராயணன்

தமிழின் பெருமை

தமிழ் தொன்மைச் சிறப்புடையது; இனிமை சான்றது; புகழ் மிக்கது. 'தன்னேரிலாத தமிழ்'[1] என்று பண்டைப் புலவராலும் "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்"[2] என்று பன்மொழியறிந்த பாரதியாராலும் பாராட்டுப் பெற்றது; பண்டுதொட்டே முத்தமிழாய் வளர்ந்தது. இடைக்காலம் சோதனைக் காலம். இயற்றமிழ் ஒன்றே பரவலான வளர்ச்சியினைப் பெற, ஏனை இரு பிரிவும் தளர்ச்சி உற்றன. இன்று காலத்தின் தேவையை நிறைவு செய்யும் வகையில் துறைபல காணும் துடிப்போடு தமிழ் வளரத் தொடங்கியுள்ளது.

தமிழரின் அறிவியல் அறிவு

தமிழர்கள் பழமையிலே பற்று மிகுந்தவர்கள். காரணம் தமிழர் நாகரிகமும் பண்பாடும் உன்னதமானவை. மேலை நாகரிகத்தை ஒப்பிட நம் நாகரிகம் வரலாற்றுப் பழமையும் சிறப்புமுடையது. பண்டைத் தமிழர் அறிவியலிலும் பொறியியலிலும் மருத்துவவியலிலும் சிறந்து விளங்கினர்; கணிதவியலிலும் வானசாத்திரத்திலும் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தனர். இக் கருத்துகளை மெய்ப்பிக்க எத்தனையோ இலக்கியச் சான்றுகளைக் காட்டலாம்.

"அணுவைத் துணைத்தேழ் கடலைப் புகட்டி"[3] என்ற ஔவையின் உரையால் அணுவைப் பிளக்க முடியும் என்பதை அன்றே தமிழர்

உணர்ந்திருந்தனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. "அணுவினைச் சதகூறிட்ட கோணினும் உளன்"[4] என்ற கம்பநாடனின் வாக்கும் தமிழரின் அணுவியல் அறிவைப் புலப்படுத்துவதாகும். இப் பாடல்கள் எழுதப்பட்டுப் பல ஆண்டுகளுக்குப் பின்னரும்கூட 'அணுவைப் பிளக்க இயலாது' (Atom is indivisible) என்ற டால்டன் கூற்றையே மேலையுலகம் நம்பி இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந் நூற்றாண்டில்தான் அணுவைப் பிளக்க முடியும் என்ற உண்மையை உணர்ந்து சோதனைகளால் இதை நிறுவி, அதை நடைமுறையில் பயன்படுத்திப் பல விஞ்ஞான மாறுதல்களுக்கு வழிவகுத்துள்ளனர். ஆகவே, நம் பண்டைத் தமிழரின் அறிவுநுட்பம் பெருமைக்குரியதுதான். ஆனால் அவ் வறிவு தேடல் தொடர்ச்சியில்லாமல் மறைந்துவிட்டதை நினைக்கும்போது வேதனையாகத்தான் இருக்கின்றது.

2.1 பொறியியலும் தமிழும்

பொறியியலில், முக்கியமாகக் கட்டடக் கலையில் தமிழர்களின் கலையார்வமும், கைவண்ணமும் உலகப் பிரசித்திபெற்று விளங்கக் காண்கிறோம். தமிழகக் கட்டடக் கலைக்குப் பெருமைமிகு சின்னங்களாக விளங்குபவை, நமது கோயில்கள். அவை, இறைவன் வாழும் இல்லங்களாக இருப்பதோடு அற்புதக் கலைப்பெட்டகங்களாகவும் திகழ்கின்றன. இக் கருத்திற்குச் சான்றாக, காஞ்சிக் கைலாசநாதர் கோயில், தஞ்சைப் பெரிய கோயில், மதுரை மீனாட்சி அம்மன் கோயில், திருப்பெருந்துறை ஆவுடையார் கோயில், சிதம்பரம் நடராசர் கோயில் ஆகியவற்றைக் கூறலாம். பளுவினை உயரே தூக்குவதற்கும், கனமான பொருள்களை நீண்டதூரம் கொண்டு செல்வதற்கும் உரிய விசைக் கருவிகளும், ஊர்திகளும் இல்லாத அக்காலத்தில், இவ்வளவு பெரிய மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் பண்டைத் தமிழர் கட்டியிருப்பது வியப்பிற்குரியதாகும். கோயில்களை நிர்மாணிப்பதிலும் சரி, அவற்றிற்கு அடித்தளம் அமைப்பதிலும் சரி அக்காலச் சிற்பிகளும், கலைஞர்களும் கட்டடக் கலையின் நுட்பம் அறிந்த வல்லுநர்கள் என்பதை நிரூபித்துள்ளனர். அடித்தளம் அமைக்கும் இன்றைய நிபுணர்கள் (Experts in Soil Mechanics and Foundation Engineering) 'மிதக்கும் அடித்தளம்' (Floating Foundation) அமைப்பதை வலியுறுத்தி வருகின்றனர். இத்தகைய அடித்தள அமைப்பைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நம் ஸ்தபதிகள் கடைப்பிடித்து வந்துள்ளனர் என்பது அவர்களின் கட்டுமான அறிவை மெய்ப்பிக்கிறது. இவ் வுண்மையைத் திருநள்ளாறு இராஜகோபுரத்தின்

அடித்தளத்தை நிறுவுவதற்கு ஆலோசனை கூறும் பொறுப்பை நான் ஏற்றிருந்தபோது அறிந்து வியந்தேன்.

2.2 பல்லவர்காலக் கட்டடக் கலை

சோழர் காலத்திற்கு முன்பே கோயில்கள் கட்டுவதில் பிரசித்தி பெற்றிருந்தவர்கள் பல்லவர்கள். இவர்கள் (குறிப்பாக மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன்) காலத்தில் குடைவரைக் கோயில்கள் பல அமைந்தன. இவர்கள், மலைச்சரிவுகளைக் குடைந்து தூண்களையும் மண்டபங் களையும் அமைத்த பாங்கினையும், பாறையையே கோயில்களாக அமைத்த ஆற்றலினையும் எண்ணிப் பார்க்கும் எவரும் வியப்பிற்கு ஆளாகாமல் இருக்க முடியாது. எழில் கொஞ்சும் 'கடல்மல்லைக் கோயில்களும்', 'திருச்சிராப்பள்ளிக் குடைவரைக் கோயிலும்' இவ்வகையில் கருதத்தக்கன.

2.3 நகரமைப்புச் சிறப்பு

சிறந்த நகரம் எப்படி அமைய வேண்டும் என்பதற்குச் சரியான முன்மாதிரியாக் அமைந்த நகரங்கள் என மதுரையையும், காஞ்சி புரத்தையும் குறிப்பிட்டுக் காட்டலாம். சங்கப் பாடலிலேயே மதுரை நகர் பாராட்டப்பட்டிருக்கிறது. கூடல் நகரம் தாமரைப் பூவைப் போன்றதாம்; அதன் தெருக்கள் தாமரையின் அகவிதழ் புறவிதழ்களைப் போன்றவை யாம்; அரசன் அரண்மனை தாமரை நடுவில் இருக்கும் பொகுட்டைப் போன்றதாம். இக் கருத்தை,

> *''மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்*
> *பூவொடு புரையுஞ் சீரூர்; பூவின்*
> *இதழகத் தனைய தெருவம்; இதழகத்து*
> *அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்''*[5]

எனப் பரிபாடல் பேசுகின்றது. 'நகரேஷு காஞ்சி' என்று புகழப்பெற்ற காஞ்சிபுரமும் கோயிலை மையமாக வைத்தே வடிவமைக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய நகரமைப்புகள் அக்காலப் பொறியியலாளரின் திட்டமிடும் திறமையை வெளிப்படுத்துகின்றன.

நீர்ப்பாசனத் துறையிலும் பண்டைத் தமிழர்கள் செயல்திறனைக் காட்டியுள்ளனர். தஞ்சைநகர் அருகில் காவிரியின் குறுக்கே கரிகாலனால் கட்டப்பட்டுள்ள 'கல்லணை'யே இதற்குச் சான்று. சிமெண்ட் இல்லாத அக்காலத்தில் கண்ணாம்பு, மணல், நீர் ஆகியவற்றைக் கலந்து 'காரை'

என்று கூறப்படும் கலவையைக் கொண்டு இத்தகைய பெரிய கட்டுமானங்களை உருவாக்கியுள்ளனர். இதுமட்டுமா? எத்தனை எத்தனை ஆயிரக்கால் மண்டபங்கள், உப்பரிகைகள்! மதுரையில் உள்ள 'திருமலை நாயக்கர் மகால்' சுருங்கல் இல்லாமல் செங்கற்காரைகளினால் கட்டப்பட்ட மாபெரும் கட்டுமானம் ஆகும். செட்டிநாட்டில் உள்ள எண்ணற்ற வளமனைகள் 'Chettinad Plaster' என்ற சுண்ணாம்பினால் செய்யப்பட்ட சுவர் மேற்பூச்சுகளை உடையவை. இவற்றின் அழகும் வழவழப்பும் சொல்லுந்தரமல்ல.

வேளாண்மைத்துறையும் தமிழும்

சங்க காலத்திற்கும் முன்பிருந்தே தமிழர்கள் வேளாண்மைத் துறைக்கு முக்கியத்துவம் அளித்துவந்துள்ளனர். இதற்கு இலக்கியச் சான்றுகள் ஏராளம் உள்ளன. உழவுத்தொழிலின் உயர்வு குறித்த குறட்பாக்கள் அத் துறையின் இன்றியமையாமையை நன்குணர்த்தும்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்"[6]

என்ற புகழுரை ஒன்று போதுமே; வேளாண்துறை தொடர்பான தமிழ்ப் பழமொழிகளை நினைத்துப் பாருங்கள். மண்வளம்பற்றிய அறிவு, பருவகாலம்பற்றிய தெளிவு, எருவிடுதலின் இன்றியமையாமை, களைகட்டலின் அவசியம், நிலத்தை உழுதபின் காயவிடுதலின் தேவை, இவை அனைத்தையும தமிழர்கள் நன்கு உணர்ந்திருந்தனர் என்பது தெரியவரும்.

மருத்துவமும் தமிழும்

மருத்துவத் துறையில் பண்டைத் தமிழர் பெற்றிருந்த அறிவு ஒப்பற்றதாகும். நோய்த் தடுப்புமுறை குறித்து,

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்(கு) அருந்திய(து)
அற்றது போற்றி யுணின்"[7]

எனத் திருவள்ளுவர் எளிமையாகவும், தெளிவாகவும், செறிவாகவும் சொல்லியிருப்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இதுவே 'Dietetics' என்னும் பெருந்துறையாக இன்று பரிணமித்துள்ளது.

"நோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"[8]

என்னும் குற்ளில் மருத்துவர் கடமையைத் தெளிவாக இன்றைய அறிவியல் முறைப்படி வரையறுத்துள்ளார் வள்ளுவர் எனலாம். இதுவே இன்று 'Investigation, diagnosis of the disease, actiology of the disease and management' என்று முறைப்படுத்தி மருத்துவர் பணியாற்றும் வழக்கமாக உள்ளது. இதை மறந்து செயல்படுவதனால்தான் சில மருத்துவர்கள் சமுதாயத்திற்கு ஊறு விளைவிப்பவர்களாக உள்ளனர்.

'தனித்திரு, விழித்திரு, பசித்திரு' என்பது ஆன்றோர் வாக்கு. இதைத் தியானம் (Meditation) என்னும் பெயரில் இன்றைய மருத்துவர்கள் மனநலத்திற்கு மருந்தாகச் சொல்லிவருகிறார்கள்.

சித்த மருத்துவத்தின் சிறப்பு

தமிழர்களின் சித்த மருத்துவம், இயற்கையைப் பயன்கொள்ளும் அற்புத வைத்தியம் ஆகும். சித்தர்கள், பச்சிலை மருத்துவம் மூலம் குணமாக்காத நோய்களே இல்லை எனலாம். மருந்துப் பொருள்கள் அடங்கிய பச்சிலைகளை அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தி வந்தது, தமிழர்களின் தனிச்சிறப்பாகும். திருமால் தமிழ்த்தெய்வம். அவனது கிடந்த திருக்கோலத்தையும் நின்ற வண்ணத்தையும் இளங்கோவடிகள் எடுத்துரைப்பதை அனைவரும் அறிவர். காக்கும் கடவுள் திருமால். அவனுக்கு உகந்தது துளசி இலை. திருமால் எழுந்தருளியுள்ள திருத்தலங்கள்தோறும் துளசி வழங்கப்படுகிறது. இதன் சிறப்பினை இன்றைய மருத்துவ உலகம் அறிவியல் அடிப்படையில் கண்டறிந்துள்ளது. துளசியில் 'Ursolic Acid' என்னும் பொருள் உள்ளது. இது ஆண், பெண் இருபாலாருக்கும் கருத்தடை மருந்தாகப் பயன்படுகின்றது என்பதே அச் சிறப்பு. புதுவை ஜிப்மர் மருத்துவர்கள் 'Indian Council of Medical Research'[9] திட்டத்தின்கீழ் இவ் வுண்மையைக் கண்டுபிடித்துள்ளனர். இது தற்காலிகமான கருத்தடைதான் என்றும், துளசி சாப்பிடும்போது மட்டுமே கருத்தடை ஏற்படுகிறது என்றும், அதனை நிறுத்திவிட்டால் கருத்தரிக்கும் நிலை உண்டாகின்றது என்றும் கூறி 'Safe period for male' [10] என்னும் புதிய கருத்தை, மருத்துவர் சாமி லெட்சுமணன் அறிமுகப்படுத்தியுள்ளார். புவிகாக்கும் பொறுப்பில் உள்ளவர்கள் அதன் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த விரும்புவது இயல்புதானே! இதனால்தான் காக்கும் திருமால் தம் பக்தர்களுக்குத் துளசிப் பிரசாதம் வழங்குகிறார் என்பது தெளிவாகப் புலனாகிறது. திருமாலுக்குத் துளசிபோல, சிவனுக்கு வில்வமும், சக்திக்கு வேப்பிலையும் அர்ச்சிக்கும் பொருள்களாகப்

பயன்படுகின்றன. வில்வம் நீரிழிவு நோய்க்கும், வேப்பிலை பல்வகை வெப்ப நோய்களுக்கும் மருந்தாக இன்றும் கிராமப்புற மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை போல எத்தனை எத்தனையோ சான்றுகளைச் சொல்லிக்கொண்டே செல்லலாம். இவ்வாறு பண்டைத் தமிழ் மருத்துவத்தில் பொதிந்துள்ள உண்மைகளை இன்றைய அறிவியல் அளவுகோல் முறைகளில் புலனாக்கி, புவியெங்கும் உள்ள மனித சமுதாயம் பயன்பெறும்படி செய்ய வேண்டும். இவ்வகையில் மருத்துவ நிபுணர்களை ஊக்குவிப்பது இன்றைய தமிழ் உலகின் தலையாய கடமையாகும்.

அன்றும் அறுவை சிகிச்சை

"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல்"

என வரும் குலசேகராழ்வார் பாடலால் பழங்காலத்தில் அறுவைசிகிச்சை முறையும் இருந்துள்ளது என்பது தெளிவாகிறது. என்றாலும் அஃது அரும்பிய நிலையிலேயே இருந்தது எனலாம். இன்று `Allopathy' மருத்துவத்துறையிலோ இச் சிகிச்சை முறை உச்ச நிலையை அடைந்துள்ளது. இதுபற்றிய நூல்களைத் தமிழாக்கம் செய்வது அவசியமாகும்.

அறிவியல் வளராமைக்குக் காரணம்

கட்டுமானத் துறையும், மருத்துவத் துறையும், வேளாண்மைத் துறையும் பண்டைத் தமிழகத்தில் சிறந்து விளங்கின என்று கண்டோம். எனினும் அவை தொடர்ச்சியான வளர்ச்சியைப் பரவலாகப் பெறவில்லை. இன்றோ அந்த முறைகளை நாம் பெரும்பாலும் மறந்தேவிட்டோம். அவை மறைந்தேவிட்டன என்றால் கூட அது மிகையாகாது. இதற்குக் காரணம் என்ன? மூவேந்தர் காலம் முதல் இயல், இசை, நாடகம் என முத்தமிழாகவே தமிழ் வளர்க்கப்பட்டது. அவற்றுள்ளும் இயற்றமிழே பெருவளர்ச்சி பெற்றுவந்தது. இயற்றமிழில் அனைத்து அறிவுத் துறைகளும் அடங்கிவிட்டதாகக் கருதப்பட்டது. ஆனால், இயற்றமிழில் இலக்கியத்திற்கே முதன்மை தரப்பட்டது. இலக்கியப் பெருக்கமே மொழிவளர்ச்சியாகக் கருதப்பட்டது. தமிழ், புதிய புதிய இலக்கிய வகைகளை வளர்த்தது; ஆனால், புதிய புதிய அறிவுத்துறைகளை வளர்க்கத் தவறியது. இத் துறைகளில் தேர்ந்தவர்கள் தாமறிந்த

உண்மைகளைப் பொதுமைப்படுத்த விரும்பவில்லை. குறுகிய நோக்கம் கொண்டவர்களாய், தத்தம் குடும்பச் சொத்தாகப் பரம்பரை பரம்பரையாக வாய்மொழியாகவே போதித்து வந்தனர். மேதைகள் தங்கள் கருத்துகளைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளத் தயங்கினர். இவ்வாறு அரிய அறிவுநூட்பங்கள் எழுத்துருவம் பெறாமலே அழிந்தன. மகத்துவம் நிரம்பிய மருத்துவக் கலைச்செய்திகளை வெளிப்படுத்த முயன்ற சித்தர்களும்கூட எல்லார்க்கும் தெரிந்த எளியமொழியில் சொல்லாமல், 'பரிபாஷை'யிலேயே இக் கலையைப் புலப்படுத்தினார்கள். தமிழர்களின் இத்தகைய 'மனோபாவம்'தான் புதிய கலைத்துறைகள் தமிழில் வளர்ச்சியடையாமைக்குக் காரணமாகும்.

இன்றைய வளர்தமிழ்ப் பணிகள்

அறிவியலின் இன்றியமையாமையை இன்றைய தமிழ் உலகம் நன்றாகவே உணர்ந்துள்ளது. முதன்முதலில் சுமார் 50 ஆண்டுகட்கு முன்னரே அறிவியலைத் தமிழில் நூல்வடிவமாக வெளியிட்ட பெருமை அண்ணாமலை பல்கலைக்கழகத்தையே சாரும். தவத்திரு குன்றக்குடி அடிகளார் 'அறிவியல் உலகம்' என்னும் இதழைத் திங்கள்தோறும் வெளியிட்டு அறிவியல் முன்னேற்றங்களைப் பரப்பி வருகின்றார். மேலும் இது தொடர்பாகத் தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் பல்துறைக் கருத்தரங்குகள் நடத்த அடிகளார் முயற்சி செய்து வருகிறார். அண்மையில் அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் வா.செ. குழந்தைசாமி, 'அறிவியல் தமிழ்' என்னும் சிறந்த நூலைப் படைத்திருக்கிறார். இவரது சீரிய தலைமையில் வெளிவரும் 'களஞ்சியம்' என்னும் வளர்தமிழ் வெளியீடு தமிழில் அறிவியல் முன்னேற்றம் பரவ உறுதுணையாக உள்ளது. என் நண்பர் பேராசிரியர் டாக்டர் லெ. சிவராமன், F.R.C.S. 'அறுவை சிகிச்சை நோய் நாடல்' என்னும் நூலை எழுதி உள்ளார். அமெரிக்காவில் உள்ள என் மாணவர் எஸ். கண்ணப்பன் என்பவர் கணிப்பானில் தமிழில் திட்டமிடுவதற்கு வகைசெய்து, அதன் மாதிரி ஒன்றைத் தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அளித்துள்ளார். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பிறமொழியில் உள்ள அறிவியல் நூல்களைத் தமிழாக்கம் செய்வதற்கு முன்னுரிமை கொடுத்துப் பல நூல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. மேற்குறிப்பிட்டவை போல மேலும் பல நூல்கள் இன்று எழுதப்பட்டு வருகின்றன.

அனைத்து நாடுகளின் கூட்டு முயற்சியால் அறிவியல் குறித்த உண்மைகள் வெளியிடப்படும் காலம் இது. அறிவியலைப் புறக்கணித்த நாடுகள் பின்தங்கியுள்ளன; செயற்படுத்திய நாடுகளோ முன்னேறியுள்ளன. தொழில்துறை முன்னேற்றத்திற்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் நம் நாட்டின் அனைத்து மொழிகளிலும் அறிவியல் நூட்பங்கள் போதிக்கப்பட வேண்டும். அந்நிலையில் ஒவ்வொருவரும் தத்தம் தாய்மொழி வாயிலாகப் பெறும் அறிவே தெளிவானதும் நிலைத்த பயன்தருவதுமாகும் என்ற உண்மை உணரப்பட வேண்டும். இவ்வாறு போதிப்பதால் மக்களின் முழுச்சக்தியும் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படும்.

இன்று பொறியியல் துறையில் வியத்தகு முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அணுமின் நிலையங்கள், விண்வெளி ஆராய்ச்சிச் சாதனங்கள், கணிப்பான் மூலம் அறிவியல் ஆகியவற்றைச் சான்றாகக் கூறலாம். வேளாண்துறையில் பசுமைப் புரட்சியும், வெண்மைப் புரட்சியும் ஏற்பட்டுள்ளன. இவற்றால் உலக அளவில் 'பஞ்சம் இல்லை' என்ற நிலை பெரும்பாலும் உருவாக்கப்பட்டிருக்கிறது. மருத்துவத் துறையில், குறிப்பாக அறுவை மருத்துவத்தில், மூளையைத் தவிர வேறு எந்த உறுப்பையும் மற்றொருவருக்கு மாற்றி அமைக்கலாம் என்ற அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நோயாளி, நேருக்கு நேர் மருத்துவரைச் சந்திக்க இயலாத நிலையில், அவரது இதயத் தொனிகளின் சமிக்ஞை மூலம் தொலைபேசி வாயிலாகவே நோய் நிர்ணய கேந்திரத்திற்கு அனுப்பப்பட்டு அங்குள்ள எலக்ட்ரானிக் கம்ப்யூட்டரால் இதய மின்னலைகளாகப் பதிவு செய்யப்பட்டு 'இன்ன நோய்'தான் என்று கணித்தறியப்படுகிறது. அறுவை முறையைக் கையாளாமலேயே சிறுநீரகக் கற்கள், அல்ட்ரா தொனியின் மூலம் சிதைக்கப்பட்டு வெளியேற்றப்படுகின்றன. 'லேசர் ஒளிக்கற்றை' மூலம் கத்தியின்றியே அறுவை செய்யப்படுகிறது. சூரிய ஒளிக்கதிர்களைப் பயன்படுத்தி ஆஸ்துமா போன்ற நோய்கள் குணப்படுத்தப்படுகின்றன. இவைபோல வியப்பூட்டும் முன்னேற்றங்கள் துறைதோறும் பெருகி வருகின்றன. அறிவியல் நூட்பங்கள் விண்கலத்தின் வேகம் போல ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருகின்றன. இதற்குக் காரணம் தற்கால அறிஞர்கள் தம் சிந்தனைகளையும், கண்டுபிடிப்புகளையும் உடனே உலகறிய வெளியிடுகின்றனர். இதற்கு வாய்ப்புகளும் சாதனங்களும்

இன்று அதிகரித்துள்ளன. இதனால் அவர்கள் பெற்ற அறிவின் பயனையும், இன்பத்தையும், இவ் வையகமும் பெறுகிறது. இந்த நிலையில் இலக்கிய வளர்ச்சி ஒன்றையே பிரதானமாகக் கொண்டு வளர்ந்துவரும் தமிழில் மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டியது அவசியமும் அவசரமுமாகும்.

பாரதியின் வேட்கை

இவ்வகையில் தமிழின் நிறைகுறைகளை மிகச் சரியாக மதிப்பீடு செய்து தேவைகளைச் சுட்டிக்காட்டிய பாரதி,

"புத்தம் புதிய கலைகள் – பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே – அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை"[12]

என்று வருந்தினான். தமிழ்மொழி, என்றும் வாழும் மொழியாக வளர வேண்டுமானால், காலத்தின் தேவையை நிறைவுசெய்யும் அறிவியல் மொழியாக உயர வேண்டுமானால்,

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்"[13]

என்று சுட்டிக் காட்டினான். தமிழர் செய்ய வேண்டிய பணிகளை,

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் – கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்"[14]

என்ற ஆணையின் மூலம் உணர்த்தினான். அறிவியல் வளர்ச்சியின் மூலமே நாடு வலிமை பெற்று வளர்ச்சிப்பாதையில் முன்னேற முடியும் என்பதையும், அந்த அறிவைத் தாய்மொழி வாயிலாகத்தான் அனைவரும் பெறமுடியும் என்பதையும் தொலைநோக்குப் பார்வையுடன் கூறியுள்ள பாரதியின் கூர்த்த மதியை யாரும் வியக்காமல் இருக்க முடியாது.

தமிழ்மொழி வளர – தமிழர் மேம்பட – மேற்கூறிய பாரதியின் கனவு நனவாக – அறிவுலக விந்தைகள் தமிழாக்கம் பெறுதல் வேண்டும். சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னால் மருத்துவத் துறையில் பொதுநிலையில்

டாக்டர் பட்டம் பெற்ற ஒருவரே எல்லாப் பணிகளுக்கும் சிகிச்சை அளிப்பது என்பது பழக்கமாக இருந்தது. ஆனால், இன்றோ உடம்பின் ஒவ்வொரு பகுதி குறித்தும் சிறப்புப் பட்டம் பெற்ற மருத்துவர்கள் உருவாக்கப்பட்டிருப்பதால் 'நோய்நாடி அதன் முதல் நாடி' நோயைத் தீர்ப்பது என்பது எளிதாக இருக்கிறது. இதுபோல, நாமும் தமிழை இன்னும் முத்தமிழாகவே வைத்திருக்காமல் மேலும் பல பகுதிகளை உடையதாக வளர்க்க வேண்டும். உதாரணமாக அறிவியல் தமிழ், பொறியியல் தமிழ், மருத்துவவியல் தமிழ், வேளாணியல் தமிழ், கணிப்பியல் தமிழ் என்பன போன்ற பிரிவுகளைத் தமிழில் வளர்க்க வேண்டும். அவ்வத் துறைகளில் ஏற்பட்டுள்ள உலகளாவிய அறிவு வளர்ச்சியைத் தமிழில் தருதல் வேண்டும். அறிவியலிலும் தொழில்நுட்பத்திலும் மேம்பட்ட எல்லா நாடுகளிலும் மேற்கண்ட துறைகளில் செய்யப்படும் ஆய்வுகளும், வெளியிடப்படும் நூல்களும் உடனுக்குடன் தமிழில் வருதல் வேண்டும். அவ்வாறு மொழியாக்கம் செய்யும்போது கருத்துக்கே முதன்மை தரவேண்டும். உலக மொழிகள் ஏற்றுக்கொண்டுள்ள அவ்வத் துறைக் கலைச்சொற்களைத் தமிழ்மொழியிலும் அப்படியே ஏற்பதில் தயக்கமோ மயக்கமோ காட்டுதல் கூடாது. நாம் அறிவியலை அடிப்படையாகக் கொண்டு முன்னேற, 'தூய தமிழ் உணர்வு' என்பது ஒரு தடையாக இருக்கக் கூடாது. பிறமொழியை ஒதுக்குவதும் வெறுப்பதும் அறிவு வளர்ச்சிக்கு உகந்தது அல்ல. இத்தகைய மாற்றம் ஏற்பட்டால்தான், புது இரத்தம் பாய்ச்சப்பட்டால்தான் தமிழ்மொழி எல்லாத் துறைகளிலும் பயிற்றுமொழியாகப் பெருமைபெறும்; மாணவர்களால் விரும்பி ஏற்கவும் பெறும்.

இன்று, தமிழ் இலக்கியப் பணிகளை ஊக்குவிப்பதற்குப் பல அறக்கட்டளைகள் உள்ளன. இதுபோலத் தமிழில் அறிவியல், பொறியியல், மருத்துவவியல் போன்ற மற்றத் துறைகளிலும் புதிய புதிய படைப்புகள் தோன்றி வளர்வதற்கு அறக்கட்டளைகள் ஏற்படுத்தி ஆக்கமும் ஊக்கமும் அளித்தல் வேண்டும். இத் துறைகளில் புதிய நூல்கள் எழுதும் அறிஞர்களுக்குத் தமிழ் வளர்ச்சி இயக்ககம் போன்ற அரசு அமைப்புகள் பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்க வேண்டும்; காலத்தின் அறிவு வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு செயலாற்ற வேண்டும். பழம்பெருமை பேசி இன்னும் நாம் வீண்காலம் கழிப்பதால் நாட்டுக்கோ, மொழிக்கோ எவ்விதப் பயனும், பெருமையும் ஏற்படப் போவதில்லை. 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்; எல்லாம் தமிழ்' என்னும் குறிக்கோளில் வெற்றிபெற அறிவுநுட்பங்கள்

அனைத்தையும் தமிழாக்கம் செய்வது கல்விவல்லார் கடனாகும். திருக்குறளும், சிலம்பொலியும், கம்பன் செய்த சித்திரமும் நம்முடைய தேவைகள் அனைத்தையும் தீர்த்துவிடா. அணுயுகத்தைச் செந்தமிழில் நாம் பார்க்க வேண்டும்.

"ஊசிசெயும் சிறுதொழிலின் நுட்பம் கூற
ஒருகோடி நூல்வேண்டும் தமிழில்; இந்தக்
காசினியில் இன்றுவரை அறிவீர் மன்னர்
கண்டுள்ள கலைகளெல்லாம் தமிழில் எண்ணிப்
பேசிமகிழ் நிலைவேண்டும்: விண்ணை எட்டிப்
பிடிக்கிறது மனிதஇனம்: முன்னோர் செல்வ
ஆசியிலே வாழ்கின்றோம், கால மெல்லாம்
அதன்பெருமை பேசுகிறோம், அவல மன்றோ?"[15]

என்ற கவிஞர் குலோத்துங்கனின் அறிவியல் சிந்தனை நமக்கு வழிகாட்டியாக அமைவதாக. இந்த நிலை தமிழுக்கு என்று வருமோ அன்றுதான் தேமதுரத் தமிழ், வலிமையும் வளமும் பெற்று உலகம் போற்றும் மொழியாக உயர்வுபெறும்.

அடிக்குறிப்புகள்

1. தண்டி, தண்டியலங்காரம், மேற்கோள் பாடல்
2. பாரதி, பாரதியார் பாடல்கள் (சிதம்பரம், 1986), ப. 168
3. ஔவையார், திருவள்ளுவ மாலை, திருக்குறள் (சென்னை, 1954) ப.525
4. கம்பன், கம்பராமாயணம், (சென்னை, 1976), ப. 1003
5. பாரதி, பாரதியார் பாடல்கள், ப.167
6. வள்ளுவர், திருக்குறள் (சென்னை, 1954), 1033
7. வள்ளுவர், திருக்குறள், 942
8. வள்ளுவர், திருக்குறள், 948
9. I.C.M.R. Project on ***"A Study of effect of various species of Genus Ocimum (Tulasi) on Reproduction in Albino Mouse"*** 1979-82

10. Lakshmanan, S., Mohinikaul and O.P. Bhargava (1982) ***"Safe Period for male - a hypothesis based on experimental study in mouse"***- J. Anat. Soc. India. 31 : 1, 33

11. குலசேகராழ்வார், 'பெருமாள் திருமொழி' நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் (சென்னை, 1981) பாடல் எண். 691, ப.182

12. பாரதி, பாரதியார் பாடல்கள், ப.167

13. பாரதி, பாரதியார் பாடல்கள், ப. 169

14. பாரதி, பாரதியார் பாடல்கள், ப. 168

15. குலோத்துங்கன், வளர்க தமிழ், ப. 18

29

TAMIL PHONOLOGY : PATTERNS OF ADOPTION AND CHANGE

T. VAŠANTAKUMĀRI

DIFFERENT languages have different sound patterns and they attach different meanings to the combinations of sounds into words and of words into sentences. In speech, the formal side is concerned with the outer form of words and sentences and the study of formal side is based on phonetics, the science of speech sounds. The study of phonetics describes the actions and positions of the vocal organs. Phonology teaches us to observe, analyse and describe the sounds of language and so it is considered the science of linguistic observation. In modern linguistics, phonetics and phonology form the basis for the description of languages.

As far as the linguistic scholarship in India is concerned, it goes further back in time than in Western Europe. It is believed that the ancient grammatical work in Sanskrit, Pāṇini's grammar, came at the end of a long line of previous works of which we have no direct knowledge. Pāṇini's grammar, known as the *aṣṭāṭyāyi* or eight books is assigned to around 600 BC. The topics covered by modern descriptive linguistics - semantics, grammar, phonology and phonetics - were all treated at length in the Indian tradition. However, the link between the ancient and the modern western schools of linguistics is considerably closer to phonetics than in grammar.

It is a known fact that the articulatory description form the basis for the description of sounds and prior to the development of technology and equipments for the analysis of sound waves, the articulatory descritpion was the only possible frame for an accurate and systematic classification.

Though the modern acoustic techniques supplement the phonological analysis, articulatory description still remains fundamental in phonetic description. It is surprising to note that the ancient Indian grammarians had developed these techniques and their phonetic excellence is comparable to the modern phoneticians. The three main stages recognised by the ancient Indian phoneticians in their description are the processes of articulation, the segments and the synthesis of the segments in phonological structures. Henry Sweet, the earliest phonetician in Europe, closely follows the Indian analytical procedures. It is also evident that the Indian phoneticians operated within the initiative conception of phonemic principles and the Sanskrit alphabet or syllabary has been devised on phonemic principles.

Sanskrit language, because of its antiquity, served as a model for the description of Indian languages. The earliest extant grammar of Tamil, Tolkāppiam, which is generally assigned to third century BC, was also inspired by Sanskrit. But the grammar of Tamil, especially the phonetic system has been to a considerable degree, independent of Sanskrit influences. It seems as if Tolkāppiar, the author of Tolkāppiam, works within the intuitive knowledge of modern phonological principles. The classificatory and descriptive aspects of phonology, as found in Tolkāppiam, very closely resembles modern descriptive techniques. A few important descriptions as found in Tolkappiam are given below:

1. The three major systems, involved in the production of speech, are clearly described. The statement like ***talaiyiṉum*** (in the head), ***miḍaṟṟiṉum*** (in the throat) and ***neñciṉum*** (in the lungs). represents the three groups which are lying in the head, throat and trunk respectively. In modern terminology, they are the three systems namely the articulatory, phonatory and respiratory.

2. Description is made about the air-stream mechanism. By,
   Undi mutalā mundu vaḻi
   (the air which begins to come from naval)

   (Tol.eḻu.83)

   he means that the air-stream is emerging out of the naval.

3. Different sounds are produced by different articulatory processes.
   Piṟappiṉ ākkam vēṟu vēṟu
   (kinds of production are different)

   (Tol.eḻu.83)

4. Speech sounds are described in terms of both active and passive articulators. He says that the outgoing air from the lungs, remains in the three systems and is subjected to modifications by the actions of the teeth, lips, tongue, nose and palate, resulting in the production of different kinds of sounds. By the terms ***pallum*** (teeth), ***itaḻum*** (lips), ***nāvum*** (tongue), ***mūkkum***(nose) and ***aṇṇamum*** (palate) he distinguishes different types of sounds namely the dentals, labials, nasals[1] and palatals. By dental he means all the three articulators namely dental, alveolar and retroflex. So also, by palatal he means both the palatal and velar articulations.

5. As regards the manner of articulation, a three-way classification is made. They are ***valleḻuttu*** (hard class) (namely stops), ***melleḻuttu*** (soft class) (namely nasals) and ***iḍaiyeḻuttu*** (medium class) (namely liquids and approximates).

6. A distinction is made between the oral and nasal sounds.

Melleḻut tārum piṟappiṉ ākkam
(all the six nasals in their production)

colliya paṯi nilayiṉa vāyiṉum
(though resembles the same production)

mūkkin vaḻiyišai yāppuṟut tōṉṟum
(will be produced through nose)

(Tol.eḻu. 100)

As regards the production of nasals he says that, though they are produced by the same manner and that of the stops, they differ from the stops in the sense that the air-stream passes through the nose.

7. The vowels, he says, are produced on the basis of the frequency or vibration of vocal cords.

Paṉṉīṟ ruyirum
(all the twelve vowels)

miḍaṟ ṟup piṟanda vaḻiyiṉ išaikkum
(will be vibrated by the function of air production from the larynx)

(Tol: eḻu. 84)

So he means that the air from the larynx is responsible for the vibration of the vowels.

Based on the above descriptions, the pattern of Tamil consonants described in Tolkāppiam may be represented as in Chart 1.

Chart -1. Tolkāppiar model of consonant segments.

	Labial	Dental			Palatal	
vallelluttu	p	t	r	ṭ	c	k
mellelluttu	m	n	n	ṇ	ñ	ṅ
iḍaiyelluttu			l	ḷ		
			r			
		v		ḻ	y	

The latter grammatical works of Tamil, no doubt, follow Tolkappiar's concept of phonology. Nannul, an important grammatical work of the latter period, assigned to around 12th century AD, closely follows Tolkāppiam and according to Venugopal (1968) it forms the best introduction to Tolkāppiam. In short, the grammar of Tamil language,while describing speech sounds, resembles the descriptions of 'General Phonetic Theory'. Though the concept of 'phoneme' was not explicit in their description, it is clear that they worked within the intuitive concept of the 'psychological reality of phonemes'. They also devised the alphabet based on phonemic principles which according to Pike(1947) is 'a technique for reducing languages to writing'. Tamil grammarians also treated the morphophonemic rules within phonology and in this respect their description resembles the description of modern generative phonology.

The phonological system of Tamil has been systematised independent of Sanskrit influences. Tamil had not borrowed aspirated stops, fricatives and clusters of Sanskrit and has developed an independent pattern of its own. The description of the vowel system of Tamil is not problematic. The salient features of the consonant system are explained below:

1. In the arrangement of consonants, Tamil alphabet makes use of only the voiceless stops and their corresponding homorganic nasals. The language uses only one character for representing both surds and sonants in accordance with the 'Law of Convertibility of Surds and Sonants'. Accordingly, a sonant cannot commence a word and a surd is not admissible in the middle except when doubled. This proves the antiquity of Tamil phonetic system, a pure Dravidian system, and the concept of allophonic laws. In the case of Sanskrit loans like ***tanda*** (tooth), it is changed to ***tandam*** to suit the native system.

2. In classical Tamil, *r* (ர), *l* (ல) cannot commence a word and they are required to be preceded by the vowels *i* (இ) and *u* (உ) respectively, thereby *rāj ā* (king) becomes *Irāj ā*, and *lōkā* (world) become ***ulagam***, etc.

3. When the trill R is doubled, in the medial position, it is pronounced as an alveolar stop which again is a peculiarity of Dravidian sounds.

4. The consonant clusters are not permissible either at the beginning or at the end of words and thereby the Sanskrit prefix ***pra*** is changed into ***pira*** in Tamil.

Chart (2) gives the phonemic pattern of consonants in classical Tamil.

Chart - 2. Consonant phonemes of classical Tamil

	Bilabial dental	Labio Dental	Alveolar	Retroflex	Palatel	Velar
Stops	p		t	d	c	k
Nasals	m		n	n̲	ṅ	ñ	ṅ
Laterals				l̲	l̤		
Trill				r̲		
Flap				r		
Approximant		v			l̤	y	

These facts clearly prove that Tamil has been showing a fashion of strong resistance to loans and has developed its own independent phonological system. In a few instances of loans, as we have already seen, they are subjected to modifications in such a way as to suit the existing phonological system of the language.

But, changes are inevitable in languages and they are effected in two ways.

(i) natural changes

(ii) changes due to loans.

Natural changes are considered the design of any living language and takes place very slowly. These changes appear in Tamil also and are reflected in the literary and grammatical works belonging to different periods. For instance, Tolkāppiam and Nannul slightly differ in their phonological descriptions, though Nannul closely follows 'Tolkāppiar model'. These

changes, no doubt, show the language history, that is, the changes that the language underwent during successive periods. But, as far as the phonological system of Tamil language is concerned. it has not undergone any change

Contrary to the first type, where the phonological system is unaffected, the loans from other languages can modify the existing phonological system of languages. Tamil has been showing a fashion of strong resistance to loans and is unreceptive to changes. But, despite this fashion of rejection to loans, it should also be admitted that the language contains a number of loans in a nativised form. In the course of its history, the language has also adopted Sanskrit sounds, namely j (ஜ), š (ஶ), ṣ (ஷ), h (ஹ) and added them in the orthography. In Tamil, the consequential resistance of loans is not the cessation of borrowing, but an increase of borrowing. English loans are freely found in the speech of the educated class. The stock of loans from English has resulted in some striking changes in the phonological patterns of the spoken language.

1. Consonant clusters are found both at the beginning and at the end of words, as in print, (print), *g/ās* (glass) *stūl* (stool), *iṙik* (ink), *beñc* (bench), *pārk* (park), *etc.*

2. *r/ṛ* and *l* commence the word as in *rabar* (rubber), *rūm* (room), *līv* (leave), *etc.*

3. Fricatives *f,s,ṣ* and *h* are used as in *fæn* (fan), *šop* (soap), *ṣelf* (shelf), *hāl* (hall), *etc.*

4. Voiceless alveolar stop begins the word as in *ṯī* (tea), *ṯrayn* (train), *etc.* Since there is phonemic contrast between dental and alveolar stops, as in *tī* (fire) and *ṯī* (tea) they are distinct phonemically.

5. The language has acquired initial voiced stops and as a consequence there is a contrast between voiced and voiceless stops as in *pāl* (milk), *bāl* (ball), *kaṉ* (eye), *gaṉ* (gun). *etc.*

These instances prove that there is a change in the phonological system of the language, Though the words are borrowed mainly for 'need-filling purposes', the new sounds of the donor language were not accomodated in the writing system of the language. In any case, the language needs new words to accommodate new concepts, objects, etc.of the donor language. It is also felt that the language, if it shows greater amount of resistance to loans is not likely to develop. Hockett (1958)

points out a case from Arabic. He says that Arabic language has developed no simple pattern for introduction of necessary verbs and this has slowed down the technological development of the country. So, for adopting new concepts, scientific and technical terminology, for example, the language should be flexible and develop a simple pattern of its own adoption or adaptation. One important change that could be brought into Tamil language is the introduction of new alphabets for contrastive sound segments.

We have already noted five major changes in the language. Let us see how these changes could be accommodated in the phonological system of the language.

1. Word-final clusters are already in use in modern writings. But in some cases of word-initial consonant clusters, a vowel is introduced between them. This change is similar to the nativisation of Sanskrit loans. As regards the writing system is concerned, the clusters do not pose any problem.

2. *r/ṟ* and *l* commence the word in modern writings. The nativisation of loans beginning with *r/ṟ* and *l* may be possible only if it does not change the meaning of the word. So, for this kind of adaptation we should be careful in not creating a new word which has a different meaning in the language. Loans of this category do not create any problem in the language and they are already used in writings.

3. There is no problem in adopting fricatives because Tamil has already borrowed Sanskrit fricatives and introduced alphabets to incorporate them. Excepting *f*, the other fricatives are used in writing.

4. As a result of loans, voiceless alveolar stop is frequently used in speech. We know that the 'sound systems have a tendency towards phonetic symmetry'. Since we find a 'hole in the pattern' as illustrated in Chart 2 this sound can very well be considered a phoneme to fit in the phonemic pattern of the language. Since the existing system do not provide separate scripts for alveolar stop and alveolar trill, and only one character is used to represent both, a new script may be introduced to represent the alveolar stop.

5. Separate scripts may be introduced for voiced stops to differentiate them from their voiceless counterparts. We have discussed the patterns of adaptation and adoption. Since we find that the pattern of adoption does not violate the existing phonological system of the language, the loans may be adopted and new scripts may be introduced to incorporate them.

REFERENCES

Abercrombie, D (1967), ***Elements of General Phonetics***, Edinburgh : Edinburgh University Press

Allen, W.S. (1953). ***Phonetics in Ancient India***, London : Oxford University Press

Caldwell, R. (1875), ***A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages***, London: Truber Co.

Hockett, C.F. (1958), ***A Course in Modern Linguistics***, New Delhi : Oxford & IBH Publishing Co.

Iḷampūraṇar (com) (1979), ***Tolkāppiam - Eḻuttatikāram***, Annamalainagar : Annamalai University

Murugaiyan, K. (19), "***Tolkāppiariṉ Oliyiyal Koḷkai***" in Tolkāppia Moḻiyiyal. Agesthialingom & Murugaiyan (ed.) 1-50 Annamalai Nagar : Anna malai University

Pike, K.L. (1947), ***Phonemics***. Ann Arbor, The University of Michigan Press

Robins, R.H. (1967), ***A Short History of Linguistics***, London : Longmans

Vijayavenugopal, G. (1968), ***A Modern Evaluation of Nannul***, Annamalainagar, Annamalai University

30

MALAY AND TAMIL PRONOMINALS

P. BALASUBRAMANIAM

AN attempt is made in this paper to compare the Malay and Tamil pronominals. Malay belongs to the Malayo - Polynesian family of languages whereas Tamil belongs to the Dravidian group. As such there are lots of differences between the two languages. However there are also similarities between Malay and Tamil. The term 'pronominals', refers to pronouns such as personal pronouns, possessive pronouns and interrogative pronouns.

In both Malay and Tamil specific words or terms are used to indicate the first, second and third person pronouns. In Malay, the first person singular is indicated by '***saya***', '***aku***','***beta***' and '***patik***'. The word '***kita***' indicates first person plural (inclusive); whereas ***kami*** indicates first person plural (exclusive). The second person singular has four terms. They are '***awak***', '***kamu***', '***anda***' and '***engkau***'. There are no separate terms to denote the second person plural. Instead the word '***semua***' is added after '***awak***' and '***kamu***'. Hence the terms '***awak semua***' and '***kamu semua***' are used.

As for the third person in Malay, the singular forms are '***dia***', '***ia***', '***beliau***'; '***baginda***' and '***tuanku***'. The word '***mereka***' is used for third person plural.

In Tamil, the first person singular is '*nāṉ*'. The first person plural inclusive is '*nām*'; exclusive is '*nāṅkaḷ*'. The second person singular is '*nī*' and the second person plural is '*nīṅkaḷ*'. The second person plural is also used as a singular honorific form as in,

'nī eppōtu vantāy?'
(When did you come?)

'nīṅkaḷ eppōtu vantīrkaḷ?'
(When did you (honorific) come?)

The third person pronouns are of two types, that is the distant and the proximate. The distant denotes emotions from the speaker and the proximate denotes number to the speaker. The terms '*avaṉ*', and '*avaḷ*' are third person singular masculine and feminine distant pronouns, whereas '*ivaṉ*' and '*ivaḷ*' are third person singular masculine and feminine proximate pronouns. '*avarkaḷ*' and '*ivarkaḷ*' are third person distant and proximate plural pronouns. The term '*avar*' and '*ivar*' are referred to as epicene distant and proximate pronouns. They stand for both male and female singular pronouns.

e.g. *avar vaṇṭār* [He/she (distant) came]

ivar vaṇṭār [He/she (proximate) came]

The third person neuter singular distant in Malay is '*itu*' and proximate is '*ini*'. For third person plural distant the term '*itu semua*' is used and for the third person plural proximate '*ini semua*' is used.

In Tamil '*atu*' and '*itu*' represent the third person singular distant and proximate pronouns respectively. The plural distant and proximate forms are '*avai*' and '*ivai*'.

A summary of the Malay personal pronouns are shown in Table 1; Table II contains the Tamil personal pronouns.

A study of both the personal pronouns will bring forth an outstanding difference between the two systems. There are certain pronouns that are specially used to address the royalties in Malay. For example in Malay when a commoner addresses a king, queen or prince he has to use the pronouns like '*baginda*' or '*tuanku*' instead of '*dia*' (he). When a layman addresses himself to the king, he must use the term '*patik*' or '*hamba*' and not '*saya*' (I).

For example

'Patik meminta beribu - ribu ampun dari baginda'

(I beg for a thousand pardons from your Highness.)

Likewise when a king addressed his subjects, he addresses himself as '*beta*' instead of '*saya*' (I).

For example

'Dengan ini beta mengistiharkan istiadat ini dibuka.'

(I hereby declare this ceremony to be opened)

TABLE - I

Person	Pronoun	Meaning
First Person		
1st Per. Sing.	*saya, aku (beta, patik, hamba)*	(I)
1st Per. Sing. Incl.	*kita*	(we (incl.))
1st Per. Sing. Excl.	*kami*	(we (excl.))
Second Person		
2nd Per. Sing.	*awak, kamu, anda,*	(you)
2nd per. Pl.	*anda semua awak semua kamu semua*	(you pl.)
Third Person		
3rd Per. Human		
3rd Per.Sg.Mas.	*dia, ia, nya, beliau (baginda, tuanku)*	(he)
3rd Per.Sg.Fem.	*dia, ia, nya, beliau (baginda, tuanku)*	(she)
3rd Per. Pl.	*mereka*	(they)
3rd Per. Neuter		
3rd Per. Sing. Dist.	*itu*	(it)
3rd Per. Sing.Prox.	*ini*	(it)
3rd Per. Pl. Dist.	*itu semua*	(they)
3rd Per. Pl. Prox.	*ini semua*	(they)

TABLE - II

Person	Pronouns	Meaning
1st Person		
1st Per.Sing.	*nāṉ*	(I)
1st Per. Pl.		
Incl.	*nām*	(we) (incl.)
Excl.	*nāṅka/*	(we) (excl.)
2nd Person		
2nd Per. Sing.	*nī*	(you)
2nd Hon. Per. Pl.	*nīṅka/*	(you)
2nd Per. Pl.	*nīṉka/*	(you)
3rd Person Human		
3rd Per. Sing. Mas. Dist.	*avaṉ*	(he)
3rd Per. Sing. Fem. Dist.	*ava/*	(she)
3rd Per. Sing. Epi. Dist.	*avar*	(he/she)
3rd Per. Pl. Dist.	*avarka/*	(they)
3rd Per. Sing. Mas. Prox.	*ivaṉ*	(he)
3rd Per. Sing. Fem. Prox.	*iva/*	(she)
3rd Per. Sing. Epi. Prox.	*ivar*	(he/she)
3rd Per. Pl. Prox.	*ivarka/*	(they)
3rd Person Neuter		
3rd Per. Sing. Dist.	*atu*	(it)
3rd Per. Sing. Prox.	*itu*	(it)
3rd Per. Pl. Dist.	*avai*	(they)
3rd per. Pl. Prox.	*ivai*	(they)

In Tamil, since the royalties have been long abolished, if one wishes to address a respectable person he just uses the second person honorific pronoun '*nīṅka/*' (you) and he addresses himself simply as '*nāṉ*' (I).

Another notable difference is the presence of separate pronouns for the third person singular masculine and feminine gender. For example the third person singular masculine gender is '*avaṉ*' (he) and the third person singular feminine gender is '*ava/*' (she).

Such gender distinction is not to be found in Malay. The third person singular in Malay is '***dia***', '***ia***', '***beiau***' or '***baginda***' and none show any gender difference.

The concept of distant and proximate is found in the third person neuter singular and plural in both Tamil and Malay. However the third person human singular and plural of Tamil also has the distant and proximate pronouns. For example the vowel 'i' and 'a' before the pronouns indicate proximate and distant respectively.

'*iva*ṉ'	(he)	
'*iva*ḷ'	(she)	
'*ivar*'	(he/she)	proximate
'*ivarka*ḷ'	(they)	
'*ava*ṉ'	(he)	
'*ava*ḷ'	(she)	distant
'*avar*'	(he/she)	
'*avarka*ḷ'	(they)	

This feature is not found in the third person human singular and plural pronouns of Malay. Only the third person neuter gender in Malay conveys the idea of distant and proximate. For example the term '***itu semua***' means 'things that are far away; '***ini semua***' means 'things that are close by'.

The Tamil, second person singular honorific form '***nīṅka***ḷ' (you) has no equivalent form in Malay.

Apart from the above differences, we can notice a very close similarity between Malay and Tamil. Both languages have inclusive and exclusive usages in the first person plural. In Malay for the first person plural the pronoun '***kita***' is used to mean inclusive and '***kami***' is used to mean exclusive. The difference is very much stressed in Malay. They are mutually exclusive to one another. In other words one cannot be used in place of another.

A similar situation exists in Tamil where '***nām***' is used to indicate first person plural inclusive and '***nāṅka***ḷ' is used to indicate 1st person plural exclusive.

e.g. '***nām pō*ṉ*ōm***' [We (inclusive) went].
'***nāṅka***ḷ ***pō*ṉ*ōm***' [We (exclusive) went].

The third person human pronoun has one similarity in Malay and Tamil. The epicene pronoun '***avar***' and '***ivar***' denotes both male and female gender

as that of Malay third person pronoun '*dia*' (he/she). As mentioned earlier both Malay and Tamil also convey the idea of distant and proximate in the third person singular and plural neuter pronouns.

Before discussing the possessive pronouns of Malay and Tamil, the basic difference between the two languages needs to be mentioned. Malay is referred to as isolating or analytic. Isolating or analytic is "a language in which auxiliary words such as prepositions are the chief or sole means of expressing grammatical relationships of words to the total or partial elimination of inflection. *i.e.* the use of suffixes. Tamil belongs to the inflectional group. An inflectional language is "a type of language in which grammatical relationships are shown by inflection rather than word order. Affixes are merged closely with a base or root word so that they become part of the word.

Because of the above mentioned characteristics the idea of possession in Malay is not indicated by any suffixes. There are no possessive pronouns in Malay. Instead possession is indicated by changing the word order *i.e.* the personal pronouns, once placed after the nouns, will convey the possessive meaning as in.

e.g.	**1st person**		
	Sing.	*kereta saya*	(my car)
	Pl. Excl.	*rumah kami*	(our house)
	Pl. Incl.	*sekolah kita*	(our school)
	2nd person		
	Sing.	*buku awak*	(your book)
	Pl.	*kebun awak semua*	(your (pl) farm)
	3rd Person (Human)		
	Sing.	*anak lelaki dia*	(his/her son)
	Pl.	*anak-anak mereka*	(their children)
	3rd person (Neuter)		
	Sing.	*makanannya*	(its food)
	Pl.	*makanan mereka*	(their food)

In the above examples it can be noticed that possession is indicated by placing the personal pronoun after the noun which is being modified.

In Tamil it is wrong to say,

'nāṉ kār', 'nāṅka/ vīṭu' and *'nām pa/li'*

instead it should be written as:

'eṉ kār' (my car)

'eṅka/ vīṭu' (our house - excl.)

'eṅka/ pa/li' (our school - incl.)

The Tamil possessive pronouns are placed before the nouns that are being modifed and not after as in Malay. The possessive pronouns *'eṉ'*, *'eṅka/'* and *'nam'* are actually the oblique forms of the personal pronouns as shown in Table III. In Tamil suffixes are added not directly to the personal pronouns but to the oblique forms of the pronouns. Sometimes the possessive suffix - *uḍaiya* is added optionally to the oblique forms to indicate possession.

e.g. *'eṉṉuḍaiya kār'* (my car)

'eṅkaluḍaiya vīṭu' (our house - excl.)

'nammuḍaiya pa//i' (our school - incl.)

A closer look at the Tamil possessive pronouns will also show that the oblique forms of the first, second and third person neuter singular and plural are different from the personal pronouns whereas the forms of the third person human singular and plural are identical to the oblique forms of the third person human singular and plural.

TABLE - III

Noun phrases that can readily be recovered from the context are commonly deleted in Tamil utterances. That the same is true of Japanese will already be clear from a number of the examples given above. It has sometimes been suggested that subject noun phrases in Tamil are readily dropped because verbs are marked for person, number and (in third person singular) gender. That this cannot be regarded as a convincing explanation is evident from a number of facts: deletion of NP subject is no less common in Tamil when there is no agreement of the sort in question-in negative and model forms for instance; it is significant, too, that Malayalam, which has no person/number gender suffixes on verbs, dispenses just as readily with subject NPs. There are many languages having this characteristic, and Japanese, as the verb forms cited above show, is one. This morphological difference notwithstanding, Tamil and Japanese delete NPs in a similar way, and what has been called the minimum independent syntagm" (Saint-Jacques, 1971:1 and Passim) has a very similar character in each.

Attention has been drawn by Susumu Ohno (personal communication) to the formal similarity of a number of particles in older varieties of Tamil and Japanese. The actual distribution of particles in the modern language is of interest from a typological point of view. We can note in passing that yes/no interrogative sentences are distinguished from coresponding declarative sentences in Tamil and Japanese by the use of a sentence-final interrogative particle ("in passing" because it is not clear that this is particu-

larly significant, given the limited number of processes by which the distinction between these two types of sentence is made in the world's languages):

(17a) *Vēlu* *nāḷekki* *varuvāru*
Velu tomorrow come-fut-3sh
Velu will come tomorrow.

(18a) *Vēlu* *nāḷekki* *varuvārā*
Velu tomorrow come-fut-3sh-interrog
Will Velu come tomorrow?

(17b) *erebeetaa wa* *gokai e* *ikimasu*
lift-top fifth floor-to go-pres
The lift goes to the fifth floor.

(18b) *Erebeetaa wa* *gokai e* *ikimasu ka*
lift-top fifth floor-to go-pres interrog
Does the lift go to the fifth floor?

It is be noted to that the use of ***ka*** in Japanese differs from the use of ***-aa*** in Tamil, in that ***ka*** is used in all types of question, including question-word (English WH-) questions:

(19a) *eppa* *vantīṅka*
when come-past-2p
When did you come?

(19b) *itsu* *kaer dit ita* *ka*
when return-past *interrog*
When did you get back?

More interesting than the use of these interrogative particles is the use and distribution of Tamil ***-um*** and Japanese ***mo***. Firstly, they can be added to a noun phrase and other types of expression to give the sense 'also' (though note that whereas ***-um*** can be added to any case suffix in Tamil, ***mo*** is not added to but substituted for topic, subject and object markers-***wa,ga*** and ***o*** respectively in Japanese):

(20a) *nāṉum* *vārreeṉ*
I-also come-pres-1s
I'm coming too.

(20b) *watashi mo* *kinoo* *ikimashita*
I-also yesterday go-past
I too went yesterday.

(21a) *Rāmaneyum* *pāttēṉ*
Raman-acce-also see-past-1s
I saw Raman also.

(21b) *anohito wa* *biiru mo* *nomimasu*
he-top beer-also drink-pres
He also drinks beer.

(22a) *Amerikkāvukkum* *pōnēṉ*
Americal-dat-also go-past-1s
I went to America also.

(22b) *Kanada e mo* *ikimashita*
Canada-to-also go-past
(I) went to Canada also.

Secondly, these particles can both be added to two successive nouns for "and-coordination":

(23a) *nāṉum* *tampiyum* *Maturekki* *pōṉōm*
I-um younger brother-um Madurai-dat go-past-1p
My brother and I went to Madurai.

(23b) *watashi mo otooto mo* *oosaka e* *ikimashita*
I-mo younger brother-mo Osaka-to go-past
My brother and I went to Osaka.

Thirdly, they can be attached to interrogative words or phrases to express universality, *e.g.* to Tamil ***eppa*** and Japanese ***itsu*** 'when' to give ***eppavum*** and ***itsumo*** 'always':

(24a) *avaṉ* *eppavum* *lēttaa* *varuvāṉ*
he always late come-fut-3sm
He always comes late.

(24b) *jon wa* *itsumo* *nihongo o* *hanashimasu*
John-top always Japanese-obj speak-pres
John always speaks Japanese.

Fourthly, these "universal" forms can be used with a negative to express universal negation (see Asher 1989:79):

(25a) *yārum* *varalē*
who-um come-neg
No-one came.

(25b)	*ashita wa*	*daremo*	*kimasen*
	tomorrow-top,	who-mo	come-pres
	Tomorrow, no-one's coming.		

The set of typological analogies in Tamil and Japanese presented above is by no means exhaustive. It is sufficiently large, however, for it to be seen to be not merely the result of chance. There is certainly a suggestion in Caldwell (the first edition of whose ***Comparative Grammar*** appeared, interestingly enough, just one year before the first work to deal seriously with the possible genetic relationship of Japanese and Ural-Altaic--Anton Boller's ***Nachweiss, dass das Japanische zum ural-altaischen Stamme gehort;*** see Miller 1971:1) that similarities of syntax imply genetic relationship (Caldwell, 1956 ed.:6465). In discussing the relative participle in Dravidian, Caldwell notes the analogy with Japanese and states. "The existence of a family likeness is so remarkable a particular tends to show the existence of some family relationship between the Scythian group and the Dravidian" (1956 reprint of the second edition:523; the reference to Japanese, here and elsewhere, is not made in the first edition of this work. Caution, however, is necessary before such a conclusion is reached. As far as relativisation is concerned, the languages of the world make use of only a limited number of strategies (see Keenan and Comrie 1977) and this particular likeness that Caldwell noted may not on its own be especially remarkable. More importantly, one must take account of the fact that in the course of time languages change in their morphological and syntactic typology. French, for instance, is typologically different in a number of respects from Latin, from which it is unquestionably derived. Before supposing, therefore, that typological similarity necessarily implies kinship, we would need to be sure (a) that typological change is always in the same direction, and (b) that the rate of change is constant. There is at present simply not enough evidence available to make it possible to assert that these conditions are satisfied. There is, on the other hand, evidence to support the view that there are certain universal tendencies at work in human language (see, for instance, Comrie 1981) in terms of which the presence of one typological feature in a language may mean that there is a high degree of probability that certain other typological features will be found also. For the present, at least, we must make sure that the only way to state that Tamil and Japanese - or are genetically related is through the correspondences. Meantime the typological analogies noted in this paper may seem more relevant to a theory of language universals than to what Caldwell called "the problem of the ulterior relationship of the Dravidian family of languages" (1956:61).

REFERENCES

Asher, R.E., 1989. ***Tamil***, 3rd impression (Croom Helm Descriptive Grammars Series), Routledge, London

Caldwell, R. 1856, ***A Comparative Grammar of the Dravidian or South-Indian Family of Languages***, Harrison, London

_____,R. 1875, ***ibid***, 2nd edition, revised and enlarged, Trubner & Co. London

_____, R. 1956, ***Ibid***, 3rd edition, revised and edited by J.L. Wyatt and T. Ramakrishna Pillai. University of Madras, Madras

Clarke, H.D.B. & Hamamura, Motoko 1981, ***Colloquial Japanese***, Routledge & Kegan Paul, London

Comrie, B. 1981. ***Language Universals and Linguistic Typology: Syntax and Morphology***, Basil Blackwell, Oxford

Ellis, F.W. 1816, "Note to the Introduction", in A.D. Campbell, ***A Grammar of the Teloogoo Language, Commonly called the Gentoo***, The College Press, Madras

Hinds, J. 1986, ***Japanese*** (Croom Helm Descriptive Grammars Series). Croom Helm, London

Keenan, F.L. & Comrie, B. 1977, "Noun phrase Accessibility and Universal Grammar", ***Linguistic Inquiry*** 8, pp.63-99

Miller, R.A. 1971, ***Japanese and The Other Altaic Languages***. Chicago and London, The University of Chicago Press

Ohno, Susumo 1980, ***Sound Correspondences Between Tamil and Japanese,*** (Gakushuin Series of Treatises 8). Gakushuin, Tokyo

Saint-Jacques,B. 1971, ***Structural Analysis of Modern Japanese***, University of British Columbia Publications Centre, Vancouver

Ullmann, S. 1963, "Semantic Universals". In J.H. Greenberg (ed.), ***Universals of Language,*** Mass., and London, The MIT Press, pp.217-62, Cambridge

Vennemann,T. (1974), "Topics, Subjects, and Word order: from SXV via SVX to TVX", In J.M. Anderston and C. Jones (eds.), ***Historical Linguistics,*** Amsterdam, North-Holland (North-Holland Linguistics Series, 12) pp.339-76

நி

சமுதாயமும் பண்பாடும்

SOCIETY AND CULTURE

36

தமிழ்நாட்டில் பதங்களின் தோற்றமும் வளர்ச்சியும் (20ஆம் நூற்றாண்டுவரை)

ராஜ்ஸ்ரீ கௌதம்

1.0 வரைவிலக்கணம்

பதம் என்னும் வார்த்தையைப் பரத முனியின்[1,2] நாட்டிய சாஸ்திரத்திலேயே காணலாம். அதில் அபிநயம் கொண்ட நாடகங்களில் வரும் பாடல்களின் சாஹித்தியம் 'பதா' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அது பாவத்தைத் துல்லியமாக வெளிப்படுத்தும் கருவியாக இருத்தல் வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையில் இருந்துவரும் பதங்களுக்கும் இது பொருந்துமாயினும் இதை ஒரு நிறைவுதரும் விளக்கமாக நாம் கருத முடியாது.

1.2 பதம் என்பதன் நேரடிப் பொருள் சொல் என்பதாகும். சாரங்க தேவர் தமது சங்கீத ரத்னாகரத்தில் 'சொற்களால் வெளிப்படுத்தப்படுகிற ஒன்றுதான் பதம்' என்ற பொருளை அளிக்கிறார். பொதுவாக, இசையில் பதம் எனில், தாது (இசை – மெட்டு), மாது (அர்த்தம் அல்லது சாஹித்யம்) ஆகிய இரண்டையும் முக்கியமாகக் கொண்ட பாடல்களையே குறிக்கும். பதம் என்பது இசையின் பல்வேறு அழகுகளை வெளிப்படுத்தும் உருப்படி வகைகளுள் ஒன்று.

1.3 "பரதநாட்டியம் ஒரு கோவிலைப்போன்றது" எனக் கூறிய பாலசரஸ்வதி[4] "அலாரிப்பு என்னும் கோபுரவாயில் வழியாக நுழைகிறோம்; ஜதிஸ்வரம் என்னும் அர்த்த மண்டபத்தையும், சப்தம் என்னும் மண்டபத்தையும் கடந்து, உள்பிராகாரமான வர்ணத்தில் வந்து நிற்கிறோம்; இறைவனைப் பூஜித்து ஆராதனை செய்கிறோம்; பின்னர், இறைவனைக் குறித்துத் தியானத்தில் ஆழ்கிறோம்; இச் சமயத்தில் எழும் பக்தி, அமைதி, ஆனந்தம் ஆகிய உணர்வுகளே பதங்களாகும்" எனவும் கூறியுள்ளார்.

1.4 கி.பி.7ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டு வரை

2.1 எல்லாப் பதங்களும் இரட்டிப்பு அர்த்தத்தில் கௌரவ சிருங்காரம் கொண்டவை. அதாவது, சிருங்காரப் போர்வையினுள் அடங்கும் பக்தியைக் கொண்டவை. இதைச் சமஸ்கிருதத்தில் 'பாஹர் சிருங்காரா' (வெளிச் சிருங்காரம்), 'அந்தர் பக்தி' (உள்பக்தி) என்று குறிப்பிடுகின்றனர்.[3,5] நாயகனான பரமாத்மாவை அடைய நாயிகை ஜீவாத்மா துடிக்கிறாள். அந் நாயிகையை முக்தியடையும் பாதையில் கொண்டுசெல்லும் குருவாகத் தோழி திகழ்கிறாள். இதுவே மதுர பக்தியின் கருத்தாகும்.

கி.பி.7ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே இயற்றப்பட்டது என்று கூறப்படுகின்ற மாணிக்கவாசகரின்[6] திருவாசகத்தில் முதன்முதலில் நாம் மதுர பக்தியைக் காணலாம்.

"அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமுங்
குன்றே அனையாய் என்னைஆட் கொண்ட போதே
கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்தோள் முக்கண்
எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே?"

என்ற திருவாசகத்திலும்,[7] அவரின் திருவெம்பாவையிலும் மதுர பக்தியைக் காணலாம்.

கி.பி.7ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட தேவாரத்திலும், கி.பி.8ஆம், 9ஆம் நூற்றாண்டுகளில் இயற்றப்பட்ட நாலாயிரத் திவ்வியப் பிரபுந்தம் மற்றும் இதர நூல்களிலும் மதுர பக்தி ததும்புகிறது.

"சிறையாரும் மடக்கிளியே; இங்கேவா, தேனொடுபால்
முறையாலே உணத்தருவன்; மொய்பவளத் தொடுதரளம்

துறையாரும் கடல்தோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயோ"

என்ற தேவாரப் பாடலிலும்[8]

"உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலை யுமெல்லாம்
கண்ணன்எம் பெருமான் என்றென்றே கண்கள் நீர்மல்கி
மண்ணி னும்அவன் சீர்வளம் மிக்கவன் ஊர்வினவி
திண்ணம் என்னிள மான்புகுமூர் திருக்கோளூரே"

என்ற திருமங்கையாழ்வாரின் பாடலிலும் காண்கிறோம்.

2.2 தமிழ் இலக்கியத்தின் வரலாற்றில் கி.பி. 600–லிருந்து 800 வரை பொற்காலமாகத் திகழ்ந்தது. 6ஆம் நூற்றாண்டில் பக்தி எழுச்சி பரவலாக இருந்தது. ஒரு நூற்றாண்டு காலத்திற்குள் அந்த எழுச்சி பக்தியிலும் இலக்கியத்திலும் உச்சக் கட்டத்தை அடைந்தது. இக்காலத்தில்தான் ஆண்டாள் பிறந்தார்.[9] ஆழ்வார்களிலேயே இவரின் பாடல்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. இவர் பெண்ணாக இருந்ததால் நாயிகா நாயக பாவத்தை நேரடியாகவே உணர்ந்து மதுர பக்தியில் இயற்றினார்.

"மத்தளம் கொட்ட வரிச்சங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்"

என்ற பாடல் ஒரு சான்று. அவர் மஹாவிஷ்ணுவை மணம் செய்துகொள்ள விரும்புவது, ஜீவாத்மா பரமாத்மாவுக்கு ஏங்குவதைத் துல்லியமாக வெளிப்படுத்துகிறது.

3.0 கி.பி 9ஆம் நூற்றாண்டிலிருந்து 17ஆம் நூற்றாண்டு வரை

3.1. 9ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு இவ்வகைப் பாடல்களை இயற்றுவது சிறிதுசிறிதாகக் குறையத் தொடங்கியது.

பாரதத்தில் மற்ற எல்லாப் பகுதிகளிலும் சமஸ்கிருதம் பொது மொழியாக இருந்ததால் சமஸ்கிருதத்தில் மிக அழகான சிருங்கார ரஸம் பொருந்திய மதுர பக்திப் பாடல்களை நமக்களித்தவர் 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜெயதேவர்.[10,11] பிற்கால வாகேயக்காரர்களுக்கு

ஒரு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்தது அவரது கீதகோவிந்தம். ஜெயதேவரின் பாடல்களே இசை விளக்கமுடைய மதுரபக்திப் பாடல்களில் முதல் எனத் தெரிகிறது. மதுர பக்திப் பாடல்கள் தமிழில் இதற்கு முன்னரே இருந்த போதிலும் அவை யாவற்றிற்கும் பண்கள்தாம் குறிக்கப் பட்டுள்ளன; தாளங்கள் இல்லை. ஆனால் ஜெயதேவரின் பாடல்கள் முழுமையான வையாகவே திகழ்ந்தன.

3.2 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தாளபாக்க அண்ண மாச்சார்யாவின்[10,11] 'சிருங்கார சங்கீர்த்தனமுலு' என்ற அழகிய பாடல்களின் தொகுப்பிலும் மதுரபக்தியினை முழுமையாகக் காணலாம்.

பின் 17ஆம் நூற்றாண்டில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள வரவூரிலிருந்த நாராயண தீர்த்தர்[10,12] எழுதிய 'கிருஷ்ண லீலா தரங்கிணி'யில் மீண்டும் மதுரபக்தி பிரதிபலித்தது. ஆகையால் சிலர் இவரை ஜெயதேவரின் மறுபிறவி என்பர்.

இவை யாவும், 'பதங்களின் தந்தை' எனப்படும் ஷேத்திரக்ஞரின் முன்னோடிகளாக அமைந்தன. இவர் கைகளில்தாம் இந்நாளைய பதங்கள் உருவெடுத்தன. பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்கங்களையுடையதாக அவர் ஆக்கினார். பதம் அப்பொழுதுதான் முழு வடிவம் பெற்றது.

இந்தப் பதமானது[5,13] விளம்ப காலத்தில் அமைக்கப்பட்டு ராகத்தின் முக்கியமான அம்சங்களைமட்டுமே பிரதிபலிக்கிறது. அனுஸ்வரங்கள், கமகங்கள், சங்கதிகள் முதலியவை அவரவர் வழிக்குத் தக்கபடி கூடியோ குறைந்தோ மாற்றியமைக்கப்படுகின்றன. ராகமும் அர்த்தபாவமும் ஒன்றாக இழைந்தோடும் வகையில் அமையும். அதன் அடிப்படைக் கருத்து மதுரபக்தியா யிருந்தாலும் ஒருசில பதங்கள் வெறும் சிருங்கார ரசத்தைமட்டும் கொண்டுள்ளன.

இவ்வாறு உருவாக்கிய ஷேத்திரக்ஞரின் பிறப்பிடம் குறித்துக் கருத்துவேறுபாடுகள் உள்ளன. அவர் ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள முவ்வா என்னும் ஊரில் பிறந்ததாகச் சிலர் கூறுகின்றனர்; தமிழ்நாட்டின் தஞ்சை மாவட்டத்திலுள்ள முவ்வலூரில் பிறந்ததாகவும் கூறப்படுகிறது. அவர் பிறப்பிடம் ஏதாயிருப்பினும் அவர் தமிழ்நாட்டில் உள்ளபோதுதான் அதிகபட்சமான பதங்களை இயற்றினார் என்று தெரியவருகிறது. அவருடைய "வெடுகதோ நடசி கொன்னா விதராயதே" என்ற

பதத்திலிருந்து அவர் மதுரைத் திருமலை நாயக்கர் அரசவையில் 2000 பதங்களையும், தஞ்சை விஜயராகவ நாயக்கர் அரசவையில் 1000 பதங்களையும் இயற்றியதாக அறிகிறோம். அவர் மொத்தம் இயற்றிய 4500 பதங்களில் நாம் இன்று அறிபவை ஏறக்குறைய 350 மட்டுமே. அவருடைய பதங்களில் செங்கற்பட்டு, மதுரை, திருவள்ளூர், சிதம்பரம், காஞ்சிபுரம், ஸ்ரீரங்கம், தஞ்சை ஆகிய ஊர்களில் குடிகொண்டுள்ள தெய்வங்களின் பெயர்களைக் காணலாம். ஆகையால் ஷேத்திரக்ஞர் தெலுங்கில் பதங்களை இயற்றினாலும் தமிழ்நாட்டிலும் தமிழ்மக்களாலும் பெரிதும் ஊக்குவிக்கப்பட்டார். பதங்களின் வரலாற்றிலேயே ஒரு தனிச்சிறப்பு வகிப்பது ஷேத்திரக்ஞரின் தஞ்சை வருகையாகும்.[14,15] அக் கால கட்டத்தில் இசை மற்றும் நாடகம் செழித்து விளங்கியது. அப்பொழுது ஆண்ட மன்னர்களும் கலைப்புரவலர்களாய் விளங்கினர். ஆகையால் அங்குக் கலைஞர்கள் வந்து குவிந்தனர். இக் கலைச்சுவை கொண்ட சூழ்நிலையில் அங்கு நுழைந்த ஷேத்திரக்ஞர் அதில் சிறந்தவற்றை உள்ளீர்த்துக்கொண்டு மேலும் சிறந்த, மிக நேர்த்தியான பதங்களை நமக்களித்தார். இசையழகும் உணர்ச்சி பாவமும் மிக்க அப் பதங்கள், தஞ்சை அவையின் இசை மற்றும் நாட்டியக் கலைஞர்களைப் பேரளவு ஈர்த்தது. மேலும் அவை நாட்டிய அபிநயத்திற்கு மிகவும் பொருத்தமாகவும் இருந்தன. இப் பதங்களின் வசியத்திற்கு ஆளான அரசவைப் புலவர்கள் அவர் பாணியிலே பாடல்கள் (அதாவது பதங்கள்) இயற்றத் தொடங்கினர். ஆகையால் இவர் பதங்களின் தந்தை எனப்படுகிறார்.

தஞ்சையில்தான் இவர் பதங்களுக்கு அரசவையில் முதன்முதலில் அபிநயம் பிடிக்கப்பட்டது. மதுரையில் இவர் நிறையப் பாடல்கள் எழுதியிருந்தாலும் தஞ்சையில்தான் அவர் மிகவும் பிரபலமடைந்தார். மதுரையில் அரசியல் நிலைமை அப்பொழுது அவ்வளவு நன்றாக இல்லை என்று தெரியவருகிறது. ஷேத்திரக்ஞர், ராஜாங்கம் கொண்ட 5 பதங்களை இயற்றியதும் தஞ்சை விஜயராகவ நாயக்கரின் வேண்டுகோட்படியே. இவையே ஷேத்திரக்ஞ பஞ்ச ரத்னமாகும். அதுமட்டுமல்லாது, அவர் பதங்கள் சிலவற்றிலும் 'விஜயராக' என்ற முத்திரையையும் உபயோகித்திருக்கிறார்.

இக் கட்டத்தில் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியது என்னவெனில், கி.பி.1660 ஆம் ஆண்டு (ஷேத்திரக்ஞர் காலத்தில்) விஜயராகவ நாயக்கரின் தூண்டுதலால் 'சதுர்தண்டி ப்ரகாஸிகா' என்ற

அடிப்படை இசைநூலை வேங்கடமகி[16] தொகுத்தார். இதில் அவர் பல பிரபந்தங்களை இயற்றியுள்ளார். இவை பதங்களின் சாயலில் இருந்தன.

ஏறக்குறைய 18ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் சீர்காழியில் வாழ்ந்து வந்தவர் முத்துத்தாண்டவர்[17] என்பவர். இவர் ஷேத்திரக்ஞரின் காலகட்டத்தில்தான் வாழ்ந்திருக்கக்கூடும். இவர் எந்த அரசவையையும் சார்ந்ததாகத் தெரியவில்லை. இவர் இறைவனின் அருளான் மிக அழகிய பாடல்களை இயற்றினார். அவற்றுள் சில சிருங்கார ரஸத்தில் பல்லவி , அனுபல்லவி, சரணம் என்ற அங்கங்களைக் கொண்டு விளங்கின. ஆனால் ஷேத்திரக்ஞரைப் பின்பற்றியோ அவர் பாணியிலோ எழுதாமல் இறைவன்பால் கொண்டுள்ள அன்பில் தம்முள்ளே ஊற்றெடுத்த பாடல்களை எழுதினார். ஆகையால் தமிழில் தனித்தன்மையுடன் பதங்களை எவர் தூண்டுதலுமின்றி எழுதிய முதல் பதக்காரராகத் திகழ்ந்தார் எனலாம்.

இவருடைய பாடல்கள் பக்திச் சுவையும், சொல்நயமும், பொருள் நயமும், இசைநயமும் மிளிர்ந்து, நாவிற்கும் உள்ளத்திற்கும் இன்பந் தருவனவாக அமைந்திருந்தன. இவர் பாடிய பாடல்களில் 60 கீர்த்தனைகளும், 25 பதங்களும் அச்சாகியுள்ளன. இவை தவிர இன்னும் பல நூற்றுக்கணக்கான பாடல்கள் இவரால் இயற்றப்பட்டன எனத் தெரிகிறது. அவை பேணப்படாமையால் மறைந்தன போலும்.

தஞ்சை விஜயராகவ நாயக்கரின் ஆட்சிக் காலம் பதங்களுடைய பொற்காலத்தின் உதயம் என்று கூறலாம். வாகேயக்காரர்கள், கலைஞர்கள், புலவர்கள், மற்றும் வணிகர்கள் அனைவரும் செழித்து ஒங்கினர். மேற்கூறியபடி விஜயராகவ நாயக்கரும் தாமே பதங்களின் வளர்ச்சிக்கு உதவியுள்ளார். இவர் காலத்தில் பெத்த தாஸரி என்ற புலவரும் இரண்டு பதங்கள் இயற்றியுள்ளார்.

4.0 18ஆம் நூற்றாண்டு முதல் 20 நூற்றாண்டு வரை

4.1 ஷாஜி II (1648–1712) மற்றும் சரபோஜி I (கி.பி.1712–28) ஆட்சிக் காலத்தில் ஏராளமான பதங்கள் இயற்றப்பட்டன. ஷாஜி II தாமே பல பதங்களை இயற்றினார். அவரது அரசவையில் முதன் முதலில் தமிழ்ப் பதங்கள் பாடப்பட்டன. அக்காலத்தில் பெருமை வாய்ந்த பதக்காரர்கள் கிரிராஜகவி, சோமகவி, வாசுதேவகி, இராமபாரதி, பட்டாபிராமய்யர், சீதாராமய்யா, வசந்தகவி ஆகியோர் இருந்தனர்.

ஷாஜி II-ன் இராஜாங்கத்தை ஒட்டி ஒரு நாட்டியசாலை விளங்கி வந்தது. அதனால் இதிலுள்ள நாட்டியக் கலைஞர்களுக்குப் பயன்படும் வகையில் ஷேத்திரக்ஞரின் பாணியில் தமிழ்ப்பதங்கள் இயற்றப் பட்டிருக்கலாம் என்று பேராசிரியர் சீதா கருத்துத் தெரிவித்துள்ளார்.

பதங்களின் சிறந்த மொழிபெயர்ப்பாளர் நாட்டியக்காரரே என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. பதங்களின் நுட்பமான உணர்வுகளை வெளிப்படுத்த அதிக வாய்ப்பளித்ததால் இவை நாட்டியக்காரர்களால் பரவலாக்கப்பட்டன. இங்ஙனம் இவை புலவலர்களை மகிழ்விக்கவும் உபயோகப்படுத்தப்பட்டன. இக்காலத்திலிருந்துதான் அதிகபட்சமாகப் புரவலரைப் பதத்தின் நாயகனாக அமைத்துப் பாடும் முறை பரவலானது. உதாரணமாக இராமபாரதி ஒரு தமிழ்ப்புலவர். இவர் கிரிராஜ கவியின் பாணியில் பதங்களை இயற்றியுள்ளார்.

"மோகமிக மானேனே – மோடி என்மேல் செய்வானேன்
சாஹரா பூபால – ஸாரஸ சங்கீத லோலா"

என்று இவர் பாடியுள்ளார்.

4.2 இதன் பிறகு பிரதாப சிம்மர் காலத்தில் (1728–39) கவி மாத்ருபூதய்யா திஸ்ரகிரி பதங்களை (அதாவது) திருச்சிராப்பள்ளியில் வீற்றிருக்கின்ற மாத்ருபூதேஸ்வரரைப் போற்றிய பதங்கள்) இயற்றினார். பிரதாப சிம்மரின் புதல்வர் அமரசிம்மர் (கி.பி.1739–63). 18ஆம் நூற்றாண்டில் தஞ்சை மன்னர்களின் அரசவையில் தமிழ்ப் பதங்களை இயற்றிய பலருள் கனம் கிருஷ்ணய்யர் குறிப்பிடத்தக்கவர்.

கனம் கிருஷ்ணய்யர்

இவரின் தமிழ்ப் பதங்கள் கர்நாடக சங்கீதத்தில் மிக முக்கியமானவை. அவை கிளர்ச்சியூட்டும் பாவமும், உயர்ந்த கருத்துகளும், மகிழ்ச்சியூட்டும் இசையும் அமையப்பெற்றவை. இவை நாட்டியத்துக்கும் மிகப் பொருத்தமானவை. கருத்தடக்கத்தில் இவரை ஷேத்திரக்ஞரோடு ஒப்பிடலாம்.

அக்காலத்தில் தமிழ்நாட்டின் மற்றப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ்ப் பதக்காரர்கள் அருணாசலகவி, மதுரகவி, இராமகவி மற்றும் பாபவிநாச முதலியார்.

அருணாசலகவி

இவர் எந்த அரசவையையும் சார்ந்திருக்கவில்லை. ஆனால் இவர் எழுதிய 'இராம நாடகம்' மிகவும் பிரபலமானது. இவரைப் பாராட்டிய தனவான்களுள் ஒருவரான மணலி முதலியார் இவருக்குக் கனகாபிஷேகம் செய்தார் எனக் கூறப்படுகிறது.

பாபவிநாச முதலியார்[39]

இவர் 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். மன்னர் ஏகோஜி அல்லது பாவா சாஹிப் (கி.பி.1735–37) மற்றும் துளஜா II-ன் அரசவையில் புலவராக வீற்றிருந்தார் எனக் கருதப்படுகிறது. இவர் இயற்றிய நிந்தாஸ்துதிகள் பிரபலமாகிப் பின் கோபாலகிருஷ்ண பாரதி, கவிகுஞ்சரர் மற்றும் மாரிமுத்தாப் பிள்ளையால் பரவலாக்கப்பட்டன.

4.3. மன்னர் சரபோஜியும் (II) (1798–1833) அவர் புதல்வர் சிவாஜியும் ஆண்ட காலத்தில் பதங்கள் இயற்றுவது உச்சக்கட்டத்தை அடைந்தது. கோபாலகிருஷ்ண பாரதி, சொரக்காடு வேங்கடசுப்பையர், வைத்தீஸ்வரன் கோயில் சுப்புராமய்யர், மூவநல்லூர் சபாபதி ஐயர், தஞ்சை நால்வராய சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு, கவிகுஞ்சர பாரதி, இராமலிங்க சுவாமிகள் ஆகியோர் இக்காலத்தவருள் குறிப்பிடத்தக்கவர்.

மூவநல்லூர் சபாபதி ஐயர்

இவர் ஷேத்திரக்ஞருக்கு அடுத்து முக்கியத்துவம் அளிக்கப் படுபவர். இவர் இயற்றிய பதங்களில் நாயிகா நாயக பாவ பேதங்கள் ஸர்வ லக்ஷணங்களுடன் காணப்படுகின்றன. பானுதத்தரின் ரஸமஞ்சரியில் காணப்படுகின்ற லக்ஷண சுலோகங்களுக்குத் தக்கபடி லட்சியங்கள் அமைந்துள்ளன. அவர் பதங்களுக்கு ராகங்களைக் கையாண்ட விதம் மிகவும் நேர்த்தியாக அமைந்து உணர்ச்சி பாவத்தைத் துல்லியமாக வெளிப்படுத்துகின்றது. இவர் ஒரு சிறந்த பரதநாட்டிய நிபுணராகவும் திகழ்ந்தார். ஒரு முறை அவர் பெண்வேடம் தரித்து இரண்டாம் சரபோஜி யின் அரசவையில் நடனமாடினார். அவர் கலைத்திறனைக் கண்டு வியந்த சபையோர் அவர் ஓர் ஆண் என்று முடிவுவரை கண்டுபிடிக்கவேயில்லை.

சுப்புராமய்யர்

இவர் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்ததாகத் தெரிகிறது. தமிழ்ப்பதங்கள் இயற்றிய மிக முக்கியமான மூவருள் இவரும்

ஒருவர் (மற்ற இருவர் முத்துத்தாண்டவர், கனம் கிருஷ்ணய்யர் ஆவர்). பலவகையான நாயிகைகளின் தன்மையை இவர் பதங்களில் காணலாம்.

கோபாலகிருஷ்ண பாரதி

இவரும் எந்த அரசவையையும் சார்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால் வல்லமை மிக்கவர். இவர் இயற்றிய நந்தனார் சரித்திரத்தில் வரும் "வருகாலமோ ஐயா" என்ற பதம் தியாகபிரும்மத்தையே உருக்கி விட்டதாகக் கூறுவர். இவர் பதங்கள் அத்தன்மை வாய்ந்தவை.

மன்னர் இரண்டாம் சரபோஜியே இசையிலும் நாட்டிய சாஸ்திரத்திலும் வல்லமை வாய்ந்தவர். "கோர்வையாசே சாக்ஷித்யாசே ஜின்னஸ்" என்ற தொகுப்பில் அவர் இயற்றிய மராட்டிப் பதங்கள் இடம்பெறுகின்றன. அப்பொழுது வாழ்ந்த தஞ்சை நால்வரே பரதநாட்டிய நிகழ்ச்சியினை முறைப்படுத்தினர்; பதத்தினையும் அந்த நிகழ்ச்சியின் ஓர் இன்றியமையா அம்சமாக ஏற்படுத்தினர். அவர்கள் அமைத்தது பின்வருமாறு:

அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், வர்ணம், பதம் மற்றும் ஜாவளி, தில்லானா.

இம் முறையே அன்றுமுதல் இன்றுவரை கையாளப்படுகிறது. பாலசரஸ்வதி கூறியுள்ளபடி, பதங்களே ஒரு நாட்டியக் கச்சேரிக்கு நிறைவளிக்கின்றன.

தமிழ்நாட்டிலேயே தஞ்சை அரசவையில் கலைஞர்களுக்குக் கிடைத்த ஊக்கம் வேறெந்த அரசவையிலும் இல்லை. பதக்காரர்கள் இயற்றும் நடைமுறை காலமான அந்த ஒருசில நூற்றாண்டுகளில் இன்னொரு பெரிய இராஜாங்கமான மதுரை அரசின் அரசியல் நிலவரம் அவ்வளவு நன்றாக இல்லை; ஏதாவதொரு குழப்பமோ கொந்தளிப்போ இருந்துகொண்டே இருந்தது. ஆதலால் தஞ்சையைச் சுற்றியே இக் கலை வளர்ந்தது. எல்லாக் கலைஞர்களுக்கும் தக்கபடி மரியாதையும், பொருளும் வழங்கப்பட்டன. அதிகபட்சக் கலைஞர்கள் இங்கிருந்ததில் வியப்பொன்று மில்லைதான். ஷேத்திரக்ஞர் மெருகேறிப் பிரபல மடைந்ததும் இங்குதானே.

இதுமட்டுமன்றிச் சிவகங்கை அரசவையிலும் புலவர்கள் கௌரவிக்கப்பட்டனர். முன்பு கூறியபடி, சில தமிழ்நாட்டுத் தனவான்கள் வாகேயக்காரர்களுக்குக் கனகாபிஷேகமே செய்தனர்.

சிவகங்கையின் கௌரிவல்லப மஹாராஜா கவிகுஞ்சரபாரதியைக் கௌரவித்துக் கவிகுஞ்சரம் என்ற பட்டமளித்து, தமது ஆஸ்தான வித்துவான்களில் ஒருவராக நியமித்தார்.

இதற்குப் பிறகு தமிழ்நாட்டின் வேறு சில மாவட்டங்களிலும் பதக்காரர்கள் எழுந்தார்கள். குறிப்பாக, கொங்குநாட்டிலும், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மாவட்டங்களிலும் இயற்றினார்கள். கொங்குநாட்டுப் புலவரும் எட்டையாபுரம் நாராயணஸ்வாமி ஐயரும் இதில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இதற்குப் பின் வந்த பதக்காரர்களில் முக்கியமானவர்கள் பெரியசாமித்தூரன், பாபநாசம் சிவன், வேதநாயகம் பிள்ளை, பொன்னையா பிள்ளை, அம்புஜம் கிருஷ்ணா[21] மற்றும் சுத்தானந்த பாரதி.

முடிவுரை

தமிழ்நாட்டிலிருந்துதான் அதிகபட்சமான பதக்காரர்கள் உருவெடுத்தனர்; தமிழிலும் தெலுங்கிலும்கூட இயற்றினர். அலங்கார சாஸ்திரத்திலும், நாட்டிய சாஸ்திரம், அபிநய தர்ப்பணம் போன்ற நூல்களிலும் குறிப்பிட்டுள்ளபடி, நாயிகா நாயக பேதங்கள், லக்ஷணங்கள் எல்லாவற்றையும் உபயோகித்துச் செவ்வனே இயற்றியுள்ளனர். இவற்றின் பொருளை, பதத்தைக் கேட்டவுடனேயே எளிதில் புரிந்துகொள்ள முடியும். இதனால் இவை இசை மற்றும் நாட்டியத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமல்லாமல், சாமான்யர்களையும் கவரும் வகையில் அமைந்துள்ளன. ஆகையால் இவை பரதக்கலை தமிழ்நாட்டில் பரவிச் சிறப்புறப் பெரிதும் உதவின.

தற்பொழுது நாட்டிய நிகழ்ச்சியின் மிக முக்கியமான அங்கமாகப் பதங்கள் விளங்குகின்றன. அலாரிப்புக்குப் பதில் வேறேதாவது உருப்படி ஆடப்படலாம். ஜதிஸ்வரம் மற்றும் சப்தம் ஆடாமலே விடலாம். ஆனால் பதமில்லாத கச்சேரி இல்லையெனக் கூறலாம். இவை கருத்துப்படி, இசைப்படி விதவிதமாகத் தொகுத்து ஆடப்படுகின்றன.

ஒரு கருத்தை எடுத்துக்கொண்டு அந்தத் தலைப்பின்கீழ் வரும் வெவ்வேறு வகையான பதங்களை வைத்துக்கொண்டே நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. ஒரு சான்றுக்கு அஷ்டவித நாயிகா என்ற தலைப்பின்கீழ் வரும் நாயிகைகளின் குணாதிசயங்களின்படி, அவற்றை விவரிக்கும் சில பதங்கள் நிகழ்ச்சியில் அளிக்கப்படுகின்றன.

எல்லா உருப்படிகளும் காலத்திற்கேற்பச் சில மாறுதல்களை யடையும். இதுவே வளர்ச்சியின் முதல்படி. இம்மாதிரி, பதங்கள் இயற்றுவதிலும் புதிய மாறுதல்கள் நிகழ்வது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

ஆனால் முன்னாளில் இயற்றியுள்ள பதங்களில் அதிகபட்சம் அச்சிடப்படாமல் இருப்பது ஒரு வருத்தத்திற்குரிய விஷயம். சங்கீத சாஸ்திரக்காரர்கள் இதன்மீது அக்கறை செலுத்தி, முயன்று பதங்களைச் சேகரித்து அச்சிட்டார்களேயானால் மிகவும் நன்றாக இருக்கும். இன்னும் வெவ்வேறு வகைகளை நாம் கேட்டு மகிழலாம். நாட்டியக்கலை மேலும் வளர இது பெரிதும் உதவும்.

6.0 நன்றி: இவ் வாராய்ச்சியில் ஈடுபடுங்கால் வழிகாட்டி நெறிப்படுத்திய திரு. கே.பி. கிட்டப்பாப்பிள்ளை (நாட்டியப் பேராசிரியர், நாட்டியக் கல்லூரி, அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்) அவர்களுக்கு நன்றி.

14. 9ஆம் நூற்றாண்டில், தமிழைத் தவிர மற்றத் தேசிய மொழிகள் அவ்வளவாக வளர்ந்திருக்கவில்லை. ஆகையால் இசையைப்பற்றி எழுதியவர்கள் பாரதம் முழுவதும் வழக்கு மொழியாயிருந்த சமஸ்கிருதத்தை உபயோகித்தனர். ஆயினும் ராகத்தின் லக்ஷணத்தையும் அதில் பல்வேறு தன்மைகளையும் வரையறுப்பதற்காக அந்தந்த மொழிகளில் இசைப்பாட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. அக்காலத்தின் பிரபல இசைநூலாக விளங்கும் பிரஹத்தேசியை இயற்றிய மதங்கமுனி தேசியப் பிரபந்தங்களை இயற்றினார். இவை கர்நாடகம், லதா, கௌடா, ஆந்திரா மற்றும் திராவிட மொழிகளில், அவர் காலத்திலிருந்து தாளபாக்கப் புலவர்கள் காலம்வரை நூற்றுக் கணக்கில் இயற்றப்பட்டன.

பிரபந்தம் என்பது ராகம், தாளம், மெட்டு, விருத்தம் மற்றும் அங்கம், ஸ்வரா, பிருதா, தேனகா, பாடா, தாளா, பதா ஆகியவற்றைக் கொண்டது. இதில் பதம் என்பது பிரபந்தத்தின் நாயகனது வீரப்பண்புகளையும் சாதனைகளையும் விவரிக்கும் சாஹித்யத்தின் வரியாகும். ஆகையால் 17ஆம் நூற்றாண்டின் தொடக்கம்வரை ரஸபாவத்தை விளக்கும் சாஹித்யத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. இதைக் காணும்போது திராவிட (தமிழ்) மொழியில் இயற்றப்பட்ட தேசியப் பிரபந்தங்களே தமிழ்ப் பதங்களின் முன்னோடிகளெனக் கூறலாம்.

17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தஞ்சையின் அரசரான விஜயராகவ நாயக்கர் தம் தந்தையின் பெயரில் எழுதிய 'ரகுநாதப்பூதமு' என்னும் யக்ஷகானத்தில், பதம் என்பது காதல் அல்லது சிருங்கார ரசத்தைத் தீட்டிக் காட்டும் ஓர் இசை உருப்படி என்று குறிப்பிட்டுள்ளார். இந்நாளைய இசைவழக்கில் பதம், சிருங்கார ரஸமும் மதுரபக்தியின் பல்வேறு பண்புக்கூறுகளையும் கையாளும் உருப்படியாக வரையறுக்கப் பட்டுள்ளது.

நூல் தொகுப்பு

1. R. Rangaramanuja Iiyengar, ***History of South Indian (Carnatic Music) from Vedic Times to the Present***, The Carnatic Music Book Centre, Madras, 1972
2. T.S. Parthasarathy, ***Bharatha Natyam and Allied Dances***, Music Academy 59th Conference Souvenir, 1985
3. Gowri Kuppusami and M. Hariharan, ***Tamil Padangal***, Carnatic Music Book Centre, Madras 1983
4. T. Balasaraswati, ***On Bharatha Natyam***, Sangeet Natak, Vol.73-74, 1984
5. வே. ராகவன், நாட்டியக்கலை, கலைமகள், காரியாலையம், சென்னை
6. ***Cultural Reader of India, Devotional Poets and Mystics***, Publications Divisions Ministry of Information and Broadcasting, Govt. of India, New Delhi, 1978
7. நால்வர் சரித்திரமும், அற்புதத் தேவாரத்திரட்டும், திருத் தருமபுர ஆதீன வெளியீடு, சாது அச்சுக்கூடம், சென்னை, 1941
8. தேவார இசை அரங்கு, திருத்தருமபுர ஆதீன வெளியீடு, 1955
9. திவ்வியப் பிரபந்தப் பண் இசை, கலைமகள் இசைக் கல்லூரி, சென்னை, 1969
10. P. Sambamoorthy, ***Great Composers***; Book I, 4th edition, The Indian Music Publishing House, Madras, 1985
11. V. Raghavan (editor) ***Cultural Leaders of India***: Composers, Ministry of Information and Broadcasting, Govt,. of India New Delhi, 1978
12. P.Sambamoorthy, ***South Indian Music***, Book VI, 4th edition, The Indian Music Publishing House, Madras, 1982

13. P.Sambamoorthy, ***South Indian Music***, Book III, 7th edition, The Indian Music Publishing House Madras, 1973

14. S. Seetha, ***Music and Dance during the time of Vijayaraghava Nayak of Tanjore***, Journal of the Music Academy 48:139-150, 1977

15. S. Seetha, ***Tanjore as a Sea of Learning***, University of Madras, Madras, 1981

16. ஆர்.வேதவல்லி, வேங்கடமகியின் கீதங்களும் பிரபந்தங்களும்

17. முத்துத்தாண்டவர் கீர்த்தனைகள், 1938

18. P.Sambamoorthy, ***Dictionary of South Indian Music***, Indian Music Publishing House Madras

19. செ.செ. செல்லதுரை, தென்னக இசைஇயல், வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல், 1984

20. கே.பி.கிட்டப்பா மற்றும் கே.பி. சிவாநந்தம் நாட்டிய சங்கீதமும் கர்நாடக சங்கீதத்திற்கு நாட்டியச்சாரியார்கள் புரிந்துள்ள சேவையும்

21. K.R. Madhavi, ***Tamil Padakaras and Their Contribution to South Indian Music***, Thesesh, University of Madras

22. Kapila Vatsayan , ***Classical Indian Dance in Literature and Arts***, Sangeeth Natak Academy, New Delhi, 1968

23. V. Raghavan, ***Bharatanatyam***, Journal of the Music Academy 45:233-262, 1974

24. முத்தையா பாகவதர், சங்கீத கல்பத்ருமம், முதற்பாகம், சுவாதி திருநாள் சங்கீத கலாசாலை, 1947

37

உலகத் தமிழாராய்ச்சித் தளம் - ஒரு மறு ஆய்வு

சாலை இளந்திரையன்

0. 'அய்.ஏ.டி.ஆர்' என்னும் ஆங்கிலச் சுருக்கப் பெயரால் குறிக்கப்படும் உலகத் தமிழாராய்ச்சி மன்றம், 1964 சனவரியில் இந்திய நாட்டின் தலைநகரில் தொடங்கப்பட்டது. அதன் முதலாவது அனைத்துலக ஆய்வு மாநாடு 1966–ல் மலேசியாவில் நடைபெற்றது. 1966–க்குப் பிறகு, இடைப்பட்ட 20 ஆண்டு காலத்தில் 4 மாநாடுகள் நடந்தன; இப்போது ஆறாவது மாநாடு நடைபெறுகிறது. இந்த 23 ஆண்டுகளில், ஆறு பெரிய மாநாடுகள் நடந்துள்ள சூழ்நிலையில், உலகத் தமிழாராய்ச்சி மன்றம், தனக்கென்று வகுத்துக்கொண்ட ஆராய்ச்சித் தளத்தில் என்னென்ன புதுமைகள், வளர்ச்சிகளைக் கண்டுள்ளது என்பதை ஆய்ந்து காண்பது, தொடர்ந்து இம் மன்றத்தாலும் அதன் மாநாடுகளாலும் நடைபெற வேண்டிய தமிழ்ப் பணிக்குப் புதிய வலுவான வழித்தடங்களைக் காட்டுமாகையால், இந்த மன்றத்தின் இலக்காகிய 'உலகத் தமிழாராய்ச்சித் தளம்'பற்றிய ஒரு மறுஆய்வை இந்தக் கட்டுரையில் நடத்த விரும்புகிறேன்.

1.1. பொதுவாகத் திராவிட இயல் ஆய்வையும் சிறப்பாகத் தமிழியல் ஆய்வையும் ஊக்கப்படுத்தவும், (பல்வேறு இடங்களில், நிலையங்களில் நடைபெறும்) இத் துறை ஆய்வுகளை ஒருங்கிணைக்கவும் ஓர் அமைப்பு வேண்டும் என்னும் பொதுவான நோக்கோடேயே உலகத் தமிழாராய்ச்சி

மன்றம் (1964–ல்) உருவாக்கப்பட்டது (சேவியர் தனிநாயகம், 1968).[1] 1968–ல் சென்னையில் இரண்டாவது மாநாடு நடந்தபோதே, அதாவது, அய்.ஏ.டி.ஆர். உருவாகி நாலு ஆண்டுகளுக்குள்ளேயே, உலகின் பதினைந்து நாடுகளிலாவது இந்த மன்றத்தின் கிளை அமைப்புகளை உருவாக்கிடலாம் என்ற அளவுக்கு ஆர்வமும் ஆதரவும் பெருகிவிட்டன (சேவியர் தனிநாயகம், 1968).[2]

1.2, இரண்டாவது மாநாட்டில் ஏற்பட்ட ஆராய்ச்சிப் புதுப்பேருணர்வு, அதுவரை இல்லாத ஓர் எண்ணத்தைத் தமிழ் அறிஞர்கள்பால் ஏற்படுத்தியது. அதாவது, உலகத் தமிழ் மாநாடுகளால் இந்தியத் தமிழ் அறிஞர்களிடம் உண்டாக்கப்பட்ட புதிய எழுச்சி, 'உலக அளவில் இருப்பது போல இந்திய அளவிலும் ஒரு தமிழ் ஆராய்ச்சி அமைப்பு இருக்க வேண்டும்' என்ற வளர்ச்சி உணர்வை அங்கேயே தோற்றுவித்தது. அதன் விளைவாக, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் சென்னையில் 8–1–68–ல் உருவாயிற்று (சாலை இளந்திரையன், 1981).[3]

1.3, இரண்டாவது (சென்னை) மாநாட்டுக்கும் மூன்றாவது (பாரீசு, 1970) மாநாட்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், உலகத் தமிழ் ஆராய்ச்சிக்கு என்று நிரந்தரமான ஓர் அமைப்பு இருக்க வேண்டும் என்ற கருத்து உருவாகி, 1971–ல் சென்னையில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் எழுந்தது (இர.ந.வீரப்பன், 1981).[4]

1.4, பாரீசில் (1970) மூன்றாவது மாநாட்டைத் தொடங்கிவைத்து உரையாற்றிய யுனெஸ்கோவின் இடைக்காலத் தலைமை இயக்குநர் டாக்டர் மால்கம் ஆதிசேஷையா, மாநாட்டின் நோக்கம்பற்றிப் பின் வருமாறு தெரிவித்தார்:

"தமிழ்க் கலாசாரத்தின் தனிச்சிறப்புகளைப்பற்றியோ பொதுவாக அது இந்தியக் கலாசாரத்தின் ஓர் அங்கம் என்பதுபற்றியோ ஆராய்வதோடு இம் மாநாட்டின் நோக்கம் முழுமை பெறாது. வெளிநாடுகளுடன் தமிழ்நாடும், தமிழ்மக்களும் கொண்டிருந்த உறவு இங்கு விவாதத்துக்குரிய மிக முக்கியமான பொருளாகும். தமிழாராய்ச்சி என்பது உண்மையாகவே ஒரு சர்வதேச ஆராய்ச்சி என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. அவற்றில் சில:

1. தமிழர் நாகரிகம் கடல் கடந்து, இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ் முதலிய தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குப் பரவியது.

2. சீனதேசத்தில் புதைபொருள் ஆராய்ச்சி ஸ்தலங்களில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டுகள்.

3. பர்மா, கம்போடியா, தாய்லாந்து நாடுகளில் நடைமுறையில் காணப்படும் விழாக்கள், சடங்குகள்.

4. இந்தியப் பெருங்கடல் மூலம் நடத்தப்பட்ட வாணிகத்தைப் பற்றிய ஆராய்ச்சி, கிழக்கு ஆப்பிரிக்காவின் சரித்திரத்திற் கான மூலாதாரங்களில் ஒன்றாக இருத்தல்.

விரிந்து பரந்த இந்த ஆதிக்கத்திற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அது, அதன் பூரண சமாதான இயல்பு ஆகும். அநேகமாக, சரித்திரத்தில் வேறு எந்த நாகரிகமும் கத்தியின்றி, இரத்தமின்றி, முழுமையும் வாணிபம், கலாசாரம் இவை மூலமாகவே, தனது செல்வாக்கை இவ்வளவு தூரம் பரப்பியதில்லை. ஆங்காங்கு உள்ள பண்பாடுகளோடு தமிழ்ப் பண்பாடு நன்கு ஒன்றி இணைந்தது. மனம் திறந்து நிறைந்த இந்தச் சர்வதேசத் தொடர்பின் அஸ்திவாரம், கடல்கடந்த வாணிபம் மாத்திரமல்ல. தமிழனின் ஆழ்ந்த இதயபூர்வமான மனிதாபிமானம் என்றே கூறவேண்டும். இதையே ஒரு தமிழ்ப்புலவர், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று கூறுகிறார். அகில உலகத்திற்கும் பொதுவான இந்தப் பண்பாடு, இன்றைய சர்வதேச கலாசாரத் தொடர்புகளினால் புத்துயிர் பெறலாம். நீங்கள் தொன்மையான பழம்பெரும் இலக்கியம், பண்பாடுகள் இவற்றை ஆராய்வதோடு இன்றைய தமிழ் இலக்கியம், கலாசார வளர்ச்சி இவற்றையும் ஆராயப் போவது இந்த மாநாட்டின் மிக முக்கியமான அம்சமென்று நான் கருதுகிறேன் (மால்கம் ஆதிசேஷையா, 1981).[5] "நம்மைப்பற்றி உலகத்து மற்றவர்களுக்குத் தெரிவிப்பது என்ற உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் நோக்கம், நமது உலகத் தொடர்பை நமக்கே தெரிவிப்பது என்பதாக இங்கே வளர்ந்திருப்பது கவனிக்கத்தக்கது."

1.5. மூன்றாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கும் நாலாவது மாநாட்டுக்கும் (யாழ்ப்பாணம்) இடைப்பட்ட காலம் நாலு ஆண்டுகள். இந்த நான்கு ஆண்டுகள் நடைபெற்ற ஆய்வுகளும் தமிழ் நிகழ்வுகளும், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் (1964–74) பத்து ஆண்டுகால வளர்ச்சிகளைப்பற்றிய ஒரு மதிப்பீட்டுக்கே களம் ஆயின; நாலாவது மாநாட்டின் தலைமை உரையை நிகழ்த்திய பேராசிரியர் கு.வித்தியா னந்தன் பாரிய வெற்றிப் பெருமிதத்துடன், பின்வருமாறு குறிப்பிட்டார்:

"பத்தாண்டு காலமாக உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் சாதித்தவை யாவை? முதலாவதாகத் தமிழ் இலக்கியம்பற்றியோ, மொழிபற்றியோ ஆராயும் உரிமை தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவருக்கே உரியது என்ற கொள்கையை இது தகர்த்தெறிந்து விட்டது. தமிழ் ஆராய்ச்சி குறுகிய எல்லைக்குட் கட்டுப்பட்டிராது பரந்து விரிந்து பல துறைகளில் விருத்தியடைந்துள்ளது. தமிழ் இலக்கியம்பற்றியும், இலக்கணம்பற்றியும் உள்ள ஆராய்ச்சிமட்டும் தமிழாராய்ச்சி என்ற நிலை மாறி, தமிழர் பண்பாடு, தமிழர் வரலாறு, தமிழர் தொல்பொருளியல், சமூகவியல் போன்ற துறைகளிலும் ஆராய்ச்சி விரிந்து சென்றிருக்கின்றது. தமிழ் இலக்கியத்தின் சிறப்புப்பற்றியும், பண்பாட்டின் வளர்ச்சிபற்றியும், தொன்மைபற்றியும், மொழியியல்பற்றியும் பல உண்மைகள் வெளிவந்துள்ளன. இவை யாவற்றையும் ஒன்றுதிரட்டிப் பல நாடுகளிலும் தமிழாராய்ச்சி செய்கின்ற அறிஞர் தமது ஆராய்ச்சி முடிவுகளைப் பொதுமன்ற மொன்றிற் சமர்ப்பித்துப் பயன்பெறத் தமிழாராய்ச்சி மன்றம் வழிவகுத்திருக்கின்றது. இது ஒரு பெருஞ்சாதனை என்றே கூறவேண்டும்.

"ஆராய்ச்சி மாநாடுகளில் அறிஞர்களைக் கருத்துப் பரிமாறச் செய்ததோடு, பார்வையாளராகக் கலந்துகொண்ட பலரைத் தமிழாராய்ச்சியில் ஈடுபடவும் ஆராய்ச்சி மாநாடுகள் காலாக இருந்துள்ளன. ஒவ்வொரு மாநாட்டின் பின்பும் தமிழ் ஆராய்ச்சி செய்வோர் தொகை பெருகிக்கொண்டு வந்திருக்கின்றது" (சு.வித்தியானந்தன், 1980).[6]

1.6. மூன்றாவது (பாரீஸ், 1970), நான்காவது (யாழ்ப்பாணம், 1974) மாநாடுகளுக்கு இடையே, ஆராய்ச்சி மாநாட்டின் துணை விளைவாக வேறொரு புதுமையும் ஏற்பட்டது. "ஆராய்ச்சி அறிஞர்கள் என்னும் எல்லைக்கு அப்பாற்பட்ட பல்வேறு நாட்டுத் தமிழர்களும் ஒன்றுகூடி அளவளாவி மகிழவும் ஒருவர்க்கொருவர் நம்பிக்கைத் துணையாக விளங்கவும் ஓர் ஏற்பாடு வேண்டும்" என்னும் சிந்தனை, அங்கே (8.1.74–ல்) உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் உருவாகக் காரணமாயிற்று (சாலை இளந்திரையன், 1974).[7]

2.1. 1964ஆம் ஆண்டில், உலகின் பல பகுதிகளைச் சேர்ந்த 22 தமிழறிஞர்கள் மட்டுமே (இர.நா. வீரப்பன், 1981)[8] கூடி உருவாக்கிய உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம், தனது மூலநோக்கத்திலிருந்து விலகாமலே,

பல புதுப்புதிய அமைப்புகள் உருவாகவும், புதுப்புதிய ஆய்வுகள் விரிவடையவும் வழிகோலியது. தமிழ்மொழி – இலக்கிய ஆய்வு என்ற எல்லை அகற்றப்பட்டு, வெளிநாடுகளோடு தமிழர்களுக்கு ஏற்பட்ட தொடர்புறவுகள், அதன் விளைவான பண்பாட்டுப் படர்வுகள் என்னும் எல்லைகளைத் தமிழ் ஆய்வு சென்று எட்டியது. தமிழைப்பற்றிய ஆய்வு தமிழர்கட்கே உரியது என்ற நிலைப்பு விழுந்து, 'தமிழ் என்பது உலக அறிஞர் அனைவரின் ஈடுபாட்டுக்கும் உரிய ஒரு பெரிய பண்பாடு' என்ற நிலை எழுந்துள்ளது.

2.2. 1981–ல் இந்திய நாட்டு மதுரையில் நடந்த அய்ந்தாவது மாநாட்டுக்கு வரும்போது, மாநாட்டுக்குப் புறத்துணையாக நின்ற பல லட்சம் தமிழகத் தமிழர்களுக்கு அப்பால், 22 நாடுகளைச் சேர்ந்த ஆய்வாளர்களும் பார்வையாளர்களுமாக 386 பேர் மாநாட்டில் பங்குகொண்டார்கள். இந்தப் பெரிய ஆர்வம் எப்படி ஏற்பட்டது? 1964–க்கும் 1980–க்கும் இடையில் உலகெங்கும் தமிழ்மக்களின் வரலாற்றில் ஏற்பட்டுள்ள திருப்பங்களே இதற்குக் காரணம்.

2.2.1. 1974–ல் யாழ்ப்பாணத்தில் தோன்றிய உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமும் உலகத் தமிழ் ஆய்வுக்கு உணர்ச்சி பூர்வமான பெரியதொரு வளர்ச்சியைத் தந்தது. அதாவது – "தமிழ் ஆய்வு என்பது கடந்த காலச் சாதனைகளையும் வரலாறுகளையும் மட்டுமே ஆராய்ச்சி செய்வது அல்ல – உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் மொழி, கலை, பண்பாட்டுத் தொடர்புறவுகளை வலுப்படுத்தும் சாதனமாகவும் அது விளங்க வேண்டும்" என்ற புதிய நோக்கத்தை உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமே, உலகத் தமிழ் ஆய்வுக்குள் ஏற்றியது.

"ஈழநாட்டுத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்திலே ஏற்பட்டுள்ள வெப்பம் இந்தப் புதிய நோக்கத்துக்கு மேலும் ஊட்டம் சேர்த்தது. தமிழர் வாழும் பர்மா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, பிஜித்தீவு, மொரிசியஸ், தென்னாப்பிரிக்கா, ரீயூனியன் போன்ற ஏனைய நாடுகளில் அவர்களுக்கு இருந்துவரும் தடைமுடைகளால் இந்த ஊட்டம் மேலும் வலுப்பெற்றது.

"இந்தப் பல பின்னணிகளாலேதான், அய்ந்தாவது மாநாட்டுக்குப் பேராளர்களாக இத்தனை பேர் வந்திருக்கிறார்கள். தமிழ்ப் பெரும் புலவர்களோ தமிழியல் ஆய்வாளர்களோ அல்லாத பல நாட்டுத் தமிழர்கள்

இங்கே வந்து குழுமியிருக்கிறார்கள் என்றால், இந்த நெடிய பின்னணியும் அந்தப் பின்னணி அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ள புதிய நம்பிக்கையுமே காரணம்" (சாலை இளந்திரையன், 1981).[9]

2.3.1. அப்படி என்றால் என்ன? உலகெங்கும் வாழும் தமிழர்களின் உள்ளத்தில் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக எழுந்து உயர்ந்து வருகிறது உலகத் தமிழாராய்ச்சி மன்றம். அறைக்குள் நடக்கும் ஆராய்ச்சி, சென்ற காலச் செழுமைகள்பற்றிய மதிப்பீடு என்ற எல்லையை மீறி, "உலகெங்கும் வாழும் தமிழர்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளோடு அல்லது அவர்களின் தொடர்புறவுகளோடு தமிழும் தமிழ்ப் பண்பாடும் எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளன அல்லது பிளவுபட்டுப் போய்விட்டன என்பது குறித்தும் ஆராயத்தக்க அவசிய அவசரம் இன்று ஏற்பட்டுள்ளது" (இர.ந.வீரப்பன், 1981).[10]

2.3.2. இந்த எண்ணத்தின் விளைவாகவே, 'உலகத் தமிழர் வங்கி' ஒன்று அமைய வேண்டும் என்ற சிந்தனை ஆறாவது மாநாட்டு நடத்துநர்களுக்கு ஏற்பட்டது என்று நான் கருதுகிறேன். 'ஆற்றுக்குள்ளே நின்று அரகரா என்றாலும் சோற்றுக்குள்ளே இருக்கிறார் சொக்கலிங்கம்' என்பது பழமொழி. மக்களின் பொருளாதார வாழ்வுக்குத் துணை செய்யாத எந்தப் பெரிய ஆய்வும் மக்களுக்கு உவப்பைத் தாராது. 'உலகத் தமிழர் வங்கி' என்ற புதிய கோட்பாடு, இதுவரை நடத்திவந்த ஆய்வுகளுக்கு அப்பால், உலகத் தமிழர்களின் பொருளாதாரம், தொழிலாதாரம் என்னும் தளங்களைப்பற்றிய ஆராய்ச்சிக்கும் களம் அமைத்துவிட்டது.

2.3.3. இந்தச் சிந்தனையோடு, உலகத் தமிழ் ஆய்வு வளர்ச்சியின் ஒரு கட்டம் முடிவடைகிறது என்று நான் கருதுகிறேன். அதாவது, தமிழியலைப்பற்றிய உண்மைகளையும் பெருமைகளையும் உலகத்து மற்றவர்கள் அறியவேண்டும்; இவற்றைப்பற்றிய ஆராய்ச்சியில் தமிழர்கள் மட்டுமல்லாமல் உலகத்து மற்றவர்களும் ஈடுபட வேண்டும்; தமிழ் ஆய்வு என்பது இலக்கிய இலக்கண எல்லைகளைத் தாண்டிய பண்பாட்டு உறவுக்கான ஒரு தேடலாக உருக்கொள்ள வேண்டும்; படித்த அறிஞர்கள் மட்டுமன்றி உலகெங்கும் பரந்து வாழும் தமிழ்ப் பொதுமக்களும் இந்த ஆய்வுகள் தரும் எழுச்சியில் பங்குகொள்ள வேண்டும் என்ற வகையில் விரிந்துசென்ற உலகத் தமிழ் ஆராய்ச்சியானது, தனது தவிர்க்க முடியாத அடுத்த கட்டமான "உலகத் தமிழருக்குப் பொருளாதார – தொழிலாதாரப்

பாதுகாப்பு" என்ற தளத்துக்குக் கட்டியம் கூறியுள்ளது. அதன் மூலம், இன்று தமிழ்வாழ்வின் எல்லாக் கூறுகளையும் அளாவியதாகி நிற்கிறது உலகத் தமிழ் ஆராய்ச்சி.

3.0. இதிலே உலகத் தமிழ் வாழ்வைப்பற்றிய ஒருவகையான முழுமை கிடைத்தாலும், இந்த ஆய்வு இன்னும் பல கூறுகளில் படரவும் வாய்ப்பு இருக்கவே செய்கிறது. அவற்றுள் ஒன்றிரண்டையாவது இங்கே குறிப்பிட்டுச் சுட்டிக்காட்ட வேண்டும்.

3.1.1. தங்கள் மூலத் தாயகங்களான இந்தியாவிலும் சிறீலங்காவிலும் மட்டுமல்லாமல், தமிழர்கள் சென்று குடியேறிய அனைத்து நாடுகளிலும் தமிழர்கள் சிறுபான்மையினராகவே இருந்து வருகிறார்கள். இதனால் அவர்களுக்குப் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அதாவது, சிறுபான்மையினராக வாழ்வதில் உலகெங்கும் உள்ள தமிழர்களுக்குப் பெரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதைத் தீர்த்து வைப்பதற்குரிய ஒரு தமிழ்நெறியைக் கண்டு உரைப்பதிலும் உலகத் தமிழ் ஆராய்ச்சி கவனம் செலுத்தவேண்டும்.

3.1.2. நம்முடைய பழந்தமிழ்ப் பெரியோர்கள், 'வேறுவேறு நாடுகளைச் சேர்ந்த பல்வேறு மொழி – இன மக்கள், அந்நாள் தமிழ்ப் பெரும்பான்மையினரிடையே சிறுபான்மையினராக மிகுந்த மகிழ்வோடு வாழ்ந்தார்கள்' என்று பெருமிதம் பொங்கியுள்ளார்கள்.

"பல்ஆயமொடு பதிபழகி,–
வேறுவேறு உயர்ந்த முதுவாய் ஓக்கல்
சாறயர் மூதூர் சென்றுதொக் காங்கு,
மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்துஇனிது உறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம்"

என்று இசைக்கிறது நமது பட்டினப்பாலை.[11]

3.1.3. இதிலிருந்து நாம் அறிந்துகொள்வது என்ன என்றால், தமிழ்ப் பெரும்பான்மையினரிடையே சிறுபான்மையராக வாழ்ந்த மற்றவர்கள் சில இணக்க நடைமுறைகளைப் பின்பற்றியிருக்க வேண்டும்; அதேபோல், பிறநாட்டுச் சிறுபான்மையினர் எந்தக் குறையும் இல்லாமல் தங்கள் மத்தியிலே வாழ்வதற்கு ஏற்ற சில நடைகளையும் நடைமுறைகளையும்

அந்நாள் தமிழர்கள் கண்டறிந்து கடைப்பிடித்திருக்க வேண்டும் (சாலை இளந்திரையன், 1976).[12] இந்த இரண்டு நடைமுறைகளையும், முறையே இன்றைய தமிழர்களுக்கும் அவர்கள் சென்று வாழும் நாடுகளின் பெரும்பான்மை மக்களுக்கும் எடுத்து விளக்க வேண்டியது இன்றைய உலகத் தமிழாய்வின் ஒரு புதிய கூறாய் அமையலாம் என்று நான் கருதுகிறேன். அதன் மூலம், நமது தமிழாய்வுத் தளம் தமிழரின் இன்றைய வாழ்வு நிலையைச் சார்ந்ததாக விரிவடையும் என்றும் நம்புகிறேன்.

3.2.0. அதே போல, உலகப் பண்பாட்டு வரலாற்றைச் சீராக வரையும் பணிக்கு உதவும் அடிப்படைகளைக் கண்டெடுத்துக் கட்டி எழுப்பும் பணிக்கும் உலகத் தமிழாராய்ச்சி உதவ வாய்ப்பு உள்ளது. அரசியல், தத்துவம் முதலியவற்றை முதன்மைப்படுத்தி உலக அளவில் வரலாறுகள் எழுதப்பட்டிருக்கும்போது, மானுட ஒருமையை விளக்கும் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட பண்பாட்டு வரலாறு ஒன்று எழுதப்பட்டால், அது, மனிதகுலத்தைப்பற்றிய கல்விக்கே புதிய வளம் சேர்க்கும் அல்லவா?

3.2.1. 'இந்தியப் பண்பாட்டில் தமிழியலுக்குப் பெரும்பங்கு உண்டு' என்பதை வலியுறுத்தி வந்த உலகத் தமிழாராய்ச்சி, – அய்ந்தாவது (மதுரை, 1981) மாநாட்டில்– தமிழ்ப். பண்பாட்டின் உலகு தழுவிய செல்வாக்கைப்பற்றியும் கவனம் செலுத்தியது. "திராவிடர் – நீக்ரோவர் தொடர்புறவுகள், கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கும் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் கிரேக்கர் – தமிழர் தொடர்புகள், ஆப்பிரிக்கர் – தமிழர் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களில் ஒப்புமைகள், ஜப்பானிய மொழியில் தமிழன் தாக்குரவுகள் முதலான ஆய்வுகள் இந்த மாநாட்டிலே நிகழ்த்தப்பட்டுள்ளன (சாலை இளந்திரையன், 1981).[13] இவற்றால் வெளிவந்துள்ள புதிய பல உண்மைகளால், தமிழ்ப் பண்பாட்டின் வீச்சு, உலகின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு காலகட்டங்களில் கலந்து படர்ந்துள்ளது என்ற செய்தி புலப்படத் தொடங்கியுள்ளது. இந்தச் சிறிய வெளிச்சத்தைப் பின்பற்றி, நமது ஆய்வுத்தளத்தை வலுப் படுத்தினால் அதுவே, ஓர் உலகப் பண்பாட்டு வரலாற்றுக்கு ஆதாரமாக விளங்கும் என்று தோன்றுகிறது.

4. தமிழியலைப்பற்றிய ஆராய்ச்சியை உலக அளவுக்கு எடுத்துச் செல்ல வேண்டும், ஆய்வு அறிஞர்களிடையே ஒரு புதிய ஆய்வுப் பரிமாணத்தை உண்டாக்க வேண்டும் என்ற ஒரே நோக்கில் உருவான

உலகத் தமிழாராய்ச்சி மன்றம், தனது முதல் மூன்று மாநாடுகள் மூலமே அதைச் சாதித்துக்கொண்டது. அந்த எல்லையை எட்டியதும், தமிழரின் உலகப் பேருறவுக்குக் காரணமான வணிக, கலை – கலாசாரப் பண்பாட்டுப் படர்வுகளைப்பற்றி ஆராய முனைந்து, அதிலேயும் வெற்றி பெற்றது. இந்த ஆய்வுகள் தந்த எழுச்சியால், அறிஞர்களின் அளவில் நடந்த மாநாடுகள் உலகெங்கும் வாழும் தமிழ்ப் பொதுமக்களைத் தம்பால் ஈர்க்கத் தொடங்கின. அவர்களின் ஆக்கபூர்வமான பங்கேற்பு, பலநாட்டுத் தமிழர்களிடையே புதிய புதிய உறவுகளுக்கு வழிகோலியது. இப்படி வளர்ந்து வந்த உலகத் தமிழாய்வுத் தளம், இன்று மேன்மேலும் புதியபுதிய தமிழ்ச் சிந்தனைகளையும் தமிழ் நடைமுறைகளையும் தமிழ் வரலாற்றிலே கண்டெடுத்து உலகுக்குப் பரப்பும் ஒரு தூதுவனாக மேற்செல்ல வேண்டும்; உலக நாகரிகங்களுக்குப் புத்தெழுச்சியும் ஊட்டமும் தருவதாகத் தமிழ்ப் பண்பாடு எங்கெங்கும் படர்ந்து ஊடுருவிக் கிடக்கும் உண்மையும் எடுத்து விளக்கப்படவேண்டும். இந்தக் கடமைகள் முடியும்போது. அங்கே வேறு புதிய தமிழ்க் கடமைகளுக்கு வழிதிறக்கும். அந்த வழியிலேயும் உலகத் தமிழாராய்ச்சி படர்ந்து கிளைபரப்பிச் செழிக்க வேண்டும்.

மேற்கோள் குறிப்புகள்

1. Xavier S., Thaninayagam, 1968, ***Proceedings of the Second International Conference - Seminar of Tamil Studies,*** (p. Liv) I.A.T.R., Madras

2. _____ , 1968, ***Proceedings of the Second International Conference - Seminar of Tamil Studies,*** (p.IV) I.A.T.R., Madras

3. **சாலை இளந்திரையன், 1981, அய்ந்தாவது தமிழ் மாநாடு, (ப.17) சாலை வெளியீடு, சென்னை – 86**

4. **வீரப்பன், இர.ந. (பதிப்பு) 1981, அய்ந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு மலர் (ப.52), தமிழ் இலக்கியக் கழகம், கிள்ளான், மலேசியா**

5. **வீரப்பன், இர.ந. (பதிப்பு) 1981, அய்ந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு மலர் (ப.52), தமிழ் இலக்கியக் கழகம், கிள்ளான், மலேசியா**

6. **வித்தியானந்தன், சு. 1977, நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு – நிகழ்ச்சிகள் – முதலாம் தொகுதி (பக்.20–21) கொழும்பு, இலங்கை**

7. சாலை இளந்திரையன், 1974, தமிழ் மாநாடு (ப.52), தமிழ்ப் புத்தகாலயம், சென்னை – 5

8. வீரப்பன், இர.ந. (பதிப்பு) 1981, அய்ந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு மலர் (ப.58), தமிழ் இலக்கியக் கழகம், கிள்ளான், மலேசியா

9. சாலை இளந்திரையன், 1981, அய்ந்தாவது தமிழ் மாநாடு (பக்.49–52), சாலை வெளியீடு, சென்னை – 86

10. வீரப்பன், இர.ந. (பதிப்பு) 1981, அய்ந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு மலர் (ப.49), தமிழ் இலக்கியக் கழகம், கிள்ளான், மலேசியா

11. பட்டினப்பாலை, 213 – 18

12. சாலை இளந்திரையன், 1976, தமிழ்ப் பண்பாட்டுக்கு ஓர் இயக்கம் (ப.4), உ.த.ப. இயக்கம், புது தில்லி – 5

13. சாலை இளந்திரையன், 1981, அய்ந்தாவது தமிழ் மாநாடு (பக்.58–59), சாலை வெளியீடு, சென்னை – 86

38

மக்கள் தொடர்புவழிச் சங்ககால ஆட்சித்தலைவரின் ஆளுமை வளர்ச்சி

அரங்க. இராமலிங்கம்

சமுதாய உளவியலைச் சரியாகப் புரிந்துகொண்டவர்களே ஒரு சமுதாயத்தைச் சரியாக ஆள முடியும். "உளவியல் என்னும் பரந்துபட்ட துறையில் மனித நடத்தையைப் (Behaviour) பற்றி அறிவது சமூக உளவியல்"[1] (Social Psychology) என்றும், "எதிர்பாராத நிலையில் சமூகத்தில் எழும் பிரச்சினைகள் அல்லது நிகழ்ச்சிகளுக்கு, மனித மனப்பாங்கில் நிகழும் சமுதாய உணர்வு காரணமாக அமைவதை அறிவது சமூக உளவியல்"[2] என்றும் அறிஞர் கருத்துரைப்பர். பலதிறப்பட்ட மக்கள் கூடிவாழும் சமுதாயத்தில், பல்வேறு வகையான மனித நடத்தைக் கூறுகளையும், அதனால் சமுதாயத்தில் நிகழும் நிகழ்ச்சிகளையும் சரியாகக் கணிக்கத் தெரிந்தவர்களே, வலுவான ஆட்சித் தலைவர்களாக நிலைபெற்று, நிலையான ஆட்சியினைத் தரமுடியும். ஆட்சித் தலைமையைப் பெறுவதற்கும், பெற்ற தலைமையை நிலைநிறுத்தி நிலைபேறுடையதாக நீட்டித்துக் கொள்வதற்கும் மக்களின் ஆதரவு தேவை. மக்கள் அனைவரையும் ஆட்சித் தலைவர்கள் சென்று காணவோ, கண்டு பேசவோ இயலாத நிலை. எனவே ஆட்சித் தலைவரும் மக்களும் தொடர்புகொள்ள 'மக்கள் தொடர்பு சாதனம்' (Mass Media) ஒன்று தேவைப்பட்டது. மக்களுடன் தொடர்புகொள்வதற்காக ஒரு சாதனத்தை

எந்த ஆட்சித் தலைவரும் ஏற்படுத்துவதில்லை. ஆனால், அவர்கள் காலத்தில் எந்தச் சாதனம் மக்கள் தொடர்பு சாதனமாகச் சிறப்பாக விளங்கியதோ அதைத் தங்களுக்குப் பயன்படும்படி ஆக்கிக் கொள்வார்கள். சுருக்கமாகச் சொன்னால் தங்கள் காலத்தில் சிறந்த மக்கள் தொடர்பு சாதனமாக விளங்கியதைத் தங்கள் வளர்ச்சிக்குரிய சாதனமாகப் பயன்படுத்திக்கொள்ளும் திறத்தை ஆட்சித் தலைவர்கள் பெற்றிருந்தார்கள்.

வரலாறு உணர்த்துவது

ஒவ்வொரு காலகட்டத்தில் ஒவ்வொரு பொருள் அக் காலகட்டப் பொதுமக்கள் தொடர்பு சாதனமாக விளங்கியதையும், அக்காலத்தில் வாழ்ந்த ஆட்சித் தலைவர்கள் அச் சாதனத்தைச் சிறப்பாகத் தங்கள் வளர்ச்சிக்கும் நிலைபேற்றிற்கும் பயன்படுத்திக் கொண்டதையும் வரலாறு உணர்த்துகிறது. இக்காலத்தில் ஆட்சித் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மக்களுக்கு வழங்கப்பெற்றுள்ளது. எனவே, நாளும் மக்களோடு தொடர்புகொள்ள வேண்டிய கட்டாயம் ஆட்சித் தலைவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. நாளிதழ், வார இதழ், திங்களிதழ் போன்ற பொதுமக்கள் தொடர்பு சாதனங்கள் இன்று பெருகியுள்ளன. இவற்றில் காங்கிரசு பேரியக்கத்திற்குப் பிறகுவந்த தமிழக ஆட்சித் தலைவர்கள் இத் துறையை நன்கு பயன்படுத்திக்கொண்டனர். பேரறிஞர் அண்ணா இச் சாதனத்தையும் (திரைப்படம்), இச் சாதனத்தால் மிகுபுகழ் பெற்றவரையும் பயன்படுத்திப் பெருவெற்றி பெற்றமை நுணுகி நோக்கத்தக்கது. பேரறிஞர் அண்ணாவிற்குப் பிறகு ஆட்சித் தலைமையினை ஏற்றவர்கள் இச் சாதனத்தையும், இச் சாதனத்தால் புகழ் பெற்றிருப்பவர்களையும் பயன்படுத்திக்கொள்ள முனைந்துள்ளமை கருதத்தக்கது.

இருபதாம் நூற்றாண்டிற்கு முன்னரும் பிற்காலப் பாண்டியருக்குப் பின்னருமாகிய இடைப்பட்ட காலத்தில் விசயநகரப் பேரரசு வழிவந்தவர்கள் தமிழகத்தில் ஆட்சித் தலைமையினை ஏற்றிருந்தார்கள். தெலுங்கினைத் தாய்மொழியாகக் கொண்ட இவர்களால் மக்களோடு நேரிடையாகத் தொடர்புகொள்ள முடியவில்லை. எனவே, தமிழகம் பல பாளையப்பட்டுகளாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி மேற்கொள்ளப்பெற்றது. பாளையக்காரர்கள், ஜமீன்தார்கள் ஆகியவர்களோடு மட்டுமே நாயக்க மன்னர்களின் தொடர்பு நின்றுவிட்டது. பாளையப்பட்டுகளுக்குத்

தலைமையேற்றிருந்த குறுநில மன்னர்களைப் போற்றும் நிலையிலும், சமயப் போராட்டங்களைப் புலப்படுத்தும் நிலையிலும் எண்ணற்ற சிற்றிலக்கியங்கள் தோன்றின. குற்றாலக் குறவஞ்சி, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு போன்ற இலக்கியங்கள் தங்கள் காலகட்டத்தில் வாழ்ந்த வள்ளல்களின் புகழைப் பரக்கப் பேசுகின்றன. இசுலாமியர்கள், மராட்டியர்கள், குறுநில மன்னர்கள் முதலானவர்களுடன் ஓயாத போர்களில் ஈடபட்டிருந்த நாயக்க மன்னர்களால் தங்கள் காலத்தில் மக்கள் தொடர்பாளர்களாக விளங்கிய புலவர்களையோ, அவர்தம் படைப்புகளையோ பயன்படுத்தித் தம் ஆளுமையை வளர்த்துக்கொள்ள முடியவில்ல. கோயில் திருப்பணிகள், சமய விழாக்கள் என்ற நிலையில் அவர்தம் மக்கள் தொடர்பு நின்றுவிடுகிறது. எனவேதான் பிற தமிழ் வேந்தர் போன்று நாயக்க மன்னர்களால் பொதுமக்களுடன் மிகுதியாகத் தொடர்புகொள்ள முடியவில்லை.

பல்லவர் காலத்தில் தோற்றம் பெற்ற பக்தி இயக்கம் மக்கள் இயக்கமாக வளர்ச்சி பெற்றுச் சோழர் காலத்தில் கற்கோயில்கள், ஆகமங்கள் என்ற நிலையில் நிலைபெற்றது. கோயில்களை அடிப்படையாகக் கொண்டே விழாக்களும் நிகழ்ச்சிகளும் நிகழ்ந்தன. பல்வேறு இனமக்களும், மன்னனும் கலந்து உறவாடும் இடமாகக் கோயில்கள் திகழ்ந்தன. மக்கள் வாழ்வில் கோயில்கள் முக்கிய இடம்பெற்றதால் சிவாச்சாரியாரும், கருவூர்த் தேவரும் ஆட்சித் தலைவரிடம் அணுக்கம் பெற்றனர். ஆண்டவன் புகழோடு ஆட்சித் தலைவரின் புகழையும் ஒருங்கே வளர்த்து, பல்வேறு இனமக்களையும் ஒருங்கே இணைத்து அக்கால மக்கள் தொடர்பு சாதனமாக விளங்கியவை கோயில்கள். எனவே சோழப் பேரரசர்கள் தமிழகமெங்கும் கற்கோயில்களைக் கட்டினர். கோயில்களைச் சார்ந்து கலைகள் வளர்ந்தன. கலைகள் இறைவனின் புகழையும், ஆட்சித்தலைவரின் புகழையும் இணைத்துப் பாடின; பரப்பின.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டு தொடங்கி ஐந்தாம் நூற்றாண்டுவரை (பல்லவர் ஆட்சித் தலைமை பெறும்வரை) தமிழகம் களப்பிரர் என்பாரின் ஆட்சித் தலைமையினைப் பெற்றிருந்தது என வரலாறு அறிவிக்கின்றது. மொழி, இனம், சமயம் இவற்றால் மாறுபட்டிருந்த களப்பிரரின் ஆட்சியில் தமிழர்களின் அக, புற வாழ்க்கைநெறிகள் தாக்குண்டன. இக் காலகட்டத்தில் தோன்றிய நாயன்மாரும் ஆழ்வாரும் இம் மண்ணிற்கே

உரிய பண்டைய வாழ்வியல் நெறியினைப் புதுப்பிக்க முனைந்தனர். மக்களோடு தொடர்புகொள்ள இவர்களுக்குப் 'பக்தி' என்ற சாதனம் கருவியாக அமைந்தது. தமிழகத்தின் ஊர்தோறும் சென்று பண்ணமைந்த பாடல்களால் பக்திப்பயிரை வளர்த்தனர். நாயன்மார் ஆழ்வார்களின் இடையறாத தொண்டினால் பக்தி இயக்கம் மிகப் பெரிய மக்கள் இயக்கமாக உருப்பெற்றது. பல்லவர் காலத்தில் மக்களை நாளும் கண்டு அவர்களோடு தொடர்புகொள்ளுபவர்களாக இவர்கள் விளங்கினர். மக்களிடம் நாயன்மார், ஆழ்வார்தம் செல்வாக்குப் பெருகியவுடன், ஆட்சித் தலைவர்கள் இவரை மதித்தனர்; மதமும் மாறினர். வடதமிழகத்தை ஆட்சி செய்த மகேந்திர வர்ம பல்லவனும், தென் தமிழகத்தை ஆட்சி செய்த கூன்பாண்டியனும் சமணத்தினின்று சைவத்திற்கு மாறினர். மதம் மாறியதோடமையாது இவர்தம் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நின்றமை கருதத்தக்கன. "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே"[3] என்னும் ஆழ்வாரின் கூற்றும் சிந்திக்கத் தக்கது. மக்கள் தலைவர்களாக விளங்கிய மன்னர்களை இறைவனோடு ஒப்பக் கருதும் நிலைக்கு உயர்த்தி, அவர்தம் ஆளுமையை வளர்த்த இவர்தம் திறம் நுணுகி நோக்கத்தக்கது.

இருபதாம் நூற்றாண்டில் திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி, செய்தி இதழ்கள் ஆகியனவும், நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கியங்களும், பிற்காலச் சோழர் காலத்தில் கோயில்களும், பல்லவர் காலத்தில் பக்தி இயக்கமும் (நாயன்மார், ஆழ்வார்) மக்கள் தொடர்பு சாதனமாக விளங்கியமை அறிய முடிகின்றது. இவ்வாறு மாறிவந்துள்ள மக்கள் தொடர்பு சாதனம் சங்க காலத்தில் எவ்வாறு இருந்தது என்பதையும், அச் சாதனத்தை அன்றைய ஆட்சித்தலைவர்கள் (சேர, சோழ, பாண்டிய வேந்தர்கள்) எவ்வாறு தங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதையும் ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

புலவர்கள்

பெரும்பாலான மக்களுடன் தொடர்புகொள்வதற்கு எச் சாதனம் பயன்படுகிறதோ, அச் சாதனம் மக்கள் தொடர்பு சாதனமாகக் கொள்ளப்படும். காலத்திற்கேற்ப, மக்களின் மனநிலைக்கேற்ப இச் சாதனம் மாறும். சங்க காலத்தில் புலமை சிறப்பாக மதிக்கப்பட்டது. புலமையுடையோருக்கு மக்களிடத்தில் பெருஞ்செல்வாக்கு இருந்தது. புலமையைப் பெறுவது அக்காலத்தில் எளிதாக இல்லை. ஏனைய

கல்வியைவிட இலக்கியக் கல்வி சிறப்பாக மதிக்கப்பட்டது. மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற்கல்வி பரம்பரை பரம்பரையாகக் குலவழித் தொடர்பால் கற்றுக்கொடுக்கப்பட்டு வந்தது. இலக்கியக் கல்வி ஆசிரியர் ஒருவரை அணுகி, அவருக்குப் பணிவிடை செய்தே கற்க வேண்டியிருந்தது. உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் கற்க வேண்டிய நிலையினை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்[4] கூறுவது கருதத்தக்கது. ஆட்சித் தலைவனே உற்றுழி உதவி, உறுபொருள் கொடுத்துக் கற்கச் சொல்வதால் அக்காலத்தில் முறையான கல்வி நிறுவனங்கள் (Educational Institutions) இல்லை எனக் கூறலாம். எனவே புலமை பெறுவது அரிதாக இருந்த காலத்தில் புலமையை மதிப்பதும், புலவரைப் போற்றுவதும் இயல்பு. இவ் வியல்பு சங்ககால மக்களிடம் சிறப்பாகக் காணப்படுகிறது.

புலவரின் பசியினைப் போக்கப் போர்க்கெழுகிறான் வீர னொருவன். பகைமேற் செல்லத் தன்னூர்க் கொல்லனை வேல்வடித்துக் கொடுக்கச் சொல்லும் அவ் வீரனின் நிலையினை,

"உண்ணா மருங்குல் காட்டித் தன்னூர்க்
கருங்கைக் கொல்லனை யிரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசி னெனவே"[5]

எனக் காட்டுகிறார் கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார். பாண்பசிப் பகைஞனாக விளங்கும் வீரனின் நிலை எண்ணத்தக்கது. வீரரைப் போன்று மக்களும் புலவரைப் போற்றும் பண்புடையவர்களாக விளங்கியதை ஆற்றுப்படை நூல்கள்[6] அறிவுறுத்துகின்றன. தங்களைப் புரக்கும் வள்ளல்களை நாடிச்செல்லும் இயல்பினராகப் புலவர்கள் விளங்கியதால், தமிழக ஊர்களைப்பற்றியும், அங்குள்ள மக்களைப் பற்றியும் அறிந்தவர்களாக இவர்கள் விளங்கினர். சங்ககாலத்தில் பொதுமக்களிடம் தொடர்புகொள்ளுவதற்கு இன்று இருப்பது போன்ற செய்தி இதழ், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் போன்ற மக்கள் தொடர்பு சாதனங்கள் இல்லை. சங்ககாலத்தில் மக்களிடம் நேரடித் தொடர்புகொண்டவர்களாகப் புலவர்களும் அவர்தம் பாடல்களும் விளங்கின. புலவரை நேரில் அறிந்தோ அல்லது அவர் பாடலைச் செவிவழி அறிந்தோ ஏதேனும் ஒரு நிலையில் புலவர்களை மக்கள் அறிந்திருந்தனர்.

புலவர்தம் வாழ்க்கைநிலை ஆளுவோரின் ஆளுமை வளர்ச்சிக்குப் பயன்படத்தக்க நிலையில் இயல்பாக அமைந்திருந்தது.

"வள்ளியோர்ப் படர்ந்து, புள்ளிற் போகி
நெடிய வென்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி
ஓம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை"[7]

எனக் கோவூர்கிழார் புலவர்களின் புலனழுக்கற்ற புலமை வாழ்வைப் புலப்படுத்தியுள்ளார். புலவர்களின் இயல்பினைப் பின்வருமாறு தொகுத்துரைக்கலாம்:

1. பழமரம் நாடிச் செல்லும் பறவைகள்போல் புரவலர்களை நாடிச் செல்லும் வாழ்க்கை
2. தாம் பெற்ற பெருவளத்தைச் சுற்றத்தாருக்கும் பிறருக்கும் ஈந்துவக்கும் இயல்பு[8]
3. தாம் பெற்றதைப் போன்று பிறரும் பெருவளம் பெறப் புரவலனிடம் ஆற்றுப்படுத்தும் பண்பு
4. தம் புலமையை மதித்துப் போற்றும் நிலைக்காக மன்னரிடமும் மக்களிடமும் விரும்பிச் செல்லும் நிலை

இப் பண்புகளை இயல்பாகப் புலவர்கள் பெற்றிருந்ததனால், தாங்கள் வாழ்ந்த காலத்தில் தங்களையும் அறியாமல் சிறந்த மக்கள் தொடர்பாளர்களாகப் புலவர்கள் விளங்கினர்.

"நாடாளும் தலைவர்கள் இலக்கியம் இயற்றும் புலவர்களையே விழுமியோராகப் போற்றி வந்தனர். அரசனை 'அவன்' என்றும், புலவரை 'அவர்' என்றும் சுட்டியதில் உள்ளது நாகரிக மதிப்பு; அரசியலில் தலையிட்டு அறிவுரை கூறியும் அறவுரை நல்கியும் அரசரின் போக்கைத் திருத்தும் உரிமை புலவர்க்கு இருந்தது"[9] என்னும் டாக்டர் மு.வ. அவர்களின் கருத்து, புலவர்கள் மக்களிடமும், ஆட்சித் தலைவர்களிடமும் பெற்றிருந்த செல்வாக்கைப் புலப்படுத்துகின்றது.

புலவர் பெற்றிருந்த செல்வாக்கு

புலவர்கள் ஆட்சித் தலைவர்களிடம் பெற்றிருந்த செல்வாக்குக் குறிப்பிடும்படியாக அமைந்துள்ளது. ஒரு நாட்டுக்குரிய தலைவன் அந்

நாட்டுக்குள் தன்னை எதிர்நின்று தடுப்பார் எவரும் இலாமையால், எவரும் கேளாதே, மாறாக எல்லோரும் எதிர்வந்து போற்ற இறுமாந்து தலைதூக்கிச் சென்று அரசவையில் புகுவதுபோல் புலவர்கள் அரசவையில் புகுவதை,

"உடையோர் போல விடையின்று குறுகிச்
செம்ம னாளவை யண்ணாந்து புகுதல்
எம்மன வாழ்க்கை யிரவலர்க் கெளிதே"[10]

எனப் புறநானூறு புகலுகிறது. முரசுகட்டிலில் துயின்ற புலவர் மோசிகீரனாரை வாள்கொண்டு துணியாது, கவரிகொண்டு வீசிநின்ற தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் செயலும்,[11] வேந்தனின் குடிப்பிறப்பைத் தாம் ஐயுறுவதாக அவ் வேந்தனின் முன்பே கூறுமளவிற்குப் புலவர் பெற்ற செல்வாக்கும்[12] கருதத்தக்கன. மலைய மான் மக்கள் இருவரையும் யானைக்காலின் கீழிட்டுக் கொல்லத் துணிந்த குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் செயலையும்,[13] இளந்தத்தன் என்ற புலவரை ஒற்றன் எனக் கருதிக் கொல்லத் துணிந்த நெடுங் கிள்ளியின் செயலையும்[14] தடுத்து நிறுத்திய கோவூர்கிழாரின் செல் வாக்குக் குறிப்பிடத்தக்கது.

புலவரைப் போற்றிய முறை

நாடாளும் வேந்தர்கள் புலவர்களைத் தங்களோடு ஒப்பக் கருதிப் போற்றியதைக் காணமுடிகிறது. தன்னை நாடிவந்த புலவருக்கு வேந்தன் கைகொடுத்து முகமன் கூறுவதையும்,[15] அன்பு மிகுதியால் புலவரும் வேந்தனும் ஒருவரை ஒருவர் மார்போடு மார்பு பொருந்தத் தழுவிக் கொள்ளும் வழக்கத்தையும்[16] அறிய முடிகிறது. புலவருக்கு வேண்டியன நல்கி,[17] அளவற்ற அன்பு பாராட்டி,[18] தம்மைவிட்டுப் பிரியும்போது ஏழடி புலவரின் பின்சென்று வழியனுப்பும் பண்பாட்டையும்[19] ஆட்சித் தலைவர்கள் பெற்றிருந்தனர்.

புலவர் பெற்ற பரிசு

ஆட்சித் தலைவர்களால் போற்றப்பட்ட புலவர்கள், வியக்கத்தக்க அளவிற்குப் பரிசில்களைப் பெற்றுள்ளனர். பட்டினப்பாலை பாடிய

கடியலூர் உருத்திரங்கண்ணனார்க்குச் சோழன் கரிகாற் பெருவளத்தான் பதினாறு நூறாயிரம் பொன் கொடுத்தமை;[20]

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் புலவர் குமட்டூர்க் கண்ணனாருக்கு உம்பற்காட்டுப் பகுதியில் உள்ள ஐந்நூறு ஊர்களைப் பிரமதாயமாகக் கொடுத்து, அதனொடு அமையாது முப்பத்தெட் டாண்டுகள் தென்னாட்டுள் வருவதனிற் பாகமும் கொடுத்தமை;[21]

"யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல் வேண்டும்" எனப் புலவர் பாலைக் கௌதமனார் பரிசில் வேண்ட, அவர் விரும்பியபடியே சேரன் பல்யானைச் செல்கெழு குட்டுவனும் பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டு ஒன்பது பெருவேள்வி வேட்பிக்கப் பத்தாவது வேள்வியிற் புலவரும் புலவரின் மனைவியும் காணாராயினமை;[22]

களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், புலவர் காப்பியாற்றுக் காப்பியனாருக்கு நாற்பது நூறாயிரம் பொன் கொடுத்துத் தான் ஆளுவதிற் பாகமும் கொடுத்தமை;[23]

கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் புலவர் பரணருக்குத் தன் உம்பற்காட்டு வருவாயினையும் தன் மகன் குட்டுவன் சேரலைத் தொல்கடனாகவும் கொடுத்தமை;[24]

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் புலவர் காக்கைபாடினியார் நச்செள்ளையாருக்கு, 'கலனணிக' என ஒன்பதுகாப் பொன்னும் நூறாயிரங் காணமும் கொடுத்துத் தன் பக்கத்துக் கொண்டமை;[25]

செல்வக் கடுங்கோ வாழியாதன் புலவர் கபிலருக்குச் சிறுபுறமென நூறாயிரங் காணங் கொடுத்து நன்றாவென்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற்கண்ட நாடெல்லாம் காட்டிக் கொடையாகக் கொடுத்தமை;[26]

தகடூரெறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை புலவர் அரிசில்கிழா ருக்குத் தன் ஆட்சியையே கொடுக்க, புலவர் அதனையேற்காது அமைச்சர் பதவியினை ஏற்றுக்கொண்டமை;[27]

குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை புலவர் பெருங்குன்றூர் கிழார் மருளுமாறு முப்பத்தாறாயிரம் காணங் கொடுத்து, அவர் அறியாமல் எண்ணற்காகா அருங்கல வெறுக்கையோடு பன்னூறாயிரம் பாற்பட

வகுத்துக் கொடுத்தமை;[28]

நெடுநாள் உயிர்வாழக் கூடிய நெல்லிக்கனியை ஔவைக்கு அதியன் ஈந்தமை;[29]

தன்னிடம் உள்ள முந்நூறு ஊர்களையும் புலவர்களுக்குப் பாரி ஈந்தமை;[30]

தன் தலையையே குமணன் தர முன்வந்தமை;[31]

நள்ளியென்பவன், தன் காட்டில் வேட்டமாடிய ஞான்று எதிர்வந்த புலவர்க்குத் தான் வேட்டையாடிய மானின் இறைச்சியைத் தீயில் வதக்கித் தந்து அவர்தம் கடும்பசியைப் போக்கியதோடமையாது, தன் முன்கைக் கடகங்களையும் ஈந்தமை; புலவர் பலமுறை கேட்டும் தன் பெயர், ஊர் முதலியவற்றைக் கூறாது சென்றமை.[32]

மேற்காட்டிய செய்திகள் ஆட்சித்தலைவரின் கொடைப் பண்பிற்குச் சான்று பகர்வன. பரிசிலைப் பெறுபவரே தாம் பெற்ற பரிசினைக் கண்டு வியப்புறும் அளவிற்குப் பரிசில் நல்கும் ஆட்சித் தலைவரின் செயல் எண்ணத்தக்கது.

புலவர் பணி

பெரும்பொருளையும், பெருஞ்சிறப்பையும் ஒருசேரப் பெற்ற புல்வர்கள், ஆட்சித் தலைவர்களுக்காகச் சில பணிகளையும் செய்தனர். ஆட்சித் தலைவர்கள் நிலைத்திருப்பதற்கு ஒற்றுமையை ஏற்படுத்த முயன்றனர்;[33] ஒற்றுமை முயற்சி பயனற்றபொழுது தூது சென்று போரைத் தவிர்க்க முனைந்தனர்;[34] தூது பயனற்ற பொழுது பகையரசரைத் தெருட்டினர்;[35] போரிடுவது தவிர்க்க இயலாத பொழுது படைத்துணை சேர்த்தனர்;[36] போர்க்காலங்களில் படையுடன் சென்று வீரர்களுக்கு ஊக்கம் ஊட்டினர்;[37] போர்களில் வேந்தரைக் காத்தனர்;[38] போருக்குப் பின்னும் காக்க முனைந்தனர்.[39] 'புலமை' என்ற எல்லையைத் தாண்டி ஆட்சித் தலைவர்களுக்காகப் புலவர்கள் செய்த பணிகள் நுணுகி நோக்கத்தக்கன.

"அவர்களிடமிருந்த எல்லாக் குணங்களிலும் செய்நன்றியறிதல் எனுங் குணம் மிகச் சிறப்பாக விளங்கியது" எனும் டாக்டர் உ.வே. சாமிநாதையரின்[40] கூற்றுப் புலவரின் பணிக்குச் சான்று கூறுவதாக அமைந்துள்ளது.

ஆளுமைத்திறன்

சங்ககாலச் சமுதாய நிலையை ஆழ்ந்து நோக்குவார்க்குப் புலவர் மக்களோடு கொண்டிருந்த தொடர்பின் நெருக்கம் புலப்படும். மக்களிடத்து நெருங்கிய தொடர்புடையோராய் விளங்கிய புலவர்களை அக்கால ஆட்சித் தலைவர்கள், அவர்களது புலமைத்திறத்தை மட்டுமே கருத்திற்கொண்டு அவர்களைப் பேணவில்லை. தங்கள் ஆட்சிச் சிறப்பை மக்களிடத்துப் பரப்பவும், தங்களது புகழை நிலைநிறுத்திக் கொள்ளவும். புலவர்களுடைய பாடல்கள் சிறந்த வெளிப்பாட்டுச் சாதனமாக விளங்கியமையாலும், ஆளுவோர் புலவர்களைப் புரந்தனர். சங்ககாலச் சமுதாய அமைப்பை நன்கு உணர்ந்து ஆட்சித் தலைவர்கள் செயலாற்றியமையால் ஆட்சித்திறனில் தங்களது ஆளுமையை நிலைநாட்ட முடிந்தது.

புலவர்கள் பலர் வறுமையில் வாடியதைச் சங்க இலக்கியங்கள்[41] காட்டுகின்றன. வறுமையில் வாடிய புலவர்களுக்குப் பெருஞ்செல்வமும், சிறப்பும், செல்வாக்கும் ஆட்சித் தலைவர்களால் அளிக்கப்படும்பொழுது புலவர்களின் உள்ளத்தில் நன்றியுணர்ச்சி நிறைவது இயற்கை. இரக்க உணர்வு, மக்கள்பால் அன்பு, உணர்வுவழிப்பட்ட வாழ்க்கை முதலிய பண்பு நலன்களால் சிறந்து விளங்கும் புலவர் பெருமக்கள் நன்றி பாராட்டுவது இயல்பு. தம்மைப் புரந்த புரவலர்களைப் போற்றிப் புலவர்கள் புகழ்வதும், புகழ்ச்சி பாடலாக உருப்பெறுவதும் இயற்கை. இயல்பாகப் புலவர்களுக்கு அமைந்துவிட்ட வாழ்க்கைமுறையால் அவர் பாடல்கள் மக்களிடம் செல்வாக்குப் பெறுவதும், அதனடிப்படையில் ஆட்சித்தலைவர்களின் புகழ் மக்களிடம் பரவுவதும், இயற்கையாக நடைபெற்று வந்தன. இந்நிலையினைக் கூறவந்த அறிஞர்கள் புலவர்கள் ஆளுவோருக்காகப் பிரச்சாரம் செய்தனர்[42] எனக் கருத்தறிவித்தனர். ஔவையார், கபிலர் போன்று அரசவைப் புலவர்களாக வீற்றிருந்த மிகச் சிலர்மட்டும், தங்களைப் புரந்த புரவலர் புகழ் பரவ முயற்சி மேற்கொண்டனர் எனக் கூற இடமிருக்கிறது. மிகப் பெரும்பாலான புலவர்கள் நன்றி உணர்ச்சி அடிப்படையிலேதான் பாடல்கள் புனைந்திருப்பர். ஊர் ஊராகச் சென்று மக்களையும் மன்னனையும் காணும் இயல்பையும், மக்களிடத்தில் மதிப்பையும் பெற்று விளங்கிய புலவர் பெருமக்களை ஆதரித்து அன்புகாட்டித் தங்களுக்குப் பயன்படும்படியாகச் செய்துகொண்ட சங்ககால ஆட்சித்தலைவரின் ஆளுமைத்திறன் குறிப்பிடத்தக்கது.

"மன்னருக்கும் புலவருக்குமிடையிலான தொடர்புக்குப் புலவருடைய பொருளாதார நிலை ஒன்றே காரணம் என நிறுவ முடியாது. வேறு சில காரணங்களும் காட்டலாம். பூர்வீகச் சமுதாயங்களிற் புலவர்களே அறிஞர்களாகவும் விளங்குவதால் அவர்களுக்கும் அவர்கள் வாக்குக்கும் மன்னர்களிடையிலும் மக்களிடையிலும் செல்வாக்குக் காணப்படுவதுண்டு"[43] என்னும் கருத்து எண்ணத்தக்கது.

ஆலூர் மூலங்கிழாரும்,[44] வடம வண்ணக்கன் பேரிசாத்தனாரும்[45] பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனின் ஈயாச் செய்கையைக் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் பாண்டியன் நன்மாறன் மதுரை மருதனிள நாகனாராலும்[46] மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனாராலும்,[47] காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனாராலும்[48] பாராட்டப்பட்டிருக்கிறான். மூன்று புலவர்களின் பாராட்டினைப் பெற்றுத் திகழும் பாண்டியன் நன்மாறன், ஆலூர் மூலங்கிழாருக்கும், வடமவண்ணக்கன் பேரிசாத்தனாருக்கும் பரிசில் கொடாதொழிந்ததன் காரணம் சிந்திக்கத்தக்கது. புலவர் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் சோழன் நலங்கிள்ளியிடம், நின்பால் வருந்திவந்த புலவரின் தகுதி, தகுதியின்மைகளை அறிந்து வழங்குவதைவிட, வந்தவரின் வாடி வதங்கிய வயிறு ஒன்றையே நோக்கி அருள வேண்டும் என்பதை,

"வல்லா ராயினும் வல்லுந ராயினும்
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
அருள வல்லை யாகுமதி"[49]

எனக் கூறுவது ஆழ்ந்து நோக்கத்தக்கது. தகுதிக்கேற்பப் பரிசில்கள் நல்க வேண்டும் என்ற கருத்தும் அக்காலத்தில் அறிவிக்கப்பட்டிருப்பதை அறியமுடிகிறது. தன்னை நாடிவரும் பரிசிலருக்கு அவரவர் தகுதியறிந்து பரிசில் நல்க வேண்டும் என்பதை,

"ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசில் மாக்கள்
வரிசை யறிதலோ வரிதே பெரிதும்
ஈத லெளிதே மாவண் டோன்றல்
அதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே"[50]

எனக் கபிலர் மலையமான் திருமுடிக்காரியிடம் கூறுவது ஆழ்ந்து எண்ணத்தக்கது. தன்னிடம் வருவோரின் தகுதியறியாத வேந்தனால் புகழ்பெற்றுச் சிறக்க முடியாது என்ற கருத்தும் கூறப்பெற்றுள்ளது. தகுதியறியாதது மட்டுமன்றி, காணாது ஈந்த பரிசிலை மறுத்து,

"காணா தீந்த விப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசில் னல்லேன்"[51]

என்ற குரலும் ஒங்கி ஒலிக்கத்தான் செய்கிறது. அன்போடு மதித்துக் கொடுத்தால் குன்றிமணியளவு பொருளையும் பெற்றுக்கொள்வதாகப் புலவர் கூறுகிறார்.

மக்கள் செல்வாக்குப் பெற்றுத் திகழும் புலவரால் மட்டுமே இவ்வாறு கூறமுடியும். இன்றும் பல இலட்சக்கணக்கான படிகள் விற்பனையாகும் செய்தி இதழ்கள் ஆட்சித்தலைவர்களின் தவறான போக்கைத் துணிவோடு எடுத்துரைப்பதைக் காணலாம். இங்கு மூன்று நிலைகளைக் காணமுடிகிறது:

1. மூன்று புலவர்களைப் போற்றிப் புரந்த பாண்டியன் இரண்டு புலவர்களைப் போற்றிப் புரக்கவில்லை;
2. ஒரு புலவர் தகுதியறிந்து பரிசில் வழங்க வேண்டும் என்றும், மற்றொருவர் தகுதியை நோக்காது உண்ணாத மருங்குல் நோக்கிப் பரிசில் வழங்குக எனவும் உரைப்பதை உணர முடிகிறது.
3. புலவரைக் காணாது பரிசில்தரும் நிலை ஆய்விற்குரியது.

புலவர் பெருஞ்சித்திரனாருக்கு அதியமான் நெடுமானஞ்சி காணாது பரிசில் அளித்த செயல் எண்ணத்தக்கது. பாரிக்குக் கபிலரும், அதியனுக்கு ஔவையும் ஆட்சிநிலைகளில் உறுதுணையாயிருந்தது போன்று பெருஞ்சித்திரனார் பணிபுரியவில்லையோ என எண்ணத் தோன்றுகிறது. இம் மூன்று நிலைகளும், ஆட்சித்தலைவர்கள் பயன்பாட்டு அடிப்படையில் புலவர்களைப் புரந்தனர் எனக் கருத இடந்தருகின்றன. மேற்குறிப்பிட்ட சான்றுகள் அனைத்தையும் ஒப்பிட்டுக் காணும்பொழுது, மக்களோடு இடையறாது தொடர்புடையவர்களாகவும் மக்களால் மதிக்கப்படுபவர்களாகவும் விளங்கிய புலவர் பெருமக்களைச் சங்ககால ஆட்சித்தலைவர்கள் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டார்கள் எனக் கூற இடமிருக்கிறது.

பிற நிலைகளில் ஆளுமைத்திறன்

சங்ககால ஆட்சித் தலைவர்கள் தங்கள் ஆளுமையை (Personality Development) பொதுமக்கள் தொடர்பு சாதனத்தின்வழி எவ்வாறு வளர்த்துக்கொண்டார்கள் என்பதை விளக்க இக் கட்டுரை முயன்றிருக்கிறது. மக்கள் தொடர்பு சாதனம் என்ற ஒரு நிலையில்மட்டுமே ஆட்சித்தலைவரின் ஆளுமைத்திறன் ஆராயப்பட்டுள்ளது. சங்ககால ஆட்சித்தலைவர்கள் வேறுபல நிலைகளிலும் தங்களது ஆளுமையை வளர்த்துக்கொண்டுள்ளார்கள். அந் நிலைகளையும், அவற்றை ஆராய வேண்டிய தேவையையும் பின்வருமாறு சுட்டலாம்:

1. புலமை அக்காலத்தில் மிகப் பெரிய தொடர்பு சாதனமாகப் பயன்பட்டதால், ஆட்சித்தலைவர்களும் புலமையாளராக விளங்க முயன்றனர்; விளங்கினர். முப்பது சேரவேந்தரில் பதின்மரும், இருபத்து நான்கு சோழவேந்தரில் ஐவரும், இருபத்துநான்கு பாண்டிய வேந்தரில் பதின்மூன்று பேரும் புலமையாளராக விளங்கிப் பாடல் புனைந்துள்ளனர்.[52] முல்லைக்கலி பாடிய சோழன் நல்லுருத்திரனைப் புலவர் எவரும் போற்றிப் பாடவில்லை. பாலைக்கலியையும் பாலைத் திணையமைந்த பாடல்களையும் மிகச் சிறப்பாகப் பாடிய பாலை பாடிய பெருங்கடுக்கோவைப் பேய்மகள் இளவெயினி[53] என்ற பெண்பாற் புலவர் மட்டுமே பாடியுள்ளார். பெருங்கடுங்கோ தொடர்பாகக் கிடைக்கும் இவ்வொரு புறப்பாடலும் பரிசில்கடாநிலைத் துறையில் அமைந்திருப்பது எண்ணத்தக்கது. சிறந்த புலவர்களாக விளங்கிய இவர்களைப் புலவர்கள் போற்றாததற்குரிய காரணம் புலப்படவில்லை. மக்களிடம் செல்வாக்குப் பெறுவதற்கும் தொடர்புகொள்ளுவதற்கும் சிறந்த நிலையில் பயன்பட்ட புலமையை இவர்களே சிறப்பாகப் பெற்றிருந்ததனால் புலவர்களைப் போற்ற வேண்டிய தேவை இவர்களுக்கு ஏற்படாமல் போயிற்றா என்பது போன்ற எண்ணங்கள் எழுகின்றன. இவை மேலும் ஆழ்ந்து ஆராய்தற்குரியன.

2. கடையெழு வள்ளல்கள் எனக் குறிப்பிடப்படுவோர் அனைவருமே குறுநில மன்னர்கள். சேர, சோழ, பாண்டியர் மரபிலே வந்த வேந்தர் ஒருவரும் வள்ளல்களாக எழுவர் பட்டியலில் இடம்பெறவில்லை. இவ் வள்ளல்களை மிகுதியான புலவர்கள் போற்றியதையும் ஔவை, கபிலர் போன்றவர்கள் அரசவைப் புலவராக அமர்ந்து ஆட்சிநிலைக்கு அனைத்து நிலைகளிலும் உறுதுணை புரிந்ததையும் அறியமுடிகிறது. இதற்கான

காரணங்கள் ஆழ்ந்து ஆராய்தற்குரியன. குறுநில மன்னர்கள் மிகுதியான புலவர்களைப் போற்றுவதும், தங்களுடனேயே புலவர்களை வைத்துக்கொள்வதும் காலத்தின் கட்டாயத் தேவையோ என எண்ணத் தோன்றுகிறது. இதற்குரிய காரணங்கள் ஆராயப்படுமானால் குறுநில மன்னர்களின் ஆளுமைத் திறனும், அக்கால அரசியல் நிலையும் நன்கு புலப்படும். தமிழக வரலாறு உணர்த்தும் ஆளுவோரின் ஆளுமைத்திறன் வளர்ச்சி அறிஞர்களின் ஆய்விற்கு அரிய பொருள்.

நிறைவுரை

இரக்கம், அன்பு, ஈத்துவக்கும் இயல்பு, நன்றியுணர்வு ஆகிய பண்புகளையும் தங்களைப் புரந்த புரவலர்களை நாடிச் செல்லும் வாழ்க்கையையும், இயல்பாகப் பெற்றுத் தங்கள் காலச் சமுதாய அமைப்பில் சிறந்த மக்கள் தொடர்பாளர்களாகப் புலவர்கள் விளங்கினர். எனவே, சங்ககால ஆட்சியாளர் தங்கள் ஆளுமை வளர்ச்சிக்குப் புலவர்களைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

சான்றெண் விளக்கம்

1. Peter Balu, '*The Government and Feudal Defendence*' Feudal Society, (Chicago, 1939), pp.316 - 2
2. Herbert Blumer, *New Outline of the Principles of Sociology*, (New York, 1946), pp.167-222
3. சடகோபர், திருவாய்மொழி, 4,4,8
4. புறம். 183
5. புறம். 180:11–13
6. சிறுபாண். 187–195
7. புறம். 47
8. புறம். 163
9. மா.ரா.போ.குருசாமி, சங்ககாலம், முன்னுரை
10. புறம். 54:2–4
11. புறம். 50
12. புறம். 43
13. புறம். 46
14. புறம். 47

15. புறம். 14
16. புறம். 19, 151
17. பொருநர். 79–96
18. பொருநர். 150–51
19. பொருநர். 166
20. கலிங்கத்துப் பரணி, இராசபாரம்பரியம், 199
21. பதிற்றுப்பத்து, பதிகம், 2ஆம் பத்து
22. பதிற்றுப்பத்து, பதிகம், 3ஆம் பத்து
23. பதிற்றுப்பத்து, பதிகம், 4ஆம் பத்து
24. பதிற்றுப்பத்து, பதிகம், 5ஆம் பத்து
25. பதிற்றுப்பத்து, பதிகம், 6ஆம் பத்து
26. பதிற்றுப்பத்து, பதிகம், 7ஆம் பத்து
27. பதிற்றுப்பத்து, பதிகம், 8ஆம் பத்து
28. பதிற்றுப்பத்து, பதிகம், 9ஆம் பத்து
29. புறம். 91; சிறுபாண். 99–103
30. ஷெ 110
31. ஷெ 165
32. ஷெ 150
33. ஷெ 45
34. ஷெ 95
35. ஷெ 87,88,89,109
36. ஷெ 53
37. ஷெ 87; குஞ்சன் பிள்ளை, பண்டைய கேரளம், ப.45
38. ஷெ 13
39. ஷெ 74, களவழி நாற்பது
40. உ.வே. சாமிநாதையர், சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும், ப.17
41. புறம்.159, 160
42. க. கைலாசபதி, பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும் (சென்னை, 1978), ப.3. கோ. கேசவன், மண்ணும் மனித உறவுகளும், (சென்னை, 1979), ப.78
43. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், (சென்னை, 1978)
44. புறம். 196

45. ஷெ 198
46. ஷெ 55
47. ஷெ 56
48. ஷெ 57
49. ஷெ 27:15–17
50. ஷெ 121
51. ஷெ 208:6–7
52. அரங்க. இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர், பிஎச்.டி.பட்ட ஆய்வுரை, 1982, ப.142.
53. புறம்.11

39

தாழ்த்தப்பட்டோர் நலனுக்குச் சௌந்தரபாண்டியனார் ஆற்றிய தொண்டு

பு. இராசதுரை

"ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, வருணமுறை தெற்கின்கண்ண திராவிடத்திற்குப் பிற்காலத்தில் வந்தது; ஏனென்றால் பழைய தமிழ் இலக்கியங்களில் ஒன்றையொன்று ஆட்கொள்ளுதலறியாத இனக் குழுக்களாகச் சமுதாயம் பிரிவுண்டிருந்தது. தென்னிந்தியப் பார்ப்பனர் தம் சடங்குகளை நிகழ்த்துவதில் தீவிரமடையும் வரையிலும், தீண்டத் தகாதார் வடபுலத்தினைக் காட்டிலும் தாழ்வடையும் வரையிலும் பின்வந்த நூற்றாண்டுகள் சாதிகள் படிப்படியாக வலுவடைவதையும் கண்டன"[1] என்பார் பேராசிரியர் பாஷாம்.

வருண தருமம் தமிழகத்தில் இடம்பெறவே உயர்மட்டத்திலிருந்த பார்ப்பனர் மட்டுமே கல்வி கற்கவும், அரசு அலுவல் பார்க்கவும், தகுதியை வளர்த்துக்கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டது. பிறர் இவற்றைப் பெறவியல வில்லை.

1919ஆம் ஆண்டைய மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் பார்ப்பனரல்லாதாரை விழிப்படையச் செய்தது. இச் சமுதாயங்கள் சட்டமன்றத்திலும், அரசியல் பணிகளிலும், கல்விநிலையங்களிலும் நுழைய ஆர்வம் காட்டின; இதற்காகத் தம் சமூக அமைப்புகளை நிறுவிக்கொண்டு உரிமைகளைத் கோரத் தொடங்கின. 1916–ல் தோன்றிய நீதிக்கட்சி

பார்ப்பனரல்லாச் சமுதாயங்கள் அனைத்தின் மொத்த நலன்களுக்காக இத் துறையில் செயல்பட முனைந்தது.

ஊ. பு. அ. சௌந்தரபாண்டியன், நாடார் சமுதாயத்தின் பிரதிநிதியாகவும் நீதிக்கட்சி உறுப்பினராகவும் 1921–ல் சென்னை லெஜிஸ்லேட்டிவ் கவுன்சிலில் இடம்பெற்றார்.

இவர் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு ஆற்றிய பணிகள் சிறப்புடையன. சமுதாயங்களின் இன்றுள்ள நிலைமைக்கும் 1920களில் இருந்த நிலைமைக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. அக்காலத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் உயர்சாதி மக்கள் வாழும் பகுதியில் நடந்து செல்லக்கூடாது எனத் தடை இருந்தது. பொதுச்சத்திரங்கள், கிணறுகள், கல்விநிலையங்கள் இவற்றை அவர்கள் பயன்படுத்துதல் இயலாது. தாழ்த்தப்பட்டோர் மீதிருந்த இச் சமூகத் தடைகளை உடைத்தெறியச் சௌந்தரபாண்டியனார் முயன்றார்; இடைவிடாது செயலாற்றினார்.

1921 ஆகஸ்டு நான்காம் நாள் சென்னை லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் கூட்டத்தில் ஒரு தீர்மானத்தை அவர் முன்மொழிந்தார்.

> "பொதுச் சாலைகள், பொதுச் சத்திரங்கள், கிணறுகள், பள்ளிகள் முதலியவற்றை மக்கள் சாதி வேறுபாடின்றிப் பயன்படுத்துவதில் எவ்விதத் தடைசெய்தாலும் தண்டனை அளிப்பதற்கான சட்டத்தை வெகு விரைவில் கொண்டுவருமாறு அரசாங்கத்திற்கு இக் கவுன்சில் சிபாரிசு செய்கிறது"[2]

என்பதே அது.

இத் தீர்மானத்தை முன்மொழிந்த அவர் குறிப்பிட்டவை:

> "..... தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின்மீது சுமத்தப்பட்டுள்ள இந்த அவமானம் தொன்மையான நாகரிகம், பண்பாடு, தத்துவம் இவற்றால் பெருமை பேசும் மக்கள் வாழ்கின்ற முழு இந்தியாவுக்கும் வெட்கம் தரக்கூடியதாகும்....இந்த மண்ணில் வாழும் சாதாரண – சுயமரியாதை உடைய மக்களில் ஒரு பிரிவினர் – இராஜ்யத்தின் விசுவாசமுள்ள வல்லரணாக விளங்குபவர்கள் – நம் நாட்டிலேயே குடிமக்களுக்குரிய அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளனர் – அல்ல – அடிமைகளாகவும் குறிக்கப்பட்டுவிட்டார்கள். பொதுச்சாலைகளில் தம் விருப்பம்போல் நடக்கவும், பொதுக்கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைக்கவும், பொதுச்சத்திரங்களைப் பயன்படுத்தவும், பொதுப்

பள்ளிகளில் படிக்கவும் – இன்னும் எதுவெல்லாம் இல்லை – அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. கூற இயலாத இந்த வேதனைகளைத் தீர எண்ணிப் பார்த்தால் தலையே சுற்றும்....''

என்பன ஆகும்.

தாழ்த்தப்பட்டோருக்காக இவர் கொடுத்த குரல், சட்டமன்றத்தில் இருந்த அனைவர் கருத்தையும் ஈர்த்தது. மிகப் பலர் இவர் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர். இத் தீர்மானமும் இதனையொட்டி எழுந்த விவாதங்களும் தமிழச் சமூகஇயல் வரலாற்றிலும் தாழ்த்தப்பட்டோர் வளர்ச்சி வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க பகுதிகளாகும்.

தாழ்த்தப்பட்டோர் வளம்பெற அவர்கட்கு விளைநிலங்களை அளிப்பதற்கு அக்கால ரெவினியூ போர்டு ஒரு நிலைஆணை பிறப்பித்திருந்தது. அந் நிலைஆணை செவ்வனே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றதா என்பதை அறிவதற்காகவும் இந்த ஆணையின் பயன் தாழ்த்தப்பட்டவர்களை அடையவேண்டும் என்பதற்காகவும் 21–2–1921 அன்று,

''ரெவின்யூ போர்டின் நிலைஆணைப்படி மதுரை மாவட்டத்தில் பஞ்சமர்கட்கு எத்தனை ஏக்கர் நிலங்கள் அங்குள்ள ரெவின்யூ ஆபீசால் ஒதுக்கப்பட்டன'' என்ற வினாவை எழுப்பி, அதற்கு ''1920 டிசம்பர் முடிய 140 ஏக்கர்கள்'' என்ற விடையையும் பெற்றார்.[3]

இன்னல் நீக்கல்

30–1–1931 அன்று இவர் முன்மொழிந்த தீர்மானம் அந்நாளைய சமுதாயப் போக்கினை நன்கு எடுத்துக்காட்டுகின்றது:

> ''இராமநாதபுரம் மாவட்ட ஆதிதிராவிட மஹாஜன சங்கத்தின் தலைவர் அரசாங்கத்திற்குப் படைத்த அறிக்கையில் கூறப்படுகின்றபடி இராமநாதபுரம் மாவட்டம் தேவகோட்டை சப்டிவிஷனிலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்புகள் கொடுமைப்படுத்தப்பட்டமையை அலசி ஆராயவும் அறிக்கை அனுப்பவும் அலுவலர்கள், அலுவலர்கள் அல்லாதார் இருவரும் அடங்கிய ஒரு குழுவை நியமிக்குமாறு அரசாங்கத்திற்கு இக் கவுன்சில் சிபாரிசு செய்கிறது''

என்ற தீர்மானத்தை அவர் முன்மொழிந்தார். அப்போது அவர் குறிப்பிட்டவற்றுள் சில பகுதிகள்:

".....உயர்சாதியினர் என்று அழைக்கப்படுவோரிடமிருந்து தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மோசமாக நடத்தப்படுவதற்கு இந்த மாகாணத்தில் நடைமுறையில் உள்ள சமூக வழக்கங்கள்தான் ஒரே காரணம் என்பதை இந்த அவையின் பார்வைக்கு நான் கொணரவேண்டும்...உண்மையில் ஆதிதிராவிடர்களைக் கொடுமைப் படுத்துவது என்பது குறிப்பாக மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. எனவே, நாம் இத்தகைய கொடுமைக்கு ஒரு முடிவுகட்ட விரும்புகிறோம். இப்போது நிகழ்ந்திருப்பது போன்ற நிகழ்ச்சிகள் இந்த மரியாதைக்கு உரிய அவையின் பார்வைக்குக் கொணரப்பட்ட பின்னரும் தொடருமானால், இந்த மாகாணத்தின் மக்கட்டொகையில் தள்ளிவிடக்கூடியதல்லாத விழுக்காட்டினராக வாழும் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளில் நாம் தவறியவர்களாகிவிடுவோம்....."

இந்தத் தீர்மானம் அவையோரின் உளத்தைப் பிணித்தது. பலர் தீர்மானத்தை வழிமொழிந்து நீண்ட உரைகள் ஆற்றினர். தீர்மானம் நிறைவேறியது.

இந்தக் கொடிய நிகழ்ச்சிபற்றிச் சௌந்தரபாண்டியனார் 18, 23–3–1931 [5] நாள்களில் வினாக்கள் விடுத்தும் பதில் பெற்றார்.[6]

வரவுசெலவுதிட்ட விவாதம்

1927–28ஆம் ஆண்டிற்கான வரவுசெலவு திட்டத்தின் மீதான பொது விவாதத்தில் 5–3–1927 அன்று சௌந்தரபாண்டியனர் ஓர் உரையாற்றினார். அவ் வுரையிலும் தாழ்த்தப்பட்டோர் அவலநிலை அவரால் சுட்டிக்காட்டப்பெற்றது. அவர் உரை:

".....முடிவாக, அய்யா, நேற்று மாண்புமிக்க என் நண்பர் திரு. சகஜானந்தாவின் சோகமான பரிதாபத்திற்குரிய கோரிக்கையை நான் கவனித்துக்கொண்டிருந்தேன். தாழ்த்தப்பட்ட மக்களின் நலத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டுள்ளவன் என்ற முறையில் அவர் கோரிக்கையின் பொருண்மையை என்னால் சிறப்பாகப் பாராட்ட முடியும். அய்யா, உயர்ந்த சாதியினர் என்று சொல்லப்படுபவர்கள் சொல்லளவில் வெளிப்படையாக இருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்கள்மீது வெறுப்பே கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இரும்பு இதயம் கொண்டவர்கள். அவர்கள் நிகழ்ந்தவற்றிற்கு வருந்தாதவர்கள். சட்டங்களும் ஒழுகலாறுகளும் திரிக்கப்பட்டு இது காரணமாக அவர்களைக் கொடுமைப்படுத்த வழிபெறுகின்றனர். ஆனால், அய்யா, இந்த நாட்டின்

எதிர்காலம் தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்துடன் காரணங்காட்ட இயலாதபடி கட்டுண்டு கிடக்கிறது என்பதை அவர்கள் உணரட்டும். அவர்கள் முன்னேற்றமடையாவிட்டால் உண்மையான முன்னேற்றம் ஏற்படாது. உயர்சாதியினர் என்று அழைக்கப்படுபவர்கள் அனைவரும் அவர்தம் செயல்களிலுள்ள அநீதியை உணர்வார்கள் என்றும், கடவுளின் மைந்தர்கள் என்ற நோக்கில் அவர்கட்கு உரிய சகோதர அன்பையும் சமத்துவத்தையும் வழங்குவார்கள் என்றும் நம்புகிறேன். நாடு ஒன்றுபட்டு எழட்டும்; இப்போது அவமதிப்பு, இழிவு இவற்றின் ஆழத்தில் உள்ள அவர்கள் மேல் தூக்கிவிடப்படட்டும்....." [7]

சுயமரியாதை இயக்கத் தலைவர்

1926–ல் உருவான சுயமரியாதை இயக்கம் 1929ஆம் ஆண்டில் செங்கல்பட்டு நகரில் தன் முதல் மாநாட்டை நடத்தியது. சுயமரியாதை இயக்கத்தை நிறுவிய ஈ.வே. இராமசாமி அம் மாநாட்டிற்குச் சௌந்தர பாண்டியனாரைத் தலைவராக முன்மொழிந்தார். சௌந்தரபாண்டியனார் தம் தலைமை உரையில் தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவித்து வந்த கொடுமைகளை எடுத்துக்காட்டினார்.

அவரது தலைமை உரைமீது தன் பாராட்டுரையைத் "திராவிடன்" இதழ் தன் தலையங்கத்தில் "சௌந்தரபாண்டியம் சொற்பெருக்கு" என்ற தலைப்பில் தந்தது.[8] அதன் ஒரு பகுதி வருமாறு:

திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் நம்மனோரின் தற்கால நிலையைக் குறித்து,

"....அடுத்தபடியாக நம்முடன் பிறந்து நம்மைச் சதா அண்டிப் பிழைத்து வரும் ஆதிதிராவிட மக்களின் நிலைமையைக் கவனித்தால் இன்னுமொரு துக்க சம்பவமாக விரியும். அவர்களுக்குப் பொது ரஸ்தாக்களில் நடக்கச் சுதந்திரமில்லை; குளங்களில் குளிக்கவும் தண்ணீர் எடுக்கவும் சுதந்திரமில்லை; கலாசாலை சென்று கல்வி பயின்று அஞ்ஞான இருள் நீக்க மார்க்கமில்லை; கடவுள் சன்னதியென்று சொல்லிக்கொள்ளும் கோவில்களில் சென்று ஆத்மசாந்தியடைய மார்க்கமில்லை; பார்ப்பன அக்கிரகாரங்களில் கட்டப்பட்டிருக்கும் பாடசாலை, அஞ்சல் நிலையங்களில் செல்வதற்கு அனுமதியில்லை; அந்தோ! அவர்கள் தற்காலப் பாழ்நிலையை உன்னும்போதெல்லாம் நம் மனம் உருகுகிறது; கண்ணீர் கலங்குகிறது; ஆவி துடிக்கின்றது; நம் நாட்டிற்கு விடுதலைநாள் அண்மையில் இல்லையென்ற சங்கை எழுகின்றது. சுருங்கக்கூறின் நாம் தங்களை

மேலான ஜாதியெனச் சொல்லிக்கொள்ளும் ஒரு கூட்டத்தினருக்குச் சமுதாய அடிமைகளாகவும் ஆங்கிலேயருக்கு அரசியல் அடிமைகளாகவும் இருக்கின்றோம். அரசியல் அடிமைப்பிணி நம்மையொருபுறம் வாட்டுகிறது. சமூக விலங்கு நம்மை இன்னொருபுறம் இறுக்குகின்றது. இவை இரண்டிலும் சமூக விலங்கை வேரறக் களையவேண்டியதே முதன்முதலாக நம்முடைய முக்கியக் கடமையென நான் அபிப்பிராயப்படுகிறேன்.....”

என்று படிப்போர் கண்களிலிருந்து பரிதாபக் கண்ணீர் தாரைதாரையாக ஒழுகுமாறு குறிப்பிடுகின்றார். திரு. சௌந்தரபாண்டியன் சொல்லியிருப்பதில் எதைப் பொய்யென்று யாரால் சொல்லமுடியும்? என்று உளமாரப் பாராட்டி எழுதியது சனகசங்கர கண்ணப்பரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த நீதிக்கட்சி ஏடான ‘திராவிடன்’.

கேரளத்தில் தொண்டு

தமிழ்நாட்டில் போலவே கேரளத்திலும் தாழ்த்தப்பட்டவர்களை உயர்சாதியினர் கொடுமைப்படுத்தி வந்தனர். ஈ.வே.இராமசாமியின் வைக்கம் போராட்டம் இதற்குச் சான்றாக நிற்கின்றது.

தாழ்த்தப்பட்டுக் கிடந்த தீயர், நாடார், பில்லவர் சமுதாய மக்களின் மாநாடு 1930 மார்ச்சு 16ஆம் நாள் தலைச்சேரியில் நடைபெற்றது. தொட்டியத்துக் கிருஷ்ணன், எம்.எல்.சி., அம் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்தார். சௌந்தரபாண்டியனார் இம் மாநாட்டிற்கு ஈ.வே.இராமசாமி, விருதுநகர் எம்.எஸ். பெரியசாமி நாடார் ஆகிய இருவருடன் சென்றார். அம் மாநாட்டில் தலைமைதாங்கி அரியதோர் உரை நிகழ்த்தினார். அத் தலைமை உரையில்,

“.....உங்கள் சாதியைப்பற்றிய கதைகளில் நீங்கள் பாளை சீவவேண்டுவதும் கட்குடிக்கவேண்டுவதும் கடவுள் ஆணை என்று குறிப்பிட்டிருப்பதாகக் கேட்டு ஆச்சரியப்படுகிறேன். இதைவிட முட்டாள்தனமானது வேறு எதுவும் இருக்கமுடியாது. உண்மையில் மதத்தினால் ஏதாவது அனுகூலம் ஏற்பட வேண்டுமானால் சன சமூகத்தை அது கண்ணியப்படுத்தக் கூடியதாயிருத்தல் வேண்டும். மதம் குடிக்கத் தூண்டுவதாயிருந்தாலும், அல்லது குடிக்கும் வஸ்துக்களை உண்டாக்குவதற்கு ஆதரவளிப்பதாயிருந்தாலும் அத்தகைய மதத்தை ஒழித்தாக வேண்டும். தீயர்கள் சக்தி பூஜை செய்வதாயும் அதற்குச் சாராயமே உகந்த பூஜை சாமான் என்றும் படித்திருக்கிறேன். இதைவிட மிகக் கேவலமானதும்

இழிவானதும் வேறு ஏதாவது இருக்க முடியுமாவெனக் கேட்கிறேன். இப்போது நமது நாட்டில் தோன்றியிருக்கும் புரட்சி இயக்கமாகிய சுயமரியாதை இயக்கம் இதற்காகவே தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது. இதில்தான் நான் பெரிதும் பங்குகொண்டு மனப்பூர்வமாய் உழைத்து வருகிறேன். நாடார்களும் தீயர்களும் அனுபவித்துவரும் சமூகக் குறை பாடுகளும் தொல்லைகளும் அளவிறந்தன என்பதை நான் நன்றாய் உணர்கிறேன். மலையாளத்தில் தீயர்கள் உயர்ந்த ஜாதியாருக்குப் பக்கத்தில் வந்துவிட்டால் உயர்ந்த ஜாதியார் தீயர்களை வெட்டி வீழ்த்தும் வழக்கம் இருந்ததாகக் கூட ஜெனரல் சி.எம். பார்ட்டன் எழுதி இருக்கிறார். ஆனால் அத்தகைய தீயவழக்கம் தற்காலம் இல்லை என்றே நம்புகிறேன். உங்கள் குருவான நாராயண குருஸ்வாமி முன்னேற்றத்திற்காக எவ்வளவோ பாடுபட்டிருக்கிறார். நீங்கள் பெரிதும் அவரது அடிச்சுவட்டையே பின்பற்றிச் சீர்திருத்தமடைய வேண்டும். பிறப்புக் காரணமாக ஒரு சமூகத்தை அடிமைக்குழியில் ஆழ்த்தி வைப்பதென்பது உலகத்தில் வேறு எங்குமே இல்லை."[9]

இத் தலைமை உரைபற்றித் 'திராவிடன்' பத்திரிகை "திரு. சௌந்தரபாண்டியம் பேருரை" என்ற தலைப்பில் ஒரு தலையங்கம் எழுதிற்று. அதில்,

> "திரு.சௌந்தரபாண்டியம் விளக்கிக் கூறிய சுயமரியாதைக் கொள்கைகளைத் தீயர்கள் பின்பற்றுவார்களானால் தீயர்களும் ஈழவர்களும் வெகுசீக்கிரத்தில் வியக்கத்தக்க அபிவிருத்தி அடைவார்கள் என்று உறுதி கூறுகிறோம்" [10]

என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த மாநாட்டின் பயனாகச் சுமார் 150 புலையர்கள் (தீண்டப்படாதார்) மேளதாளத்துடன் அங்குள்ள ஜெகநாதசுவாமி கோவிலுக்குள் உட்பிராகாரம் மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

சத்தியாக்கிரகம்

தாழ்த்தப்பட்டோர் இன்னல் களைய ஒரு செயல்வடிவத் திட்டமும் தமிழகத்தில் உருவாயிற்று. 1930 ஆம் ஆண்டு மே 11 ஆம் நாள் ஈரோட்டில் சுயமரியாதைச் சங்கச் சத்தியாக்கிரகக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது.

இச் சத்தியாக்கிரகக் கமிட்டிக்குச் சௌந்தரபாண்டியனார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

"தமிழ் கேரள நாடுகளில் குளம், ரஸ்தா, கிணறு, கோவில், சத்திரம், பள்ளிக்கூடம் முதலிய பொது இடங்களில் பிறவி காரணமாக எந்த வகுப்பாருக்காவது சமஉரிமைகளை மறுக்கும்படியான வழக்கங்களையும் முறைகளையும்பற்றி முழுவிவரத்துடன் கணக்கெடுத்துக் கமிட்டிக்கு ரிப்போர்ட்டு செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது."

பலாத்காரமற்ற சாத்வீக முறையில் சத்யாக்கிரகம் செய்யத் தொண்டர்களைப் பதிவுசெய்யத் தீர்மானிக்கப்பட்டது.[11]

சொல்லியவண்ணஞ் செயல்

தாழ்த்தப்பட்டோரை உயர்த்த வேண்டும், அவர்கள் எந்தப் பொதுநிலையத்தையும் பயன்படுத்தத் தடைவிதிக்கக்கூடாது என மேடையில் பேசி வந்த சௌந்தரபாண்டியனார், அதிகாரம் தம் கையில் இருந்தபோது அவற்றைச் செயலில் செய்து காட்டினார். இராமநாதபுரம் ஜில்லா போர்டின் தலைவராக அவர் 1928–30ஆம் ஆண்டுகளில் பணியாற்றியபோது தம் ஆட்சிக்குள் இருந்த எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று ஓர் ஆணை பிறப்பித்தார்.

அக்காலத்தில் உந்துகளுக்கு உரிமை ஆணை நல்கும் பொறுப்பு ஜில்லாபோர்டு தலைவர்களிடம் இருந்தது. இராமநாதபுரம் மாவட்டத்தில் பல பகுதிகளில் உந்துவண்டிகளில் தாழ்த்தப்பட்டவர்களை ஏற்றிச்செல்ல அவற்றின் உரிமையாளர்கள் மறுத்தனர். இதனைக் கல்லூரணி க. அ. புன்னைமுத்து போல்வார் கடிதமூலம் சௌந்தரபாண்டியனார்க்கு அறிவித்தனர். சௌந்தரபாண்டியனார் உடனே ஓர் ஆணை பிறப்பித்தார். அந்த ஆணை வருமாறு:

"இந்த ஜில்லாவிலுள்ள சில மோட்டார்க் கம்பெனி முதலாளிகள் ஆதிதிராவிடர்களைத் தமது 'பஸ்களில்' ஏற்றிக்கொண்டு போவதில்லை யென்றும், டிக்கட்டில் 'ஆதிதிராவிடர்களுக்கு டிக்கட் கொடுக்கப்பட மாட்டாது' என்று நிபந்தனை ஏற்படுத்தியிருப்பதாகவும் அறிகின்றோம். இவ் வழக்கம் பிரயாணிகளுக்கு இடைஞ்சல் உண்டுபண்ணத் தக்கதாகவும் மிக அக்கிரமமானதாகவும் இருக்கிறது. ஆகவே மோட்டார்க் கம்பெனி முதலாளிகள் ஏதேனும் ஒரு சமூகத்தாரைப் பஸ்ஸில் ஏற்றிச்செல்ல மறுக்கவோ டிக்கட்டுகளில் மறுப்புவிதிகள் அச்சிடவோ செய்தால் அவர்களுடைய லைஸென்சு, முன்னறிக்கை கொடாமலே ரத்துசெய்யப்படுமென இதனால் எச்சரிக்கை

செய்கிறோம். இந்தச் சுற்றுக்கடிதம் கிடைத்து ஒருவாரத்துக்குள் அந்தத் தடைவிதி நீக்கப்பட்டதா அல்லவா என்று சாம்பிள் டிக்கட்டுடன் ரிப்போர்டு செய்து கொள்ளவேண்டும்."[12]

இந்த ஆணை காரணமாகத் தாழ்த்தப்பட்டவர்கள் உந்து வண்டிகளில் பயணம் செய்யும் வாய்ப்பை உடனே பெற்றனர்.

க. அ. புன்னைமுத்து இந்த ஆணையை "டார்பிடோ நிகர்த்த உத்தரவு" எனப் பேசியும் எழுதியும் வந்துள்ளார்.

இராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவராகச் சௌந்தர பாண்டியனார் நியமிக்கப்பட்டபோது அருப்புக்கோட்டை நாடார்கள் அவருக்கு ஒரு பாராட்டுவிழா நடத்தினார்கள். அந்தப் பாராட்டுவிழாவில் பேசிய சௌந்தரபாண்டியனார்,

> .... மனித சமூகத்தில் சில வகுப்பாரைத் தாழ்த்தி, கொடுமைப்படுத்தி வரப்படுவதை அடியோடு ஒழிக்க வேண்டியதே, இதுசமயம் மனிதனின் முதல்கடமை என்றும், அந்த வேலைக்கே பெரிதும் தனது எல்லாப் பதவிகளையும் உபயோகிக்கப் போவதாகவும், ஆனால் அதில் தனக்குச் சில கஷ்டங்கள் நாடார் சமூகத்தாராலேயே இருப்பதாகவும் சொல்லி, உதாரணமாக அருப்புக்கோட்டையில் உள்ள நாடார் ஹைஸ்கூலில் ஆதிதிராவிடப் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளுவதில்லை என்கின்ற நிர்ப்பந்த மிருப்பதேதான் முக்கியமான தடையென்றும் கூறி, அதனால் தான் மிகுதியும் வெட்கமடைவதாயும் தன்னுடைய சமூகத்திலேயே இவ்விதக் கொடுமையிருந்தால் தன்னுடைய உத்தியோக ஒதாவில் மற்றச் சமூகத்தாருக்குள் இருக்கும் கொடுமைகளை நீக்கும்படி சொல்லத் தனக்கு எப்படித் தைரிய முண்டாகுமென்றும், ஆகவே எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரத்தில் இவ் வருப்புக்கோட்டைப் பள்ளிக்கூடத்தில் இக் கொடுமை நீக்கப் படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு தன் வேலை சுலபமாகும் மென்றும் அவசியம் செய்ய வேண்டுமென்று தனது சமூகத் தலைவரை அடிபணிந்து கேட்டுக்கொள்ளுவதாகவும் சொன்னார்.[13]

பெரியாரின் பாராட்டு

அதற்கிசைய அப் பள்ளிக்கூட நிர்வாகிகள் அவ்வித நிர்ப்பந்தத்தை நீக்கிவிட்டு ஆதிதிராவிட மக்களை அந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொண்டார்கள். "இது நமது நாட்டில் உள்ள தீண்டாமையும் உயர்வு தாழ்வும் ஒழிய ஒரு பெரிய அறிகுறியாகும் என்றே சொல்லவேண்டும்.

இவ்வித அரிய காரியத்தைச் செய்த அருப்புக்கோட்டை நாடார் தலைவர்களை மனமாரப் பாராட்டுகிறோம்" [14] என்று பெரியார் ஈ.வே. இராமசாமி தம் 'குடிஅரசு' இதழில் எழுதினார்.

ஆதிதிராவிடரின் பாராட்டு

பழனி அமெரிக்கன் மிஷன் பங்களாவில் 4-2-28 அன்று பழனி, உடுமலைப்பேட்டைத் தாலுக்காக்களின் ஆதிதிராவிடர்களின் முதல் மாநாடு நடைபெற்றது. திருவாளர்கள் பி. டி. இராஜன், ஊ. பு. அ. சௌந்தர பாண்டியன் இருவரும் திரு. சிதம்பரம் செட்டியார் பங்களாவிலிருந்து மாநாட்டுப் பந்தலுக்கு அழைத்துவரப்பட்டனர். இவர்களிருவரையும்பற்றி ஆதிதிராவிடர் சங்கத்தின் காரியதரிசி,

> "அம் மகாநாட்டை நடத்தத் தங்கள் பொருளைச் செலவு செய்வ திலும் திரேக சிரமம் பாராது மதுரையிலிருந்தும் பட்டிவீரன்பட்டி யிலிருந்தும் வந்திருந்த ஸ்ரீமான்கள் பி.டி. ராஜன் அவர்களுக்கும் சௌந்தரபாண்டிய நாடார் அவர்களுக்கும் இருந்த ஆனந்தத்தையும் அன்பையும் விவரிக்க முடியாது. ஆனால் இதற்குக் காரணம் என்ன என்பது ஆதிதிராவிட மக்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் பரிஷ்காரமாகவும் தெளிவாகவும் தெரியவந்தது. அதாவது அவ்விரு கனவான்களுக்கும் ஆதிதிராவிட மக்களையும் அவர்கள் நிலைமை யையும் பற்றிய அவர்களிடமுள்ள உண்மையான அன்பும் பக்ஷாதாபமுமே. இக் கனவான்களைக் கடவுள் ஆசிர்வதிப்பாராக! இவர்களைப்போல் இன்னும் கனவான்கள் முன்வந்தால் அதிசீக்கிரம் முன்னேற்ற மடைவார்கள் என்பதில் ஐயமில்லை"[15]

என்று பாராட்டி அறிக்கை விடுத்திருந்தார்.

இந்த அறிக்கையிலிருந்து அத் தாழ்த்தப்பட்டோர் மாநாட்டை நடத்தப் பி.டி. இராஜன், சௌந்தரபாண்டியனார் இருவரும் பணம் செலவழித்தமையும், தம் பொருட்செலவில் மாநாட்டிற்குச் சென்றமையும், மாநாட்டில் கலந்துகொண்டதால் அவர்கள் இருவரும் மகிழ்ச்சி அடைந்தமையும் தெரிகின்றன.

'விடுதலை'யின் கணிப்பு

> "அவர் (சௌந்தரபாண்டியனார்) 1926-ல் தோன்றிய சுயமரியாதை இயக்கத்தின் மூலம் சென்னை இராஜ்யத்திலே ஒரு திராவிட மக்கள் தலைவராய் விளங்கி மக்கள் உள்ளத்தில் குடி கொண்டவர் ஆவார்... 1930 முதல் 40 வரை சமுதாயத்துறையில்

அவரது சலியா ஒத்துழைப்பானது இன்றைய சுயமரியாதை ஸ்தாபனத்திற்கு என்றும் அசைக்கமுடியாத அஸ்திவாரம் என்றே சொல்லலாம்... பாண்டியன் முடிவானது சுயமரியாதைக் கொள்கைகளின் பரவுதலுக்கும், குறிப்பாக – சிறப்பாக நாடார் சமுதாயத்திற்கும் இளைஞர் உலகிற்கும் பெரியதொரு நட்டமே யாகும்."[16] சிறப்பாக நாடார் சமுதாயத்திற்கும் இளைஞர் உலகிற்கும் பெரியதொரு நட்டமேயாகும்"

என அவர் மறைவுற்றபோது 'விடுதலை' ஒரு தலையங்கம் எழுதியது.

பெரியார் ஈ. வே. ராவின் பாராட்டு

அதே நாளில் பெரியார் ஈ.வே.ரா. விடுத்த அறிக்கையில்,

"... ஒரு பெரிய செல்வவான், பொருளாதாரம், சமயம், சமுதாயத்துறையில் முன்னேற்றமடைந்து கொண்டுவரும் ஒரு பெரிய செல்வச் சமுதாயத்திற்கு உண்மையான தலைவர், அப்படிப்பட்டவர், ஒரு புரட்சி இயக்கத்தில் தலைவருக்குத் தலைவராகவும் தொண்டருக்குத் தொண்டராகவும் இருந்து தொண்டாற்றி வந்ததுடன் எந்தச் சந்தர்ப்பத்திலும் சுமார் 20 ஆண்டு இணைபிரியாதிருந்து எல்லாத் துறையிலும் ஒத்துழைத்து வந்து – பல துறையிலும் உதவிபுரிந்து வந்தவர் ஆவார்..."[17]

என்று குறிப்பிடுகிறார்.

சௌந்தரபாண்டியனார் 1921–ல் சட்டமன்ற உறுப்பினராக அரசியலில் நுழைந்து அம் மன்றத்தில் பணியாற்றியபோது அச் சட்டமன்ற உறுப்பினர் பதவியைத் தாழ்த்தப்பட்டோர் நலனுக்குப் பயன்படுத்தியமையும், 1926–ல் சுயமரியாதை இயக்கத்தில் இடம்பெற்று 1929–ல் அவ்வியக்கம் நடத்திய முதல் மாநாட்டின் தலைமைப்பேறு அளிக்கப்பெற்றுப் பின் அவ் வியக்கத்தின் தலைவராக விளங்கியபோது தமிழகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் கேரளத்திற்கும் சென்று சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைப் பரப்பித் தாழ்த்தப்பட்டோர் நலனுக்குத் தொண்டாற்றியமையும், தாம் வகித்த அலுவல் பொறுப்புகளைத் தாழ்த்தப்பட்டோர் நலன் பெறுவதற்காகப் பயன்படுத்தியமையும் தென்னகச் சமூகஇயல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம்பெற்றவை. இவர் தொண்டு காரணமாகத் தாழ்த்தப்பட்ட சமுதாயங்கள் சிந்திக்கத் தொடங்கி, கல்வி அறிவு பெற முனைந்து தலைநிமிர்ந்து வாழ வழிஏற்பட்டது. இதனால் சமுதாயத்திலேயே ஒரு மாற்றம் ஏற்பட்டது.

"நமது சமூகத்தின் அரிய தோன்றலான உயர்திரு டபிள்யூ.பி.ஏ. சௌந்தரபாண்டியன் ஒரு புதிய சமுதாயத்தையே தென்னாட்டில் காண முனைந்தார்"

என்று எட்வர்ட் பால் மதுரம் குறிப்பிட்டமை [18] உண்மையான கருத்தே.

அடிக்குறிப்புகள்

1. Basham, A.L., ***The Wonder that was India***, Orient Longmans Ltd., 1963, p. 138
2. லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் நடவடிக்கைகள், 4.8.1921
3. ஷை, 21.2.1921
4. ஷை, 30.1.1931
5. ஷை, 18.3.1931
6. ஷை, 23.3.1931
7. ஷை, 5.3.1927
8. திராவிடன், சென்னை, 20.2.1929, ப.4
9. குடிஅரசு ஈரோடு, 30.3.1930, ப.8
10. திராவிடன், சென்னை, 17.3.1930, ப.4
11. குடிஅரசு ஈரோடு, 18.5.1930, ப.14
12. ஷை, 4.5.1930, ப.13
13. ஷை, 29.9.1929. ப.11
14. ஷை, 29.9.1929, ப.11
15. ஷை, 19.8.1928, ப.15
16. விடுதலை, சென்னை, 23.2.1963. ப.2
17. ஷை, 23.2.1953, ப.2
18. 27.12.1952 அன்று நாகர்கோவிலில் நடைபெற்ற நாடார் மகாஜனசங்கம் 22 ஆம் மாநாட்டில் நிகழ்த்திய உரை

40

MUSIC OF THE TAMILS

P. DHANDAPANI

THE aim of this study is to maintain that the music of the Tamils is the oldest music on this earth and that the concept of *'Rāgam'* is Tamilnadu's contribution to the world's musicology. In this article the term 'Music of the Tamils' denotes not only the music in Tamil language but also the system of music prevalent in ancient Tamil Country. This study will also show that the Dravidian South has retained the same old system under a new name *'Carnātic Music'* common to all the linguistic regions here.[1]

Tamilnadu has developed a magnificient system of music, and all the possibilities of a true melodic system in which music progresses by a succession of single notes have been explored here. Verses, folk songs and classical songs are apparently the successive stages in the development of the ultimate vocal musical form. Music in fact has become an integral part of the Tamil culture and civilisation itself from time immemorial, and many events take place in the life of an individual or the Tamil society with some kind of music or other.

To study the music of a certain people, it is quite necessary to know something about their ancient history, language and culture.

World's First Language

Long before the time when the biologists, led by Darwin and Wallace, were constructing the theory of evolution and the origin of species, the linguists were hard at work on the evolution of language, and they have since come to a definite conclusion

"After beginning in 1786 with Sir William Jones and his inspired hunch that the remarkable similarities among Sanskrit, Greek and Latin meant, in his words that these three languages must have sprung from some common source, which perhaps no longer exists, the new science of comparative grammar took off in 1816 with Frānz Bōpp's clasic work on the conjugational system of the Sanskrit language in comparison with that of the Greek, Latin, Persian and Germanic languages' - a piece of work equivalent, in its scope and in its power to explain, to the best of 19th century biology. The common Indo-European ancestry of English, Germanic, Slavic, Greek, Latin, Baltic, Indic, Iranian, Hittile and Anatolian tongues,and the meticulous scholarships connecting them was a tour de force for research-science at its best, and social science at that. It is nice to know that a common language, perhaps 20,000 years ago, had a root word for the earth which turned, much later, into the technical term for the complex polymers that make up the connective tissues of the soil; humus and what are called the humicacids."[2]

That common source for the languages of the world does exist still and it can be ancient Tamil. For, as the great Tamil research scholar Dēvanēyap Pāvāṇar says, Tamil language is at least 50,000 years old.[3]

By comparing the various dead and living languages of the world one can also show that they have all orignated from the common primitive tongue Tamil, as Rev. Dr. Robert Caldwell in his ***Comparative Grammar of Dravidian Languages*** and Dr.Winslow in the preface to his dictionary have established beyond any doubt that a lot of Tamil words are found in Sanskrit, Scythian, Semitic and West Indo-European family of languages. "It (Tamil) stands alone, without any immediate predecessor. In origin, it must be long anterior to the Sanskrit, which has subsequently played so important a political part with regard to it.[4]

In North China an inscription in Tamil has been discovered. Further in Japan a linguistic scholar, who is conducting research on the evolution of the Japanese language, has traced the origin of it to ancient Tamil. As many as 300 Tamil words have been found in the Japanese language. Above all the folk-songs in Japan also are similar to those in Tamil.[5]

All the above establishes the fact that Tamil is comparably the oldest language, and all other languages of the world are offshoots of ancient Tamil.

Evolution of Musical Instruments

Historians say that the earliest human culture in the world centered around ***'Mullai'*** regions - forests and adjoining areas - where only natural food in the form of roots, greens and fruits was available in plenty for the survival and well being of the early man. Hence, it was there that musical instruments also were first born, as has been accepted by even modern authorities on world music.[6]

Dr. U.V. Saminatha Iyer in his work ***'Sanga Kāla Tamiḻum Piṟkāla Tamiḻum'*** says that the first musical instrument to come into existence was the bamboo flute called ***'Vēṇikuḻal'***. The early man in his quest after the necessaries of life came across bamboo forests and during his sojourn in the forest he had the opportunity of hearing sweet melodious sounds, which were the result of currents of wind passing through the holes drilled on the hollow bamboo stems by beetles which came there to eat the grains and flour inside. The idea, therefore, of preparing an artificial musical pipe by boring holes on the sides of cut bamboo stems and supplying his own air to produce similar musical notes had naturally struck the imagination of the early Tamils. Step by step by drilling five holes on the bamboo stem the Tamils developed what are called the 'first musical notes'.[7]

Similarly, when the primitive hunter in the ***Mullai*** region of the Tamil country shot the arrow to kill an animal also for his food, he heard a delightful sound emanating from the string of the bow. He therefore tied strings of different lengths to the bow and plucked them and noticed that notes of different pitch were produced. That discovery paved the way for the development of the earliest bow - string musical instrument called ***'Vil Yāḻ'*** of olden days.

When the early man after eating the meat of the animal he had killed for food, tied the cleansed skin to the tree for drying it in the hot sun so as to utilise it for his daily wear, he came across certain musical sounds as the twigs of the tree branches struck at the dried skin kept taut. That suggested to him the idea of developing a musical drum also.

The musical instruments flute and *yāḻ* (குழல், யாழ்) had, of course, played a major part in the development and sophistication of the music of the Tamils.[8]

Seven Notes

The Tamils were the first to recognise the seven basic notes of music. Even after originally fixing five strings to the *Vil Yāḻ* for producing the first five notes as in the flute, there was still some more space available at the covered bottom portion of that bow-string instrument. So the early Tamils attached some more strings to it to try and produce further musical notes. That was how they ultimately arrived at the seven basic musical notes that had formed the basis of all music in the Tamil world. The pitch of the 7 notes were finally based on the length as well as other physical features of the strings. That was why the musical notes themselves were called *'narambus'* according to ancient Tamil literature. Later on the flute also was remodelled with 7 holes to produce the 7 basic musical notes arrived at the *yāḻ* instrument. The 7 musical notes which formed the gamut were called in Tamil *Kural, Tuttam, Kaikkiḷai, Uḻai, Iḷi, Viḷari and Tāram.* That primordial scale of music was later on found to take notes of well recognised musical intervals, as has been brought out on a scientific analysis by Swami Vipulananda in his *Yāḻ Nūl.*[9]

Vipulananda Adigal also says that the *Vil yāḻ*, the *pēri yāḻ* and the *śīṟi yāḻ* were the earlier ones used by the ancient Tamils and that the *Mahara yāḻ*, the *Seṅkōṭṭi yāḻ* and the *śākōḍa yāḻ* came into vogue during the early years of the chiristian era. The variety of *Yāḻs* mentioned above and also the institution of Panars touring the length and breadth of the Tamil country clearly indicate that the times and conditions were specially favourable in those days for the art of music to develop in this land.

Pālais and Paṇs

Pālai refers to the divisions, derivative *paṇs*. By the method of *Kural Tiribu, Pālai* was derived from a *paṇ*.

Tamilnadu is the first country in the history of world music to evolve a system of solemnisation. A *'pālai'* is a scale of Tamil music out of which several basic musical scales *('mēḷams')* have been developed. A *mēḷam* is a series of musical notes *Ša,Ri,Ga,Ma,Pa,Da* and *Ni* bearing a definite relationship to the tonic note and is an arrangement of such artistic steps leading from the basic note to its octave as to constitute a melodic unit.

Technically, a *paṇ* is a model scale of two tetrachords, the first one consisting of the basic note to the fourth and the second one consisting of

the fifth to the upper tonic note. Further, the notes are first arranged in the ascending order and then in the descending order. It is a heptatonic scale containing all the 7 musical notes.

The seven svaras ascending in a regular order and descnding in the same order (ஏறு நிரல், இறங்கு நிரல்) in a scalar form get the name of ***Perum Paṇ***. It is also known as தாய்ப் பண் and தலைமைப் பண். Tol. refers to this ***scale*** as the ***'yāḻ'***, later, this perhaps came to be known as ***'meḻakarttā'*** the term ***paṇ*** also refers to ***'Tiṟams'*** *viz.* ***Paṇ*** was also known in ancient Tamil works variously as யாழ், பாலை, இசை.[10]

The ancient Tamils knew the 'cycles of Fifths' (இளிக்கிரமம்) and the 'cycles of fourths' (உழைக்கிரமம்) and also the theory of consonant and dissonant notes. For in the system of Tamil music the 7 notes are classified into ***Iṇai, Kiḷai, Naṭpu*** and ***Pakai*** notes (இசைப்புணர் குறுநிலை). The first tonic note is the prime note. ***Iṇai*** is the note which blends with the first note and (இணைக்கிரமம்) is the seventh note as well as the second note in an octave. ***Kiḷai*** is the perfectly consonant fifth note in the octave. ***Pagai*** note is the enemy or discordant note to the first one; it is the third or sixth note. The ***Naṭpu*** note which is neither ***Kilai*** nor ***Pagai*** is the fourth note."[11]

An octave ***(maṇḍilam)*** consists of 12 smaller notes called semi-tones obtained by bifurcating all the 5 individual notes, except ***Sa*** and ***Pa***, into flats and sharps. The Tamils have adopted this as the fundamental basis for their musical system. This can be further divided into quarter-tones called ***'Alagus'*** (srutis) said to be 22 in number, whereas the renowned exponent of Tamil music M. Abraham Pandithar asserts that they are really 24 in total. [12]

Jayangondar in his glossary of difficult terms in ***'Cilappatikāram,*** called '***Arumpata Urai***' and Adiyārkku Nallār in his commentary show how a ***paṇ*** was formed by the ancient Tamils. They knew how to derive new paṇs from a musical scale by (i) the process of modal shift of tonic and (ii) by the process of reallocation of the ***alagus*** of the 7 notes in an octave. The modal shift of tonic (குரல் திரிபு) is the process of deriving new musical scales from a basic scale by the shift of the tonic note. The second method of deriving new ***Paṇs*** is by taking one or more ***alagus*** from the first note and then taking the ***alagu*** (அலகு சுற்றல்) which is an excess in the second note to the third one and so on until a new ***paṇ*** is formed.

The four ***Pālais***, fundamental scales, of Tamil music are the ***Āyappālai***, the ***Vaṭṭappālai,*** the ***Tirikōṭappālai*** and the ***Šaturappālai***. All other basic musical scales are generated only by these four ***pālais***.[13]

The music of the Tamils has employed a large number of heptatonic and transilient varieties. Though in a general way any ***rāgam*** is called by

the name *'paṇ'* in Tamil, it is specifically attributed to a heptatonic scale. Each *paṇ* has a number of derivatives. The hexatonic one is called *'Paṇṇiyal Tiṟam'* and the pentatonic one simply *'Tiṟam'*.A musical scale with mere 4 notes, being not so melodious, is very rare and is called *'Tiṟattiṟam'*.

என்னும் புறநானூற்றுப் பாடல் வரிசைப்படுத்திக் கூறுகிறது.

அதன் வளர்ச்சியாக வானத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து தீயும், தீயிலிருந்தும் நீரும், நீரிலிருந்து நிலமும் தோன்றுகின்றன.

"சுருவளர் வானத் திசையிற் றோன்றி
உருவறி வாரா ஒன்றன் ஊழியும்
உந்துவளி கிளர்ந்த ஊழூழ் ஊழியும்
செந்தீச் சுடரிய ஊழியும் பனியொடு
தண்பெயல் தலைஇய ஊழியும் அவையிற்
றுண்முறை வெள்ள மூழ்கியார் தருபு...
மீண்டும் பீடுயர் பீண்டி அவற்றிற்கும்
உள்ளீ டாகிய இருநிலத் தூழியும்" (பரி. 2 : 5–12)

நெருப்புக் கோளமாக இருந்த பூமி குளிர்ந்து, பனிப்படலத்தால் சூழப்பட்ட நிலை மாறி, நிலம் தோன்றியதுபற்றிய உலக எண்ணமும், அவை இன்றைய கருத்துகளோடு பொருந்தி வருவதைக் காணும்போது, பழந்தமிழர் கொண்டிருந்த அறிவியல் அறிவும் உணர்வும் நம்மைத் திகைப்பில் ஆழ்த்தவே செய்கின்றன.

ஒரு படிப் பாலையோ, நீரையோ முக்கால் படியாகச் சுருக்கி அளக்கவியலாது. நீர்ப்பொருளுக்கு சுருங்கும் தன்மை இல்லை. நீர்ப் பொருள்களின் இச் சுருங்கா இயல்பை அறிவியல் பூர்வமாகக் கண்டறிந்து கூறியவர் பாஸ்கல் எனும் அறிவியல் அறிஞர். நீர்ப்பொருள் "சுருங்கா இயல்பை 'Non-Compressibility of Liquid" என்பர். இவ் வுண்மையைப் பாஸ்கல் கண்டறிந்து கூறுவதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பே ஔவையார்.

"ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நானாழி..."

எனக் கூறியுள்ளார்.

இங்கு 'ஆழ்கடல் நீர்' , 'ஆழ அமுக்கி' எனும் சொற்றொடர்கள் வேறொரு நுட்பமான அறிவியல் உண்மையையும் தெளிவாகக் கூறுகின்றன. அதாவது, ஆழத்தைப் பொறுத்து நீரின் அழுத்தம் அதிகமாகும். இச் சொற்றொடர்கள் மூலம் 'ஆழத்தைப் பொறுத்து அழுத்தம் மிகுகின்றது' என்னும் அறிவியல் உண்மையை ஔவையார் கூறுகிறார்.

உழவுத்துறையில் உரமிடுதல் ஓர் அத்தியாவசியத் தேவையாகும். ஆனால், உரமிட்டபோது கிடைத்த பயனைவிட மிகுபயனை உரமிடாமலே பயிர் பெறமுடியும் என்கிறார் வள்ளுவர்.

நிலத்தை நன்றாக உழுது பண்படுத்தி, புழுதி பரக்க வெயிலில் விட்டிருந்தால், அந் நிலம் கதிரவனிடமிருந்து சக்தி பெற்று உரத்திலும் மேலான பயனைப் பெற்றுத் தரும் என்னும் அறிவியலின் அடிப்படை உண்மையை,

"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்"

என்கிறார். நிலத்தைப் பலமுறை உழுது புழுதிமண்போல் ஆக்கினால், கதிரவனிடமிருந்து தேவையான நிலச்சத்தைப் பெறும். அதன் பிறகு அந் நிலத்தின் நல் விளைச்சலுக்கு ஒருபிடி எருக்கூடத் தேவைப்படாது என்னும் அறிவியல் உண்மையைக் கூறுவதைக் காணுமிடத்து நம் முன்னோர் எந்த அளவுக்கு அறிவியல் சிந்தனையோடு வாழ்ந்திருக் கிறார்கள் என்பதை ஓரளவு அறிந்துகொள்ள முடிகிறது.

அவர்கள் கட்டடக் கலையிலும் நீரியல் துறையிலும்கூட மிகப் பெரும் அளவுக்கு வல்லுநர்களாக விளங்கிவந்தார்கள் என்பதற்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு அமைக்கப்பட்ட கல்லணையும், ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு உருவாக்கப்பட்ட கோயில்களும் அழியாச் சின்னங்களாக இன்றும் விளங்குகின்றன.

இன்னும் சிலப்பதிகார காலப் பூம்புகார் நகரமைப்பும், முகில்தோய் மாடங்களும், கலத்தினும் காலினும் தருவளர் ஈட்டக் குலத்தின் குன்றாக் கொழுங்கொடிச் செல்வர்களாக வாழ்ந்த தமிழர்கள், உலகெங்கும் வாணிபத்திற்கெனச் செலுத்திய கப்பல்களும், அவற்றிற்கான தொழில்நுட்பத் திறன்களும் இலக்கியச் செய்திகளாக இருக்கின்றன.

அவைபற்றிய அறிவியல் நூல்கள் இருந்திருக்கலாம்; இன்று கிடைத்தில. எனினும், தமிழர் கப்பற் செலுத்தி மேற்கே ஐரோப்பாவரையிலும், கிழக்கே கம்போடியா வரையிலும், தெற்கே நியூசிலாந்துவரையிலும் வடக்கே சீனம்வரையிலும் சென்றதற்கான சான்றுகள் தொல்பொருட் செய்திகளாக இன்று நமக்குக் கிடைத்துள்ளன.

சீனாவில் காண்டன் மாநகரில் பழந்தமிழர் பண்டசாலை கண்டறியப்பட்டுள்ளது. அங்கே தமிழ்மொழிக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. தெற்கே, நியூசிலாந்தில் மூழ்கிக் கிடந்த கப்பல் ஒன்றில் தமிழ் எழுத்துகள் பொறித்த கப்பல் மணியொன்று கிடைத்துள்ளது. மேற்கு ஐரோப்பாவரை தமிழர் வாணிகத் தொடர்பு கொண்டிருந்ததற்கான பல ஆதாரங்கள் இன்று கிடைத்துள்ளன.

தமிழன் தன் அறிவியல் அறிவை, நுட்பத்திறனைக் கிழக்காசிய நாடுகளான கம்போடியாவில் 'கங்கோர் வாட்' ஆலய அமைப்பிலும், இந்தோசீனப் போராபுதூர் புடைப்புச் சிற்பங்களிலும் வெளிப்படுத்தி யுள்ளதை உலகப் புகழ்பெற்ற தொல்பொருளாய்வாளர்கள் வியப்புடன் வெளிப்படுத்தியுள்ளனர் என்பது இக்காலத் தமிழர்களை வியப்பிலாழ்த்தும் செய்திகளே என்பதில் ஐயமில்லை.

அதுமட்டுமா, தமிழ்நாட்டு மலைப்பகுதிகளில் 'ஐவனம்' போன்ற தானியங்களைப் பயிரிடுவதிலும், பயிரிடும் முறையிலும், நிலத்தைப் பண்படுத்தி மழைநீர் அரிப்பில்லாது தடுப்பதிலும் தனித்திறமை பெற்றவர்களாகத் தமிழர்கள் பண்டு திகழ்ந்தார்கள். இந்த முறையை அவர்கள் வணிக நிமித்தமாகவோ அன்றி வேறு காரணங்களுக்காகவோ தாங்கள் சென்ற வெளிநாடுகளிலெல்லாம் பரப்பியுள்ளார்கள். குறிப்பாக, ஆப்பிரிக்க நாடுகளின் மலைப்பகுதிகளில் பயிரிடும் முறையை அறிமுகப்படுத்தியவர்கள் தமிழர்களே என்பதற்கான ஆதாரங்களை ஃபிளமிங்க் போன்ற புகழ்பெற்ற பொறியியல் வல்லுநர்கள் ஆதாரபூர்வமாக விளக்கியுள்ளார்கள்.

மேலும், எத்தியோப்பியாவில் உற்பத்தியாகி எகிப்துவழி யோடி அலெக்சாண்டிரியாவில் கடலில் வீணே கலந்து வந்த நைல் நதியால் எகிப்து எவ்விதப் பயனையும் பெற இயலாமலே நீண்ட காலம் இருந்தது. நீரைத் தரை உறிஞ்சாமலும் அணையில் நீர்க்கசிவு ஏற்படாமலும் சமதளத் தரையில் அணைகட்டும் கட்டுமானத் தொழில்நுட்பத் திறனைத்

தமிழர்மட்டுமே பெற்றிருந்தனர் என்பதற்கு இன்றும் சாட்சியாக விளங்குவது கல்லணை ஆகும். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இத்தகைய ஆற்றலைப் பெற்றிருந்த தமிழர்களின் நீரியல் நுட்ப அறிவை, வணிகர்கள் மூலம் அறிந்த எகிப்து நாட்டின் பாரோ மன்னர்கள், தமிழ்நாட்டு நீரியல் கட்டுமான வல்லுநர்களை எகிப்து நாட்டிற்கு வரவழைத்து, நைல்நதியில் அணைகளை ஆங்காங்கே கட்டச் செய்தனர். அதன் விளைவாகவே பாலைவனமாகக் காட்சியளித்த நைல்நதிப் பகுதி சோலைவனமாக மாற்றமுற்றது. இதனால், எகிப்தின் வளம்மட்டுமன்று அந் நாட்டின் வரலாறே அடியோடு மாறிவிட்டது என்பதைத் தக்க ஆதாரங்களுடன் ஜெர்மானியப் பொறியியல் அறிஞர் ஃபிரௌனிங் தம் நூல்களில் தெளிவாகக் கூறியுள்ளார்.

இத்தகைய அறிவியல், தொழில்நுட்பத்தைக் கூறவல்ல தனி நூல்கள் கிடைக்காவிட்டாலும் இலக்கியங்களில் ஆங்காங்கே சிறுசிறு செய்திகளாக இடம்பெறவே செய்கின்றன. அவையே நாமறியக் கிடைக்கும் தொழில்நுட்பத் தகவல்கள்.

இலக்கியங்கள் நிலைபெற்ற அளவுக்கு, அறிவியல் தொழில்நுட்ப நூல்கள் நிலைபேற்றுத் தன்மையைப் பெற இயலாமல் போனதற்கு முதற் காரணம், இலக்கியங்கள் அறிவியல் தொழில்நுட்பத் திறனாளர்கள் உட்பட அனைவரையுமே ஈர்க்க வல்லனவாக அமைந்திருந்தன; ஆனால், அறிவியல் தொடர்பான தொழில்நுட்ப நூல்கள் அவ்வத் துறை சார்ந்தவர்களன்னியில் பிறரை ஈர்ப்பனவாகச் சுவையாக அமையவில்லை. எனவே, பொதுமக்களின் போற்றுதலுக்குட்படாத இத்தகைய நூல்கள் அத் துறை சார்ந்த குடும்பங்களின் குறுகிய எல்லைக்குள் முடங்கி, நாளடைவில் மறைய வேண்டியதாயின.

கற்போரின் நெஞ்சங்களையெல்லாம் இலக்கியச் சுவையால் இன்புறுத்திய எழில் படைப்புகளான இலக்கியங்களில், புலவர்களால் தேவைநிமித்தம் குறிக்கப்பட்ட அறிவியல், தொழில்நுட்பச் செய்திகள் மட்டுமே இலக்கியத்தோடு இணைந்து நிலைபேறுடையனவாக இன்றும் நிலவுகின்றன.

சித்தர்கள், மருத்துவர்களாகவும் விளங்கினார்கள். அவர்கள் இயற்றிய படைப்பு மிகுதியாக 'மருத்துவவியல்' பற்றிய தகவல்கள் கவிதை வடிவில் இலக்கியப் போர்வைகொண்டு அமைந்ததால், அவை மக்களால்

மிகுந்து வருவதால் வெறுமனே அசைபோடும் இலக்கியங்களைப் படிக்க விரும்பாது அறிவுக்கு விருந்தூட்டிக் காலப்போக்கிற்கேற்ப வாழ வழிகாட்டும் அறிவியல் புனைகதைகளே செல்வாக்குப் பெறும் நிலை. எனவே, இன்று கற்றறிந்த வாசகர்கள் அறிவியல் புனைகதைகளையே விரும்பிப் படிக்கும் சூழலே விரைந்து உருவாகிவருகிறது. அத்தகைய காலத்தின் இன்றியமையாத் தேவையை நிறைவுசெய்யும் வகையில் கதை இலக்கியப் படைப்புலகமும் அச் சூழலுக்கேற்பத் தன்னைத் தயார்ப் படுத்திக்கொள்ள ஆயத்தமாகிவருகிறது என்பதற்கான அறிகுறிகள் இன்று அதிகம் தென்படத் தொடங்கியுள்ளன.

எதிர்காலத் தமிழ்ப் படைப்புலகம் எவ்வழியில் அமைய வேண்டும், வளர்ந்து வளமாக வலுவோடு நடைபோட வேண்டும் என்பதற்குக் காலத்தை வென்று வெற்றி நடைபோடும் வள்ளுவரே இதற்கும் வழி காட்டுகிறார்.

தமிழ்ப் படைப்பிலக்கியம் எவ்வகையில் அமைய வேண்டும் என்பதைப்பற்றிக் கூறவந்த வள்ளுவர்,

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

எனக் கூறுகின்றார்.

"கணக்கை அடிப்படையாகக் கொண்ட அறிவியலும், எழுத்தை அடித்தளமாகக் கொண்ட இலக்கியங்களும் மக்களுக்கு இரு கண்களைப் போன்றவையாகும்" என்பது அவர் வாக்கு.

"எண்ணென்ப" எனக் கணக்கை அடிப்படையாகக் கொண்ட அறிவியலை முதன்மையாகக் குறிப்பிட்ட வள்ளுவர் "ஏனை எழுத்தென்ப" எனக் கூறியதன் மூலம் அறிவியல் தமிழுக்கு அடுத்த நிலையையே இலக்கியம் முதலான துறைகளுக்குத் தந்துள்ளார் என்பது நன்கு கவனிக்கத் தக்கதாகும்.

மேலும் "எண்ணென்ப" என்பதனை முதலில் கூறி "ஏனை எழுத்தென்ப" என்பதனைப் பின்னே கூறியதன் மூலம் அறிவியலின் அடிப்படையிலேயே இலக்கியப் படைப்புகள் உருவாக்கப்பட வேண்டும் என்பதைக் குறிப்பாக உணர்த்தி வழிகாட்டுகிறார்.

எந்த ஒரு கருத்தையும் உணர்வையும் உண்மையையும் பலவரிக் கட்டுரைகளாக உரைநடையில் சொல்லுவதைவிடச் சிலவரிக் கவிதைகளில்

சொல்நயத்தோடும் கற்பனை வளத்தோடும் கூறி எளிதாக உணரவைக்க இயலும். கூட்டலின் சுருக்கம் பெருக்கல் என்பது போல, அறிவியல் உண்மையையும் உணர்வையும் கதைவடிவில் ஒருசில பாத்திரங்கள் மூலம் நடைமுறை வாழ்வோடு இணைத்துக் கூறும்போது, படிப்பவர்கள் மிக எளிதாக, கதாசிரியர் கூற விழைந்த கருத்தையும் உணர்வையும் ஏற்றுச் செரித்துக்கொள்ள முடியும். விழுங்க இயலாத கசப்பு மருந்தைச் சர்க்கரைச் சுற்றோடு டாக்டர் தர, நாக்குவரையிலான இனிப்புச் சுவைக்காகக் கடுங்கசப்பு மருந்தை விழுங்கி நோய்போக்கிக் கொள்கிறோமே, அதைப் போன்றதே கதைமூலம் அறிவியல் உண்மைகளையும் உணர்வையும் உணர்த்தும் உத்தி. இந்த இலக்கிய உத்தியை, அதன் வலிமையை மிகச் சிறப்பாக உணர்ந்து நடை முறைப்படுத்தி வெற்றிகண்டவர்கள் நம் முன்னோர்கள்; மக்களின் உள்ளத்தில் தாங்கள் நிலையாக இடம்பெறச் செய்ய விழைந்த தத்துவங்களையும் நீதிநெறிகளையும் சமய உண்மைகளையும் கதைகள் மூலமாகவே கற்பித்தனர். கதையின்பால் தங்கள் உள்ளத்தைப் பறிகொடுத்த மக்களும், கதையின் போக்கோடு தங்கள் வாழ்வையும் இணைத்துக்கொண்டனர். இந்த நிலையே இந்தியக் கதைவரலாற்றின் உண்மை நிலை.

இதே கதைஉத்தியைக் கையாள்வதன் மூலமே அறிவியல் உணர்வையும் உண்மையையும் மக்கள் மனத்தில் எளிதாகப் பதிய வைக்கவும், அவர்களை அறிவியல் பார்வையோடும் அணுகுமுறையோடு தம் வாழ்க்கைப் போக்கை அமைத்துக்கொள்ளத் தூண்டவும் முடியும்.

எதனையும் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளும் மனப்போக்கி லிருந்து முற்றிலும் மாறுபட்டது அறிவியல் கதைப்போக்கு. என்ன, ஏது, ஏன் என்னும் கேள்விக் கணைகளை உட்கொண்டு பிறப்பதால், வாசகர்களும் இதே உணர்வைப் பெறுகின்றனர். இதுவே, விஞ்ஞான மனோபாவத்துக்கு அடிப்படை.

இத்தகைய போக்கில் அமைந்த அறிவியல் புனைகதைகளே இன்றைய தமிழ் இலக்கிய உலகின் இன்றியமையாத் தேவையாகும். இத்தகைய அறிவியல் புனைகதைத் துறையின் பூரண வளர்ச்சியையே இன்றைய தமிழ் தேடிக்கொண்டிருக்கிறது.

53

வள்ளலார் என்னும் விஞ்ஞானி

எம்.சி. இராசமாணிக்கம்

திருவருட் பிரகாச வள்ளலார் எனும் இராமலிங்க அடிகள் 19ஆம் நூற்றாண்டில் சுத்த சன்மார்க்கமும் செந்தமிழும் தழைத்தோங்க நம் தமிழ் நாட்டில் வந்துதித்த செந்தமிழ் ஞானி ஆவார். ஆறாயி ரம் திருவருட்பாப் பாடல்களுக்குமேல் இயற்றிய அருட்கவிஞராகவும், உரைநடை நூல்களை இயற்றிய நூலாசிரியராகவும், நூல்களுக்கு உரை எழுதிச் சிறந்த உரையாசிரியராகவும், நூல்களைப் பதிப்பித்துப் பதிப்பாசிரியராகவும், பின்னர்ப் பத்திரிகை ஆசிரியராகவும், பேராசிரியராகவும், ஞானாசிரியராகவும், சித்த மருத்துவராகவும், சமுதாயச் சீர்திருத்த வாதியாகவும், சிறந்த தத்துவ ஞானியாகவும் விளங்கும் அவர், இன்றைய அறிவியல் உலகுக்கேற்ற விஞ்ஞானியாகவும் திகழ்கிறார். தாம் ஏற்படுத்திய சுத்த சன்மார்க்கம் அறிவியலையே அடிப்படையாகக் கொண்டதாக வள்ளலார் அடிக்கடி சொல்வார் என்று அவருடைய தலைமாணாக்கரான தொழுவூர் வேலாயுத முதலியார் பிரம்மஞான சபைக்குக் கொடுத்த வாக்குமூலத்தில் குறிப்பிடுகிறார்.

அண்டத்தைப்பற்றி அவர் கண்டறிந்த ஆய்வுகள், அணுவைப் பற்றிய ஆராய்ச்சிகள், பிண்டமாகிய உடம்புபற்றிய ஆய்வுகள், உயிர்பற்றிய ஆராய்ச்சி, உடம்பில் பசியினால் ஏற்படுகின்ற அவத்தைகள்பற்றிய ஆய்வு, உடம்பிலிருந்து உயிர் பிரிவதால் ஏற்படுகின்ற மரணத்தைத் தடுத்து, மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்கின்றதைப் பற்றிய ஆய்வுகள் போன்ற

பல்வேறு ஆய்வுகளைப் பார்க்கின்றபோது இன்றைய விஞ்ஞானிகளும் வியந்து நிற்கின்ற நிலையில் உள்ளனர். அறிவியல் ஆய்வுசெய்யும் இன்றைய விஞ்ஞானிகள் பல்வேறு புறக்கருவிகளின் (தொலைநோக்கி, உருப்பெருக்கி, மற்றும் பல சோதனைச்சாலைக் கருவிகள் (telescope, microscope) துணைகொண்டே ஆய்வுகள் நடத்துகின்றனர். ஆனால், அருட்பிரகாச வள்ளலாரோ குடிசையில் வாழ்ந்துகொண்டு எவ்விதப் புறக்கருவியின் துணையுமின்றித் திருவருள் துணைகொண்டு அனைத்தையும் கண்டறிந்துள்ளார். அவர் அருளிச்செய்த திருவருட்பாப் பாடல்களிலும் உரைநடைப் பகுதிகளிலும் உள்ள கருத்துகளை இன்றைய அறிவியல் கருத்துகளோடு சீர்தூக்கிப் பார்ப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

சித்திவளாகத்தில் சன்மார்க்கக் கொடியேற்றி நிகழ்த்திய பேருபதேசத்தில் வள்ளலார்பெருமான் குறிப்பிடுகிறார்:

"ஆண்டவர் என்னை ஏறாநிலைமிசை ஏற்றியிருக்கிறார். இப்போது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது" என்கிறார்.

"அண்டப் பரப்பின் திறங்க ளனைத்தும் அறிய வேண்டியே
ஆசைப்பட்டது அறிந்து தெரிந்தாய் அறிவைத் தூண்டியே"

"அண்ட கோடி அனைத்தும் காணும் கண்கள் எய்தியே
அறிந்தேன் அங்கைக் கனிபோல் அவற்றில் உள்ள செய்தியே"

"கோடிக்கணக்கான அண்டங்களைக் கண்டேன். அவற்றிலுள்ள செய்திகளையும், அண்டப்பரப்பின் திறங்களையும் தெரிந்துகொண்டேன்" என்று நூற்றுப் பத்து ஆண்டுகளுக்கு முன்பே கூறியுள்ளார். வானியல் ஆய்வுகள் அண்மைக் காலத்தில் (ஏறத்தாழ 25 ஆண்டுகள்) தான் மிகவும் முன்னேறி உள்ளன. மனிதன் சந்திரனுக்குச் சென்று வருகிற முயற்சியில் வெற்றியுங் கண்டுவிட்டான். மிகப் பெரிய தொலைநோக்கிகளையும், அறிவியல் சாதனங்களையும் கொண்டு வானியல் ஆய்வில் முன்னேற்றங் கண்டுள்ள அமெரிக்க, உருசிய நாட்டு வானியல் அறிஞர்களின் கண்டுபிடிப்புகளையும் அவர்களின் வியப்புகளையும், எவ்விதப் புறக்கருவிகளும் இன்றி வள்ளற்பெருமான் அருள்நிலையில் கண்டறிந்து கூறுவதோடு ஒப்பிட்டு நோக்கும் போதுதான் பெருமானின் உயர்நிலையைப் புரிந்துகொள்ள முடியும்.

"ஒதா துணர்ந்திட ஒளியளித்து எனக்கே
ஆதார மாகிய அருட்பெருஞ் ஜோதி"

என்ற உண்மையை உணர முடியும்.

நாம் இருக்கின்ற பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றிவருகின்றது. பூமியின் சுற்றளவு 24,000 மைல்கள். தன்னைத் தானே மணிக்கு 1000 மைல் வேகத்தில் சுற்றிக்கொள்கிறது. ஒரு தடவை தன்னைச் சுற்றுவதற்கு 24 மணி நேரமாகின்றது. அதுவே ஒரு நாளாகும். சூரியன் ஒரு தீப்பிழம்பு. அதன் வெப்பம் ஏறக்குறைய 2 கோடி டிகிரி சென்டிகிரேடு. அதைச் சுற்றிப் புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ என்னும் ஒன்பது கோள்கள் அதனதன் பாதையில் சுற்றிவருகின்றன.

அண்மையில் 'எக்ஸ் கோள் (X planet)' என்னும் கோள் இவ் வாண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சூரியனுக்கு அண்மையிலுள்ளது புதன்; சேய்மையிலுள்ளது புளூட்டோ; மூன்றாவது வட்டத்தில் சுற்றிவருகிற பூமி சூரியனை ஒரு தடவை சுற்றிவருவதற்கு 365¼ நாள்கள் (1ஆண்டு) ஆகின்றன. சேய்மையிலுள்ள புளூட்டோ சூரியனை ஒரு தடவை சுற்றிவருவதற்கு 248 ஆண்டுகள் ஆகின்றன. பூமியிலிருந்து சூரியனுக்குள்ள தூரம் 10 கோடி மைல்கள். விநாடிக்கு 1,86,000 மைல் வேகத்தில் விண்ணில் செல்லக்கூடிய ஒளி, சூரியனிலிருந்து பூமியை அடைவதற்கு 8 நிமிடங்கள் ஆகின்றன. மூன்றாவது பாதையில் செல்லுகின்ற பூமியே, சூரியனிலிருந்து 10 கோடி மைல் தொலைவில் இருக்கிறதென்றால், கடைசி வட்டத்தில் சென்றுகொண்டிருக்கும் புளூட்டோவிற்கு எவ்வளவு கோடி மைல் தூரம்! அந்தக் கடைசிக் கோள் செல்லுகின்ற பாதையின் சுற்றளவு எத்தனை கோடி மைல்கள்! இந்தச் சூரிய குடும்பத்தைப் (Sun family) பற்றி எண்ணிப்பார்க்கும் போதே மிக வியப்பாக இருக்கிறது.

சூரியன் ஒரு சிறு நட்சத்திரம். அப்படியானால் இரவில் நாம் கோடிக்கணக்கான நட்சத்திரக் கூட்டங்களைப் பார்க்கிறோம். ஒவ்வொன்றும் ஒரு சூரியனே. நம் கண்களுக்கு அணுக்கள் போன்று அளவில் தெரிந்தாலும் அவை ஒவ்வொன்றும் அளவில் மிகப் பெரியன. ஒவ்வொன்றுக்கும் அதனதன் துணைக்கோள்கள் இருக்கின்றன. பல கோடி நட்சத்திரங்களினுடைய கூட்டத்தை ஓர் அண்டம் (Galaxy) என்று

கூறுவர். சூரியன் இருக்கின்ற இந்த அண்டம் ஒரு நடுப்பகுதியை மையமாகக் கொண்டு, இத்தனை கோடி நட்சத்திரங்களும் அதனதன் பாதையில் சுற்றிவருகின்றன. அதாவது இந்த அண்டமே தன்னைத்தானே சுற்றிவருகின்றது.

சூரிய குடும்பத்தின் சுற்றளவைக் கணக்கிடும்போதே, மனிதன் தூரத்தைக் கணக்கிடும் அளவைகள் முடிந்துவிட்டன. அதற்குமேல் அண்டத்தின் பரப்பை (அளவை)க் கணக்கிடக் கருவிகள் இல்லையே என்று சிந்தித்து, இறுதியில் காலத்தைக்கொண்டு தூரத்தை அளக்க ஆரம்பித்தனர். அதாவது ஒளி, விண்வெளியில் 1 விநாடிக்கு 1,86,000 மைல் தூரம் செல்கிறது. அப்படியானால் 1,86,000 மைல் தூரத்தை 'ஒளி விநாடி' என்று வைத்துக்கொள்ளலாம். அதை அறுபதால் பெருக்கினால் 'ஒளி நிமிடம்' வரும். அதை அறுபதால் பெருக்கினால் 'ஒளி மணி'; அதை 24 ஆல் பெருக்கினால் 'ஒளி நாள்' அதை 365 ஆல் பெருக்கினால் 'ஒளி ஆண்டு'; 1,86,000 x 60 x 60 x 24 x 365 = 5,86,596,60,00,000 மைல் தூரத்தை 'ஒளி ஆண்டு' என்று சொல்கிறோம். அப்படிப் பார்க்கும்போது சூரியன் இருக்கின்ற இந்த அண்டத்தின் குறுக்குவிட்டம் 3 லட்சம் ஒளி ஆண்டுகள். இந்த அண்டத்தினைச் சுற்றிப் பல ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களின் கூட்டங்கள் (Globular clusters –அண்டத்தின் பரிவாரங்கள்) சுற்றிவருகின்றன. சூரியனை அதன் துணைக்கோள்கள் சுற்றிவருவது போன்று கோடானுகோடி நட்சத்திரங்களின் சேர்க்கையாலான அண்டத்தை, ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களின் சேர்க்கையாலான அண்டத்தின் பரிவாரங்கள் சுற்றிவருகின்றன. இஃது ஓர் அண்டத்தினுடைய அமைப்பு.

இதைப் போன்று கோடிக்கணக்கான அண்டங்கள் அண்ட வெளியில் (Universe) இருக்கின்றனவென்று வானியல் அறிஞர்கள் கூறுகிறார்கள். மேலும், இந்த அண்டங்களெல்லாம் தம்மைத் தாமே சுற்றிக்கொள்வது மல்லாமல் ஒன்றோடொன்று விலகிச் சென்று கொண்டேயிருக்கின்றன. அதற்கு ஓர் உதாரணத்தைச் சொல்லு கிறார்கள். புள்ளிகள் நிறைந்த ஒரு பலூனை வாயில் வைத்து ஊதும்போது பலூன் பெரிதாக விரியும். அப்போது புள்ளிகள் நகர்ந்து செல்லுகின்றன. வாய்க்கு அருகிலுள்ள புள்ளிகள் ஒரு குறிப்பிட்ட வேகத்தில் விலகிச் செல்கின்றன. வாய்க்குத் தூரத்திலுள்ள புள்ளிகள் அவற்றைவிட வேகமாக விலகிச் செல்லுகின்றன. இதுபோன்று நமக்கு

அருகிலுள்ள அண்டங்களைவிடத் தூரத்திலுள்ள அண்டங்கள் மிக வேகமாக விலகிச் சென்றுகொண்டே யிருக்கின்றன. இவை இன்று நேற்று இல்லாமல் யுகாந்திர (பல கோடி ஆண்டு) காலமாக விரிந்து சென்றுகொண்டிருக்கின்றன. இவை எங்கே சென்று முடிகின்றன? இவ்வளவு அண்டங்களும் செல்வதற்கு எங்கே இடம் இருக்கின்றது? அண்டவெளியின் பரப்புதான் என்ன? இதனை எவ்வாறு அளப்பது? இவற்றின் திறங்கள் என்ன? அண்டவெளி முழுதும் ஒளிமயமாகி அண்டங்களும் கோள்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றனவே, இவற்றை இயக்குபவர் யார்? என்ற கேள்விகளைத் தங்களுக்குத் தாங்களே கேட்டுப் பதில் தெரியாது வியந்து நிற்கின்றார்கள் விஞ்ஞானிகள்.

இப்போது வள்ளற்பெருமானை நோக்குவோம். அண்டவெளி முழுவதும் ஒளிமயமாக இருப்பதை " ஒளி ஒன்றே அண்டபகி ரண்டமெலாம் விளங்கி ஒங்குகின்றது....." என்னும் பாடலில் விளக்குகிறார். அண்டங்களெல்லாம் ஓர் இடத்தில் நிலையாக நில்லாமல் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்னும் கருத்தைக் " குலவுபே ரண்டப் பகுதிஓர் அனந்த கோடி கோடிகளும்....." என்று குறிப்பிடுகிறார். அண்டங்களையெல்லாம் தமிழ் மரபுபடி பிரமனுடைய, விஷ்ணுவுடைய, அரனுடைய, சதாசிவனுடைய, சக்திகளுடைய, சத்தர்களுடைய அண்டங்கள் என்று பிரித்துச் சொல்கிறார். இப்படிப் பலகோடி அண்டங்களும் ஒன்றுக்கொன்று, அளவு கடந்த தூரத்தின் காரணமாக அணுக்கள் போன்று அண்டவெளியில் அசைந்து போய்க்கொண்டிருக் கின்றன. அந்த அருள்வெளியில் எல்லாவற்றையும் அருட்பெருஞ் ஜோதிக் கடவுள் இயக்கிக் கொண்டிருக்கிறார். அந்த இயக்கமே "நடராஜ நடனம்" என்கிறார்.

"ஒருபிரமன் அண்டங்கள் அடிமுடிப் பெருமையே
உன்னமுடி யாஅவற்றின்
ஓரா யிரங்கோடி மால்அண்டம், அரன்அண்டம்
உற்றகோ டாகோடியே
திருகலறு பலகோடி ஈசன்அண் டஞ்சதா
சிவஅண்டம் எண்ணிறந்த
திகழ்கின்ற மற்றைப் பெருஞ்சத்தி சத்தர்தஞ்
சீரண்டம் என்பகலுவேன்

உருவுறும்இவ் வண்டங்கள் அத்தனையும் அருள்வெளியில்
உறுசிறு அணுக்களாக
ஊடசைய அவ்வெளியின் நடுநின்று நடனமிடும்
ஒருபெருங் கருணை அரசே!
மருவிஎனை ஆட்கொண்டு மகனாக்கி அழியாத
வரந்தந்த மெய்த்தந்தையே
மணிமன்றில் நடுநின்ற ஒருதெய்வ மேஎலாம்
வல்லநட ராஜபதியே"

என்று நடராஜபதி மாலையில் குறிப்பிடுகிறார்.

மேலும் இவ்வளவு அண்டங்களையும் உயிர்களையும் ஆண்டவரே இயக்குகின்றார் என்பதை,

"அண்டஅளவு எவ்வளவோ அவ்வளவும் அவற்றில்
அமைந்தசரா சரஅளவு எவ்வளவோ அவ்வளவும்
கண்டதுவாய் ஆங்கவைகள் தனித்தனியே அகத்தும்
காண்புறத்தும் அகப்புறத்தும் புறப்புறத்தும் விளங்க
விண்டகுபே ரருட்ஜோதிப் பெருவெளிக்கு நடுவே
விளங்கிஒரு பெருங்கருணைக் கொடிநாட்டி அருளாந்
தண்டகுமோர் தனிச்செங்கோல் நடத்திமன்றில் நடிக்குந்
தனியரசே என்மாலை தாளில்அணிந் தருளே"

என்று அருள்விளக்க மாலையில் குறிப்பிடுகிறார்.

விரிந்து செல்லுகின்ற அண்டங்களுக்கு இடங்கொடுத்துக் கொண்டே அருள்வெளி விரிந்து பரந்து விளங்குகின்றது (ever expanding space) என்பதை,

"அண்டமெலாம் பிண்டமெலாம் உயிர்களெலாம் பொருள்கள்
ஆனவெலாம் இடங்களெலாம் நீக்கமற நிறைந்தே
கொண்டவெலாம் கொண்டவெலாம் கொண்டுகொண்டு மேலும்
கொள்வதற்கே இடங்கொடுத்துக் கொண்டுசலிப் பின்றிக்
கண்டமெலாம் கடந்துநின்றே அகண்டமதாய் அதுவுங்
கடந்தவெளி யாய்அதுவுங் கடந்ததனி வெளியாய்
ஒண்டகுசிற் றம்பலத்தே எல்லாம்வல் லவராய்
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவர்உண்டே கண்டீர்"

ன்று திருச்சிற்றம்பலத் தெய்வமணி மாலையில் விளக்குகின்றார்.

மறைகளும், ஆகமங்களும், சாதனங்களும் ஆகிய அளவைகளைக் கொண்டு இந்த அருள்வெளியின் பரப்பை அறிஞர்கள் (மேலவர்கள்) அளந்து பார்க்கின்றார்கள். ஆனால், அவர்களால் அளவிட முடியவில்லை (The vastness of space). அவர்கள் அளவுகோலாகக் கொண்ட கருவிகள் எல்லாமே தேய்ந்து பயனற்றுவிடுகின்றன என்பதை,

"கிளக்கின்ற மறையளவை ஆகமப்பே ரளவைக்
கிளந்திடுமெய்ச் சாதனமாம் அளவைஅறி வளவை
விளக்குமிந்த அளவைகளைக் கொண்டுநெடுங் காலம்
மேலவர்கள் அளந்தளந்து மெலிகின்றார் ஆங்கே
அளக்கின்ற கருவிஎலாம் தேய்ந்திடக்கண் டாரே
அன்றிஒரு வாறேனும் அளவுகண்டார் இலையே....."

என்று குறிப்பிடுவதுடன், அளவைகளைக் கொண்டு அருள்வெளியை அளக்க முடியாது, ஆனால் அதற்கு ஓர் உளவு உண்டு. அந்த அளவினால் தான் அறிய முடியும் என்று திட்டவட்டமாகக் குறிப்பிடுகிறார்.

"உளவினில் அறிந்தால் ஒழியமற்று அளக்கின்
அளவினில் அளவா அருட்பெருஞ் ஜோதி.."

என்று அருட்பெருஞ்ஜோதி அகவலில் கூறுகிறார்.

மேலும் கோடானு கோடி அண்டங்களுக்கும், அவற்றைக் காக்கின்ற சத்தி, சத்தர் முதலான தெய்வங்களுக்கும், அவ் வண்டங்களிலுள்ள அத்தனை உயிர்களுக்கும், பொருள்களுக்கும், உயிர்களின் அனுபவங்களுக்கும், முத்தி, சித்தி ஆகிய அனைத்துக்கும் ஒளி உண்டு. இத்தனைக்கும் ஒளி வழங்குபவர் திருச்சிற்றம்பலத் தெய்வமாகிய அருட் பெருஞ்ஜோதி ஆண்டவரே என்பதை,

"அகரநிலை விளங்குசத்தர் அனைவருக்கும் அவர்பால்
அமர்ந்தசத்தி மாரவர்கள் அனைவருக்கும் அவரால்
பகரவரும் அண்டவகை அனைத்தினுக்கும் பிண்டப்
பகுதிகள்அங் கனைத்தினுக்கும் பதங்கள்அனைத் தினுக்கும்
இகரமுறும்உயிர்எவைக்கும் கருவிகள்அங் கெவைக்கும்
எப்பொருட்கும் அனுபவங்கள் எவைக்கும்முத்தி எவைக்கும்
சிகரமுதல் சித்திவகை எவைக்கும்ஒளி வழங்கும்
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வம்ஒன்றே கண்டீர்"

என்று கூறுகிறார். இன்னும் அண்டப்பரப்பின் திறங்களை வியந்து நூற்றுக்கணக்கான பாடல்கள் பாடியுள்ளார்; வானியல் அறிஞர்கள் இன்னும் பல நூற்றாண்டுகள் முயற்சி செய்து கண்டறிய வேண்டிய கருத்துகளை எல்லாம் கூறுகிறார். அவற்றை விரிக்கிற் பெருகும். இவற்றைப் பார்க்கும்போதுதான் வள்ளற்பெருமானுடைய முழுமையான அருளறிவும் அருளனுபவமும் தெரிகின்றன.

வள்ளற்பெருமான் அணுக்களைப்பற்றிய ஆய்விலும் தலைசிறந்து விளங்குகிறார்.

" அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே.."

என்று அணுவினுள் ஒளி இருப்பதாகக் குறிப்பிடுகிறார்.

"தோன்றியவைங் கருவினிலே. . . .கணிப்பதனுக்
கரியதாய் இலங்கு பிரகாசிகள் தாமிருந்தன...."

என்றுங் கூறுகிறார்.

அண்மைக்காலத்தில் அணுஆய்வு வல்லுநர்கள் பல நுண் ஆய்வுக்கருவிகளைக் கொண்டு அணுவிற்குள் 'ஃபோட்டான்' என்ற 'ஒளியுடைய அணுத்துகள்' இருப்பதாகக் கண்டறிந்துள்ளனர். ஆனால், எவ்விதப் புறக்கருவிகளின் உதவிகளும் இன்றி வள்ளற்பெருமான் இவற்றின் தன்மைகளைப்பற்றிக் கூறுவது வியந்து போற்றற்குரியது.

மேலும், இந்த உடம்புபற்றிச் சொல்லும்போது நம்மையெல்லாம் பார்த்து,

"உடம்புவரு வகையறியீர் உயிர்வகையை அறியீர்
உடல்பருக்க உண்டுநிதம் உறங்குதற்கே அறிவீர்
மடம்புகுபேய் மனத்தாலே மயங்குகின்றீர் மனத்தை
வசப்படுத்தீர் கைப்படுத்தும் வழிதுறைகற் றறியீர்...."

என்று கேட்கிறார்.

உடலுக்கு வருகின்ற மரணத்தைத் தவிர்க்கக்கூடிய மரணமிலாப் பெருவாழ்வுபற்றிச் சொல்ல வந்த வள்ளற்பெருமான் ஆண்டவரே வந்து தமக்கு அருட்குருவாகித் தெரிவித்தார் என்று கூறுகிறார்.

"பிண்டத்து உயிர்கள் பொருந்தும் வகையும் பிண்டந் தன்னையே
பிரியும் வகையும் பிரியாவகையும் தெரித்தாய் பின்னையே!"

என்று உடலில் உயிர்கள் எப்படிப் பொருந்துகின்றன; எப்படி உயிர் உடலை விட்டு நீங்குகிறது? அப்படியானால் உயிர் உடலைவிட்டு நீங்காம லிருப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? என்பவற்றை,

"மருட்பகை தவிர்த்துஎனை வாழ்வித்து எனக்கே
அருட்குரு வாகிய அருட்பெருஞ் ஜோதி"

என்று ஆண்டவரே குருவாகித் தெரிவித்தருளினார் என்று கூறுகிறார்.

நம் உடம்பிற்கு, உயிருக்கு, ஆன்மாவிற்கு (உள்ளம்) ஒளி உண்டு என்றும் கூறுகிறார்.

"உள்ளொளி ஓங்கிட, உயிரொளி விளங்கிட,
வெள்ளொளி காட்டிய மெய்யருட் கனலே"

என்றும்,

"என் ஊன்பாலும், உளப்பாலும், உயிர்பாலும் ஒளிர்கின்ற ஒளியே..."

என்றும் கூறுகிறார்.

அண்மைக்காலத்தில் செகோஸ்லோவாகியா நாட்டைச் சேர்ந்த கிர்லியன் என்னும் அறிவியல் வல்லுநர் உயிருக்கும் ஒளி இருப்பதைப் புகைப்படமாகப் பிடித்துள்ளார். அதைக் கிர்லியன் போட்டோ (Kirlian Photography) என்று கூறுவர்.

உலகத்திலுள்ள எல்லா உயிரினங்களுக்கும் (விலங்கினங் களுக்கும் தாவரங்களுக்கும்) ஒளியுண்டு என்றும், நம் உணர்வுகளுக்கும் ஒளியுண்டு என்றும் கண்டறிந்திருக்கிறார்கள். ஒருவன் கோபமாக இருக்கும்போது சிவப்பு ஒளியும், மகிழ்ச்சியாக இருக்கும்போது பச்சை ஒளியும் தோன்றுகின்றன. உயிர் பிரிந்த பிறகு (இறந்தவுடன்) உயிரொளி மறைந்துவிடுகின்றது. இப்படி ஒளி சம்பந்தமான ஆய்வுகள் உலகெங்கணும் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

வள்ளற்பெருமான் 1867ஆம் ஆண்டு மக்களின் பசிப்பிணியைப் போக்க, சத்திய தருமச் சாலையை வடலூரில் தொடங்கியபோது "ஜீவகாருண்ய ஒழுக்கம்" என்னும் உரைநடை நூலை வெளியிட்டார்.

அதில் உணவு இன்மையால் நம் உடலில் ஏற்படுகின்ற மாறுதல்களைப் "பசியின் அவத்தைகள்" என்னும் தலைப்பில் விரிவாக எழுதுகிறார்.

"மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம்முயற்சி தாளாண்மை – தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்"

என்பது பழம்பாடல். ஆனால், பசியினால் உடம்பில் என்னென்ன மாறுதல்கள் ஏற்படுகின்றன என்பதை விளக்கமாக எழுதுகிறார்.

அண்மைக்காலத்தில் விஞ்ஞானிகள் மினிசோட்டா என்னும் இடத்தில் (Minisota Experiment-1950) மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகளைத் தூக்கிலிட்டுக் கொல்லாமல், பரிசோதனைக்குரிய விலங்குகள் (Guinea pig,dog,*etc*) போல, அவர்களைப் பட்டினி போட்டு அதனால் அவர்கள் உடம்பில், உள்ளுறுப்புகளில் என்னென்ன மாற்றங்கள் நேருகின்றன என்பதை 'E.C.G., E.E.G X-Ray, Microscope, *etc*.' பல்வேறு கருவிகளைக்கொண்டு சோதனைச் சாலையில் கண்டறிந்துள்ளனர். அவர்கள் கண்டறிந்துள்ள உண்மைகளையும் வள்ளற் பெருமான் கூறியுள்ளவற்றையும் ஒப்புநோக்கும் போதுதான் வள்ளற் பெருமானின் தனித்தன்மை விளங்குகிறது.

விஞ்ஞானிகள் கண்டறிந்து ஆங்கிலத்தில் கூறியவற்றை வள்ளலார் எவ்விதப் புறக்கருவியுமின்றி அருள்அறிவால் கண்டறிந்து தமிழில் எழுதியதை "ஜீவகாருண்ய ஒழுக்கம்" என்னும் நூலிலிருந்து, கீழே குறிக்கிறேன்.

The tongue becomes dry	நா உலர்ந்து வறளுகின்றது.
The eyes become sunken and dull	கண் பஞ்சடைந்து போகின்றன.
Hearing becomes defective	காது கும்மென்று செவிடுபடுகின்றது.
The skin becomes dry, inelastic and the sensation become diminished	தோல் மெலிந்து சுரணை கெடுகின்றது.
Hairs dry and fallout	ரோமம் வெறிக்கின்றது.
Muscle mass gets reduced. Mucle tone becomes poor.	தசை குழைந்து தன்மை கெடுகின்றது.

The nerves become weak and the tendon reflexes are absent	நரம்புகள் குழைந்து நைகின்றன.
The joints become weak with sence of insecurity	பூட்டுகள் நெக்குவிடுகின்றன.
There is burning sensation in the stomach	வயிறு பகீரென்று எரிகின்றது.
The heart becomes smaller with E.C.G changes	இருதயம் சுருங்குகின்றது.
The pulses become weak and slow	நாடிகள் கட்டுவிட்டுக் குழைகின்றன.
The blood gets reduced	இரத்தம் சுவறுகின்றது.
Due to circulatory failure there is cyanosis (change in colour of the person)	மேனி கறுகுகின்றது.
The body water become less	சலம் சுவறுகின்றது.
The hands and legs become extremely weak	கைகால்சோர்ந்து துவளுகின்றன.
There is diminution in the mass of liver, brain, skeleton	ஈரல் கரைகின்றது; மூளை சுருங்குகின்றது, எலும்புகள் கறுகுகின்றன.
Psychological change occur in the form of bizaarre behaviour increased irritability, difficult in thinking, the persons become moody and depressed	மனம் தடுமாறிச் சிதறுகின்றது; புத்தி கெடுகின்றது; சித்தம் கலங்குகின்றது; அகங்காரம் அழிகின்றது.
In the last stage unconsciousness follows and the person is on the vergo of death	உயிர் இழந்துவிடுவதற்குச் சமீபித்த அடையாளங்களும் அனுபவங்களும் தோன்றுகின்றன.
All these changes reverse and the person become normal if ordinary food is given bymouth in small quantities at frequent interval	இவ்வளவு அவத்தைகளும் ஆகாரம் கிடைத்த போது உண்டு பசி நீங்க நீங்குகின்றன.

ஆங்கிலத்தில் குறிப்பிட்டது விஞ்ஞானிகள் கண்டறிந்து எழுதியவை. அவ்வளவையும் வள்ளற்பெருமான் குறிப்பிட்டதோடு, விஞ்ஞானிகள் கண்டறியாத பல மாற்றங்களையும் குறிப்பிடுகின்றார். "ஜீவர்களுக்குப் பசி அதிகரித்த காலத்தில் ஜீவ அறிவு விளக்கமில்லாமல் மயங்குகின்றது. அது மயங்கவே அறிவுக்கறிவாகிய கடவுள் விளக்கம் மறைபடுகின்றது. அது மறையவே புருடதத்துவம் சோர்ந்துவிடுகின்றது. அது சோரவே பிரகிருதித் தத்துவம் மழுங்குகின்றது" என்று மொத்தம் 36 மாற்றங்களைக் குறிப்பிடுகின்றார்.

120 ஆண்டுகளுக்கு முன்னால் எவ்விதப் புறக்கருவிகளின் உதவியும் இல்லாமல் பசியினால் என்னென்ன அவத்தைகள் தோன்றுகின்றன என்பதைக் கண்டறிந்து, அப் பசிப்பிணியைப் போக்குவதற்காக எந்த நேரத்திலும் உணவளிக்கக் கூடிய (அணையா அடுப்புள்ள) சத்திய தருமச் சாலையை வடலூரில் நிறுவிய வள்ளற் பெருமானை ஒரு சாதாரண விஞ்ஞானி என்று கூறுவதா? ஒரு சாதாரண மெய்ஞானி என்று கூறுவதா? எல்லாவற்றிற்கும் மேலான கடவுள் அம்சம் என்றே கூறவேண்டும்.

உலகம் தோன்றிய காலந்தொட்டு மரணத்தை வென்றவர் யாரும் இல்லை. ஆனால் "மரணமிலாப் பெருவாழ்வு" என்னும் மாபெரும் தத்துவத்திற்கு இலக்கியமாக விளங்கி, இந்த உடலுக்கு என்னென்ன காரணங்களால் மரணம் வருகின்றது, (தேக நஷ்டத்தின் காரணங்கள் – ஆகாரம், மைதுனம், தூக்கம், பயம் முதலியன), அதை எவ்வாறு தடுத்துக்கொள்ள முடியும், அழிந்துபோகின்ற இந்த உடம்பை அழியாத தேகங்களாகிய சுத்த தேகம், பிரணவ தேகம், ஞான தேகம் என்ற தேகங்களாக எப்படி மாற்றுவது? அவற்றின் தன்மைகள் என்ன? நரை, திரை, மூப்பு, பிணி, மரணம் ஆகியவற்றை எப்படித் தடுப்பது? என்பன போன்ற பல்வேறு கருத்துகளைத் திருவருட்பாப் பாடல்களிலும் உரைநடை நூல்களிலும் கூறியுள்ளார். அவை ஒவ்வொன்றையும் இன்றைக்கு விஞ்ஞானிகள் (Scientists, Gerontologists etc) கூறுகின்ற கருத்துக களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோதுதான் வள்ளலாரை ஒரு "விஞ்ஞானி என்று சொல்வதைவிட ஒரு "மீமிசை விஞ்ஞானி" (Super Scientist) என்று கூறத் தோன்றுகிறது. இவை ஒவ்வொன்றையும் விளக்கினால் கட்டுரை மிகப் பெருத்துவிடும் என்ற காரணத்தால் இதனுடன் முடிக்கிறேன்.

54

அகத்தியரும் சித்த மருத்துவமும் (ஓர் ஆய்வு)

வி. சுப்பிரமணியன்

தமிழர் நாகரிகம், உலக நாகரிகங்கள் அனைத்திலும் சிறப்பு வாய்ந்தது ஆகும். மற்ற உலக நாகரிகங்களைவிடத் தொன்மை வாய்ந்தது தமிழர் நாகரிகம் என எண்ணப்படுகிறது. மனிதன் தோன்றிய காலந்தொட்டே நோயும் தோன்றிவிட்டது. நோய் தோன்றும்பொழுது அதைத் தீர்ப்பதற்குரிய ஒரு மருத்துவ முறையும் தோன்றியே ஆக வேண்டும். இப்படித் தோன்றியதுதான் உலகத்தின் பல்வேறு மருத்துவ முறைகளும்.

தமிழர் நாகரிகத்துடன் இணைந்து தோன்றியதுதான் தமிழ் மருத்துவம் என்னும் சித்த மருத்துவம் ஆகும். சித்தர்கள் பலர் வாழ்ந்திருந்தார்கள். எனினும் முக்கியமாகக் கருதப்படுபவர்கள் 18 சித்தர்களாவர். அவர்கள் அகத்தியர், நந்திதேவர், திருமூலர், புலத்தியர், புண்ணாக்கீசர், பூனைக்கண்ணர், இடைக்காடர், போகர், கருவூரார், கொங்கணவர், காளாங்கி, அழுகிணிச் சித்தர், அகப்பேயர், பாம்பாட்டி, தேரையர், குதம்பைச் சித்தர், சட்டைமுனி நாதர், புலிக்கையீசனார் என்பவர் ஆவர். சித்தர்களுக்கெல்லாம் தலைவர் எனக் கூறப்படுபவர் சிவபெருமான் ஆவார். சித்த மருத்துவமானது சிவன் சக்திக்கும், சக்தி நந்திதேவருக்கும், நந்திதேவர் அகத்தியருக்கும் சொன்னதாகக் கூறப்படுகிறது.

இச் சித்தர்கள் சொன்ன எளிய சில தத்துவங்களின் அடிப்படையில்தான் தமிழ் மருத்துவம் சிறப்புப்பெற்றுள்ளது. சித்தர்கள் தோற்றுவித்த இத் தமிழ் மருத்துவம் உடலுக்கு மட்டுமல்லாது உயிருக்கும் மருத்துவம் அளிக்கும் முறையாகும். உடலையும் உயிரையும் அழியாமல் காத்துச் சித்திபெறச் செய்யும் மருத்துவம் என்பதால் சித்த மருத்துவம் எனப்பட்டது.

தமிழ் மருத்துவத்துறையில் அகத்தியர் பெயரால் வழங்கும் நூல்களே மிகுதியாகும்.

"பொதிகை மலைமுனி யோதிய நூலே"

"தென்திசை வாழு மகத்திய முனிவர்
திறமுட னுரைத்தனர் பரிந்தே"

"மூதறி முனிவன் சொன்ன மொழிப்படி"

"குறுமுனி யுரைசெய் தாரே"

"மாமுனிவ ருரைத்த நூலே"

"மலைமுனிவர் இயம்பி னாரே"

"மலைமுனிவர் பகர்ந்த நூலே"

போன்ற பல நூல்களில் வரும் தொடர்களைக்கொண்டு அறியலாம். ஆனால், தற்பொழுது கிடைக்கக்கூடிய அகத்தியர் பெயரால் வழங்கப்படும் நூல்களைப் பார்க்கும்பொழுது அனைத்து நூல்களையும் எழுதியவர் ஒரே அகத்தியர்தாமா, ஒரே பரம்பரையைச் சார்ந்தவர்களா, பல்வேறு காலத்தில் வாழ்ந்த ஒரே பெயர்கொண்ட பல சித்தர்களா என எண்ண வேண்டியுள்ளது. மேலும், முதல் சங்க இலக்கண நூலான 'அகத்தியம்' என்னும் நூலை எழுதிய அகத்தியரே இம் மருத்துவ நூல்களையும் எழுதியிருப்பாரா என்பதும் சந்தேகத்திற்கிடமாக உள்ளது. ஏனெனில் தற்பொழுது அகத்தியர் பெயரால் வழங்கப்படும் நூல்களில் இலக்கண மாறுபாடு பெரிதும் காணப்படுகிறது. கர்ண பரம்பரையாக–செவிவழிப் பாடங்களாகவே இருந்து பின்னால் எழுத்துக்கு வரும்பொழுது பல வேறுபட்ட மாறுதல்களை அடைந்திருக்கலாம் எனவும் ஒரு கருத்து உள்ளது. அல்லது ஒரு குறிப்பிட்ட கருத்தினை மையமாகக்கொண்டு பின்னால் வந்தவர்கள் தம் சிந்தைக்கேற்பப் பாட்டாக வடித்தும்

கொண்டிருக்கலாம் எனவும் எண்ணத் தோன்றுகிறது. சான்றாக "சுயமாக்கினி செந்தூரம்" என்னும் மருந்து அகத்தியர் அருளிச்செய்த நூல்களான அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம், அகத்தியர் 2,000 ஆகிய இரு நூல்களில் ஏறக்குறைய ஒரே முறை, வித்தியாசமான இரு பாடல்களில் கூறப்பட்டுள்ளது. அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கத்தில்,

"கேளப்பா சுயமாக்கினி சொல்லக் கேளு
புகழான ரசமூன்று நாற்ற மிரண்டு
காமப்பா காந்தசெந் தூரம் நாலு
கலங்காதே சிலையிரண்டு சிவப்பி ரண்டு
தாமப்பா மெழுகு பொடிதா னொன்று
தவறாமல் குமரிச் சாற்றைப்புக் கேளு
ஆமப்பா பட்சமொன்று அரைத்து ருட்டி
அப்பனே இஞ்சிரசந் திரிகடுகு தானே"

என்று கூறப்பட்டுள்ளது. அதே சரக்குகளைச் சேர்த்துச் செய்யப்படும் அதே நோய்க்கு வழங்கப்படும் அதே பெயருள்ள மருந்து அகத்தியர் 2,000 எனும் நூலில் கீழ்க்காணும் பாடலாய்க் கூறப்படுகிறது.

"நாலு சூதம் சிலையிரண்டு நல்ல கந்தக மதற்கு ரெட்டிக்
காலக் கந்த மதுக்கு ரெட்டி கடிய லோகத்துக்கு ரெட்டி
ஏலங் குழலார் குமரிச் சாற்றா லரைத்து இணக்கமுடன்
தாயத்தின் பின்னே தப்பத் தணலா யெரியுங் கண்டாயே"

என்பதாகும்.

இதனைப் பார்க்கும்பொழுது கருத்து அகத்தியரின் மூலக் கருத்து என்றும், பின்னால் வந்த அவரின் சீடர்கள் அதைத் தம் வசதிக்கேற்ற வாறு இரு பாடல்களாகப் பாடியிருப்பர் என்றும் கொள்ள வேண்டியுள்ளது. தற்காலத்தில் கிடைக்கக்கூடிய அகத்தியர் நூல்கள் அனைத்துமே அகத்தியரின் கருத்தினைக் கொண்டு பிற்காலத்தவரால் எழுதப்பட்டனவேயாம்.

இந் நூல் முற்காலத்துச் சித்தர்களால் இயற்றப்பட்ட வைத்திய நூல்கள் இரண்டு லட்சமென்றும், வாத நூல்கள் ஒரு லட்சம் என்றும் கூறப்படும். அவை போட்டிகளாலும், பொறாமையினாலும் கடலுக்கும்

நெருப்புக்கும் இரையாக்கப்பட்டவை போக எஞ்சியிருப்பன சிலவே என்னும் ஒரு கருத்தும் எண்ணப்படுகிறது.

அகத்தியர் காலம்

அ. சிதம்பரனார் எழுதிய அகத்தியர் வரலாறு என்னும் நூலில் பொதியமலை அகத்தியர் என்னும் குறுமுனியின் காலம் 16,000 ஆண்டுக்கு முன் என்றும், அவருக்குப் பிறகு கி.பி. 19ஆம் நூற்றாண்டுவரை முப்பத்து ஏழுக்கும் மேற்பட்ட அகத்தியர் வாழ்ந்திருந்தார்கள் என்றும், அவர்கள் பல்வேறு இனத்தைச் சார்ந்தவர்கள் என்றும் கூறுவர். எனவே, அகத்தியர் ஒருவரே அல்லர் என்பது பல்வேறு காலகட்டத்தில் பலரும் அகத்தியர் பெயரால் இருந்தனர் என்பதும் தெரியவருகிறது. சித்த வைத்திய அகராதியில் திரு. சாம்பசிவம் பிள்ளை, டாக்டர் கால்டுவெல் போன்ற தமிழ் மூதறிஞர்கள் அகத்தியர் காலத்தைக் கி.மு. ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டு என்று கூறினாலும் உண்மையான காலத்தை அறிவது மிகவும் கடினம் என்று கூறுகிறார்கள். அகத்திய முனிவரைப்பற்றிய பல செய்திகள் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலும் உள்ளன.

அகத்தியர் நூல்கள்

அகத்தியர் பேரகத்தியம், சிற்றகத்தியம் என்னும் இரண்டு தமிழ் இலக்கண நூல்கள் இயற்றியதோடல்லாமல் இரசவாதம், வைத்தியம், சோதிடம், யோகம், ஞானம், நிட்டை, பூஜாவிதி முதலிய பல துறைகளைப் பற்றியும் நூல்கள் இயற்றியுள்ளார். தற்பொழுது கன்னியாகுமரிப் பகுதியில் சிறப்பாகக் கூறப்பட்டு வரும் வர்மம் என்னும் மருத்துவத்துறை தொடர்பான நூல்களும்கூட அகத்தியர் பெயராலேயே வழங்கப் படுகின்றன. தற்பொழுது கிடைக்கும் முக்கியமான அகத்தியர் வைத்திய நூல்கள் அகத்தியர் பெருந்திரட்டு, அகத்தியர் நயனவிதி, அகத்தியர் 1,200, வைத்திய காவியம் 1,500, வைத்திய வல்லாதி 300, வைத்திய ரத்தினச் சுருக்கம், அகத்தியர் 21,000, அகத்தியர் 2,000, அகத்தியர் இரண வைத்தியம், அகத்தியர் குருநாடி, அகத்தியர் கன்மகாண்டம், அகத்தியர் சாஸ்திரவிதி போன்றவை.

அகத்தியர் நாடி, அகத்தியர் குருநாடி போன்ற நூல்கள் நோய்களை 4,448 என வகைப்படுத்துகின்றன. மேலும் வாதநாடி, பித்த நாடி, கபநாடி, முக்குற்ற நாடி, தொந்த நாடி, குருநாடி இவற்றை அறியும்

விதங்கள்பற்றியும், இவற்றின் மாறுபாடுகளால் ஏற்படும் நோய்களைப் பற்றியும் தெளிவாகக் கூறுகிறார். மரணக்குறிகள்பற்றியும் பல பாடங்கள் இந் நூலில் உள்ளன.

அகத்தியர் இரண வைத்தியம் கட்டி, கழலை, மூலம், பவுத்திரம், கிரந்தி, காலாணி, புற்று, கடுவன் போன்ற நோய்கட்கு ஆயுதங்களைக் கொண்டு அறுவை சிகிச்சை செய்யாமல் மருந்து முறைகளாலேயே குணப்படுத்தக் கூடிய பல மருத்துவ முறைகளைக் கூறும் நூலாகும். அனைத்தும் மிக எளியமுறைகளாகவும், தற்காலத்தில் அனைவராலும் எளிதில் செய்து பயன்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளன.

அகத்தியர் செந்தூரம் 300 என்னும் நூல், உலோக உபரச பாடாணங்களைக் கொண்டு செய்யப்படும் பல்வேறு செந்தூர முறைகளை விளக்குகிறது. இந் நூல் அகத்தியர் தம் சீடரான புலத்தியருக்கு உபதேசம் செய்வது போன்ற நடையில் அமைந்திருக்கிறது. இதனை,

"செப்பினேன் உனக்காகப் புலத்தியனே அய்யா
தீராத குன்மமெல்லாம் சேரத் தீரும்"

"மடக்குமடா புலத்தியனே உனக்குச் சொன்னேன்"

"கேளப்பா புலத்தியனே சீந்திகைப்பு கேட்டதில்லை"

"செய்யடா புலத்தியனே ஈசானத்தில்"

என்னும் சொற்றொடர்களால் அறியலாம்.

அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம் எளிமையான பல மருந்து செய்முறைபற்றிக் கூறும் நூலாகும். அகத்தியர் 2000, சில நோய் களுக்கான குறிகுணங்களையும் பல மருந்து செய்முறைகளைப் பற்றியும் கூறும் நூலாக அமைகிறது.

அகத்தியர் நயனவிதி 500 என்னும் நூல், கண்ணில் தோன்றக்கூடிய 96 நோய்களைப்பற்றியும், அதற்குண்டான அறுவை மருத்துவ முறை, உள், வெளிப் பிரயோக மருந்து முறைகளைப்பற்றியும் கூறும் நூலாக உள்ளது. மேலும், பொதுவாகக் கண்ணின் லட்சணம், கண்ணைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள், கண்ணில் நோய் உண்டாவதற்கான காரணங்கள் போன்றனவும் விளக்கமாகக் கூறப்படுகின்றன. மேலும், கண்ணில் அறுவை மருத்துவம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பல வகையான கருவிகளின் அமைப்பு, அவற்றின்

அளவுகள்பற்றிய பாடல்கள் அகத்தியரின் திறமையைப் பறை சாற்றுவனவாக அமைந்துள்ளன.

விலிசம் என்னும் கருவிகொண்டு கண்ணில் வளரும் நாகபடலத்தை எடுக்கிற முறையை,

"கருத்தாய் விரியிற் கடையுற்றுக் கறுத்த சோதி யதனுள்ளே
மருவாய் வெள்ளை மேலோடி மருவிச் செந்நூ லதுஒப்பாய்
உருவாய் மேனி திரண்டு செல்வோர் உரித்த தோல்தன் தசைபோல
வெருவாய் வந்த நற்கண்ணில் விலிசங் கொண்டே உரியாலே

விலிசங் கொண்டே உரித்தபின்னர் வினவிக் கிரியை நீகேளாய்
தெளியும் படியே நெய்கொண்டு திலங்க ஒத்தித் தானொழுக்குப்
புளியந் துளிரும் பூலாவோர் புதிய தோல்தன் னுடனேநீ
தெளியச் சீனி முலைப்பாலின் தியங்க நறுக்கி வார்த்திடுமே"

என்னும் பாடலின் மூலமாக விளக்குகின்றார். அதாவது கடைக் கண்ணிலிருந்து உண்டாகி வெள்ளைவிழியின்மேல் படர்ந்து சிவப்பு நூல்போலத் தோன்றிச் சதை போலத் தடித்துக் கறுப்பு விழியையும் கடந்து ஜோதிக்குச் சமீபத்தில் எட்டிப் பார்க்கும். இதை விலிசம் என்னும் ஆயுதம்கொண்டு உரித்தல் வேண்டும். உரித்த பின்னால் நெய் ஒத்தடம் செய்தும், கண்ணிற்கு நெய்விட்டும் புளியங் கொழுந்து, பூலாவேர் இவற்றோடு புதிய தேனைக் கூட்டி நசுக்கிப் பிழிந்து தாய்ப்பாலும் சேர்த்துக் கண்ணிலிட வேண்டும்.

இதேபோன்று கண்ணில் குடோரி வைத்திய முறை எனப்படும் பித்த காசத்திற்குண்டான அறுவை சிகிச்சை முறை முதலியனவும் இந்த நூலில் கூறப்படுகிறது.

இவ்வாறு மருத்துவ முறை மட்டுமல்லாது அறுவை மருத்துவ முறையிலும் சிறந்து விளங்கியவர் அகத்தியர் ஆவார்.

இன்னும் அகத்தியரால் எழுதப்பட்ட பல மருத்துவ நூல்கள் நமக்குக் கிடைக்காமல் இருக்கலாம். கிடைக்காத இந்த நூல்களையும் சேர்த்து அதன் முழுப் பயனையும் அனைத்து மக்களும் அடையச் செய்ய வேண்டியது தமிழர்களாகிய நம்முடைய முக்கியமான கடமையாகும்.

மேற்கோள் நூல்கள்

மாதவன், சூல் மருத்துவம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

அகத்தியர் நயன விதி

அகத்தியர் சஸ்திர விதி

அகத்தியர் செந்தூரம்

அகத்தியர் 2,000

அகத்தியர் வைத்திய இரத்தினச் சுருக்கம்

55

இம்மை வாழ்வை இனிமைபெறச் செய்யும் இராசகனி

செல்வி அ. சரசுவதி

மஞ்சள் நிறத்தை உடையதும், மங்கலமானதும், இறைபூசைக்கு உரியதும், முருகன் வேல்முனையில், காளிகோயில் சூலத்தின் உச்சியில் விளங்கப்பெறுவதும், வெற்றி பெற்றவர்களின் கைகளில் காணப்படுவதும், எல்லோரையும் இனிது வாழ வைப்பதும், எண்ணற்ற நோய்கட்கு எதிரியானதும், யாவர்க்கும் தோழனாக மிளிர்வதும், புளிப்புச் சுவையுடையதும் எலுமிச்சம்பழம் ஆகும். பண்டுதொட்டே எளிய புலவர் பெருமக்கள் மாமன்னர்களைக் காண இக் கனியை எடுத்துச் சென்றதால் இது இராசகனி எனவும் அழைக்கப்படுகிறது.

இப் பழத்தை 'நிம்மப்பண்டு' என்று தெலுங்கிலும், கேரளப்பகுதியில் 'தேசிக்காய்' எனவும், ஆங்கிலத்தில் 'லைம்', 'லெமன்', 'சைட்ரிக் மெட்டிகா', என்றும், வடஇந்தியாவில் 'நிம்பூக்–நிம்பு' என்றும் அழைக்கக் காண்கிறோம்.

நம் நாட்டில் கிடைக்கும் பழவகைகளில் மிகச் சிறந்த, குறைந்த விலையில் நிறைந்த பயனைக் கொடுக்கக்கூடியது எலுமிச்சம்பழமே. மருத்துவத் துறையில் இதன் பயன்கள் அளவிடற்கரியன என்பர். நம் உடல்வளர்ச்சிக்குத் தேவையானவை ஆறு தாதுக்கள். அவற்றை வளர்ப்பன அறுசுவைகள்; அவற்றில் ஒன்றான புளிப்புச் சத்தை–சுவையை இப் பழத்திலிருந்து பெறுகிறோம் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

மணங்கூட்டுவிக்கும் மங்கலக் கனி

ஆப்பிரிக்காக் கண்டத்தின் வடகிழக்குப் பகுதியிலே உள்ள எதியோப்பிய நாட்டில் நெடுங்காலமாக இருந்துவரும் அதிசயமான வழக்கத்தில் எலுமிச்சம்பழம் முதன்மை வகிக்கிறது. அந் நாட்டுப் பழங்குடியினரிடையே பரம்பரை பரம்பரையாக நடத்தப்படும் 'டிம்கட்' என்ற திருவிழாவில் அக் கிராம மக்களும் பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்தவர் களும் வந்து கூடுவர். அக் கூட்டத்தினரிடையே இளைஞர்களும் கன்னிப்பெண்களும் கலந்திருப்பர். இவர்களுள் ஓர் இளைஞன் ஒரு பெண்ணை விரும்புகிறான் எனில், "பெண்ணே! நான் உன்னைக் காதலிக்கிறேன்; நீ என்னை மணந்துகொள்வாயா?" என்று கேட்பதற்குப் பதிலாக ஓர் எலுமிச்சம்பழத்தைக் கொண்டுபோய்த் தான் மணக்க விரும்பும் பெண்ணிடம் கொடுப்பான். அவள் அதை ஏற்றுக்கொண்டால் அவளும் அவனை விரும்புகிறாள் என்றும், அவள் வாங்க மறுத்துவிட்டால், அவள் தன்னை விரும்பவில்லை என்றும் அறிந்துகொண்டு பின் அவளை விட்டுவிட்டு, தன் உள்ளங்கவர்ந்த மற்றொரு பெண்ணை நாடிச் செல்வான். அவள் ஏற்றுக்கொண்டால் இருவருக்கும் திருமணம் உறுதியாகிவிடும். இதில் இன்னொரு வேடிக்கையும் உள்ளது. இப்படி நிகழும் நிகழ்ச்சியில் எந்த ஒரு பெண், ஆடவர்கள் தன்னை நாடி வந்து கொடுக்கும் எலுமிச்சம்பழத்தை அதிகமான அளவு நிராகரிக்கிறாளோ அப் பெண்ணே அவ் வாண்டின் சிறந்த அழகியாகத் தேர்ந்தெடுக்கப் படுவாள் என அறியும்போது வாழ்வாங்கு வாழவைக்கும் வளமான எலுமிச்சையின் புகழ்தான் என்னே!

பாரதத்தைத் தாயகமாகக் கொண்ட இந்தியாவின் பல பாகங்களிலும் பயிரிடப்படும் எலுமிச்சையின் குணத்தை நம் முன்னோர்கள் நன்றாக அறிந்து பயன்படுத்தியிருக்கிறார்கள்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்னும் வள்ளுவத்தின்வழி வாழ்ந்து செழித்தவர்கள் நம் முன்னோர்.

சுண்ணாம்புச் சத்தும், வைட்டமின் 'சி', 'ஏ', 'பி ஒன்' (பி1) போன்ற உயிர்ச்சத்துகளும் அடங்கியுள்ள இப் பழத்தின் இனிய குணங்களை ஈண்டுக் காண்போம்.

நாள்தோறும் இப் பழத்தைச் சேர்த்துக்கொள்வதால் கண்நோய், காதுவலி, பித்தம் முதலியவை நீங்கும்; தாகம் தீர்க்கும்; வாந்தியை நிறுத்தும்; யானைக்கால் வியாதி உள்ளவர்கட்கும் இஃது அரிய மருந்தாகும் என்று "பதார்த்தகுண விளக்கப்" பாடல் பின்வருமாறு செப்புகிறது;

"தாகங் குநகநோய் தாழாச் சிலிபதநோய்
வேகங்கொ ளுன்மத்தம் வீறுபித்தம் – மாகண்ணோய்
கன்னநோய் வாந்தியும் போங்கட்டுவா தித்தொழிலின்
மன்னெலுமிச் சங்கனியை வாழ்த்து."

எலுமிச்சம்பழத்திலுள்ள வைட்டமின் 'சி' சத்து, கடற் பிரயாணங்களின் போது வரும் பசியின்மை, பூட்டுகளில் ஏற்படும் வலி, ஈற்றுப்புண், வீக்கம், கால்வீக்கம், இரத்தசோகை, சொத்தைப்பல் முதலிய வியாதிகள் வாராமல் தடுக்கும் சக்தி வாய்ந்ததென்பது மேனாட்டினரும் கண்டறிந்த உண்மையாகும்.

எல்லோராலும் இனிது போற்றப்படும் எலுமிச்சம்பழம் பூசனைக்குரிய பொருள்களில் ஒன்றாகும். பெரிய மனிதர்களைப் பார்க்கப்போகும்போது கையில் கொண்டுசெல்லும் எளிமையான இனிமையான உயர்பொருளாகவும் கருதப்படுகிறது. மேலும் இதன் சாறு சிவபெருமான் திருமுடிமீது அபிஷேகம் செய்யவும் பயன்படுவதோடு, மண்ணுலக மாந்தர் அரிந்துண்ணும் ஊறுகாயாகவும் பயன்படுகிறது. எரிகுணம் உடைய எலுமிச்சம்பழத்தைப் பாம்புக்குச் சிலேடையாக வைத்துப் பாடிய கவி காளமேகப் புலவரின் பாடல் இதோ!

"பெரியவிட மேசேரும் பித்தர்முடி யேறும்
அரியுண்ணு முப்புமே லாடும் – எரிகுணமாம்
தேம்பொழியுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்புமெலு மிச்சம் பழம்."

நாளும் பருகவேண்டிய நற்சாறு

எலுமிச்சம்பழச் சாற்றை வேளைக்கு அரை அவுன்சு வீதம் தினம் இரண்டு வேளை மூன்று அவுன்சு நீருடன் சிறிது சர்க்கரையிட்டுச் சாப்பிட்டால், நல்ல பசி ஏற்படும்; ஆயாசம் போகும்; தாகம் தீரும்; வயிற்றுக்கடுப்பு நீங்கும்; அம்மையினால் நேர்ந்த தேக வெப்பு அடங்கும்;

ஊர்த்துவமுகமாகவேனும் அதோமுகமாகவேனும் பூரித்து வெளியாகும் இரத்தப்போக்கை நிறுத்தும்.

சூடான காபி டிக்காசன் அல்லது பால் கலக்காத தேநீரில் பாதி அளவு எலுமிச்சம்பழச்சாற்றைப் பிழிந்து சாப்பிட்டாலும் இப் பழத்தை இரண்டாக அறுத்து நெற்றிப்பொட்டில் வைத்துத் தேய்த்தாலும் தலைவலி உடன் நிற்கும்.

இப் பழச்சாற்றில் சுத்தமான தேனும் வெந்நீரும் கலந்து நாளும் மூன்று வேளைகள் குடித்துவந்தால் தொண்டை வலி போகும்.

விளையாட்டு, ஒட்டப்பந்தயம், கடுமையான வேலை ஆகியவற்றின் காரணமாக ஏற்படும் களைப்பைப் போக்க இப் பழமொன்றை உடனே கடித்துச் சாப்பிட்டாலும் அல்லது இதன் சாற்றுடன் சர்க்கரை சேர்த்துக் குடித்தாலும் களைப்பு நீங்கும்.

கோழிமுட்டையில் ஒரு நெல்லிக்காய் அளவு எடுத்து இச் சாற்றில் நன்றாக அரைத்து, இஞ்சிச் சாற்றில் குழைத்து, காலை, மாலை இருவேளைகள் சாப்பிட ஈளை இருமல் நின்றுவிடும்.

இரண்டு அவுன்சு தேன் எடுத்து அதற்குச் சம அளவாக இச் சாற்றைக் கலந்து குழந்தைகட்குக் கொடுக்க இருமல் அகலும்; வாதநோய் தீரும்.

இச் சாற்றுடன் சமபங்கு நீர் சேர்த்து அடிக்கடி கொப்புளிக்க வாய்ப்புண், ஈற்றுப்புண் நீங்கும்.

இச் சாற்றுடன் இரண்டு அவுன்சு பன்னீர் கலந்து கொப்புளித்தால் வாய்நாற்றம் போகும்.

ஒரு கோப்பை நீரில் இச் சாற்றைப் பிழிந்து இதில் சிறிதளவு சோடா உப்புக் கலந்து குடிக்க வயிற்றுவலி தீரும். இச் சாற்றை வெயிலில் வைத்துக் குடிக்கக் கோடைகாலத்தில் ஏற்படும் அவ் வலி குறையும்.

இச் சாற்றை இளநீரில் பிழிந்து சாப்பிட்டால் வயிற்றுக்கடுப்பு நீங்கும்.

இச் சாற்றுடன் மோர் கலந்து சாப்பிட வயிற்றிலுள்ள கிருமிகள் ஒழிவதோடு, வாயு உபாதைகளும் அகலும்; சொறி சிரங்கு, கரப்பான் நீங்கும்.

இப் பழரசத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றையும் சமனெடை சேர்த்துச் சிறிதளவு சர்க்கரை கூட்டிப் பூமியில் நாற்பது நாள்கள் புதைத்து வைத்துப் பின் எடுத்து வடித்து வைத்துக்கொண்டு நாள்தோறும் சாப்பிட்டு வந்தால் நரம்புத் தளர்ச்சி, நாட்பட்ட சோகைநோய், கைகால் உளைச்சல், பசியின்மை, அசீரணம் போன்ற நோய்கள் மிக விரைவில் குணமாகும்.

விதைகள் நீக்கிவிடப்பட்ட தேவையான இப் பழச்சாற்றுடன் 4 உருபாவெடை சீரகம், 2 உருபாவெடை இந்துப்புப் போட்டுத் தினசரி வெயிலில் நன்கு காயவைத்து, இடித்துச் சலித்த பாவனச் சீரகச் சூரணம் அரைத் தேக்கரண்டியளவு வாயிலிட்டு வெந்நீர் சாப்பிடப் புளியேப்பம், வயிற்றுவலி, மயக்கம், வாய்க்கசப்பு, அசீரணம், கிறுகிறுப்பு, வாந்தி, குமட்டல் போன்றவை தீர்வதோடு, தொடர்ந்து 40 நாள்கள் சாப்பிடப் பித்தக்கோளாறும் நீங்கும்.

பேதிமருந்து சாப்பிட்டதன் காரணமாக அளவுக்கு மீறிப் பேதியானால் ஒரு பழச்சாற்றுடன் அரைக் குவளைத் தண்ணீர் கலந்து குடித்தால் அப் பேதி உடனே நிற்கும்.

மூன்று எலுமிச்சம்பழ ரசத்தை எடுத்துச் சரிசமமான வெந்நீரில் கலந்து அதனுடன் சிறிது உப்புச் சேர்த்து மூன்று வேளைகள் சாப்பிட மலச்சிக்கல் நீங்கும்.

இச் சாற்றோடு பவழபற்பத்தைச் சேர்த்துச் சீதக்கழிச்சல், பெருங்கழிச்சல், அதிகாரக்கழிச்சல் போன்ற பலவகையான கழிச்சல் நோய்கட்குக் கொடுத்தால் நல்ல பயன் ஏற்படும் என வைத்திய அறிஞர்கள் கூறுகிறார்கள்.

அதிமதுரம், சங்கன்வேர்ப்பட்டை இரண்டும் வகைக்கு இரண்டு ரூபா எடை எடுத்து, நன்றாக இடித்துச் சூரணமாக்கிச் சுண்டைக்காய் அளவு எடுத்து இப் பழச்சாற்றில் கலந்து சாப்பிட மஞ்சட்காமாலை மறையும்.

இலாகிரிப் பானங்களைத் தவிர்த்து இச் சாற்றுடன் வெந்நீர் கலந்து சர்க்கரை கொஞ்சம் சேர்த்துக் குடிக்கக் காக்காய் வலிப்புக் குணமாகும்.

இளஞ்சூடான நீரில் இச் சாற்றைப் பிழிந்து காலை மாலை குடித்து வந்தால் காசநோய் விரைவில் அகலும்; மூட்டுவலிகள் இருந்த இடம் தெரியாது நீங்கும்.

பொருந்தாத உணவாலும், உடலில் நச்சுப்பொருள்கள் சேருவதாலும் ஏற்படும் எலும்புகளில் வலி, கண்ணெரிச்சல், தலைவலி, மூர்ச்சை, மயக்கம் போன்றவை இச் சாற்றுடன் நீர் கலந்து நிரம்பக் குடித்து அமைதியாகப் படுத்துறங்க, விரைவில் நீங்குவதோடு பசியும் தோன்றும்.

இச் சாற்றை ஏராளமாகக் குடித்தால், கபக்கிருமிகள் அழிந்து கபகரம் நீங்கும்.

வைத்திய முறையில் பத்திய உணவு கொள்ளும் நோயாளிகட்குப் புளிக்குப் பதில் இச் சாறு பயன்படுகிறது.

இச் சாற்றில் தேவையான அளவு இந்துப்புப் போட்டு, மேல்தோல் எடுத்து நறுக்கி உலரவைத்த இஞ்சி வில்லைகளை ஊறவைத்து அவ்வப்போது வெயிலில் உலர்த்திக் கண்ணாடிக்குப்பியில் போட்டுக் காலையில் மட்டும் தொடர்ந்து சாப்பிட்டுவரப் புளியேப்பம், பித்தவாந்தி, மயக்கம், வயிற்று உப்புசம், அசீரணம் ஆகியவை அகலும்.

உணவுக் கோளாறுகளினால் பட்டினியாக இருப்போரும், உண்ணாவிரதமிருப்போரும், நீண்ட உபவாசமிருப்போரும் தாங்கள் மீண்டும் உணவு உட்கொள்ளும்முன் இப் பழரசத்தை முதலில் உண்பர்.

இச் சாற்றில் சிறிது உப்போ சர்க்கரையோ கலந்து காலை, மாலை குடித்து வர ஈரல் கோளாறு, மலச்சிக்கல், பித்தம் போன்றவை நீங்கும்.

அம்மான்பச்சரிசி இலையை வைத்து அரைத்த சாற்றுடன் பெரிய எலுமிச்சம்பழமொன்றைக் கலந்து இதனுடன் ஒரு கோப்பை நீராகாரம் சேர்த்து, ஒரு அவுன்சு நல்லெண்ணெய் கலந்து காலையில் சாப்பிட்டு வர வெட்டைச்சூடு அகலும்.

அரை அவுன்சு பழச்சாற்றுடன் அதே அளவு பசுந்தயிரும், இளந்தென்னம்பூச்சாறும் சேர்த்துக் காலை, மாலை கொடுக்கக் குழந்தைகட்குக் கணையினால் ஏற்படும் நீர்ச்சுருக்குப் போகும்.

இச் சாற்றோடு சர்க்கரை கூட்டி நீரைச் சேர்த்துப் பானகமாக்கிக் கோடைகாலத்தில் அடிக்கடி அருந்துவதால், தாகம் தீருவதோடு உடலுக்கும் இதம் தரும்.

இப் பழச்சாற்றுடன் சர்க்கரையும் தண்ணீரும் கலந்து தயாரிக்கப்படும் 'ஃப்ரூலெமன்' என்ற பானம் நல்ல விருந்து சாப்பிடுவதற்கு முன்பு, அதை ஏற்றுக்கொள்ளும் நிலையில், முதலில் வயிற்றைச் சரிசெய்து கொள்ளப் பெரிய பெரிய வீடுகளில் கொடுக்கப்படுகிறது.

இச் சாற்றைத் தலையில் தேய்த்துக் கிறுக்கு நோயாளிகளைக் குளிப்பாட்டுவதால் பித்த மிகுதியால் ஏற்படும் கிறுக்கு நோய்களைப் போக்கும் அபூர்வசக்தி பெற்றது.

இச் சாற்றுடன் நீர் சேர்த்து உட்கொள்ள உடலின் கருமை ஒரளவு மாறி உடல் ஒளிபெறும்.

இப் பழரசமும், ஊறுகாயுமாகத் தொடர்ந்து ஆறுமாத காலம் பத்தியத்துடன் உட்கொள்ளக் கைகால் பிடிப்பு, பெருவயிறு, பக்கசூலை, முடம், வெறி, மயக்கம், மனச்சோர்வு போன்ற நோய்கள் அடியோடு நீங்குவதோடு, நரைதிரை மாறும்.

தத்தம் உடலைக் காயகற்பமாக்கிக் கொள்ளச் சுலபமானமுறை எனத் தேரையர் பாடல் செப்புகிறது.

இதில் செய்யப்படும் ஊறுகாய், நம் நாட்டு மக்கள் அன்னத்துடன் விரும்பி உண்ணும் ஒரு துணைப்பொருளாகும். இதைத் தயாரிப்பது நம் தமிழகப் பெண்களின் கைவந்த கலை. மயக்கம், வாந்தி, குமட்டலுக்கு இது உகந்தது; வாத, பித்த சிலேத்துமத்தைக் கண்டிப்பது; இடுமருந்தையும் முறிக்கவல்லது.

முகப்பரு உடைய இளைஞர்களும், கன்னியரும் இச் சாற்றை நான்கு மாதங்கள் தொடர்ந்து உட்கொண்டுவர முகப்பரு நீங்கும் என டாக்டர் ஜார்ஜ் ஈனாரிஸ் என்பவரின் பரிசோதனை மூலம் அறியலாம்.

காட்டுச்சீரக விதையை இச் சாறுவிட்டு அரைத்துத் தடவிக் கொள்ளத் தலையிலுள்ள பேன், ஈர் அடியோடு ஒழியும்.

மருவு இதழ்களைப் போட்டுக் காய்ச்சி இறக்கிய நல்லெண்ணெயில் ஓர் எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து நன்றாகக் கலக்கி, தலைப்பாகத்தில் மயிர்க்கால்களில் படியும்படியாகத் தேய்த்து, சிறிது நேரம் ஊறவைத்து, பின் முடக்கத்தான் கீரையை அரைத்துத் தலையில் தேய்த்துத் தொடர்ந்து

மூன்று நாள்கள் தலைமுழுகப் பித்தத்தால் ஏற்பட்ட பொடுகு நீங்குவதோடு உரோமமும் உதிராமல் இருக்கும்.

இச் சாற்றுடன் உப்புப்பொடி கலந்து பல் துலக்க, பல் சுத்தி பெறுவதோடு வலுவும் பெற்றுத் திகழும்.

இச் சாற்றைத் தினமும் பூசிக் குளித்தால் சருமம் மிருதுவாகும். இப் பழத்தோலைக்கொண்டு புறங்கை, உள்ளங்கைகளைத் தேய்க்கக் கரடுநீங்கி கைகள் மிருதுவாகும்.

பருத்தித்துணி, லினன் போன்ற ஆடைகளில் ஏறிய பழக்கறைகளை உப்புக்கலந்த இச் சாற்றைத் தேய்த்து நீரில் அலச அக் கறைகள் அகலும். வார்னிசு கறையானால் இப் பழத்தோல்கொண்டு தேய்க்க அது நீங்கும்.

இவ்வாறு எலுமிச்சைச்சாறு உடலிலுள்ள வெப்பமாம் வெட்டைச் சூட்டைத் தணித்து, வயிற்றுக் கோளாற்றைப் போக்குவதோடு நாளும் வளர்ந்து வரும் உடல்நோய், மனநோய்களைத் தணிப்பதாக,

"சதாபலக் கனிகாய் சமூலமும் உணவே
நிதானமாய்ப் பயித்திய நிந்தைநோய் அகலுமே"

என வைத்திய நூலொன்று இதன் பெருமையைப் பேசுகிறது.

தேள் கொட்டின இடத்தில் இப் பழத்தை வைத்துத் தேய்க்க விரைவில் குணம் தெரியும்.

கைவிரல்களில் ஏற்படும் விரல்சுற்று நோய்க்கு இப் பழத்தை விரலளவு துளையிட்டுச் செருகி வைக்கக் குணம் தெரியும்.

இப் பழத்தோலை நைய நசுக்கி நெற்றிப் பாகத்தில் பற்றுப் போட்டால் ஒற்றைத் தலைவலி போகும்.

இப் பழத்தோலை வெயிலில் காயவைத்து உலர்த்தி இடித்துச் சூரணமாக்கி இதனுடன் உப்புத்தூளைச் சேர்த்துப் பல்தேய்க்கத் துர்நாற்றம் நீங்கி வெண்மை ஆகும்.

இப் பழத்தோலை மாடுகட்குத் தீனியாகக் கொடுக்கலாம். வெயிலில் காயவைத்துத் தூள் தயாரித்து உலோகக் கலன்களைச் சுத்தி செய்யலாம். நாம் வீசியெறியும் இப் பழத்தோலையும் விதைகளையும்

கொண்டு எண்ணற்ற வியாதிகளைத் தீர்க்கும் அதிசய மருந்துகளையும், அருமையான வாசனைப் பொருள்களையும், இரசாயனப் பொருள் களையும் மேல்நாட்டார் தயாரித்து வருகின்றனர்.

எலுமிச்சைக்குச் 'சம்பீரம்' என்று வடமொழியில் பெயராகும். இதிலிருந்து எடுக்கப்படும் சம்பீரத்தைலம் தலையில் தேய்த்துக்குளிக்க வெட்டைச் சூட்டைப் போக்கிக் கண் குளிர்ச்சியைக் கொடுக்கும். இப் பழச்சாற்றைக் கலந்து செய்யப்படும், சாதி சம்பீரக்குழம்பு சுரக்காலத்தி லேற்படும் வாந்திக்கும், குமட்டலுக்கும் நல்ல மருந்து. இதன் குணத்தைச் சித்தர்களுள் ஒருவரான தேரையர்,

"மந்திரிக்கு மந்திரியாய் மன்னனுக்கு மன்னனெனத்
தந்திரிக்கு மித்திரன்போற் சாருமே – முந்தவரு
கெம்பீர மாய்ச்சுரக்கின் கெண்ணியமாம் வர்கடர்க்குச்
சம்பீர மாமெலுமிச் சை"

எனப் பாடுகிறார்.

இதன் இலைகளை நீர்மோரிலிட்டுக் குடிக்க வைட்டமின் 'சி' சத்துக் கிடைக்கும்; நல்ல பசி ஏற்படும்.

இப் பழத்தோலிலிருந்து எடுக்கும் சக்தி வாய்ந்த எலுமிச்சை எண்ணெய் 'பி' வைட்டமின் அல்லது 'பிளாவோநாய்ட்' பல வாசனைத் தைலங்கட்குப் பயன்படுவதோடு ஐம்பது காலன் நீரில் பத்துச் சொட்டுகள் ஊற்றினால் நறுமண நன்னீராக மாறுகிறது. இரத்தக் குழாய்களை – இரத்தத் தந்துகிகளைப் பலப்படுத்தித் துரிதமாக வேலை செய்யத் தூண்டுகிறது. 50 கிராம் நல்லெண்ணெயில் ஓர் எலுமிச்சம்பழச்சாறு பிழிந்து கலக்கிய கலவைக் கிரீமைத் தலையில் தேய்க்கக் கபாலச்சூடு தணிவதுடன் தலையிலுள்ள பேன், பொடுகு நீங்கி மயிர்கொட்டுதல் நிற்கும்.

இப் பழத்தைக்கொண்டு எடுக்கப்படும் 'லெமன் பெக்டின்' ஜாம் செய்வதற்கு உதவியாக உள்ளது. நீரிழிவு வியாதிக்காரர்கட்கு ஏற்படும் காயங்கள் விரைவில் குணமாகும். 'ஹேமேப்பிலியா' என்ற நோயுள்ளவர் கட்கு உண்டாகும் காயங்களினால் ஏற்படும் இரத்தப் பெருக்கை ஈடுகட்ட இரத்தத்திற்குப் பதிலாக 'லெமன் பெக்டன்' கரைசலை இரத்தக் குழாய்க்குள் செலுத்தி விரைவில் நிவாரணம் பெறப்படுகிறது.

அகத்துறையில் இப் பழம் எண்ணற்ற வகையில் பயன்படுவது போன்று புறத்துறையிலும் பயன்படுகிறது. வயிற்றுவலிக்காரர்கள் எலுமிச்சம்பழத்தின் மூலமாகவே அம்மனைப் போற்றுகிறார்கள்.

கோவில் வழிபாட்டின்போது ஒரு பழத்தை உருட்டிவிட்டு அதை எடுக்க அட்டாங்கமாகத் தரையில் விழுந்து வணங்கி எடுப்பர். இப்படி நூற்றெட்டுத் தடவை பிராகாரத்தைச் சுற்றி விழுந்து வணங்குவதால் வயிற்றுவலி நீங்கி, எடைக் குறைவு ஏற்பட்டு, உடல் தூய்மை, உடலுறுதி பெறுவதோடு உள்ளச்சுத்தமும் அடைய வாய்ப்பேற்படுகிறது.

எலுமிச்சம்பழமாலை துர்க்கை அம்மனுக்குச் சாத்தி மகிழ்வர். திருமணமாகாத பெண்கள் செவ்வாய்க்கிழமைதோறும் இராகு காலத்தில் இப் பழத்தைச் சரியாதியாக அறுத்து, அதன் தோல்பாகத்தை உட்புறமாகத் திருப்பித் துர்க்கையின் சந்நிதியில் விளக்கேற்றி ஒன்பது வாரம் தொடர்ந்து வழிபடத் திருமணம் கைகூடும் என்னும் மக்கள் நம்பிக்கை இன்றளவும் நீடித்து வருகிறது.

இதில் செம்புச் சத்து நிறைய இருப்பதால், திருட்டி பரிகாரத்திற்கும் மாந்திரீக – தந்திர காரியங்களுக்கும் இந்தப் பழத்தைப் பயன்படுத்துதல் கண்கூடு.

திருட்டி தோசங்களால் பாதிக்கப்பட்ட ஒருவரின் உடலை மூன்று தடவை கீழ்மேலாகவும், மேல்கீழாகவும் சுற்றிவிட்டு அவ் வெலுமிச்சம்பழத்தைத் தெருவில் வைத்துக் காலால் மிதித்து நசுக்கிவிடுவர். சிலர் இப் பழத்தைக் காலடியிலே இட்டு மிதித்து நசுக்குவதற்குப் பதிலாகக் கையால் குத்தி இரண்டாகப் பிளந்து எடுத்துக் கைமாற்றி எறிந்துவிடுவதால் திருட்டி தோசங்கள் முதலானவை நீங்கிப் போகும் என்ற நம்பிக்கை இன்றளவும் மக்கள் உள்ளத்தில் நடமாடக் காண்கிறோம். சிலர் எலுமிச்சம்பழத்தின்மேல் கற்பூரத்தை வைத்துக் கொளுத்தி வேலை நிலையங்கள், தொழிலகங்களில் திருட்டி சுற்றிப் போடுவது இன்றும் பழக்கமாக உள்ளது.

பேய் பிசாசுகள், ஆணிகள் முதலியவற்றிற்குப் பலிப்பொருளாகவும் இப் பழம் பயன்படுகிறது. சிலர் தம்முடைய சக்தியை இப் பழத்திற்கு ஏற்றி அதை மந்திரித்துத் தருவதும் உண்டு. சிலர் எலுமிச்சம்பழத்தை இரண்டாகப் பிளந்து அறுத்த பாகத்திலே குங்குமத்தை அப்பிக் கோயிலில்

உள்ள அம்மன் சந்நிதியில் பலியாக வைத்திருப்பார்கள். உயிர்ப்பலி செய்ய வேண்டிய சடங்குகளில் இம் மரபு மேற்கொள்ளப்படுகிறது.

எலுமிச்சையில் 12 வகையானவை உண்டு என்றாலும் அவற்றின் பொதுவான குணம் ஒன்றே. இவற்றில் நாம் அதிகம் பயன்படுத்துவது நாட்டு எலுமிச்சையும், கொடியெலுமிச்சையும் ஆகும்.

இதுவரை கூறிய இப் பழத்தின் பெருமையினைப் **பதார்த்த குண விளக்க சாரசங்கிரகம்** அருமையாக விளக்குகிறது.

இவ்வாறு நாம் நெடிது வாழப் பயனுறும் எலுமிச்சம்பழம் பித்தத்தையும் மயக்கத்தையும் சுரத்தையும், தொண்டைவலி, ஈறுவலி போன்றவற்றையும் வாதநோயையும் போக்கக்கூடியது; தலைவலியை, மலச்சிக்கலைத் தீர்க்கக் கூடியது; காசநோயை வறட்டுச் சொறியை விலக்கக்கூடியது; வாந்தியை இரத்த பேதியை நிறுத்தக் கூடியது; நீர்க்கோவையை மூட்டுவலியை மஞ்சட்காமாலையை நீக்கக் கூடியது; வாய்ப்புண்ணை ஆற்றுவதோடு, வாயுவை அகற்றக் கூடியது; காலராக் கிருமிகளை ஒழித்து நீண்ட ஆயுளைப் பெருக்கக் கூடியது; விடத்தை முறிக்கும் விந்தையும் புரியக் கூடியது; பல்நோயைப் போக்கிப் பசியை உண்டாக்கிப் பாரில் பல்லாண்டு வாழ்ந்து செழிக்க வழிவகுக்கும் இது ஒரு கற்பகக் கனியன்றோ!

துணை நூல்கள்

சித்த மருத்துவக் களஞ்சியம்

பதார்த்த குண விளக்கம்

வயித்திய சார சங்கிரகம்

சித்தர் பாடல்கள்

உங்களுக்கு நீங்களே வைத்தியர்

பழங்களின் மருத்துவப் பயன்கள்

பயன்தரும் பச்சிலை வைத்தியம்

56

"இலமூரியா" - இலைமூலி பிறந்த கண்டம் - ஓர் அறிவியல் ஆய்வு

இரா. குமாரசாமி

பழந்தமிழ் நாட்டின் முதல் தமிழ்ச் சங்கம் கொலுவிருந்த நிலப்பரப்பைக் குமரிக்கண்டமென்று பல இலக்கியச் சான்றுகளும் வரலாற்றுச் சான்றுகளும் உறுதிசெய்கின்றன. இந்த நிலப்பரப்பு, பல ஆறுகளையும், மலைகளையும், குமரிக்கோடு போன்ற மலைப் பகுதிகளையும் கொண்ட வளமான பூமி என்னும் செய்தியை,

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள"

என்னும் சிலப்பதிகார வரிகள் மூலம் அறிகிறோம்.[1] குமரிக்கண்டத்தின் பல பிரிவுகளை, அங்கு வளர்ந்த பல மூலிகைகளின் அடிப்படையில் நம் முன்னோர்கள் ஏழ்தெங்க நாடு, குறும்பனை நாடுபோன்ற பெயர்களால் குறித்தனர். இப் பெயர்கள் பலவும் மூலிகை அடிப்படையில் பிறந்தவை. இப் பெயர்களைக் கொண்ட ஊர்கள் இன்றும் தற்போதுள்ள தமிழகத்தின் குமரிமாவட்டப் பகுதிகளாகத் திகழ்கின்றன. இவ்வாறு இன்று குறும்பனை, தெங்கம்புதூர் போன்ற பெயர்கொண்ட பகுதிகள் குமரி மாவட்ட ஊர்ப்பெயர்கள். மூலிகை அடிப்படையில் பிறந்த ஆணங்கோடு, (ஆண்மர மலைப்பகுதி), அத்தங்கோடு (அத்திமர மலைப்பகுதி), காஞ்சிரம் கோடு (எட்டிமர மலைப்பகுதி), வெள்ளிக்கோடு (விளாமர மலைப்பகுதி) போன்ற

பெயர்கள் தொல்காப்பியத் தொடர்புடையவை. மூலிகைச் சார்பில் பிறந்த இப் பெயர்கள் இன்றும் குமரி மாவட்டத்தில் வழக்காற்றி லுள்ளன.

மூலிகைப் பெயரில் திணைகள்

தமிழ்மக்கள் அந்தந்தச் சூழ்நிலையில் வளரும் மூலிகை அடிப்படையில் நிலப்பகுதிகளின் பெயரையும், அதன் திணை ஒழுக்கப் பெயரையும், திணைப் பெயரையும் அமைத்தனர் என்பதற்கு இங்குள்ள மூலிகைப் பெயர்களே சான்று. அகத்திணைகள் ஐந்திற்கும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் மூலிகைப் பெயர்களைச் சூட்டி வழங்கினர். வெட்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் போன்ற ஏழு பெயர்களும் தலைசிறந்த மூலிகைகளைக் குறித்தவை.[2] இம் மூலிகை மலர்கள் அனைத்தும் விநோதமான மணமுடையவை; மக்கள் மனம் கவர்பவை. இப் பெயரீட்டு முறை அடிப்படை அறிவியலாரையும் வியப்பிலாழ்த்தும் அறிவுக் கருவூலம் என்பது எமது கருத்து.

குமரிக்கண்டத்தின் பெயர்க்காரணம்

இவ்வாறான பெயரீட்டு வழக்கத்தின் அடிப்படையில் குமரிக்கோடு, குமரிக்கண்டம் என்னும் பெயர்கள் குமரித் தெய்வத்தின் அடிப்படையில் பிறந்த பெயரா? குமரி என்னும் மூலிகை அடிப்படையில் பிறந்த பெயரா? என்பதை ஆய்ந்துணர வேண்டும்.

இலைமூலிகையின் சிறப்புகள்

வடமொழியில் கன்னியாகுமரி என்றும், பரத கண்டம் முழுவதும் கிருதகுமரி என்றும், தமிழ்மொழியில் குமரிப்பூடு என்றும், வழக்கில் கல்தாழை (கற்றாழை) என்றும் வழங்கப்பெறும் சோற்றுக்கற்றாழை மூலிகை வரலாற்று அடிப்படையும் தொன்மையான பிறப்பும் எண்ணற்ற மருத்துவச் சிறப்பும் கொண்டதொரு மூலிகை என்ற செய்தியை அண்மைக்கால அறிவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.[3] இயேசுவின் உடலைப் பாதுகாக்க 'நிக்காடெமஸ்' என்பவர் கழுதைச் சுமையாகக் கொண்டுவந்த மூலிகைச் சத்து குமரிப்பூண்டின் சத்தான 'மூசாம்பரம்' என்று வேதாகமம் சொல்லுகிறது.[4] எகிப்து மன்னர்களின் உடலை இன்றும் பிரமிடுகளில் பாதுகாத்து வரும் பொருள் குமரிச்சாறு என்று இன்று உறுதி

செய்யப்பட்டுள்ளது.[5] தென்னகச் சித்தர்களும் வடநாட்டு முனிவர்களும் பன்னெடுங்காலம் முதுமையைச்சாடிப் பிணியிலிருந்து உடலை ஓம்ப வைத்துக்கொண்ட கல்பயோக மருந்து குமரிச்சாறு என்று சித்த இலக்கியங்கள் கூறுகின்றன. திருமூலரும் போகரும் குமரிக் கல்பத்தின் காயகல்பப் பெருமைபற்றிப் பேசுகின்றனர். தற்கால காயகல்ப அறிவியல் துறையில் (Tissue Bio Genesis) ஆய்வு செய்யும் ரஷ்ய விஞ்ஞானி வால்டிமில் ஃபிலட்டோவ் (Videmil Filatov) உடல் திசு அழிவைத் தடுத்து இளமையூட்டும் ஊக்கிச் சத்துகள் (Bio Genetic Stimulants) குமரிச் சாற்றில் உள்ளன என்று கூறியுள்ளார்.[6] இது "கொள்ளடா, கொள்ளடா குமரிக்காமம் கொள்ளடா" என்னும் சித்தர்தம் ஞான உபதேசத்தை உறுதிசெய்கின்றது.[7]

குமரி ஒரு காயகல்ப மருந்து

இவ்வாறான சிறப்பு மிக்க மூலிகையை இலமூரியாக் கண்டத்தின் இரண்டாவது காலகட்டத்தில் வாழ்ந்த குமரிமக்கள், நல்மருந்தாகப் பயன்படுத்தியதால் முக ஒளியும், உடல் உறுதியும் பெற்று வாழ்ந்தனர். இதனால்தான் இம் மூலிகை அக்காலத்தில் மன்பதை அறிந்த மூலி என்பதில் ஐயமில்லை. அவ்வாறாயின் இம் மூலிகைப் பெயரில் இது செழித்து வளர்ந்த மணற்பரப்பைக் குமரிக்கோடென்றும், நதிக்கரையைக் குமரி ஆற்றங்கரையென்றும், கண்டத்தைக் குமரிக்கண்டமென்றும் வழங்குவதில் வியப்பில்லை. இவ்வளவு சிறப்பாற்றல் கொண்ட மூலிகை இனம் இன்னும் குமரி மாவட்டப் பகுதியில் பரவலாகக் காணப்படுகிறது. இவ் வினத்தைக் குறுங்கற்றாழை என்பர் (Aloe Barbadensis Var Veer). இவ் வினம் தென் ஆப்பிரிக்க நாட்டிலிருந்து இங்கே பரவியது என்னும் மூலிகையியல் கூற்று ஏற்புடையதன்று.[8] இஃது அறிவியல் சான்றுகள் அடிப்படையில் நிலைநிறுத்த முடியாத ஒன்றாகும்.

குமரிச்செடியின் தற்போதைய பரப்பு விநியோகத்தை ஆயும்போது இது தென் ஆப்பிரிக்கா, தென் இந்தியா, இலங்கை, மலேசியத் தீபகற்பகங்கள், பாலினீசியா, ஆஸ்திரேலியா போன்ற தற்போது தொடர்பில்லாமல் ஆனால் தொன்மையான நாள்களில் நிலத் தொடர்புடைய குமரிக்கண்டப் பகுதிகள் போன்ற பகுதிகளில் நிறைந்திருப்பது, உயிரிகளின் தொடர்பு முறிந்த விநியோகக் கொள்கையை (Theory of Discontinous Distribution) ஆதாரத்துடன் நினைவூட்டுகிறது.

இலைமூலியின் கண்டமா லெமூரின் கண்டமா?

பழந்தமிழ்ப் பரப்பின் பெயர் மூலிகை அடிப்படையில் பிறந்த குமரிக்கண்டமென்றால், குமரிக்கும் முந்தைய நிலப்பரப்பான இலமூரியாக் கண்டப் பெயர் எவ்வாறு உருவாயிற்று என்ற கேள்வி பிறக்கிறது. சுமார் 115 இலட்சம் ஆண்டுகளாகக் கூர்தலறத்தில் எவ்வித மாற்றமுமின்றி வாழும் 'லெமூர்' (Lemur) என்னும் குரங்கின் பெயரால் இக் கண்டம் வழங்குவதாக வரலாற்று ஆசிரியர் பலர் கூறுகின்றனர். [9] இக் குரங்குகள் இன்றும் தென் ஆப்பிரிக்காவை அடுத்த மடகாஸ்கர், இந்தியா, மலேயாப் பகுதியில் உள்ளன. ஆனால் 300 இலட்சம் ஆண்டுகளுக்குமுன் தோன்றிய குமரிப்பூண்டு தென் ஆப்பிரிக்கா, இந்தியா, மலேயா, பாலினீசியா, ஆஸ்திரேலியா ஆகிய 5 லெமூரியாத் துண்டுப் பகுதிகளிலும் இன்னும் உள்ளன.

இதனால் குமரிக்கண்டமென்னும் பெயர் மூலிகைப் பெயரால் அமைந்தது என்பது இக் கட்டுரை ஆசிரியர் முடிவு. குமரிப்பூண்டை இலைமூலி (Phyllode) என்பர். இலையே சமூலமாகச் செயல்படுகிறது என்பது இதன் அறிவியல் பொருள். குமரிப்பூண்டின் அமைப்பு இவ்வாறானது. இந்த இலைமூலி செறிந்த கண்டம் மிகவும் தொன்மையான நாள்களில் – குமரி வரலாற்றுக்கு முற்பட்ட இலமூரியாவின் முதற்கட்ட நாள்களில் அப்போது உள்ள முதல் மூலிகைப் பெயரான இலைமூலி என்பதன் அடிப்படையில் 'இலைமூலியா' என்று வழங்கப்பெற்றது என்று கொள்ள வேண்டும். இப் பெயரே வழக்காற்றில் மருவி இலை இலைமூரியா வாகி, இறுதியில் இலெமூரியா என்று உருவெடுத்தது என்னலாம். வேலி, வேரியாவது போல மூலி, மூரியானது கடைப்போலி.

மூலி–மரஞ் செடிகொடிகளின் பொதுப் பெயர்

மூலிகைகளின் சிறப்பு மற்ற உயிரிகள் பெற்றிராத அதன் வேராகும். இந்தச் சிறப்பின் காரணமாக மூலம் (மூல்+அம்) என்று வேர் வழங்கப் பெறுகிறது. சிறுபஞ்சமூலம், சித்திரமூலம் போன்றவை எடுத்துக் காட்டுகள். மூல் உடையதை மூலி என்றனர் தமிழ்மக்கள். ஈசுர மூலி, பாதாள மூலி, இருவேரி, கொடுவேரி போன்றவை. எனவே, இலையே சமூலமாக இயங்கும் குமரிப்பூண்டைத் தொடக்கத்தில் இலைமூலி என்று வழங்கியதில் வியப்பில்லை. இது வளர்ந்த நிலப்பரப்பு இலமூரியா என்று பெயர் பெற்றதும் ஆய்வுக்குப் பொருத்தமான வழக்காகும். இலைமூலி

என்னும் பெயர் நாளடைவில் மருத்துவ அடிப்படையில் எலிமூலி ஆயிற்று. எலிகள் விரும்பி வாழும் இடம் இலைமூலியின் வேர்ப்பகுதியில் உள்ள வளைகள் என்பது அறிவியல் உண்மை. எலிக்குக் குமரியின் நாற்றம் மிகவும் விருப்பமானது. எனவே, இதன் சத்தை மூசாம்பரம் (Aloe) என்றனர். எலியா என்ற பெயர் இன்று இந்தியா முழுவதும் குமரிக்குப் பல மொழிகளில் வழங்கும் அடிப்படைப் பெயராகும் என்று அறிஞர் வாட் தமது நூலில் குறிப்பிடுகிறார்.

பல நாடுகளில் இலைமூலியின் சொல் வடிவம்

இலைமூலிகையை இன்றும் 'அலோடி' (Aloe) என்று தென்ஆப்பிரிக்க மொழிகளிலும், 'அலாம்' என்று யவன மொழியிலும், 'எலியா' என்று அரேபிய மொழிகளிலும், 'எல்வா' என்று சிரியா மொழியிலும், 'ஆலோ' என்று ஆங்கில மொழியிலும் இன்றும் வழங்குகின்றனர்.[10] தமிழ்மக்கள் சங்ககாலத்திற்கு முன்அளவில் இதனை இலைமூலியென்றும், சங்ககாலங்களில் குமரி எனவும் தற்காலத்தில், கல்தாழை எனவும் காரணப் பெயரிட்டு வழங்கினர் என்று கொள்ள இடமுண்டு. முற்காலப் பெயரான இலைமூலியின் திரிபு வடிவங்கள் இலமூரியாவினின்று பிரிந்து சென்று தொடர்பிழந்த பல நெடுந்தூர நாடுகளில் இன்று வழங்குதலும், இலமூரியாவின் ஒரு பகுதியான குமரிக்கண்டத்தில் வழங்கிய 'குமரி' என்னும் தமிழ்ப் பெயரின் தொடர்ச்சி குமரிக்கண்டத் தமிழ்நாட்டுப் பகுதிகளான தெலுங்கு, கேரள, கன்னடப்பகுதிகளில் இன்றும் கன்னியாகுமரி என்ற பெயரில் இப் பூண்டு வழங்குதலும், இலைமூலியும் குமரிப்பூண்டும் ஒரே மூலிகைதான் என்ற செய்தியை உறுதிசெய்கின்றன. இதனால் இலமூரியா என்னும் பெயரும் குமரிக்கண்டமென்னும் பெயரும் ஒரே மூலிகை அடிப்படையில் இரண்டு காலகட்டங்களில் தோன்றிய பெயர்களாகும். சங்ககாலத்தில் ஓமையூர் என்று வழங்கிய பகுதி தற்காலத்தில் மூலிகைப் பெயர் மாற்றத்தின் காரணமாக அழிஞ்சிக்கோடு என்று வழங்குவதற்கு இஃது ஒப்பாகும்.[11] எனவே, இலைமூரியாவும் குமரிக்கண்டமும் தமிழ்மக்களின் மூலிகை அறிவுக்குத் தக்கதோர் சான்றாகும்.

கண்பதி வழிவந்த கணபதி

இலமூரியக் குமரிக்கண்ட மக்கள் அற்புத ஆற்றலுள்ள குமரிப் பூண்டை அதன் "யோனி இலிங்க"த் (Phallus) தோற்றம் குறித்துத்

தெய்வமாக வணங்கி வந்தனர். தொன்னைபோல் அமைந்த இலையடுக்கு யோனியையும், நடுவில் வளரும் மஞ்சரித் தண்டு இலிங்கத்தையும் தோற்றத்தில் ஒப்பவை. இதனால் குமரிப்பூண்டை 'இலைப்பகுதி' ஈசனாக வழுத்தினர். தமிழர்களின் மூலிகைத்தெய்வமான இலைப்பகுதியில் எலிகள் விரும்பி வாழ்வதால் இதுவே நாளடைவில் மருவி எலிப்பதி அல்லது 'மூஷேசன்' என்னும் தெய்வமானது. நெற்றிக்கண் உடைய இலமூரிய மக்களின் உருவையே அக்காலத்தில் கல்லால் அமர் ஈசர் எனப்படும் தென்னாட்டு இறைவனுக்கும் தமிழ்மக்கள் சூட்டினர். குமரிப்பூண்டு விசித்திரமான வெகுட்டும் நாற்றமுடையது. இவ்வாறான நாற்றமுடைய பிராணியை எலி என்று பெயரிட்டு வழங்கலாயினர். எனவே, எலி விரும்புமிடம், எலிக்கோயில் (எலி அம்பலம்) அல்லது எலிஅம்பரம் (மூஷாம்பரம்) என்று வழங்கலாயிற்று. இதனால் இலைப்பதி என்னும் வழக்கு நாளடைவில் மருவி 'எலிப்பதி' என்றும், கண்ஈசர் கணேசர் என்றும், கண்பதி கணபதி என்றும் வழங்கலாயிற்று. இலைமூரியா மக்கள் முக்கண் உடையவர் என்ற கூற்றுக்கு இது சான்றாகும். இவர்தம் மூன்றாம் நெற்றிக்கண் நாளடைவில் செயலிழந்த காரணத்தால் உருமாறித் தற்போது ஆக்ஞை சக்கரமாக (Epiphysis) மூளையில் அமிழ்ந்து கிடக்கிறது. [12] குண்டலினி யோகத்திலும் சரப்பயிற்சியிலும் இன்றும் சிலர் இதன் ஆற்றலால் மூலக்கனலை மூளைக்கேற்றும் முறையைத் தெரிந்துள்ளனர். தொழிலிழந்த காரணத்தால் கன்று காலிகளின் தீனிச் சேமிப்புப்பை இன்று உருக்குலைந்து மனிதர்தம் உடலின் குடல்வாலாகச் சிறுத்திருத்தல் போன்றதாகும் நெற்றிக் கண்ணின் நெடுங்கால வரலாறு. இக்காலக் கணபதி என்னும் சொல் சங்க இலக்கியங்களில் இல்லை என்பது இவண் குறிப்பிடற்பாலது.

தொல்திராவிடச் சொற்கள் தரும் சான்றுகள்

எலு, எல, எலி, எல், இல, அலி, லி, லெ என்பவை எழுத்து (Letter) என்னும் சொல்லின் வேர்வடிவங்களாகும் என்பதைத் தமது 'எழுத்துலகம்' என்னும் நூலில் டாக்டர் ஜே.டி. சேவியர் விளக்குகிறார். [13] இவைபோன்ற கண், கணி, காணு, காண் போன்ற வடிவங்கள் "அறிவியல்" (Science) என்று பொருள்படும் தொல் திராவிடச் சொல் வடிவங்கள் என்றும் இவர் விளக்குகிறார். பிற்கால இந்துக்களின் அறிவியல் கடவுள், இவ் வடிப்படையில் எலிப்பதி அல்லது கணபதி என்று அழைக்கப்பெற்றார். இவை இலைமூரிய மக்களின் தெய்வமான இலைப்பதியின் வழித் தோன்றிய கிளவிகளாகும் என்பதில் ஐயமில்லை. இதனால் கணிஈசன்

என்னும் கிளவி தொல்திராவிட மொழிச்சொல் என்று விளங்குகிறது. இலைஈசன், கணிஈசன், இலைப்பதி, கண்பதி போன்ற தெய்வம் குறிக்கும் சொற்களின் நெருங்கிய உருவங்களை இன்னும் தூரநாடுகளில் எலிஈசா, எலிஈசபதி (எலிசபத்), அலிஈசா (அலிசா) போன்ற வேதாகமப் பெயர்களிலும் குரானிலும் காண்கிறோம். [14] (Original Language of Hindusim-J.T Xavier). இலை, இலா, இலவன், கணிகன் என்ற இலமூலியைக் குறிக்கும் தொல் திராவிடமொழிச் சொல்லின் அடிப்படையில் பிறந்த பெயரே இலங்கை, ஈழம் போன்ற பெயர்கள். இவற்றுக்கும் இங்கே வளர்ந்துவரும் மூலிகையான இலைமூலிக்கும் நெருங்கிய தொடர்புண்டு.

மேற்கூறிய மொழியியல் சான்றுகள் மட்டுமன்றிப் பின்வரும் மூலிகையியல், மரபுவழக்காற்றியல், மருந்தியல் சான்றுகளும் இல மூரியாவின் மூலிகைப் பெயர் அடிப்படையை உறுதிசெய்கின்றன.

மூலிகையியல் சான்றுகள் (Botanical Evidences)

சங்க இலக்கியங்களில் பல இடங்களில் இருவகையான ஞாழல்கள் பேசப்பெறுகின்றன : ஒன்று குமரிஞாழல்; மற்றொன்று கொடிஞாழல்.

குமரிமூலி போன்று வாழும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு செம்மை நிறம் பெறும் இயல்புடையன குமரிஞாழலின் செவ்வண்ணம் கலந்த இலைகள் என்ற விளக்கம், தற்கால 'மூலிகையியலுக்கு ஏற்புடையதாகும். குமரிப்பூண்டின் இலைகள் பொதுவாக நீர் கிடைக்கும் சூழ்நிலையில் பசுமைநிறம் உடையன. நீர்குன்றும் வறட்சியின்போது இந்த இலைகள் தற்காலிகமாகச் செம்மை நிறம் அல்லது செவ்வரிகள் பெறுவது இயல்பு என்பது அறிவியல் உண்மை. இதனால் குமரிப்பூண்டைச் செங்கற்றாழை அல்லது செவ்வரிக் கற்றாழை என்பர். இதுபோன்ற குமரிஞாழலின் இலையின் இளந்தளிர் செவ்வண்ணம் கலந்தது. குமரி இலையிலுள்ள குறுமுட்கள் ஞாழலின் கொம்பு முட்களை ஞாபகம் செய்பவை. எனவே, இவ்வகை ஞாழலைக் குமரிஞாழல் என்றனர் மூலிகை அறிவு மிக்க நம் முன்னோர்கள்.

மரபுவழக்காற்றுச் சான்றுகள் (Ethnological Evidences)

இலக்கிய இலக்கண வழக்காற்றைவிட மக்களின் மரபுவழக்கே பெரும் ஆற்றல் உடையது என்பது மொழிஇயலோர் அறிந்த உண்மை.

பனனெடுங்காலமாகப் பண்டைத் தமிழ்மக்கள் வழக்கில் நன்கு அறிந்திருந்த குமரிப்பூண்டுபற்றி இலக்கியச் சொல் குறிப்புகள் சங்க இலக்கியங்களில் அரிதாகவே உள்ளமை ஒரு குறைபாடாகும். மூலிகை அடிப்படையில் குமரி என்னும் சொல் 'குமரிமூத்த கூடோங்கு இல்' என்று நெடுநெல்வாடையிலும், குமரிஞாழல் என்று குறுந்தொகையிலும் பேசப்பெறுகிறது. ஆயினும் குமரிப்பூண்டு பற்றிய மக்கள் அறிவு அன்றுமுதல் இன்றுவரை மாணப்பெரியது என்ற உண்மையை நெடுநல்வாடை வரிகள் மூலம் அறிகிறோம். உழவர் நெற்கூடுகளிலும், வீடுகளிலும் ஒலுங்கு எனப்படும் ஒருவகைப் பூச்சியை ஒழிக்கச் சங்ககால முதல் தற்காலம் வரையிலும் நெற்கூடுகளில் குமரிப்பூண்டை நெடுங்காலம் பேணுதல் ஒரு மக்கள் வழக்கம் என்னும் உண்மையைத் தமிழ்நாட்டின் சிற்றூர்களில் இன்றும் காணலாம். 'குமரி மூத்த' என்பதற்கு வயது மூத்த என்று இலக்கிய வாசனையுடன் பொருள் சொல்லுவதை விடக் (ஒலுங்கு ஒழிக்கும்) குமரிப் பூண்டு நீடித்து நிலைக்கும் கூடு அல்லது வீடு என்று கூறும் வழக்காற்று விளக்கமே அறிவியலுக்கு ஒத்த ஒன்றாகும். இல்கிய வழக்கைவிட மரபுவழக்கு வன்மைமிக்கது என்பதில் அய்யமில்லை.

மருந்தியல் சான்றுகள் (Medical Evidences)

சங்க இலக்கியங்களில் குமரிப்பூண்டின் குறிப்புகள்பற்றிய குறைபாட்டிற்குக் காரணம் அதன் அற்புத மருந்தாற்றலும் ஒன்றாகும். குமரிக்கண்ட மக்கள் இதனை ஒரு கல்பயோக மருந்தாக உண்டு பயன் உற்ற காரணத்தால் இது சங்ககாலத்தில் ஒரு ரகசிய மருந்தாகிவிட்டது; எனவே, பரிபாஷையில்மட்டும் பேசப்பெற்றது; இதனால் சித்த ஆயுர்வேத மருத்துவ நூல்களில் மட்டுமே இடம்பெற்றது; இலக்கிய நூல்களில் இடம் பெறவில்லை. மருத்துவக்கலை வளரவளர மருத்துவர் மட்டுமே அறிந்த ஒரு மூலியாக மாறிவிட்டது; 108 அற்புதக் கல்ப மூலிகளில் ஒன்றாக ஒடுங்கிவிட்டது. மூலர் செய்த திருமந்திரம் மூவாயிரம், திருமூலர் கற்பம் போன்ற முற்சங்க மருத்துவ இலக்கியங்களிலும் போகர் ஏழாயிரம், யூகிமுனி பெருங்காவியம், தேரன் கரிசல் போன்ற பிற்கால மருத்துவ நூல்களிலும் குமரிப்பூண்டு ஒரு கல்ப மருந்தாக விரிவாகக் குறிப்பிடப் பெறுகிறது; ஆனால் தமிழ் இலக்கியத்தில் அதிதாகிவிட்டது. இவ்வாறு மிகவும் சிறப்பான மருந்து மூலிகள் இலக்கியத்தில் அரிதாகவே இடம்பெறுவதற்குக் கடுக்காய்பற்றிய குறிப்புகளை ஒரு எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம். கடுக்காய் பல்லாயிரம் ஆண்டுகளாகச் சித்த ஆயுர்வேத காலமுதல் பல்லவர் கல்வெட்டுகள் வரையும் பரவலாக

மருத்துவத்துறை இடம்பெறினும் சங்க இலக்கியத்தில் ஒருசில இடங்களில் மட்டுமே குமரிமூலியைப்போல் அரிதாகச் சொல்லப் பெறுகிறது.

'கடுக லித்த கண்ணகன் சிலம்பில்'

என்று கடுமரம்பற்றி மலைபடுகடாம் குறிப்பிடுகிறது. இதுபோலவே, தொல்காப்பியர் காலத்து சேமரம் (தற்போதைய சேரான்கொட்டை மரம்) அதன் கல்பயோக மருத்துவத்தன்மையாலும் பெயர் மாற்றத்தாலும் கடைச்சங்க நூல்களில் பேசப்பெறுவதில்லை. இஃதொப்பத் தொல்காப்பியர் கூறும் ஆண்மரம் சங்ககாலத்தில் ஒமைமரமாகப் பெயர் மாறியதால் சங்க இலக்கியத்தில் குறிப்புகள் இல்லை. குமரியும் சங்க இலக்கியத்தில் மேற்கூறிய காரணங்கள் பலவற்றால் விரிவாகக் குறிப்பிடப்பெறவில்லை என்று கொள்ள வேண்டும்.

பார்வைக் குறிப்புகள்

1. சிலப்பதிகாரம் , 4:11
2. இரா. குமாரசுவாமி (1982), பாடாண் மரம் – ஒரு மூலிகை ஆய்வு, ஜர்னல் ஆப் தமிழ் ஸ்டடிஸ் எண்:21
3. இரா. குமாரசுவாமி (1972), புற்றுநோய் மூலிகைகள், 120
4. ஜான் ஸ்டோன்வுட் (1938), விவிலிய மூலிகள், 163
5. இரா. குமாரசுவாமி (1971), இந்திய மருத்துவத்தில் தூபப்பொருள்கள், கேரள ஆயுர்வேதக் கல்லூரிக் கையேடு, 7:32
6. வ்லடமில் பிலட்டோவ் (1980), நயனவியல் கையேடு, அனைத்துலக நயனவியல் நிலையம், ஒடிசா, 19:72
7. சித்தர் ஞானக்கோவை, 162
8. கேம்பிள் (1938), சென்னை ராஜதானியின் மூலிகை அடைநூல், 3:132
9. கா. சுப்பிரமணியம் (1940), தமிழ் வரலாறு, 85
10. வாட்.ஜி (1989), இந்தியாவின் மருத்துவக் குறிப்பேடு, 1:132
11. இரா. குமாரசுவாமி (1982), பாடாண்மரம் – ஒரு மூலிகை ஆய்வு, ஜர்னல் ஆப் தமிழ் ஸ்டடிஸ் எண்:21
12. தி. இராமமூர்த்தி அய்யர் (1938), சித்தமருத்துவ நூல், 56
13. ஜெ.தி. சேவியர் (1970), எழுத்துலகம், 56
14. ஷி இந்து மதத்தின் மூல மொழிகள் , 36

57

தமிழ் இலக்கியத்தில் அறுவடைப் பின்சார் தொழில்நுட்பம்

வ. சுப்பிரமணியன்

நாட்டில் நல்லரசும் மக்கள் நல்வாழ்வும் சிறக்கப் "பூமி திருத்தி உண்" [1] என்றார் தமிழ் மூதாட்டி ஔவையார். மக்கள் உயிர்வாழ்க்கைக்கு உணவு வேண்டும்; உணவின்றி யாரும் உயிர்வாழ முடியாது. "உண்டி முதற்றே உணவின் பிண்டம்" [2], "மக்கள் யாக்கை உணவின் பிண்டம்" [3] என்றது மணிமேகலை. உணவை உருவாக்கும் தொழில் மேற்கொள்ளுகின்றவர்களே 'வாழ்வார்' என்றும், அவர்களே உலகத்தார்க்கு 'ஆணி' என்றும் வற்புறுத்தினார் திருவள்ளுவர். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" [4], "உழுவார் உலகத்தார்க்கு ஆணி." [5] இந்த உழவு தமிழ்நாட்டில் நெல் உற்பத்தியை வற்புறுத்தியது. "நெற்பயிர் விளை" [6], "நெற்பல பொலிக!" [7] நெல்விளை நன்னிலமாகத் தமிழகத்தைக் காட்டும் கவிஞர் பெருமக்கள், நெல்சேர உழுதுழுது பயன்விளைக்கும்" [8], "நெல்மிக உண்டு" [9], "நெல்விளைஞ்சிருக்கு வரப்பு உள்ளே மறைஞ்சிருக்கு" [10] என்ற நெல்விளைச்சலுக்கு உரமிட்டுக் காட்டினர்.

ஆக, காட்டிலும் மேட்டிலும் அலைந்து திரிந்த மனிதன், கண்டதை உண்டு, உண்டதை மறந்து, வாழ்வதைத் துறந்த நாள் அவன் தன்னைப்பற்றியும், தனது சுற்றுப்புறச் சூழல்பற்றியும் சிந்திக்கத் தலைப்பட்ட முதல்நாள் ஆகும். காடு திருத்திப் பயிர்விளைத்து, விளைந்த பயிரை முறையாக அறுவடை செய்து, காத்துப் பதன்செய்து,

பக்குவப்படுத்தி, சேமித்து வைக்கத் தொடங்கிய நாள் அவன் வாழ்வின் வெற்றிக்கு வித்திட்ட சிறந்த நாளாகும்.

வேளாண்மைத் தொழில் நமது பழைய இலக்கியங்கள் குறிப்பிடுவது போன்று பழம்பெரும் தொழில் மட்டுமன்று; நமது நாட்டுப் பொருளாதார வளர்ச்சியில் முதுகெலும்பானதும்கூட. பிற அனைத்துத் தொழில்களும் வேளாண்தொழிலைச் சார்ந்தே நிற்கின்றன. எனவே அறுவடைக் காலத்திலும், அறுவடைக்குப் பின்னரும் கவனிக்கப்பட வேண்டிய தொழில்நுட்பம் குறித்து அதிகக் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. வளர்ந்து வருகின்ற மக்கள்தொகைப் பெருக்கத்தை நினைவில் கொண்டு செயல்பட வேண்டும். "ஒருபிடி படியும் சீறிடம் எழுகளிறு புரக்கும்"[11] என்றது புறநானூறு.

அறுவடை முறைகளில் பல நுணுக்கங்களை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே பயன்படுத்தியுள்ளனர். நெல் முதலாய தானியங்களை அரிந்து எடுத்த விவரத்தை "அரிந்தெடுத்த நெல்"[12] என்று பெரும்பாணாற்றுப்படையும், "வாடிய வள்ளி முதல்அரிந் தற்று"[13] எனத் திருக்குறளும் எடுத்துக் கூறுகின்றன. வயலில் அறுவடை செய்யும் பொழுது நெல்மணிகள் சிதறி வீழாமல் இருக்கக் 'குயம்'[14] என்ற மூடுகருவி பயன்படுத்தப்பட்டதைக் 'குயம்கொடு அரிந்து."[15] எனும் தொடரும், "குயத்தால் அரிந்து"[16] எனும் தொடரும் விளக்குகின்றன. இவற்றை நோக்கும்பொழுது மலைபோல் உணவுப்பொருள்களை உற்பத்தி செய்யப் பசுமைப்புரட்சி கைகொடுத்தாலும், விளைவித்த உணவுப் பொருள்களையும், அதன் பயனையும் முழுமையாக அனுபவிக்கின்றோமா என்பது விடைகாண வேண்டிய வினாவாகும்.

1978ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி இந்தியாவில் பல்வேறு தானியங்கள் 118 மில்லியன் டன்னும், பயறு 12 மில்லியன் டன்னும் விளைவிக்கப்பட்டுள்ளன. அறுவடை காலத்திலும், அறுவடைக்குப் பின்னரும் தக்க கவனம் செலுத்தப்படாததால் விளைவித்த பயிரில் ஏறத்தாழ 10 விழுக்காடு, அதாவது ஆண்டுக்குப் 12 ஆயிரம் மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. அண்மையில் 1984–ல் தமிழகத்தில எடுத்த கணக்கெடுப்பின்படி நெல்லில்மட்டும் சுமார் 156 கோடி ரூபா இழப்பு. அறுவடையின் பொழுதும், அறுவடைக்குப் பின்னரும் தக்க முறைகள் கையாளப் பெறாததால் ஏற்பட்டுள்ளதென்பது தெரியவந்துள்ளது. இந்தப் பேரிழப்பைத் தடுப்பது அவசியமானது; அவசரமானது. இந்தச்

சிந்தனையின் ஆழத்தால் இந்திய அரசு அறுவடைப் பின்சார் தொழில்நுட்பவியலுக்கெனத் (Post Harvest Technology) தனித்துறை ஒன்று தொடங்கவிருப்பது வரவேற்புக்குரியது. இந்தச் சிந்தனையில் வயலில் உருவாகும் ஒவ்வொரு தானியமணியும் வீணாக்கப்படாது சேமித்து வைப்பதில் பண்டைய தமிழர் மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டுக்குரியதாக உள்ளது.

பண்டைத் தமிழர் விளைந்த கதிர்களைக் கைகளால் சுழற்றி அடித்தும், எருதுகளாலும் யானைகளாலும் மிதிக்கச்செய்தும் பிரித்தெடுப்பராம்; காற்றில் தூற்றிப் பதரையும் கூளங்களையும் விலக்கிக் களஞ்சியங்களில் சேமித்து வைப்பராம். சாணம் பூசப்பட்டும், வைக்கோற் புரிகளால் வெளிப்புறம் கட்டப்பட்டும் இருந்த நெற்கூடுகள் தானியச் சேமிப்புக்குப் பயன்படுத்தப்பட்டன. "புரிசுழல் நெற்கூடு"[15] நிறைந்த நெல் 'வளமனை'களில்[16] இருந்தனவாம்.

பொதுவாக நம் நாட்டில் பயிர்கள் வயலிலேயே நன்கு உலர்ந்த பின்னர்தான் அறுவடை செய்கின்றோம். நெல்லை எடுத்துக் கொண்டால் ஈரப்பதம் 17 முதல் 18 விழுக்காடு அடையும்பொழுதுதான் அறுவடை செய்யப்படுகிறது. இதனால் 3 முதல் 6 விழுக்காடுவரை சிதறல்மூலம் இழப்பு ஏற்படுகிறது. சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் 22 முதல் 25 விழுக்காடு ஈரம் இருக்கும்பொழுதே அறுவடை செய்வதால் பெருமளவில் சிதறல் மூலமான இழப்புகள் தவிர்க்கப்படுகின்றன. வயலில் பயிர்கள் அதிக நாள் இருந்தால் அதிக விளைச்சல் கிடைக்குமென எண்ணுவது தவறாகும். இதனை உணர்ந்துதான் குறித்த நாளில் நெல் அறுவடை முடித்து உடன் உளுந்து, பயறுவகைப் பயிர்களைப் பயிர்செய்ததை "அரிகாற் பெரும்பயறு நிறைக்கும்"[17] என்னும் தொடர் சுட்டுவதோடு, பயிர்ச் சுழற்சி முறையையும் (crop rotation) குறிப்பாகக் கோடிட்டுக் காட்டுகிறது. எந்தப் பயிரும் தனது முதிர்ச்சியை அடைந்த பிறகு, எத்தனை காலம் வயலில் இருந்தாலும் அஃது எடையில் அதிகரிப்பதில்லை. விதைத்த பின்னர் எத்தனை நாள்களில் பயிர் முதிர்ச்சி அடைகிறது என்பதைச் சரியாகக் கணக்கிட்டுவிட்டால் பயிரை வழக்கத்திற்கு முன்னதாகவே அறுவடை செய்துவிடலாம்; மேலும் சிதறல் மூலமும், பறவைகள் மூலமும் ஏற்படும் இழப்பையும் தவிர்க்கலாம். ஒவ்வொரு பயிருக்கும் அறுவடைக்குரிய தக்க தருணத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டு அறுவடை செய்வதன் மூலம் மேற்கூறிய

இழப்புகளைத் தவிர்ப்பதுடன், பயிர் வயலில் வீணே இருக்கும் நாள்களைத் தவிர்த்து, அடுத்த பயிர் விளைச்சலுக்கு முன்னதாகவே வழிவிடுவதாகவும் அமைக்கலாம். இந்தக் கருத்தை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய குறுந்தொகை கூறுகிறது. தினையுடன் அவரையும் கலந்து விதைக்க, தினை அறுவடைக்குப்பின் அவரை பூத்துக் காய்க்கத் தொடங்கியதாம். "சிறுதினை மறுகால் கொழுங்கொடி அவரை பூக்கும்"[18] என்பது வரிகள். இவ்வாறு கலப்புப் பயிராகப் பயிரிட்டும் (mixed crop), இழப்புகளைத் தவிர்த்தும், வயலையும் இடத்தையும் வீணே இருக்கும் நாள்களைத் தவிர்த்தும் அடுத்த பயிர் விளைச்சலுக்கு முன்னதாகவே வழிவிடுவதையும் அமைக்கலாம்.

மழையால் பயிர்கள் பாதிக்கப்படாமல் அறுவடையை முன்னதாகச் செய்யவும், தானியத்தின் ஈரத் தன்மையைக் குறைக்கவும் ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. 15 விழுக்காடு உப்புக் கரைசலை நெற்கதிர்களின்மேல் தெளிப்பதன் மூலம் 48 மணி நேரத்தில் பயிர் அறுவடைக்குத் தயாராகிவிடுகிறது. இம் முறையில் மூன்று முதல் ஐந்து நாள்கள் முன்னதாகவே பயிரை அறுவடை செய்ய முடிகிறது.

"சொல்லரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந்து ஈன்று .... காய்த்த"[19]

நெல் நிலத்துக்கு அணியாக அமைந்துள்ளது. மழைக்காலத்தில் அறுவடையாகும் பயிர்கள், நமது நாட்டில் தகுந்த களவசதி இல்லாததால் பெருமளவில் சேதமடைகின்றன. சேறு நிறைந்த களத்தில் மண்ணொடு கலக்கும் தானியங்கள் பெருமளவில் சேதமாவதால் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பொதுவான தக்க களவசதி அமைக்கப்படவேண்டும்.

"கோட்டெங்கின் குலைவாழைக்
காய்க்கமுகின் கமழ்மஞ்சள்
இனமாவின் இணர்ப்பெண்ணை
முதற்சேம்பின் முளைஇஞ்சி
அகல்நகர் வியல்முற்றத்து
உணங்குஉணாக் கவரும்"[20]

என்னும் வரிகளால் தெங்கு, வாழை, சேம்பு, இஞ்சி முதலியன அகன்ற களத்தில் உலர்த்தப்பட்டமை தெரிகிறது.

நமது நாட்டு (நிலங்கள்) வயல்கள் சிறிய சிறிய அளவில் மக்கள் பலரிடம் இருப்பதால் பிற நாடுகளைப்போல் வகைவகையான அறுவடை இயந்திரங்களை அனைவரும் பயன்படுத்த முடிவதில்லை. நமது நாட்டு வயல் அமைப்புக்கேற்ற அறுவடை இயந்திரங்கள் செய்வதில் தற்காலத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

"ஈரம் பட்ட செவ்விப் பைம்புளத்து
ஓர்ஏர் உழவன் போல" [21] வும்,

"வையகம் முழுவதும் வறிஞன் ஓம்புமோர்
செய்யெனக் காத்து . . . . . " [22]

உழவு செய்து, பருவத்தில் விதைக்க விரைந்து வேலை செய்து இழப்பைத் தவிர்த்த செய்திகள் தெரியவருகின்றன.

அறுவடை செய்யப்பட்ட நிலத்தைத் தரிசாக விட்டுவைக்காமல், தாளடியிலேயே உழுது இரண்டாம் போகம் பயிர்செய்த முறைபற்றிப் பதிற்றுப்பத்துப் பின்வருமாறு கூறுகிறது.

"காலம் அன்றியும் கரும்புஅறுத்து ஒழியாது
அரிகால் அவித்து" [23]

அறுவடைக்குப் பின்னர் ஏற்படும் இழப்பையும், விரயத்தையும் தவிர்ப்பதற்குப் பல முயற்சிகள் இன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தானியத்தைச் சுத்தம் செய்து தூசு, மண், சிறுகற்கள், கூளங்களை விலக்கி, தரம்பிரிக்க ஏற்படும் அதிக நேரம், செலவு, இழப்பு இவற்றைத் தவிர்க்கப் பல கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டு வேளாண் பெருங்குடி மக்கள் பயனடைய வகைசெய்கிறது. இன்றுள்ள புதிய கருவிகட்கு இணையான கருவிகள் அன்று இல்லையென்றாலும் உழுதற்குக் கலப்பையும், நிலத்தைச் சமப்படுத்தத் தளம்பு என்ற கருவியும் ஆறு, குளம், மணிநீர்த் தேக்கம், கிணறுகளிலிருந்து நீர் இறைக்க ஆம்பி, கிழார், ஏற்றம் முதலிய கருவிகளும், கதிர்களை உண்ணவரும் பறவைகளை ஓட்டுதற்குக் குளிர், தட்டை, கவண் போன்ற கருவிகளும் வடிவமைக்கப்பட்டிருந்த செய்திகளை இலக்கியங்கள் கூறுகின்றன.

"தேளர் பரந்தபுலம் ஏளர் பரவா
களிறு ஆடியபுலம் நாஞ்சில்" [24]

"இலங்கு மிளிர்செயில் தளம்பு தடிந்திட்ட"[25]

"ஏற்றமொடு வழங்கும் அகல்ஆம்பி"[26]

"மென்தொடை வன்கிழார்"[27]

பறவைகளால் ஏற்படுகின்ற தானிய இழப்பைத் தவிர்ப்பதற்காகப் பறைகொட்டிப் பறவை ஒச்சிய செய்தியைப் புறநானூறு கூறுகிறது.

"கழிசுற்றிய விளைகழனி
அரிப்பறையால் புள்ளோப்புந்து"[28]

"வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇச்
செங்கண் எருமை இனம்பிரி ஒருத்தல்
கனைசெலல் முன்பொடு கதழ்ந்துவரல் போற்றி" [29]

மலைபடுகடாம், "கைபுனை கவண்" [30] கொண்டு கிளி முதலிய பறவைகளை விரட்டித் தானியமணிகளைக் காத்ததைக் குறிப்பிடுகிறது. நீண்ட நெடுநாள்களுக்குத் தானியங்களைக் காக்கக்கூடிய உயரமான பெரிய "பெருநெல் பல்கூட்டு"க் குதிர்கள் பதன்செய் கருவிகளாகப்[31] (processing equipments) பயன்படுத்தப்பட்டுள்ளன. நன்செய், புன்செய்த் தானியங்களைத் தனித்தனியாகக் கூடுகளில் இட்டும் காத்து வந்துள்ளனர். இந்தக் கூடுகளைக் 'குதிர்கள்', 'தொகுகூடு' என்று பெயரிட்டு அழைத்தனர்.

"பிடிக்கணைத் தன்ன குதிர்" [32]

"கருங்கால் வேங்கைச் செஞ்சுவல் வரகின்
மிகுபதம் நிறைந்த தொகுகூடு" [33]

"புரிகுழல் நெற்கூட்டு"[34] நிறைந்த நெல்

"வளமனை"[35] களில் இருந்தனவாம்.

காலம் முழுமையும் கரும்புச்சாறு கிடைத்துக்கொண்டிருந்ததால், "காலமன்றியும் கரும்பறுத்து ஒழியாது"[36] இருந்ததால், கருப்பஞ்சாறு பிழியும் "கார்க்கரும்பின் கமழ்ஆலை"[37] ஆண்டு முழுமைக்கும் வேலை செய்ததோடு பக்குவப்படுத்தப்பட்ட செய்தியும் கிடைக்க வருகிறது. "பாகிற் கொண்டவும் அளவுபு கலந்து மெல்லிது பருகி"[38] மகிழ்ந்தனர். உணவைப் புழுக்கவைத்து உயிர்ச்சத்துகளைக் காத்தல் மிக முக்கியம்.

மனிதன் வேலை செய்வதற்கேற்ற சக்தியைப் புழுக்க வைத்தல் மூலம் நிறைவுபெற முடியுமென்பதை ஆய்வுகள் கூட்டுகின்றன.

"உப்பில்லா அவிப்புழுக்கல் கைக்கொண்டு" [39]

"மூழ்ப்பப் பெய்த முழுஅவிப் புழுக்கல்" [40]

அவரைவான் புழுக்கட்டிப் பயில்வுற்று" [41]

பாதுகாக்கப்பட்ட தானியமணி ஒவ்வொன்றும் புதிதாக உற்பத்தி செய்யப்படும் தானியத்தைவிட மதிப்பு மிகவுடையதாகும். நல்ல மண்வளம், நீர்வளம், கடின உழைப்பு, தொழில்நுட்பத் திறன் இவை இருந்தும் பாதி வயிற்றுக்குக்கூட உண்ணாமல் வாழும் மக்கள் கூட்டத்தின் பசிப்பிணி நீங்க அறுவடையின்போதும் அறுவடைக்குப் பின்னரும் ஏற்படும் இழப்புகளைத் தவிர்த்தால்,

"வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர் – இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்" [42]

என்னும் கூற்று உண்மையிலும் உண்மையாகும்.

அடிக்குறிப்புகள்

1. ஔவையார், ஆத்திசூடி
2. புறநானூறு, 18
3. மணிமேகலை, 22
4. திருக்குறள், 1033
5. திருக்குறள், 1032
6. ஔவையார், ஆத்திசூடி
7. ஐங்குறுநூறு, 1:2
8. பாரதிதாசன், புரட்சிக்கவி, ப.32
9. பாரதியார்
10. கல்யாணசுந்தரம், பட்டுக்கோட்டையார் பாடல்கள்
11. புறநானூறு
12. பெரும்பாணாற்றுப்படை
13. திருக்குறள், 1304

14. சிறுபாணாற்றுப்படை
15. சிறுபாணாற்றுப்படை, 72
16. ஐங்குறுநூறு, 4,1
17. ஐங்குறுநூறு, 47–3
18. குறுந்தொகை, 82 4,5
19. சீவகசிந்தாமணி, 52
20. பட்டினப்பாலை, 16 – 22
21. குறுந்தொகை, 131 – 4,5
22. கம்பராமாயணம், பாலகாண்டம் – அரசு.12
23. பதிற்றுப்பத்து, 30, 14–15
24. பதிற்றுப்பத்து, 26, 1–2
25. புறநானூறு, 61 – 3
26. மதுரைக்காஞ்சி, 90
27. மதுரைக்காஞ்சி, 91
28. புறநானூறு, 396
29. மலைபடுகடாம், 471 – 73
30. நற்றிணை, 138 : 4
31. நற்றிணை, 60:2
32. பெரும்பாணாற்றுப்படை, 186
33. அகநானூறு, 397 : 6–7
34. சிலப்பதிகாரம், நாடுகாண். 72
35. நற்றிணை, 119
36. பதிற்றுப்பத்து, 30 : 4
37. பட்டினப்பாலை, 9
38. புறநானூறு, 381 : 2
39. பெரும்பாணாற்றுப்படை, 195
40. புறநானூறு , 363 : 12
41. புறநானூறு, 399 : 9
42. பாரதியார், பாரதியார் கவிதைகள்

58

தமிழ் அச்சடிப்பில் நய நளினத் தொழில்நுட்பங்கள்

சாலினி இளந்திரையன்

தமிழில் அச்சுப்பணி தொடங்கிச் சுமார் 275 ஆண்டுகள் ஆகின்றன. முதலாவது தமிழ் அச்சகம், தமிழகத்துத் தரங்கம்பாடியில் கி.பி.1712ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.[1] ஆயினும், இன்று அச்சடிக்கப்படும் ஒரு துண்டறிக்கையையோ, சிற்றேட்டையோ, புத்தகத்தையோ, நாள் – வார – மாத இதழையோ எடுத்துப் பார்த்தால், மிகமிகத் தரங்குன்றியதாகவும் அழகமைப்பு இல்லாததாகவுமே தோன்றுகிறது. எங்கோ ஒன்றிரண்டு தமிழ் ஏடுகளில் அச்சுச் சிறப்பாக இருப்பது போலத் தோன்றலாம். அவையும், – 'பேச்சுப் பேச்சென்னும், பெரும்பூனை வந்தக்கால், கீச்சுக்கீச் சென்னும் கிளி'[2] என்பது போல, – ஆங்கிலம் போன்ற பிறமொழி அச்சடிப்புகளோடு ஒப்பிடும்போது தரம் இல்லாமலே காணப்படுகின்றன. 275 ஆண்டு வரலாறு உடைய தமிழ் அச்சடிப்பின் இந்த 'வளரா வளர்ச்சி'க்கு உரிய காரணங்களையும், அவற்றைப் போக்கித் தமிழ் அச்சடிப்பில் செயல்நேர்த்தி உண்டாக்கத் தக்க வழிமுறைகளையும் ஆராய்வதே இந்த எழுத்துரையின் நோக்கம்.

1.0. அச்சடிப்பில் தொடர்புபட்ட சாதனங்கள் அல்லது உபகரணங்கள் பல. அவை, முறையே தாள்கள், எழுத்துகள், அச்சுப்பொறிகள். அச்சகத் தொழிலாளிகள்,[3] ஆசிரியர்கள் (எழுத்தாளர்கள்) ஆகியோர் இத் தொழிலில் நீங்காத் தொடர்புடையவர்கள். ஆகவே, அச்சடிப்பில்

செம்மையும் சீர்மையும் ஏற்பட வேண்டுமானால், அச்சகச் சாதனங்கள் அனைத்தும் ஒழுங்குபட்டு அமைதல் வேண்டும். நமது தமிழ் அச்சடிப்பைப் பொறுத்தவரையில் இந்தச் சாதனங்களின் வளர்ச்சி எப்படி? அவற்றைப் பயன்படுத்தும் நமது தொழில்நுட்பத் திறன் எப்படி? – இவை சிந்தனைக்கு உரிய கேள்விகள்.

1.1. தாள்களைப் பொறுத்த அளவில் வகைவகையான தாள்களை நாம் உற்பத்தி செய்கிறோம்; மிஞ்சிய தேவைக்கு வெளிநாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்கிறோம். ஆகவே, கடிதத்தலைப்பு, அழைப்பிதழ், துண்டறிக்கை, சிற்றேடு, பெரிய புத்தகம், நாள் – வார – மாத இதழ்கள் என்னும் எது ஒன்றற்கும் பொருத்தமான வேறுவேறு தாள்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் வாய்ப்பு நமக்கு இருக்கிறது. வகைவகையான (கிரவுன், டெம்மி போன்ற) பல அளவுகளில் தாள் கிடைப்பதால், நமது வெளியீடுகளுக்கு ஏற்ற அளவிலான தாளைத் தெரிந்துகொள்ளவும் வாய்ப்பு உள்ளது.

1.2. தமிழ் அச்செழுத்துகள் முதன்முதலாக 1577–ல் கொச்சியில் செய்யப்பட்டன.[4] மரக்கட்டையில் செதுக்கப்பட்ட இந்த எழுத்துகள் 'மலபார் எழுத்துகள்' என்றே பெயர்பெற்றன. இன்று அச்செழுத்துகள் வகைவகையாக ஈயத்தில் வார்க்கப்படுகின்றன. இப்பொழுது, விஞ்ஞானப் போக்கில், அச்செழுத்துகளெல்லாம் ஒருவிதக் கணக்கியல் அளவுப்படியே உருக்கி வார்க்கப்படுகின்ன. அச்செழுத்தின் அலகு புள்ளி (பாயின்ட்) எனப்படும்.[5] 6 புள்ளி முதல் 72 புள்ளி வரை வெவ்வேறு அளவுகளில் எழுத்துகளை வார்க்கும் தொழிற்கலை வளர்ந்துள்ளது. ஒவ்வோர் அளவு எழுத்திலும் வகைவகையான முகங்களும் (டைப் ஃபேசஸ்) உருவாகியுள்ளன. உரோமன், இத்தாலிக், கோதிக் என்ற முக்கிய எழுத்துகளேயன்றி, குறுகிய எழுத்துகள், பெரிதான எழுத்துகள், விரிந்த எழுத்துகள், நிழலுள்ள எழுத்துகள், வரிக்கோட்டு எழுத்துகள், கையெழுத்து வடிவ எழுத்துகள், 'டெர்ட்டு' எழுத்துகள் என்று வெவ்வேறு வகையாக அச்செழுத்துகள் சமைக்கப்படுகின்றன.[6]

1.3. அச்சுப்பொறிகளும், பழைய காலத்துத் தட்டை அச்சுப் பொறி என்ற எல்லையிலிருந்து, உருளி அச்சுப்பொறி, சுழல் அச்சுப்பொறி, எதிரீட்டு அச்சீட்டு முறை என வகைமை ஏற்பட்டுள்ளது.[7]

1.4. இத்தனை வாய்ப்புகளையும் பெற்றிருக்கிற நாம், இத் துறையில் 275 ஆண்டு காலம் தொழில் நடத்திய பிறகு, நமது அச்சுப் பணியைச்

சீராகவும் நேர்த்தியாகவும் செய்யவில்லை என்றால், கருவிகளைக் கையாளும் தன்மையிலும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் முறையிலும் ஏதோ குறைபாட்டுக்கு உட்பட்டிருக்கிறோம் என்றே நினைக்க வேண்டியுள்ளது.

2.0. 'சட்டி ஒட்டையாக இருந்தாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி' என்பதே நம்மவர்களின் போக்காக இருந்துவந்துள்ளது. நமது தமிழ் அச்சடிப்பிலும் இந்த இயல்பு வெகுவாக நிழலிட்டுள்ளது. ஓர் அழைப்பிதழ், துண்டறிக்கை, மடிப்பு, சிற்றேடு, புத்தகம் எதுவாயினும், அதற்கு ஏற்ற தாளமைப்பு, அச்செழுத்து, அச்சுப்பொறி என்பவற்றில் நாம் போதிய கவனம் செலுத்துவதில்லை. 'சட்டி ஒட்டையாக இருந்தால் கொழுக்கட்டை எப்படி வேகும்? வெந்தாலும் அதன் சுவை எப்படி இருக்கும்?'–இப்படி நாம் சிந்திப்பதில்லை. இதனால் நமது துண்டறிக்கை துண்டறிக்கைபோல இல்லை; நமது புத்தகம் சரியான புத்தகமாக இல்லாமல், துண்டறிக்கைகளின் அல்லது சிற்றேடுகளின் தொகுப்புப்போலக் காட்சியளிக்கிறது.

2.1. ஓர் அழைப்பிதழ் அல்லது துண்டறிக்கையின் நோக்கமும் ஒரு சிற்றேட்டின் நோக்கமும் ஒன்றல்ல; ஒரு பெருநூலின் நோக்கம் இவற்றின் நோக்கினின்று முற்றிலும் வேறுபட்டது. ஆகவே, இவை ஒவ்வொன்றிற்கும் தாளளவும், வடிவமைப்பும், எழுத்தமைப்பும் வேறு வேறாக இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கும் தாளின் அளவுக்கு ஏற்ப, அதிலே பயன்படுத்தும் எழுத்துகளின் (புள்ளி) அளவு தேர்ந்தெடுக்கப் படவேண்டும்.

2.2. ஓர் அழைப்பிதழ் ஒரே ஒரு செய்தியைமட்டும் தெரிவிக்கிறது; அந்த நிகழ்ச்சித் தொடர்பான இட, நேர விளக்கங்களையும் சொல்லுகிறது. ஆகவே, அது சுருக்கமானதாகவும் இந்த மூன்றைப்பற்றிய விவரங்களை மட்டும் முதன்மைப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். திருமண அழைப்பிதழில் மணமக்களின் பெயரைவிடப் பெரியதாகத் திருமணம் நடத்தி வைப்பவரின் பெயரை அச்சிடக் கூடாது. அப்படி அச்சிடப்படும் அழைப்பிதழ் திருமண அழைப்பிதழ் என்னும் தன்மையையே இழந்துவிடுகிறது. எனவே, அழைப்பிதழ் அச்சடிப்பில் எந்தச் செய்தியை அல்லது எந்தப் பெயரை எந்த எழுத்தில் அமைக்க வேண்டும் என்பதே முதன்மை பெற வேண்டும்.

2.3. எழுத்தமைப்போடு, அழைப்பிதழின் செய்தி அமைப்பிலும் சிறிது கவனம் செலுத்த வேண்டும். பழைய காலத்துப் பிராமிசரி நோட்டுகளில் முகவரி கொடுப்பது போல, மணமக்களின் அப்பா, அம்மா, தாத்தா – பாட்டி, அண்ணன் – அண்ணி போன்றவர்களைப்பற்றிய விவர விரிப்பு களைப் போட்டு மணமக்கள் பெயர்களையே மூழ்கடித்துவிடக் கூடாது.

2.4. ஒரு துண்டறிக்கை வெளியிடும்போது, உடனடியாகப் பார்ப்போரைக் கவரும் விதமான அளவில் தாளைத் (சதுரம், நீண்ட சதுரம், நெடுநீளச் சதுரம் முதலான வடிவங்களில்) தேர்ந்தெடுக்க வேண்டும். அந்தத் தாளமைப்புக்குப் பொருத்தமான அளவுகளில் எழுத்துகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இவைஇவை ஒரத் தொடக்க வரிகள், இவைஇவை உள்ளடங்கிய வரிகள் என்று அடிகளின் அமைப்புகளை முதலிலேயே வகுத்துக்கொள்ள வேண்டும். முதன்மைச் செய்தியை உடுக்குறியினாலோ, அதுபோன்ற ஒளிவட்டம், இருள்வட்டம், சதுரம் போன்ற குறிகளினாலோ எடுத்தமைக்க வேண்டும். விவரங்களை மிகுதியாகக் கொட்டி நிறைத்துவிடாமல், அவற்றைத் தொட்டுக் காட்டி, மேலும் அறியத் தூண்டும் விதமாகத் துண்டறிக்கையின் உள்ளடக்கம் அமைய வேண்டும்.

2.5. சிற்றேடு என்பது ஒரே ஒரு கருத்தையோ நிகழ்ச்சியையோ, அதற்கு விளக்கமான செய்திகள் அல்லது நிகழ்ச்சிகளின் துணையோடு விவரிக்கிறது. எனவே, பத்திகளும் பக்கங்களும் பிரித்துத் துணைத் தலைப்புகள் கொடுத்துச் சிற்றேடு தயாரிக்கப்பட வேண்டும். துணைத் தலைப்புகள் அனைத்தும் ஒரே அளவு எழுத்திலும், செய்தி – கருத்துகள் அனைத்தும் (வேறு) ஒரே அளவான சிறிய எழுத்திலும் அமைவது நல்லது. எடுத்துக் காட்டப்படும் கருத்து அல்லது செய்திகளில் மிக முக்கியமானவற்றை வேறொரு தடித்த எழுத்தில் தரவேண்டும். ஆனாலும் இவை அருகிலே இடம்பெற வேண்டும்.

2.6. புத்தகங்கள் பல செய்திகளைத் தருபவை; ஆர அமர உட்கார்ந்து படிக்கப்பட வேண்டியவை. புத்தகம் படிப்பவர்கள் ஓரளவு படித்தவர்களாக இருப்பதால், அதிலே அவர்கள் சித்திரச் சிங்காரிப்புகளை எதிர்பார்ப்பதில்லை. ஆதலால், புத்தகம் முழுவதும் ஒரேவிதமான எழுத்தில் கோக்கப்பட வேண்டும். எழுத்து அமைப்பே, நூற்கருத்தின் மேடுபள்ளமில்லாத தங்குதடையற்ற இயக்கத்தைக் காட்டுவதாக இருக்க வேண்டும்.

2.7. நாளிதழ், வாரஇதழ், மாதஇதழ் போன்ற பருவ இதழ்களின் எழுத்தமைப்பு வகைமைப்பாடுகள் நிறைந்தது. கட்டுரைக்கு ஓர் எழுத்து, கதைக்கு ஓர் எழுத்து, கவிதைக்கு ஓர் எழுத்து, இடைவரும் துணுக்குச் செய்திகளுக்கு ஓர் எழுத்து என, வெவ்வேறு புள்ளி மற்றும் முகஅமைப்பு எழுத்துகளைப் பருவ இதழ்களிலே பயன்படுத்த வேண்டும். கிரவுன் 1–க்கு 4, 1–க்கு 8 என்றும், டெம்மி 1–க்கு 4, 1–க்கு 8 என்றும் தாள்அளவு வேறுபடும்போது, அவற்றுக்கு ஏற்ப எழுத்துகளின் அளவிலும் வேறுபாடு வேண்டும்.

3.0. தாளமைப்பு, அச்செழுத்து வடிவுகள் என்பவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டபின், நமது அச்சிடு பொருளுக்கு ஏற்ற அச்சுப்பொறியையும் தேர்ந்தெடுக்க வேண்டும். 'கீரைத்தண்டு பிடுங்க ஏலேலப் பாட்டா?'[9] என்பது ஒரு பழமொழி; 'குருவி தலையிலே பனங்காயை வைத்தது போல'[10] என்பது ஓர் உவமைத்தொடர். அச்சடிப்புத் தொழிலில், இவை இரண்டும் அடிக்கடி நினைவுகூர வேண்டிய கருத்துகள். ஒரு துண்டறிக்கை அல்லது அழைப்பிதழ் சிறிய தட்டை அச்சுப்பொறியில் அச்சிடப்பட வேண்டும்; நம்மிடம் பெரிய அச்சுப்பொறி இருக்கிறது என்பதால், அதிலே இவற்றை அச்சிட முனையக்கூடாது. அதேபோல், நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான பக்கங்கள் கொண்ட புத்தகத்தை, ஒரே தடவையில் 16 பக்கம் அல்லது 32 பக்கம் அச்சிடக் கூடிய பெரிய சுழல் அச்சுப்பொறியில் அச்சிட வேண்டும்; தட்டை அச்சுப்பொறியில் இரண்டு இரண்டு பக்கமாக அச்சிட்டுக்கொண்டு இருக்கக் கூடாது.

3.1. உடல் மருத்துவர்களுள் காலுக்கு ஒருவர், தலைக்கு ஒருவர், தொண்டைக்கு ஒருவர், இருதயத்துக்கு ஒருவர் என்று தனிப் பார்வையர்கள் (ஸ்பெசலிஸ்டுகள்) பெருகிவரும் காலம் இது. அச்சடிப்பிலும், வகைவகையான அச்சடிப்புகளை அவற்றுக்கு ஏற்ற வேறுவேறு அச்சுப்பொறிகளில் அச்சிடுவது என்ற வழக்கம் ஏற்பட வேண்டும். இதனால் ஒவ்வொருவகை அச்சடிப்பிலும் புதிய புதிய அழகுகள் உண்டாக வாய்ப்பு ஏற்படும்; அச்சுத்தொழில் வளர்ந்தோங்கவும் வழிபிறக்கும்.

4.0. தமிழ் அச்சடிப்புத் தொழிலில் மிகுதியாகப் புறக்கணிக்கப் படுவது அச்சகம். புத்தகம் எழுதுகிறவர்களோ,அச்சு மெய்ப்புத் (புரூப்)

திருத்துகிறவர்களோ அச்சகத்தின் வாய்ப்பு வசதிகளைப்பற்றிக் கொஞ்சமும் அக்கறை கொள்வதில்லை:

'எதையாவது எப்படியாவது கிறுக்கிக் கொடுத்தால் அச்சகத்தார் திருத்தி அமைத்துக்கொள்வார்கள் – அமைத்துக்கொள்ள வேண்டும்' என்று புத்தக ஆசிரியர்கள் நினைக்கிறார்கள். பத்திரிகைகளுக்கு வெறும் பொழுதுபோக்கு – பக்கநிரப்பித் தொடர்கதை எழுதுகிறவர்கள் போல, புத்தகம் அச்சாக அச்சாகப் பகுதி பகுதியாக எழுதிக் கொடுத்துக் கொண்டே இருப்பவர்களும் உண்டு. தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதினால் அச்சுக்கோப்புக்கு வசதியாக இருக்கும் என்பதைக்கூடப் பலர் நினைப்பதில்லை.

4.1. புத்தகத்தை அழகாகத் தட்டெழுதி அல்லது ஒரே அளவான தாளில் ஒரேவிதமான கையெழுத்தில் எழுதி முடித்துக் கொடுத்தால், அந்தப் புத்தகத்துக்கு மொத்தம் எவ்வளவு தாள் தேவை என்பதை முடிவுசெய்து ஒரே விதமான – ஒரே தரமான தாளை – வாங்கிக்கொள்ள வசதி ஏற்படுகிறது. புத்தகத்தின் மொத்த அளவு (பக்கங்கள்) எவ்வளவு என்று தெரிவதால் அதற்கு ஏற்ற எழுத்துகளைத் தேர்ந்துகொள்ளவும் வாய்ப்பு அமைகிறது.[11] இந்த வாய்ப்புகளுக்கு இடமில்லாதபோது, புத்தகத்தில் ஒரே சீரான பக்கவரி அமைப்பையோ எழுத்துத் தேர்ந்தெடுப்பையோ செய்ய இயலாது. அடித்து முடித்தபின், புத்தகம் நாலாகோலமாகக் காட்சியளிப்பதையும் தவிர்க்க இயலாது.

4.2. புத்தகம் அச்சிடப்படும்போது மெய்ப்புத் (புரூபு) திருத்துகிறவர்களின் ஒத்துழைப்பும் அச்சடிப்புத் தொழிலில் மிகவும் முக்கியமானது. மெய்ப்புகளில் தட்டு (காலி) மெய்ப்பு, பக்கமெய்ப்பு என இருவகை உள்ளது. தட்டுமெய்ப்பிலேயே, தேவையான திருத்தங்களையும், இணைப்புகளையும், கழிப்புகளையும் செய்துவிட வேண்டும். பக்க அமைப்புச் செய்தபின் (பக்க மெய்ப்பில்) செய்யப்படும் திருத்தம், எழுத்து அல்லது சொல் என்ற அளவிலேயே இருக்க வேண்டும். அவை, தொடர்களாகவோ பத்திகளாகவோ நீண்டால், பக்கம் முழுவதையும் பிரித்து வரிகளைப் பெயர்த்து அடுக்க வேண்டிய தொல்லை ஏற்படும். இதனைத் தவிர்ப்பதற்காக, அச்சகத் தொழிலாளிகள், ஒரு பக்கத்தில் வரிகளுக்கிடையே இடம்விட்டும் மற்றொரு பக்கத்தில் இடம்விடாமலும் வரியமைப்புச் செய்ய வேண்டிய நெருக்கடி உண்டாகும். இதனால் புத்தகத்தின் அமைப்பழகே கெட்டுப்போகிறது.

5. இறுதியாக, நாட்டிலே கல்விஅறிவு குறைவாக இருக்கின்ற இன்றைய சூழ்நிலையிலே, அச்சுத்தொழிலில் ஈடுபடுவோரில் பலர் மிகக் குறைந்த படிப்பு உடையவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலர் அச்சடிப்புத் தொழிலை, அதற்கு என்று உள்ள தொழிற்பள்ளியில் படித்தவர்கள் அல்லர்; அச்சகத்தில் பணி செய்துகொண்டே சிறுகச் சிறுக இத் தொழிலைக் கற்பவர்களே இத் துறையில் மிகுதியாக உள்ளார்கள். அச்சடிப்பில் இவர்கள் செய்துவிடும் விநோதமான எழுத்துப்பிழை, அமைப்புப் பிழைகளைப்பற்றி எத்தனையோ கதைகள் வழங்குகின்றன. இவை இல்லையாகும் விதமாக, நாட்டிலே கல்வி பெருகி, அச்சுத்துறைத் தொழிற்கல்வி வளர்ச்சி அடைய வேண்டும். அதேபோல், புத்தகம், துண்டறிக்கை, சிற்றேடு முதலியவற்றை எழுதுவோரும் தயாரிப்போரும், அச்சடிப்புக் கலையின் நுட்பங்களில் ஓரளவாவது தேர்ச்சி பெற்று, அச்சகத்தாருக்குத் தேவையான ஒத்துழைப்பை நல்க வேண்டும். எல்லாப் பொறுப்புகளையும் போதிய படிப்பறிவு இல்லாதவர்களிடம் விட்டுவிட்டு, வேலை முடிந்தபின் அழகாக இல்லை, சீராக இல்லை என்றெல்லாம் முணுமுணுப்பதில் பயனில்லை.

6. ஆங்கிலம் போன்ற மொழிகளின் அச்சடிப்பு எழிலும் ஏற்றமும் மிக்கதாக இருக்கிறது. தமிழின் அச்சடிப்பும் அந்தத் தரத்தை எட்டவேண்டுமானால், அச்சடிப்பைத் தொழிலாக ஏற்றுச் செய்பவர்களும் அச்சுக்குரிய செய்திகளைத் தயாரிப்பவர்களும், அச்சுக்கலையோடு தொடர்புபட்ட தாள், எழுத்து, எந்திரம் போன்ற சாதனங்களைப்பற்றிய விவரங்கள் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். அக்கறையோடு, இவர்கள் ஒருவரோடு ஒருவர் ஒத்துழைக்க வேண்டும். நம்மிடம் ஊறிக் கிடக்கின்ற சில பழ இயல்புகளை, குறிப்பாக 'எப்படியாவது நடந்தால் சரி' என்பது போன்ற போக்குகளை மாற்றி, நமது அச்சடிப்பு எழிலார்ந்ததாக இருக்க வேண்டும் என்ற ஆர்வ வேகத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். இவை ஏற்பட்டால் தமிழ் அச்சடிப்புப் புதிய புதிய சீர்த்திகளையும் செழுமைகளையும் பெற்று, இத் துறையில் உலகத்தரத்தை எட்டிப் பிடிக்கும் என்பது திண்ணம்.

அடிக்குறிப்புகள்

1. சம்பந்தன், மா.சு., 1980, அச்சும் பதிப்பும், தமிழர் பதிப்பகம், சென்னை – 1
2. அவ்வையார் பாடல் , 1958, விநோதரச மஞ்சரி (மேற்கோள்), லிஃப்கோ, சென்னை – 17
3. அச்சகத் தொழிலாளிகள்: அச்சுக்கோப்பவர்கள், பக்கம் – படிவம் அமைப்பவர்கள், மெய்ப்புத் திருத்துநர்கள், அச்சுப்பொறி இயக்குநர்கள் முதலானோர்.
4. சம்பந்தன், மா.சு., 1960, அச்சுக்கலை, தமிழர் பதிப்பகம், சென்னை – 1
5. சம்பந்தன், மா.சு., 1960, அச்சுக்கலை, தமிழர் பதிப்பகம், சென்னை – 1
6. சம்பந்தன், மா.சு., 1960, முறையே ரோமன், இத்தாலிக், கோதிக், கண்டன்ஸ்டு, போல்டு, எக்ஸ்டென்டட், செய்டட், அவுட்–லைன், ஸ்கிரிப்ட், டெர்ட் எழுத்துகள், அச்சுக்கலை, தமிழர் பதிப்பகம், சென்னை – 1
7. சம்பந்தன், மா.சு., 1960, முறையே ப்ளேட்டன் மிஷின், சிலிண்டர் மிஷின், ரோட்டரி மிஷின், ஆப்செட் பிரிண்டிங், அச்சுக்கலை, தமிழர் பதிப்பகம், சென்னை – 1
8. ஒருவரிடம் கடன் பெறுதற்கு மற்றவர் எழுதிக் கொடுக்கும் உறுதிப் பத்திரம். திருநெல்வேலி ஜில்லா, நான்குநேரித் தாலூகா, களக்காடு சரகம், சாலைநயினார் பள்ளிவாசல் என்னும் ஊரில் இருக்கும் திரு. இரா.வ. அவர்களின் குமாரன் இரா.வ.ம. ஆகிய நான் மேற்படி ஜில்லா, மேற்படி தாலூகா, மேற்படி சரகம், மேற்படி ஊரில் இருக்கும் திரு.....அவர்களுக்கு எழுதிக்கொடுத்த 'பிராமிசரி நோட்டு' என்னவென்றால்.....
9. கழகப் பழமொழி அகரவரிசை (தொகுப்பு), 1961, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை–108
10. கழகப் பழமொழி அகரவரிசை (தொகுப்பு), 1961, சைவசித்ததாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 108
11. 64 பக்கப் புத்தகத்தையும், 640 பக்கப் புத்தகத்தையும் ஒரே (புள்ளி) எழுத்தில் அச்சிடக் கூடாது.

59

தமிழ் அறிவியல் - வானவியல்

சி.எஸ்.எஸ். சோமசுந்தரம்

அறிவியல்பற்றிய ஆய்வுகள் அகிலம் முழுவதும் முழுவீச்சில் நடைபெறுகின்றன. இத் துறையில் புகழ்பெற்ற அறிவியல் வல்லுநர்கள் புதிய சாதனைகளைச் செய்யப் போட்டியிடுகின்றனர்.

ஒரு மணித்துளியில்

இன்றைய அறிவியல் விஞ்ஞானம் ஒரு மணி நேரத்தில் நடைபெற வேண்டிய வேலையை ஒரு மணித்துளியில் மிக எளிதாக முடித்துத் தந்துவிடுகிறது; எஞ்சிய ஐம்பத்தொன்பது மணித்துளிகளை எவ்வாறு செலவிடுவது என்று மனிதனைத் திக்குமுக்காடச் செய்துவிட்டுச் சிரித்து நிற்கிறது. விஞ்ஞானம் உலகை, செயல்களை எல்லாம் சுருக்கிக் கொண்டுவருகிறது. அதனுடைய துரிதமான வேகத்துடன் மனிதன் போட்டிபோட முடியாமல் தள்ளாடித் தவிக்கின்றான். மொத்தத்தில் விஞ்ஞானத்திடம் மனிதன் தோற்றுவிட்டான்; அதனிடம் தன்னை 'ஒப்பு'க் கொடுத்துவிட்டான்.

ஒரு பட்டன்

ஒரு பட்டனை அழுத்திய சில மணித்துளிகளில் இந்தப் பேருலகம், உபரினம், தாவரம், புல்பூண்டு எல்லாமே சர்வநாசமாகிச் சாம்பலாகிவிடும் – சூனியமாகிவிடும்.

இப்படியோர் மகா பயங்கரமான அழிவாயுதக் கருவியை அறிவியல் விஞ்ஞானம் அரக்கத்தனமாகப் படைத்துவிட்டுத் தானும் அஞ்சி உலகையும் அஞ்சும்படி செய்துவிட்டது.

சம்ஹார மூர்த்தியின் பெயர் சாலப் பொருந்தும்

இந்தச் சர்வநாசக் கருவிதான் லேசர். இருநூற்று அறுபது லட்சம் (260 லட்சம்) மெகாவாட் சக்தியை வெளியேற்றி ஊழித்தீப்போல் மின்னை உமிழ்ந்து பேரழிவு தரும். இதன் விலை ஏறத்தாழ முப்பது கோடி ரூபா. இந்தச், சர்வநாசக் கருவிக்குச் சர்வ சம்ஹார மூர்த்தியின் பெயர் 'சிவா' என்று பெயரிட்டிருக்கிறார்கள். அழிக்கும் கருவிக்கு அழிக்கும் கடவுளான 'சிவா' என்னும் பெயர் சாலப் பொருத்தம்தான்.

ஈன்று புறம்தந்தவர்கள்

இந்தப் பேரழிவு ஆயுதத்தின் பெற்றோர்கள், அறிவியல் துறையில் துறைபோகிய விஞ்ஞான வித்தகர்கள்! இவர்கள் ஈன்று புறம்தந்த லேசரைக் கண்டு கடல் சூழ்ந்த பேரூலகம் கலங்கிக் கவலையுடன் கழல்கிறது; அழிவின் விளிம்பில் உலகை நிறுத்தி அச்சுறுத்துகிறது; விஞ்ஞான அறிவியல் அமைதி அன்னை, அபயம் கேட்டுக் கதறிக் கொண்டிருக்கின்றாள்.

அழிவியல் தேவையா?

இத்தகைய அழிக்கும் விஞ்ஞான அறிவியல் தேவையா? இதற்குப் பதில் கிட்டவில்லை. 'மனிதத்தனமற்ற விஞ்ஞானம் மகாபாவமானது' என்று காந்தி அண்ணல் மனம் நொந்து உரைத்தார். ஹிரோசிமா சாம்பலாகி எண்ணற்ற பேருயிர்கள், இளம் உயிர்கள், சிற்றுயிர்கள், நாடு, நகரம், சிற்றூர் அழிந்து ஒழிந்த பின்னும் இன்றும் அழிக்கும் கருவிகளைப் படைப்பதில் கற்றாய்ந்த விஞ்ஞானிகளுக்கு எவ்விதம்தான் மனம் இணங்குகிறதோ? அவர்களுக்கு இரக்க உணர்வுடைய இதயம் இல்லையா? வள்ளுவர் கூறுவதுபோல் அவர்களைப் பல கற்றும் கல்லாதவர்கள்தாம் என்று கூற வேண்டியதிருக்கிறது.

அபாயகரமான வளர்ச்சி

துயில்வோரை எழுப்புவது எளிது! ஆனால் துயில்வதுபோல் நடிப்போரை யாரும் எழுப்ப முடியாது. என்னதான் அறிவியல் விஞ்ஞானப் புதுமை இன்று வளர்ந்தாலும் அஃது அதிசயத்தை மட்டுமே தருகிறது;

ஆனந்தத்தைத் தரவில்லை; அதிர்ச்சியை அளிக்கிறது; அச்சத்தைப் படைத்திருக்கிறது; ஆக்கத்தை கொடுக்கவில்லை. இதன் அபாயகர வளர்ச்சியை ஓர் ஆரோக்கியமான வளர்ச்சி என்று கூற முடியுமா?

அவர்களால் முடியும்

அழிவிற்குத் துணைபோகும் விஞ்ஞானிகள் உலகத்தைக் காப்பாற்ற முடியும். ஆவதும் அழிவதும் அவர்களது அறிவால்தான் முடியும். அவர்கள் தங்கள்முன் நிற்கும் பல்வேறு மக்கள் பிரச்சினைகளை மறந்து விடுகிறார்கள். அவர்களது பேராற்றல், நுண்மாண் நுழைபுலம், நூட்பதிட்பங்கள் ஆகியவற்றை உலகத்தை வாட்டும் பசிப்பிணி, உடற்பிணி, வறுமை, அறியாமை முதலியவற்றை உலகத்திலிருந்து ஒழிப்பதற்குப் பயன் படுத்தினால் அது மனித இனத்திற்குக் கிடைத்த மாபெரும் அறக்கொடை ஆகும். அத்தகைய ஆக்கப்பாதை நோக்கி அறிவியலார் வரவேண்டும்.

இத்தகைய மனிதகுல உயர்விற்குப் பாடுபடும் உணர்வு உலகளாவி வளர வேண்டும். இந்த நல்லுணர்வு வேரூன்றி வளர்ந்தோங்க அறிவியல் புதுமைகளைச் செய்யும் கற்றவர்களால் மட்டுமே முடியும்.

உலகம் என்பது

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்று உரைத்தவர் தமிழர். "ப்ண்புடையார்ப் பட்டுண்டு உலகம்" என்பதைப் படித்து அறிவுடைச் சான்றோர்கள் சில நொடி சிந்தித்துவிட்டால், இந்தப் பேருலகம் தேவலோகமாகிவிடும் அல்லவா?

புதிய உலகம்

இப்படியோர் புதிய இனிமை உலகத்தை இவர்கள் படைக்க முடியும்.

கல்வி

கல்வி பொதுவானது. மேலைநாட்டுக் கல்வி விஞ்ஞானத்தை வழங்கியது; கீழைநாட்டுக் கல்வி மெய்ஞானத்தைத் தந்தது.

பொருள் ஒன்றுதான்

பார்க்கும் பொருள் ஒன்றுதான். பார்வைகள்தாம் வேறுபடுகின்றன. மேனாட்டார் விஞ்ஞானத்தை வளர்ப்பதில் ஆர்வம் கொண்டிருந்தனர். அதுபோல் கீழைநாடு மெய்ஞானத்தை வளர்ப்பதற்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டது. இஃது ஒரு ஞானக்கொடை.

இரு பக்கங்கள்

அறிவின் இருபக்கங்கள் மெய்ஞானம் விஞ்ஞானம். விஞ்ஞான அறிவியலார் கூறுவதை மெய்ஞான முனிவர்கள் பழமை சான்ற பாரதத்தில் சொல்லி அருளியதுதான் ஆச்சரியம் தருகிறது.

வேதகாலம்

வானவியல்பற்றி மேனாட்டார் கூறியதுபோல் நம் நாட்டில் வேத காலத்தில் சொல்லிவிட்டனர். வானவியல் மட்டுமன்று; ஏனைய பல்வேறு துறைகளைப்பற்றியும் அவர்கள் நன்கு உரைத்தனர்.

புதுமைக்கும் புதுமையாய்ப் பழமைக்கும் பழமையான காலத்தில் நம் நாட்டு முனிவர்களும் சான்றோர்களும் தெள்ளத்தெளிவாகச் சொல்லிவிட்டார்கள் பல பேருண்மைகளை. வேதகாலத்தில் வான சாத்திரம் வேரூன்றிப் பயன் தந்துவிட்டது.

இந்திய வானவியல்

வானநூற் பயிற்சி பன்னெடும் காலத்திற்கு முன்னரே பாரதத்தில் வேரூன்றித் திகழ்ந்தது.

கி.மு.400 – கி.பி.400–க்குப் பின் தோன்றிய உபநிடதம், இதிகாசம், புராணம் இவற்றிலும் வானவியலைப்பற்றிய அரிய செய்திகள் இடம்பெற்றிருக்கின்றன.

வானின் பரிமாணம் ஒரு ரிஷியின் பார்வை

வானத்தின் அளவுபற்றிப் பிருகு முனிவர் மகாபாரதத்தில் குறிப்பிடும் பேருண்மைகள் வியப்பூட்டுவனவாகும். அக்காலத்திலேயே விண்ணியல் அறிவு எவ்வளவு விரிவாகப் பரந்திருக்கிறது என்பது பிருகுமுனிவர் மொழிகளால் புலனாகின்றன:

> "விண்ணின் எல்லைகள் அளப்பரியனவாகும். கணக்கிடவியலாத விந்தைக்கோளங்கள் உள்ளன. அனைத்தும் தாமாகவே இயங்குவன. ஒளி உமிழும் நட்சத்திரங்கள் ஞாயிறு, திங்களைவிடப் பன்மடங்கு சுடர்வீசும். வான்வெளிக் கோளங்கள் சுழன்றுகொண்டிருக்கின்றன. தொலை தூரத்தைத் துல்லியமாகக் கணிக்க முடியாது."

இந்திய விண்ணியல் வரலாற்றில் பஞ்சாங்கம் கணித்த ரிஷிகளுடன் சிறப்பான இடத்தை ஆரியபட்டரும் வராகமிகிரரும் பெற்றனர். கால்டியர், கிரேக்கர், ரோமர் இவர்கள்போல் பழமைப் பாரதப் பெருமக்களும் வானசாத்திரத்தைச் சோதிடக்கலைக்குத் துணையாகக் கொண்டனர். வான் நட்சத்திரங்கள்தாம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் வழிநடத்திச் செல்லுகின்றன என்று இந்திய மக்கள் நம்பினர். பிறப்பிலிருந்து இறப்புவரை நட்சத்திரத்தை முற்றிலும் நம்பிச் சோதிடர் கூறும் வழியொழுகுகின்றனர்.

நாள்கள் அனைத்துமே நட்சத்திரப் பெயர்களே. சூரியனின் மறுபெயர் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி இவையெல்லாம் நட்சத்திரத்தைக் குறிப்பிடுகின்ற நாள்களின் பெயர்களாகும். இந்த ஏழு நட்சத்திரங்களின் பெயர்கொண்ட நாள்களை வைத்து இராசி பார்த்துத் தொழில் தொடங்குவர்.

எழுவரின் படைப்பு

ஏறத்தாழ 10,000 ஆண்டுகளுக்கு முன்னர்ப் பஞ்சாங்கத்தைப் படைத்தார்கள் நமது வேதகால முனிவர் பெருமக்கள். அவர்கள் எழுவர் ஆவர்; சப்தரிஷிகள் என்பார் வடமொழி நூலார். 1. மரீசி, 2. அத்திரி, 3. அங்கிரீஸ், 4. புலத்தியர், 5. புலகர், 6. கிருது, 7. வசிஷ்டர்

இந்த எழுவரும் இணைந்து வானக்கோள் இயக்கத்தைக்கொண்டு பஞ்சாங்கத்தைக் கணித்தனர். இந்தக் கணிப்பிற்கு விசுவாமித்திர முனிவரும் சில பயன்தரத்தக்க யோசனைகள் தந்தார். பஞ்சாங்கம் ஒரு மாபெரும் கணிதப் பொக்கிஷம். இது மனிதகுலத்திற்குத் தீபம்போல் பகல்செய்து வழிகாட்டும் கோள்களின் இயக்கங்களையும், அவற்றின் காலநேர மாறுதல்களையும், குண இயல்புகளையும் தெளிவாகக் காட்டவல்ல குறிப்பேடு ஆகும்; முழுவதும் கணிதம். இதன் படைப்பு முறையின் ஒவ்வொரு அம்சத்திலும், ஏன் ஒவ்வொரு அணுவிலும், துல்லிய மான கணிதக் கணிப்புச் சுடர்விடுகிறது. பிழையின்றிக் கணிக்கப்பட்ட பஞ்சாங்கம் வானம், பூமி, நீர், நெருப்பு, காற்று ஆகிய பஞ்சபூதச் செயற்பாடுகளையும், இவற்றால் விளையும் பயிர்கள், புல், பூண்டுகள், உயிரினங்கள், விலங்கினங்கள், காற்று, இடி, மின்னல், மழை, வெள்ளம், பருவ மாறுதல்கள், வளர்ச்சி, தளர்ச்சி ஆகிய பல்வேறு ஜீவ இயக்கங் களையும் முன்கூட்டியே தெரிவித்துவிடும் கண்ணாடி போன்றதாகும்.

பேருண்மைகள்

இத்தகைய பேருண்மை வரலாற்றை உருவாக்க – உருவாக்கித் தருவதற்காக – இந்த முனிவர்கள் பலகாலமாக இராப்பகலாக ஆய்ந்து ஏற்புடைய முடிவுகளைக் கண்டு விவாதித்துத் தெரிவித்தார்கள். இது எளிதான கணிதம் அன்று. மிக மிகத் துன்புற்று, ஒவ்வொரு கூறையும் நுணுகி ஆய்ந்து பின்னர் அளவு வழுவின்றி வடிவமாக வருவதற்கு அரும் பாடுபட்டனர். அவர்களது அயராத பேருழைப்பில் பிறந்தது பஞ்சாங்கம்.

பகுப்பு முறை

(1) யுகப்பஞ்சாங்கத்தில் 3ஆவது, 5ஆவது வருடங்களில் இணைத்துக் கொள்ளுவது என்று தீர்மானித்தனர்.

(2) அயனரேகை வருடத்தை 2000 அல்லது 3000 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றுவது என முடிவு செய்தனர்.

(3) சந்திர, சூரிய மாதங்களைப் பின்பற்றுவது என்பதை உரைத்தனர்.

நட்சத்திர ஆண்டு

நட்சத்திர ஆண்டு அமைப்பு நன்றாயிருப்பினும் நமது ஆண்டு முழுமைக்குரிய நிகழ்ச்சிகளுக்கு முரண்பாடாகவிருந்தது. அது தீர்க்கரேகையுடன் முடிவு செய்யப்பட்டது.

பூஜ்யத்தை அஸ்திவாரமாகக் கொள்ளவே ஏழு முனிவர்களும் நட்சத்திர ஆண்டு முறையை நெறிப்படுத்தினர். இதற்கு உடன்பாடு அவர்களுக்கிடையே ஏற்பட்டது.

வசிஷ்டர்

ஏழு முனிவர்களில் ஒருவரான வசிஷ்டர் அயனரேகை – வெம்மைப் பருவகால ஆண்டிற்குச் சிறப்புத் தந்தார். ஐந்தாண்டு யுகப் பஞ்சாங் கத்தில் சில காரணத்திற்காக ஆண்டின் முகப்பாக – தொடக்கமாக வைத்துக்கொள்ளச் சொன்னார். இஃது ஆய்வு செய்யப்பட்டது.

விசுவாமித்திரர்

மற்றொரு முனிவர் விசுவாமித்திரர்தாம் சந்திர சூரிய ஆண்டுப் பஞ்சாங்கத்தில் அதிமாதத்தை இரண்டு இரண்டு வேனிற்காலத்தில் இணைக்க ஆலோசனை வழங்கினார். இப்படிப்பட்ட கணிப்புமூலம் சந்திர

சூரிய மாதங்களில் 2,000 அல்லது 3,000 ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் கூடுதல் மாதத்தைச் சரிசெய்துவிடலாம். சந்திர மாதத்திற்குச் சிறப்பு அளிக்க, சந்திர முனிவர் என்பவர் விரும்பினார். இராசியில் சூரியனுக்குத் தரும் கௌரவத்தைச் சந்திரனுக்குத் தரவேண்டும் என்ற கருத்தை ஏனைய முனிவர்களும் ஏற்றனர். இதன் வாயிலாகச் சந்திரன் சோதிடப் பெருங்கலையில் இடம்பெற்றான்.

பாதை

சந்திரன் செல்லும் பாதையில் பயணம் செய்யும் நேரத்தைத் துல்லியமாகக் குறித்தால் அது சிறப்பான கடிகாரமாக இருக்கப் போவதை அவர்கள் கண்டுபிடித்தார்கள். சோதிட வரலாற்றில் சந்திரனுக்குச் சிறப்பு இடம் தந்தது மேல்நாட்டினருக்குத் தெரியாது.

தலைக்கோள்

வானவியல் ஓர் அரும் விந்தைத் துறை. இத் துறையினை ஒரு நாடக அரங்கு எனலாம். இந்த அரங்கின் தலைமையான கோள்களின் தலைவன் சூரியன்.

சூரியன்

பிரபஞ்சத்தின் முதற்பொருள் சூரியன். அச் சூரியன் தன்னந் தனியாகப் பயணம் சென்றுகொண்டிருந்தபோது ஒரு நட்சத்திரம் சூரியனுடன் இணைய நேரிட்டது. அந்த இணைப்புக்கு, ஈர்ப்புச்சக்தி காரணமாக அமைந்தது. இதன் பின்னால் ஒரு வெடிப்பு ஏற்பட்டது. சூரியனிடமிருந்து சில பாகங்கள் தெறித்து விழுந்தன. அவைதாம் சுற்றிச் சுழலும் இந்த அண்டப் பேருலகம். விரிந்த விண்வெளி, மீன்கள் உலகம் முதற்கண் அனற்பிழம்பாயிருந்தது. அதன் கனல் நீண்ட காலம் சுடர் விட்டெரிந்தது. அது ஆறிக் குளிரப் பல காலமானது. அந்த அனற்குழம்பு திடநிலை பெற்றது. அதன்பின் உலகில், உயிரினப் பரிணாம வளர்ச்சிகள் வடிவம் பெற்றன.

முதற்பொருள்

சூரியனிடமிருந்த துகள் வடிவம் பெற்றதை உயிர்நூலார் சிறப்பாகக் குறிப்பிட்டனர். ஒளியை உமிழும் சூரியன்தான் பிரபஞ்சத்தில் தோன்றிய ஒரு முதற்பொருள்.

சூரிய வழிபாடு

அந்த நாளில் வேதகாலத்தில் ஒளிவீசும் சூரியனைத் தெய்வமாக வழிபட்டனர், அந்த வழிபாடு மிகப் பழைய வழிபாடு. இஃது இயற்கை வழிபாடு.

வழிபடும் சூரியனை நமஸ்கரித்துச் சுலோகங்களைச் சொல்லிய முனிவர்கள் வானத்தை ஆலயமாகக் கண்டனர். அந்த ஆலயத்தில் அவர்கள் பெற்ற ஒளித் தரிசனத்தை வேதத்தில் விளக்கினார்கள்.

சூரிய வழிபாடு மூலம் உயிரினம் பெறும் வலிவும் பொலிவும் அமோகம் என்பது அவர்களது உபதேசம் ஆகும்.

ஞாயிறு போற்றுதும்

பழங்பெருங் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் ரிஷிகள் போற்றி அஞ்சலித்த சூரியனை 'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்' என்று வாழ்த்துகின்றார்; ஞாயிறு மட்டுமன்றித் திங்களையும் போற்றுகின்றார்.

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மகாகவி பாரதி சூரிய தரிசனத்தை இப்படிச் சொல்லோவியமாக்கி வர்ணிக்கிறார்.

> "ஞாயிறே! நின்முகத்தைப் பார்த்த பொருள்கள் எல்லாம்
> ஒளி பெறுகின்றன. புதன், சனி, வெள்ளி, வியாழன், யுரேனஸ்
> இன்னும் பல மீன்கள் ஒளிநகை செய்கின்றன. நீ வாழ்க!"

என்று வர்ணிக்கிறார்:

சூரியன் பக்கம்

சூரியன் வலிமையான ஒரு கோள். அதற்கு அருகில் இருப்பது புதன். அதற்கும் சூரியனுக்கும் உள்ள தூரம் சுமார் நான்கு மூன்று கோடி மைல். சூரியனுக்கு மிகத் தூரத்தில் இருப்பது 'புளூட்டோ' என்னும் கிரகம். இது சூரியனினின்று நான்கு லட்சம் கோடி மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. இந்த நட்சத்திரம் அண்மைக்காலத்தில் 1930ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

கிரகங்களை மூன்று வகைகளாகப் பகுத்தனர். முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வகுப்பு என்பது இவற்றின் பிரிவுகள்.

புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய் ஆகியவை முதல் வகுப்பு; குரு, சனி, யுரேனஸ், நெப்டியூன் நான்கும் இரண்டாம் வகுப்பு.

உருப்பேதங்கள்

முதல் வகுப்புக் கிரகங்களுக்கும் இரண்டாம் வகுப்புக் கிரகங்களுக்கும் பல வேறுபாடுகள் – வித்தியாசங்கள் உண்டு, உருவில் சிறியவை. எடையில் இவை அதிகக் கனமானவை. இவற்றின் திண்மை அடர்த்தி மிகவும் விந்தையானதாகும்.

இரண்டாம் வகுப்புக் கோள்கள் உருவில் பெரியவை. இவற்றின் இயக்கவேகமும் அதிகம். இவற்றின் ஒளிஅலைகள் கூர்மையானவை.

சிறிய கோள்

கிரகங்களில் சிறியது புதன். இது எண்பத்தெட்டு நாள்களில் சூரியனைச் சுற்றி வருகின்றது. இதன் வேகம் செகண்டுக்கு இருபத்தொன்பது மைல் என்று அறிந்தார்கள்.

குரு

கோள்களில் பெரியதற்கு வியாழன் என்று பெயர். தேவர்கள் இக் கோளைக் குரு என்று கொண்டாடி மதித்தனர். வியாழமண்டலம் பூமியைவிடப் பதினொரு மடங்கு பெரியது.

பெரிய அறிவாளியான குரு, பெரிய உலகத்தைத் தனதாக்கி வைத்திருப்பது வியப்பு அன்று. இம் மண்டலத்தின் சுற்றளவு 2,74,357 மைல்கள். இது தன்னைத்தானே சுற்ற 10 மணிகால அளவு எடுத்துக் கொள்கிறது. வியாழ மண்டலத்தில் பகல் நமது பகலின் பாதி அளவு இருக்கும்.

பூமியில் பன்னிரண்டு ஆண்டுகள் சேர்ந்து வியாழனில் ஒரு ஆண்டு ஆகிறது என்றார்கள். வியாழனின் குறுக்களவு 87,400 மைல் என்பது குறிப்பிடத்தக்கது.

தொலைநோக்காடி மூலம்

குருவை நாற்பது பங்கு பெருக்கிக் காட்டும் தொலைநோக்காடி மூலம் பார்த்தால் அது நிலவைப்போல் தெரிகிறது. இது பூமியைப்போல் ஒருபுறமும் சாயாது, நேராய் நின்று ஞாயிற்றினைச் சுற்றி வருவதால் அங்குப் பருவங்கள் ஒழுங்காக விருக்கின்றன; தட்பவெப்ப நிலையும் ஒரே சீராக இருக்கின்றது.

சந்திரன்

ஈர்ப்புச் சக்தி அதிகம் வாய்ந்த கிரகமிது. பூமிக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரம் இரண்டு லட்சத்து முப்பதொன்பதாயிரம் மைல்கள். முப்பது நாள்களில் சுற்றிவரும் கோளிது.

இதன் ஈர்ப்பலைகளால் ஈர்க்கப்பட்டுக் கடல் பொங்குகிறது. சந்திர ஒளி ஆதிக்கத்தால் மனநோயாளிகள், விலங்குகள் பாதிக்கப்படுவ துண்டு. காதல் கொள்ளும் நபர்கள் விரகவேட்கை யுறுவதும் சந்திர ஒளியில்தான். சந்திரன் ஒரு காதல் பைத்தியம் என்பது புராணம்.

கோள்களின் வரலாறுகள், வானம் போன்ற விரிவான விருத்தாந்தம் அனைத்தும் உரைப்பது எளிதன்று.

வால்மீன்

ஆயினும் இந்தக் கோள்களிடையே சில, தனி உச்சம் பெற்றவை. அதில் ஒன்று வால்மீன். வால்மீனைக் கண்டு வேதகாலத்திலிருந்து சங்ககாலம் வரையுள்ள பெருமக்கள் அச்சம் தெரிவித்தனர். ஏன் மேனாட்டு ஷேக்ஸ்பியர்கூட வால்மீன் தோற்றம் மன்னர்களின் மரணத்தைக் குறிக்கிறது என்றார். அதுபோன்றே 2000 ஆண்டு களுக்குமுன் வாழ்ந்த சங்கப்புலவர் வால்நட்சத்திரத்தைக் கண்டு வேந்தன் மறைவான் எனப் பாடினார். வால்மீன் வருகை ஒரு துன்ப நிமித்தத்தைக் காட்டுவதாகும் என்று பயந்தனர்.

ஒரு திருமணம் நடைபெறப் பெற்றோர் (அல்லது) மணமக்களின் சம்மதமோ தேவை இல்லை. நட்சத்திரங்களின் சம்மதம் வேண்டும். இருவர் நட்சத்திரங்கள் பொருத்தமில்லை என்றால் திருமணம் நடைபெறாது. அந்த அளவிற்கு நட்சத்திரத்தின்மீது நம்பிக்கை கொண்டிருந்தனர் அந்நாளைய மக்கள். இன்றும்கூட இந்த நம்பிக்கை சில வகுப்பார்களிடையே ஆழமாகப் பதிந்து வேரூன்றியிருக்கிறது. வானவியற்கலை வானைப் போன்று எல்லையற்று விளங்குகிறது.

பழமொழியில் நட்சத்திரங்கள்

1. மூலத்து மாமியார் மூலையிலே.
2. அவிட்டத்தில் பிறந்தால் தவிட்டுப் பானையும் தங்கமாகும்.
3. பரணி தரணி ஆளும்.

4. சித்திரை அப்பன் தெருவிலே.
5. ஆண் மூலம் அரசாளும்.
6. ஒடிப்போனவளுக்கு ஒன்பதாம் மடத்தில் சனி.
7. பொங்குசனி மங்குசனி.
8. குரு பார்வை கோடி தரும்.
9. நாள் என்ன செய்யும், கோள் என்ன செய்யும்?
10. பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது.
11. செவ்வாயோ வெறும் வாயோ?
12. அரசமரத்தைப் பிடித்த சனி பிள்ளையாரையும் பிடித்தது.
13. சனி கெடுக்கவும் செய்வான் கொடுக்கவும் செய்வான்.
14. நல்லவர் செய்யாததை நட்சத்திரம் செய்யும்.
15. நாள் நட்சத்திரம் பார்த்தால் நல்லது நடக்கும்.
16. கிரகம் வக்கரித்தால் கேட்டது கிடைக்காது.
17. சுக்கிரதிசை அடிக்கிறது.
18. கிரகக்காரன் விடமாட்டான்.

எழுத உதவிய நூல்கள்

அருணாசலக்கவுண்டர். க., எல்.டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளையின் வரலாறு

சிலப்பதிகாரம்

புறநானூறு

பரிபாடல்

வேலன். என்.கே., மண்ணும் விண்ணும்

ஆர்.கே. விசுவாதன், சக்தி

கலைக்கதிர், மே, 1986

ஞானபூமி

திருக்குறள்

ஓம்சக்தி இதழ்கள்

60

கணினியும் தமிழ் கற்பித்தலும்

கப. திண்ணப்பன்

இருபதாம் நூற்றாண்டு அறிவியல் யுகம். இந்த யுகத்தின் ஈடிணையற்ற கண்டுபிடிப்புக் கணினி (Computer). இன்று இதனைப் பயன்படுத்தாத துறையே இல்லை என்று சொல்லும் அளவுக்கு இதன் செல்வாக்குப் பரவியுள்ளது. கணினியின் செல்வாக்கால் தகவல்மய உலகம் உருவாகி வருகின்றது. குறுகிய நேரத்தில் செயற்கரிய செயல்களைச் செய்கின்ற இயல்புடைய கணினியைக் கல்வித்துறையினர் பயன்படுத்தித் தம் துறையை எவ்வாறு மேம்படுத்தலாம் என்று எண்ணத் தலைப்பட்டனர். "தகவல்மய உலகிலே கல்வியானது வகுப்பறையோடு அடங்கும் அல்லது மாணவப் பருவத்தோடு முடியும் ஒரு நடவடிக்கையாக இருக்காது. தகவல்மய உலகம் முழுவதுமே வகுப்பறையாகும்; வாழ்க்கை முழுவதும் மனிதர்கள் தொடர்ந்து கல்விபெறும் மாணவர்கள் ஆவார்கள். வேண்டிய முறையில், வேண்டிய விதத்தில், வேண்டிய வேகத்தில் கல்விபெறும் வாய்ப்புகளைக் கணினிகள் வழங்குகின்றன. ஒரு சராசரி அமெரிக்கச் சிறுவன் வாரத்துக்கு 28 மணிநேரம் மின்னியல் கல்விச் சாதனங்களையும், 25 மணிநேரம் மட்டுமே காகிதத்தில் அச்சேறிய பாடங்களையும் பயன்படுத்துகிறானாம்." (வை. பழநிவேலு, 1983:28)

மொழி கற்பித்தல் துறையிலும் கணினியின் துணையால் பெறும் பயன் யாது என்று அறிஞர்கள் எண்ண முயன்றனர். இதன் விளைவாகக் கால் (CALL-Computer-Assisted Language Learning) எனப்படும்

கணினியின் துணையால் மொழி கற்றல் என்னும் ஓர் அணுகுமுறையைப் பிரிட்டனைச் சார்ந்த அறிஞர்கள் கண்டறிந்தனர். இது பெரிதும் மாணவனை மையமாகக் கொண்ட ஓர் அணுகுமுறையாகும். கணினியின் துணையால் கற்பித்தல் என்னும் ஓர் அணுகுமுறை அமெரிக்காவில் கண்டறிந்த முறை. இதற்கு 'CAI' (Computer - Assisted Instruction) என்று பெயர். இது மாணவரின் நடத்தைப் பண்பினை மையமாகக் கொண்ட ஓர் அணுகுமுறை என்றும், பெருஞ்செலவுக்குட்பட்ட ஒன்று என்றும் பிரிட்டிஷ் அறிஞர்கள் இம் முறைபற்றிக் கருத்துரைத்தனர். இம் முறைகளைத் தவிரக் கணினியின் துணையால் மொழிகற்பித்தல் (Computer - Assisted Language Teaching) என்றும், ஆங்கிலம் கற்பித்தலில் 'மைக்ரோ' (நுண்கணினி) பயன்படுத்துதல் (Micro Application in the Teaching of English) என்றும் கூறப்பெறும் அணுகுமுறைகளும் இப்போது உள்ளன. இம் முறைகள் அனைத்தும் பெரும்பாலும் ஆங்கிலம் கற்றலையே/ கற்பித்தலையே மைய நோக்கமாகக்கொண்டு இயங்குகின்றன. கணினிகள் பெரும்பாலும் ஆங்கில எழுத்துகளைக் கொண்டே இயங்குவதுதான் இதற்குக் காரணம் என்பதை நாம் நன்கு அறிவோம். மேலும், ஆங்கிலம் கற்றலின் தேவை அனைத்துலகுக்கும் உரிய ஒன்றாக இருப்பதும் பிறிதொரு காரணம் ஆகும்.

கணினியிலுள்ள ஆங்கில வரிவடிவ அமைப்பு, ரோமன் வடிவெழுத்துகளில் எழுதப்பெறும் பல்வேறு ஐரோப்பிய மொழிகளுக்கும், மலாய் போன்ற மொழிகளுக்கும் கணினிமயமாவதிலுள்ள பெரிய தடையை நீக்கிவிட்டது. தனக்கெனத் தனித்த வரிவடிவங்கொண்ட தமிழ் மொழிக்குக் கணினியில் இடம் உண்டா? கணினியில் தமிழ் வரி வடிவங்களை உருவாக்க முடியுமா? கணினிவழித் தமிழ்மொழியை அதிக லாவகமாகவும், வேகமாகவும், நளினமாகவும் கையாள்வதற்குரிய வழிமுறைகள் என்ன? இந்த வினாக்களுக்கு விடைகாணும் முயற்சியில் ஈடுபட்டனர் சிங்கப்பூர் இளைஞர்கள் சிலர். கணினியில் தமிழ் என்னும் பொருளில் கட்டுரைகள் எழுதியும், ஆய்வுகள் செய்தும், கணினிக் கண்காட்சிகள் நடத்தியும் வந்த இளைஞர்கள் முயற்சி பாராட்டுக்குரிய ஒன்றாகும் (க. நந்தகுமார், வை.பழநிவேலு, முகமது இஸ்மாயில், 1983, ச. தணிகாசலம், 1987). சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவையினரும், சிங்கப்பூர்த் தமிழ்மொழிப் பண்பாட்டுக் கழகத்தினரும் இவர்கள் முயற்சிக்கு அவ்வப்போது ஆக்கமும் ஊக்கமும் ஊட்டி வந்தனர்

என்பதையும் இங்குக் குறிப்பிட வேண்டும். தொடக்ககாலத்தில் இவர்கள் முயற்சி அனைத்தும் 1983–85 ஒட்டிய நிலையில் கணினிக்குள்ளேயே தமிழ் எழுத்துகளை (Hardware) உருவாக்கும் முயற்சியாகவே இருந்தன. தமிழகத்தில் உருவாக்கப்பட்ட 'திருவள்ளுவர்' எனப்படும் கணினி இவ்வகை முயற்சியின் வெற்றி எனக் கூறப்படுகிறது.

பாரதி என்னும் தமிழ்ச் சொற்றொகுப்புச் சாதனம் (Tamil word processor for IBM / PC / XT / AT and Compatibles) பெங்களூரைச் சார்ந்த 'சாஃப்ட்வேர் ரிசர்ச் குரூப்' என்னும் நிறுவனத்தால் வடிவமைக்கப் பெற்றுத் தமிழில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட செயல், தமிழ்கூறும் நல்லுலகில் பல புரட்சிகளைச் செய்ய – புதுமைகளைப் புகுத்த – வழி வகுத்திருக்கிறது எனக் கூறலாம். இச் சாதனத்தை ஐ.பி.எம். கணினி வைத்திருப்போர் யாரும் எளிதாகப் பயன்படுத்தலாம். அந்தக் கணினியில் இதனை நுழைத்ததும் அந்தக் கணினி தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் தட்டெழுத்துச் செய்யும் ஆற்றலைப் பெற்றுவிடுகின்றது. எனவே, இதன் வயிலாக இருமொழிகளையும் எளிதாகப் புழங்கும் வாய்ப்பினை நாம் பெற்றுவிடுகின்றோம்.

இச் சாதனம் சொற்றொகுப்புச் சாதனம் மட்டுமன்று; இன்னும் பல சிறப்பியல்புகளையும் கொண்டு விளங்குகின்றது. அச் சிறப்பியல்புகள் வருமாறு: கணக்கிடும் ஆற்றல், வரிசைப்படுத்தும் திறன், கடிதங்கள் முகவரிகளுடன் இணைத்தல், சிறப்பாக அச்சிடும் திறன், குறியீடுகள் அடங்கிய நூலக வசதி, கோப்பு விளக்கக் குறிப்பு, உடனுக்குடன் உதவி, எளிதான பணிக் கட்டளைகள், குறியீடுகளை விரிவாக்குதல், ஆங்கிலச் சொற்கள் குறிப்பிட வசதி, தொகுப்பை வல, இடப்புறப்படுத்தல், சொற்கள் கண்டுபிடித்தல், மாற்றம் செய்தல், இரு திரைகள் அமைக்க வசதி, செய்தித்தாள் வடிவில் பத்திகள் அமைப்பு, எளிதாகத் தொகுப்பின் பகுதிகளை மாற்றுதல், பகுதிகளைச் சேர்க்க, நீக்க வசதி, பல்வேறு வடிவமைப்பு (formats) அமைக்கும் வசதி, தானாக வடிவமைப்பினை மாற்றம் செய்யும் தன்மை, தெளிவான கோடுகள் வரைதல், முகவரிகள் அமைக்க வசதி, எண்களை வலப்புறப்படுத்துதல், தேர்ந்தெடுத்து வரிசைப்படுத்துதல், இருமுறை வரிசைப்படுத்தும் வசதி, முகவரிகள் அச்சிடுதல், தேர்ந்தெடுத்துக் கடிதங்கள் அச்சிடுதல், குறிப்பிட்ட வடிவங்களில் அச்சிடுதல், அச்சிடும்போது சொற்றொகுப்பு வசதி, தலைப்புகள் குறிப்புகள் பக்கங்கள் அமைத்தல், சேமிக்காமல் அச்சிடும் முறை, சிறப்பான தவறுகள் கணிப்பு, எளிதான கட்டளைகள், விரைவான

செயல்திறன் முதலியவற்றைத் தமிழ்த் தட்டச்சுமுறையைப் பின்பற்றியே இந்நிறுவனத்தார் வடிவமைத்துள்ளதால் தட்டச்சுத் தெரிந்தோர் எளிதாகத் தட்டச்சுச் செய்யலாம். (பின்னிணைப்பு 'அ' காண்க.)

மேலும், இந்நிறுவனத்தார் சொல் சரிபார்க்கும் முறை (Spell Checker), சொல் அகராதி, வரைபடங்கள் திறன் (Graphic & font Editor), புள்ளிவிவர நிர்வாகி (Data Manager) முதலிய சாதனங்களையும் உருவாக்கி வெளியிட இருக்கிறார்கள் என்று அறியும்போது நம் உவகை பன்மடங்காகின்றது.

மலேசியாவில் இரவீந்திரன் என்னும் இளைஞர் ஒருவர் 'துணைவன்' என்னும் தமிழ்ச் சொற்றொகுப்புச் சாதனத்தை உருவாக்கி வெளியிட்டுள்ளார். இதனை IBM கம்பாட்டிபில் கணினிகளில் பயன்படுத்தலாம். தமிழிலுள்ள எல்லா எழுத்து வடிவமைப்புகளையும் கிரந்த எழுத்துகளையும் இதன்வழித் தட்டச்சுச் செய்யலாம். தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒரே வரியில் அடிக்கலாம். 20 அல்லது 30 பக்கம் வரை அடித்து அதைத் தேவையானபோது திரும்பப் பெற்றுக்கொள்ளும் வசதி, நான்கு வகையான எழுத்து வடிவமைப்பைப் பெற்றுக்கொள்ளும் வசதி, அச்சடிக்கும் வசதி, பகுதிகளைச் சேர்க்கும் குறைக்கும் வசதி, எழுத்துகளை, சொற்களை நீக்கும் வசதி, குறிப்பிட்ட வடிவங்களில் அச்சிடும் வசதி, அச்சிடும்போது சொற்றொகுப்பு வசதி, சேமிக்காமல் அச்சிடும் முறை என இம் முறையில் இப்படிப் பலவகையான வசதிகள் உண்டு. ஒரு தமிழ்நூலை எழுத நினைக்கும் எழுத்தாளர் பலமணி நேரத்தை – நாள்களைச் செலவுசெய்து கைவலிக்க எழுதி எழுத்துப் படிவங்களைத் தயாரிக்கும் வேலையைக் குறைக்க இச் சாதனத்தால் முடியும். இவர் அமைத்த சாதனத்தில் தமிழ் எழுத்துகளைத் தட்டச்சுச் செய்வதை எளிமையாக்கி இருக்கிறார். உயிர் எழுத்துகளை ஒரு பக்கமும் மெய்யெழுத்துகளை ஒரு பக்கமும் அமைத்துள்ளார். அகரமேறிய மெய்யெழுத்துடன் உயிர்எழுத்தைத் தட்டச்சுச் செய்தால் உயிர் மெய்யெழுத்துக் கிடைக்கும். இவர் அமைத்த சாதனத்தில் தமிழ் எழுத்துகளின் வடிவம் அழகாக இருக்கின்றது.

இந்நிலையில் தமிழ் கற்கும், கற்பிக்கும் பணியில் கணினியை எவ்வாறு பயன்படுத்தலாம் என்று எண்ணிப்பார்க்கும் ஒரு சிறு முயற்சியே இக் கட்டுரையாகும். இவ் வெண்ணங்கள் செயற்பட நாள்பல ஆகலாம்.

ஆயினும் செயலுக்கு ஒரு தூண்டுகோலாக இருக்க இது வழிசெய்தால் போதும்.

மொழி கற்கும், கற்பிக்கும் பணியில் கணினி பலதிறப்பட்ட வகையில் பங்காற்ற முடியும். எனினும் எக்காலத்தும் கணினி, ஆசிரியரின் இடத்தைக் கைப்பற்ற முடியாது என்பதை நாம் முதலில் கருத்தில் இருத்திக்கொள்ள வேண்டும். கணினி, மொழிகற்கும், கற்பிக்கும் பணியில் எளிமையை ஏற்படுத்தலாம்; கால விரயத்தைத் தடுக்கலாம்; சாதனைகள் பலவற்றை ஏற்படுத்தலாம்; அழகு ஊட்டலாம்; ஆர்வத்தைத் தூண்டலாம்; புதுமையைப் புகுத்தலாம். எனினும் கணினி ஒரு கருவிதான்; கற்பிக்கும் ஆசானோ மனிதன் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

மொழி கற்பித்தலில் கணினியின் முத்திறப் பணி

மொழிகற்கும் பணியில், மாணவர்க்குக் கல்வி புகட்டும் கருவியாக (Instructor) - உடனுழைக்கும் நண்பனாக (Collaborator) - உறுதுணை புரியும் ஒரு வசதிப் பொருளாக (Facilitator) கணினி இயங்குகிறது (Phyllis Chew, 1985). "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்" என்று பாடினார் ஔவையார். மொழிக் கல்வியில் இடம்பெறும் இப் பழக்கத்தை – பயிற்சியை – நல்குவதற்குக் கணினி உதவுகின்றது. மொழியமைப்பின் கூறு ஒன்றினை மாணவனுக்கு அறிமுகப்படுத்திப் பின்னர் அக் கூறுபற்றி அவன் நன்கு விளங்கிக்கொள்ளவும் அதனைப் பயன்படுத்திக் கையாளும் ஆற்றலைப் பெறவும் மொழிப்பயிற்சி தேவைப்படுகின்றது. இந் நோக்கங்களை நிறைவேற்றும் குறிக்கோளுடன் பயிற்சி வினாக்கள் அமைக்கப் படுகின்றன. இவ் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டியது மாணவன் பணியாகும். இத்தகைய பயிற்சி வினாக்களைச் சிறப்பான முறையில் திட்டமிட்டுத் தயாரித்துக் கணினிவழிக் கொடுக்கலாம். மாணவன் செய்ய வேண்டிய கட்டளைக் குறிப்புகளையும் அதன்வழித் தரலாம். இவற்றை நோக்கிய மாணவன் இவற்றிற்கேற்ப விடையளிக்கிறான். உடனே மாணவன் தன் விடைகள் சரியா தவறா எனக் கணினிவழி அறிகிறான். சரி என்றால் பாராட்டும், தவறு என்றால் திரும்பச் செய்வதற்குரிய தூண்டுதலையும் அவன் கணினிவழிப் பெறுகிறான். திரும்பத் திரும்பத் தவறு செய்தால் சரியான விடையையும், அவன் விரும்பினால் கணினியில் பெறமுடியும். இவ்வாறு கணினி மொழிகற்கும் மாணவனுக்கு மொழிப் பயிற்சி நல்கும் ஒரு தனிப்பாட ஆசிரியனாக அதாவது கல்வி புகட்டும்

கருவியாகத் திகழ்கிறது. இந்த நிலையில் தமிழ் இலக்கணக் கூறுகளை உள்ளடக்கிய பயிற்சிகளை மாணவன் கணினிவழிப் பெற வழி வகுக்கலாம். இதற்கான பாடநிரல்களை (Programmes) நாம் முன்கூட்டியே தயாரிக்கவேண்டும்.

ஒரு மாணவன் கணினியிலுள்ள வினாக்களுக்கு விடை அளிக்கும்போது கணினிவழிப் பெறக்கூடிய இன்னும் சில தகவல்களைப் பெறவேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். அந்தச் சூழ்நிலையில் மாணவன் சரியான பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்துக் கணினியிடம் கேட்டு அறிய வேண்டும். இந்த நிலையில் மாணவன் படிப்படியாகச் சரியான முடிவெடுக்கும் நிலைக்கு ஆளாகிறான். இந்த வகையில் உடனுழைக்கும் நண்பனாகக் கணினி உதவுகின்றது. அண்மைக்காலத்தில் ஒரு மாணவனுக்குச் சிக்கல் வரும் நேரத்தில் உடனிருந்து உரையாடும் உற்ற நண்பனாகக் கணினி அமையும் விதத்தில் பலவகையான பாடநிரல்கள் ஆங்கிலத்தில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. சிக்கல் வரும்போது முன்னிருக்கும் மாணவனை நோக்கி என்ன சிக்கல் என்று கணினி வினா எழுப்பும். உடனே மாணவன், "நான் வீட்டிலிருந்து எங்கேனும் வெளியே சென்றால் நல்லது" என்றுரைப்பதாகக் கொள்வோம். உடனே கணினி, வெளியே என்றால் எங்கே என்று கேட்டுவிட்டுப் பூங்காவுக்கா, திரைப்படத்துக்கா, சிற்றுண்டிச் சாலைக்கா, கடற்கரைக்கா என்று இப்படிப் பலவகையான வாய்ப்புகளைக் கணினி (அவற்றின் படங்களுடன்) வழங்கும். உடனே மாணவன் தனக்கேற்பச் சரியான ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பூங்காவுக்கு என்று மாணவன் சொன்னால், உடனே கணினி பறவைப் பூங்காவுக்கா, அறிவியல் பூங்காவுக்கா என்று அவற்றின் படங்களுடன் திரைவழி வினா எழுப்பும். உடனே மாணவன் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இப்படிப் படிப்படியாகக் கணினி வழங்கும் பல வாய்ப்புகளிடையே ஒன்றைத் தேர்ந்தெடுத்துத் தன் சிக்கலுக்கு விடைகாணும் போக்கில் உடனிருந்து உரையாடும் நண்பனாகக் கணினி அமைவதைத்தான் உடனுழைக்கும் நண்பன் என்று இங்குக் குறிப்பிடுகிறோம். இங்கே கணினியிடமிருந்து தனக்கு வேண்டிய பலவகையான தகவல்களைப் படிப்படியாக மாணவன் பெறுகின்ற செயல் நடைபெறுகின்றது.

கணினிவழிப் பெறும் சொற்றொகுப்புச் சாதனம் மொழிகற்கும் பணியில் எழுத்துவேலையை எளிதாக்க உதவுகின்றது. இத் தொகுப்புச்

சாதனம் முன் கூறப்பெற்ற பல்வேறு சிறப்புக் கூறுகளைக் கொண்டிருப்பதால் எழுத்துவேலைக்குப் பல்லாற்றானும் உறுதுணையாக இருக்கும். எழுத்துப்பணியில் கணினி ஒல்லும் வகையான் எல்லாம் உதவும் ஒரு வசதிப் பொருளாக விளங்குகிறது.

நால்வகைத் திறனும் கணினியும்

மொழி என்பது ஒருவர் கருத்தைப் பிறர்க்கு உணர்த்தவும், பிறர் கருத்தை ஒருவர் உணர்ந்துகொள்ளவும் உதவும் ஒரு கருவி. உணர்த்துதல் என்பது பேசுதல், எழுதுதல் வாயிலாக நிகழ்கிறது. உணர்தல் என்பதோ கேட்டல், படித்தல் வாயிலாக நிகழ்கிறது. எனவே மொழிகற்பித்தலில் பேசுதல், எழுதுதல், கேட்டல், படித்தல் என்னும் நான்குவகைத் திறன்களும் இன்றியமையாத இடம்பெறுகின்றன. இங்கே மொழி என்பது மொழியமைப்பினையே உணர்த்தும். மொழியமைப்பினை ஒருவன் நன்கு உணர்ந்துகொள்வதும் உணர்த்தக் கற்றுக்கொள்வதும் மொழி கற்பித்தலின் அடிப்படைப் பணியாகவுள்ளன. இவற்றைக் கணினி வாயிலாக எப்படிக் கற்பிக்கலாம் எனக் காண்போம்.

(அ) படித்தல்

படித்தல் என்பது வரிவடிவத்திலிருந்து ஒருவன் செய்தியைப் பெறுவதையே குறிக்கும். அந்த நிலையில் பார்த்தால் படித்தல் என்பது கருத்தறிதலையே மையமாகக் கொண்ட ஒரு திறனாகும். கருத்தறிதல் என்பது நிகழக் கணினி உதவியாக இருக்கும். கணினியின் திரைப்பகுதி வழியாகப் படித்தற்குரிய வாக்கியம் அல்லது பத்தியை வெளிப்படுத்தலாம். இதனை மாணவர் படித்துச் சூழல்வழியாகக் கருத்தினை அறிந்து கொள்ளச் செய்யவேண்டும். அவர்தம் கருத்தறியும் ஆற்றலைக் கணினி வாயிலாகப் புறவய வினாக்கள் மூலமோ, சரி தவறு வினாக்கள் மூலமோ கேட்டு மாணவர்க்குக் கற்பிக்கலாம். படித்தற்குரிய பகுதி சிறிது நீளமாக அல்லது பல பத்திகளைக் கொண்டிருந்தால் கணினியின் திரைப் பகுதிக்குள் அடங்காது போகலாம். இந் நிலையில் மாணவர் முழுப் பகுதியின் கருத்தினை முற்றும் அறிய வழியில்லாமல் போகலாம். வினாக்களைப் பார்த்துப் பின்னர்ப் பகுதியை ஒரு முறை திரையில் விழச் செய்து விடைகளைக் கண்டறிய வேண்டும். படித்தலில் புதுச்சொற்களை அறிமுகப்படுத்தி அவற்றின் பொருள்களைச் சூழ்நிலை அடிப்படையில் ஊகித்துணரச் செய்வதும் ஒரு நோக்கமாகக் கருதப்படுகின்றது. இந் நோக்கத்தை நிறைவேற்றக் கணினியை நன்கு பயன்படுத்தலாம்.

புதுச்சொற்களின் பொருளைப் புறவய வினாக்கள் வழியாகக் கொடுத்துக் கணினியில் விடைகளைக் கண்டறியச் செய்யலாம்.

படித்தலில் ஊகித்துணர்தல் என்பது சிறப்பிடம் பெறுகிறது. கருத்தறிதல் பகுதியைப் பத்தி பத்தியாகத் திரையில் காண்பிப்பதால், அடுத்து வரும் பகுதி எப்படி இருக்கும் என மாணவர் ஊகித்துரைக்கச் செய்யலாம். அந்த ஊகம் சரியா என்பதை அடுத்துப் பகுதியைத் திரையில் விழச்செய்து சரிபார்த்துக் கொள்ளலாம்.

படித்தலின் வேகத்தை அளந்து கண்டறியக் கணினி உதவுகின்றது. அச்சு வடிவத்திலுள்ள ஒரு பகுதியைப் படிக்க மாணவனுக்கு எவ்வளவு நேரம் ஆகிறது என்பதைக் கண்டறிய இயலாது. ஆனால் கணினியில் அவன் ஒரு பகுதியைப் படிக்கும்போது அக் கணினியுடன் இணைக்கப் பெறும் ஒரு கடிகாரத்தின் வாயிலாக அவன் அப் பகுதியைப் படிக்க ஆகும் நேரத்தைத் துல்லியமாகக் கண்டறிய முடியும்.

ஒரு வரைபடத்தைக் கணினிவழியாகக் காட்டிச் சில குறிப்பிட்ட கட்டளை வாக்கியங்களின் உதவியைக்கொண்டு அப் படத்திலுள்ள ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்குச் செல்லுமாறு செய்கின்ற பயிற்சியைக் கொடுக்கலாம். கிழக்கே செல், அறையினுள் நுழை, பெட்டியைத் திற, திருடனைப் பிடி என்பன போன்ற கட்டளை வாக்கியங்களைக் கொடுத்து மாணவர் புரிந்துகொண்டு செயற்படு கின்றாரா எனக் கண்டறியலாம். இஃது ஒரு மொழி விளையாட்டுப்போல் அமையும்.

மேலும் படித்தல் திறனைக் கண்டறிய இப்போது விடுபட்ட இடங்களை ஊகித்து நிரப்பு பகுதி (Cloze Passage) வாயிலாக முயல்கிறார்கள். இம் முயற்சி மாணவரின் படித்தல்திறனை மட்டுமன்றிப் பகுதியின் கடினத்தன்மையைக் கண்டறியவும் வழிவகுக்கின்றது என்பர். இப் பகுதியைத் தயாரிக்கக் கணினி உதவுகின்றது. கணினி வழியாகப் பகுதியில் பல நிலைகளில் விடுபட்ட இடங்களைக் கொடுக்க முடிகின்றது. ஐந்து சொற்களுக்கு ஒரு முறையோ, ஆறு சொற்களுக்கு ஒரு முறையோ, ஏழு சொற்களுக்கு ஒரு முறையோ இடம்விடுமாறு பகுதியைப் பல நிலைகளில் எளிதில் அமைக்கக் கணினிவழி முடியும். மாணவர்களும் விடுபட்ட இடங்களில் சொற்களை நிரப்புவதும் எளிதாகச் செய்ய முடியும்.

கணினி வழியாகக் கருததறிதல் பகுதியில் வினாக்கள் (Open ended questions) கொடுத்து விடை எழுதுமாறு செய்வது என்பது இயலாத ஒன்று. இவ்வாறே பகுதியைச் சுருக்கிக் கூறுமாறு செய்தல், மைய வினாவுக்கு விடைகாணுமாறு செய்தல், தலைப்பினைக் கூறுமாறு செய்தல், பகுதி உணர்த்தும் நீதி என்ன என்பதைக் கேட்டறிதல் முதலிய வினாக்களைக் கணினி வழியாகக் கேட்க இயலாது. இவ்வகை வினாக்கள் மாணவனின் படைப்பாற்றலைப் பொறுத்து அமைவன அல்லவா? எனவே திட்டமான வரையறைக்குட்பட்ட விடைகளைக் கொண்ட வினாக்கள்மட்டுமே கணினி வழியாகக் கேட்கமுடியும்.

(ஆ) எழுதுதல்

தமிழ்ச் சொற்றொகுப்புச் சாதனம், எழுதுதல் திறனை வளர்க்க நேரடியாக உதவுகின்ற ஒன்றாகும். மாணவர்கள் தாங்கள் எழுதுகின்ற பகுதி ஒரு கட்டுரை என்று வைத்துக்கொள்வோம். கட்டுரை எழுதுதல் என்பது அண்மைக்காலத்தில் "எழுதும் செயற்பாட்டு நடவடிக்கைகளை" (Process writing) மையமாகக் கொண்டு இலங்குகிறது. இறுதியாகக் கிடைக்கும் விளைவினை (product) விடக் கட்டுரை எழுதுவதற்கு முன்னும், கட்டுரை எழுதும்போதும் நடக்கும் இந்த நடவடிக்கைகளை வலியுறுத்திக் கற்பிக்கும் முயற்சியே சிறந்தது என இக்காலத்தே வலியுறுத்தி வருகின்றார்கள். இந்தச் செயற்பாட்டு நடவடிக்கை என்பது எழுதுவதற்கு முந்திய செயல்கள் (Prewriting), எழுதுதல் (Writing), திரும்ப எழுதுதல் (Rewriting), திருத்தம் செய்தல் (Editing) ஆகியவற்றை உள்ளடக்கிய ஒன்றாகும். கட்டுரை எழுதுவதில் திருப்பி எழுதுதலும் திருத்தி எழுதுதலும் இன்றியமையாத சிறப்பிடம் பெறுகின்ற செயல்களாகும். இவற்றால்தான் கட்டுரையின் வடிவம், கட்டுக்கோப்பு, கருத்துக்கோவை செம்மைபெற முடியும். கட்டுரைக்கு முதலில் ஒரு நகல் எழுதுவதும், பிறகு அந்த நகலைப் படித்துப் பார்த்துக் கருத்துகளைக் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் ஆங்காங்கே ஏற்ற பல திருத்தங்கள் செய்வதும் சிறந்த கட்டுரை உருவாவதற்கு உகந்த வழிகள் என்பதை நாம் நன்கு அறிவோம். இத்தகைய செயல்களை எளிதில் நிறைவேற்றச் சொற்றொகுப்புச் சாதனம் ஒரு சிறந்த கருவியாக உதவுகின்றது. இச் சாதனத்தின்வழி மாணவன் முதலில் கட்டுரையின் நகல் ஒன்றைத் தட்டச்சுச் செய்துகொள்கிறான். அந்த நகலில் அவன் விரும்பியவாறு கருத்துகளைச் சேர்க்கவும் குறைக்கவும் முடிகின்றது. ஆசிரியரிடமோ

மற்ற நண்பர்களிடமோ காட்டியபிறகு அவர்களின் ஆலோசனைகளை ஏற்று ஆங்காங்கே வேண்டிய திருத்தங்களையும் எளிதாக அவன் செய்ய முடிகின்றது. ஒவ்வொரு முறையும் திருத்தம் செய்யும்போது கட்டுரையின் முழுப்பகுதியையும் எழுத வேண்டிய கட்டாயத்திலிருந்து – சலிப்பு வேலையிலிருந்து – மாணவன் விடுதலையடைகின்றான். எனவே, எத்தனை திருத்தங்கள் செய்ய ஆசிரியரோ நண்பரோ கூறினாலும் மாணவன் தயக்கமின்றித் தன் கட்டுரையில் எளிதாகச் செய்ய முடிகின்றது. பழைய முறை என்றால் "இன்னொரு முறை கட்டுரை முழுவதையும் திரும்ப எழுதவேண்டுமோ?" என்ற எண்ணம் மாணவன் முன்வந்து அவனை அச்சுறுத்தும். எனவே திருத்தம் செய்யாமல் கொடுத்தால் என்ன என்று அவன் நினைக்கவும் செய்யலாம். மாணவனின் உடலுழைப்பினைக் குறைத்துக் கட்டுரை செம்மையான முறையில் அமைய இந்தச் சொற்றொகுப்புச் சாதனம் பெருந்துணையாக இருக்கிறது. கட்டுரை எழுதும் திறனைக் கூட்ட இச் சாதனம் நன்கு உதவுகிறது. எழுத்தாற்றலைக் கூட்டுவதுடன் மாணவர்கள் தத்தம் கையெழுத்து அழகாக அமையவில்லையே என்னும் கவலையை விட்டொழிக்கவும் இது வழிசெய்கின்றது.

சொற்கள், வாக்கியங்கள், பத்திகள், பகுதிகள் முதலியவற்றைப் பல்வேறு இடங்களில் விரும்பியவாறு மாற்றி அமைக்கும் வசதியும் சொற்றொகுப்புச் சாதனத்தில் உண்டு. இதனால் கட்டுரையின் கட்டுக்கோப்புச் செம்மையாக அமைய வழிசெய்யலாம். எழுத்துப் பிழைகளைத் திருத்துதலையும் இச் சாதனத்தின்வழி எளிதில் செய்யலாம்.

பாரதி சொற்றொகுப்புச் சாதன வெளியீட்டார் சொல் சரிபார்க்கும் முறை (Spell Checker), சொல் அகராதி (Dictionary) ஆகியவற்றையும் இணைத்துச் சாதனங்களை உருவாக்கிவிட்டால் எழுத்துப்பிழைகளை மாணவர்கள் எளிதில் அகற்றமுடியும். மேலும், நிறுத்தக் குறியீடுகள் பயிற்சி கொடுப்பதற்குக் கணினிவழிப் பல பயிற்சிகளை எளிதில் தயாரித்துக் கொடுக்கலாம்; சரியா தவறா எனக் கண்டறியவும் செய்யலாம்.

தொடக்கநிலை மாணவர்களுக்கு எழுத்துகளை அடையாளம் காணும் பயிற்சிகளைக் கணினிவழி உருவாக்கிக் கொடுத்து விடைகாணுமாறு செய்யலாம். வழிகாட்டுதல் குறிப்புகளைக் கொண்ட கட்டுரை உருவாக்கப் பயிற்சிகளையும் கணினி தயாரிக்கலாம். மேலும்,

பத்திகளை அல்லது வாக்கியங்களை வரிசைப்படுத்தி அதாவது முறையாகத் தொடர்புபடுத்திக் கட்டுரை எழுதும் திறனை வளர்க்கக் கணினிவழி எளிதில் பயிற்சிகளைத் தயாரித்துக் கொடுக்க முடியும்.

மேல்நிலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் கட்டுரை எழுதும்போது அடிக்குறிப்புகள், துணைநூற் பட்டியல் முதலியன தயாரிக்கத் தமிழ்ச் சொற்றொகுப்புச் சாதனம் உறுதுணையாக இருக்கும்.

(இ) கேட்டல்

ஒலிநாடாவழிச் சில பகுதிகளைக் (வரிசைப்படுத்தப்பட்ட) கேட்டபின் கணினிவழி அதன் தொடர்பான வினாக்களைக் கேட்டறியச் செய்யலாம். இதற்கான விடைகளையும் கணினி வழியே கொடுக்கமுடியும். ஒலிநாடாவழி ஒரு பகுதியைக் கேட்கச் செய்தபிறகு கணினி வழியாக அப் பகுதியில் சில சொற்களை ஆங்காங்கே எடுத்துவிட்டுப் பகுதி முழுவதையும் காட்டி மாணவர்களை அச் சொற்களை நிரப்புமாறு கேட்கலாம். அதாவது கோடிட்ட இடங்களை நிரப்புவது போலத்தான். இங்கும் கணினி அவற்றிற்குரிய விடைகளைக் கொடுக்கலாம். எதிர்காலத்தில் 'வீடியோ டிஸ்க்' உருவாக்கப்படுமானால் நோக்கல் கருத்தறிதலும், கேட்டல் கருத்தறிதலும் உடனிகழ வழிவகுக்கலாம்.

(ஈ) பேசுதல்

கணினியையும் 'மைக்ரோ போன் டிஜிடைஸர்' (Microphone digitizer) என்னும் கருவியினையும் இங்கு இணைத்த நிலையில் மாணவர்களின் உச்சரிப்புத் திறனை வளர்க்க முடியும். டிஜிடைஸரில் உள்ள முன்மாதிரி உச்சரிப்பிலிருந்து மாணவர் உச்சரிப்பு வேறுபடுமானால் கணினி 'திரும்ப முயல்க' எனக் கூறிவிடும். ஆனாலும் உச்சரிப்புக்குரிய சொல் 2 செகண்டுக்குமேல் ஒலிக்கும் கால அளவுடையதாக இருந்தால் கணினிவழி இயலாத ஒன்றாகப் போய்விடும். இந் நிலையில் ல் ழ் ள், ந் ண் ன், ற் ர், குறில்நெடில் வேறுபாடுகளை இணைச்சொற்கள் மூலம் உச்சரித்துக் காட்டிக் கற்பிக்க முடியும்.

அராபிய மொழிக் கணினி ஒன்றில் தட்டச்சில் எழுத்தினைத் தட்டச்சுச் செய்ததும் அதனை ஒலித்துக் காட்டும் செயல் நிகழ்கிறது. இத்தகைய வசதி தமிழுக்கு ஏற்பட்டால் தமிழ் எழுத்துகளை ஒலித்துக்காட்டிப் பாடம் நடத்த முடியும்.

இலக்கணம் – மொழிப்பயிற்சி கற்பித்தலில் கணினி

இலக்கணக் கூறுகளை உள்ளடக்கிய மொழிப்பயிற்சி என்பது பதிலீடு செய்தல், மாற்றம் செய்தல், கோடிட்ட இடங்களை நிரப்புதல், திரும்ப எழுதுதல், படியெடுத்தல் எனப் பலதிறப்படும். மொழியமைப்புக் கூறுகளை உள்ளடக்கிய பலவகைப் பயிற்சிகளை உருவாக்கிக் கற்பிக்கும் பணியில் கணினி நன்கு உதவமுடியும். ஒருமைபன்மை, ஆண்பால் பெண்பால், ஒலிக்குறிப்புச் சொற்கள், எழுவாய் பயனிலை இயைபு, தொழிலாளர் பெயர்கள் – இப்படிப் பலதிறப்பட்ட மொழிப்பயிற்சிகளைக் கணினிவழி உருவாக்க முடியும். மாணவர்களின் நிலை, திறன், வாய்ப்பு முதலியவற்றிற்கேற்பப் பல பயிற்சிகளைக் கணினி தயாரித்துக் கொடுப்பதுடன் ஊக்கமூட்டும் பணியையும் செய்கிறது. குறைகளையும் பயிற்சிகளையும், பின்நடவடிக்கைப் பயிற்சிகளையும் கணினிவழித் தயாரித்துக் கற்பிக்க முடியும். சிங்கப்பூரிலுள்ள சிராங்கூன் கார்டன் தொடக்கப் பள்ளியில் மூன்றாண்டுகளுக்கு முன்னர்க் கணினிவழி மொழிப்பயிற்சி தயாரித்துப் பயிற்றத் தலைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சிங்கப்பூர்க் கல்விக்கழக மாணவர்கள் அண்மையில் தயாரித்துள்ள ஆங்கிலமொழிப் பயிற்சிப் பகுதிகளின் கணினிவழிப் பாடநிரல்களின் பட்டியலைப் பின்னிணைப்பு இ–ல் காண்க.

இத்தகைய மொழிப்பயிற்சிகளை மாணவர்கள் தம் மொழிப்பயிற்சி ஏடுகளின்வழிச் செய்வதற்கும் கணினிவழிச் செய்வதற்கும் வேறுபாடு உண்டு. மாணவர் தவறு செய்கின்றபோது கணினி தவறு எனச் சுட்டிக்காட்டுவதுடன் திரும்பச் செய்வதற்குரிய ஊக்கத்தை ஊட்டுகிறது; மேலும் சரியான விடைகளையும் தருகிறது. வாக்கிய அமைப்புப் பயிற்சியில் மொழிப்பயிற்சி ஏட்டில் திரும்ப எழுதவேண்டிய நிலை உண்டு. கணினியில் அந் நிலை இல்லை. பயிற்சிகளைப் பேணிப் பாதுகாத்து வைத்துக் கொள்ளவும் அவ்வப்போது மாற்றங்கள் செய்யவும் முடியும்.

சூழ்நிலைக்கேற்ற பயன்பாட்டு இலக்கணம் கற்பிப்பதிலும் கணினிக்குப் பங்குண்டு. சில வினாக்கள் கேட்டு அதற்கான விடைகளைக் கணினி வழியாக அறியும் பயிற்சி மூலம் வினாக்கள் கேட்கும் திறனை மாணவர் பெறமுடியும். 'வீடியோ டிஸ்க்' பயன்படுத்திப் பயிற்சிகளைக் காட்டிப் பொருத்தமான வாக்கியங்களை உருவாக்குமாறு மாணவர்களைக் கேட்கக் கணினியைப் பயன்படுத்தலாம்.

இலக்கியம்,செய்யுள் கற்பித்தலில் கணினி

இலக்கியம் ஒரு கவின்கலை; உணர்ச்சியின் அடிப்படையில் உருவாகிக் கற்பனை, வடிவம் போன்றவற்றை உள்ளடக்கிய ஒன்று. இதனைக் கற்பிக்கும் பணியில் கணினியின் உதவி மிகுதியாக இருக்கும் என்று கூறமுடியாதெனினும் ஒருசில வகைகளில் செய்யுள் கற்பிக்கும் பணிக்குக் கணினியைப் பயன்படுத்தலாம். தொடக்கநிலை வகுப்புகளில் செய்யுள்களைக் கற்பிக்கும்போது ஆசிரியர் மனப்பாடம் செய்யும் திறனை வளர்க்க ஒரு செய்யுளின் சொற்களைப் படிப்படியாக ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு முதலிய சொற்களை ஆங்காங்கே எடுத்துவிட்டு மாணவர்களைச் சொல்லுமாறு செய்ய முற்படுகிறார். இதனைக் கணினிவழித் தயாரித்து மாணவரிடம் கேட்டு விடைகாணச் செய்யலாம். இலக்கிய அனுபவம் வளர்த்தல் என்பதைவிட இலக்கியம்பற்றிய அறிவு – இலக்கிய அறிவு – வளர்க்கும் பணிகளில் கற்பித்தல் நிலையில் கணினியை ஓரளவு பயன்படுத்தலாம். இலக்கியக் கல்வியில் அகநிலை தொடர்பான அனுபவம் பலதிறப்பட்டதாக இருப்பதால் கணினியால் ஒன்றும் செய்யமுடியாது. ஆனால், இலக்கியம்பற்றிய புறநிலை அறிவு அதாவது இலக்கிய ஆசிரியரின் வாழ்க்கை, இலக்கிய அமைப்பு முதலியவைபற்றிய அறிவு ஒரு வரையறைக்குட்பட்டு இருப்பதால் இவை தொடர்பாகக் கணினியில் கேள்விகள் கேட்டுப் புறவய வினாமுறையில் விடைகளும் கொடுத்து மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அறியச் செய்யலாம்.

தேர்வும் கணினியும்

தமிழ்ச் சொற்றொகுப்புச் சாதனவழித் தேர்வுக்குரிய வினாத் தாள்கள் தயாரிப்பதில் எளிமையைப் புகுத்த முடியும். வினாத்தாள்களை உருவாக்கும்போது படிப்படியாக ஒவ்வொரு நிலையிலும் கூட்டல், குறைத்தல் மாற்றங்களைச் செய்துகொள்ள முடியும். வினாத்தாள்களை 'டிஸ்கில்' நிலையாகப் பல ஆண்டுகள் பேணி வைத்திருக்க முடியும்.

வினாத்தாள்களில் கருத்தறிதல் பகுதியில் சொற்களைக் கணக்கிடும் பணியைத் தட்டெழுத்துச் செய்யும்போதே கணினி தானே கணக்கிட்டுச் சொல்லிவிடுவதால் எண்ணிக்கொண்டிருக்கத் தேவை யில்லை. மூன்றில் ஒன்றாகச் சுருக்கி எழுதுதல், விரிவுசெய்து எழுதுதல் போன்றவற்றைச் செய்யும் வினாத் தயாரிக்க இவ் வசதி உதவும்.

வினாவங்கி (Item Bank) தயாரிப்பதில் சொற்றொகுப்புச் சாதனம் பேருதவி புரியமுடியும். புதிய வினாக்களைச் சேர்க்கவும், கடினத்தன்மைக் கேற்ப இடையில் செருகவோ, வேண்டாதவற்றை விலக்கவோ கணினிவழிச் செய்யலாம்.

வினா உருப்படிகளை ஆராய்தல் (Item Analysis), மதிப் பெண்களைப் பல நிலைகளில் பகுத்தாராய்தல் (சராசரி, தரவிலக்கம் முதலியன காணுதல்), மாணாக்கரை மதிப்பெண் அடிப்படையில் வரிசைப்படுத்தல், வினா அடிப்படையில் விடை தந்தோர் எண்ணிக்கை காணுதல் இப்படிப் பலவகையான கணக்கீடுகளைச் செய்யக் கணினி உதவுகின்றது. இதனால் பல்வகை ஆய்வுக்கும் கணினி பயன்படுகின்றது.

பயிற்றுகருவிகள் உருவாக்கும் பணியில் கணினி

பாடப்புத்தகம், பயிற்சிநூல்கள், ஆசிரியர் கையேடுகள் முதலிய பயிற்றுகருவிகளை உருவாக்கும்போது இவற்றை எழுதுவோர் பல்வேறு நிலையில் கூட்டல், குறைத்தல், மாற்றம் செய்தல் முதலிய பணிகளில் ஈடுபடவேண்டியதிருக்கிறது; ஆலோசகர் திருத்திய பின்னர்ப் பல அறிவுரைகளை ஆங்காங்கே சேர்க்க வேண்டியதிருக்கிறது. அவற்றிற்கெல்லாம் சொற்றொகுப்புச் சாதனம் பலவகையில் பயன்படும். வேலைப்பளுவைக் குறைக்கவும், காலத்தைச் சுருக்கவும், முயற்சியை எளிமைப்படுத்தவும் முடியும். பாடங்களில் இடம்பெறும் அருஞ்சொற்கள், அல்லது புதிய சொற்கள் பட்டியல் தயாரிக்கவும் சொற்றொகுப்புச் சாதனத்தில் வசதி இருக்கிறது. இவ்வாறு பல்வேறு அகராதிகள் தயாரிக்கவும் முடியும். படங்களைக் காட்டிச் சொற்களை எழுதுமாறு செய்யும் பயிற்சியும் கணினிவழிக் கொடுக்கலாம். எழுத்துகளைக் கொண்டு சொல்லுருவாக்கம் செய்யும் மொழி விளையாட்டுகளையும் கணினிவழி உருவாக்கலாம்.

மொழிபெயர்ப்புத் துறையில் கணினி

கணினிவழி மொழிபெயர்ப்புப் பணியும் செய்யமுடியும் என்பதைத் தஞ்சைப் பல்கலைக்கழகக் கணினித் துறையினர் மெய்ப்பித்து வருகின்றனர். தமிழிலிருந்து பிறமொழிக்கும் பிறமொழியிலிருந்து தமிழுக்கும் மொழிபெயர்க்கும் பணியைக் கணினிவழிச் செய்யலாம். இவர்கள் ஆங்கில வரிவடித்தினையே பயன்படுத்தினர்.

அகராதிகள்,சொல்லடைவுகள் தயாரிப்பதில் கணினி

தகவல் சொற்றொகுப்புச் சாதனத்தில் ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் ஒரே சமயத்தில அச்சடிக்கும் வசதி இருப்பதால் இருமொழி அகராதிகள், கலைச்சொல் அகரவரிசைப் பட்டியல் முதலியன தயாரிக்கமுடியும். இலக்கியச் சொல்லடைவுகள் தயாரிக்கவும் கணினி உதவும். திருக்குறள் சொல்லடைவு ஒன்றினைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தயாரித்துள்ளது.

தமிழாசிரியர்களும் கணினியும்

தமிழ்ச் சொற்றொகுப்புச் சாதனத்தின் வாயிலாகத் தமிழாசிரியர்கள் தம் தொழிலில் மேம்பாடு காணவும், உன்னத நிலையை அடையவும் வழிவகுக்க முடியும். கையேடுகள், பயிற்சித் தாள்கள், பாடக்குறிப்புகள், பாடத்திட்டங்கள், மதிப்பீட்டு நடவடிக்கைக்குரிய த்தாள்கள், பெயர்ப்பட்டியல்கள் முதலியவற்றைத் தயாரிப்பதில் தமிழாசிரியர்களுக்கு இச் சொற்றொகுப்புச் சாதனம் பெருந்துணைபுரியும். இவற்றை ஒரு முறை தயாரித்துக் கணினியில் வட்டத்தகடுகளின் (Diskettes) வாயிலாகச் சேமித்து வைத்துவிட்டால் தேவைப்படும்போது அவ்வப்போது வேண்டிய திருத்தங்கள் செய்து (கூட்டியும் குறைத்தும் மாற்றியும்) பயன்படுத்தலாம். இதனால் காலவிரயம் தடுக்கப்படும்; உழைப்பும் எளிமையாக்கப்படும். சாதாரணத் தட்டெழுத்துவழித் தயாரிக்கும் தாள்களைவிடக் கணினிவழித் தயாரிக்கும் தாள்களில் பலவகையான முறையில் வனப்பூட்டவும் செய்யலாம், வேண்டுமானால் இவ்வாறு கணினிவழித் தயாரிக்கும் தாள்களை லேசர்முறையில் அச்சிட்டுப் பிறகு ஒளிப்படமாக்கி ஆயிரக்கணக்கான படிகள் அச்சிடவும் செய்யலாம். ஒருவர் தயாரித்துப் பயிற்றுகருவிகள், வினாத்தாள்கள் மற்றவர்க்கும், மற்றப் பள்ளிகளுக்கும் பயன்படுத்துமாறு செய்யலாம். தகவல்மய உலகில் கணினிவழிப் பல நிறுவனங்களை இணைத்துத் தகவல் பெறும் முறை இப்போது வளர்ந்துவருகின்றது. காலம், இடம் கடந்து நிற்கும் கணினிவழிச் செய்திப் பரிமாற்றத்தில் ஒரிடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்குச் செய்தியை அனுப்பும் முயற்சியில் தமிழ் கற்பிப்போரும் பயன்பெறலாம்.

மாணவர்கள் பள்ளிகளில் உருவாக்கும் ஆண்டுமலர்களை வெளியிடவும் தமிழ்ச் சொற்றொகுப்புச் சாதனம் பேருதவிசெய்யும்.

மாணவர் மன்ற நடவடிக்கைகள், சுற்றறிக்கைகள், அழைப்பிதழ்கள் தயாரிக்கத் தமிழ்ச் சொற்றொகுப்புச் சாதனம் பயன்படும். இவ்வாறு புறப்பாட நடவடிக்கைகளிலும் கணினிவழி ஆசிரியர்கள் பயன்பெறலாம்.

மாணவர்கள் ஒப்படைப்புகள் செய்யும்போது தமிழ்ச் சொற் றொகுப்புச் சாதனத்தைப் பயன்படுத்தினால் பலவகையில் பயன்பெற முடியும். ஆசிரியர்கள் கூறும் திருத்தங்களையும் ஆலோசனைகளையும் அவ்வப்போது ஏற்றுத் தாங்கள் எழுதும் ஒப்படைப்பில் எளிதில் சேர்க்க – தேவைப்படுமிடங்களில் இணைக்க – சொற்றொகுப்புச் சாதனம் உதவுகின்றது.

இவ்வாறு பலவகைகளில் தம் தொழில் மேம்பாட்டிற்குதவும் கணினியைத் தமிழாசிரியர்கள் பயன்படுத்தத் தெரிந்துகொள்ள வேண்டும். இதற்குக் கணினிபற்றிய பொதுஅறிவும் பயன்படுத்துதற்குரிய பயிற்சியும் முதலில் பெறவேண்டும். பிறகு கணினிவழித் தமிழ்ச் சொற்றொகுப்புச் சாதனத்தை அன்றாட வாழ்க்கை முறையில் பயன்படுத்தும் பணியில் படிப்படியாக ஈடுபடவேண்டும். தட்டச்சுத் செய்யத் தெரியாதே என்று தயங்கத் தேவை இல்லை. படிப்படியாகப் பயிற்சி பெற்றுவிடலாம். தட்டச்சு இயந்திரத்தைப் பெறுவதைக் காட்டிலும் சொற்றொகுப்புச் சாதனத்தைப் பெறுவது எளிது; விலையும் குறைவு. சிங்கப்பூரில் வாழும் தமிழாசிரியர்கள் இதற்கு வழிகாட்டியாக இருக்கமுடியும் என்பது என் நம்பிக்கை.

முடிவுரை

இவ்வாறு தமிழ் கற்கும், கற்பிக்கும் பணியில் கணினி பல்வேறு நிலையில் உறுதுணையாக இருக்கமுடியும். அறிவியல் முன்னேற்றம் கண்டுவரும் காலத்தில் வாழ்கின்ற நாம் தமிழ் கற்கும், கற்பிக்கும் கணினியைப் பயன்படுத்த என்ன செய்யவேண்டும்? கணினியில் வல்லாரும் தமிழ்மொழிப் புலமை உடையாரும் சேர்ந்து புதியபுதிய பாடநிரல்களை (Programmes) உருவாக்க வேண்டும். இத்தகைய பாடநிரல்களைப் பயன்படுத்தும் அறிவு தமிழாசிரியர்கள் பெறவேண்டும். அக்காலம் விரைவில் வரத் தமிழ்கூறுமுலகில் வாழும் அனைவரும் ஒன்றுபட்டுப் பாடுபடுவார்களாக!

துணைநூற் பட்டியல்

பழநிவேலு. வை., 'தமிழ்மொழிப் பயன்பாட்டில் தொழில்நுட்ப வியலின் தாக்கம்', சிங்கப்பூரில் தமிழும் தமிழ் இலக்கியமும் 4 ஆய்வரங்க மாநாட்டுக் கட்டுரைகள் சிங்கப்பூர், சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை, 1983

முகமது இஸ்மாயில், 'கணினியில் தமிழ்மொழி', சிங்கப்பூரில் தமிழும் தமிழ் இலக்கியமும் 4 ஆய்வரங்க மாநாட்டுக் கட்டுரைகள் சிங்கப்பூர்: சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை, 1983

நந்தகுமார். ந., 'நுண்கணினிகளுக்குள் தமிழ் எழுத்துகளைப் படிமுறைமைப்படுத்துவதும் அதன் பயன்பாடுகளும்', சிங்கப்பூரில் தமிழும் தமிழ் இலக்கியமும் 4 ஆய்வரங்க மாநாட்டுக் கட்டுரைகள் சிங்கப்பூர், சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை, 1983

தணிகாசலம். ச.,'சிங்கையில் தமிழ்க் கணினியாக்கத்தின் வளர்ச்சி', சிங்கப்பூரில் தமிழ்மொழியும் தமிழ்ச் சமுதாயமும் 6ஆவது ஆய்வரங்க மாநாட்டில் படிக்கப்பட்ட கட்டுரை, சிங்கப்பூர், சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை, 1987

Phyllis Chew, ***Computer - Assisted Language Learning - CALL*** A State-of-the Art Report (Unpublished) Singapore, Institute of Education, 1985

_____, 'A Look into the Future: The Word-Processor and the Writing Class' in Teaching and Learning, Vol. 5 No 2 Jan 1985

பின்னிணைப்பு – அ

பாரதி

நாங்கள் பாரதி என்ற சொற்றொகுப்புக் (Word Processing) கம்ப்யூட்டர் சாதனத்தை உங்களுக்கு அறிமுகம் செய்கிறோம். இந்தச் சாதனத்தைப் பயன்படுத்திப் பல்வேறு சிறந்த சொற்றொகுப்புப் பணிகள் செய்யலாம்.

பாரதியின் சிறப்பு அம்சங்கள் பல உள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கு எடுத்துரைக்கின்றோம்.

1. கருக்கச் சொல்லை விரிவாக்குதல்
2. கணக்கிடும் திறன்
3. பில், பட்டியல் செய்யும் ஆற்றல்
4. ஆங்கிலம் கலந்து எழுதும் வசதி
5. உள்ளடக்கம், வேக நோக்குச் சொல் (INDEX) தொகுப்புத் திறன்

பின்னிணைப்பு – ஆ

துணைவன்

பொருள்: IBM கம்பாட்டிபில் கம்ப்பூட்டர்களுக்கு – துணைவன் – தமிழ்ச் சொற்றொகுப்பு

தமிழில் கம்ப்பூட்டர்வழி இவ்வகையான சொற்றொகுப்பை அறிமுகம் செய்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். மலேசியாவில், வியாபார ரீதியில் தமிழில் சொற்றொகுப்பு அறிமுகம் செய்வது இதுவே முதல் முயற்சி என்று நம்புகிறோம். இதில் உள்ள முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு:

1. தமிழில் உள்ள எல்லா எழுத்து வடிவமைப்புகளும், அதனுடன் சேர்த்து எல்லா வடமொழி எழுத்துகளும் அடங்கியுள்ளன. (ஜ, ஸ,ஷ, ஹ, ஸ்ரீ)
2. தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒரே வரியில் கலந்து அடிக்கலாம்.
3. இரண்டு வகையான எழுத்து வடிவமைப்புகள் அச்சடிக்கக்கூடிய வசதியிருக்கின்றது.
4. தெளிவான கோடுகள் வரைய வசதியுள்ளது.
5. எல்லா அடிப்படையான வோர்ட் பிராஸஸிங் (Word processing) வசதிகளும் உண்டு.

a) வரிகளைச் சேர்க்கவும், நீக்கவும் சதிகள் உள்ளன.

b) எளிதாகத் தொகுப்பின் பகுதிகளைச் சேர்க்கவும், எழுத்து களின் மேலே அடித்துத் திருத்திக்கொள்ளவும் வசதி உள்ளது.

c) நான்கு வகையான அச்சு வடிவங்களில் அடிப்பதற்கான வசதி உள்ளது.

d) அச்சிடும்போது சொற்றொகுப்புகளை வலப்புறத்தில் ஒரே சீராக அச்சடிக்க வசதியுள்ளது.

e) சேமிக்காமல் அச்சிடும் முறை (Print from Memory)

ஹார்டுவேர் (Hardware) தேவைகள்

1. IBM PC கம்பாட்டிபில் கம்ப்யூட்டர் (Compatible Computer)
   குறைந்த அளவு 256K RAM
   இரண்டு பிளாப்பி டிரைவ்ஸ் (Floppy Drives)
   கலர் கிராபிக் கார்டு (Colour Graphics Card)

2. 80 வரிசைப்படுத்திய டாட் மெட்ரிக்ஸ் பிரின்டர் (Epson Compatible) (80 Column dot Matrix Printer)

பின்னிணைப்பு – இ

LIST OF CALL ASSIGNMENT (1984-5) BY IE STUDENTS

The following is a list of CAI software on language teaching in the Primary School written by graduates of the Institute of Education "Literacy in Microcomputers" Course:

JAN-MAR 1984

English for Pr. 5 (Read and Spell) - by Latiffa Jalaludin
English for Pr.2 (A Test of Concord) - by Lim Khuat Siong
English for Pr.5 (Question Tags) - by Betty Lee
English for Pr.5 (Concord) - by Peter Joe Chia
English for Pr.1 (Verbs and Concord) - by Chua Tong Hee

APR - JUNE 1984

Know your Tenses - by Lee Khiang Kong
Animals and Their Homes - by Chang Siew Hiap
A Test on Concord for Pr.4 - by Mohd. Razali Kiom
English Exercises for Pr.6 - H.S. Kwok
Singular and Plural Nouns for Pr.3 - by Helen Chan
Vocabulary Quiz - by Elizabeth Paul
Synonyms - by Loh Siew Kuan
Excercise on Concord - by Ivan Wee
Name of Places - by Chan Seak Pun

Homonyms for Pr.6-by Tam Soi Tee
English Excercises for Pr.5 - by Betty Oei
Prepositions for PSLE - by Yeo Hoon Kiang
Word Formation Tests - by Vivian Yang
Vocabulary - by Tay Gim Bee
Test on Concord - by Alice Gay
Reading Comprehension - by Leong Siew Fung
Tenses - by Cheon Kin Lam
Have Fun with Spelling - by Evelyn Khoo
Antonyms - by Chan Geok Kim
English Test - Yeo Lak Neo
Question Tags - by Pauline Soh
Singular and Plural Nouns - by Wong Kuek Fah
Relative Pronouns - by Ong Kim Gim
Parents and Their Young - by Chan Tai Huat
Vocabulary - by NG Kim Gim
Parents and their Young - by Chang Tai Huat
Vocabulary - by Ng Kim Liang
Singular and Plural Tests - by Patricia Soh
Pronouns - by Ahino
Forming Adjectives - by Heng Hiana Mee
Singular and Plural Nouns for Pr.5 - by Tan Tee
Antonyms - by Florence Wee
Prepositions - by John Chan
Spelling Test - by Yip Luen Kee

JUL - AUG 1984

English for Pr. 1 - by Choo Loo Foon
The Animal World - by Madeline Chan
A Comprehension Excercises for Pr.2 - by Yoe Gim Hong
Prepositions for Pr.3 - by Pricilla Silvester
Vocabulary for Pr.3 - by Seow Poh Im

JAN - MAR 1985

Revision of Tenses - by Jaswani Singh
Comparison of Adjectives - by Lim Liong Ann
A Test of Vocabulary - by Agnas Lim


Test on Gender Animals - by Yo Po Tee
Verbs - by Wee Choo Heng
Synonyms for Pr.5 and 6 - by Tong Kim Leng
Forming Verbs - by Tony Foo
Tenses for Pr.3 - by Catherine Lime May May
Test on Occupations for Pr.5 - by Sing Joek Tong
Grammar for Pr.7 extended - by Hoe Chew Chin
Test on Gender and Multiplication Tables - by Lim Beng Seng
Adverbs for Pr.5 - by Tan Khuan Chuan

61

THE MATHEMATICAL LINK BETWEEN INDIA AND CHINA

ANG TIAN SE

OWING to their proximity, India and China were inevitably bound in the remote past. Although there is no documentary evidence to support such a claim, indirect sources of information have indicated cross-boundary movements of people of these two neighbouring countries in pre-Christian era. One such source was contained in the report of the Chinese diplomate Chang Qian in second century B.C. Chang Qian was sent by the Han emperor on a mission of exploration into central Asia.[1] The mission, lasting twelve years, succeeded in establishing ties between China and the various countries to the west of the Pamirs. Chang Qian observed that some of the products of South China were on sale over in Northern India. He also found that people of Central and West Asia and beyond were much fascinated by fine Chinese silk; its implication being that the silk trade had been plying along the route long before his time. This trade route was known subsequently as the Silk Road which began from the Chinese capital of Chang'an and stretching to the border town of Tunhuang. Tunhuang was connected to Kashgar in Central Asia. passing through Turfan, Loulan or Khotan. From Khotan or Kashgar the silk merchants could take the southern route through Tashkurgan and Caspapyra to reach Taxila (Takesila) in India, or proceed eastwards to Merv (Mary) through two routes, one via Samarkand and the other via Bactria (Balkh). S.N. Sen believed that many traders preferred to reach India from Bactria through the Kabul Valley and Khybar Pass.[3] The Western section of the Silk Road from Merv passing through Hecatompylos (Damgham), Ecbatana (Hamadan) and Ctesphon had existed from time immemorial, the most important overland link between East and West for the movement of



Sketch Map of the Silk Road

merchandise as well as the transmission of ideas. Sen pointed out that Eastern India was also in the early period connected with China by two routes, one through Bhamo in Upper Burma and Manipur in Assam and the other through Tibet and Sikkim connecting Lhasa and Gantok and extending to Pataliputra in the Gangetic Valley.

The opening of the Silk Road had served not only a trade artery across Asia but also a vital channel for cultural exchange between China and countries and civilisations further west which included India and the Roman Empire. Prior to that period China was isolated living in her self-contained world. Indeed, from the cultural point of view, this isolation was not broken until the introduction of Buddhism in the second century A.D.

Following the spread of Buddhism to China, renowned Buddhist scholars from Kashmir, Western and Eastern India visited China by land and sea, and spent many years there preaching the Buddhist doctrines and translating canonical texts. This resulted in a steadily increase of Chinese Buddhist converts necessitating the quest of further knowledge of Buddhism in its land of origin. Hundreds of Chinese monks ventured the long and perilous journeys to India to master the foreign languages and writings before embarking on the translation of Buddhist scriptures into Chinese. The first famous monk was Fa Xian (334-420 A.D.) who went to India by the land route in 399 and returned by sea in 414. Apart from his translations of Buddhist sutras, he left a detailed record of the Buddhist kingdoms he had visited. It has proved invaluable in establishing the geography and chronology of Central and South Asia.

